வெளியீடு : 5-12-2002 Issued : 5-12-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, செப்டம்பர் 3, 2001– தொகுதி 9 – எண் 2

**Monday the 3rd September, 2001 – Volume 9 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

134/2003

## 3-9-2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ங்கற் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 295 |
| னாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 296-309 |
| டுக்குறியிடாத வினாக்கள் (ரண்டாவது பட்டியல்) | 309-330 |
| 109—ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை— | |
| ச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றி 1—9—2001 அன்று தாம் தெரிவித்த கருத்துகளை வெவ்வேறு பொருள் படும்படி செய்தித்தாள்கள் வெளியிட்டதால் தன்னிலை விளக்கம் | 330-331 |
| றப்புக் கவன ஈர்ப்பு— | |
| சாத்தூர் நகரில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு | 332-333 |
| திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | 332 |
| மாண்புமிகு திரு. சி. துரைராஜ் | 332-333 |
| ஈர்ப்பு— | |
| நம்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்யாததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை | 333-341 |

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் 341-437

* மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா 342, 347, 291, 409-429, 430, 431, 432, 433, 434

* டாக்டர் க. பொன்முடி 347-352, 358, 359-360

* திரு. த. ஆறுமுகம் 360-361, 363-366

திரு. கோவை தங்கம் 344, 367-369

திரு. மே.ப. காமராஜ் 344, 369-374

திரு. கே.சி. கருணாகரன் 374-381, 430-431

* திரு. ச. ராமராஜ் 382-387

* திரு. ஏ.எஸ். கண்ணன் 387-395

திரு. ஆகு.சி. அன்பழகன் 395-400

* திருமதி எஸ். மகேஸ்வரி 400-409





பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி 441-547

(ஆ) கோரிக்கை எண் 1 — நில வருவாய்த் துறை

(இ) கோரிக்கை எண் 2 — மாநில ஆயத் தீர்வைத் துறை

(ஈ) கோரிக்கை எண் 5 — முத்திரைத்தாள்கள் நிருவாகம்

(உ) கோரிக்கை எண் 6 — ஆவணப் பதிவு

(ஊ) கோரிக்கை எண் 40 — இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(எ) கோரிக்கை எண் 43 — எழுதுபொருள் அச்சுத் துறை

(ஏ) கோரிக்கை எண் 45 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 441, 444, 446, 448, 451, 453, 454, 456, 511-537

* டாக்டர் பி. வள்ளல் பெருமான் 456-463

திரு. சே. சுதர்சனம் 463-468

திரு. செ.கு. தமிழரசன் 444, 470-477

திரு. டி.கே. இராஜா 477-482

திரு. போளூர் வரதன் 482-492

திரு. ம. அப்துல் லத்தீப் 492-499

திரு. டி. மணி 499-502

திரு. ஜி. பழனிசாமி 444, 448, 450, 452, 454, 456, 503-508

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அறிவிப்பு— | |
| உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் | 437 |
| 8. ஒழுங்குப் பிரச்சினை— | |
| மானியக் கோரிக்கைகளை குறுகிய காலத்திற்குள் விவாதித்தல் | 437-438 |
| 9. தகவல் கோரல்— | |
| காவிரி நதி நீர்ப் பங்கீடு கூட்டம் | 438-441 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 547-548 |


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224576
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 18, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 3, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்."*

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர் பிறரிடம் சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

### 1. இரங்கற் குறிப்பு

#### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. சோ. கருணைநாதன் அவர்கள் 31-8-2001 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த திரு. சோ. கருணைநாதன் அவர்கள், 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும், குன்னூர் தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். அவரது மறைவால் அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 35, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**35—**

### தொழில் நுட்பக் கல்லூரி

***1381—திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதியில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வருகின்ற நேரத்தில் எல்லாம், நீர் வளம் மிக்க, அம்பாள்கள் கூடியிருக்கிற அம்பாசமுத்திரத்தை 'அம்மா சமுத்திரம்' ஆக்குங்கள் என்று நீங்கள் அடிக்கடி கூறுவீர்கள். அதைப்போல, எங்கள் அம்பாசமுத்திரம் தொகுதி மக்கள் நமது அம்மா முதல்வராக வேண்டும், மீண்டும் அம்மாவுடைய ஆட்சி வரவேண்டுமென்பதற்காக, அம்பாசமுத்திரத்தை 'அம்மா சமுத்திரமாக' ஆக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற பதில் அதிர்ச்சியை அளிக்கக்கூடியதாக இல்லை. காரணம், இந்த ஆண்டின் நிதிநிலை. அப்படியிருந்தாலும் எங்கள் தொகுதியில் 10 மேல்நிலைப் பள்ளிகளும், 10 உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. சுமார் 3000 முதல் 4000 மாணவிகள் வருடம்தோறும் மேல் படிப்புக்காகச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எங்கள்



மாவட்டத்தில் அரசு பாலிடெக்னிக் ஒன்றுகூட இல்லை. தனியார் பாலிடெக்னிக்குகள்தான் இருக்கின்றன. இருந்தாலும், அப்படியே தனியார் பாலிடெக்னிக்கிற்கு நாங்கள் செல்ல வேண்டுமென்றாலும் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் என்னுடைய முதல் கேள்விக்கே 'இல்லை' என்ற பதிலை இல்லாமல் ஆக்கும் வகையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், வருகின்ற ஆண்டிலாவது அம்பாசமுத்திரம் தொகுதியில் ஓர் அரசு பாலிடெக்னிக் அமைப்பார்கள் என்று இதய தெய்வம் அம்மா அவர்களது ஆட்சியில் மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கிறேன். எங்கள் அம்பாசமுத்திரம் தொகுதிக்கு ஒரு நல்ல பதிலைத் தருவார் என்று பணிவோடு எதிர்பார்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவர் தொகுதி.

*முற்பகல் 10—0.5*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருடைய ஆர்வமும், எண்ணமும் பாராட்டத்தக்கதாகும். காரணம், வருகின்ற 10—வது ஐந்தாண்டுத் திட்டம்கூட இந்தியாவிலேயே அதிகமான என்ஜினியரிங் வல்லுநர்களைப் பெறுவதற்காகத்தான் வகுக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அதில் சுமார் 1660 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தத் துறையாக இருந்தாலும் சரி, சரித்திரத்தைப் படைக்கும் ஒரு மாவட்டமாகும். கல்வித் துறையிலே பல்வேறு அறிஞர்களை உருவாக்கியதும், பல விஞ்ஞானிகளை உருவாக்கியதும் திருநெல்வேலி மாவட்டமாகும். ஆகவே அவர் சொன்னதுபோல் அம்பாசமுத்திரமும் அதற்குப் பெயர் போனதுதான். பெரிய, பெரிய தொழில் வல்லுநர்களும், பெரிய தொழில்களை நடத்தும் தொழில் அதிபர்களும் உருவாக்கப்பட்டது அம்பாசமுத்திரத்தில்தான் ஆகும். ஆகவே அந்த மாவட்டத்தில், குறிப்பாக, அந்தப் பகுதிக்கு இத்தகைய பாலிடெக்னிக்குகளைக் கொண்டுவருவதில் அரசுக்கும் ஆர்வமாகத்தான் இருக்கிறது. இருப்பினும், அவரே அவருடைய பதிலில் சொன்னதுபோல், நிதிப் பற்றாக்குறை காரணமாக இப்போது அரசு சந்தித்து வரும் நிதிநிலை நெருக்கடியின்

காரணமாக, இந்த ஆண்டில் கிடையாது. அடுத்த ஆண்டில் வேண்டுமென்றால் பரிசீலனை செய்வோம். அதுவும் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**36–**

### பயிற்சி

***2730–திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வந்தவாசி தொகுதியில் பனைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க பொதுமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) பனைப் பொருள் வாரியக் கிளை மற்றும் பனைப் பொருள் உற்பத்திப் பயிற்சி மையம் வந்தவாசியில் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது குறித்த செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் அந்த நாட்டிலே இருக்கக்கூடிய மூன்று அம்சங்களை, கூறுகளைப் பொறுத்து அமைகிறது என்பது இன்றைக்கு உலக அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு செய்தி. அது என்னவென்று சொன்னால், நல்ல தரம் வாய்ந்த சாலைகள், தொடர்ந்து தடையின்றிக் கிடைக்கின்ற மின்சாரம், அந்தச் சாலையையும், மின்சாரத்தையும் பயன்படுத்தி தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நல்ல நீர்வளம், இவை மூன்றும் இருக்கிற பட்சத்திலே எந்த நாடாக இருந்தாலும் அது தொழில் துறையிலே வளரும் என்பது இன்றைக்கு உலக அளவிலே ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிற ஒரு செய்தி. ஆனால் என்னுடைய வந்தவாசி



தொகுதி தொடர்ந்து பல ஆண்டுகளாக, தனித் தொகுதியாக இருந்ததனாலோ என்னவோ தெரியவில்லை, அங்கே ஒருவழிச் சாலைதான் இருக்கிறது. இருவழிப் போக்குவரத்திற்காக அகலப் படுத்தப்பட்ட சாலைகளும் இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், பனைப் பொருள் வாரியம் உண்டா என்று கேளுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அது தொடர்பான செய்திதான், பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்பான செய்தி எல்லாம் சொல்லக்கூடாது. நேரடியாகக் கேள்விக்குத்தான் வர வேண்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அதைப்போலவே அங்கே இருக்கக் கூடிய மின்சார வாரியமும் கூட்டுறவுத் துறைக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. எனவே என்ன சொல்கிறேன் என்றால், என்னுடைய தொகுதியிலே தொழிற்சாலை என்று ஒன்றும் கிடையாது. ஒரேயொரு தொழிற் சாலைகூடக் கிடையாது. 100 சதவீதம் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கே தொழில்வளத்தைப் பெருக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு வாய்ப்பாக அங்கே மிக அதிக அளவிலே பனை மரங்கள் இருக்கின்றன. நான் தமிழ்நாட்டிலே பல்வேறு பகுதிகளிலே பார்த்திருக்கிறேன். ஆனால் வந்தவாசி தொகுதியிலே இருக்கிற அளவிற்குப் பனை மரங்கள் வேறு எங்கும் இருக்குமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அங்கு ஒரு பனைப் பொருள் வாரிய உற்பத்தித் தொழிற்சாலை இருக்கிறது. அது மிகவும் நலிந்த நிலையிலே இருக்கிறது. அதிலே 4, 5 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கிறார்கள். அதன் மூலமாக பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வளவு வளமான பனை மரங்கள் நிறைந்த அந்தப் பகுதியிலே–அமைச்சர் அவர்கள் தங்களுடைய கொள்கைக் குறிப்பிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** கொள்கை விளக்கக் குறிப்பின் 18–வது பக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். பனைப் பொருட்களான பதநீர், பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனஞ் சர்க்கரையைக்

கொண்டு தயாரிக்கப்படும் பான வகைகள், இனிப்பு சாக்லெட், பனை ஓலைப் பொருட்கள், பனை நார்ப் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், பல்வேறு வகையான ஈச்சங் கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விளக்கங்களை எல்லாம் படிக்கக் கூடாது. பனைப் பொருள் வாரியம் அமைக்க உத்தேசம் உண்டா என்று மறுபடியும் கேளுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இவையெல்லாம் எப்படி அந்த மக்களால் தெரிந்துகொள்ள முடியும்? நம்முடைய அரசு பெண்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதிலே அதிக அக்கறை கொண்டிருக்கிறது. அதைப் பாராட்டுகின்றோம். இந்த மாதிரியான பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பயிற்சியைக் கொடுத்தால், வந்தவாசியிலே, அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய மகளிர் அதிக அளவிலே வேலைவாய்ப்புப் பெறுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. எனவே அதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு அரசு முயற்சிக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய தமிழகம் முதன்மையான மாநிலமாகத் திகழ வேண்டுமென்றால் தொழில் வளர்ச்சி காண வேண்டும்; அந்தத் தொழில் வளர்ச்சி காண வேண்டுமென்றால் சாலை வசதிகளும் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்கின்ற...

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள், போதும்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைப் பொருட்கள் உற்பத்தியைப் பெருக்குவது தொடர்பாக வந்தவாசி பகுதியில், பொதுமக்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்திற்கோ அல்லது தமிழ்நாடு பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்திற்கோ நிதியொதுக்கீடு இதுவரையில் இல்லை. வந்தவாசி தொகுதியில் மங்களம், மாமண்டூர் கிராமங்களில் தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், பனைப் பொருட்கள் உற்பத்தி நிலையம் ஒன்றினை நடத்தி வருகிறது. இந்த நிலையத்தில் தூரிகை வகைகள், ஓட்டுநர் இருக்கைகள் போன்ற பனைப் பொருட்கள் உற்பத்தியில் 15 பனைத் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். எனவே தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் வந்தவாசி தொகுதியில் பனைப் பொருள் வாரியக் கிளை மற்றும் உற்பத்திப் பயிற்சி மையம் அமைக்கும் திட்டங்கள் எவையும் அரசினிடத்தில் இல்லை என்பதைக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



அதோடு இன்றைக்கு நம்முடைய கடலூர் பகுதியிலே, தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி பயிற்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தின் கிளையில் இதுபோன்ற ஒரு பயிற்சி மையம் 1960 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது என்பதையும், அந்தப் பயிற்சி மையத்தின் மூலமாக வருடத்திற்கு 110 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இங்கே மாமன்றத்திலே இருக்கின்ற நம்முடைய பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களும், அன்பிற்குரிய கடலூர் சட்டப் பேரவை உறுப்பினராக அமர்ந்திருக்கின்ற அருமை அண்ணன் அவர்களும் கோபித்துக்கொள்ளக் கூடாது. கடலூரிலே அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பயிற்சி மையம் 1999 ஆம் ஆண்டும், 2000 ஆண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, வேறு விளக்கங்கள் எதுவும் கூடாது. கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டும் கூடாது. வந்தவாசியிலே இல்லையே?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** தலைவர் அவர்களே, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லையென்றால் விட்டுவிடுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கேள்வியை மட்டும் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், கூப்பிடுகிறேன். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

[2001 செப்டம்பர் 3

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பனைப் பொருட்களை வைத்து உற்பத்தி செய்கிற
பொருட்களை விற்க முடியாத நிலை இன்றைக்கு கிராமங்களிலே இந்தப்
பொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.
அதைப் போக்குவதற்கு இந்த வாரியம் அப்படிப்பட்ட பொருட்களைக்
கொள்முதல் செய்து விற்று, அவர்களுக்கு அந்த விலையைக்
கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நடைமுறையிலே கொள்முதல் செய்து, அப்படிக்
கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி
செய்கின்ற வாய்ப்பும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அதுபோன்று எங்காவது பொருட்கள் தேங்கியிருக்குமானால் நம்முடைய
கவனத்திற்கு, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால்,
நிச்சயமாக அதைக் கொள்முதல் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. க. முருகவேல்
ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிற்சி மையம்
ஒன்று கடலூரில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படியென்றால்
அந்தப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறுவதற்கு என்ன தகுதி இருக்க
வேண்டும்? அந்த மையத்திலே பயிற்சி பெற வேண்டுமென்றால் எப்படித்
தொடர்புகொள்ள வேண்டும்? மகளிர் பயிற்சி பெறுவதற்குத் தயாராக
இருந்தால், பயிற்சி பெறுகிற காலத்திற்கு அவர்களுக்கு ஊக்கத் தொகை
அளிக்க அரசு தயாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கடலூரில் 1960 ஆம் ஆண்டு முதல் பயிற்சி மையம்
இருக்கின்றது. ஆனால் அந்தப் பயிற்சி மையம், 1999—2000 மற்றும்
2000—2001 ஆம் ஆண்டுகளிலே மானியம் பெறவில்லை என்பதையும்,
அது செயல்படுவதற்குண்டான அந்த நிதியுதவியைக் கடந்த
காலத்திலேயிருந்த ஆட்சியாளர்கள் முறையாக கதர் ஆணையத்திற்குப்
பரிந்துரை செய்து அந்த நிதியைப் பெறத் தவறியதன் காரணமாக, கடந்த
1999—2000, 2000—2001 ஆகிய ஆண்டுகளிலே அந்தப் பயிற்சி மையம் சரிவரச்



2001 செப்டம்பர் 3]

செயல்படவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு,
அந்தப் பயிற்சி மையம் செயல்பட தமிழகத்தினுடைய மாண்புமிகு
முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துரித
நடவடிக்கை மேற்கொண்டு, அந்த ஆணையத்திலேயிருந்து அந்த இரண்டு
ஆண்டுகளுக்குப் பெறப்பட வேண்டிய முறையே 8 இலட்சம் மற்றும் 9
இலட்சம் ரூபாயைப் பெறக்கூடியதற்கு உண்டான அறிவுரைகளையும்
ஆணைகளையும் வழங்கியிருக்கின்றார்கள். அந்த ஆணைகளையும்
அறிவுரைகளையும் ஏற்று, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு
26—6—2001—ல் வாரியத்தினால் முறையோடு கதர் ஆணையத்திற்குப்
பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதையும், அங்கே கடந்த காலங்களிலே
பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு, வருடத்திற்கு பயிற்சி பெறுகின்ற 110
மாணவர்களுக்கு 3 மாத பயிற்சிக்காக, ஒவ்வொரு மாணவருக்கும்
மாதத்திற்கு 350 ரூபாய் உதவித் தொகையாகவும், அந்த மாணவர்கள்
பயிற்சி பெறுவதற்கு வருகின்றபோதும் போகின்றபோதும் அவர்களுக்குப்
பிரயாணச் செலவுத் தொகையும், கச்சாப் பொருள் வாங்க ஒரு நபருக்கு
மாதம் ஒன்றுக்கு ரூ.50—ம் வழங்கப்படுகின்ற அளவிலே 8 இலட்சம் ரூபாய்
நமக்கு, கதர் ஆணையத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. வரவேண்டிய
தொகையை, கடந்த காலத்திலே ஆட்சியிலே இருந்த ஆட்சியாளர்கள்
பெறத் தவறியதன் காரணமாக அந்தப் பயிற்சி மையம் இரண்டு ஆண்டு
காலமாக சரிவரச் செயல்படவில்லை என்பதை தமிழகத்தினுடைய
முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு சென்றபோது, உடனடியாக அந்த கடந்த 2 நிதி ஆண்டுகளிலே
பெற முடியாமல் இருக்கின்ற அந்தத் தொகையைப் பெறுவதற்குண்டான
அறிவுரையும் ஆணையும் வழங்கியிருக்கின்றார்கள். அவர்களுடைய
மேலான அறிவுரையையும் ஆணையையும் ஏற்று, உடனடியாக கதர்
ஆணையத்திற்கு நேர்முகக் கடிதம் எழுதப்பட்டு இருக்கிறது. அந்தத்
தொகை கிடைக்கப்பெற்றவுடன் அந்த வாரியத்தினுடைய
நிதிநிலையிலேயிருந்து செலவழிக்கப்பட்ட அந்தத் தொகை ஈடு செய்யப்
படும் என்பதையும், இந்த நிதி ஆண்டிலே அதுபோன்ற ஒரு பயிற்சியை
மீண்டும் தொடங்க வேண்டும் என்று இதய தெய்வம் தமிழகத்தினுடைய
முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
ஆணைக்கிணங்க இந்த நிதி ஆண்டிலேயே கடலூரிலே அந்த 110
மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்குண்டான துரித நடவடிக்கையை
மேற்கொள்வதற்குண்டான வாய்ப்புகளை உண்டாக்கியிருக்கிறோம்
என்பதை வணக்கத்திற்குரிய மாமன்ற உறுப்பினருக்குக் கனிவோடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 3

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரம் ஏறுகின்ற தொழில் மிகக் கடினமான ஒரு தொழில் என்ற முறையில் அது படிப்படியாக இன்று குறைந்து வருகின்ற காலத்திலே நாம் இருக்கின்றோம். எனவே கடந்த 1981–82 ஆம் ஆண்டில் இந்த மாமன்றத்திலே ஒரு விவாதத்தில், குட்டைப் பனை, குட்டையும் நெட்டையும் சேர்ந்த தென்னை மரத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த ஓர் ஆய்வை நடத்தினார்கள். அந்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது? சமீபத்திலே பத்திரிகைகளிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. இயந்திரத்தைப் பயன்படுத்தி பனை மரம் ஏறுவதற்கான சில முயற்சிகள் நடைபெறுகின்றன. அப்படி இயந்திரத்தை உருவாக்கும்போது அரசு அந்த இயந்திரத்தைப் பெருவாரியாக உருவாக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற, இன்றைக்கு பத்திரிகையிலே வந்திருக்கின்ற அந்தச் செய்தியை நானும் படித்தேன். பனை மரத்தில் ஏறுவதற்கு ஒரு இயந்திரம், ஒரு தனி நபராலே கண்டுபிடிக்கப்பட்டு, அந்த இயந்திரத்தின் மூலமாக பரீட்சார்த்தமாக எப்படிச் செயல்பட முடியும் என்பதை விளக்குகின்ற அளவிலே இன்றைக்கு பத்திரிகைச் செய்தி மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது என்பதையும், அந்த இயந்திரத்தைத் தயாரித்த அவருக்கு அரசின் சார்பாக உதவி வேண்டுமென்று பத்திரிகையின் வாயிலாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். அந்த இயந்திரத்தைத் தயாரித்த அந்த நபருக்கு அரசின் சார்பாக என்னென்ன உதவிகள் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுபோன்ற இயந்திரங்களைத் தயாரித்தவர்களுக்கு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்கின்ற உத்தரவாதத்தை வணக்கத்திற்குரிய மாமன்ற உறுப்பினருக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



2001 செப்டம்பர் 3]

**37 –**

**சம்பள உயர்வு**

***1544—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு அமைப்பாளர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*முற்பகல் 10–20*

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமல பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, சத்துணவு தந்த சரித்திர நாயகன் அமரர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். சத்துணவு அமைப்பாளர்களுக்கு வேலைப் பளு அதிகமாக உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் மீண்டும் மறுபரிசீலனை செய்து கருணை அடிப்படையில், அடுத்த ஆண்டாவது அவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைப் பளு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். இப்போது அவர்கள் பகுதி நேர பணியாளர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணி என்பது,

உண்ணுகின்ற குழந்தைகளின் வருகையைப் பதிவு செய்வது, அக்குழந்தைகள் வருகைக்குத் தக்கவாறு உணவுப் பொருள் எடுத்துச் செல்வது, குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவது, வரவு—செலவு புத்தகங்களைப் பராமரிப்பது. இந்தப் பணிகளை பகுதி நேர வேலைகளாக சத்துணவு அமைப்பாளர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 1996 ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற சத்துணவு ஊழியர்கள் மாநாட்டிலே கலந்துகொண்டபோது, அப்போது முதல் முறையாக அவர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுத்து, அதை நிறைவேற்றுவதற்கு இரண்டு வருடங்கள் கழித்து 1998—லேதான் செயலாக்கம் செய்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்கள் வரிசையிலே பள்ளிச் சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நலக் காப்பக அமைப்பாளர்கள், ஊட்டச் சத்து அமைப்பாளர்கள், அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களெல்லாம் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அதிலே பணியாற்றக்கூடியவர்கள் பெரும்பான்மையோர் பிளஸ் 2, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு எல்லாம் படித்தவர்கள். இவர்கள் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களாலே கொண்டுவரப்பட்டு, இதுவரையிலே பணியாற்றி அவர்களுக்கு வயதும் கடந்துவிட்டது. அவர்களில் சிலருடைய குழந்தைகளுக்குத் திருமணம் ஆகக்கூடிய நிலையிலே, சிலருடைய குழந்தைகளுக்குத் திருமணமாகி, பேரக் குழந்தைகளும் எடுத்துவிட்டார்கள். ஆகவே இப்படி இருக்கக்கூடியவர்கள் வேறு அரசு வேலைக்குச் செல்ல முடியாது. ஆகவே வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாத நிலையிலே மிகக் குறைவான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, விலைவாசி உயர்வை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பகுதி நேரப் பணியாளர்களாக பணியாற்றக்கூடியவர்களை முழு நேரப் பணியாளர்களாக உயர்த்தி, பணி நிரந்தரம் என்ற அமைப்பிலே கொண்டுவந்து, கூடுதலாகச் சம்பளம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இன்றைக்கு காலியிடம் ஏற்படக்கூடிய அந்தச் சமையலர்கள், உதவியாளர்கள் போன்றவர்களை புதிதாக நியமனம் செய்கிறார்கள். அப்படி நியமனம் செய்யப்படுகின்ற நேரத்திலே 2 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லி பணி நியமனம் செய்யப்படுகிறது. 2 ரூபாயை வைத்துக்கொண்டு எப்படி அவர்கள் பிழைப்பை நடத்த முடியும்? இது கேள்விக்குரியதாக இருக்கிறது. ஆகவே இவர்கள் அனைவருக்கும் அரசு ஊதிய உயர்வு வழங்கி, முழு நேரப் பணியாளர்களாக மாற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த பரிசீலனை அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு என்பது ஒரு நிரந்தரமான திட்டம். அந்த நிரந்தரமான திட்டத்தில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் நிரந்தரம் இல்லாத ஒரு சூழ்நிலை இன்றைக்குத் தொழிலாளர்களிடையே இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே குறைந்த சம்பளமாக இருந்தால்கூட இந்த அனைத்துப் பணியாளர்களையும் நிரந்தரப்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கேட்ட கேள்வியையே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும் கேட்டிருக்கிறார்கள். இதுகுறித்து அரசின் ஆய்வில் இருக்கிறது. பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முயற்சி செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆய்வுக்குப் பிறகு தெரிவிக்கப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆய்வில் இருக்கிறது என்று அமைச்சர் சொல்லிவிட்டார்கள்.

வினா எண் 38, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

[2001 செப்டம்பர் 3

38—

## மீன் இறங்கு தளம்

***3405—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, வீரபாண்டியன் பட்டினத்தில் மீன் இறங்கு தளம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் நிதி உதவியுடன் மாநில அரசினால் தமிழ்நாட்டில் 10 இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் வீரபாண்டியன்பட்டினமும் ஒன்றாகும். இவ்விடத்தில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி மார்ச் 2002—க்குள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் திருச்செந்தூர் அருகிலே இருக்கின்ற மீனவர் கிராமமான வீரபாண்டியன்பட்டினத்தில், இந்த ஆண்டிலே மீன் இறங்கு தளம் அமைப்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள், மக்கள் போற்றுகின்ற மகத்தான தலைவியாக இருக்கின்ற தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அந்த இறங்கு தளம் அமைப்பதற்கான நிலையை ஏற்படுத்தியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது எத்தனை படகுகள், விசைப் படகுகள் இந்த இறங்கு தளத்தைப் பயன்படுத்த முடியும்? அப்படிப் பயன்படுத்துவதாக இருந்தால் எந்தெந்த பகுதிகளைச் சேர்ந்த விசைப் படகுகள் இந்த இறங்கு தளத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 3]

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. இதற்காக தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (இரண்டாவது பட்டியல்)

1—

## மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்

**வினா 1113—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியில் கொணவட்டம் அரசு உயர்நிலைப் பள்ளி, வேலூர் தொகுதியில் ... வேலூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, வேலூர், விநாயக முதலியார் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, வேலூர், சலவன்பேட்டை, கஸ்பா நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாக இவ்வாண்டே மாற்ற எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

வேலூர் தொகுதியில் கொணவட்டம் அரசு உயர்நிலைப் பள்ளி, வேலூர் சலவன்பேட்டை கஸ்பா நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக்கோரும் கருத்துருக்கள் இவ்வாண்டு பெறப்படவில்லை. வேலூர் தொகுதியில் விநாயக முதலியார் அரசு

பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக்கோரும் கருத்துரு உயர்மட்டக் குழுவால் தேர்வு செய்யப்படவில்லை. வரும் கல்வி ஆண்டில் மேற்கண்ட பள்ளிகளின் கருத்துருக்கள் பெறப்பட்டால் அரசின் நிதிநிலைக்குட்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்படும்.

2—

## ஹோமியோ மருத்துவப் பிரிவு

**வினா 2393—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஹோமியோ மருத்துவப் பிரிவு எத்தனை மருத்துவமனைகளில் உள்ளது?

(ஆ) அந்த ஹோமியோ மருத்துப் பிரிவில் தினசரி சிகிச்சை பெறும் நோயாளிகள் எத்தனை பேர்?

(இ) அதன் பொருட்டு அரசு செலவிடும் வருடாந்திர செலவுத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 50 படுக்கைகள் கொண்ட திருமங்கலம் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த ஹோமியோபதி மருத்துவமனை ஒன்றும், சேலம் மற்றும் திருச்சி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளிலும், 25 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும், 9 வட்ட மருத்துவமனைகளிலும் ஹோமியோபதி மருத்துவப் பிரிவுகளும், 5 அரசு ஹோமியோபதி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) மேற்கண்ட மருத்துவமனையிலும், ஹோமியோபதி மருத்துவப் பிரிவுகளிலும், மருந்தகங்களிலும் 2000 ஆண்டில் 8,83,892 வெளி நோயாளிகளும் 27,346 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்றுள்ளனர். சராசரியாக 2,455 வெளி நோயாளிகளும் 76 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



(இ) மேற்கண்ட ஹோமியோபதி மருத்துவமனைக்கும் ஹோமியோபதி மருத்துவப் பிரிவுகளுக்கும் அரசு ஹோமியோபதி மருந்தகங்களுக்கும் 2000–2001 ஆம் ஆண்டிற்கு ரூ.191.71 இலட்சங்கள் செலவு செய்யப் பட்டுள்ளது.

3—

## நிதிப் பங்கீடு

**வினா 322—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்பேரில் பேரூராட்சிகளின் நிதிப் பங்கீட்டில் கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் இடங்கணசாலை, கொங்கணாபுரம், பூலாம்பட்டி ஆகிய ஒவ்வொரு பேரூராட்சிக்கும் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் மின் கட்டணத்திற்குப் பிடிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்பேரில் சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சியில் 2000–2001 ஆம் ஆண்டில் மாநில நிதிப் பகிர்வுத் தொகையாக ரூபாய் 10,65,440/— வழங்கப்பட்டுள்ளது. அதில் பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 10,65,440/— ஆகும். இப்பேரூராட்சியில் குடிநீர் பராமரிப்பு பிடித்தம் செய்யப்படவில்லை. கொங்கணாபுரம் பேரூராட்சிக்கு 2000–2001 ஆம் ஆண்டு மாநில நிதிப் பங்கீடு ரூபாய் 15,84,036/— இதில் குடிநீர் பராமரிப்பு பிடித்தம் ரூபாய் 1,98,004/— போக பேரூராட்சிக்கு ரூபாய் 13,86,032/— வழங்கப்பட்டுள்ளது. இடங்கணசாலை பேரூராட்சிக்கு 2000–2001 ஆம் ஆண்டு நிதிப் பங்கீடு ரூபாய் 15,22,484/— இதில் குடிநீர் பராமரிப்பு பிடித்தம் ரூபாய் 1,57,155/— போக ரூபாய் 13,65,829/— பேரூராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்காணும் மூன்று பேரூராட்சிகளுக்கும் மின் கட்டணத்திற்காக தொகை ஏதும் பிடித்தம் செய்யப்படவில்லை.

[2001 செப்டம்பர் 3

4—

**ஜீவன்தாரா கிணறு**

**வினா 621—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000—2001 ஆம் ஆண்டில் ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்ட வாரியாக ஜீவன்தாரா கிணறு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

(இ) செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1999—2000 ஆண்டு முதல் ஜீவன்தாரா கிணறு திட்டம் நடைமுறையில் இல்லாததால் இத்திட்டத்திற்கு, மாவட்டங்களுக்கு அரசால் நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

5—

**புதிய பேருந்து நிலையம்**

**வினா 1270—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் இருக்கும் புதிய பேருந்து நிலையம் சுகாதாரமற்ற நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்து நிலையத்தை நல்ல நிலையில் நிர்வகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2001 செப்டம்பர் 3]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மாவட்ட தலைமை இடத்தில் பேருந்து நிலையம் அமைந்துள்ளதால் தினசரி பயணிகள் போக்குவரத்து மிகுந்து காணப்படுகிறது. அதனால் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பிடங்கள் (கட்டணம் மற்றும் இலவசம்) நாள்தோறும் மூன்று கால சுழற்சி முறையில்(எட்டு மணி நேரத்திற்கு ஒருமுறை) சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. தேவைப்படும் சமயங்களில் கிருமிநாசினி பொருட்கள் தெளிக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) நகராட்சி பொதுக் கழிப்பிடங்கள் மேற்காணும் முறையில் பராமரிக்கப்படுவது போன்று கட்டணக் கழிப்பிடங்கள் நல்ல முறையில் பராமரிக்க ஒப்பந்தக்காரர்களுக்கு அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்படுவதுடன் தனி நபர்களைக் கொண்டு சுழற்சி முறையில் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக, புதுக்கோட்டை பேருந்து நிலையத்தின் துப்புரவு மற்றும் சுகாதாரம் சிறப்புடன் பேணப்பட்டு வருகிறது.

6—

**வேலைவாய்ப்பு**

**வினா 166—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பி.ஏ., பி.எட்., முடித்துவிட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை கோரி பதிவு செய்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களது வேலைவாய்ப்புக்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31—5—2001 நிலவரப்படி தமிழ்நாட்டில் பி.ஏ., பி.எட்., முடித்துவிட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை கோரி பதிவு செய்துள்ளவர்கள் மொத்தம் 50,655 ஆகும்.

[2001 செப்டம்பர் 3

(ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலையளிப்போரால் தெரிவிக்கப்படும் பணிக் காலியிடங்களுக்கு மனுதாரர்களின் பதிவு மூப்பு, வயது, கல்வித் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் பரிந்துரை செய்யும் பணியை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மேற்கொள்கின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலை காலியிடங்களை உருவாக்குவது இல்லை.

7—

## தொழிற்சாலைகளைத் திறத்தல்

**வினா 847—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மூடிய தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றைத் திறக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்துறையில் பெறப்பட்ட விவரங்களின்படி தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 177 ஆகும்.

இத்தொழிற்சாலைகள் பங்குதாரர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு, நிதி நெருக்கடி, தொழிலில் ஏற்பட்டுள்ள கடுமையான போட்டி மற்றும் கச்சாப் பொருள் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களினால் பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. அதில் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏதுமில்லை. எனவே அவற்றை மீண்டும் திறந்து இயக்குவது இத்துறையின் வரம்பிற்குள் இல்லை.

8—

## கணினி வழங்குதல்

**வினா 158—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 செப்டம்பர் 3]

(அ) தமிழகத்தில் 2000—2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசு கணினி வழங்கியுள்ளது?

(ஆ) வழங்கப்பெறாத அலுவலகங்களுக்கு விரைவில் கணினி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) முதற்கட்டமாக 2001 ஏப்ரல் மாதம் வரை 16 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 9 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசு கணினி வழங்கியுள்ளது.

(ஆ) இரண்டாம் கட்டமாக 284 சார்பதிவாளர் மற்றும் 41 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு கணினிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டு, உடனடியாக 100 அலுவலகங்களுக்கும் (89 சார்பதிவாளர் அலுவலகங்கள், 11 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள்), இந்நிதியாண்டில் (2001—2002) ஏனைய அலுவலகங்களுக்கும் கணினிகள் வழங்கப்படவுள்ளன. இதர 300 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு மூன்றாம் கட்டமாக, அடுத்த நிதியாண்டில் (2002—2003) கணினிகள் வழங்கப்படும்.

9—

## வருவாய்

**வினா 2345—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதிவுத் துறை மூலம் கடந்த 1999—2000 ஆண்டில் அரசுக்கு வந்த வருவாய் எவ்வளவு?

(ஆ) கடந்த 2000—2001 ஆம் ஆண்டில் அரசுக்கு வந்த வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பதிவுத் துறை மூலம் கடந்த 1999—2000 ஆம் ஆண்டில் வந்த வருவாய் ரூபாய் 1019.71 கோடி.

[2001 செப்டம்பர் 3

(ஆ) கடந்த 2000–2001 ஆண்டில் அரசுக்கு வந்த வருவாய் ரூபாய் 1094.14 கோடி.

10 –

## சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம்

**வினா 2356—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல், தருமபுரி, சேலம் மாவட்டங்களில் மற்றும் எடப்பாடியில் அரசுக் கட்டடத்தில் இயங்காத சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை –**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மேற்கு பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகம் 1–11–1999 முதல் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) நாமக்கல், தருமபுரி, சேலம் மாவட்டங்களில் அரசுக் கட்டடத்தில் இயங்காத சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய அரசுக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போதைக்கு இல்லை. ஆவணங்கள் பாதுகாப்பு, பதிவாகும் ஆவணங்களின் எண்ணிக்கை, ஆண்டு சராசரி வருவாய், கட்டடம் கட்டத் தேவையான இடவசதி, பொது மக்கள் வசதி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11 –

## மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா 80—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி – விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 செப்டம்பர் 3]

(அ) நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இதன்கீழ் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

(இ) 1998–99 மற்றும் 1999–2000 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை –**

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தரங்குன்றிய சோலா காடுகளை மேம்பாடு செய்து, தரத்தினை உயர்த்தவும், இயற்கையான காப்புக் காடுகளைப் பாதுகாக்கவும், ஜீன்பூல் தோட்டங்கள் போன்ற பாரம்பரியத் தோட்டங்களை பிரத்யேகத் திட்டங்களின் மூலம் பாதுகாத்தல் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் போன்ற திட்டப் பணிகள் துறையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும் தரங்குன்றிய வனப் பகுதிகளில் சிறு வனப் பொருட்களுக்காக மரக் கன்றுகள் நடுதல், சோலைக் காடுகளைச் சுற்றி கம்பி வேலி அமைத்தல், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணி செய்து மண் அரிப்பினைத் தடுத்தல் மற்றும் காடுகளைச் சுற்றி தீ தடுப்புக் கோடுகள் அமைத்து தீயிலிருந்து காடுகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் துறையினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

(இ) இத்திட்டத்திற்கென 1998–99 ஆம் ஆண்டில் ரூ.355.60 இலட்சமும், 1999–2000 ஆண்டில் ரூ.390.00 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12 –

## மரங்கள் வளர்த்தல்

**வினா 329—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி– விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 செப்டம்பர் 3

(அ) இந்திய இருப்புப்பாதைக்குரிய மரங்களை தமிழ்நாடு காடுகளில் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வகையான மரங்களை வளர்க்க அரசு உத்தேசித்துள்ளது?

**விடை–**

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இருப்புப்பாதைக்குரிய மர வகைகள் தமிழகத்தின் பருவ நிலைகளில் வளராது என்பதால் தமிழ்நாடு காடுகளில் அம்மரங்கள் வளர்க்க நடவடிக்கை ஏதுமில்லை.

**13–**

## எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி

**வினா 244–திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) 2000–2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி எத்தனை மெட்ரிக் டன்? அதில் குறிப்பாக தருமபுரி, சேலம், ஈரோடு மாவட்டங்களில் எவ்வளவு டன் உற்பத்தி ஆகிறது?

(ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள விவசாய நிலத்தில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் விகிதம் என்ன?

**விடை–**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2000–2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கீழ்க்கண்டவாறு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:



2001 செப்டம்பர் 3]

| வ.எண் | பயிர் | உற்பத்தி (மெ.டன்.) (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நிலக்கடலை | 14.633 |
| 2. | எள் | 1.140 |
| 3. | சூரியகாந்தி | 0.135 |
| 4. | ஆமணக்கு | 0.177 |
| 5. | சோயா | 0.019 |
| | மொத்த உற்பத்தி | 16.104 |

அதில் தருமபுரி, சேலம், ஈரோடு மாவட்டங்களில் மட்டும் எண்ணெய் வித்துக்கள் கீழ்க்கண்டவாறு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | மாவட்டம் | பயிர் உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலக் கடலை | எள் | சூரிய காந்தி | ஆமணக்கு | சோயா | மொத்தம் |
| 1. | தருமபுரி | 0.869 | 0.028 | 0.008 | 0.037 | – | 0.942 |
| 2. | சேலம் | 1.003 | 0.077 | 0.005 | 0.045 | – | 1.130 |
| 3. | ஈரோடு | 0.906 | 0.294 | 0.006 | 0.014 | 0.006 | 1.226 |

(ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள விவசாய நிலத்தின் பரப்பளவில் 16 விழுக்காடு பரப்பில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படுகின்றன.

**14–**

## எண்ணெய் வித்துக்கள்

**வினா 253–திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) எடப்பாடி தொகுதியில் 2000–2001 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெய் வித்துக்கள் எத்தனை மெட்ரிக் டன்?

(ஆ) எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் விகிதம் என்ன?

விடை–

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் 2000–2001 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன:

| வ. எண் | பயிர் | உற்பத்தி (மெடன்) |
|---|---|---|
| 1. | நிலக்கடலை | 30016 |
| 2. | ஆமணக்கு | 5548 |
| 3. | எள் | 1395 |
| 4. | சோயா மொச்சை | 123 |
| | மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி | 37082 |

(ஆ) எடப்பாடி தொகுதியில் சாகுபடியாகும் மொத்த பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் 45 முதல் 50 சதவிகிதம் வரை எண்ணெய் வித்துக்கள் சாகுபடி மற்றும் உற்பத்தி செய்யப்படுகிறது.

**15–**

## கசிவு நீர்க்குட்டைகள்

**வினா 2931–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வேளாண்மைத் துறையின் மூலம் சேலம் மாவட்டத்தில் 2000–2001 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கசிவு நீர்க்குட்டைகள் எத்தனை?

(ஆ) அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதன் விவரம் என்ன?



விடை–

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2000–2001 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்படாததால், வேளாண்மைத் துறையின் மூலம் சேலம் மாவட்டத்தில் 2000–2001 ஆம் ஆண்டில் கசிவு நீர்க்குட்டைகள் ஏதும் அமைக்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) எழவில்லை.

**16–**

## சமநிதி உதவி

**வினா 2940–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாடு முழுமையாக மத்திய, மாநில அரசுகளின் சமநிதி உதவியுடன் விவசாயப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காகக் கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் யாவை?

(ஆ) அதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? அதன் விவரம் யாது?

விடை–

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு முழுமையாக மத்திய, மாநில அரசுகளின் சமநிதி உதவியுடன் விவசாயப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. காவிரி பாசனப் பகுதி
2. பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்
3. அமராவதி நீர்த்தேக்கத் திட்டம்
4. கோதையார் சித்தார் பட்டணங்கால் திட்டம்
5. தாமிரபரணி ஆற்றுப் பாசனத் திட்டம்

[2001 செப்டம்பர் 3

(ஆ) மேற்படி திட்டங்களுக்கு 2000–2001 ஆம் ஆண்டு ரூ.2824.572 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:—

| வரிசை எண் | திட்டம் | மத்திய அரசு நிதி | மாநில அரசு நிதி | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | காவிரி பாசனப் பரப்பு | 727.688 | 727.688 | 1455.376 |
| 2. | பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் | 341.349 | 341.348 | 682.697 |
| 3. | அமராவதி நீர்த்தேக்கத் திட்டம் | 122.408 | 122.408 | 244.816 |
| 4. | கோதையார் சித்தார் பட்டிணங்கால் திட்டம் | 111.953 | 111.952 | 223.905 |
| 5. | தாமிரபரணி ஆற்றுப் பாசனத் திட்டம் | 108.889 | 108.889 | 217.778 |
| | மொத்தம் | 1412.289 | 1412.285 | 2824.572 |

17—

### மிதிவண்டி

**வினா 333—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் உடல் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர மிதிவண்டி கடந்த 2000–2001–ல் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் எத்தனை பேர்?

(இ) காத்திருப்போருக்கு அரசு எப்பொழுது மிதிவண்டி வழங்க உள்ளது?



2001 செப்டம்பர் 3]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் உடல் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர மிதிவண்டி கோரி கடந்த 2000–2001–ல் 25 நபர்கள் விண்ணப்பித்தார்கள். இவர்களில் 16 நபர்களுக்கு மூன்று சக்கர மிதிவண்டி வழங்கப்பட்டது.

(ஆ) காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை 9 நபர்கள்.

(இ) காத்திருப்போருக்கு இவ்வாண்டு 2001–2002–ல் வழங்கப்படும்.

18—

### இளம் குற்றவாளிகள்

**வினா 1851—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இளம் குற்றவாளிகள் எண்ணிக்கை குறைந்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இளம் குற்றவாளிகளுக்காக இரு சிறப்பு இல்லங்கள் முறையே செங்கல்பட்டு மற்றும் சென்னையில் இயங்கி வருகின்றன. மேற்படி இல்லங்களில் கடந்த 5 ஆண்டுகளில் சேர்க்கப் பட்டுள்ள இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கையை நோக்கும்பொழுது தமிழ்நாட்டில் இளங்குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவே தோன்றுகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் | அரசினர் பெண்கள்/ சிறப்பு/இளைஞர் இல்லம் |
|---|---|---|
| 1996 | 29 | 6 |
| 1997 | 35 | 5 |
| 1998 | 32 | 5 |
| 1999 | 21 | 3 |
| 2000 | 23 | 1 |

[2001 செப்டம்பர் 3

19–

## முன்னாள் படை வீரர்கள்

**வினா 2928–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சேலம் மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) அவர்கள் குறை தீர்க்க 2000–2001 ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?

(இ) இதனால் பலன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை–**

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 3153 முன்னாள் படை வீரர்களும், காலமடைந்த முன்னாள் படை வீரர்களின் மனைவியர் 1173 பேரும் உள்ளனர்.

(ஆ) 2000–2001 ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட முன்னாள் படை வீரர்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் 13 மனுக்கள் பெறப்பட்டன.

(இ) இதில் பலன் பெற்றவர் ஒருவர்.

20–

## மீன் விற்பனை நிலையம்

**வினா 1233–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட பாப்பாரப்பட்டியில் ஒரு மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2001 செப்டம்பர் 3]

**விடை–**

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரத்திலும், பாப்பாரப்பட்டியிலும் மீன் விற்பனை நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) வினா ஏழாது.

21–

## கேளிக்கை வரி

**வினா 2384–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டப்படி கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அதில் உள்ளாட்சித் துறைகளுக்குப் பிரித்து அளிக்கப் பட்டது எவ்வளவு?

**விடை–**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டப்படி கடந்த 2000–2001 ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த வருவாய்:

| வரிசை எண் | இனம்வாரியாக | வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திரையரங்குகள் மூலம் | 7061.53 |
| 2. | கேபிள் டி.வி. | 44.86 |
| 3. | பொழுதுபோக்குப் பூங்கா | 204.54 |
| 4. | குதிரைப் பந்தயம் | 31.89 |
| 5. | மற்றவை | 46.63 |
| | மொத்தம் | 7389.45 |

[2001 செப்டம்பர் 3

(ஆ) கேளிக்கை வரிச் சட்டப்படி திரையரங்குகளின் மூலம் கிடைத்த வருவாயில் உள்ளாட்சித் துறைக்குப் பிரித்து அளிக்கப்பட்ட தொகை ரூ.67.38 கோடி.

**22–**

## புதிய பேருந்துகள்

**வினா 562–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) எடப்பாடி அரசு போக்குவரத்துப் பணிமனையில் எத்தனை பேருந்துகள் உள்ளன?

(ஆ) இவற்றில் எத்தனை பேருந்துகள் நல்ல நிலையில் உள்ளன?

(இ) மோசமான நிலையிலுள்ள பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசுப் போக்குவரத்துப் பணிமனையில் '52 பேருந்துகள் உள்ளன.

(ஆ) அனைத்துப் பேருந்துகளும் தடத்தில் இயங்கும் நிலையில் உள்ளன.

(இ) கேள்வி எழவில்லை.

**23–**

## நவீன பேருந்துகள்

**வினா 570–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் நவீன வசதிகள் நிறைந்த பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2001 செப்டம்பர் 3]

**விடை–**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், தடத்தில் இயங்கி வந்த சாதாரணப் பேருந்துகளைப் படிப்படியாக மாற்றம் செய்து சொகுசு, படக்காட்சியுடன்கூடிய சொகுசு மற்றும் மிதவைப் பேருந்துகளாக இயக்கப்பட்டு வருகின்றன. இதனை நிதி நிலைமைக்கு ஏற்றவாறு நவீன வசதிகள் கொண்ட பேருந்தாக மாற்றம் செய்யும் திட்டமும் உள்ளது. தற்போது இக்கழகத்தில் கீழ்க்கண்டவாறு முறையே கோட்டம்–1 மற்றும் கோட்டம் 2–ல் நவீன வசதிகள் நிறைந்த பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:

| | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (கோட்டம் 1) | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (கோட்டம் 2) |
|---|---|---|
| சாதா பேருந்து | 301 | 52 |
| சொகுசுப் பேருந்து | 220 | 125 |
| படக்காட்சியுடன்கூடிய சொகுசுப் பேருந்து | 179 | 23 |
| மிதவைப் பேருந்து | 6 | 4 |
| மொத்தம் | 706 | 204 |

**24–**

## பேருந்து நிறுத்தம்

**வினா 608–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருநெல்வேலியிலிருந்து நாங்குனேரி வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் நாங்குனேரி தாலுகா அலுவலகம் முன்பாக நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலியிலிருந்து நாங்குனேரி வழியாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் நாங்குனேரி தாலுகா அலுவலகம் முன்பாகக் கண்டிப்பாக நின்று பயணிகளை ஏற்றி/இறக்கிச் செல்ல வேண்டும் என ஏற்கெனவே தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. 29–1–2000 நாளிட்ட சுற்றறிக்கை வாயிலாக மீண்டும் நினைவூட்டப்பட்டுள்ளது. தவிர இவ்விடத்தில் பேருந்துகள் முறையாக நின்று செல்கிறதா என அவ்வப்போது ஆய்வாளர்களால் கண்காணிப்பு செய்யப்பட்டு வருகிறது.

25—

## லாப நட்ட விவரம்

**வினா 872—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குவதற்கு என்ன காரணம்?

(ஆ) 1996–2001 ஐந்தாண்டு காலத்தில் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள லாப நட்ட விவரங்களைத் தெரிவிக்க இயலுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்கண்ட காரணங்களினால் தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி வருகின்றன.

1) டீசல் எண்ணெயின் கடுமையான விலையேற்றத்தால் செலவினம் கூடியுள்ளது. அவ்வப்போது டீசல் விலை உயர்ந்தபோதும் அதற்கிணையாக, பேருந்துகளில், பயணக் கட்டண விகிதம் உயர்த்தப்படவில்லை.

2) உதிரிப் பாகங்களின் விலை உயர்வு.

3) மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை, ஊழியர்களுக்கு ஊதிய விகித ஒப்பந்த அடிப்படையில், ஊதிய உயர்வு, போனஸ் இவற்றால் ஏற்படும் கூடுதல் செலவினம்.



4) போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து நிதி நிறுவனம் மற்றும் வங்கிகளுக்கு கடன் வாங்கிய வகையில் செலுத்தும் அதிகப்படியான வட்டி.

5) மினி பேருந்துகள், முறையற்ற வேன்கள் இயக்கம் இவற்றால் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய் பாதிப்பு.

6) பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோளுக்கிணங்க இலாபம் ஈட்டாத தடங்களில் பேருந்துகளை இயக்குவதில் ஏற்படும் இழப்பு.

7) மற்ற மாநிலங்களுக்கு இணையாக, தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டண விகிதம் உயர்த்தாதது.

8) மோட்டார் வாகனத் தீர்ப்பாயத்தில் விபத்து சம்பந்தமாகத் தொடுக்கப்பட்ட வழக்கிற்காக ஒதுக்கீடு செய்யப்படும் பெரும் தொகையால் இழப்பு.

9) சமவெளியில் இயக்கப்படும் பேருந்துகளைக்காட்டிலும் மலைப்பகுதி இயக்கங்களுக்கு ஏற்படும் அதிகப்படியான இயக்கச் செலவு மற்றும் குறைந்த வருவாய்.

10) மாநிலத்தில் சில பகுதிகளில் அடிக்கடி நடைபெறும் அரசியல், மத, சாதிக் கலவரங்களினால் பேருந்துகள் எரிப்பு, சேதம் மற்றும் பேருந்துகள் இயக்க முடியாதது.

11) பெரும்பான்மை போக்குவரத்துக் கழகங்களில் பழைய பேருந்துகளை மாற்றாததால் அவற்றிற்கு ஆகும் அதிகப்படியான பராமரிப்புச் செலவு.

12) மாணவர்கள், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், புற்றுநோயாளிகள், மொழி எல்லை மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்கள், நாடகக் கலைஞர்கள், பத்திரிகையாளர்களுக்குப் பேருந்துகளில் வழங்கப்படும் இலவச/பகுதிக் கட்டணச் சலுகையால் பேருந்துகளுக்கு ஏற்படும் முழு இழப்பினையும் அரசு ஈடு செய்வதில்லை.

*1996—2001* போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இலாப—நட்டக் கணக்கு@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 109-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

### உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றி 1-9-2001 அன்று தாம் தெரிவித்த கருத்துகளை வெவ்வேறு பொருள்படும்படி செய்தித்தாள்கள் வெளியிட்டதால் தன்னிலை விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 109-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-9-2001 அன்று காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு பேசினார். நான் தமிழகத்தில் முதலமைச்சராக இருக்கின்ற நிலையில் முதலமைச்சராகிய என்னைப்பற்றி ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்போது அதிலே நீதி கிடைக்காது என்றும், அதனால் அந்த வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டுமென்றும் இந்திய அரசு தலைமை வழக்குரைஞர்–Attorney-General–உச்ச நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளது குறித்து நான் பெரிதும் வருத்தப்படுவதாகக் கூறி இந்த மாநில நீதிபதிகள் எல்லாம் நேர்மை இல்லாதவர்களா என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் எழுப்பினார். அதற்கு எதிர்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஆட்சேபம் தெரிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து நான் இந்த மன்றத்தில் கூறிய கருத்துகளைப் பற்றி பல்வேறு செய்தித்தாள்கள் வெவ்வெறு வகையில் பொருள்படும்படியாக தவறான செய்திகளை வெளியிட்டுள்ளன.

@ 549, 550 ஆகிய பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





அதுகுறித்து சட்டமன்ற விதி 109-ன்கீழ் ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

நான் முதலமைச்சராக இருப்பதால் இங்கே சென்னை உயர் நீதிமன்றத்தில் டான்சி வழக்கு நடக்கக்கூடாது என்று தி.மு.க.வினர் கூறுகிறார்கள். காரணம் என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அதனால் சாதகமான தீர்ப்பைப் பெற்றுவிடுவேன் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். அந்தச் சமயத்தில் ஏற்கெனவே தமிழ்நாட்டில் நடைபெற்ற நிலக்கரி இறக்குமதி செய்ததில் ஊழல் நடந்ததாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குபற்றி நான் குறிப்பிட்டேன். தனி நீதிமன்றம் அந்த வழக்கில் என்னை விடுவித்திருந்தாலும், உயர் நீதிமன்றமும் தனி நீதிமன்றத்தின் தீர்ப்பு சரிதான் என்று உறுதி செய்திருந்தாலும், அன்றைய தி.மு.க. அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, உச்ச நீதிமன்றத்தில் தனி நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அளித்த தீர்ப்பு இரத்து செய்யப்பட்டு, அந்த வழக்கில் மீண்டும் விசாரணை நடைபெற வேண்டுமென்ற உத்தரவு வந்தது. அப்படியானால் தி.மு.க. மத்திய கூட்டணி அரசில் அங்கம் வகிப்பதால் மத்திய அரசின் செல்வாக்கைப் பயன்படுத்தித்தான் அந்த உத்தரவைப் பெற்றார்கள் என யாரேனும் கருதமாட்டார்களா என்பது குறித்து தி.மு.க.வினர்தான் விளக்கம் அளிக்க வேண்டும் எனும் பொருள்படக் கூறியிருந்தேன். நான் முதலமைச்சராக இருக்கின்ற நிலையில் உயர் நீதிமன்றத்தில் நீதி கிடைக்காது என்று வாதாடுகிறவர்கள் மேற்கண்ட நிலக்கரி வழக்கில் செல்வாக்கைப் பயன்படுத்தித்தான் ஆணை பெறப்பட்டது என்று யாரேனும் கூறினால், அதை ஏற்றுக்கொள்வார்களா என்ற பொருள்படும்படிதான் நான் கூறினேன். நான் வேறு எந்த மாறுபட்ட கருத்தையும் நீதிமன்றத்தை அவமதிக்கும் பொருளில் எதையும் கூறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விஷயத்தை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய தீர்ப்பு வந்தபோதிலும்கூட நான் நீதிபதிகளைப்பற்றி எந்தக் கருத்தும் சொல்லவில்லை. எந்த நீதிமன்றத்தைப்பற்றியும் நான் குறை கூறி கருத்து தெரிவிக்கவில்லை. ஒவ்வொரு நீதிபதியையும் நான் மதிக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியைக்கூட நான் நாடாளுமன்ற வேட்பாளராக நிறுத்தி இருந்தேன். எனவே உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு எந்த உள்நோக்கமும் கற்பித்து எதையும் நான் இந்த மன்றத்தில் கூறவில்லை என்பதை தன்னிலை விளக்கமாக நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 3

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சாத்தூர் நகரில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சாத்தூர் நகரில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக் கொள்ளுமாறு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

*முற்பகல் 10–30*

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தூர் நகரில் குடிதண்ணீர் பஞ்சம் மிக அதிகமாக உள்ளது. கடந்த 5 மாத காலமாகவே மிக மோசமாக இருந்த காரணத்தால், முன்பு எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அரசிடத்திலே சொல்லி, லாரிகளிலே தண்ணீர் எடுப்பதற்காக ரூ.10.00 இலட்சம் சாத்தூர் நகராட்சிக்கு நான் வாங்கிக் கொடுத்திருந்தேன். அந்த அடிப்படையில், 8–8–2001 வரையில், அந்தப் பணத்திலே லாரி மூலமாக தண்ணீர் விநியோகம் செய்திருந்தார்கள்.

கடந்த 8–8–2001–க்கு மேல், பணம் இல்லையென்று சொல்லி, கடந்த 25 நாட்களாக சாத்தூர் நகரத்திலே லாரி மூலமாகத் தண்ணீர் கொடுக்காமல், தண்ணீருக்காக தெருவிலே மக்களெல்லாம் அலையக்கூடிய மிக மோசமான, அவலமான சூழ்நிலை சாத்தூர் நகரிலே இருக்கின்றது. அதுமட்டுமல்ல, இதேபோல சிவகாசியிலும், விருதுநகரிலும் குடிதண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக உள்ள காரணத்தால், இந்த அரசாங்கம் லாரி மூலமாகத் தண்ணீரை விநியோகிப்பதற்கு வேண்டிய உதவிகளை, பணத்தை அளிக்குமா என்பதைக் கேட்பதற்காக நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்தை நான் ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் நகருக்கு வைப்பாறு குடிநீர்த் திட்டத்தின் மூலம்





குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இக்குடிநீர்த் திட்டத்திலுள்ள 5 கிணறுகளில், பருவ மழை தவறியதன் காரணமாக, 3 கிணறுகளில் குடிநீர் முழுமையாக இல்லை. மீதமுள்ள 2 கிணறுகளில் கசப்புத் தன்மையின் காரணமாக தண்ணீர் எடுக்கப்படவில்லை. கோவில்பட்டி. சீவலப்பேரி திட்டத்தின் மூலம் 9–8–2001 முதல் குடிநீர் பெறப்பட்டு, 2 மேல்நிலைத் தொட்டிகளில் தண்ணீர் சேகரிக்கப்பட்டு, சாத்தூர் நகருக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இருக்கன்குடியில் உள்ள தனியார் கிணறுகளில், தண்ணீர் கிரயம் பெற்று, நகராட்சி லாரி மூலமும், நகராட்சி மினி டேங்கர் மூலமும், குழாய் மூலமும், குடிநீர் கிடைக்கப்பெறாத பகுதிகளில் விநியோகம் செய்யப்படுகிறது. கசப்புத் தன்மையின் காரணமாக 2 கிணறுகளில் தண்ணீர் எடுக்கப்படவில்லை. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, 10.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, லாரிகள் மூலமும், டேங்கர் மூலமும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் முழுவதும் செலவு செய்யப்பட்டபோதிலும், மேலும் தற்சமயம் சாத்தூர் நகராட்சிக்கு ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, லாரிகள் மூலமாகவும், டேங்கர் மூலமாகவும், குடிதண்ணீர் வழங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், சாத்தூர் நகரில் 24 வார்டுகளில், 10 டிராக்டர்கள் மூலம் தினமும், 40 நடைகள் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்யாததால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். இதேபொருள் குறித்து திரு. ஜி.கே. மணி அவர்களும் இப்போது கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவரும் கேள்வி கேட்கலாம். இப்போது திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு 8.5% பிழிதிறன் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1000/– நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளதால், விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து" மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

கரும்புக்கு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை, ஒவ்வொரு ஆண்டும் மைய அரசால் 1966 கரும்புக் கட்டுப்பாடு ஆணை பிரிவு 3—ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசு கரும்புக்கு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக நிர்ணயிக்க வேண்டுமென்று மைய அரசுக்குப் பரிந்துரை செய்வதை, மைய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. மாநில அரசு பரிந்துரை செய்யும் விலையைவிட குறைவாகவே சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையாக நிர்ணயம் செய்து வருகிறது. மைய அரசு நிர்ணயம் செய்யும் சட்டப்பூர்வ குறைந்தபட்ச கரும்பு விலை கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்குக் கட்டுப்படி ஆகாததால், விவசாயிகளின் நலன் கருதி மைய அரசு அறிவிக்கும் சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலைக்குக் கூடுதலாக மாநில அரசு பரிந்துரை விலையை ஒவ்வொரு ஆண்டும் அறிவித்து வருகிறது.

2. 2000—2001 பருவத்திற்கு 8.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.775/– என்றும் 10.0 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1000/– என்றும் மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயம் செய்துள்ளது. மாநில அரசு பரிந்துரை விலை அறிவிக்கும் முன், விவசாயிகளிடமும், தனியார் சர்க்கரை ஆலைகளிடமும், தனித்தனியாக கூட்டம் நடத்தி வந்தது. ஆனால் 1998—99 பருவத்தில் தனியார் ஆலைகள், மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்க, அரசுக்கு உள்ள அதிகாரம் குறித்து வழக்கு தொடுத்தன. மாநில அரசு பரிந்துரை விலை வழங்க தனியார் ஆலைகளை கட்டாயப்படுத்தக் கூடாதென, சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால





உத்தரவு வழங்கியது. ஆயினும், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு மாநில அரசு விலை நிர்ணயம் செய்யலாமென இடைக்கால உத்தரவு வழங்கியது.

3. ஒவ்வொரு ஆண்டும் கரும்பு விலை உயர்ந்தாலும், அந்த அளவுக்கு சர்க்கரை விலை உயரவில்லை. சர்க்கரை உற்பத்திச் செலவில், கரும்பு கொள்முதல் செலவு மட்டும் 60—75 சதவிகிதம் அளவில் உள்ளது. மேலும், பிற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் கரும்பு விலை பின்வருமாறு அதிகரித்துள்ளது:—

| வ. எண் | மாநிலம் | சர்க்கரை கட்டுமானம் (சதவிகிதம்) | 2000—2001 கரும்பு விலை | | 8.5 சதவிகித சர்க்கரை கட்டுமானத்திற்கு கரும்பு விலை (கணக்கிட்டது) |
|---|---|---|---|---|---|
| | | | குறைந்த பட்சம் | அதிகபட்சம் | |
| | | | (ரூபாய் டன்னுக்கு) | | |
| 1. | தமிழ்நாடு | 9.21 | 775 | 1000 | 775 |
| 2. | ஆந்திரப் பிரதேசம் | 10.09 | 595 | 750 | 630 |
| 3. | கர்நாடகம் | 10.64 | 800 | 950 | 760 |
| 4. | மகாராஷ்டிரா | 11.39 | 595 | 875 | 650 |

4. 1994—95 முதல் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் பெரும் நட்டத்தை அடைந்து வருகின்றன. 1999—2000 ஆண்டு வரையிலான கூட்டு நட்டத்தொகை ரூ.689.29 கோடியாகும். சென்ற ஆண்டு (2000—2001) மட்டும் மொத்த நட்டம் ரூ.125.88 கோடி என்ற நிலையில் 31—3—2001 வரை கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் திரண்ட நட்டம் ரூ.815.17 கோடியாக அதிகரித்துள்ளது. அனைத்துக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறைச் சர்க்கரை ஆலைகள் மைய அரசு அறிவித்துள்ள சட்டபூர்வ குறைந்த பட்ச விலையையும் மைய அரசு அறிவித்துள்ள விலைக்கு மேலான மாநில அரசு அறிவித்துள்ள விலை வித்தியாசத் தொகையையும் குறித்த காலத்தில் வழங்க முடியாத நிலையில் உள்ளன. கரும்பு நிலுவைத் தொகையை வழங்கும் வகையில் அரசு வழிவகைக் கடன்களை அளித்து வருகிறது.

5. கரும்பில் அதிகக் கட்டுமானம் மற்றும் அதிக உற்பத்தியைப் பெருக்குவதற்காக, மாநில சராசரி உற்பத்தியைவிட குறைவான அளவில் உற்பத்திச் செய்துவரும் ஆலைகளில் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உதவியோடு ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி, அதன்மூலம் அதிக உற்பத்தியளிக்கும் புதிய இரகங்களை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனாலும் கரும்பு விவசாயிகளின் வருவாய் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருக்கிற இந்த விவர அறிக்கையைப் பார்த்தேன். இந்த விவர அறிக்கையில் கண்டிருக்கக்கூடிய செய்திகள் தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிச்சயமாக ஒரு பெரிய ஏமாற்றத்தைக் கொடுக்கும் என்பதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசு வாக்குறுதியைத் தந்திருந்தாலும்கூட, கரும்பு டன் ஒன்றிக்கு, 1000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னவர்கள். 5 ஆண்டு காலம் எங்களை ஆள விடுங்கள், தருகிறோம் என்று சொன்னவர்கள். கடைசி கட்டத்தில் 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு மட்டும் 1000 ரூபாய் என்று அறிவித்தார்கள். ஆனால் தமிழகத்தில் 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புகள் என்பது பல இடங்களில் கிட்டாத ஒன்று. 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புகளை வைத்துதான் நாடு முழுவதும் நாம் இங்கே ஒரு குறியீட்டை வைத்துக்கொண்டு விலை நிர்ணயம் செய்துகொண்டிருக்கிறோம். தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு கரும்பு விதை போடுவதிலிருந்து, நிலத்தை உழுவதிலிருந்து, பராமரித்து, பிறகு கரும்பை வெட்டி, சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்புகிற வரை, டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுத்தால்கூட அவர்களுக்குக் கட்டுப்படி ஆகாது.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், கேள்விதான் கேட்க வேண்டும். கரும்பைப் பிழியக்கூடாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மிகவும் பிழியப்பட்ட நிலையில் இருக்கிற காரணத்தாலே தான் நான் இந்தக் கருத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அவர்கள் மிகவும் துன்பப்பட்டு, கரும்புக்கு அதிகமாகச்





செலவிட்டு, தங்களுக்கு செலவிடக்கூடிய பணம்கூடக் கிட்டாது இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, விவசாயிகள் பலபேர் இன்று தற்கொலை செய்துகொள்ளக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள். வறுமையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், கடந்த ஐந்தாண்டு காலமும் நாங்கள் தொடர்ந்து 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்டிருக்கிற கரும்புக்கும் ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, பல போராட்டங்களைச் செய்தோம். இதை அவையிலே வலியுறுத்தினோம். இருந்தாலும், அப்போது வெற்றி பெறாத நாங்கள், "சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்று சொல்லிக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் செய்யவில்லை என்றாலும்கூட, உங்கள் அரசு வந்தால் நிச்சயமாகச் செய்யும் என்கிற நம்பிக்கையோடு விவசாயப் பெருங்குடி மக்கள், பெருவாரியான வாக்குகளை இந்த அரசுக்குத் தந்து அரியணையிலே ஏற்றியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அமைச்சரோ, இங்கே கொடுத்திருக்கிற விவர அறிக்கையிலே, ஏற்கெனவே சர்க்கரை ஆலைகளுக்கு நிறைய கடன் இருக்கிறது; அரசாங்கத்தின் நிதிநிலை சரியில்லை என்றெல்லாம் சொல்லி, இவர்கள், கரும்புக்குப் போதிய, அதிகக் கட்டுமானம் மற்றும் அதிக உற்பத்தியைப் பெருக்குவதற்காக, மாநில சராசரி உற்பத்தியைவிட குறைவான அளவில் உற்பத்தி செய்து வரும் ஆலைகளை, அதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உதவியோடு ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி, அதன் மூலம் அதிக உற்பத்தி அளிக்கும் புதிய இரகங்களை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே நீங்கள் உற்பத்தியைப் பெருக்குங்கள். ஏற்கெனவே இருக்கக்கூடிய உற்பத்திக்கே உரிய விலை இல்லை. இன்னும் நீங்கள் உற்பத்தியைப் பெருக்கி, எப்போது சர்க்கரையைக் கொடுக்கப் போகிறீர்கள்? ஏற்கெனவே விவசாயிகள் கரும்பை அனுப்பி, விவசாயிகளுக்கு 800 கோடி ரூபாய்க்கு மேலே இன்னும் பணம் வரவில்லை. இப்படி இருக்கக்கூடிய நிலையில், நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களை அணுகி, நிச்சயமாக நீங்கள் ஒரு விவாதத்தைத் தொடர்ந்து நடத்தி, கரும்பிற்கு ஆயிரம் ரூபாய், அதாவது, 8.5 சதவிகிதம் பிழிதிறனுள்ள கரும்பிற்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்கிற மகிழ்ச்சியான செய்தியை நீங்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, விவசாயிகளுக்கான பணத்தைப் பெற்றுத் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் நல்ல கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அவர் சொல்லிய கருத்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். வேண்டாம் என்கிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே 8.5 சதவிகிதம் அல்லது 10 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்பிற்கு எவ்வளவு பணம் கொடுக்கிறார்கள் என்ற அட்டவணையை மட்டும் காட்டியிருக்கிறார்கள். அரியானாவிலே ஏற்கெனவே ரூ.1100 கொடுக்கிறார்கள். அதை மட்டும் ஏனோ, convenient--ஆக நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த அட்டவணையில் சேர்க்காமல் விட்டுவிட்டிருக்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருவதெல்லாம், தமிழ்நாட்டு விவசாயிகள் மகிழ்ச்சியடையக்கூடிய வகையிலே, எதிர்பார்ப்பை ஈடுசெய்யக்கூடிய வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்பிற்கு ஆயிரம் ரூபாய் என்ற அறிவிப்பை அதாவது, மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து ஆலோசித்து இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அந்த நல்ல செய்தியை தமிழ்நாட்டு மக்களுக்குத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதிலேயே திருப்தி அடைந்திருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் மற்ற மாநிலங்களிலேயெல்லாம், தமிழகத்தைவிட குறைந்த விலை தருகிறார்கள் என்று சொன்னார்கள். அரியானாவிலே மட்டும் அதிக விலை தருவதாகச் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், கரும்பைப் பொறுத்த அளவிலே, உற்பத்தியைப் பெருக்க



2001 செப்டம்பர் 3] [திரு. இரா. ஜீவானந்தம்]

வேண்டும் என்பது ஒருபுறம் இருந்தாலும்கூட, அதனுடைய பிழிதிறனை அதிகரிக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். அதற்குத்தான் வேளாண் பல்கலைக்கழகத்தை, பிழிதிறன் அதிகம் உள்ள கரும்புகளை நீங்கள் அறிமுகப்படுத்த வேண்டும் என்று சொல்லி, அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கரும்புகளை நம்முடைய விவசாயிகள் பயன்படுத்தி, அவர்கள் வேண்டுவதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 10–40*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களாலே விவரஅறிக்கை ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே பதிலுரையிலேயும் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டு காலம் இந்த மாமன்றத்திலே கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் வேண்டுகின்ற பிரச்சினையிலேயிருந்து பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேசினோம். பேசுகின்ற நேரத்திலே பெரும்பாலும் அமைச்சர்களின் வாடிக்கையான பதில் பரிசீலிப்பதாகச் சொல்வது. இப்படி கடந்த 5 ஆண்டு காலத்திலே பரிசீலிப்பதாகச் சொன்னவை முழுவதும் நிறைவேற்றப்பட்டதா என்று சொன்னால், இல்லை. அதைத்தான் நம்முடைய நண்பர், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே தெளிவாகச் சொன்னார்கள். பரிசீலிப்பதாகச் சொன்னாலும்கூட எங்களுக்கு சந்தேகம் வருகிறது. காரணம், விவசாயிகளுடைய வாழ்க்கை, அதுவும் குறிப்பாக கரும்பு விவசாயிகளுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக இருந்துகொண்டிருக்கிறது. 10 மாத காலம் பயிரிட்டு, நீர் பாய்ச்சி படாத கஷ்டம் எல்லாம்பட்டு, கரும்பு வெட்டிச் செல்லக்கூடிய நிலை வரையிலே அவர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதில்லை. ஆயிரம் ரூபாய்க்கு மேலே செலவாகிறது. உழுகிறவனுக்கு உழக்குக்கூட மீதியில்லை என்று சொல்வதைப் போல அவர்கள் எதையும் மிச்சம் செய்ய முடியாத வகையிலே கடனைப்பெற்று கரும்பு விவசாயம் செய்த விவசாயி, கடனைத் திருப்பிச் செலுத்த முடிவதில்லை.

கடந்த 5 ஆண்டு காலம் நாங்கள் எல்லாம் பேசுகின்ற நேரத்திலேகூட, இந்த மாமன்றத்திலே வீற்றிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் அதைப்பற்றிப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு 5

ஆண்டு காலம் இருந்தது என்று சொல்கிறார்களே, நீங்கள் ஆட்சியைவிட்டு இறங்கினால், நாங்கள் வந்தால் உடனடியாக வழங்குவோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொன்ன அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு உடனடியாக அறிவித்திருக்க வேண்டும். இங்கே வரவு–செலவுத் திட்டத்திலே அது சொல்லப்படவில்லை. ஆகவே நாங்கள் எல்லாம் எதிர்பார்த்த அந்தக் கோரிக்கை, நீண்ட நாளைய கோரிக்கை, இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்களும், தமிழ்நாடு விவசாயிகளும் ஒட்டுமொத்தமாக எதிர்பார்க்கக்கூடியது 5.85 சதவிகிதம் சர்க்கரை பிழிதிறன் கொண்ட கரும்பிற்கு.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8.5% என்று சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றிச் சொல்லிவிட்டேன். மன்னிக்கவும். 8.5% பிழிதிறன் கொண்ட கரும்பிற்கு ஆயிரம் ரூபாய் என்ற விலை வழங்க வேண்டும். 10% பிழிதிறன் என்ற அளவு இல்லாமல் கரும்பு விவசாயி என்று சொன்னாலே சரி, அது 9% ஆக இருந்தாலும், 8.5% ஆக இருந்தாலும் வழங்க வேண்டும். இந்த விவசாயிகள் கரும்பைப் பயிரிட்டு 9 மாதம் வளர்க்கிறார்கள். 10–ஆவது மாதம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, 8.5%–க்கு ஆயிரம் ரூபாய் என்றால், 9% என்று வந்தால் அதிகமாகும்.

**திரு. ஜி.கே. மணி:** 8.5% மேலே எவ்வளவு இருந்தாலும் சரி, அதைப்பற்றி நாங்கள் கணக்கிலே எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. குறைந்த அளவு 8% இருந்தாலும், 8.5% இருந்தாலும்கூட விவசாயி 9 மாதம் பயிரிட்ட பிறகு 10–வது மாதத்திலே கிணற்றிலே நீர் இல்லை என்று சொன்னால், வாய்க்காலிலே நீர் வரவில்லை என்று சொன்னால், கரும்பு காய்ந்து விடுகிறது; பட்டுப்போய் விடுகிறது. ஆகவே இப்படி 10–வது மாதம் கரும்பு விவசாயிகளுடைய வாழ்க்கையும் பட்டுப்போய் விடுகின்ற, உத்தரவாதம் இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இதையெல்லாம் கணக்கிலேகொண்டு நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இதனை முனைப்போடு பரிசீலிக்க வேண்டும். அதேநேரத்தில்கூட, சர்க்கரை உற்பத்தி மாத்திரமல்லாமல் எத்தனால் தயார் செய்தால், கூடுதலாக இலாபம் கிடைக்கும் என்று அதிகாரிகள் எல்லாம் சொல்கிறார்கள்; வேளாண்மைத் துறை வல்லுநர்கள் எல்லாம் சொல்கிறார்கள். ஆகவே அதனையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, வரக்கூடிய வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே நிச்சயமாக கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய்



வழங்குவோம் என்று இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி, அவ்வாறு அறிவிப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன். இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், 5 ஆண்டு காலம் இந்த அவையிலே போராடிப் பார்த்தோம்; எங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று இப்போது சொன்னார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே, இந்த ஆட்சி பொறுப்பேற்று 100 நாட்களை இப்போதுதான் தாண்டி வந்துகொண்டிருக்கிறோம். அம்மாவைப் பொறுத்த அளவிலே, விவசாயிகளுக்கு அவர்கள் கேட்காமலேயே நன்மையைச் செய்கிற (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிதான் இந்த ஆட்சி. ஆகவேதான் இதுபற்றிய உங்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும், தமிழக விவசாயிகள்மீது அக்கறையும் ஆர்வமும் கொண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 28 – தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28 – தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-45*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. மானியக் கோரிக்கை ஆரம்பிப்பதற்கு முன்பு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை ஆரம்பித்தாகி விட்டது. வேண்டாம். திரு. மணி, அமைச்சரிடம் பிறகு தனியாக அது குறித்துக் கேளுங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கை ஆரம்பித்தாகிவிட்டது.

**திரு. ஜி.கே. மணி:** வேறொரு முக்கியமான பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை முடியட்டும். (குறுக்கீடு) முடியட்டும். மானியக் கோரிக்கை ஆரம்பித்தாகிவிட்டது. அப்புறம் கேளுங்கள்.

***மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.85,45,21,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 743, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையை உடனடியாக மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 172, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் மூடப்பட்ட தோல் தொழிற்சாலைகள், அரியூர் கூட்டுறவு நூற்பாலை ஆகியவற்றை உடனே திறந்து, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2433, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2561, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிலாளர்களுக்குத் தகுந்த நேரத்தில் ஊதியம் வழங்கத் தவறும் நிர்வாகத்தினர்மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2974, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 587, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெட்ரோல் பங்குகளில் ஒரு லிட்டர் ஸ்டாம்பிங் முறையைக் கொண்டு

வருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1701, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் தேனிரும்புத் தொழிற்சாலை ஒன்று திறக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், அப்பகுதி வாழ்மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1758, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1680, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள ஹை —ஃபாரஸ்ட் எஸ்டேட்டில் பணிபுரிந்த 606 தொழிலாளர்களுக்கு 9 மாதங்களாக ஊதியம் வழங்காதது குறித்தும், மூடப்பட்ட அந்த எஸ்டேட்டை உடனடியாக அரசே ஏற்று நடத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1454, திரு. அன்பில் பெரியசாமி.



**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3008, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3309, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 – ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3198, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,45,21,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2615*, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை ஒன்று அமைத்து, வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*85,45,21,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *876*, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*85,45,21,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2993*, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*85,45,21,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1407*, திரு. ஆர். சக்ரபாணி, ஊருக்குப் போய்விட்டார்; இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3594*, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம்



ஐ.டி.ஐ.-க்குச் சேர்ந்த இடத்தில், நஞ்சியம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நீரேற்று நிலையம் கட்ட அனுமதி வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*85,45,21,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய மானியக் கோரிக்கைமீது விவாதம். டாக்டர் க. பொன்முடி.

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்க வாய்ப்பளித்தமைக்காக முதலில் உங்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

தொழிலாளர் நலத் துறையில், கடந்தகால ஆட்சியில், அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்ட பல்வேறு வாரியங்களினுடைய செயல்பாடுகளை தமிழகத்திலே இருக்கிற நடுநிலையாளர்கள்

---

@ 551 முதல் 666 வரையிலான பக்கங்களில் இணைப்பு–II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பாராட்டுகிறார்கள். குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்கள், அமைப்பு சாராத் தொழிலாளர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். விவசாயக் கூலித் தொழிலாளியாக இருந்தாலும், தையல் வேலை செய்பவர்களாக இருந்தாலும், கட்டுமானப் பணி செய்பவர்களாக இருந்தாலும், டாக்சி, ஆட்டோ ஓட்டுநர்களாக இருந்தாலும், வீட்டுவேலை செய்கிற தொழிலாளியாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் அமைப்பு சாராத் தொழிலாளிகளாகக் கருதப்பட்டு, வேலை கிடைக்காத நாட்களிலும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்த வாரியங்கள் உருவாக்கப்பட்டன. இந்த வாரியங்கள் 1997–லேயிருந்து 12 தொழில்களாக இருந்தவை, கிட்டத்தட்ட 67 தொழில்களாக, அவற்றிலே சேர்த்துக்கொள்ளப்பட்டு, அவற்றிற்காக பல்வேறு தனித்தனி வாரியங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

*முற்பகல் 10-50*

கடந்த கால ஆட்சியிலே கட்டுமானத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு வாரியம் உருவாக்கப்பட்டு, ஓராண்டுகாலம் அது செயல்பட்டாலும்கூட, 1995–96 ஓராண்டிலே, அது மாநகராட்சிகளிலே மட்டும் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டு அதிலே 25,000 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தார்கள். அவர்களுக்காக இருந்த நிதித் தொகையும்கூட சுமார் 25 இலட்சம் ரூபாய்தான் இருந்தது. இந்தத் தொழிலாளர்களுக்கு உதவி வழங்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் செலுத்துகிற தொகை மட்டுமே போதாது என்ற எண்ணத்தோடு employers' contribution, அவர்களுக்குப் பணி கொடுப்பவர்களிடமிருந்தும் நிதி வசூலிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, 0.3 சதவிகிதமாக வசூலிக்கப்பட்டு, ஓராண்டிலே 25 இலட்சமாக இருந்த தொகை, கடந்த 5 ஆண்டு காலத்திலே 28 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது என்பது கலைஞர் அரசின் சாதனை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 0.3% வசூலிக்கப்பட்டதினுடைய விளைவாக, கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளு அதிகப்படுத்தி வழங்கப்பட்டன. உயிர் நீத்தவர்களுக்கு மட்டுமே சலுகை என்று இருந்த நிலைமை மாறி அவர்களுடைய மக்கட்பேறு உதவிக்கா திட்டம், பிள்ளைகள் படிப்பதற்காக திட்டம் என்று பல்வேறு நலத திட்டங்கள் எல்லாம் விரிவாக்கப்பட்டன.



இன்றுகூட தையல் தொழிலாளர்கள் எல்லாம் இந்த அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கடந்த கால ஆட்சியிலே வழங்கப்பட்ட சலுகைகளைக் கொடுக்குமாறு அவர்கள் கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் தேர்தல் அறிக்கையில், தேர்தல் காலங்களிலே நீங்கள்கூட இந்த அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற உறுதியையும் அளித்திருந்தீர்கள். அந்த ஓய்வூதியத்தைப்பற்றி உங்களுடைய Policy Note–லே எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அதுமட்டுமல்ல, இந்த 100 நாட்கள் சாதனையாக நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே, அந்த 100 நாட்களிலே இந்தத் தொழிலாளர்களுக்கு எந்தெந்த உதவிகளை வழங்கியிருக்கிறீர்கள் என்ற பட்டியல்கூட இதிலே இல்லை. வேண்டுமானால் சொல்லலாம். இன்னும் அந்தப் பட்டியல் தயாராக வேண்டும் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் இதிலே நீங்கள் சொல்லியிருக்கிற குறிப்புகளில், 31–5–2001 வரை, அதாவது கடந்த கால ஆட்சி இருந்தவரை வழங்கப்பட்டவை எல்லாம் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். இந்த 100 நாட்களிலே நீங்கள் ஏதேனும் வழங்கியிருக்கிறீர்களா? இந்த 100 நாட்களிலே எவ்வளவு வழங்கியிருக்கிறீர்கள், எந்தெந்த வாரியத்திலே வழங்கியிருக்கிறீர்கள் என்று அமைச்சருடைய பதிலுரையிலே தெரிவிக்க வேண்டும். குறிப்பாக தையல் தொழிலாளர் வாரியத்தில் இருப்பவர்கள் எல்லாம் இன்று வைக்கிற கோரிக்கையே அதுதான். ஏனென்றால் இப்பொழுதுதான் வழங்கப்பட வேண்டிய நேரம். 12 ஆம் வகுப்பு படித்த மாணவர்களுக்கு 1,500 ரூபாய், 10 ஆம் வகுப்பு படித்த மாணவர்களுக்கு 1,000 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் எல்லாம் இந்த 100 நாட்களிலே எத்தனை பேருக்குக் கொடுத்திருக்கிறீர்கள்? தினசரி பத்திரிகைகளிலே வருகிறது. யாரோ வந்தார்கள்; படிப்பதற்கு வசதி இல்லை என்று கேட்டவுடன் நிதி வழங்கியிருக்கிறீர்கள். வரவேற்கிறோம். ஆனால் இந்தத் திட்டத்தின் மூலமாக நீங்கள் இந்த 100 நாட்களிலே எத்தனை அமைப்பு சாராத் தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு 10 ஆம் வகுப்பு தேறிய மாணவர்களுக்கு 1,000 ரூபாய் வழங்கியிருக்கிறீர்கள்? பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு எத்தனை பேருக்கு 1,500 ரூபாய் வழங்கயிருக்கிறீர்கள்? திருமண உதவித் திட்டத்தில் 2,000 ரூபாய் எத்தனை பேருக்குக் கொடுத்திருக்கிறீர்கள்? இந்த 100 நாள் சாதனைகளிலே அவற்றையெல்லாம் சொல்லியிருந்தால் இன்னும் அது வரவேற்கக்கூடியதாக இருக்கும். அமைச்சருடைய பதிலுரையிலே அவற்றை எதிர்பார்க்கிறேன்.

அதுமட்டுமல்ல, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படியே 480 நாட்கள் பணியாற்றியிருந்தால் அவர்கள் எல்லாம் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று கடந்த கால அரசு ஆணையிட்டு பல தொழிலாளர்களை நிரந்தரம் செய்திருக்கிறது. ஆனால் இப்போது கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகின்ற பல பேருக்கு வேலை நீக்க உத்தரவு அனுப்பப்பட்டு, அவர்கள் எல்லாம் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையிலே அவர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதுபோல மக்கள் நலப் பணியாளர்கள். நீண்டகாலமாகப் பணியாற்றிய அவர்களையும் இந்த அரசு பழிவாங்கியிருக்கிறது. இந்தப் பழிவாங்கும் படலத்தையெல்லாம் விட்டுவிட்டு அவர்களும் தொழிலாளர்கள் என்ற உணர்வோடு, அவர்களும் பணியாளர்கள் என்ற உணர்வோடு, அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் அங்கேயும் இருக்கிறார்கள் என்ற உணர்வோடு அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பினை வழங்கிட இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இப்பொழுது இருந்துகொண்டிருக்கிற மற்றொரு பிரச்சினை பஞ்சாலைத் தொழிலாளர்கள். இந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை என்று வருகின்றபோது, கடைசியிலே நான் அந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருந்த காலகட்டத்தில் அந்த முதலாளிகளோடும், தொழிலாளர்களோடும் கலந்து பேசி, 10 பி–யை invoke பண்ண வேண்டுமென்று அவர்கள் இருவரும் ஒத்துக்கொண்டதின் அடிப்படையில் அது ஆணையத்திற்கு எழுதப்பட்டது. அது தேர்தல் காலமாக இருந்ததால் தேர்தல் ஆணையரிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற முயற்சியிலே தேர்தல் ஆணையத்திற்கும் அந்த 10 பி–யை invoke பண்ண வேண்டும் என்ற உத்தரவை நாங்கள் எழுதியிருந்தோம். ஆகவே நீங்கள் அதை மீண்டும் invoke செய்து, பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் பொறுத்த வரையில், கடந்தகால ஆட்சியில் கலைஞருடைய ஆட்சியில் மூடிக்கிடந்த 22 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன. பல்வேறு தொழிலாளர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட்டன.



போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் 1998–லே அவர்களுக்கு settlement உருவாக்கப்பட்டது. அந்த ஆண்டே செப்டம்பரிலிருந்தே அவர்களுக்கு ஆண்டுக்கு 280 கோடி ரூபாய் அதிகப் பயன் கிடைக்கிற அளவிற்கு அந்த settlement உருவாக்கப்பட்டது. இப்பொழுது செப்டம்பர் வந்துகொண்டிருக்கிறது. அந்த settlement–ஐப் பற்றிய பேச்சுவார்த்தைகள்கூட இன்னும் தொடங்கப்படாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே போக்குவரத்துத் தொழிலாளர்களிடையே பெரிய பிரச்சினைகள் இப்போது உருவாகிக்கொண்டிருக்கின்றன. அதுவும் நீங்கள் ஆட்சிக்கு வருகிறபொழுது, அவர்களெல்லாம் போராடியபொழுது, மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர்கள் இங்கே 4 பேர்கள் இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் அப்போது அதிகம் பேச வாய்ப்பு கொடுக்கப்பட்ட நேரத்திலே, அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள்; அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை வைத்த அந்தக் காலகட்டத்திலேயிருந்து இப்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற நீங்கள் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்குத் தயாராக இருக்கிறீர்களா என்ற கேள்வியையும் நான் இங்கே எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10—55*

இங்கே பல பேருக்கு வருத்தம். அனல் பறக்கவில்லை, கனல் பறக்கவில்லை என்றெல்லாம் பல பேருக்கு வருத்தம். எங்களால் அனல் பறக்கிற அளவிற்குப் பேச முடியும். முடியாதது ஒன்றும் அல்ல. அனல் பறக்க வேண்டும் என்று சொன்னால் ** *(மணியடிக்கப்பெற்றது) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, இது தொழிலாளர் நல மானியக் கோரிக்கை. சம்பந்தம் இல்லாமல் ஏன் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்? தேவையே இல்லை. *(கூச்சல்–குழப்பம்)* உட்காருங்கள்; உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். பொன்முடி பேசிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடு)* மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி பேசும்போது, நாகரீகத்தைப்பற்றிப் பேசினார். புரட்சித் தலைவி அவர்களை இந்த அவையிலே எந்த அளவிற்குத் தாக்கினார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. *(கூச்சல்–குழப்பம்)*

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அனல் பறக்கவில்லை, கனல் பறக்கவில்லை என்று பேசியதையெல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நீக்கவில்லை. அனல் பறக்கவில்லை; கனல் பறக்கவில்லை என்று தாங்கள் சொன்னதை நான் நீக்கவில்லை. ஆனால் ** என்று சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். (குறுக்கீடு) தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். உட்காருங்கள். அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். யாரும் குறுக்கிட மாட்டார்கள். நீங்கள் பேசிய எந்தக் கருத்திலும் வேறு யாரும் குறுக்கிடவில்லை. உங்களுடைய ஆட்சியினுடைய சாதனைகளைப்பற்றி நீங்கள் சொன்னீர்கள். யாரும் குறுக்கிடவில்லை. தயவுசெய்து அந்த முறையிலே பேசுங்கள். அதற்காகத் தேவையில்லாமல் வம்பு வளர்க்க வேண்டிய அவசியமே இல்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நீங்கள் அமைச்சராக இருந்தபோது தொழிலாளர்களுக்குச் செய்யப்பட்டது; அமைப்புசாராத் தொழிலாளர்களுக்குச் செய்யப்பட்டது.....(குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே பேசப்பட்ட ஒரு கருத்துக்கு நான் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் அப்போது அதைக் குறிப்பிட்டிருந்தால், நீங்கள் அப்போது அதை நீக்கியிருந்தால், நான் இந்தப் பதிலைச் சொல்லியிருக்க மாட்டேன். ஒருவர் அனல் பறக்கவில்லை என்று சொல்கிறபொழுது, அனல் பறப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பேசுகிற உரிமை....(கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அமருங்கள். நீங்கள் தொழிலாளர் நல மானியக் கோரிக்கை தொடர்பாக பேசிக்கொண்டு வந்த எந்தக் கருத்திலும் நான் குறுக்கீடு செய்யவில்லை. (குறுக்கீடு) (கூச்சல்–குழப்பம்) அனைவரும் அமருங்கள். (கூச்சல்–குழப்பம்) அனைவரும் அமருங்கள் (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் அமருங்கள். (கூச்சல்–குழப்பம்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் அமருங்கள். (கூச்சல்–குழப்பம்) அமருங்கள்; எல்லோரும் அமருங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் அவரவர்களுடைய இடத்திலே தயவுசெய்து அமருங்கள். (கூச்சல்–குழப்பம்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் தயவுசெய்து அவரவர்களுடைய இடத்திலே அமருங்கள். (கூச்சல்–குழப்பம்) திரு. ராஜாங்கம், அமருங்கள். (கூச்சல்–குழப்பம்) திரு. ராஜாங்கம் அமருங்கள்.

*(திரு. பா. பரணிகுமார் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்தார்.)*

முதலிலே நீங்கள் இங்கே வரக்கூடாது. உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) உங்களுடைய இடத்திற்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு) அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். (கூச்சல்–குழப்பம்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து அமைதியாக இடத்திலே அமருங்கள். (கூச்சல்–குழப்பம்) அமைதியாக இடத்திலே அமருங்கள். நீங்கள் எல்லோரும் அமருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*(திரு. பா. பரணிகுமார் அவருடைய இருக்கைக்குச் சென்று அமர்ந்தார்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நடக்க வேண்டிய இப்பேரவையை அமளிக்கு உள்ளாக்குவது உண்மையிலேயே வேதனைக்குரியது. மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் உணர்வுகளைத் தூண்டக்கூடிய அளவிற்கு இப்படிப் பேசி அவையிலே அமைதியை பங்கப்படுத்த வேண்டாம் என்று அவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். அமைதி காக்க வேண்டும். தினந்தோறும் இப்படி அவையிலே கலாட்டா செய்வது, அவையிலே பிரச்சினைகளை உருவாக்குவது அமைதியின்மையை உருவாக்குவது என்பதை ஒரு கொள்கையாகக் கடைப்பிடிக்க வேண்டாம் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பொன்முடி, நீங்கள் உட்காருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, நீங்கள் உட்காருங்கள். பேராசிரியர் பேசுகிறார் அல்லவா? எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது, இதுகூட தெரியாதா? உங்களுடைய கட்சித் தலைவரைக்கூட பேச விடக்கூடாதா?

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவையினுடைய முன்னவர், அமைச்சர் அவர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம்தான் உணர்ச்சியைத் தூண்டுகிறது; கலாட்டா செய்கிறது என்று...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் அமர்ந்துகொண்டு பேசக்கூடாது; அமர்ந்துகொண்டு விமர்சனம் செய்யக் கூடாது. அதிலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது பொறுமையாகக் கேட்க வேண்டுமே தவிர, இடையிலே குறுக்கிட்டு, அமர்ந்துகொண்டு பேசுவது முறையற்றது; அவர்கள் விளக்கத்தைச் சொல்லட்டும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையில் அவை முன்னவர் சொன்ன அந்தக் கருத்து இரு சாராருக்கும் பொருந்தும். ஒரு பக்கத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்தான் உணர்ச்சியைத் தூண்டிப் பேசுகிறார் என்று அமைச்சர் கருதுகிறாரா? இன்னொரு பக்கத்திலே அப்படிப் பேசவில்லையா? பேசியதற்குப் பேச்சு வராதா? இரண்டு பக்கமும் பேச்சு வரக்கூடாது என்று சொன்னால், இரண்டு பக்கத்திலேயும் பேசுகிறபோது தேவையில்லாமல் வேறுவிதமான உணர்வுகளைத் தூண்டுகிற நிலைமை இருக்கக்கூடாது என்பதைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கடந்த சில தினங்களாக கண்கூடாகக் கண்டு கொண்டிருப்பது, பிரச்சினைகளை உருவாக்க வேண்டும்; அதையொட்டி வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்ற நோக்கோடு பேசுவதுபோல் தெரிகிறது. உணர்வுகளைத் தூண்டுகிற வகையில் பேசக்கூடாது என்றுதான் தி.மு.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பெரியவர், அப்துல் லத்தீப் அவர்கள் ஏற்கெனவே பேசுகிறபோது கூறியதைப்போல, அவையில் அனைத்துத் தரப்பினரும் கண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பல ஆண்டுகள் அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள்



மற்றவர்கள் உணர்வுகளைத் தூண்டாத வகையில், சீண்டாத வகையில் பேசுகிறபோது அவையினுடைய அமைதி பேணப்படும் என்பதை அனைவரும் உணர வேண்டும் என்றுதான் நான் கூறினேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்காருங்கள். நான் சொல்கிறேன். கடந்த கால ஆட்சிக் காலத்திலே எங்களுடைய சாதனைகள் என்று சொல்லிக்கொண்டு வருகிறபோது, யாரும் அதிலே குறுக்கிடப் போவதில்லை. இன்னின்ன செய்தோம்; இன்றைக்கு இருக்கக் கூடிய அரசு அந்த வகையிலே செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்டுக் கொள்வதிலோ, பேசுவதிலோ எந்தவிதமான தவறும் இல்லை. அதிலே நான் குறை காண விரும்பவில்லை. நீங்கள் வலுக்கட்டாயமாக அனல் பறக்கும்; கனல் பறக்கும் என்று நேற்று பேசப்பட்டதற்கு ஏதோ விளக்கம் சொல்வதைப்போல, அது அந்த அளவிலே நிறுத்தியிருந்தால்கூட பரவாயில்லை; அதற்காக ** என்றெல்லாம் வார்த்தைகள் வருவது முறையற்றது; (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொன்னேன்; அந்த வாக்கியங்கள்தான் நீக்கப்படுகின்றன. நீங்கள் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே தொடர்ந்து பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வாதாடுகிறபோது முன்னுதாரணங்கள் இருக்கின்ற காரணத்தால், வாதாட வேண்டிய கட்டாய நிலைமைக்கு மற்றவர்கள் தள்ளப்படுகிறார்கள். ஆகவே அந்த முன்னுதாரணங்களைத் தவிர்ப்பதற்கும் தலைவர் அவர்கள் இனி வழி காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிகழ்ச்சியை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இங்கே உறுப்பினர்கள் பேசுவதில் எப்படியும் பேசலாம்; பேசும்போது உணர்ச்சியுடன் பேசுவதெல்லாம் இருக்கலாம். ஆனால் அதில் ஒரு வரைமுறை இருக்கிறது. அதற்காக தகாத வார்த்தைகளை எல்லாம் இங்கு பயன்படுத்துவது முறையல்ல. (குறுக்கீடுகள்) அவற்றைச் சொல்லட்டுமா? அவர் சொன்ன வார்த்தைகளை repeat பண்ணச் சொல்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக்கொண்டு இருக்கிறார். திரு. பொன்முடி, நீங்கள் அமருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** திரு. பொன்முடி அவர்கள் பேசும்போது உணர்ச்சிவசப்படலாம். அதற்காக உணர்ச்சிவசப்பட வேண்டாமென்று சொல்லவில்லை. அவரும் மனிதர்தான்; உணர்ச்சிவசப் படட்டும். ஆனால் மற்றவர்களும் மனிதர்கள்; அதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அதை மறந்துவிட்டு, அவர் ஒருமையிலே வார்த்தையைப் பயன்படுத்துவது ஒரு தவறான முன்னுதாரணம். (குறுக்கீடுகள்) அதுபற்றி நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இதற்கு ஒரு முறை இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒலிபெருக்கியிலே பேசுகிறபோது யாருமே ஒருமையிலே தவறான வார்த்தையைப் பயன்படுத்துவது இல்லை. ஒலிபெருக்கி இல்லாமல், எழுந்து இரண்டு பக்கமும் சத்தம் போடுகிறபோது தவறான வார்த்தைகள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. அவை முறையற்றது; அவை எதுவும் அவைக் குறிப்பில் ஏறப்போவதில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் ஓர் அமைச்சராக இருந்தவர், அதற்காக இப்படி அந்த வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தித் தொடங்குவதா? ஆத்திரப்படுவதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, ஆத்திரப்பட வேண்டிய அவசியமே இல்லை. இது சட்டப் பேரவை. உங்களுடைய கருத்துகள், இங்கே ஒழுங்காக நீங்கள் முறையாகச் சொல்லக்கூடிய கருத்துகள் அனைத்தும் இங்கே பதிவு செய்யப்படுகின்றன. இதிலே நீங்கள் ஆத்திரப்படுவதற்கு எதுவுமே இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் பேசிக்கொண்டு வந்தீர்கள். சில ஆக்கபூர்வமான எண்ணங்களை, கருத்துகளை சொல்லி வருகிறீர்கள்; கடந்தகால ஆட்சியிலே நடைபெற்றதைச் சொல்கிறீர்கள்; அதிலே யாரும் ஆத்திரப்படப்போவதில்லை. இந்த ஆட்சியிலே என்னென்ன அறிவிக்கப் போகிறீர்கள்; என்னென்ன சொல்லப்போகிறீர்கள் என்று கேட்கிறீர்கள்; அதற்கு அமைச்சர் பதிலுரையிலே சொல்லப்போகிறார். அதிலே பிரச்சினை இல்லை. நீங்கள் இதற்கும் மாறாக, வீணாக ஏன், அரசியலிலே வம்பு வளர்ப்பதைப் போல, அனல் பறக்கும், கனல் பறக்கும் என்று நீங்கள் சொன்ன அந்த வார்த்தைப் பிரயோகங்களெல்லாம் தேவையேயில்லை. இதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடு)



*முற்பகல் 11-05*

இப்போது இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு. மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் பரணிகுமார் அவர்கள் என்னுடைய இருக்கைக்கு வந்து என்னைப் பயமுறுத்துவதைப்போல இங்கே வந்து பேசுகிறார். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள். பேரவைத் தலைவருடைய இருக்கைக்குப் பக்கத்திலே உங்களுக்கு எந்த வேலையும் கிடையாது. உங்களுடைய ஒலிபெருக்கியிலே பேசவேண்டுமே தவிர, பேரவைத் தலைவருடைய இருக்கைக்குப் பக்கத்திலே வந்து பேசவேகூடாது. பேரவைத் தலைவரைப் பயமுறுத்த நினைக்கக்கூடாது, நான் பயப்படவும் மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதைவிடப் பெரிய பெரிய ஆசாமிகளையெல்லாம் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். நான் பயப்படமாட்டேன். நான் சொல்வது, இங்கே வந்து பயமுறுத்துகிற அந்த வேலைகளிலே எல்லாம் ஈடுபடக்கூடாது. அது முறைகேடானது. பொன்முடி அவர்கள் தொடர்ந்து பேசலாம். தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசலாம். (குறுக்கீடு) தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று காவல் துறை மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, அவையிலே நடந்த நடவடிக்கைகளைப்பற்றி பாராட்டினார்களேயொழிய, காவல் துறை மானியம் என்றால் அனல் பறக்கும் என்று இருந்தேன், ஆனால் காவல் துறை மானியக் கோரிக்கையில் எல்லாம் அமைதியாக நடந்தது, என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் பாராட்டினார்களேயொழிய (மேசையைத் தட்டும் ஒலி) யாரைப் பற்றியும் அவர்கள் குறை சொல்லவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஒன்றும் தவறு இல்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக உறுப்பினராக இந்த அவையிலே இருந்து வருகிற நான், நேற்றைய பேச்சுக்கு இப்படியும் ஒரு விளக்கம் சொல்ல முடியும் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். அமைச்சருடைய திறமையைப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்கள், தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் இன்னும் 10 மணித்துளிகள் பேசுங்கள். 5 மணித்துளிகள் நீங்கள் பேசி முடித்துள்ளீர்கள். குறுக்கீடுகளை நான் கணக்கில் சேர்க்கவில்லை. இன்னும் 10 மணித்துளிகள் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேச வேண்டிய கருத்துகளைப் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பரணிகுமார், உட்காருங்கள். பொன்முடி பேசுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** நான் தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும். உங்களிடம் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தயவுசெய்து அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய இருக்கையிலிருந்து பேசுங்கள். (குறுக்கீடு) இங்கே வந்து பேசக்கூடாது என்றுதான் சொன்னேன். உங்கள் இருக்கையிலிருந்து என்ன வேண்டுமானாலும் பேசலாம். இங்கே வந்து பேசக்கூடாது, அதைத்தான் நான் சொன்னேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைத் தலைவர் அவர்களை நேராக நெருங்கிவந்து வேண்டுகோள் விட்டதாக அவர் சொல்கிறார். அச்சுறுத்துவதாக நீங்கள் சொல்வது, அச்சுறுத்தக்கூடிய அளவுக்கு பரணிகுமார் அப்படிப்பட்டவர் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் என்னிடத்தில் பழகுகிறவர்கள். யாரும் என்னை அச்சுறுத்த முடியாது. எல்லோரும் என்னிடத்தில் வேண்டுகோள்தான் விடுகிறார்கள். ஆனால் குழப்பமான ஒரு சூழ்நிலையில்...

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுறுத்துவது நோக்கமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நோக்கம் என்பது வெவ்வேறாக இருக்கட்டும். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் குழப்பமான சூழ்நிலையில் இங்கே என்னுடைய இருக்கைக்குப் பக்கத்திலே வந்து என்னிடத்திலே பேசுவது என்பது முறையற்றது. வேண்டுகோள் விடுவதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. பொன்முடி, பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் ஏதோ ஒருமையில் பேசியதாகச் சொன்னார்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன்,...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். பிரச்சினை முடிந்துவிட்டது. தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லாவிட்டால் நான் அடுத்த உறுப்பினரை அழைக்கப் போகிறேன். வேறு வழியில்லை. (குறுக்கீடு) இல்லை, நான் அதைச் சொல்லவில்லை. நீங்கள் மறுபடியும் பிரச்சினைக்குள்ளே போவதாக இருந்தால் உங்களை நான் பேச அனுமதிக்கவில்லை.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான எந்தத் திட்டங்களும் இந்த 100 நாட்களில் செயல்படுத்தப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அப்பொழுது ஒரு Social Benefit Fund என்று அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக ஒரு நிதி அளிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் இந்த உதவிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று சொன்னால் நிதியாதாரம் முக்கியமானது, அவசியமானது. அவர்கள் முதலிலே மொத்தமாக ஒருவர் உறுப்பினராகச் சேர வேண்டுமென்று சொன்னால் 100 ரூபாய் கட்டினால் போதும் என்று இருக்கிறது. கிட்டத்தட்ட இப்போது அதிலே 10 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். 10 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருக்கிறபோது அதிலே சேருகிற தொகை குறைவாக இருந்தாலும்கூட அந்த Employers' Contribution–ஐக் கொண்டுவந்து அதை நிரந்தர நிதியாக வைத்துக்கொள்வோம் என்று சொன்னால் கிட்டத்தட்ட 100 கோடி, 200 கோடி ரூபாய் அளவிற்கு அதை வைத்துக்கொள்வோம் என்று சொன்னால், அதிலே வருகிற வட்டிப் பணத்திலிருந்து இந்த ஊதியத்தை வழங்க முடியும் என்ற நிலையிலே அதையும் நீங்கள் உயர்த்த வேண்டும். குறிப்பாக, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கிற அவற்றில்கூட நான் அமைச்சராக இருந்தபோது இயக்குநர்களையெல்லாம் அழைத்துப் பேசி இதுபோன்ற Employer's Contribution–ஐ, முதலாளிகளுடைய தொகையை எப்படி உயர்த்துவது என்றெல்லாம் பரிசீலிக்கப்பட்டது. விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்காக வசூல் செய்கிறபோது, நிலச்சுவாந்தார்களிடம் வசூலிப்பது என்பது இயலாத காரியம். ஆகவே உரத் தொழிற்சாலை வைத்திருப்பவர்கள், பூச்சிமருந்து தொழிற்சாலை வைத்திருப்பவர்கள், அவர்களிடமிருந்து வசூலிக்கிற வரிப் பணத்திலே 1.3 சதவிகிதம் மற்றவர்களுக்குக் கொடுப்பதைப்போல அதிலே ஒதுக்கி வைத்து, இந்த ஒரு நிரந்தர Corpus Fund-ஐ உருவாக்குவோம் என்று சொன்னால், இதன்

மூலமாக இந்த அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்களை அமல்படுத்த முடியும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் நூறு நாட்களில் பல்வேறு சாதனைகள் செய்திருந்தாலும்,** *(குறுக்கீடு) (கூச்சல்–குழப்பம்)*

*முற்பகல் 11-10*

இது முறையா? இது முறையா? நடுவர் அவர்களே, இது முறையா? இது முறை என்றால், நான் பேசுவதற்குத் தயாராக இல்லை. நீங்களே பேசிக்கொள்ளுங்கள், நாங்கள் போகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த உறுப்பினர் திரு. த. ஆறுமுகம். பொன்முடி அவர்கள் தான் பேசினால் இப்படித்தான் பேசுவேன் என்கிறார். இல்லாவிட்டால் பேசமுடியாது என்கிறார். அடுத்த உறுப்பினர்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் நான் பேசுகிறபோதெல்லாம் இந்த மாதிரிப் பேசினால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம் பேசுங்கள். திரு. ஆறுமுகம் பேசுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, இல்லை, இது முறையில்லை. தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே பேசுங்கள் என்று நான் சொன்னதற்குப் பிறகும் மறுபடியும் ** ஆகவே இது முறையற்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. த. ஆறுமுகம்.

***திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கிணங்க, தோன்றிய மனித குலத்தின் மாணிக்கமாம் மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமைந்த இந்தப் பொற்கால ஆட்சியில், என்னை திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், எண்ணூர் பகுதியைச் சார்ந்த இந்தச் சாதாரணத் தொண்டனை இம்மாமன்றத்திற்கு அறிமுகப்படுத்திய அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை, வணங்குகிறேன் தாயே.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க, அகற்றப்பெற்றது.



"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி"

என்ற குறள்மொழிக்கு ஒப்ப உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல, ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ நல்லாட்சி தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து, அம்மாவின் ஆட்சியினைத் தேர்ந்தெடுத்த தமிழக மக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால்...*(குறுக்கீடு)*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் 10 நிமிடம் பேசி முடிக்கலாம் என்று தாங்கள் தெரிவித்து, அந்தப் பத்து நிமிடமும் பேச விடாமல் நிறுத்திவிட்ட காரணத்தால் எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தாங்கள், திரும்பத் திரும்பக் கேட்டும் அனுமதிக்கவில்லை. ஆகவே திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக, திரு. பொன்னையன் அவர்கள், அமைச்சர் பொன்னையன் அவர்கள் அடிக்கடி சொல்வதுபோல, அந்த வெளிநடப்பை நாங்கள் நடத்துகிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி அவர்களை நான் பேச அனுமதிக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது வருந்தத்தக்கது. தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே அவர்கள் ஏற்கெனவே 10 மணித் துளிகள் பேசியிருக்கிறார்கள் இன்னும்கூட 10 மணித் துளிகள் நீங்கள் பேசுங்கள் என்றுதான் பெருந்தன்மையோடு அழைத்தேன். 15 மணித் துளிகள்தான் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் வேண்டுமென்றே இன்றைக்கு அவர் பேசுவதற்குத் தயாராக வரவில்லை என்று தெரிகிறது. திரு. ரங்கநாதன் அவர்களை ஏற்கெனவே பேசுவதற்குச் சொல்லியிருந்தார்கள். திடீரென்று அவர் பேச முற்பட்டுவிட்ட காரணத்தால் இந்தத் தொழிலாளர் நலத்திற்குப் புறம்பான சில செய்திகளை இங்கே பேசத் தொடங்கி, அதன் விளைவாகக் குழப்பத்தை உண்டாக்குவதற்கு முயற்சி செய்கிறார். தொழிலாளர் நல

மானியக் கோரிக்கை என்று மறுபடியும் கூப்பிட்டாலும்கூட மறுபடியும் அந்தப் பழைய செய்திகளுக்கே போய்க்கொண்டிருக்கிறார். ஆகவே இந்தச் சூழ்நிலை வருந்தத்தக்கது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேராசிரியர் பேசுகிறபோது, அடிக்கடி வெளிநடப்புச் செய்வது பற்றி சொன்னார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின் அவர்கள் இருக்கிறீர்கள் அல்லவா? இருங்கள். இதுதான் உங்களுடைய கட்சியின் தனித் தன்மையைக் காட்டக்கூடிய ஒன்று. ஆகவே, எல்லாவற்றிற்கும் பின்னால் ஓடாமல் எம்.ஜி.ஆர். பெயர் இருக்கிறது என்கிற காரணத்திற்காகவாவது நல்ல மரபுகளைக் கடைப்பிடித்ததற்காக வாழ்த்துகிறேன். அமருங்கள். மாண்புமிகு திரு. பொன்னையன்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது, வெளிநடப்பு, வெளிநடப்பு என்று பொன்னையன் அடிக்கடி சொல்கிறார் என்று சொன்னார். நான் நேற்று அவையிலே கூறியதெல்லாம் தி.மு.க.–வைப் பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே ஒரு முடிவை எடுத்துவிட்டார்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசுகிறபோதுகூட, பேராசிரியர் அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டப் பேரவையின் தொடர் கூட்டம் முடிகிறவரை தினந்தோறும் ஏதேனும் சாக்குப் போக்கில் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து வெளிநடப்புச் செய்ய வேண்டும் என்பது ஏற்கெனவே அவர்கள் மேற்கொண்டிருக்கிற முடிவு. அந்த முடிவின் அடிப்படையில்தான் தினந்தோறும் வெளிநடப்புச் செய்கிறார்கள், செய்வார்கள் என்பதைத்தான் நான் அவைக்குச் சொன்னேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்கள் பேசியதில் தொழிலாளர் நலன் சம்பந்தமான அனைத்தும் அவைக் குறிப்பிலே இடம் பெறுகின்றன. அந்தக் குழப்பத்திற்குப் பிறகு அவர் ஆரம்பித்த, ** என்று வந்த பிரச்சினைகள் அவைக் குறிப்பிலே ஏறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிற தொழிலாளர் நலத் துறை மானியத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'Defeat the defeat until the defeat gets defeated; automatically a person will succeed in life'.அவ்வாறு எளியோர் சிலர் இழைத்த அனைத்துக் கொடுமைகளையும் தாண்டி, எதிர்கொண்ட இலட்சியத்தில் உறுதியாகவும், அதைச் செயல்படுத்துகின்ற வேகத்தில் துணிச்சல், இவையெல்லாம் நிரம்பப் பெற்ற, போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை ஏழ்மை, வறுமை, இல்லாமை, இல்லாத நிலையையும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற உன்னத நிலையையும் அடையச் செய்வார் என்பதை நான் பெருமிதத்துடன் இம்மாமன்றத்தில் உறுதிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

என்ற குறளுக்கேற்ப, அதாவது, வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவரே செயலாற்றும் திறனுடையவர் என்றார் வள்ளுவர்.

அத்தகைய திறனை நிரம்பப்பெற்ற நம் முதல்வருக்கு ஈடாக வேறு ஒரு முதல்வரை நாம் காண முடியாது என்பதையும், இத்தகைய செயல் திறமை வாய்ந்த அம்மாவின் தலைமையில் 1991 முதல் 1996 வரை அமைந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, டாக்டர் அம்மா தலைமையில் பல சாதனைகளைப் படைத்தது.

மேலும், நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொழிலாளர் நலனுக்காகவும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டவர் என்பதற்குத் தக்க உதாரணம் பின்னி ஆலை. நீண்ட நாட்களாக மூடிக்கிடந்த பின்னி ஆலை 1993 ஆம் ஆண்டு அம்மாவின் ஆட்சியில் திறக்கப்பட்டது. அதன்பிறகு ஆலை தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் மாற்று அரசாங்கம் ஏற்பட்டு, கருணாநிதி அவர்களின் அரசால் 1996–ல் பின்னி ஆலை மீண்டும் மூடப்பட்டது.

முன்பு வெறும் சிக்கலாக இருந்த பின்னி ஆலை பிரச்சினையை, கடந்த அரசு இடியாப்பச் சிக்கலாக்கி பின்னி ஆலையை மூடிவிட்டது. ஆனால் இத்தகைய கஷ்டமான சிக்கலையும் தீர்க்கும் நிலையில் நமது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது முன்நின்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் சிறுதொழில் நிறுவனங்கள் பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளன. அரசுக்குத் தேவையான பொருள்களைக் கொள்முதல் செய்வதில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த முன்னுரிமையைத் தடை செய்து 19–2–1997 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அதனை இரத்து செய்து அந்த நிறுவனங்களுக்கு ஆதரவு அளித்த பெருமை நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியையே சாரும்.

தமிழகத்தின் தர்மத் தாயாக, விடிவெள்ளியாக விளங்கும் அம்மா அவர்களின் திட்டமான திருமுல்லைவாயிலில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதொழில் தொழிற்பேட்டை அமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது வரவேற்கத்தக்கது.

கருவறை முதல் கல்லறை வரை பெண்களின் காவல் தெய்வமாக விளங்கும் அம்மா அவர்கள் பெண்களுக்காகத் தீட்டிய அரிய திட்டங்கள் மட்டுமின்றி அவர்கள் முன்னேற்றத்திற்காக, மகளிருக்கான தொழிற்பேட்டை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதும் வரவேற்கத்தக்க அம்சமாகும். நான் அல்ல, தமிழகத்தில் ஒரு கடைகோடியில் போய், படிப்பறிவில்லாத, எழுத்தறிவில்லாத, சமூக அரசியல் விஷயங்களை அறிந்துகொள்ளாத ஒரு வயதான மூதாட்டியைப் பார்த்துக் கேட்டாலும் இவற்றை உண்மை என்று எடுத்துச் சொல்கின்ற வகையில் மக்கள் தெரிவிப்பார்கள்.

*முற்பகல் 11-20*

மேலும், Real Estate போன்றவற்றையும் ஆரம்பித்து மற்றும் சிறுதொழில்களைப் பல்வேறு இடங்களில் அமைத்துக் கொடுத்ததன் மூலமாகக் கடந்த 1991–லேயே, அதற்கு முன்னர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேகூட கும்மிடிப்பூண்டி போன்ற பகுதிகளில் சிறு தொழில்களை ஆரம்பித்து அதன்மூலமாகப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தார்கள்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் சில கோரிக்கைகளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். ஏனெனில், கோரிக்கைகளைக் கேட்கிறவர்களிடம், அதை உணர்பவர்களிடம் சொல்கிறபோதுதான் அதற்குரிய தீர்ப்பும், நியாயமும் கிடைக்கும். அந்தவகையில், நான் மிகப் பெருமிதத்தோடு அடித்தளத்து மக்களின் பிரதிநிதியாய், ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைச் சொல்கின்றவனாய் நான் இங்கே மார்தட்டிச் சொல்வேன். தமிழக முதல்வரிடம் எங்கள் கோரிக்கைகள் யாவும் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. அதேநேரத்தில், அனைத்துத் தரப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்ற கோரிக்கைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றி கொடுக்கின்ற ஒரு முதல்வராக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், வேறு எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தைப் படைத்துக்கொண்டிருக்கிறார் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அடித்தளத்து ஒடுக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளை ஒவ்வொரு நாளும் தீர்ப்பதிலே வேகம் காட்டிக்கொண்டிருக்கிற ஒரு முதல்வரை நாம் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே நான் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற்பேட்டையாக விளங்கும் திருவொற்றியூர் தொகுதியிலே எண்ணற்ற தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகள் மூலமாகவும், புகை மண்டலம் மூலமாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகின்ற ஓர் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, எண்ணூர் பகுதியில் உள்ள E.I.D. Parry தொழிற்சாலை மற்றும் திருவொற்றியூர் பகுதியில் இருக்கின்ற M.R.F. தொழிற்சாலை, மணலி பகுதியில் இருக்கின்ற M.F.L., M.P.L., D.P.L., போன்ற தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுகள் மூலமாக அந்தப் பகுதியில் இருக்கிற பக்கிங்காம் கால்வாயில் அவை கலந்து, அதன் மூலமாகப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கின்ற வகையில், அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கின்ற வகையில், தொழில் ரீதியாகப் பாதிக்கின்ற வகையில், அந்தப் பகுதி மக்கள் இன்று ஒருவேளை உண்ண உணவின்றி இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இந்தத் தொழிற்சாலைகளினால் வெளியேற்றப்படுகின்ற கழிவுகளில் உள்ள ரசாயனக் கழிவுகள் பூமிக்கடியில் படிந்து, அதன்மூலமாகக் குடிதண்ணீருக்கு அபாயம் ஏற்பட்டு, மக்கள்

குடிதண்ணீருக்காக 2 ரூபாய், 2.50 ரூபாய், 3 ரூபாய் என்று கொடுத்து விலைக்கு வாங்குகின்ற அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தடுக்கின்ற வகையில் அம்மா புரட்சித் தலைவி அவர்கள், திருவொற்றியூர் தொகுதி மக்களுடைய எண்ணத்தைக் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மேற்கண்ட தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகளை முறையாக வெளியேற்ற ஒரு நீண்ட நெடிய திட்டத்தை வகுத்து, அதன்மூலமாக வட சென்னைப் பகுதியில் இருக்கின்ற அத்தனை மக்களையும் காப்பாற்றுகின்ற வகையில் தங்களுடைய எண்ணத்தை மக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில், வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் திருவொற்றியூர் தொகுதியில் உள்ள வட சென்னை அனல் மின் நிலையத்தில் மின்சாரம் தயாரிக்க turbine சுற்றப் பயன்படுத்தப்பட்ட குளிர்ந்த நீரானது சூடாக்கப்பட்டு சுடுநீராக அங்குள்ள பக்கிங்காம் கால்வாயில் விடப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். கடந்த ஆண்டுகளிலே (மணியடிக்கப்பெற்றது) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே–30–feet 30 அடி ஆழமாக இருந்த அந்தப் பகுதி, இன்று தரைமட்டமாக, மண் மேடாக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் பாதிக்கின்ற ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மீனவர்களுடைய குடும்ப நலனில் அக்கறை கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் – வட சென்னை துறைமுகப் பகுதியிலே இருக்கின்ற மீனவ மக்கள் இன்றைக்குப் பிழைக்க வழியின்றித் தவிக்கின்றார்கள். எந்த ஒரு பகுதியிலும் தொழிற்சாலை ஏற்படுகின்றபோது – அந்தப் பகுதியில் இருக்கின்ற அந்தப் பகுதியைச் சார்ந்த அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அந்தத் தொழிற்சாலைகளில் 50 சதவிகிதம் வேலைவாய்ப்பு தருவதற்கான உத்தரவை வழங்குமாறு கேட்டுக்கொண்டு எனக்கு இதுவரை பேச வாய்ப்பளித்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற இந்த நேரத்தில், மறைந்த, சத்தியத்தின் தலைவர், தர்மத்தின் திருவுருவம் மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களை இருகரம் கூப்பி வணங்கி, புதிய சகாப்தத்தின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள எங்களது அன்புத் தலைவர், தம்பி ஜி.கே. வாசன் அவர்களை வணங்கி, மறைந்த மாமனிதர், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கு அரசு மரியாதையுடன், தகனம் செய்ய உதவிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது உரையைத் தொடங்குகின்றேன்.

*முற்பகல் 11–25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் வாழ்வின் முன்னேற்றத்தைக் கருதி அவர்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக ரூபாய் 85,45,21,000–ஐ ஒதுக்கிய வகையில் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன். அதுவும் கஜானா காலியாக இருந்தும்கூட தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக இவ்வளவு பணத்தை ஒதுக்கிய இந்த அரசு நிச்சயம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்கின்ற அரசு என்பதிலே சந்தேகமே கிடையாது. அதேசமயத்தில் தனியார் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டுவரும் தொழிலாளர்கள், கடுமையாக உழைத்தும்கூட, P.F. பணம், அதாவது Provident Fund பணம் பிடித்தும்கூட Provident Fund அலுவலகத்திலே கட்டுவது கிடையாது. தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை கொடுப்பதில்லை; Bonus தருவதில்லை. மேலும், தன் எதிர்காலத்தை தன் குடும்ப எதிர்காலத்தை, மனதில் வைத்து கடுமையாக உழைத்து, கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தை P.F.-ல் கட்டினால், சில தனியார் நிறுவன அதிகாரிகள், முதலாளிகள் அந்தப் பணத்தை P.F. அலுவலகத்தில் கட்டாமல் மிகப் பெரிய மோசடியைச் செய்து வருகிறார்கள். இதனால் நிர்வாகத்தினர், தொழிலாளர்களுடைய பணத்தை பல கோடி ரூபாய் மோசடி செய்திருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் மோசடி செய்யும் இவர்கள்மீது நீதிமன்றங்களின் மூலமாக அரசு வழக்கு தொடர்ந்தால் அவர்களுக்குத் தண்டனையோ, ஒரு சிறிய தண்டனை; அதாவது சிறிய fine–ஐ போடுகிறார்கள்; 500 ரூபாய், 1000 ரூபாய் என்ற அளவிற்கு fine–ஐப்

போடுகிறார்கள். அதனால் இந்த மோசடியை நிர்வாகத்தினர் தொடர்ந்து செய்கின்றார்கள். ஆகவே அரசு இவர்களைக் கடுமையாகத் தண்டிக்க சட்டம் கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் High Forest தோட்டத் தொழிலாளர்கள் கடந்த பத்து மாதங்களாகச் சம்பளம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகளைப் படிக்க வைக்க முடியவில்லை. மருந்து வாங்குவதற்குக்கூட வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வால்பாறை High Forest தோட்டத் தொழிலாளர்கள் ஒரு வேளை சாப்பாட்டுக்குக்கூட இப்போது வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வால்பாறை High Forest தோட்டத் தொழிலாளர்கள் அங்கே வேறு தொழில் செய்வதற்கும் வசதியும் இல்லை, வழியும் இல்லை; இதை சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களிடம் 22–12–2000 தேதியன்று மனு கொடுத்து, முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் விசாரிக்கச் சொல்லி, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மேலும், ந.க. எண் 81/94/2001, நாள் 18–1–2001 ஆம் தேதியிட்ட கடிதம் மூலம் இந்த High Forest நிர்வாகத்தை அரசே எடுத்து நடத்தலாம் என, தொழிலாளர் இணை ஆணையர் அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இதுவரை நிர்வாகத்தின்மீது 5 வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு, ரூபாய் 14,200 அபராதம் கட்டியுள்ளார்கள். மேலும், பல வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. பிடி வாரண்டும் நிர்வாகத்தின்மீது போடப்பட்டுள்ளது. மூன்று வருடங்களாக நிர்வாகத்தினர் யாருமே எஸ்டேட் பக்கம் வருவது கிடையாது. ஆகவே வால்பாறை High Forest நிருவாகத்தை அரசே– தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமே ஏற்று நடத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இடைக்காலமாக வறுமையால் வாடும் தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவித்தொகை வழங்கிட வேண்டுகிறேன்.

*முற்பகல் 11-30*

கோவை மாவட்டத்தில் பல்வேறு மில்கள், இஞ்சினியரிங் தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழந்து வறுமையில் வாடுகிறார்கள். பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் குடும்பங்கள் ஒருவேளை



சாப்பாட்டிற்கு வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதற்குரிய நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு மூடிக் கிடக்கின்ற மில்களையும், இஞ்ஜினியரிங் தொழிற்சாலைகளையும் உடனே திறக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதுவிஷயமாக ஏற்கெனவே நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் மனு கொடுத்திருக்கின்றேன். ஆகவே வால்பாறை High Forest தொழிலாளர்கள் பிரச்சினை, மிகவும் அவசரமான பிரச்சினை. அவர்களுடைய குடும்ப நிலையைக் கருதி மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு இடைக்கால நிவாரண உதவியை வழங்குமாறு பணிவோடு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்களைப் பின்பற்றி நீங்களும் பேசுங்கள். எவ்வளவு சீக்கிரம் முடித்துவிட்டார் அவர்!

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிய பொருளாதாரக் கொள்கை அமல்படுத்தியதற்குப் பிறகு ஏறத்தாழ பல பெரிய தொழிற்சாலைகள் இந்தியாவிற்கு வந்தன. அதில் சில பெரிய தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வந்துள்ளன. அப்படி வந்த தொழிற்சாலைகளினால் சிறு தொழில்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளே இல்லாமல் போய்விட்ட உண்மையை அரசு உணர வேண்டும். உதாரணமாக, Hyundai தொழிற்சாலையை, ரூ.70 கோடி செலவில் திறந்து வைத்தார்கள். ஆனால் அந்தத் தொழிற்சாலையிலே ஏனைய உபகரணங்கள் எல்லாம் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் சிறு தொழில்கள் தொடங்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே புதிய

[திரு. மே.ப. காமராஜ்] [2001 செப்டம்பர் 3

தொழிற்சாலைகள் அமைகிறபோது அப்பகுதி மக்களும் பயன்பெறுகின்ற வகையிலே சிறு தொழில்கள் தொடங்குவதற்காக பல பெரிய தொழிற்சாலைகளைக் கொண்டுவர அரசு முயற்சி செய்ய வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பாதுகாத்துக்கொள்வதிலும், தொழிலாளர் சட்டங்களைச் சரியான முறையில் அமல்படுத்துவதிலும், பஞ்சாலைகள், கைத்தறி, தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வு, பனியன் தொழில் போன்றவையெல்லாம் அழிந்துகொண்டிருக்கிற வேளையில் இவற்றைப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுப்பதிலே தொழிலாளர் நலத் துறை எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

தற்போது தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர்கள் அனுபவிக்க முடியாத, எட்டாக் கனியாக இருப்பதை அரசு உணர வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களுக்காகப் போடப்பட்டிருக்கிற குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் பற்றிய கோலப்பன் குழு அறிக்கையை அரசு அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு அரசு கோலப்பன் குழு அறிக்கையை அமல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை முதலாளிகள் நடைமுறைப் படுத்துவதில்லை. அரசாணைகளிலிருந்து தப்பிக்க நீதிமன்றங்கள் மூலம் தடையைப் பெற்றுவிடுகின்றார்கள். இதைத் தடுப்பதற்காகக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தினை அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும் என மத்திய அரசுக்கு தமிழக அரசு செய்த பரிந்துரையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறதா? இதுகுறித்து தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

இதுவரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தால் பயன்பெறாத விசைத்தறித் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை விரிவுபடுத்த இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவை என்ற முறையில் ஒருசிலவற்றை எடுத்துச்



2001 செப்டம்பர் 3] [திரு. மே.ப. காமராஜ்]

சொல்ல விரும்புகின்றேன். முறைசாரா தொழிலாளியைப் பாதுகாப்பது, பெண் தொழிலாளர்களின் பிரச்சினையைப் போக்குவது, மூடப்பட்ட ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்குச் செல்ல வேண்டிய நிதி உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது முக்கியமானவையாகும்.

எனது தொகுதியின் ஒருசில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன். தாரமங்கலம் தொகுதி பொட்டனேரியில், தேனிரும்பு தொழிற்சாலை, சிஸ்கால் என்ற நிறுவனம் 1000 கோடி ரூபாயில் தொடங்கப் பட்டுள்ளது. தற்போது நிதிப் பற்றாக்குறை காரணமாக 6 மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு டிட்கோ மூலம் 11% அரசு முதலீடு செய்துள்ளது. எனவே அரசாங்கம் மேற்பார்வையில் தொழிற்சாலையைத் திறந்து, அதனால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பயன்பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேபோல, மேட்டூரில் கெம்ப்லாஸ்ட், சன்மார் நிறுவனம் போன்ற 5 கம்பெனிகள் உள்ளன. இதில் புதிதாக plants விரிவுபடுத்துகிறபோது தேவைப்படும் தொழிலாளர்களை எடுக்கும்போது உள்ளூரில் படித்த தகுதியான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில்லை. சர்வீசில் இருக்கும்போது இறந்த தொழிலாளர்கள் குடும்பங்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்பு வழங்கப்படுவதில்லை. மேலும், 'வேலை இல்லை, சம்பளம் இல்லை' – 'No work, no pay' என்ற அடிப்படையில் தொழிலாளர்கள் அன்றாடம் செய்யும் வேலைக்குப் பதிலாகப் புதிய இடங்களுக்குச் சென்று வேலை செய்யச் சொல்லி, பாதுகாப்பில்லை எனச் சொன்னால், நிருவாகம் தொழிலாளர்களை வேலை செய்ய மறுப்பதாகக் கூறி சம்பளம் இல்லை எனக் கூறிவிடுகிறது. இதுபோல் பல்வேறு குறைபாடுகள் தொழிலாளர்களுக்கு உள்ளன. எனவே அரசு குழுவை அமைத்து மாவட்ட அளவில் உள்ள தொழிற்சாலைகளை ஆய்வு நடத்தி குறைகளைப் போக்க வேண்டும்.

*முற்பகல் 11-35*

மேட்டூரில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசு மாசுக் கட்டுப்பாடு துறையினரால் Mico Farm Chemicals என்கிற பூச்சிமருந்து தயாரிக்கும் கம்பெனி மூடப்பட்டது. அந்தக் கம்பெனியில் 30 வருடத்திற்கு மேல் பணிபுரிந்த 100–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படாமல் உள்ளது. அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் தற்போது வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்றுவரை அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய gratuity வழங்கப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட

அந்தத் தொழிலாளர்களுக்கு அரசு நிதி ஏதாவது வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அரசு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சேர வேண்டிய தொகையைப் பெற்றுத்தரத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நீதிமன்றம், தமிழகத்தில் மூன்று, நான்கு மாவட்டங்களுக்கெனச் சேர்த்து 10 இடங்களில் உள்ளது. படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் தொழிலாளர் நீதிமன்றம் தொடங்கப்பட வேண்டும்.

1999 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.250–ஐ அதிகப்படுத்தித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீண்ட காலமாக மூடிக் கிடக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகை சமயத்தில் ரூ.500 வழங்கி வருவதை ரூ.1000 ஆக உயர்த்தித் தர வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் வேலை செய்யக்கூடிய தொழிற்கூடங்களைக் கண்டறிந்து தடுக்க வேண்டும். மேலும், இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்றால் கட்டாயக் கல்வி அமலாக்கப்படுகிறபோதுதான் அது சாத்தியமாகும் என இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூடிய ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையைத் திறக்கவும், பின்னி ஆலை, மாதவரம் பால் பண்ணை ஆகியவற்றின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அரசு முயல வேண்டும்.

பள்ளிக்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் பசிக்காகப் பட்டினியோடு தொழிற்சாலைக்கு பணிக்குச் செல்லும் அவல நிலை நாட்டில் அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். தொழிலாளர்களுக்குத் தகுந்த நேரத்தில் ஊதியம் வழங்கத் தவறும் நிருவாகத்தினர்மீது நடவடிக்கை எடுத்து அந்த ஊதியத்திற்குக் கூடுதல் ஊதியம் பெற்றுத் தர வேண்டும்.

ஒவ்வொரு தொழிலுக்கும் இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்ய வேண்டும் என்ற மத்திய தொழிலாளர் நலத்



துறையின் பரிந்துரையை மாநில அரசு அமல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

ஆபத்தான தொழில் செய்யும் தொழிலாளர்கள், பணியின்போது மரணமடைந்தால் அவர்களுக்குத் தற்போது வழங்கும் நிதியை அதிகப்படுத்தி வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

'மாடி கட்டும் தொழிலாளி மண் குடிசையிலே வாழ்கிறான். வீடு கட்டும் தொழிலாளி வீதியிலே உறங்குகிறான்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். இந்த கட்டடத் தொழிலாளர்களுக்கு அமைக்கப்பட்ட வாரியத்தின் மூலமாக இயற்கையான முறையிலே மரணம் ஏற்பட்டால் ரூ.7000/– கொடுப்பதை ரூ.25000/–ஆக அரசு உயர்த்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கட்டடத் தொழிலில் ஈடுபடும் கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவ காலத்தில் மூன்று மாதத்திற்கு பிரசவ நிதியாக ஒரு குறிப்பிட்ட தொகை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தத் தொகையை வாங்க வேண்டுமென்று சொன்னால், தொழிலாளர்களுக்கு 6 மாதங்களுக்கு மேல் ஆகின்ற நிலை உள்ளதால் உடனடியாகக் கிடைக்க துரித நடவடிக்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். ஒரு கோடிக்கு மேல் உள்ள உத்தரவாதமில்லாத தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். அவர்களுக்கு எந்தெந்த வகையில் உதவியும், பாதுகாப்பும் வழங்கப்படும் என்று அறிவிப்புச் செய்ய வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் பஞ்சாலைகள் நிறைய மூடப்பட்டுள்ளன. அவை திறக்கப்படுவது, தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு கிடைப்பது சம்பந்தமாக அரசு தரப்பில் எதுவும் சொல்லப்படவில்லை.

சாரம் கூட்டுறவு ஆலை, காஞ்சிபுரம் கூட்டுறவு ஆலை போன்ற நிறைய ஆலைகள் மூடப்பட்டுள்ளதால் எல்லா ஆலைகளையும் திறக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நிலையை ஒழுங்குபடுத்தி நேரடி தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் வசதியையும் சலுகைகளையும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் பெற்றுத் தர வேண்டும்.

வேலைவாய்ப்பு அலுவலகம் வேலைவாய்ப்பு பயிற்சி அலுவலகமாகச் செயல்பட வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக

நகர்ப்புறத்திலே அதிகம் பேர் பயன்பெறுகிறார்கள். கிராமப்புற மக்களும் அதன் அவசியத்தைப்பற்றித் தெரிந்துகொள்கிற வகையில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கக்கூடிய, பள்ளிகளிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நடத்த அரசு முன்வர வேண்டும்.

கட்டடங்கள் கட்ட அனுமதி பெறுவதற்கான வரைமுறைகளை, விதிமுறைகளை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், சென்னை கார்ப்பரேஷனும் தளர்த்தியிருப்பதன் மூலம் கட்டடத் தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக தமிழக அரசு கொண்டுவந்திருக்கக்கூடிய, நடப்பு நிதியாண்டில் நடைமுறைப்படுத்த உள்ள திட்டங்களை வரவேற்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியிலே, தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் தேர், சில விஷமிகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு எரிந்ததற்கு உடனடியாக ரூ.25 இலட்சம் ஒதுக்கி புதிய தேர் செய்துகொள்ள நிதி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அளவிற்குப் பேச வாய்ப்புத் தந்த பேரவைத் துணைத் தலைவருக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடுமையான பொருளாதார நெருக்கடி, பணப்புழக்கம் இல்லாமை, ஆலை மூடல், சிறு குறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான பாதிப்புகள் மற்றும் மத்திய அரசாங்கத்தினுடைய ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையின் விளைவாக ஏற்பட்டுள்ள தொழில் மற்றும் விவசாய பாதிப்புகள், பொதுத் துறைகளைத் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள், தமிழக மக்களுக்குச் சொல்லொணாத் துயரங்களை உருவாக்கியுள்ளது. பணியில் உள்ளோருக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்காத சூழ்நிலை, ஒட்டுமொத்தமான



பாதிப்புகள், சமுதாயம் முழுவதையும் குழப்பத்தையும், நிலையற்ற தன்மைகளையும் உருவாக்கி வருகின்றன. இந்தச் சிக்கலான சூழ்நிலையில், நம்முடைய தமிழக அரசு அனைத்து சவால்களையும் சந்தித்து வெற்றி பெற்று, நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்கும் பாதுகாவலனாக இருக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலத் துறையினுடைய செயல்பாடுகளைப் பெருமளவுக்கு மேம்படுத்த வேண்டியுள்ளது. தொழிலாளர் நலத் துறை என்ற உணர்வோடு இந்தத் துறை செயல்படுவதை அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும். அப்படியானால் இப்போது அந்தத் துறை அவ்வாறு இல்லை என்பதை நாங்கள் வருத்தத்துடன் தெளிவுபடுத்த விரும்புகிறோம். தொழிலாளர் நலத் துறை சார்ந்த முத்தரப்புக் குழுக்கள் பெயரளவிலே செயல்படுகின்றன. இந்தக் குழுக்களை முறையாகச் செயல்படுத்தவும், தொழிற் சங்கங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கவும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில பொதுத் துறை நிறுவனங்கள், சிறந்த முறையிலே இயங்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், அது சார்ந்துள்ள சிஐடியூ மற்றும் தொழிற் சங்க அமைப்புகளும் தயாராக இருக்கின்றன. இதையொட்டி அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் ஆக்கபூர்வமான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம். இதற்கென தமிழகத்தில் இருக்கிற பெருமைக்குரிய போக்குவரத்துக் கழகம், மின்சார வாரியம், சர்க்கரை ஆலைகள், பஞ்சாலைகள் உட்பட பல்வேறு துறைகளைச் சார்ந்த பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், துறைத் தலைவர்கள் பேச்சு வார்த்தை நடத்திட வேண்டுகிறோம். மத்திய அரசு வலியுறுத்துவது போன்ற கண்மூடித்தனமான தனியார்மய நடவடிக்கைகள், நாட்டு நலனுக்கு நிச்சயமாக உகந்ததாக இருக்காது என்பதைத் தெளிவுபடத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

மூடிய ஆலைகள் குறித்து இங்கே நிறைய பேர் பேசியிருக்கிறார்கள். இனி வருபவர்களும் பேசுவார்கள். தமிழ்நாட்டில், தொற்று நோய் போல் தொற்றி தீவிரப்பட்டு வருகிற இந்தப் பிரச்சினையின்மீது சமாதானமான பதிலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆக்கபூர்வமான நடவடிக்கையையே உறுதிபூர்வமாக நாங்கள் எதிர்பார்க்கிறோம். இங்கே வெளிநடப்பு செய்திருந்தபோதும், நான் பதிவு செய்ய விரும்புவது, தி.மு.க.–வின்

[திரு. கே.சி. கருணாகரன்] [2001 செப்டம்பர் 3

கவனத்திற்கும், ஆளும் இன்றைய அதிமுக அரசின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புவது, கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆலை மூடல் என்பது கணிசமான அளவு அதிகரித்தது. நான் கவர்னர் உரையின்மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகிறபோதே குறிப்பிட்டேன். சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 10 பஞ்சாலைகள் பூட்டப்பட்டுள்ளன. அந்த மாவட்டம் முழுவதும் 45-க்கும் மேற்பட்ட ஆலைகள் பூட்டப்பட்டிருக்கும் கொடுமையான நிலைகளைச் சுட்டிக்காட்டினேன்.

வணக்கத்திற்குரிய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றையதினம் நான் கோவைக்குச் சென்று வந்தேன். தொழிலாளர் நலத் துறை சம்பந்தமான விவாதங்கள் நடக்கப்போகிறது, மாநில முதலமைச்சர், மரியாதைக்குரிய அம்மாவிடம் சொல்லுங்கள் என்று என்னிடம் தொழிலர்ளர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள், அழுத்தமாக வலியுறுத்தினார்கள். இந்த மூடிய ஆலைகளைத் திறப்பது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். அதுவரை தயவுசெய்து நிறுத்தியுள்ள நிவாரணத் தொகையை உடனடியாக வழங்குவதற்கு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இப்போது அளிக்கிற பதிலிலேயே உறுதிபூர்வமான பதிலை அளிப்பது பட்டினியோடும் பசியோடும் வாடிக்கொண்டிருக்கிற மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச தாகசாந்திக்காகவாவது அது பயன்படும் என்று நாங்கள் நம்புகிறோம். 250 ரூபாய் என்பதை 750 ரூபாய் என்றாவது உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். கரூர் மில் என்ற ஒரு மில் இருப்பது உங்களுக்குத் தெரியும். ஒன்றரை ஆண்டுகளாகப் பூட்டப்பட்டு, எட்டு பேர் தற்கொலை செய்துகொண்டு செத்துப்போயிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது திமுக. ஆட்சியிலேதான் நடந்திருக்கிறது. இப்போது வந்துள்ள அரசு, அமைச்சர் அவர்களுடைய தலையீட்டின்பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு அதைத் திறக்கும் நடவடிக்கையிலே ஈடுபட்டு, இன்று மாலை அங்கே பேச்சுவார்த்தை நடைபெற இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறோம். அதேபோல் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

மதுரையிலே, பசுமலை, மகாலட்சுமி மில்ஸ் பூட்டப்பட்டிருக்கிறது. அதேமாதிரி இன்ஜினியரிங் ஆலைகள் சம்பந்தப்பட்டவரை சொல்ல



2001 செப்டம்பர் 3] [திரு. கே.சி. கருணாகரன்]

வேண்டும் என்று சொன்னால், என்னிடம் ஏராளமான விவரங்கள் இருக்கின்றன. நான் ஒன்றிரண்டு விவரங்களைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். டெக்ஸ்டூல் என்று ஒரு கம்பெனி, 1,800 தொழிலாளிகளுடன் பஞ்சாலைகளின் spare parts தயார் பண்ணுகிற வரலாற்றுச் சிறப்புமிக்க மிகப் பெரிய ஆலை அது. அந்த ஆலையிலே 1999 ஆம் ஆண்டிலேயிருந்து பிரச்சினைகள் இருக்கின்றன. சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, தொழிலாளர் நலத் துறையின் மூலமாகக் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. Lay off விடவும், ஆட்குறைப்பு செய்யவும் அரசிடம் அனுமதி வேண்டி, கோவை தொழிலாளர் நலத் துறையின் இணை ஆணையர் அவர்கள் முன்பு நிருவாகம் விண்ணப்பம் செய்தது. நிருவாகம் முன்வைத்த நியாயமற்ற காரணங்களைப் பரிசீலனை செய்த அதிகாரிகள் அதை மறுத்துவிட்டார்கள். ஊழல் என்பதை எப்படி விஞ்ஞானபூர்வம் என்று சொல்கிறோமோ அந்த மாதிரி ஆலை அதிபர்கள், தொழில் முதலாளிகள் விஞ்ஞானபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். தொழிலாளர் நலத் துறை கொடுத்த ஆலோசனையை மீறி குறுக்கு வழியிலே உள்ளே புகுந்து, அவர்கள் என்ன பண்ணுகிறார்கள் என்று சொன்னால், lay off செய்வதற்கு அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னவுடனேயே, மின்சாரக் கட்டணத்தை கட்டுவதை நிறுத்திவிட்டார்கள். ஆறு மாதமாகக் கட்டாததினுடைய விளைவாக மின்சார வாரியம் மின் இணைப்பைத் துண்டித்தது. மின்சார இணைப்பு துண்டித்ததன் விளைவாக, இயல்பாகவே உற்பத்தி பாதிக்கப்பட்டது. நிருவாகம் எதிர்பார்த்த lay off-ஐ automatic-க்காக அமல் நடத்திக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தந்திரங்களை, சாகசங்களை முதலாளிகள் திட்டமிட்டுச் செய்வதை நம்முடைய தமிழக அரசு அனுமதிக்கக் கூடாது. தொழிலாளர் நலத் துறை இதில் உறுதிபூர்வமாகச் செயல்பட்டு, அந்த ஆலையின் நெருக்கடியைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று மாதங்களாகச் சம்பளம் கொடுக்கவில்லை. அவர்கள் சாலை மறியல் உட்பட பல போராட்டங்களை நடத்துகிறார்கள். அந்த மாதிரி எண்ணற்ற இன்ஜினியரிங் கம்பெனிகளில் பிரச்சினைகள் இருக்கின்றன.

தொழிற் சங்கத்திலே சேர்ந்த குற்றத்திற்காக–நம்முடைய அரசு மகளிருக்கு 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதப் படுத்துகிறது, மகளிருக்கு வேலைவாய்ப்புகளிலே உத்தரவாதப்படுத்துகிறது. ஆனால் தொழிற் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார் என்பதற்காக ஒரு பெண் management-ன்கீழ் இருக்கக்கூடிய ஒரு நிருவாகம், 37 பெண் தொழிலாளிகளை சட்டவிரோதமாக, வேலைநீக்கம் செய்து வெளியே

நிறுத்தியிருக்கிறது. ஆகவே இதுபோன்ற பிரச்சினைகளின்மீது நியாயபூர்வமாகவும், சட்டபூர்வமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். இங்கே பொன்முடி பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது மிகப் பெரிய சாதனை என்று சொன்னார். கடந்த 2001 ஏப்ரல் மாதத்திலேயிருந்தே அது செயல்படவேயில்லை. ஏற்கெனவே அமைக்கப்பட்டதும் சரியாகச் செயல்படவில்லை. 67 தொழில்களுக்கு என்று சொல்லப்பட்டபோதும், அனைத்துத் தொழில்களுக்குமான வாரியங்கள் தனியாக அமைக்கப்படவில்லை. அவை அமைக்கப்பட வேண்டும்; அதைச் செயல்படுத்துவதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான உடல் உழைப்புத் தொழிலாளிகள், ஒரு ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதற்காக இந்த அணிக்கு மகத்தான ஆதரவைத் தந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது மகத்தான, இமாலயத்தைப் போன்ற நம்பிக்கையை வைத்து, வாக்களித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்றால், இந்த அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு உண்டான முறையில், அந்த வாரியத்தை முறையாகச் செய,ல்பட வைக்க வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டு சட்டத்தின் முக்கிய அம்சங்களான வேலைவாய்ப்பை முறைப்படுத்துதல், பணி நிலைகளை மேம்படுத்துதல், தொழில் தகராறுகளைத் தீர்த்தல், சம்பளத்துடன்கூடிய ஓய்வு, விடுமுறை, குறைந்தபட்ச ஊதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புத் தொகை, தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி, ஓய்வூதியம் ஆகியவை சட்ட உத்தரவாதத்துடன் எதிர்காலத்தில் கிடைத்திடும் வகையில் வாரியம் செயல்பட வேண்டும் என்ற கேட்டுக்கொள்கிறேன்.

66 வகையான தொழில் பிரிவுகளோடு விடுப்பட்டுள்ள ஏனைய சட்ட வரையறைக்குட்பட்ட, சட்ட வரையறைக்குட்படாத அனைத்துத் தொழில் பிரிவுகளையும் பட்டியலில் சேர்த்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சக் கூலி, ஆண், பெண் தொழிலாளர்களுக்குச் சம கூலி ஆகியவை அனைத்து இடங்களிலும்



அமல்படுத்தப்படுகிறதா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். அமல்படுத்தப்படாத இடங்களில் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அமல்படுத்துப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வேளாண் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான தொழிலாளர் நல வாரியங்களில் தொழிலாளர்களின் பங்களிப்பு , வேலை அளிப்போரின் பங்களிப்பு, அரசின் பங்களிப்பு ஆகியவை உறுதி செய்யப்படுவதோடு, அரசின் காப்பு நிதியுடன் ஒரு பொது நிதி உருவாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அமைப்பு சாராத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை செய்யும் இடங்களிலேயே அனைத்து சமூகப் பாதுகாப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11 50*

அடுத்து, பீடித் தொழிலாளர்களின் பிரச்சினை. இது ஒரு sensitive–ஆன பிரச்சினைதான். நம்முடைய அரசு புகைபிடிக்கத் தடை விதிக்கும் ஏற்பாட்டோடு குட்கா, பான்பராக் போன்றவற்றிற்குத் தடை விதித்திருக்கிறது. இதை கொள்கைபூர்வமாக ஏற்றுக்கொண்டாலும், தமிழ்நாடு முழுவதும் இருக்கிற இலட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும், வருகிற 5ஆம் தேதி அவர்கள் நாடு முழுவதும் ஒரு பொது வேலைநிறுத்தம் செய்து, சென்னையை நோக்கிப் பேரணி வரவிருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. புகைப்பது உடல் நலத்திற்குக் கேடு என்பதை நாம் பிரச்சாரம் செய்வதன்மூலம் ஜனங்கள் அவர்களாகவே அதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, இதற்கு ஒரு சட்டத்தை இயற்றுவதன் மூலம் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய எதிர்கால வாழ்க்கையே கேள்விக் குறி ஆக்கப்படுவதை எந்த வகையில் அனுமதிக்கப் போகிறோம்?

கேரளாவில்கூட இந்தச் சட்டத்தை முழுமையாக அமல்நடத்த முடியவில்லை. லைட் இல்லாமல் சைக்கிளில் போனால் குற்றம் என்று ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் சாதாரண காவலர்கள் அதை தவறுதலாகப் பயன்படுத்துவதற்கு உதவி செய்தது. ஆகையினால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அதை இரத்து செய்தார்கள். குடி குடியைக் கெடுக்கும், அது உடல் நலத்திற்கு ஆபத்து என்று அறிவிக்கிறோம். ஆனாலும் தெருவுக்கு நான்கு கடைகள் திறந்து அது

[திரு. கே.சி. கருணாகரன்] [2001 செப்டம்பர் 3

நடந்துகொண்டுதான் இருக்கிறது. இது ஜனங்களே தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை. இதிலே எப்படி அந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தாலும் (மணியடிக்கப்பெற்றது)– இன்னும் இரண்டு நிமிடங்கள்–மற்றவற்றை எப்படி அனுமதித்திருக்கிறோமோ அதுபோல இந்த பீடித் தொழிலாளர்களுடைய நலத்தைப் பாதுகாக்கின்ற வகையில், இதை எளிமைப்படுத்துவதும், முறைப்படுத்துவதும் அவசியம் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர் நலத் துறை சம்பந்தமாக, குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் போன்ற அரசு அறிவிப்புகள் வெளியிடப்படும்போது தொழிலாளர் உரிமையியல் நீதிமன்றங்களில் தடை உத்தரவு பெற்று விடுகிறார்கள். இதுபோன்ற நிலையிலே தடை உத்தரவுகளை அகற்ற அரசு காலதாமதமின்றி நடவடிக்கைகளை எடுத்து தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்க வேண்டும். இதுபோன்ற தடை உத்தரவுகள் பெறப்படாமல் இருக்க உரிய தலையீட்டைச் செய்யும் வகையில் வழக்கறிஞர்கள் அரசாங்கத்தாலேயே நியமனம் செய்யப்பட வேண்டும்.

தீர்ப்புகளை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்யாது என கடந்த கால அரசு அறிவித்தது. ஆனால் நடைமுறையில் அது பின்பற்றப் படவில்லை. தொழிலாளர்களுக்கு ஆதரவான தீர்ப்புகளை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்யாமல் இருக்க வேண்டுகிறோம்.

அதேபோல, உழைக்கும் பெண்கள், குழந்தைத் தொழிலாளர்கள் பிரச்சினைகளில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உழைக்கும் பெண்கள் பணியிடங்களில் பாலியல் கொடுமைகளுக்குள்ளாக்கப்– படுவதையும், ஈவ் டீசிங் நடத்தப்படுவதையும் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலான குழுக்கள் அமைத்து அனைத்துப் பணியிடங்களிலும் அதை உறுதி செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் புகார்கள் நிரூபிக்கப்படாவிட்டால் புகார்கள் கூறியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஷரத்தை நீக்கிட வேண்டும். இவ்வாறாக இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன.

அதேபோல தொழிலாளர் போராட்டங்களையொட்டி கடந்த கால அரசு போட்ட வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இதுபோன்ற வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சொன்னார்கள். தயவுசெய்து அவற்றைத் திரும்பப் பெற வேண்டும். இதுபற்றி பதிலுரையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



2001 செப்டம்பர் 3] [திரு. கே.சி. கருணாகரன்]

அதேபோல, தொழிலாளர் தங்களது உரிமைகளை வலியுறுத்தும் முறையில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், தர்ணா, உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நடத்துவதற்கு காவல் துறையினர் அனுமதி மறுக்கும் நிலை தொடர்ந்து இருந்துவருகிறது. நான் சொல்வது இங்கே கோட்டைக்கு முன்னால் அல்ல. நாடு முழுவதும், தாங்கள் நேரடியாக வேலை செய்கிற இடத்திலே, எந்த இடத்திலே வேலை செய்கிறார்களோ, எந்த ஆலைகளில் வேலை செய்கிறார்களோ, அந்த நிர்வாகத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் வாய்ப்பை காவல் துறை பறிக்கக்கூடாது.

இன்னும் சொல்லப்போனால், தொழிற் சங்கப் போராட்டங்களில் தொழிலாளி வர்க்க இயக்கங்களில் போலீஸ் தலையிடுவதைத் தடை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இதைத்தான் மேற்கு வங்கத்திலே நாங்கள் அமல் நடத்தியிருக்கிறோம். துர்பாக்கியம், இப்போது அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். சனிக்கிழமை நடந்த காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர், தி.மு.க.வைச் சேர்ந்த மரியாதைக்குரிய துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது இடையிலே குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்கள். அங்கே சட்டம்— ஒழுங்கைப் பற்றிப் பேசுகிறபோது 'மம்தா பானர்ஜி அவர்கள் சட்டசபை வளாகத்திற்குள்ளேயே, செயலகத்திற்குள்ளேயே முதல்வர் அவர்கள் அறையிலேயே இயக்கம் நடத்துவதற்கு அனுமதித்து இருக்கிறார்கள்' என்று திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்கிறபோது 'அவர் பென்ட் எடுக்கப்பட்டது தெரியாதா' என்று அவர் கேட்டிருக்கிறார். நான் அவையிலே பதிவு செய்வதற்காக நினைவுபடுத்துகிறேன். மம்தா பானர்ஜி அவர்களை பென்ட் எடுத்தது நாங்கள் அல்ல, மேற்கு வங்க மக்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ராடு போல் நிமிர்ந்து நின்ற மம்தா பானர்ஜியைத் தேர்தல் தீர்ப்பின் மூலம் மேற்கு வங்க மக்கள் பென்ட் ஆக்கியிருக்கிறார்கள். இப்போது பென்ட் எடுக்கும் வேலையை தி.மு.க.வும் பி.ஜே.பி.யும் செய்து வருகிறது. ஆகவே அதிலே, மம்தா பானர்ஜியின் பென்டை பி.ஜே.பி.யும் தி.மு.க.வும் எடுக்குமா? அல்லது இவர்கள் பென்டை அவர் எடுப்பாரா என்பதை எதிர்கால இந்திய அரசியல்தான் தீர்மானிக்கும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தமிழ்நாடு மின்சார வாரியம், ஊட்டி Parson Valley ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து அரசு ஊழியர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்

செய்வது குறித்து, அமைச்சரின் கவனத்திற்கு. குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வது குறித்து ஒரு குழு அமைக்க நமது முந்தைய அ.தி.மு.க. அரசு முடிவு செய்தது. தி.மு.க. அரசு அதைக் கைகழுவி விட்டது. ஆகவே மீண்டும் அதற்கான குழுவை அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு வாய்ப்பிற்கு நன்றிகூறி நிறைவு செய்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 11.55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. ராமராஜ்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயை வழிபடுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் தலைவரைக் கூப்பிடட்டுமா? *(சிரிப்பு)*

***திரு. ச. ராமராஜ்:** தாயே, தமிழ்த் தாயே, புரட்சித் தாயே, தமிழ்நாட்டின் மரபை உயர்த்தப் பாடுபட்டு வரும் எங்கள் தமிழ்த் தாயே, வணங்குகிறேன். போடித் தொகுதியில் என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய தங்களுக்கு என்றும் நானும் எனது போடித் தொகுதி மக்களும் நன்றி உள்ளவர்களாகவும், கடமையுள்ளவர்களாகவும் உள்ளோம். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, நமது தமிழக பட்ஜெட், தமிழ்நாட்டிலுள்ள மக்களால் பாராட்டப்படுகின்றது; போற்றப்படுகின்றது. குறிப்பாக விவசாயிகளுக்கு பயன் அளிக்கத்தக்க வகையில் மிக அருமையான திட்டங்கள் உள்ளன. விவசாயிகள் கடந்த காலத்தில் ஏங்கித் தவித்து, நமக்கு ஒரு நல்ல விமோசனம் வராதா! விவசாயிகளுடைய குறைகளைத் தீர்க்க யார் உள்ளனர்! என்று எண்ணிய சூழ்நிலையில், மதிப்பிற்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு என்று பல திட்டங்களைக் கொண்டுவந்து, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை முன்னிலைப்படுத்தி உதவி புரிந்துள்ளார்கள்.

அன்புள்ளம் கொண்ட, அருள்நெறியுடன் தமிழகத்தை ஆட்சி புரிந்து வரும் ஒப்பற்ற முதல்வரே, அறநிலையத் துறை பற்றிய விவாதத்தின்போது – கேரள மாநிலத்தின் எல்லையையொட்டியுள்ள நமது தமிழ்நாட்டிலே கண்ணகிக் கோயிலை, தாங்கள் தங்களுடைய ஆட்சியின்பொழுது கண்ணகி கோட்ட வளாகத்தில், நமது தமிழக மக்கள் அனைவரும் வழிபட சில நல்ல முயற்சிகளை எடுத்து வந்தீர்கள். நமது எல்லையிலேயே



சாலைப் போக்குவரத்தை ஏற்படுத்தி, கண்ணகிக் கோயிலை வழிபட்டு, அந்தக் கண்ணகிக் கோயிலை திறம்பட கட்டி முடித்து, கும்பாபிஷேகமும் நடத்தி, அனைத்துப் பணிகளையும் செய்தால் நமது தமிழக மக்கள் தங்குதடையின்றி, எந்தக் கஷ்டங்களுமின்றி அங்கு போக முடியும். அதைத் தாங்கள்தான் முன்னிலைப்படுத்தி, அறநிலையத் துறை அமைச்சர் மூலமாக நமது தமிழக முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுசென்று முயற்சிகள் மேற்கொள்ள வழி காண வேண்டும். ஏனெனில் இக்கோயில் விஷயமாக நீண்ட காலமாகவே நமது அண்டைய மாநிலமான கேரளத்து மக்களுக்கும் நமது மக்களுக்கும் ஒரு போராட்டம் இருந்துவருகின்றது. இதுகுறித்து அமைதியான முறையில் ஒரு குழு அமைப்பதற்கு ஆவன செய்து, நமது தமிழகத்திற்கு பெருமை சேர்க்கத்தக்க வழியை நடத்தி இதை சரித்திரத்தின் ஒரு முக்கிய அங்கம் வகிக்க நமது முதல்வர் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் கண்ணகிக் கோட்டம் சுற்றுலா மையமாக அமையும் வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களே, போடி நாயக்கனூர் தொகுதியில் தேர்தலுக்கு முன் அவசர கோலத்தில் சில வாக்குகளை சேகரிக்கும்விதமாக, 18 ஆம் கால்வாய்த் திட்டத்தை அவசர அவசரமாக அறிவித்து, அதை தேர்தல் விளம்பரமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, சென்ற அரசு செய்து முழுமைப்படுத்தாமல் ஆரம்ப விழாக் கோலமாக ஏற்படுத்தி, தேர்தலுக்கு முன்பாகவே அதை நிறுத்திவிட்டது. இத்திட்டத்தை மீண்டும் போடி தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று போடித் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தேர்தல் பிரச்சாரத்தின்போது மழை அதிகம் பெய்தும், அந்த நேரத்தில் மக்கள் திரண்டு தங்களுடைய பிரச்சாரத்தின் வாக்குறுதிகளை ஏற்று, தாங்கள் மீண்டும் முதல்வராக வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளனர். எத்தனை சோதனைகள், எத்தனை இடர்பாடுகள், தமிழகத் தாயே, ஒன்றா, இரண்டா, 5 வருடங்கள் தாங்கள் பட்ட கஷ்டங்கள் எண்ணிலொண்ணா; சொல்ல முடியாது. துரோகிகள் ஒரு பெண் என்றும்கூட பாராது இழிவான வகையில் கொடுமைப்படுத்தி, அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மன உறுதியுடன் நிமிர்ந்து இன்முகத்துடன் ஏற்று, நமது தோழமைக் கட்சிகளின் நல்லெண்ணத்துடன், தோழமைக் கட்சிகள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கஷ்டங்களையும் துயரங்களையும் சொல்லொணா வழக்குகளையும் எண்ணி வியந்தும், மீண்டும் தமிழகத்தில் புரட்சித் தலைவிதான் ஆட்சியில் அமர வேண்டும் என

முடிவெடுத்தார்கள். அவ்வாறு உதவிய நம்முடைய தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் அக்கட்சித் தலைவர்களுக்கும் என் நன்றியையும், போடி தொகுதி மக்கள் சார்பாக நன்றியையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

தமிழக முதல்வரே, மானிய ஒதுக்கீட்டில் தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூரில் மகளிர் காவல் நிலையம் அமைக்க உத்தரவிட்ட அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதிவாழ் மக்களின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன். காவல் துறையினரை 3 மாதத்திற்கு ஒரு முறை நேரில் சந்தித்து அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன் எத்தனையோ முதல்வர்கள் இருந்திருக்கிறார்கள். யாரும் இந்தத் திட்டத்தினைச் செயல் படுத்தியதில்லை. காவல் துறையினர் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைக்க அவர்களுக்கு ஒரு சங்கம் வேண்டுமென்று நம்முடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் கோரிக்கைகள் வைத்தனர். இந்தச் சூழ்நிலையில் தொழிற் சங்கமே வேண்டாம்; காவல் துறையினருடைய கோரிக்கைகளை ஏற்று, அத்தனை குறைகளையும் நான் முன்னின்று தீர்த்து வைக்கின்றேன் என்று சொன்னார்கள். காவல் துறைக்கு ஒரு தொழிற் சங்கம் தேவைதானா? 5 ஆண்டுகளில் அவர்களுடைய குறைகள் அனைத்தையும் நான் முன்னிலைப்படுத்தி தீர்த்து வைக்கிறேன் என்று இதுவரை இல்லாத ஒரு நல்ல முறையை ஏற்படுத்தி, காவல் துறையினருடைய குறைகளை நிவர்த்தி செய்வேன் என்று கடந்த சனிக்கிழமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மேலும் காவல் துறையினருக்கு என்று பல வியக்கத்தக்க திட்டங்களை அறிவித்தமைக்காக எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டங்கள் அனைத்தும் இதுவரை இல்லாத அளவிற்கு பாராட்டுகளையும், அனைத்து மக்களும் வியந்து போற்றும் வகையிலும் அமைந்துள்ளன. மக்கள், குறிப்பாக, விவசாயிகள் எதிர்காலத்தில் பயன்படும் வகையில் விவசாய மேம்பாட்டுத் திட்டம் அமைந்துள்ளது.

எனது போடி தொகுதியில் குளங்கள், ஏரிகள் மிக அதிகமாக உள்ளன. மழை இல்லாத இந்தச் சூழ்நிலையின் காரணமாக வறட்சி மிக மோசமாக உள்ளது. தென்னை மரங்கள் காய்ந்து, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் குளங்களைச் சீர்படுத்தி, அகலப்படுத்தி, உயரப்படுத்தி மழைக் காலங்களில் வருகின்ற தண்ணீரைத் தேக்கி வைக்கும் வகையில்





நடவடிக்கை எடுத்து, இப்பணிகள் நடக்க தாங்கள் உத்தரவிட வேண்டும். பாசனத் தண்ணீர் சேமிப்பது மிக அவசியம் எனச் சொல்லி, ஒரு திட்டத்தினை அறிவித்துள்ளீர்கள். எனது தொகுதியான போடித் தொகுதிக்கும் அதில் முக்கியத்துவம் கொடுத்து உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதி,. போடியில் உள்ள நீண்ட காலம் எதிர்பார்த்த சாக்குலூத்துமெட்டு, இராமக்கல்மெட்டு சாலைகளை விரிவுபடுத்த வேண்டுமாயும் தங்களது பாதம் தொட்டு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வன இலாகா அமைச்சர் அவர்களுக்கும் ஒரு சிறிய வேண்டுகோள் வைக்கின்றேன். அகமலை கிராமம், ஊரடிக்காடு, டாப்ஸ்டேஷன் என்று இப்படி உள்ள பகுதிகள் மலைப் பகுதிகளாகும். இங்கே ஆதிவாசிகள் அதிகமாக வாழ்கின்றார்கள். அங்கே செல்ல வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 45 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அங்கே சாலை வசதி கிடையாது. குதிரைகள் போக்குவரத்துகூட கிடையாது. நடந்து சென்று அங்கே வாழ்கின்ற ஏழையெளிய மக்களுடைய சூழ்நிலைகளை நேரடியாகப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது; சொல்லொணாத் துயர நிலை இருக்கிறது. அப்பகுதிவாழ் மக்கள் சுதந்திரம் வாங்கிய காலத்திலிருந்து இதுவரை எந்தவிதமான சாலை வசதியும் இல்லாமல் வசிக்கிறார்கள். அங்கே கஷ்டங்களுடன் வசிக்கின்ற ஏழையெளிய மக்கள் கடந்த காலத்தில் வனத் துறையினரிடம் சாலை வசதி கோரி விண்ணப்பித்துள்ளனர். (மணியடிக்கப்பெற்றது) இதுவரை சாலை வசதி இல்லாமல் உள்ள அந்தப் பகுதிகளுக்கு வனத் துறையினர் அனுமதி தர மறுக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதிகாரிகளை அழைத்து, ஆதிவாசிகள் அதிகமாக வசிக்கும் அந்த இடங்களுக்குச் சாலை மார்க்கமாக செல்வதற்குரிய வசதி, ரேஷன் வசதி, தண்ணீர் வசதி செய்துதர வேண்டும். மேலும் அத்தியாவசியப் பண்டங்கள் வாங்குவதற்கு அவர்கள் படுகிற கஷ்ட நிலையைக் கருத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களை இதுவரை இல்லாத வகையில் உலகமே போற்றும் வகையில் தாங்கள் கவுன்சிலிங் முறையில் மாறுதல் செய்தமைக்கு தமிழக இருபால் ஆசிரியர் பெருமக்கள் நன்றி சொல்வதோடு,

காலங்காலமாய் ஆசிரியர்களின் கஷ்டங்களை இடைத்தரகர்கள், காசு செலவின்றி தீர்த்தமைக்கு தங்களின் பாதங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த சில நாட்களாக இங்கே எதிர்க்கட்சித் தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற தலைவர் அல்லாது இங்கே வீற்றிருக்கும் பி.ஜே.பி. மற்றும் தோழமைக் கட்சிகளும், சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, சட்டமன்றத்தின் அந்தந்தக் கட்சித் தலைவர்களானாலும் சரி, எங்களுடைய முதல்வர் அவர்களை பரந்த உள்ளம் படைத்தவர், நாட்டுக்கு நல்ல தொண்டுகள் செய்கின்றார் என்றும் பட்ஜெட்டைப் பற்றியும் மிகவும் புகழ்ந்து பாராட்டினார்கள். அதற்காகத் தோழமைக் கட்சி நண்பர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பி.ஜே.பி. சட்டமன்றத் தலைவராக வீற்றிருக்கும் ஐயா இலட்சுமணன் அவர்கள் எங்களுடைய முதல்வர் அவர்களை மனம் திறந்து பாராட்டினார்கள். இதுபற்றி நான் எங்களுடைய பிரதமரிடமே சொல்லப்போகின்றேன் என்று கூறினார். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அவர் கூறியதுபோல, கடந்த காலத்தில் நடந்த ஒவ்வொரு சட்டமன்றத்திலும் யாரையும், எந்த முதல்வரையும் இப்படி ஒவ்வொரு கட்சியைச் சார்ந்த தலைவர்களும் பாராட்டியதாக சரித்திரம் இல்லை என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்கிறேன். காரணம், எதிர்க்கட்சிக் கூட்டணியில் இருக்கும் பி.ஜே.பி. சட்டமன்றத் தலைவரே இந்தச் சூழ்நிலையில் எங்களுடைய புரட்சித் தலைவியைப் பாராட்டுகிறார் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அது அவருடைய உள்ளத்தைத்தான் சுட்டிக்காட்டுகிறது. எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அமர்ந்த நாளில் இருந்து, யார் மனமும் புண்படாத அளவுக்கு எல்லோரையும் நேசிக்கின்றார். எந்தக் கோரிக்கை என்றாலும் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உள்ளது உள்ளபடியே ஏற்றுக்கொண்டு எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அதைச் செவ்வனே செய்து வருகின்றார். ஆகவே அப்படிப்பட்ட எண்ணம் படைத்த, உள்ளம் படைத்த எங்கள் முதல்வர் அவர்களைப் பாராட்டுவதை நாங்கள் மனதார ஏற்றுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ச. ராமராஜ்:** அடுத்து, என்னுடைய தொகுதியினுடைய சில கோரிக்கைகளை முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் தொகுதியிலே வாழும் மக்கள் விவசாயத்தைப் பின்பற்றி வாழ்கிறார்கள். கிராமப்புற விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு எங்கள்



போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு முன்னுரிமை வழங்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

சரித்திரம் படைக்கப் போகின்றீர்கள், சாதனை படைக்கப் போகின்றீர்கள், அம்மா! இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தைக் கொண்டுவர சூளுரைத்திருக்கிறீர்கள் அம்மா! நாங்கள் அனைவரும் உங்கள் பின்னால் நின்று நீங்கள் இடும் கட்டளைகளையும், நீங்கள் இடும் ஆணைகளையும் தலை வணங்கி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ஒன்று சேர்ந்து தொகுதிகளை முன்னேற்றி, நீங்கள் நினைக்கும் ஒரு தமிழகத்தை நாங்கள் உளமார உறுதிபூண்டு (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எதிர்பார்க்கும் ஒரு உன்னதமான முன்னிலைப்படுத்திய தமிழகத்தை நாங்கள் உருவாக்கித் தருவோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், தோழமைக் கட்சி நண்பர்களும், நீங்கள் இடும் ஆணையை ஏற்று, நீங்கள் எதிர்பார்க்கும் ஒரு முன்மாதிரி தமிழகத்தை–எந்த அளவுக்கு வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களோ அந்த அளவுக்கு– நாங்கள் அனைவரும் ஒவ்வொரு தொகுதியிலும் அதைச் செவ்வனே நின்று செயல்படுத்துவோம் என்று உறுதிபூண்டு புரட்சித் தலைவிக்குப் புகழ் சேர்ப்போம் என்று கூறிக்கொண்டு இந்த மன்றத்தில் பேச அழைத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எஸ். கண்ணன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு, நான் சார்ந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாமான்ய மக்கள், உழைக்கின்ற மக்கள், தொழிலாளி வர்க்கம் உறுதியோடு உருவாக்கிய அரசு இது. தமிழகத்தில் பல்வேறு தொழில்கள் நெருக்கடிக்கு ஆட்பட்டுள்ளபோதிலும், சிறு தொழில்கள், சிறு, குறு தொழில்கள், பஞ்சாலைகள், கைத்தறி, விசைத்தறி, பனியன், பால் வளம், மீன், சர்க்கரை இப்படிப்பட்ட தொழில்களில் எல்லாம் தற்போது சரிபாதியாக தமிழகத்தில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

[திரு. ஏ.எஸ். கண்ணன்] [2001 செப்டம்பர் 3

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையால் தொழில்கள் எல்லாம் இப்போது கடுமையாக பாதிக்கப்பட்டு, பணிபுரிகின்ற தொழிலாளர்களின் எதிர்காலம் இருள்சூழ்ந்து காணப்படுகின்ற ஒரு மோசமான நிலை இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் இப்போது தொழிலாளர், தொழிற்சாலைகள் பற்றிய விவாதம் இங்கே நடந்துகொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12–10*

கடந்த காலத்தில், புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 85 பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருந்தார்கள். அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், பெண் தொழிலாளர்கள் என்றும் பாராமல், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த அந்த 85 பணியாளர்களை வேலைநீக்கம் செய்தார்கள்.

புதிய ஆட்சி பொறுப்பேற்றவுடன், எங்களது தலைவர்கள் எல்லாம், மரியாதைக்குரிய உணவுத் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து, அந்தப் பெண் தொழிலாளர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். எங்களது கோரிக்கையை ஏற்று, அந்த 85 பெண் தொழிலாளர்களையும் புதியதாக உத்தரவைப் போட்டு, வேலையில் அமர்த்தியமைக்காக, தமிழக முதல்வர் மரியாதைக்குரிய அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியையும், பாராட்டுதல்களையும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூடப்பட்ட ஆலைகளில் இருந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் கடந்த கால ஆட்சியில் எந்த அளவிற்கு இருந்தது என்பதை ஒரு உதாரணத்திற்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்தியிலே இருக்கின்ற ஆட்சியினர் புதிதாக சுதந்திரமான பொருளாதார பிராந்தியத்தை அமைக்கிறோம் என்று சொன்னார்கள். அதனுடைய ஞானபிதா, இன்றைக்கு தமிழகத்திலேயிருந்து சென்ற தொழில் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சர் ஆவார். சென்னையில் தாம்பரத்திலே இயங்குகின்ற ஏற்றுமதி வளாகத்திலே, 79 தொழிற்சாலைகள் ஏற்கெனவே செயல்பட்டன. ஆனால் இன்றைக்கு அந்த வளாகத்திலே 32 தொழிற்சாலைகள்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் பணிபுரிந்த ஏறக்குறைய 71,379



2001 செப்டம்பர் 3] [திரு. ஏ.எஸ். கண்ணன்]

தொழிலாளர்கள் இப்போது வீதிகளிலே நிற்கின்ற ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த முதலாளிகள், அங்கே அந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு வாங்கிய ஏறக்குறைய 1,700 கோடி ரூபாய் அவர்களுடைய பாதுகாப்பிற்காக ஏப்பம் விடப்பட்டது என்ற மோசமான ஒரு நிலை அங்கே உருவாகியிருக்கிறது. கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு நிவாரணம் என்று, தமிழகத்திலே இருக்கின்ற தொழிற்சங்கங்கள் எல்லாம் கடந்த கால ஆட்சியைப் பார்த்துக் கேட்டபோது, நிவாரணம் அளிக்கிறோம் என்று சொல்லி, 250 ரூபாய் நிவாரணத்தை அளித்தார்கள். ஆனால் அவர்கள் அளித்த நிவாரணம் 316 பேருக்குத்தான் தரப்பட்டது. 1999–ல் நடந்த தேர்தலின்போது, இவர்கள் விளம்பரத்திற்காக 40,000 தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அன்பார்ந்த உறுப்பினர்களே, அவர்கள் உண்மையாக 250 ரூபாயை 8,396 பேருக்குத்தான் நிவாரணமாக வழங்கியிருக்கிறார்கள் என்ற நிலையை நாம் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையில் இருக்கின்றோம்.

மேற்கு வங்க அரசைப்போல, குறைந்தபட்சம் அந்த நிவாரணம் ரூ.250/– என்று இருப்பதை மாற்றி ரூ.1000/–ஆக வழங்க வேண்டுமென்று இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆலை மூடல் என்பதை முதலாளிகள் சர்வசாதாரணமாகக் கொண்டு வந்துகொண்டிருக்கிறார்கள். ஆலை மூடல், ஆட்குறைப்பு, சம்பளம் வெட்டு என்றெல்லாம் சர்வசாதாரண நடவடிக்கையாக செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உதாரணத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஈரோட்டில் உள்ள 'சுப்பாத்தாள் ஸ்பின்னிங் மில்' இன்றைக்கு சட்டவிரோதமாகக் கதவடைப்பு செய்யப்பட்டு, அந்தத் தொழிலாளர்கள் இப்போது வெளியே நின்றுகொண்டிருக்கின்ற ஒரு மோசமான நிலை உருவாகியிருக்கிறது. அந்த மில்லின் கதவடைப்பை நீக்குவதோடு, அவர்களுக்குச் சேர வேண்டிய சம்பளத்தைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இப்போது தமிழகம் முழுவதும், பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் நடுவீதியிலே நின்று கொண்டிருக்கின்ற ஒரு கேவலமான நிலை கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்டது. சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள

B&C மில்லையே நான் உதாரணத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். B&C மில்லாக இருந்தாலும் சரி அல்லது Standard Motors Company - ஆக இருந்தாலும் சரி, குறைந்தபட்சம் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய, அவர்களுடைய வைப்பு நிதி, gratuity போன்றவைகூட, இப்போது கிடைக்காத ஒரு மோசமான நிலை. அன்பார்ந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தை ஆண்டபோது இந்தத் தொழிலாளர்களுக்கு எப்படியாவது gratuity கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில், இந்தியாவில் இருக்கின்ற எந்த மாநில முதலமைச்சருக்கும் தோன்றாத ஒரு அருமையான திட்டத்தை இங்கே கொண்டுவந்தார்கள். அவர் gratuity insurance என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார். அந்த Insurance திட்டம், தொடர்ந்து நடைமுறையில் இருக்குமானால், இன்றைக்கு Standard Motors Company-யில் இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கோ அல்லது B&C மில்லிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கோ, அவர்களுடைய வைப்பு நிதியும், gratuity போன்றவையும் குறைந்தபட்சமாவது கிடைக்க வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் துரதிருஷ்டவசமாக, அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்தத் திட்டத்தை அமல்படுத்தாமல் இரத்து செய்து விட்டதால் மோசமான நிலைதான் இப்போது நிலவுகிறது. மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த அந்த 'Gratuity Insurance' திட்டத்தை மீண்டும் தொடங்க வேண்டும்; கொண்டுவர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

அதுமட்டுமல்ல, இன்று உள்நாட்டிலே இருக்கின்ற Standard Motors போன்ற கம்பெனியின் கார் உற்பத்தியை இயக்க முடியாமல் உற்பத்தியைத் தொடர முடியாமல் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு Hyundai போன்ற கம்பெனிகளை இங்கே கொண்டு வந்தது. Hyundai கம்பெனியைக் கொண்டுவந்தது மட்டுமல்ல; இன்றைக்கு 1,500 கோடி ரூபாய் முதலீடு என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல, அந்தக் கம்பெனிக்கு மின்சார வசதி, குறைந்தபட்ச விலையில் நில ஆர்ஜிதம், மற்ற மற்ற வசதிகள், பத்தாண்டு காலத்திற்கு அவர்கள் வரியே கட்ட வேண்டாம் என்ற சலுகைகளெல்லாம் தந்தார்கள். அவர்கள் இப்போது பத்திரிகையிலே விளம்பரப்படுத்துகிறார்கள்; மூன்று இலட்சத்திற்கும் மேலாக கார்களை உற்பத்தி செய்துவிட்டோம்; சொகுசுக் கார்களை அன்னிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறோம் என்று பெருமை



அடித்துக்கொள்கிறார்கள். நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்; நீங்கள் லட்சோபலட்சம் கார்களை உற்பத்தி செய்து, கோடானுகோடி பணத்தைக் கொள்ளையடித்தாலும், தமிழக மக்களுக்கு அதனால் என்ன கிடைத்திருக்கிறது? வரி மூலம் ஏதாவது கிடைத்திருக்கிறதா, மற்ற, மற்ற சலுகைகள் கிடைத்திருக்கிறதா, குறைந்தபட்சம் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறதா என்ற கேள்விகளை எழுப்புகிறபோது, இல்லை என்ற பதிலைத்தான் சொல்ல முடியும். அதற்கு மாறாக, அவையோர்களே, இப்போது மத்தியிலே இருக்கின்ற ஒரு தொழில் அமைச்சருடைய சொந்தக்காரர்கள் கோடி கோடியாகக் கொள்ளையடிக்கின்ற ஒரு காட்சியை மக்களும், தொழில் துறையிலே இருக்கின்றவர்களும் பேசுகின்ற ஒரு காட்சியை நாம் பார்க்க முடிகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு முடிவு காண வேண்டுமென்று நான் பணிவன்போடு சொல்லிக்கொள்வேன்.

டன்லப் தொழிற்சாலை, இன்றைக்கு உலகப் புகழ்பெற்ற தொழிற்சாலை என்று பேசப்படுகின்ற தொழிற்சாலை, கடந்த கால ஆட்சியில் அதை மூடினார்கள். மீண்டும் திறக்கப்பட்டது. திறக்கப்பட்டு, இன்றைக்கு ஏறக்குறைய 6 மாத காலமாக உற்பத்தியும் கிடையாது. அவர்களுக்குச் சேர வேண்டிய சம்பளமும் கொடுக்கப்படவில்லை என்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நினைத்ததையெல்லாம் முடிக்கின்ற மரியாதைக்குரிய தமிழகத்தின் முதல்வர் அவர்கள், இந்த டன்லப் கம்பெனியினுடைய பிரதிநிதிகளையும், தொழிற் சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அந்தக் கம்பெனியைத் திறப்பதற்கும், அவர்களுக்குச் சேர வேண்டிய சம்பளங்களைத் தருவதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டன்லப் தொழிற்சாலை சம்பந்தமான இந்தப் பிரச்சினை B.I.F.R.-ல் இருக்கிறது. Bureau of Industrial and Financial Reconstruction என்கிற மத்திய அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதற்குரிய தொகை, அவர்கள் கேட்டிருக்கிற தொகை, 25 கோடி ரூபாய். மேற்கு வங்கத்திலேயும் அவர்கள் இதைப்போன்ற தொழிற்சாலையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொகை கிடைத்ததற்குப் பிறகு. அந்தத் தொழிற்சாலையை மீண்டும் தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதையும், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அம்மா அவர்களுடைய அணுகுமுறையின் காரணமாக, அந்தத் தொழிற்சாலையினுடைய நிர்வாகிகளை அழைத்துப் பேசி, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இன்னொரு தகவலையும் கடைசியாகக் கேள்விப்பட்டிருக்கின்றோம். மேற்கு வங்கத்திலே இருக்கிற அந்தத் தொழிற்சாலையை மூடிவிடுகின்ற வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்றும், தமிழகத்திலே இருக்கின்ற தொழிற்சாலையை மூடுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் திறந்து நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் இன்றைக்கு தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற மரியாதைக்குரிய நம்முடைய புரட்சித் தலைவி, முதலமைச்சர் அவர்கள் நல்ல நிலையை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையிலும் அந்த அமைப்பு இருந்துகொண்டிருக்கிறது என்ற தகவலையும் கேள்விப்பட்டோம். அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

அடுத்து, ஆடை தயாரிப்பு தொழிலாளர்களும் அதிலே பணிபுரிகின்ற பெண் தொழிலாளர்களையும் பற்றியது. இலட்சக்கணக்கானவர்கள் இன்று தமிழகத்திலே இருக்கின்றார்கள். குறிப்பாக, அம்பத்தூர், திருப்பூர், கிண்டி போன்ற இடங்களில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இவர்களுக்கும் குறைந்தபட்சம் வேலை பாதுகாப்புகூட இல்லை. இதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன். பஞ்சாலை பற்றி ஏற்கெனவே பேசிய தோழர்களெல்லாம் சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பஞ்சாலை அதிகமாக மூட்டப்பட்டிருப்பது தமிழகத்திலேதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 3 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் இப்போது குறைந்தபட்ச ஊதியத்திற்காக 30 அம்ச கோரிக்கைகளை வைத்துப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கவனத்திற்குக் கொண்டுவருகிற அதேநேரத்தில், திருப்பூரில் இருக்கிற பனியன் தொழிற்சாலை; 2000 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற ஒரு மிகப் பெரிய தொழிலில் இன்றைக்கு புதிய பொருளாதாரக் கொள்கையால் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதைக் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12–20*

தனியார் போக்குவரத்துத் துறையிலே சங்கம் அமைத்தார்கள் என்பதற்காக, 600 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள், அவர்களைப் பணியிலே அமர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்களுக்கான நல வாரியம். மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, புரட்சித் தலைவி அவர்களால் செயல்முறைப்படுத்தப்பட்டது கட்டுமானத் தொழிலாளருக்கான நல வாரியம் ஆகும். இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஓய்வூதியம் என்பதை 200 ரூபாய் என்று கொண்டுவந்திருக்கின்றீர்கள். அதற்காக நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்திலே உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது சாதாரணமாக வயது முதிர்ந்தோர், ஊனமுற்றோர், விதவைகள் போன்றவர்களுக்கெல்லாம் அரசு 200 ரூபாய் என்று ஓய்வூதியம் தருகிறது. ஆனால் 60 வயது வரை உழைக்கின்ற அந்தக் கட்டடத் தொழிலாளிக்கு 200 ரூபாய் என்பது மிகக் குறைவு. பணிவோடு நான் உங்களைக் கேட்டுக்கொள்வேன், பொருளாதார நிலைமையை நன்றாக உணர்ந்தவர்கள் என்ற நிலையில் உங்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் குறைந்தபட்சம் 500 ரூபாயையாவது அவர்களுக்குத் தருவதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளி விபத்தில் இறந்தால்தான் ஒரு இலட்சம் என்ற நிலையிருக்கிறது. ஆனால் இயற்கையாக மரணமடைந்தால் அவர்களுக்கு அந்த உதவி கிடைப்பதில்லை. தயவுசெய்து இயற்கையாக மரணம் அடைந்தவர்களுக்கும் (மணியடிக்கப்பெற்றது) ரூபாய் ஒரு இலட்சம் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன்.

அமைப்பு சாராத் தொழிலாளிகளில் 57 வகை தொழிலாளர்களுக்கு வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வாரியத்திற்கு, ஒரு கோடி ரூபாய் என்று கடந்த கால ஆட்சியில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆண்டுக்கு

[திரு. ஏ.எஸ். கண்ணன்] [2001 செப்டம்பர் 3

குறைந்தபட்சம் 10 கோடி ரூபாயாவது ஒதுக்கி அந்த வாரியங்கள் அனைத்தையும் செயல்முறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் பட்டுத் தொழிலாளர்களுடைய நிலை. காஞ்சிபுரம் என்று பேசப்படுகின்றபோது அங்கேயிருக்கின்ற அந்தக் கடவுளைவிட அந்தப் பட்டுத் தொழிலையும், பட்டுச் சேலையையும் பற்றித்தான் தாய்மார்கள் நினைப்பார்கள். அந்தப் பட்டுத் துறையிலே வேலை செய்கின்ற 10 ஆயிரம் தொழிலாளிகளுக்கு ஊதிய உயர்வு என்று ஒப்பந்தம் போடப்பட்டு கடந்த ஆட்சியில் அதனை அமல் படுத்தவில்லை. என்னவோ தெரியவில்லை அதிகாரிகளுக்கு அந்தத் தொழிலாளர்களைவிட, அந்தப் பட்டுச் சேலையைப் பார்க்கின்றபோது மோகம் அதிகமாக இருக்கின்றது என்று நான் கவலைப்படுகின்றேன். தயவுசெய்து அமைச்சர் அவர்கள் அந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவுத் தொழிலாளர்கள் குறித்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இருக்கிறது, தனியார் துறைக்கு அதனை விடக்கூடாது என்று. ஆனால் கடந்த கால ஆட்சியில் ஓனிக்ஸ் என்ற தனியார் துறைக்கு, அந்நிய நாட்டு கம்பெனிக்கு துப்புரவுத் தொழில், தனியார் துறைக்கு விட்டிருக்கின்ற கேவலமான காட்சி கடந்த ஆட்சியிலே நடந்தது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பொன்னேரியில் புதியதாக Harbour கட்டப்பட்டு இருக்கிறது. அதுதொடர்பாக பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தத் தொழிற்சாலைகளில் தற்காலிக ஊழியர் பணிகள்தான் தரப்படுகின்றன. அரசாங்கம் அந்தப் பகுதி மக்களிடம் எடுத்த நிலத்திற்காக, வேலைவாய்ப்பு தருகிறேன் என்று சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.கு.சீ. அன்பழகன். (குறுக்கீடு) நீங்கள் இரண்டு, மூன்று தடவை பேசிவிட்டீர்கள். அவரெல்லாம் இன்னும் கன்னிப் பேச்சே பேசவில்லை. (குறுக்கீடு) சரி.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...



2001 செப்டம்பர் 3]

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் கொடுத்த மக்கள் கடந்த கால ஆட்சியில் வேலை கேட்டபோது, தேவையற்ற முறையில் பெண்கள் 28 பேர் உட்பட, 128 பேர்மீது பொய் வழக்கு போட்டு, சிறையிலே அடைத்து, வழக்கு இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. அந்த வழக்குகளை வாபஸ் வாங்குவதோடு, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை தரவேண்டுமென்று மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு மீண்டும் நான் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் எங்கள் குடும்ப விளக்கு, தமிழக மக்கள் மனதில் வீற்றிருக்கும் குல தெய்வம், நான் சட்டமன்ற உறுப்பினராவதற்கு வாய்ப்பு அளித்து, பெரணமல்லூர் தொகுதியின் மக்கள் பிரதிநிதியாக்கிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து என்னுடைய கன்னிப் பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

என்னை பெரணமல்லூர் தொகுதி மக்கள் பிரதிநிதியாக்கிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், எனக்கு வாக்களித்த தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் உயிர் மூச்சு இருக்கும் வரை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு விசுவாசமாக நடந்துகொள்வேன். என் தொகுதி, மிகவும் அதிகமாக விவசாயிகள், நெசவாளர்கள் வாழும் பகுதியாகும். பெரணமல்லூர் தொகுதியில் எந்த ஒரு தொழிற்சாலையும் கிடையாது. விவசாயம், நெசவுத் தொழில் நசிந்துவிட்டால் உணவிற்குப் பஞ்சம் வந்துவிடுகின்றது. அதை நிவர்த்தி செய்ய காகிதத் தொழிற்சாலை, தீப்பெட்டித் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் அம்மா. சிப்காட் மூலமாக, மக்கள் முதலீட்டு தொழிற்சாலைகள், மகளிர் மேம்பாட்டு சிறு தொழிற்சாலைகளை அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய தொகுதியான பெரணமல்லூர் தொகுதிக்கு இந்தத் திட்டங்களைக் கொண்டுவந்து வேலைவாய்ப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் குளிரூட்டும் நிலையம் தொகுதியிலே அமைத்துத் தர வேண்டும் அம்மா.

வந்தவாசி தாலுகாவிலிருந்து பெரணமல்லூரைப் பிரித்து, தனித் தாலுகாவாகவும் போளூர் தாலுகாவிலிருந்து சேத்துப்பட்டைப் பிரித்து தனித் தாலுகாவாகவும் ஏற்படுத்த வேண்டுகிறேன் அம்மா.

தெள்ளார் ஒன்றியம் பெரிய ஒன்றியமாக இருக்கிறது. அதை நிர்வாகம் செய்ய முடியாததால், அதை இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்க உத்தரவிட வேண்டும் அம்மா. எனது தொகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது அம்மா. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமாய்க் கோருகிறேன். நசிந்துபோன நெசவாளர்கள் குடும்பங்களுக்கு ஏதாகிலும் புதிய திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சேத்துப்பட்டு ஒன்றியத்தில் முடையூர் கிராமத்திலே, சிற்பக் கலைஞர்கள் உள்ளனர். அங்கு சிற்பக் கலைக் கல்லூரி ஏற்படுத்தி அத்தொழிலை விரிவுபடுத்தக் கோருகிறேன் அம்மா.

சேத்துப்பட்டில் மகளிர் கலைக் கல்லூரியும் பெரணமல்லூரில் பொதுக் கலைக் கல்லூரியும் ஏற்படுத்த வேண்டும் அம்மா.

பெரணமல்லூர், தேசூர் காவல் நிலையம் புதியதாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் அம்மா. காவலர் குடியிருப்புக் கட்டடம் கட்டித் தர வேண்டும் அம்மா.

கடந்த ஆட்சிக் காலத்தில் சமத்துவபுரம் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து சாதிச் சண்டைகளை அதிகமாக ஏற்படுத்த வழி வகுத்தது இதற்கு முன்னால் இருந்த ஆட்சிதான். கட்டிய வீடுகள் தற்போது இடிந்துவிழும் நிலையில் உள்ளன. வீடுகள் ஒதுக்கியதில் பல முறைகேடுகள் நடந்துள்ளன. அதில் தி.மு.க.–வினருக்கே வீடுகள் ஒதுக்கித் தரப்பட்டுள்ளன. இன்னும் பல வீடுகள் குடியேறாமல் பூட்டிக் கிடக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுத்து பொது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று அம்மாவிடம் கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதியை மையமாக வைத்து டவுன் பஸ்களை இயக்க வேண்டும் அம்மா.

எங்கள் தொகுதியிலே ஒரு தாலுகாவும் இல்லை. ஆகையினால் தனியாக ஒரு தாலுகா அமைக்க வேண்டும் அம்மா. பெரணமல்லூர் தொகுதி, கிராமங்கள் சூழ்ந்த பகுதி அம்மா. தொகுதிக்குச் சென்றுவர தனியாக பெரணமல்லூரை மையமாக வைத்து டவுன் பஸ்கள் இயக்க வேண்டும் அம்மா.



சேத்துப்பட்டு, வந்தவாசி ஆகிய பகுதிகளுக்கு பெரணமல்லூர் மையமாக உள்ளது. எனவே பெரணமல்லூரில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வரிக்கும் அம்மாவைக் கூறுகிறேன் என்றால், என்னை மட்டுமல்ல; தமிழகத்திலே உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அம்மாவினுடைய செல்வாக்கினால்தான் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். ஆகையால் அதிலே ஒன்றும் தவறு இல்லை.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இருண்ட கோயில்களுக்கெல்லாம் ஒருகால பூஜை சிறப்பாக நடைபெற்றது. அதேபோல் எனது தொகுதியில் இருக்கும் கோயில்களில் மடம், வெடால், வயலூர் கிராமங்களில் இருக்கும் கோயில்கள் மிகவும் பழமை வாய்ந்த கோயில்கள். மேலும், திருவண்ணாமலை, வேலூர், வடாற்காடு மாவட்டங்களில் சிறப்புமிக்க சிவன் கோயில்கள் இருக்கின்றன. இந்த சிவன் கோயில்களைச் செப்பனிட அம்மாவின் கருணை பார்வை, பட வேண்டும் அம்மா.

எனது தொகுதியிலுள்ள சாலைகள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. ஏறக்குறைய எனது தொகுதியில் சுமாராக 600 கிலோ மீட்டர் அளவுக்கு சாலைகள் இருக்கின்றன. வருடத்திற்கு 10 கி.மீ. முதல் 20 கிலோ மீட்டர் வரை சாலைகள்தான் புதுப்பிக்கப்படுகின்றன. அது போதாது. அதுபோல ஏறக்குறைய 100 கிலோ மீட்டர் சாலைகள் வரை ஒரு வருடத்திற்குப் போட வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பெரணமல்லூர் தொகுதிக்குத் தனி நிதி ஒதுக்கித் தர வேண்டுகிறேன். அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில்தான், 1995 ஆம் ஆண்டு 27,000 கூட்டுறவுத் துறை ஊழியர்களான எங்களுக்கு, முதன்முதலில் தொகுப்பு ஊதிய முறையை மாற்றி ரூ.430 என்ற அளவில் அடிப்படை ஊதியம் வழங்கிய அம்மா அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருந்து வருகிறோம் அம்மா.

ரேஷன் கடை ஊழியர்களுக்கு எல்லாம் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் போட்ட திட்டம் என்பதால் முன்னாள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்தச் சலுகையும் அளிக்கவில்லை அம்மா. அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் இவர்களுக்குத் தர வேண்டும். அதேபோல், தனி நிர்வாகம், தனி துறை என்று ஆய்வு செய்ய வேண்டும் அம்மா. பென்ஷன் திட்டம் கொடுக்க வேண்டும். இவர்களுக்கு நல்ல பல திட்டங்களைச் செய்ய வேண்டும் அம்மா.

[திரு. ஆகு.சீ. அன்பழகன்] [2001 செப்டம்பர் 3

பெரணமல்லூர் தொகுதியை மையமாக வைத்து, பெரணமல்லூரைச் சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு டவுன் பஸ் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் அம்மா.

என் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி. குடிநீர்ப் பிரச்சினை உள்ளதால், குடிநீர் வாரியத்தின் (TWAD) மூலமாக பல குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதியிலே மிகப் பெரிய இராமர் கோயில் இருக்கிறது. தென் தமிழகத்திலே மிகப் பெரிய இராமர் கோயில், நெடுங்குன்றம் கிராமத்திலே அமைந்திருக்கிறது. வட இந்தியாவிலே, அயோத்தி என்ற கோயில் இருப்பதைப் போல, தென் இந்தியாவிலே மிகப் பெரிய இராமர் கோயில் நெடுங்குன்றத்திலே அமைந்துள்ளது. பல்லவர் காலத்திலே கட்டப்பட்ட இராமர் கோயில் உள்ளது. தமிழகத்திலேயே மிகப் பெரிய கோயில். இந்தக் கோயிலை புனரமைக்க மக்கள் சார்பாக ரூ. 25 இலட்சம் முதல் ரூ. 50 இலட்சம் வரையிலே செலவு செய்து புனரமைப்பு செய்கிறார்கள். மேலும், இதை புனரமைப்பு செய்ய ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. புனரமைப்பு செய்து அம்மா அவர்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமாய் மக்கள் விரும்புகிறார்கள் அம்மா.

*பிற்பகல் 12-30*

கூட்டுக் குடிநீர்த் திட்டம். எங்கள் தொகுதியிலே கோட்டுப்பாக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொளகிறேன்.

ஒரு மின்விளக்கு திட்டம், டாக்டர் புரட்சித் தலைவர் M.G.R. அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம். அந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மீண்டும் ஏழைகளுக்கு கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதிச் சான்றிதழ் வழங்குகின்ற நேரத்திலே எனது தொகுதியில் மஞ்சனூர் கிராமத்திலே, பாளையக்காரர் சமூகத்திற்கு சான்றிதழ்கள் வழங்க மறுக்கின்றனர். அதை வழங்க அம்மா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பட்டு நூல் கைத்தறி நெசவாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம்



2001 செப்டம்பர் 3] [திரு. ஆகு.சீ. அன்பழகன்]

கிடைப்பதில்லை அம்மா. மேலும், அவர்கள் நெய்யும் பட்டுத் துணிகளை ஏற்றுமதி செய்வதின் மூலமாக அன்னியச் செலாவணியும் ஈட்டலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நிறுவன மோசடி நிகழ்வைத் தடுக்க வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் அம்மா. நிதி நிறுவனத்தின் முதலீட்டாளர்கள் திடீர் என்று எல்லோரும் ஒன்றாக முதலீடு செய்த பணத்தைக் கோரும்போது நிதி நிறுவனத்தால் திருப்பித் தர முடியவில்லை. காரணம், நிதி நிறுவனத்தில் கடன் பெறும் கடன்தாரர்கள் வாங்கிய கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த மாட்டேன் என்கிறார்கள். எனவே கடன்தாரர்களிடத்திலே அவர்களுடைய சொத்துகளை ஜப்தி செய்வதற்காக ஒரு தனிச் சட்டம் கொண்டுவர வேண்டும். நிதி நிறுவனத்திலே கடன் வாங்கிய கடன்தாரர்கள் பணத்தை திருப்பித் தர வேண்டும் என்ற ஒரு முறை இருக்கிறது. மீறினால் தண்டிக்கப்படுவோம் என்ற கருத்தைப் புரிந்து கொண்டு நிதி நிறுவனம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனம் பாதிக்காத வண்ணம் கடன்தாரர்களிடம் பணம் பெற்று மக்களுக்கு திரும்பவும் பணம் கிடைக்க ஏற்பாடு செய்ய உங்களிடத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியத் திட்டங்கள் விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. குறிப்பாக, நவப்ரா திட்டத்தில் ஒரு தொகுதிக்கு ஒரு வருடத்திற்கு சுமார் ஒரு கோடி மானியத் திட்டங்கள், டாக்டர் புரட்சித் தலைவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பாழ்படுத்திவிட்டனர். அந்தத் திட்டத்தில் மிகப் பெரிய ஊழல் நடந்திருக்கிறது. தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளில், ஏறக்குறைய 234 கோடி ரூபாய் ஒரு வருடத்திற்கு மானியம் கொடுத்தும், 5 வருடத்தில் சுமாராக 1000 கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது. இந்த ஊழல்மீது ஆறு மாதங்களுக்கு முன்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மிகப் பெரிய போராட்டத்தை வந்தவாசி நகரில் மக்களுடன் தி.மு.க அரசையும், நவப்ரா ஏ.டி.யையும் கண்டித்து சுமார் 5000 பேர்களுடன் பேரணியும்...

[2001 செப்டம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** கண்டனப் பேரணியும் நடத்தி, ஊழல் செய்த ஏறக்குறைய 13 அதிகாரிகளை சஸ்பென்ட் செய்துவிட்டு, அந்தத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தை விட்டுவிட்டனர். அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் ஒரு காகித தொழிற்சாலை அமைத்து 5,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஆவன செய்யவும், அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி கேட்டுக்கொள்கிறேன். அம்மா வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி. அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நன்றி மறப்பது நன்றல்ல' என்பதால் நன்றி உணர்வோடு ஒரு நற்செய்தியை முதலிலே இந்தப் பேரவையோடு பகிர்ந்துகொள்வது ஏற்புடையதாக இருக்கும் என எண்ணுகிறேன். தங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். கடந்த வாரத்திலே கல்வி மானியக் கோரிக்கை மீதான எனது விவாதத்தை இந்த மாமன்றத்திலே நான் வைத்தபோது தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை குறித்து ஒரு கோரிக்கையை இங்கே நான் தங்களின் வாயிலாக வைத்தேன். அதாவது அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவித் தொகையானது ஒரு சிலருக்கு மட்டும் எவ்வித நியாயமான காரணமும் இன்றி 31-3-1999-க்குப் பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை எடுத்துரைத்தேன். ஆனாலும்கூட பாதிக்கப்பட்ட தமிழ் அறிஞரின் பெயரைக்கூட நான் இங்கே சொல்லியிருக்கவில்லை. ஆனாலும், 'சொல்லாமல் செய்வர் பெரியர்' என்பதற்கு இலக்கணம் வகுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரிலும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரிலும் (மேசையைத் தட்டும் ஒலி) துறை இயக்குநர் அவர்கள் சம்பந்தப்பட்ட கோப்பினை தேடிக் கண்டுபிடித்து நான் சொல்லாமலேயே பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரித்து அவர்களுக்கு உதவித் தொகையை உடனடியாக வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இந்த உதவித் தொகையையும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற காலத்திற்கும் சேர்த்து அதாவது பின்பாக்கியோடு வழங்க வேண்டும் என்ற உத்தரவினை



2001 செப்டம்பர் 3] [திருமதி எஸ். மகேஸ்வரி]

இட்டிருக்கிறார்கள். இதனையும் 'நன்றே செய் அதுவும் இன்றே செய்' என்பதுபோல அன்று மாலை 4 மணிக்குள்ளாக இந்த உத்தரவை இட்டிருக்கிறார்கள். அந்தத் தமிழ் நெஞ்சத்திற்கு, அந்தத் தாய் உள்ளத்திற்கு, அந்த தயா சிந்தனைக்கு அந்தக் கருணை நோக்கிற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) நான் கரம் கூப்பி சிரம் தாழ்த்தி, எனது ஆயிரம் ஆயிரம் நன்றி மலர்களை காணிக்கையாகச் சமர்ப்பித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு சிலர் முத்தமிழ் என்பது ஏதோ தங்கள் முப்பாட்டன் வீட்டு சொத்து என்பது போலவும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மொழியை தாங்கள்தான் கட்டிக்காத்து இரட்சித்து வருகிறவர்கள் போலவும் (மேசையைத் தட்டும் ஒலி) வாய் கிழியப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால்,அன்னைத் தமிழுக்கு அரணாக இருந்து, சங்கம் வளர்த்த தமிழ் மங்காமல் காப்போம் என்பதை சத்தமின்றி செயல் ரீதியாகச் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே அவர்களுக்கு என் சார்பாகவும், தமிழ்கூறும் நல்லுலகம் சார்பாகவும், என் மனமார்ந்த, உளமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றிகளை நிறைவோடும், நெகிழ்வோடும், மகிழ்வோடும் முதற்கண் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

இனி, இன்றைய மானியக் கோரிக்கைபற்றி எனது கருத்தைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும் என்பது உடலும் உயிரும்போல; நிலவும் வானமும்போல; மலரும் மணமும்போல; மதவாதமும் மத்திய அரசும் போல; (மேசையைத் தட்டும் ஒலி) கபடமும் கடந்த ஆட்சியும்போல; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களும் துணிவான விடாமுயற்சியும்போல (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டிப் பிறந்தவை; பிரிக்க முடியாதவை; இணை பிரிக்க முடியாதவை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய பேச்சு எங்களுடைய பசியை நீக்கியது போல இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

**திருமதி எஸ். மகேஸ்வரி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் தொழிற்சாலை மேம்பாட்டிலேதான் தொழில் மேம்பாடு இருக்கிறது. தொழில் மேம்பாட்டிலேதான், தொழிலாளர்களின் வாழ்வும் மேம்பட முடியும் என்ற அக்கறையோடு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினைத் தயாரித்து இருக்கின்றார்கள். அதற்காக முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும்கூட, இந்த மகிழ்ச்சியான நேரத்திலும், அதாவது எனக்கும்

கோவைவாழ் மக்களுக்கும் ஒரு மனத்தாங்கல் இருக்கின்றது. எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்களும் மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, மூடிய ஆலைகளைத் திறப்பதற்கும். நலிவுற்ற ஆலைகளைக் காப்பதற்கும், இந்தத் துறையிலே எந்தச் செயல் திட்டங்களும் இல்லை என்பதாக வெளிப்படையாகவே இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், நாலாவது பக்கத்திலே குறிப்பிட்டு இருப்பதுதான் எங்கள் மனத்தாங்கலுக்குக் காரணம். ஆகவே இந்த அரசு இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கோள்கிறேன். ஏனென்றால் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று மிகப் பிரபலமாகப் பேசப்படுகின்ற எங்கள் பஞ்சாலை நகரம், இன்றைக்கு பஞ்சம் விரித்தாடும் நரகமாக மாறிவிட்டது. ஓடிக் கொண்டிருந்த ஆலைகள் பல இன்றைக்கு மூடிக் கிடக்கின்றன. ஆகவே இந்த மூடிய ஆலைகளைத் திறப்பதற்கும், நலிவுற்ற ஆலைகளைக் காப்பதற்கும் இந்த அரசு நல்ல பல திட்டங்களை விரைவாக ஆய்ந்து செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொளகிறேன். அதற்கு முதற்கட்டமாக, இந்த ஆலைகளுக்கு வங்கிகளிலே பரிந்துரை செய்து, அதன் மூலமாகக் குறைந்த வட்டியிலே கடன் உதவி பெற்றுத் தர, அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, ஏற்கெனவே பெற்ற கடன்களுக்கான அபராத வட்டியையும், வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, புனரமைப்புக் காலம் என்று மூன்று ஆண்டுகளையோ அல்லது ஐந்து ஆண்டுகளையோ அறிவித்து, அந்த புனரமைப்புக் காலத்திற்கு வரிச் சலுகைகள், அதாவது, கலால் வரிச் சலுகை, விற்பனை வரிச் சலுகை, வருமான வரிச் சலுகை போன்ற வரிச் சலுகைகளை அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. அவர்களுக்கு ஒரு நாளொன்றுக்கு 9 கோடி ரூபாய் நஷ்டம் ஆகிறது என்று அவர் அடிக்கடி சொல்லுவது எங்களுக்கு பசுமரத்தாணிபோல பதிந்து இருக்கிறது. ஆனாலும்கூட, அவர்கள் பஞ்சாலைக்கு என பிரத்யேகமாக மின் கட்டணச் சலுகையை அறிவித்தே ஆகவேண்டும். ஏனென்றால் வேறு எந்தத் தொழிலைக் காட்டிலும், பஞ்சாலைதான் Major power oriented sector என்பதால், அதிக அளவிலே மின்சாரத்தை நுகர்கின்றது. அதற்காகவாவது, இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக, இந்த மின் கட்டணத்திலே, 4 விழுக்காடு அல்லது 5 விழுக்காடு மின்சார வரியாக வசூலிக்கப்படுகிறது. அதற்கு விலக்கு அளித்தால்கூட போதுமானது. ஆகவே இதுபோன்ற



சலுகைகளையெல்லாம் அளிக்க வேண்டும். பஞ்சாலைகளுக்கு இருக்கின்ற பொதுவான பிரச்சினை என்னவென்றால், மூலப்பொருள் பற்றாக்குறை; மூலப்பொருள் விலையேற்றம். ஆகவே இதனைத் தடுத்து நிறுத்துவதற்காக பஞ்சு இறக்குமதியை அரசு ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, அந்த இறக்குமதி வரியைக் குறைப்பதற்காகவும் ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் நூல் விலை வீழ்ச்சியைத் தவிர்ப்பதற்காகவும், நூல் தேக்கத்தைத் தவிர்ப்பதற்காகவும் இந்த அரசு நூல் ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் செயல் திட்டங்களையெல்லாம் அரசு பரிவோடு ஆராய்ந்து செயல்படுத்த முன்வருமேயானால் நிச்சயமாக, பஞ்சாலைத் தொழிலாளர்களின் பஞ்சம், பஞ்சாகப் பறந்துவிடும் என்பதிலே எவ்வித ஐயப்பாடும் தேவையில்லை.

*பிற்பகல் 12-40*

மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் இங்கே இல்லை. அவர்கள் பேசியபோது ஒன்றைச் சொன்னார்கள். இந்த அரசின் 100 நாட்கள் சாதனை என்ன என்று இங்கே கேட்டார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல இங்கே ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லிக்காட்ட ஆசைப்படுகின்றேன். கடந்த ஆட்சிக் காலத்திலே, மூடிக் கிடக்கும் ஆலைகளைத் திறக்க வேண்டுமென்று தொழிற்சங்கங்களும் சரி, நிர்வாகங்களும் சரி, கடந்த ஆட்சியாளர்களைச் சந்தித்து பலமுறை கோரிக்கை வைத்தார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகளையெல்லாம் அடியோடு அலட்சியப்படுத்திவிட்டது அன்றைய அரசு. ஆனாலும்கூட, ஏதோ பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் வாழ்விலே அக்கறை உள்ளவர்கள்போல காட்டிக் கொள்வதற்காக அதிரடியாக ஒரு அறிவிப்புச் செய்தார்கள். மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு மாதம் 250 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று சொன்னார்கள். அறிவித்ததோடு சரி. அந்தத் தொகையை வழங்கவே இல்லை.

இங்கே ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது திமுக. உறுப்பினர் ஒருவர் சொன்னார். இவர்கள் கொடுப்பதாகச் சொல்லி, கொடுக்காமல் விட்ட தொகையை இந்த அரசு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்தார்கள். அரிசியை நீ கொண்டு வா; உமியை நான் கொண்டு வருகிறேன்; ஊதி ஊதி சாப்பிடலாம் என்ற வகையிலே அவர்கள் பேசினார்கள். ஆனாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைக் கருணையோடு பரிசீலித்து 250 ரூபாய் உதவித்

[திருமதி எஸ். மகேஸ்வரி] [2001 செப்டம்பர் 3

தொகையை உடனடியாக வழங்க ஆட்சிக்கு வந்த மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதுவும் கடந்த 3 மாதங்களுக்கும் சேர்த்து வழங்க உத்தரவிட்டதோடு, கடந்த மாதத்தோடு இதுவரை 6 மாத காலங்களுக்குப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் உதவித்தொகை பெற்றிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த 6 மாத காலங்களுக்கான உதவித்தொகை அளிப்பதற்கான விண்ணப்பங்களும் இன்றைக்கு பெறப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். ஆனாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் இங்கே சொன்னதுபோல, எங்களின் பசியின் கொடுமை மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இந்த 250 ரூபாய் உதவித்தொகையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அரசுக்குப் பரிந்துரை செய்து–நான் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு 500 ரூபாயாகக் கேட்கலாம் என்று இருந்தேன்; மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் 750 ரூபாயாகத் தர வேண்டுமென்று சொன்னார்கள்; ஆகவே அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு– நீங்கள் 750 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதைச் சொல்லும்போது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடும். கொடுக்கிறேன் என்று சொல்லி, கொடுக்காமல் ஏமாற்றியவர்களை விட்டுவிட்டீர்கள். ஆனால் நாங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். கோரிக்கை வைக்கிறீர்களே, நியாயமா என்று கேட்கலாம். அதாவது ஊறுகின்ற கிணற்றிலேதான் நாங்கள் நீரை இறைக்க முடியும். வறண்ட கிணற்றோடு வம்பு செய்ய எங்களுக்குத் தெம்பு இருக்கவில்லை; ஆகவே விட்டுவிட்டோம். உங்கள் நெஞ்சிலே ஈரம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கண்ணீரின் ஈரம் உங்களுக்குப் புரியும் என்ற காரணத்தினால், உரிமையோடு கோரிக்கை வைக்கின்றோம். ஆகவே நீங்கள் இதனைக் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அமைப்பு சாராத் தொழிலாளர்களைப்பற்றி சில கருத்துகளை இங்கே நான் சொல்ல ஆசைப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர், கண்ணன் போன்ற தொழிற்சங்கத் தோழர்களிடம் நான் எப்போதுமே சொல்வதுண்டு. அதாவது அமைப்பு சார்ந்த தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு, கர்ணனுக்கு கவச குண்டலம்போல, நத்தைக்கு ஓடுபோல, அவர்களுக்கு தொழில் தகராறு சட்டம் இயற்கையாகவே ஒரு பாதுகாப்பாக இருக்கின்றது. ஆகவே நீங்கள் அமைப்பு சார்ந்த தொழிலாளர்களைப்பற்றி அதிகமாகக் கவலைப்படாமல்,



2001 செப்டம்பர் 3] [திருமதி எஸ். மகேஸ்வரி]

அமைப்பு சாராத் தொழிலாளர்கள்மீது உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள் என்று நான் எப்போதுமே சொல்வதுண்டு. இந்தக் குறையைப் பெருமளவு இட்டு நிரப்புகின்ற அளவிலேதான் இன்றைக்கு சற்றேறத்தாழ 67 அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான ஏறத்தாழ 10 நல வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, இந்த நல வாரியங்களின் நலத் திட்டங்கள், அதனைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு முறையாகச் சென்று செயல்படவில்லை என்பதுதான் பரவலாகச் சொல்லப்படும் கருத்து. ஆகவே இதனையும் தாங்கள் ஆய்வு செய்ய வேண்டும். இதற்கு முக்கிய காரணம், இந்த நலத் திட்டங்கள் முறையாக வகுக்கப்படவில்லை என்பதுதான். இதற்கு ஒரு வரைமுறை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் சமீபத்திலே கோவையிலே சலவைத் தொழிலாளர்கள் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிலேகூட அங்கிருக்கின்ற தோழர்கள் சொன்னார்கள். நாங்கள் இந்த நல வாரியத்திலே பதிவு செய்துகொள்வதற்கு சென்னைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு பல்வேறு மண்டலங்களிலே நல வாரியங்களின் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. என்னைப் பொறுத்தமட்டிலும், மாவட்ட மையங்கள்தோறும் இந்த நல வாரியங்களின் பதிவு செய்யும் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கருத்தினை இங்கே நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல, சலவைத் தொழிலாளர்கள். எனது கோவை மேற்கு தொகுதியிலே குடியிருப்புகளுடன் கூடிய ஒரு சலவைத் துறை இருக்கின்றது; அதுபோன்று ஒரு சலவைத் துறை கட்டித்தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொன்னதுபோல, அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கென இவர்கள் ஆற்றிய சாதனை என்ன என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சாதனை என்னவென்று கேட்டால், முன்னாள் முதல்வர் அவர்களின் அட்டைப் படத்தை இட்டு, அவர்களுடைய ஒரு புகைப்படத்தை இட்டு, ஒரு அடையாள அட்டையை வழங்கியதோடு சரி. ஏதோ ஓர் அவசரக் கோலத்திலே ஒரு மாநாட்டை நடத்தினார்கள். அதோடு சரி. ஆனால் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டது போன்று இன்றைக்கு கட்டடத் தொழிலாளர்களுக்காக உதவித்தொகை, அதாவது ஓய்வூதியத் தொகை வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கண்ணன் அவர்கள் சொன்னதுபோல, அந்த ஓய்வூதியத் தொகையை

சற்று உயர்த்தித் தர வேண்டுமென்பதோடு, அதை அனைத்து அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கும் நீட்டித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கோவை மேற்கு தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான தங்க நகைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தங்க நகைத் தொழில் நசிவுற்ற காரணத்தால், இன்றைக்கு பட்டறைத் தொழிலாளர்கள் வாழ்வும் பட்டுப்போய்விட்டது. அவர்கள் வாழ்விலே ஏற்பட்ட பட்டினிச் சாவுகள் பற்றி இந்த அரசாங்கம் நன்கு அறியும் என்று கருதுகிறேன். ஆகவே அவர்களுக்காக தனி நல வாரியம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் நூதனமான வேலைப்பாடுகள் செய்வதுபோல, அவர்களுக்குப் பல்வேறு நூதனமான பிரச்சினைகளும் இருக்கின்றன. அவற்றை நூதனமாகத்தான் கையாள வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கென்று தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர்களுக்கும் சரி, தங்க நகைத் தொழிலாளர்களுக்கும் சரி, மற்ற அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கும் சரி, ஓய்வூதியத்தோடு P.F., E.S.I., போன்ற சட்டரீதியான சலுகைகளை அவர்களுக்கும் அளிப்பதற்கான வழிவகைகளை இந்த அரசு ஆய்வு செய்து அதனையும் அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அடுத்து, கோவையிலே சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி... (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்கள். அதாவது, சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடியிலே சற்றேறக்குறைய 40 ஊழியர்கள் V.R.S. என்ற விருப்ப ஓய்வுத் திட்டம் என்ற பெயராலே, Compulsory retrenchment செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு ஆட்குறைப்பு செய்யப்படும்போது தொழில் தகராறுகள் சட்டப்படி அவர்கள் பணியாற்றிய ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்களுக்கு இணையான ஊதியத்தை அவர்களுக்கு ஈட்டுத் தொகையாக அளிக்கப்பட வேண்டுமென்ற சட்டவிதிகளை முறியடித்துவிட்டு, கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்களுக்கு எட்டு நாட்களுக்கான ஊதியம்தான் ஈட்டுத் தொகையாக அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனாலும்கூட, இன்றைக்கு ஓராண்டுக்கு மேலாகியும்கூட, இந்த ஈட்டுத் தொகையோ அல்லது அவர்களுக்கான பணிக் கொடையோ, அவர்களுக்கான நிலுவை ஊதியத் தொகையோ இதுவரையில் வழங்கப்படவில்லை. ஆகவே மாண்புமிகு தொழிலாளர்





நலத் துறை அமைச்சரவர்கள் இதனையும் பரிவோடு ஏற்று செய்து முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாக இங்கே நமக்கெல்லாம் ஊட்டி தேயிலைத் தூள் வழங்கப்பட்டது. அதாவது தொழில் வணிகத் துறையின்கீழ் இந்தத் தொழிற் கூட்டுறவுத் தொழிற்சாலை வருகிறது. இதுபோன்ற பிரச்சினை அங்கேயும் இருக்கிறது. இந்தத் தொழிற்சாலையின் வழக்கறிஞர் என்ற முறையிலே அங்கிருக்கிற சில பிரச்சினைகள் எனக்கு நன்றாகத் தெரியும். அதாவது இந்தத் தொழிற்சாலைகளில் கன்வேயர் முறையைப் புகுத்தி, நவீனமயமாக்குகிற காரணத்தினாலே, அங்கே நிதிச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய காரணத்தாலும், அங்கிருந்த தொழிலாளர்கள் பலர் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் பணியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டனர். ஆனால் அந்தத் தொழிலாளர்களுக்கு, சற்றேறக்குறைய இரண்டு ஆண்டுகள் முடிந்த பிறகும், அந்த ஓய்வூதியத் திட்டத்தின் பயன்கள் எதுவுமே இன்றுவரையில் அவர்களுக்குச் சென்று சேரவில்லை. ஆகவே அவர்களுக்கும் அந்தப் பயன்களை உடனடியாக அளிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் சார்பாக ஒரு கோரிக்கை. அதாவது பூந்தமல்லியிலுள்ள இந்திய உணவுக் கழகத்திலே S.C./S.T. சங்கத்தைச் சேர்ந்த 70 பொறுப்பாளர்கள் வேண்டுமென்றே ஒரு உள்நோக்கத்தோடு வெகு தூரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். இதனால் அவசரகால நிலைகூட அங்கே பிரகடனம் செய்யப்பட்டது. ஆனாலும்கூட, இதற்கு ஒரு சுமுகமான நடவடிக்கையைக்கூட இதுவரையில் அங்கே எடுக்கவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அந்தத் தொழிலாளர்களுக்கு இங்கேயே தொடர்ந்து பணியாற்றும் வகையிலே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு நீலகிரி சட்டமன்ற உறுப்பினர் ராஜு அவர்கள் சார்பாக ஒரு கோரிக்கை. அதாவது நீலகிரி மாவட்டம், ஊட்டி தாலுகாவில் Emerald Valley Estate–ல் உள்ள 131 தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணி, சம்பளம் கொடுக்காமல் இருக்கும் எஸ்டேட் நிருவாகம், அவர்களுக்கு சம்பளம் மற்றும் நிரந்தரப் பணியை அளிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதையும் கனிவோடு பரிசீலனை செய்ய

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஏற்கெனவே நான் சொன்னேன், தொழிலாளர்களுக்கு தொழில் தகராறுகள் சட்டம் என்பது அவர்களுக்கு இயற்கையான பாதுகாப்பு என்று சொன்னேன். அந்த இயற்கையான பாதுகாப்பையும் மீறி கோவையிலுள்ள பஞ்சாலையில் ஒரு மாபாதகம் இழைக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்தத் தொழிற்சாலையில்–அந்த பஞ்சாலையில் சற்றேறக்குறைய 200 நிரந்தரத் தொழிலாளர்களும், 100–க்கும் மேற்பட்ட தற்காலிக தொழிலாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அவர்களை எப்படியாகிலும் பணியிலிருந்து நீக்கம் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு, Unfair labour practice என்று சொல்லப்படுகிற பல்வேறு தொழில் விரோதச் செயல்களில் ஈடுபட்டதோடு, இறுதியாக lock-out என்ற நாடகத்தையும் அரங்கேற்றம் செய்து, அதற்கும் மேலே அந்த ஆலையை எந்தக் காலத்திலும் மீண்டும் இயக்க முடியாது என்று சொல்லி, அவர்களை அச்சுறுத்தி, மிரட்டி, சட்டத்திற்குப் புறம்பாக ஒரு 18(1) settlement–ல் அவர்களிடம் கையெழுத்திட்டு, தொழிலாளர்கள் அனைவரையுமே பலவந்தமாக வெளியேற்றிவிட்டு, அவர்களுக்கு சட்டரீதியாக அளிக்கப்பட வேண்டிய ஆட்குறைப்புக்கான ஈட்டுத் தொகையையும் இன்றுவரையில் அந்த நிருவாகம் அளிக்கவில்லை. ஓராண்டுக்குள் அளிப்பதாக உத்தரவாதம் அளித்தார்கள். அதையும் நிறைவேற்றவில்லை. (மணியடிக்கப்பெற்றது) அவர்கள்பொருட்டு, கிட்டத்தட்ட 125 தொழிலாளர்களுக்காக தொழிலாளர் நீதிமன்றத்திலே இன்றைக்கு வழக்கு போட்டிருக்கிறேன். இதைவிட வேடிக்கையான விஷயம் என்னவென்றால்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள். ஏனென்றால் போன பசி திரும்ப வரும்போல் இருக்கிறதே?

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஏனென்றால் அவர்களை வெளியே அனுப்பிவிட்டு அந்த நிருவாகம் மீண்டும் அந்த ஆலையை இயக்கத் தொடங்கியுள்ளது. அதாவது இந்த மாதிரி retrench செய்யும் காலத்தில், இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக மீண்டும் வேலைவாய்ப்பு ஏற்படுமேயானால், அந்த retrench செய்யப்பட்ட, ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று தொழில் தகராறுகள் சட்டம் விரிவாகக் குறிப்பிடுகிறது. ஆனால் அதற்கு மாறாக அந்த நிருவாகம் செயல்பட்டிருக்கிறது. அதற்காக தொழிற் சங்கங்கள் தொழிலாளர் துறையை அணுகி மீண்டும் ஒரு 2(ஏ) மனுவைக் கொடுத்து, அங்கே எழுப்ப வேண்டுமென்று கேட்டபோது,



அந்த மனுவை தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். மனுவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டதற்கு அவர் சொல்லும் காரணம், ஏற்கெனவே lock out issue பற்றி நாங்கள் 12(4) report அனுப்பிவிட்டோம், ஆகவே இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார். ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, இதனைப் பரிவோடு பரிசீலனை செய்து தொழிலாளர் நலத் துறைக்கு உரிய ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். அந்த மனுவை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு மீண்டும் வேலை அளிக்கவோ அல்லது நிவாரணத் தொகையைப் பெற்றுத் தருவதற்கோ நீங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசாற்றல் மிக்க பல தலைவர்கள் உண்டு. பேசாத தலைவர்களும் பலபேர் உண்டு. நீச்சலிலே தேர்ச்சி பெற்ற மீனைப்போல, நிர்வாகத் திறமை பெற்ற தலைவர் உண்டு. மாச்சர்யம் மிகுந்திருக்கும் இந்த மண்ணில் மனிதாபிமானம் மிக்க தலைவர் என்றால் அது பூச்சொரிந்து தொழத்தக்க புகழ் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) அளவிற்கு அவராலே அடையாளம் காட்டப்பட்டு, அரியதாய், பெரியதாய், வணக்கத்திற்குரியதாய், எளியதாய், இனியதாய், எங்குமே நிறைந்ததாய், மலர்வதாய், கனிவதாய், மனதிலே நிறைந்ததாய், வளர்வதாய், தொழிலாளர்கள் வாழ்வதாய், வந்த தாய், எங்கள் அன்புத் தாய், டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய அரவணைப்பால் இந்த மன்றத்திலே நின்று பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். எனக்கும் இதுதான் கன்னிப் பேச்சு என்பதால் நானும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பேசுகிறபோது இடையிலே குறுக்கிடவில்லை. என்னை இந்த அளவிற்கு உயர்த்தி மண்ணாய்க் கிடந்த என்னை மனிதனாக்கிய அன்புத் தாயாம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் பணிவான நன்றியினை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. அ. அன்வர் ராஜா] [2001 செப்டம்பர் 3

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்று, குடிநீர் வழங்குவதிலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முன்னுரிமை, ஏரிகள் தூர் வாருவதிலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முன்னுரிமை, சாலைகள் அமைப்பதிலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முன்னுரிமை என்று எல்லாவற்றையும் தானே எடுத்துக்கொண்டு, எங்கள் மாவட்டத்தை ஒரு நவலைக் குழந்தையைப் பார்க்கின்ற தாயைப் போலப் பார்த்து, உதவி வருகின்ற தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், மாவட்ட மக்களின் சார்பிலும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தொடக்கத்திலேயே ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றையதினம் காலையில் தொழிலாளர் சம்பந்தப்பட்டப் பிரச்சினை என்பதால், பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு இதைத் தெரிவிக்கின்றேன். சிமெண்ட் விலையைக் குறைத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு அகில இந்திய கட்டடத் தொழிலாளர்கள் மத்தியச் சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் ரூ.190-க்கு விற்று வந்த விலையை ரூ.130 ஆகக் குறைத்து, கட்டடத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த முதல்வர் அவர்களுக்கு சங்கம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது என்று (குறுக்கீடு) ரூ.110/- தானாகக் குறைகிறது. ரோட்டிலே சலம்பல் செய்துகொண்டிருக்கிற ஒருவன் வேகமாகக் கத்திக்கொண்டு இருப்பான். எவனாவது ஒருவன் பக்கத்திலே வந்து 'போலீஸ்' என்றால் அவனுக்கு போதை தானாகத் தெளிந்துவிடும். அதைப்போல, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே அமர்ந்த உடனேயே தானாக விலை குறைய ஆரம்பித்து இருக்கிறது. தானாக விலை குறைகிறது என்பதுதான் இந்த நாட்டில் நடந்துகொண்டிருக்கிற உண்மையான நிகழ்ச்சி என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

இங்கே பேசிய பல உறுப்பினர்களும் பல பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை. இதைப்பற்றி நான் சொல்ல வேண்டும்.



2001 செப்டம்பர் 3] [திரு. அ. அன்வர் ராஜா]

ஏனென்றால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் சிறப்பான
அணுகுமுறையால் ஏறத்தாழ இப்போது இந்தப் பிரச்சினை பூதாகரமாக
எழவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோதே இந்தப்
பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருந்திருக்கிறது. அதாவது, நடராஜன்
அவர்களுடைய தீர்வம், நடராஜன் அவார்ட் காலாவதியான
31-12-1998-லிருந்து ஏறத்தாழ 27 மாதங்கள் திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி இருக்கிறபோது பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வைத்
தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். அன்றைக்கு இருந்த அரசாங்கம்,
அன்றைக்கு இருந்த முதலமைச்சர், அன்றைக்கு இருந்த அமைச்சர்
பெருமக்கள் யாரும் அவர்கள் பக்கமே திரும்பவில்லை. அதைப்பற்றி
பேசவில்லை. அதைப்பற்றி நினைக்கவில்லை. 27 மாதங்களுக்குப் பிறகு
இறுதியாக பஞ்சாலைத் தொழிலாளர்கள் எல்லாம், நாங்கள் போராட்டம்
நடத்தப்போகிறோம் என்று சொன்னதற்குப் பிறகுதான் இந்த ஆண்டு
16-1-2001-லிருந்து வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று அறிவிப்பு
தந்ததற்குப் பிறகு 16-3-2001-ல் பேச்சு வார்த்தையைத் தொடங்கினார்கள்.
அதுவும் யார்? C.O.L., Commissioner of Labour மட்டத்திலே பேச்சு
வார்த்தை தொடங்கியது. அதற்குப் பிறகு உச்சகட்டத்தை அடைந்ததற்குப்
பிறகு, இரண்டு முறை இந்த மாமன்றத்திலே பேசி இப்போது வெளியிலே
சென்றிருக்கிற நம்முடைய முன்னாள் அமைச்சர் பொன்முடி அவர்கள்
அதிலே கலந்துகொண்டு பேசி, கடைசியில் தேர்தல் வருகிறது என்ற
காரணத்திற்காக, 10-பி தருவதைப்பற்றிப் பரிசீலிக்கிறோம் என்று அவர்கள்
சொல்லி, தேர்தல் கமிஷனுக்கு எழுதி, 10-பி-யை வரவழைத்து நாங்கள்
தருவோம், அதனால் தேர்தல் கமிஷனுக்கு எழுதியிருக்கிறோம் என்று
பிரச்சினையை ஒதுக்கிவிட்டார்கள். இது கடந்த ஆட்சியிலே நடந்தது.
ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்
கொண்டதற்குப் பிறகு, உடனடியாக அந்த விஷயத்திலே கவனம்
எடுத்துக்கொள்ளுங்கள் என்று எங்களுக்கு அறிவுரை வழங்கியதற்குப் பிறகு,
இதுவரை என்ன உங்கள் சாதனை என்று கேட்டாரே, நான் அவர்களுக்குப்
பதில் சொல்ல விரும்புகிறேன்—அவர் இங்கு இல்லை, அது அவருக்கு
இல்லை, அது என்னுடைய துரதிருஷ்டம், பதில் சொல்லி கேட்பதற்கு
அவர் இல்லை—இதுவரை இந்தப் பஞ்சாலைகள் வேலைநிறுத்தப்
சம்பந்தமாக கடந்த 100 நாட்களுக்குள்ளாக 8 முறை பேச்சு வார்த்தைகளை
இந்த அரசாங்கம் நடத்தியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றிலேயே எந்தக்
காலத்திலும் இதற்கு முன்னர் இவ்வளவு விரைவாகப் பணிகள்

நடந்ததில்லை. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் ஜூன் மாதம் 7 ஆம் தேதி, 'முதல் பேச்சுவார்த்தை'. Tripartite Meeting. அதற்குப் பிறகு இரு தரப்பினரும் கேட்டுக் கொண்டதை ஏற்றுக்கொண்டு நிருவாகத்திற்குத் தனியாக, Trade Union–க்குத் தனியாக என்று இரண்டு பேருக்குமாக, 20 ஆம் தேதி நிருவாகத்தோடு பேச்சு வார்த்தை, ஜூன் மாதம் 20 ஆம் தேதி. 21 ஆம் தேதி Trade Union–உடன் பேச்சு வார்த்தை. அதற்குப் பிறகு 8–8–2001–ல் கடந்த மாதம் 8 ஆம் தேதி ஒரு பேச்சு வார்த்தை. அதற்குப் பிறகு 18 ஆம் தேதி, 19 ஆம் தேதி, கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலே வைத்து இரண்டு நாட்கள் முழுமையாக பேச்சு வார்த்தை. இதற்கிடையில் Trade Union-கள் 20 ஆம் தேதி அவர்கள் போராட்டத்திலே குதித்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்படி நான் தொலைபேசியிலே, Joint Action Committee–யினுடைய தலைவர்களோடு பேசி, 3 நாட்கள் தொடர்ந்து பேசி அந்தப் போராட்டம் இன்று வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து கடந்த 28 ஆம் தேதி, இங்கே சென்னை, கோட்டையிலே பேச்சு வார்த்தை நடந்தது. அதில் தலைமைச் செயலாளர் அவர்கள் மற்றும் அனைத்து உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். Textile Minister-ம் கலந்து கொண்டார். எல்லோருமாகச் சேர்ந்து பேசி சில அறிவுரைகளை அரசின் சார்பிலே நிருவாகத் தரப்பிற்கு வழங்கியிருக்கிறோம். இந்த அறிவுரைகள் சரிதான், இது ஏற்புடையதுதான் என்று தொழிற்சங்கத்தினுடைய, Trade Union தலைவர்களும் ஓரளவு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அளவு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எவ்வளவு தீவிரம் காட்டுகிறது என்பதை அருள்கூர்ந்து உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் வருகிற 6 ஆம் தேதி அந்த நிலைகளை எல்லாம் நீங்கள் தெரிந்துகொண்டு வர வேண்டும் என்று அவர்களுக்கு நாங்கள் தவணை கொடுத்திருக்கிறோம். 6 ஆம் தேதி மீண்டும் இறுதி கட்டப் பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது. இதை நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், பிரச்சினைகள்மீது முடிவு எடுக்க வேண்டும் என்பதில், பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எவவளவு ஆழமாக பிரச்சினைகளைக் கையாண்டிருக்கிறது என்பதை கடந்த 100, 110 நாட்களுக்குள் எவ்வளவு வேகமாக பிரச்சினைகளை நாங்கள் அணுகியிருக்கிறோம் என்பதை அருள்கூர்ந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுடைய கவனத்திற்கு நான் எடுத்துவைக்க விரும்புகிறேன்.



அன்பிற்குரிய சகோதரர் கருணாகரன் அவர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். தமிழ்நாட்டிலே மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும் என்றார்கள். 177 நிறுவனங்கள் மூடிக் கிடக்கின்றன. இவை எதனால் மூடிக் கிடக்கின்றன என்பதை அனைவரும் அறிவார்கள். பங்குத் தகராறு இதிலே காரணமாக இருக்கிறது. நிருவாகத்தின் கோளாறு காரணமாக இருக்கிறது. அந்த நிருவாகத்தை நடத்துவதற்கு நிதி நெருக்கடி காரணமாக ஆலையை மூடிவிடுகிறார்கள். தொழிலில் ஏற்பட்டுள்ள கடுமையான போட்டி காரணமாக இருக்கிறது. வெளிநாட்டுப் பொருட்களையெல்லாம் இங்கே இறக்குமதி செய்வதற்கு இறக்குமதியைத் திறந்து விட்டுவிட்டார்கள். இந்த ஆண்டு 714 பொருட்களுக்கு இறக்குமதிச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு 715 பொருட்களுக்கு இறக்குமதிச் சலுகை வழங்கப்படவிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் மத்தியிலே இருக்கிற வர்த்தகத் துறை அமைச்சர் அனுமதி கொடுக்கிறார். மிக எளிதாக இறக்குமதியை அனுமதித்தவர்களிடமே கேட்டுவிடலாம். கல்பனா லேம்ப்ஸ் என்ற நிறுவனத்தை மூடினார்கள் என்று நம்முடைய சகோதரர் சொன்னார். அதன் உரிமையாளர், தொழிலாளர்களை அழைத்துப் பேசியபோது, அந்த உரிமையாளர் சொல்கிறார், என்னால் இவ்வளவு தொழிலாளர்களை வைத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் இவர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாது, சந்தையில் போட்டி அதிகமாகிவிட்டது, அதை எங்களால் சமாளிக்க முடியவில்லை என்கிறார். நான் இன்னுமொன்றைத் தெரிவிக்கிறேன். ANCHOR Switch என்ற ஒன்று இருக்கிறதே, அந்த Switch அங்குதான் தயார் செய்யப்படுகிறது. அந்த ANCHOR Switch இன்று மார்க்கெட்டிலே தாக்குப் பிடிக்க முடியவில்லை என்கிற நிலைமை இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கச்சாப் பொருட்களின் பற்றாக்குறை இருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட காரணங்களால் பெரும்பாலான தொழிற்சாலைகள் மூடப் பட்டிருக்கின்றன. மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளினால் தொழிலாளிகள் வேலை இழக்கிறார்கள். அப்படி வேலை இழக்கின்ற தொழிலாளர்களுக்கு மாதம் 250 ரூபாய் ஊதியம் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படும் ஊதியத்தை எவ்வளவு அதிகமாக, எவ்வளவு வேகமாக வழங்க முடியுமோ அவ்வளவு வேகமாக இந்த அரசாங்கம் வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதுவரை 8,951 பேர்களுக்கு ரூ.2,34,44,750/– ஊதியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

அதோடு மூடியிருக்கிற ஆலைகளைத் திறப்பதற்கு என்ன செய்யலாம் என்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனைக்கிணங்க கடந்த 6–6–2001 ஆம் நாள் ஒரு Tripartite Meeting நடத்தப்பட்டது. அதிலே எல்லாக் கருத்துகளும் கேட்கப்பட்டன. எல்லாப் பிரச்சினைகளும் பேசப்பட்டன. ஒவ்வோர் ஆலை மூடப்பட்டிருப்பதற்கும் தனித் தனிப் பிரச்சினைகள் காரணமாக இருக்கின்றன. எனவே 177 ஆலைகளுக்கும் என்ன பிரச்சினைகள் இருக்கின்றன, எப்படி இவற்றைத் திறக்கலாம், அதற்கு அரசின் சார்பில் என்னென்ன தேவைப்படுகிறது என்பதையெல்லாம் ஆராய்வதற்கு நாங்கள் துறை வாரியாக சில ஆலோசனைகளை வழங்கி அது நடைமுறையிலே இருக்கிறது. இப்போது அறிக்கை கேட்டிருக்கிறோம். அது நடைமுறையிலே இருக்கிறது என்பதை நான் இங்கே இருக்கின்ற பெருமக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இருப்பினும், இப்போது எங்களுடைய கவனத்திற்கு வந்த ஓரிரு தொழிற்சாலைகள்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். Udumalpet-Arunachaleswarar Spinning Mills, அதிலே முதலாளி மாறி இருப்பதால் அது மூடப்பட்டிருக்கிறது. எனவே அந்த முதலாளியை Electricity Board-க்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை மட்டும் செலுத்தச் சொன்னால், ஆலையைத் திறந்துவிடலாம். உடனே நீங்கள் அந்தக் கட்டணத்தைச் செலுத்துங்கள் என்று அவருக்கு அறிவுறுத்தி, ஆலையைத் திறப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

நான் ஏற்கெனவே Dunlop Tyre–ஐப்பற்றிச் சொன்னேன். அதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். நான் இதையெல்லாம் எதற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன் என்றால், இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம், இப்படிப்பட்ட அணுகுமுறையெல்லாம், கடந்த ஆட்சிக் காலத்தில் இல்லாது போனதால்தான் 103 தொழிற்சாலைகள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இழுத்து மூடப்பட்டன என்பதை அருள்கூர்ந்து உங்களுடைய சிந்தனைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படியெல்லாம் தொழிற்சாலைகளை மூடியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். சரி, இதற்கு என்ன செய்வது, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு கருணாகரன் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கண்ணன் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

ஆக்கபூர்வமாக சிந்திப்பதிலே நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவு முனைப்பு காட்டுகிறார்கள்



என்பதை நான் ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்குகிறேன். இப்போது ஒரு புதிய திட்டத்தை அதற்காக உருவாக்கி அதற்கு அனுமதியும் தந்திருக்கிறார்கள் என்பதை நான் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலேகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. வேலையிழந்த தொழிலாளர்களுக்குப் பல்வகை தொழிற் பிரிவுகளில் "Training in Multi trades" பயிற்சி அளித்து விரைவான மறுவாழ்வை அளிப்பது என்று ஆளுநர் உரையிலே சொல்லப் பட்டிருக்கிறது. அப்படி Multi trades-ல் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது, பயிற்சி அளித்து அவர்களுக்கு அந்தப் பயிற்சிக்குப் பிறகு அவர்களாகவே தொழில் செய்து பிழைத்துக்கொள்ள வழிவகை காண்பது என்கின்ற வகையில் இப்போது அந்தப் பயிற்சி அளிப்பதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மூடப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து வேலையிழந்தவர்கள் மற்றும் ஆட்குறைப்பு செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும். பசிக்கிறது என்று ஒருவன் கேட்கிறான் என்றால், அவனுக்கு ஒரு மீனைப் பொறித்துக் கொடுத்தால் அவன் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவான். அதோடு அவனுடைய பசி அடங்கிவிடும். ஆனால் பிரச்சினை தீர்ந்துவிடாது. மீனைப் பொறித்துத் தருவது போன்றதுதான் 250 ரூபாய் மானியம் என்பது. பசிக்கிறது என்கின்றவனுக்கு மீனைக் கொடுப்பதைப்போல, 250 ரூபாய் மானியம் கொடுக்கிறோம். ஆனால் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்போது மேற்கொண்டு என்ன செய்கிறார்கள் என்றால், அந்த மீனை எப்படிப் பிடிப்பது என்று கற்றுக் கொடுக்கிறார்கள். அதுதான் அவனுக்கு நிரந்தரமான நிவாரணமாக இருக்கும் என்பதற்காக. (மேசையைத் தட்டும் ஒலி) தூண்டிலும் தருகிறார்கள். அதிலே எப்படி மீனைப் பிடிக்க வேண்டும் என்று கற்றும் கொடுக்கிறார்கள். அதுதான் இந்தத் திட்டம் என்பதை நான் அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குரிய பயிற்சிக் கல்வியை அவர்களுக்குத் தருகிறார்கள். எப்படி வேலை செய்ய வேண்டும்? பட்டுக்கோட்டை சொன்னான் அல்லவா;

'துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேண்டும்,
சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேண்டும்,
வம்பு செய்யும் குணமிருந்தால் விட்டிட வேண்டும் – அறிவு
முதிர்ச்சியிலே வான்முகட்டைத் தொட்டிட வேண்டும்'

என்றான். (மேசையைத் தட்டும் ஒலி) துன்பத்தைப் போக்கும் கல்வி அவனுக்குக் கற்றுத் தரப்படுகிறது. இதற்காக ஆண்டொன்றுக்கு 400 பேர்களுக்கு பயிற்சி தரப்படுகிறது. நபர் ஒருவருக்கு 1,500 ரூபாய் இதற்காகச்

செலவிடப்படுவதற்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

மின் இணைப்புத் தருதல் மற்றும் வீட்டு மின் தளவாடங்கள் பழுது
பார்த்தல், குளிர்சாதனப் பெட்டி, தட்ப வெப்ப நிலை கட்டுப்படுத்தல்,
பெட்டி பழுதுபார்த்தல் மற்றும் எளிய மின் கம்பி வேலையாள், தச்சர்,
குழாய் இணைப்பவர் மற்றும் கட்டடம் கட்டுபவர் (Plumber and
Construction Worker) தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி
மற்றும் V.C.R. பழுதுபார்த்தல் போன்ற இந்தப் பணிகளுக்கு தொழிற்
பயிற்சியின் மூலம் I.T.I. மூலமாக அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது.
பிரத்யேகமாக வழங்கப்படுகிறது. இதற்காக இந்த ஆண்டு தமிழ்நாட்டிலே
5 மையங்களிலே இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது. 1. கிண்டி, சென்னை
2. அம்பத்தூர், சென்னை 3. சேலம், 4. கோவை, 5. இராமநாதபுரம் ஆகிய
இடங்களில் இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு இதய
தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி) இதனால் என்னவொரு பெரிய பிரளயம்
ஏற்பட்டுவிடப் போகிறது, 400 பேர்களுக்குப் பயிற்சி தந்தால் என்ன
ஆகிவிடப் போகிறது என்று கருத வேண்டாம். It is a good beginning.
இது ஒரு அருமையான சிந்தனை. இது ஒரு அருமையான நோக்கு
என்பதுதான் முக்கியமாக நான் கருத வேண்டுமென்று நாம்
கேட்டுக்கொள்கிறேன். "Even a thousand miles journey will also start with a
single step" என்று சொல்வார்கள். ஓராயிரம் மைல் பயணமாக
இருந்தாலும் அந்தப் பயணம் ஒரு மனிதனுடைய முதல் அடியிலேதான்
தொடங்குகிறது என்பார்களே, அதைப் போல ஒரு அருமையான
சிந்தனையோடு இந்தப் பகுதியிலே வேலையிழந்த, பாதிக்கப்பட்ட
தொழிலாளர்களுடைய வாழ்க்கை முன்னேற்றம் பெறுவதற்கு நம்முடைய
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள்
என்பதற்கு இது ஒரு அருமையான எடுத்துக்காட்டு என்பதை நான்
அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-05*

உடலுழைப்புத் தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். அமைப்பு
சாரா தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். நான் அன்போடு
தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அமைப்பு சாராத் தொழிலாளர்களைப்பற்றி



முதன்முதல் திட்டம் தீட்டியவர் நம்முடைய தமிழக முதல்வர், மாண்புமிகு
இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை
நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். 1–11–1994 அன்று கட்டடத்
தொழிலாளர்களுக்கென்று தனி வாரியத்தினை நம்முடைய அம்மா
அவர்கள் தொடங்கினார்கள். இத்தனை கோடி அதிலே பணம் இருக்கிறது
என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொன்னார்கள்.
அத்தனை கோடி பணம் இருப்பதற்கு பொன்முடி காரணம் அல்ல,
மாண்புமிகு அம்மா அவர்கள்தான் காரணம். ஒரு திட்டத்தைத்
தொடங்குகிறபோது, அந்தத் திட்டத்திற்குப் பணம் எப்படிச் சேர்ப்பது,
எங்கிருந்து பணம் வரும் என்று ஆராய்ந்து அந்தத் திட்டத்தை அவர்கள்
தொடங்கிய காரணத்தால் அந்தக் கட்டடத் தொழிலாளர்கள்
வாரியத்தை இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எப்படியாவது
ஊனப்படுத்தி விடவேண்டுமென்று எவ்வளவோ முயன்றும் அது
முடியாமல் தோற்றுப் போனார்கள். அதுதான் உண்மை. எனவேதான்,
இன்று கோடி கோடியாக பணம் அதிலே சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது
என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேறு
எதுவும் காரணம் இல்லை.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத்
திட்டத்தைத் தொடங்கினார்கள். அந்தத் திட்டத்தை இவர்களால்
ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள் மிகுந்த முன்யோசனையோடு திட்டமிட்டு யாராலும்
ஒன்றும் செய்ய முடியாத அளவிற்குத் திட்டமிட்டு, சத்துணவுத்
திட்டத்தைத் தொடங்கினார்கள். இவர்கள் முட்டை கொடுப்போம்
என்றார்கள். முட்டையிலே முத்திரையைக்கூடக் குத்தினார்கள். பல்வேறு
விதமான ஜால வேலைகளையெல்லாம் செய்து பார்த்தார்கள். இறுதிவரை
முடியவில்லை. அதைப் போலத்தான் உயரிய சிந்தனையோடு,
தொலைநோக்குப் பார்வையோடு தீட்டப்படுகிற எந்தத் திட்டமாக
இருந்தாலும் அந்தத் திட்டத்தை ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால்
அதற்கு என்று ஒரு குழுவை–அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கென்று
ஒரு தனி வாரியத்தை வைக்கலாமா, வாரியங்களைப் பிரிக்கலாமா
என்றெல்லாம் ஆராய்வதற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம்
நியமித்தது. இரண்டு குழுக்கள் போடப்பட்டன. இரண்டு குழுக்கள்
போட்டிருக்கிறார்கள். அதில் employees side-லிருந்தும், employer side-
லிருந்தும் உறுப்பினர்கள் போடப்பட்டிருக்கின்றனர். தொழிற்சங்கத்
தலைவர்கள் எல்லாம் அந்தக் குழுவிலே இருந்திருக்கிறார்கள். இரண்டு

[திரு. அ. அன்வர் ராஜா] [2001 செப்டம்பர் 3

குழுக்கள் போடப்பட்டு, அந்த இரண்டு குழுக்களும் தமிழ்நாடு முழுவதும், கேரளா முழுவதும் போய் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். இந்த வாரியம் எப்படிச் செயல்பட வேண்டும் என்கிற கருத்தை அவர்கள் நம்முடைய அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை தயவுசெய்து நான் இங்கே படிக்கிறேன். "முந்தைய தி.மு.க அரசு 27–8–1997 ஆம் நாள் இரண்டு குழுக்கள் அமைத்து அரசாணை பிறப்பித்தது. அந்தக் குழுக்கள் தமிழகம் மற்றும் கேரள மாநிலத்துக்குச் சுற்றுப் பயணம் செய்து நிலைமையைக் கண்டறிந்து அதுபோன்ற பல வாரியங்களைத் தமிழகத்தில் அமைத்தால், அது நிருவாக நடைமுறைக்கு சிக்கல்களுக்கும், அதிகப்படியான செலவினங்களுக்கும் வழிவகுக்கும் என்று கண்டறிந்தது. சென்னையில் வாரியத்தின் தலைமை அலுவலகத்தையும், திருச்சி, சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களையும் அமைக்கலாம்" எனவும் பரிந்துரைத்தது. இப்படி பல வாரியங்களை அமைக்கக் கூடாது என்று அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அந்தக் குழுவில் நம்முடைய மறைந்த உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற்சங்கத் தலைவர் வை. பெருமாள் கூட இடம் பெற்றிருந்தார். எல்லோரும் இடம் பெற்றிருக்கிறார்கள். எல்லோரும் அறிக்கை தந்திருக்கிறார்கள். பல வாரியங்கள் அமைக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நிர்வாக ரீதியாக அது தவறு என்றும் சொல்லியிருக்கிறார்கள். தவறு என்று சொன்னதோடு மட்டுமல்ல, இப்படி அதையெல்லாம் மீறித்தான் இத்தனை வாரியங்களையும் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அமைத்திருக்கிறது. அதை மீறி, தன்னை விட்டால், தொழிலாளர்களின் நலன் பேண வேறு ஆளில்லை என்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி 9 வாரியங்களை, ஆட்டோ ரிக்ஷா, டாக்சி ஓட்டுநர், சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர், பனை மரம் ஏறுவோர், கைவினைஞர்கள், தையல் கலைஞர்கள், கைத்தறிப் பட்டு, காலணி தைப்போர், ஓவியர்கள் என 9 வாரியங்கள் தொடங்கப் பட்டிருக்கின்றன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்த 9 வாரியங்களுமே பெயர்தான் மாறியிருக்கிறதே தவிர, அமைப்பு சாரா அந்த அமைப்பிலேயேதான் இந்த வாரியங்கள் எல்லாம் இருக்கின்றன.

இன்றுகூட இந்த வாரியங்களில் இருக்கின்ற beneficiaries–க்கு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வாரியத்திலிருந்துதான் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் ஒரு வாரியத்தில் எத்தனை உறுப்பினர்கள் தெரியுமா? மொத்தமுள்ள 5,79,864 உறுப்பினர்களைக் கொண்ட உடல்



2001 செப்டம்பர் 3] [திரு. அ. அன்வர் ராஜா]

உழைப்புத் தொழிலாளர்கள் வாரியத்தில், அவர்களால் அமைக்கப்பட்ட சில வாரியங்களை நான் சொல்கிறேன். காலணி தைப்பவர் நல வாரிய உறுப்பினர்கள் 536 பேர். ஓவியர்கள் நல வாரிய உறுப்பினர்கள் 254 பேர் இருக்கிறார்கள். கைத்தறிப் பட்டு நல வாரியத்தில் 1368 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு வாரியத்திலும் குறைந்த பேர்கள்தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அந்த recommendation அவ்வளவையும் அவர்கள் ஆய்ந்து சொல்லிய, தி.மு.க.–வைச் சேர்ந்தவர்களே ஆய்ந்து சொல்லிய அந்த recommendation-களை எல்லாம் மீறி இந்த வாரியம் தொடங்கப்பட்ட காரணத்தினால்தான் இன்று வாரியம் செயல்படாத நிலையிலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1-10*

தி.மு.க. தலைவர், முன்னாள் முதல்வர் ஒரு கோடி ரூபாய் தந்தார் என்று சொன்னார்கள். ஒரு கோடி ரூபாயைத் தந்து அந்த ஒரு கோடி ரூபாயை வாரியம் பெறமுடியாமல் பல குளறுபடியான G.O.–க்களையும் முன்னுக்குப்பின் முரணாக மாற்றி, மாற்றிப் போட்டுவிட்டுப் போய்விட்டார். இந்த அமைப்பு சாரா வாரியம் அந்தப் பணத்தைப் பெறமுடியவில்லை. ஒவ்வொரு வாரியத்திற்கும் தனியாக நிதி இருக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அப்படி சட்டம் இருக்கிறபோது அமைப்பு சாரா வாரியத்தையும் சேர்த்து இரண்டு நிதிகளையும் ஒன்று சேர்த்து மொத்தமாக 11 சதவிகிதம் interest தருகிற வங்கியிலே deposit செய்யுங்கள் என்ற உத்தரவு இருக்கிறது. அந்த உத்தரவின் கடைசியில் அமைப்பு சாரா வாரியம் என்ற பெயரே இல்லாமல் இருக்கிறது. யார் அந்தப் பணத்தை வாங்குவது, எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியவில்லை என்ற நிலைதான் அந்த உத்தரவிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவற்றையெல்லாம் சரி செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது இங்கே பேசிய பொன்முடி அவர்கள், இந்த 100 நாட்களில் இந்த வாரியத்தின் மூலமாக நீங்கள் தந்த உதவிகள் என்ன என்று கேட்டார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இந்த 100 நாட்களில் அமைப்பு சாரா வாரியங்களின் மூலம் 386 பயனாளிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

6 இலட்சத்து 85 ஆயிரத்து 500 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இதற்கு முன்னால் அவர்கள் மொத்த காலத்திலும், அவர்களுடைய ஆட்சிக் காலம் முழுவதிலும் அவர்கள் எவ்வளவு பேருக்கு உதவித் தொகை வழங்கியிருக்கிறார்கள் என்றால், வெறும் 53 பேருக்குத்தான். வெறும் 53 பேருக்கு ரூ.2,06,000 இதுவரை வழங்கியிருக்கிறார்கள். 1999–ல் அமைப்பு சாரா வாரியம் உருவாக்கிய அந்தத் தொடக்க காலத்திலிருந்து இன்று வரை அவர்களால் வழங்கப்பட்டிருக்கிற தொகை ரூபாய் 2,06,000. நான் இடைமறித்துச் சொல்லியிருப்பேன். இடைமறித்துச் சொன்னால் சரியாக வராது. கடைசியாகச் சொல்வோம் என்றுதான் பேசாமல் இருந்தேன். இவ்வளவு தொகைகளை—ரூ.6,85,500—யை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கம் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதை அருள்கூர்ந்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடையாள அட்டைகளைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய சகோதரர்கள் பேசினார்கள். அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எல்லா இடங்களுக்கும் அடையாள அட்டைகள் அனுப்பப்பட்டுவிட்டன. அடையாள அட்டைகள் எல்லா இடங்களுக்கும் அனுப்பப்பட்டு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதோடு நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சில புதிய திட்டங்களை approve செய்திருக்கிறார்கள். அதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஓய்வூதியத் திட்டம். எல்லோரும் வரவேற்றுப் பேசினார்கள். அமைப்பு சாராத் தொழிலாளர்கள் என்பது பல இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள். அவர்களை ஒரு கட்டுக்கோப்பிலே கொண்டுவரவேண்டும். எவ்வளவு ஓய்வூதியம் தருகிறோம் என்பது முக்கியம் அல்ல. ஓய்வூதியம் இப்போது தொடங்கியிருக்கிறோம். இது மிக மிக, முக்கியமான ஒரு சரித்திரப் புகழ்வாய்ந்த நிகழ்ச்சி என்பதை நான் அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இதற்கு ஒன்றுமில்லை. 55 வயது – 1994 ஆம் ஆண்டு இந்த வாரியம் தொடங்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு 55 வயதைக் கடந்திருக்கிற ஒருவர் 2000–மாவது ஆண்டு 60 வயது முடிந்திருக்கும். 2000–2001, 2001–2002 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளில் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்களாக அவர்கள் ஆகிறார்கள். 5 ஆண்டுகள் உறுப்பினராக இருந்தால் போதும். 60 வயதைக் கடந்திருந்தால் போதும். அவர்களுக்கு





ஓய்வூதியம் வழங்கப்படும். அவர்கள் இயலாமல் இருந்தால்கூட ஓய்வூதியம் வழங்கப்படும். இந்தக் கணக்கின் அடிப்படையில், இந்த ஆண்டு மொத்தம் 966 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ரூ.23,18,400 இதற்காகச் செலவிடப்படுகிறது என்பதை நான் அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது ஒரு social security. அதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இப்போது ஒரு social security அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எனக்கு மிக மிக வேண்டிய ஒருவர், ஒரு வயதானவர், என்னுடைய நண்பர், என்னுடன் அரசியல் பேசிக்கொண்டிருப்பார். நான் அமைச்சரானவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தயவால் அமைச்சரானவுடன் என்னை வந்து பார்க்க வந்தார். பேசிக்கொண்டிருக்கிறபோது எப்படி இருக்கிறீர்கள்? உங்களுடைய பிள்ளைகள் கவனிக்கிறார்களா என்றெல்லாம் நான் கேட்டேன். அவருக்கு மகனும் இருக்கிறான், மகளும் இருக்கிறார்கள். எனக்குப் பெண்ணாலும் பிரயோஜனம் இல்லை, son–ஆலும் பிரயோஜனம் இல்லை என்று அவர் சொன்னார். பிறகு எதுதான் உங்களுக்குப் பிரயோஜனம் என்று கேட்டேன். பெண்ணும் இல்லை, son-னும் இல்லை. Pensionதான் பிரயோஜனம் என்று அவர் சொன்னார். ஆக பெண்ணால் தீர்க்க முடியாத பிரச்சினையை, அவர் son-ஆல் தீர்க்க முடியாத பிரச்சினையை Pension அவருக்குத் தீர்க்கிறது. பென்ஷனால் அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார். யாரைப்பற்றியும் அவர் கவலைப்படவில்லை. அவர் இப்படியே என்னிடம் சொன்னார். பென்ஷன்தான் என்னை வாழ வைக்கிறது என்றார். ஆக, அமைப்புக்குள்ளே வருகிற தொழிலாளர்களுக்குத்தான் பென்ஷன் உதவும் என்கிற நிலை மாறி, அமைப்பே இல்லாமல் ஏறத்தாழ கோடி பேருக்கு மேல் இந்தத் தமிழகத்திலே தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே, அந்தத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பு, social security தர வேண்டுமென்று கருதுகிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசைப் பாராட்ட வேண்டாமா என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது சரித்திரச் சாதனை. 200 ரூபாய் என்பது நாளை புரட்சித் தலைவி அவர்கள் நினைத்துவிட்டால் உயரலாம். எவ்வளவோ உயருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இனிமேல் உயரத்தான் போகிறது. ஆக, அந்த அருமையான திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நமக்குத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1—15*

அதுமட்டுமா? இங்கே இருக்கிற தமிழனுக்கு பாதுகாப்பு கொடுத்தால் மட்டும் போதாது என உணர்ந்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சிந்தனை, எப்படியெல்லாம் போகிறது என்பதற்கு அதை உங்களுக்குக் காட்டுவதற்கு இன்னொரு திட்டத்தையும் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழன் இந்த உலகத்திலே இருக்கின்ற எல்லா இடங்களுக்கும் போனான். இலங்கையில் அவன் படுகிற பாட்டை நாம் பார்க்கிறோம். இலங்கைக்குப் போனான்; பர்மாவுக்குப் போனான்; சிங்கப்பூருக்குப் போனான்; மலேசியாவுக்குப் போனான்; ஹாங்காங், பேங்காக் போனான்; இன்று அமெரிக்காவிலே இருக்கிறான். இப்போது ஜெர்மனிக்குப் போய்க்கொண்டிருக்கிறான். எங்கள் பகுதியிலே இருக்கின்றவர்கள் எல்லாம், எல்லாவற்றையும்விட இப்போது சீனாதான் சிறப்பாக இருக்கிறது. அங்கே எப்படிப் போவது என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் அங்கங்கே போனார்கள். நம்முடைய கவியரசர் கண்ணதாசன்கூட அதைச் சொல்வார்:

"சிங்களத் தீவின் கடற்கரையை எங்கள்
செந்தமிழ் தோழர் அழகு செய்தார்,
எகிப்திய நாட்டின் நதிக் கரையில் எங்கள்
இளம் தமிழ் வீரர் பவனி வந்தார்."

என்று சொல்வார்கள். நாம் பார்த்திருக்கிறோம். அங்கெல்லாம் நம்முடைய தமிழர்கள் போய் இருக்கிறார்கள். கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். கடல் கடந்து சென்ற நம்முடைய தமிழன் விடுத்த கண்ணீர்தான் இந்தக் கடல்நீர் உப்பாக இருப்பதற்குக் காரணம் என்று சொன்னார். அவ்வளவு அவல நிலைகளை தமிழன் அடைந்திருக்கிறான். அது மட்டுமல்ல நண்பர்களே, பாரதி சொன்னார்,

"கரும்புத் தோட்டத்திலே– அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே–
மாதர்தன் னெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே–அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையோ"

என்று பாரதி சொன்னான். ஆக, தமிழ்நாட்டில் இருக்கிற தமிழர்களுடைய துன்பத்தை மட்டுமல்ல, கடல் கடந்து உலகத்தின் எந்த மூலையில் தமிழன்



இருந்தாலும் அவனுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று அவனைப் பாதுகாக்கின்ற Social Security Scheme for Non-Resident Tamils என்ற ஒரு அருமையான திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு உருவாக்கி அறிவிக்கும்படி செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1978 ஆம் ஆண்டு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டு தொடங்கப்பட்ட O.M.C.– Overseas Manpower Corporation– அந்த கார்ப்பரேஷன் மூலம் New India Assurance கம்பெனியுடன் இணைந்து வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஒரு அருமையான பாதுகாப்புத் திட்டத்தினை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த இரண்டு திட்டங்களில் ஒன்று விபத்து காப்புறுதித் திட்டம். எங்கேயாவது துபாயில், U.A.E.–யில் நம்முடைய தோழர் இங்கேயிருந்து போகிறவன் இறந்துவிட்டால் அவனைக் கொண்டுவந்து நம்முடைய நாட்டில் சேர்க்க முடியாது. அவன் அங்கிருந்து இங்கே வந்து சேர முடியாது. எனவே விபத்து காப்புறுதித் திட்டம்–Accident Insurance Scheme –என்ற ஒரு திட்டம். இன்னொன்று, குடும்ப உடல் நல காப்புறுதித் திட்டம். இந்த இரண்டு திட்டங்களையும் இன்றைக்கு நம்முடைய அரசு அறிமுகப்படுத்த இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் திட்டம் வெளிநாட்டில் விபத்துக்குள்ளாகும் வெளிநாடு வாழ் தமிழர் ஒரு தடவை மட்டுமே செலுத்தக்கூடிய குறைந்த விகிதமான பிரிமியத் தொகையில் 5 ஆண்டு காலம் வரை முழுப் பாதுகாப்பு பெறுவதற்கு வகை செய்கிறது. உதாரணமாக, ஒரு தடவை மட்டுமே 990 ரூபாய் செலுத்தி ஒரு நபர் இந்தத் திட்டத்தில் சேருவாரானால், அடுத்த 5 ஆண்டுகளுக்கு அவருக்கோ அல்லது அவருடைய குடும்பத்திற்கோ கிடைக்கக்கூடிய பலன்கள் பலவாகும். விபத்தில் இரண்டு கண் அல்லது இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் ஆகியவற்றில் ஏதேனும் இரண்டு உறுப்புகளை இழக்க நேரிட்டால் அவருக்கு 5 இலட்சம் வழங்கப்படும். விபத்தின் காரணமாக அவர் முழு ஊனம் அடைய நேரிட்டால் இந்தத் தொகை வழங்கப்படும். மாறாக partly damaged ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் மட்டும் இழக்க நேரிட்டால் ரூ.2.5 இலட்சம் வழங்கப்படும். விபத்தின் காரணமாக அவர் மரணம் அடைய நேரிட்டால் இந்தத் தொகை அவருடைய வாரிசுக்கு

[திரு. அ. அன்வர் ராஜா] [2001 செப்டம்பர் 3

வழங்கப்படும். இதுமட்டுமன்றி, விபத்தில் அவர் இறக்க நேரிட்டால் அவருடைய உடலை இந்தியாவிற்குக் கொண்டுவருவதற்காகவும் அந்த உடலை எடுத்துவரும் நபருக்காகவும் விமானக் கட்டணமாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இந்த 50 ஆயிரம் ரூபாய் விபத்தின் காரணமாக என்று இல்லாமல் வெளிநாட்டில் நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிடும் வெளிநாடு வாழ் தமிழன் உடலை இந்தியாவுக்குக் கொண்டுவரவும், உடலை எடுத்து வரும் நபருக்கு விமானக் கட்டணத்தை வழங்கவும் இந்தத் திட்டம் வகை செய்கிறது.

*பிற்பகல் 1—20*

வெளிநாடு வாழ் தமிழர் இறக்க நேர்ந்தால் அவருடைய இரண்டு குழந்தைகளின் மேற்படிப்பிற்கு தலா ரூ.50,000 வீதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய். இரண்டு மகள்களின் திருமணத்திற்கு தலா ரூபாய் 50,000 வீதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தவிர அவர் வெளிநாட்டில் வாழும்போது இந்தியாவில் உள்ள அவரது மனைவியோ, குழந்தையோ விபத்தில் மரணம் அடைய நேர்ந்தால் அந்த ஈமச்சடங்கில் அவர் கலந்துகொள்வதற்காக இந்தியாவிற்கு வந்து போவதற்கான விமானக் கட்டணம் ரூ.50,000 வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக் இந்தத் திட்டத்தில் பிரிமியம் என்னவென்றால் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை 990 ரூபாய் செலுத்தினால் போதும். ரூ.990 செலுத்தினால் எட்டு இலட்சம் மொத்த benefit கிடைக்கும். ரூ.990–க்கு பதிலாக 1,600 ரூபாய் செலுத்தினால் ரூ.13 இலட்சம் மொத்த benefit கிடைக்கும் என்ற அளவில் இந்தத் திட்டத்தில் இறுதி செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது, குடும்ப உடல் நலக் காப்புறுதித் திட்டம். வெளிநாடு வாழ் தமிழர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அமையும் மற்றொரு திட்டம் குடும்ப உடல் நலக் காப்புறுதித் திட்டமாகும். இந்தத் திட்டத்தின்கீழ் வெளிநாடு வாழ் தமிழர் மட்டுமின்றி வெளிநாட்டிலோ, இந்தியாவிலோ வாழ்பவர்கள் 70 வயதிற்கு உட்பட்ட அவரது பெற்றோர் உட்பட அவருடைய குடும்பத்தினர் அனைவரும் பயன் பெறலாம். இதில் இரண்டு வகைத் திட்டங்கள் உள்ளன. ஒரு இலட்சம் வரை பயன்தரக்கூடியது, மற்றொன்று இரண்டு இலட்சம் வரை பயன் தரக்கூடியது. கட்டுகிற பிரிமியத்தைப் பொறுத்திருக்கிறது. இது இந்தியாவில் உள்ள மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாகச் சேர்ந்து, சிகிச்சை பெறுவதற்காக ஆகும் செலவை ஈடு செய்ய வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். மருத்துவமனையில் தங்கும் கட்டணம்



2001 செப்டம்பர் 3] [திரு. அ. அன்வர் ராஜா]

தொடங்கி, டாக்டருக்கு அளிக்கப்படும் ஆலோசனைக் கட்டணம், மருந்துக் கட்டணம், அறுவை சிகிச்சைக் கட்டணம் முதலிய அனைத்துச் செலவுகளையும் ஈடு செய்து பெறுவதற்கு இந்தத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சம் வரை ஈடு செய்து பெற வகை செய்யும் திட்டத்தில் சேர்வதற்கு ஒரு தடவை மட்டுமே செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை ரூ.1500, இரண்டு இலட்சம் வரை ஈடு செய்து பெறும் திட்டத்தில் சேர்வதற்கு ரூ.2925 மட்டுமே பிரிமியம் செலுத்த வேண்டும். ஒரு இலட்சம் பயன் தரும் திட்டத்தில் சேர்வதற்கு வெளிநாடு வாழ் தமிழரின் மனைவி ரூ.450–ம், இரண்டு இலட்சம் பயன் தரும் திட்டத்தில் சேர்வதற்கு ரூ.875–ம் செலுத்த வேண்டும். இதேபோன்று முதல் வகைத் திட்டத்தில் முதல் குழந்தையைச் சேர்க்க விரும்பினால் ரூ.300–ம், இரண்டாம் வகை திட்டத்தில் சேர விரும்பினால் ரூ.590–ம் செலுத்த வேண்டும். பிற குழந்தைகளுக்கு முதல் வகைத் திட்டத்தின்கீழ் தலா ரூ.250–ம், இரண்டாம் வகைத் திட்டத்தின்கீழ் தலா ரூ.490–ம் செலுத்த வேண்டும். பெற்றோரைச் சேர்க்க விரும்பினால், முதல் வகைத் திட்டத்தில் தலா ரூ.650–ம், இரண்டாம் வகைத் திட்டத்தில் தலா ரூ.1270–ம் செலுத்த வேண்டும். இந்தத் திட்டத்தில், உடல் நலப் பாதுகாப்புத் திட்டத்தில் சேருவதற்கு – சாதாரண insurance-ல் சேரும்போது Medical Certificate வேண்டும். ஆனால் இந்தத் திட்டத்தில் இருக்கிற speciality என்னவென்றால், இந்தத் திட்டத்தில் சேருவதற்கு மருத்துவச் சான்றிதழ் தேவையில்லை. சேருபவர்கள் அளிக்கும் உறுதிமொழியே போதுமானது. இது இந்தத் திட்டத்தில் உள்ள மிகப் பெரிய சிறப்பாகும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கட்டுமானத் தொழிலாளர்கள். உள்நாடு, வெளிநாடு என்பதால் அந்தத் திட்டத்தை முதலிலேயே சொன்னேன். இன்னும் சில திட்டங்களை நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். கட்டுமானத் தொழிலாளர்கள், அவர்கள் பல்வேறு வேலைகளைச் செய்கிறபோது, தச்சர்கள் வேலை செய்கிறபோது அவர்களுக்கு கண்ணுக்கு இலவசமாக கண்ணாடி வழங்க வேண்டுமென்ற திட்டத்தை இப்போது அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் இந்த ஆண்டுக்கு 1000 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும். இதற்காக இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவு செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல தமிழ்நாட்டில் 71 தொழிலாளர் நல மையங்கள் இருக்கின்றன. இந்த 71 தொழிலாளர் நல மையங்களிலும் தையற் பயிற்சி

நடந்துகொண்டிருக்கிறது. அந்த 71 தொழிலாளர் நல மையங்களில் 52 இடங்களில் குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. குழந்தைகள் காப்பகங்கள் இல்லாத 19 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தோடு 71 மையங்களில் 5 இடங்களில்தான் நூலகங்கள் இருக்கின்றன. ஐந்து இடங்களைத் தவிர்த்து மீதியிருக்கிற அனைத்து இடங்களிலும் 66 மையங்களிலும் நூலகங்கள் உடனடியாக நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் அடக்கத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வேலைவாய்ப்புத் துறை. எங்களிடம் வருகின்ற மனுக்களை நீங்கள் பார்ப்பீர்களேயானால் வேலை கேட்டு வருபவர்களைவிட எனக்கு ஒரு interview-கூட வரவில்லை என்கிறவர்கள்தான் அதிகம். இதுவரை இவ்வளவு நாட்கள் ஆகிவிட்டன, 15 வருடம் ஆகிவிட்டது. எனக்கு ஒரு interview-கூட வரவில்லை என்று சொல்கிறார்கள். இந்த விஷயம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த ஆய்வில் ஆழமாக அவர்கள் சிந்தித்து அவர்கள் சில ஆணைகளை வழங்கியிருக்கிறார்கள். அதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-25*

1993 முதல் வேலைவாய்ப்பகங்கள் மூலம், அதாவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1:20 என்ற விகிதத்தில் வேலைக்காகப் பரிந்துரைக்கப்பட்டு வந்தது. பிறகு சில குறிப்பிட்ட பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பகங்களிலுள்ள முதுநிலை அடிப்படையில் பரிந்துரைக்கும் வகையில் கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 19–6–1996 முதல் ஆசிரியர் தேர்வாணைய வாரியம் அறிவிக்கும் காலியிடங்களுக்கு 1:3 விகிதாச்சாரமும், 17–1–1998 முதல் இளநிலை பயிற்சி அலுவலர் காலியிடங்களுக்கு NTC/NAC (National Trade Certificate/National Apprenticeship Certificate) Diploma உடையவர்களைக் கொண்டு நிரப்புவதற்கு 1:1:1 என்ற விகிதாச்சாரமும், 13–1–1999 முதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 1:2 என்ற விகிதாச்சாரமும் முறையே 19–1–1999 மற்றும் 30–11–2000 முதல் நகர்ப்புற



உள்ளாட்சி நிறுவனப் பணியிடங்களுக்கும் 1:2 என்கிற விகிதாச்சாரமும் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், கூட்டுறவுத் துறையிலுள்ள பணியிடங்களுக்கு 1:1 என்ற விகிதாச்சாரம் 21–2–2001 முதல் அமலுக்கு வந்தது.

சமீபத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கருத்தின்படி வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து, நெடுங்காலமாக வேலைவாய்ப்பக உயிர்ப் பதிவேட்டில் காத்திருப் போர்களுக்கு ஒரு நேர்காணலாவது கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விகிதாச் சாரங்களையும் 1:10 என்று உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலே குறிப்பிட்டுள்ள பணியிடங்கள் தவிர்த்து உள்ள இனங்களுக்கு 16–2–1999 முதல் 1:5 என்ற விகிதாச்சாரத்தை 1:20 என்று உயர்த்தி வேலைவாய்ப்பகங்களில் பதிந்துள்ளவர்களுக்கு நேர்காணல் வாய்ப்பினை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரும்பி உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கு ஆரம்பத்திலிருந்தே, இந்தத் தொடர் ஆரம்பித்ததிலிருந்தே நான் பார்த்துக்கொண்டு வருகிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி இது. இந்த வெற்றியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது என்று கவர்னர் உரையிலே உள்ள அந்தச் சொல்லை வைத்துக்கொண்டு, ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து, இறுதி வரை அதைப் பேசிக்கொண்டே இருந்தார்கள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தில் என்னுடைய அந்தக் கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது என்பதில் எந்த மாறுபட்ட கருத்துமில்லை. இதுவரை இந்தத் தமிழ்நாட்டில் 12 பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன.

1952–லே முதல் தேர்தல். 1957–லே இரண்டாவது தேர்தல், 1962–லே மூன்றாவது தேர்தல். 1967–லே நான்காவது தேர்தல், 1971–லே ஐந்தாவது தேர்தல், 1977–லே ஆறாவது தேர்தல், 1980–லே ஏழாவது தேர்தல், 1984–லே எட்டாவது தேர்தல், 1989–லே ஒன்பதாவது தேர்தல், 1991–லே பத்தாவது தேர்தல், 1996–லே பதினோராவது தேர்தல். இப்போது 2001–லே பன்னிரெண்டாவது தேர்தல். பன்னிரெண்டு முறை ஆட்சி

மாறறங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த பன்னிரெண்டு முறை ஆட்சி மாறறங்களில் மூன்று முறை காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பிடித்திருக்கிறது. நான்கு முறை தி.மு.க. ஆட்சியைப் பிடித்திருக்கிறது. ஆனால் ஐந்து முறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடித்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மறந்து விடக் கூடாது. நான்கு முறை தி.மு.க. ஆட்சியைப் பிடித்திருக்கிறதென்றால், 1967 ஆம் ஆண்டு வெற்றியிலும், 1971 ஆம் ஆண்டு வெற்றியிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய உழைப்பு முழுமையாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உழைப்பு முழுமையாக இருந்தது. மீதி இரண்டு தேர்தல்களில் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலைமை அதுவல்ல. இந்த ஐந்து தேர்தல்களிலும், மூன்று புரட்சித் தலைவர், அவர்களுக்குப் பிறகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) அப்பழுக்கற்ற வெற்றியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. சில பேர் வெளியே எழுதினார்கள். தி.மு.க. 1971–லே பெற்ற வெற்றி மிகப் பெரிய வெற்றி என்று. சரித்திரப் புகழ் வாய்ந்த வெற்றி என்றும் அந்த வெற்றியை மீறி யாரும் நிற்க முடியாது என்றும் சொன்னார்கள். பத்திரிகைகளிலே நான் பார்த்தேன். 1971–லே தி.மு.க. போட்டியிட்ட இடங்கள் எவ்வளவு? 203. வெற்றி பெற்ற இடங்கள் 184. என்ன சதவீதம்? 90.6 சதவீதம். ஆனால் இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்ட இடங்கள் 140. வெற்றி பெற்ற இடங்கள் 132. ஒரு இடத்தைச் சேர்க்க வேண்டாம். அது வாழைப்பழம் சின்னத்திற்குப் போய்விட்டது. 140–லே போட்டியிட்டது. இரட்டை இலையிலே 140–ல் போட்டியிட்டு நாங்கள் இழந்தது 8. வெற்றி பெற்ற இடங்கள் 132. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிற சதவீதம் 94.3 சதவீதம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றியை இதற்கு முன்னால் இந்தத் தமிழகத்திலே வேறு எந்தக் கட்சியும் எந்தக் காலத்திலும் இதுவரை பெற்றதில்லை என்பதுதான் வரலாறு.

*பிற்பகல் 1—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வரலாற்றை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்த வரலாறு இனிமேல் முறியடிக்கப்பட வேண்டுமென்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால்தான் முடியுமே தவிர, வேறு யாராலும் முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே நான் அன்போடு இந்தக் கருத்தைப் பதிய வைத்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்னாலே, நேற்றையதினம் எல்லாம் சொன்னார்கள். 'டான்சி' வழக்கு இப்போது பத்திரிகையிலே வந்துகொண்டிருக்கிறது. நான் அதற்கு ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எல்லோரும் கருத்து சொன்னார்கள். அம்மா அவர்கள் தேர்தலிலே நிற்க முடியாது. அப்படியெல்லாம் தேர்தலுக்கு முன்பு அந்தத் தீர்ப்பு வந்தது பரபரப்பாக இருந்தது. நான் அப்போது சொன்னேன்; நம்முடைய தோழர்களிடம் சொன்னேன். உங்களுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டார்கள். என்னிடம் நம்முடைய தோழர்கள் அப்படிக் கேட்பார்கள். நான் சொன்னேன், யார் என்ன கருத்து சொல்கிறார்கள் என்றெல்லாம் நாம் பார்க்க வேண்டாம், அம்மா அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்; பொறுத்திருங்கள் என்று நான் சொன்னேன். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு ஒரு கருத்துச் சொன்னார்கள். "இறுதியில் சிரிப்பவர்கள்தான் வெற்றியாளர்கள்" என்றார்கள். இறுதியில் சிரிப்பவர்கள்தான் வெற்றியாளர்கள் என்று இந்த வழக்கைப்பற்றி அம்மா அவர்கள் சொல்கிறபோது நான் அதைத்தான் நம்பினேன். ஏனென்றால் அதைத்தான் நம்ப வேண்டும் என்கிற கட்டாயம் எனக்கு அனுபவ ரீதியாகக் கிடைத்தது. ஏனென்றால் இந்திய அரசியலிலே பின்னாலே என்ன நடக்கப்போகிறது என்பதைக் கணித்துச் சொல்கின்ற ஆற்றலை எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களைத் தவிர வேறு யாரும் பெற்றிருக்கவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் இதுவரை அரசியல் வரலாறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நான் இதுகாறும் பேசியவற்றையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொண்டு நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்தத் தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் குறித்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டு அமைகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு கேள்வி.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, ஒரு சின்னக் கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது உரையை முடிக்கும்போது மசோதா என்று குறிப்பிட்டுவிட்டார். அதை மானியக் கோரிக்கை என்று திருத்திக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மசோதா என்பதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். அதை மானியக் கோரிக்கை என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் என்றெல்லாம் பதிவு நிலுவையிலே இருக்கிறது. புதுப்பிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் அவர்கள் உடல்நலக் குறைவோ அல்லது வெளியூர் சென்றதோ, இதுபோன்ற பல்வேறு காரணங்களினாலே விடுபட்டிருக்கிறது. அவர்கள் மீண்டும் புதுப்பிப்பதற்கு ஒரு வாய்ப்பினைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறை பதிவு செய்து அது விட்டுப் போய்விட்டால் 18 மாதங்கள் அவர்களுக்கு அவகாசம் தரப்படுகிறது. அந்த 18 மாதங்களும் விட்டுப்போய் அதற்கு மேலேயும் முடிவு செய்ய வேண்டுமென்றால் அரசுதான் முடிவு செய்ய வேண்டுமென்று விதியிருக்கிறது. எனவே அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.



**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3.5 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய சம்பள ஒப்பந்தம் சம்பந்தமான பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதை நாங்கள் வரவேற்கிறோம். 100 நாட்களில் 8 முறை நடைபெற்றிருக்கக்கூடிய பேச்சுவார்த்தையில் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய சிரத்தையை நாங்கள் மகிழ்ச்சியோடு அங்கீகரிக்கிறோம். வருகிற 6 ஆம் தேதி நடைபெற இருக்கக்கூடிய பேச்சுவார்த்தையில் ஒரு சுமூகமான சம்பள ஒப்பந்தம் ஏற்பட வேண்டும். அதற்கும் அமைச்சர் அவர்கள் சீரிய முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய வேண்டுகோள்கள் எல்லாம், நாங்கள் விரும்புவதெல்லாம், உங்களிடம் பதிலாக எதிர்பார்ப்பது எல்லாம், அந்தப் பேச்சுவார்த்தையில் சுமூகமான தீர்வு ஏற்படுத்துவதற்கு பஞ்சாலை முதலாளிகள் இடம் தரவில்லையென்றால், அடம் பிடிப்பார்கள் என்றால், 10 (பி) பிரிவைப் பயன்படுத்துவாரா என்பதை இந்த அவையின் மூலம் அறிய நான் விரும்புகிறேன் அவரின் மூலமாக அறிய நான் விரும்புகிறேன்.

இரண்டாவதாக (குறுக்கீடு) இன்னும் ஒரேயொரு கேள்வி. இரண்டாவதாக ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த அமைப்பு சாராத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வாரிய நிர்வாகக் குழுக்களை உரிய பிரதிநிதித்துவத்துடன் மாற்றியமைக்க வேண்டும். ஏற்கெனவே அவர்கள் ஒவ்வொரு அமைப்பிற்கும் தனித்தனியாக வாரியங்கள் தேவையில்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு. சி.ஐ.டி.யூ.-வைப் பொறுத்தவரை அதை நாங்கள் ஏற்கவில்லை. 67 அமைப்புகளுக்கும் தனி வாரியங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆகவே உங்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல அதைச் செயல்படுத்துவதற்கு அந்தக் குழுக்கள் புதியதாக மாற்றியமைக்கப்படுமா? இந்த 250 ரூபாய் திட்டத்தை, தயவுசெய்து, ஒரு மீன் துண்டுடன், கொஞ்சம் சாப்பாடும் கொடுப்பது மாதிரி 500 ரூபாயாவது கொடுப்பதற்கு முயற்சிக்க முடியுமா என்பதையும் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் தெரிவித்த கருத்துகள் அனைத்தும் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 1—35

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதோ ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரம்ப விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக விவசாயத் தொழிலாளிகளுக்காக அமைக்கப்பட்டிருக்கிற அந்த நல வாரியத்திற்குரிய பல விஷயங்களை சென்ற ஆட்சியிலே நடைபெற்ற விஷயங்களைச் சொன்னீர்கள். அந்த ஆட்சியிலே அறிவித்தார்களே தவிர இதற்கு நிதி ஒதுக்கவில்லை, கூட்டம் கிடையாது, அலுவலர்கள் கிடையாது, எதுவுமே செய்யவில்லை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்; இது உண்மை. இப்பொழுது இதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கோலப்பன் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று அதற்குரிய முறையிலே எல்லா சலுகைகளையும் வழங்குவதோடு, தனித்த முறையிலே நிதி ஒதுக்கீடு செய்து அந்த நல வாரியத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களும் இணைந்த முறையிலே அறிவிப்பு செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோலப்பன் கமிட்டியினுடைய சிபாரிசுகள் எல்லாம் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. சுற்றுக் கோப்பு வந்துகொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் பரிந்துரைகளின்மீது சரியான முடிவை உரிய நேரத்தில் அறிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்யாமல் உள்ளேயிருந்து வரலாறு படைக்கிற ஆஸ்டின். (சிரிப்பு)

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுகிறவர்கள் 1:2, 1:3 என்ற அடிப்படையிலே அழைக்கப்பட்டு அவர்களுக்குப் பதிவு செய்த மூப்பின் அடிப்படையிலே employment seniority-யிலே பணி வழங்கப்படுகிற திட்டம் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, இனி எல்லோருக்குமே 1:10 என்ற விகிதாச்சாரத்திலே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த employment seniority என்ற அந்தத் திட்டம் கைவிடப்பட்டு மீண்டும் 1:10 என்று அழைக்கப்படுகின்றபோது அந்தத்



திட்டம் கைவிடப்படுகிறதா அல்லது திட்டத்தை அமல்படுத்தும் முறையிலே இந்த 1:10–லேயே seniority எடுத்து அவர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்படுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். தொழிற் கல்வி என்ற வகையிலே கிண்டியிலே பயிற்சி வழங்கப்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு I.T.-யிலே Instructors என்று போடுகின்றபோது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படவில்லை. தொழிற்கல்வி என்பது அந்தத் தொழிற் பயிற்சி முடிக்காதவர்களுக்கு அவர்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்குப் பிறகு அவர்களுக்கு இந்த அரசாங்கம் பண உதவி செய்து, பண முதலீடு செய்து அவர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்குகிறார்கள். ஆனால் ஏற்கெனவே பயிற்சியை முடித்தவர்கள் நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான பேர் இன்றைக்கு இங்கே நியமனத்திற்கு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா இந்த Instructors நியமனத்திற்கு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை இழந்த தொழிலாளர்களும் அல்லது பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களும், அவர்கள் தாங்களாகவே வேலை தேடிக்கொள்கின்ற அளவிற்கு பயிற்சி அளிப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். மிக தலைசிறந்த நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் விகிதாச்சாரம் மாற்றியிருப்பது என்பது Employment Officer, Appointment Officer-ஆக மாறக் கூடாது என்ற கொள்கை அடிப்படையிலேதான் இந்த மாறுதல் செய்யப் பட்டிருக்கிறது. ஒரே ஒருவர் அங்கேயிருந்து அனுப்பப்படுவாரேயானால் அந்த Interview Officer அந்த ஒருவரைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர் எவ்வளவு பெரிய, சரியான அறிவு உள்ளவராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவரைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை இருக்கிறது. எனவே அந்தக் கொள்கை அடிப்படையில் அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. சிவபுண்ணியம், நீங்கள் உட்காருங்கள். ஞானசேகரன், நீங்கள் கேளுங்கள் (குறுக்கீடு) சிவபுண்ணியம், நீங்கள் உட்காருங்கள், பிறகு அமைச்சரிடம் கேளுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்ட தொழிற்சாலையினுடைய தொழிலாளர்களுக்கு பிழைப்பூதியம் மாதம் 250 ரூபாய் கொடுப்பதற்கான ஆணைகள் சில ஆண்டுகளுக்கு முன்னாலே வழங்கப்பட்டும் பல தொழிற்சாலைகளினுடைய தொழிலாளர்கள் அந்தப் பிழைப்பூதியத்தை பெற முடியாமல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக எங்களுடைய வேலூர் மாவட்டத்திலுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையினுடைய தொழிலாளர்களுக்குக்கூட அந்தப் பிழைப்பூதியம் கிடைக்கவில்லை. தோல் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டிருக்கின்றன. அந்தத் தோல் தொழிற்சாலைகள் மூடப்பட்டு அந்தத் தொழிலாளர்களுக்கும் பிழைப்பூதியம் கிடைக்கவில்லை. அது முழுமையாக மூடப்படவில்லை. அரசு ஏற்கெனவே மூடிவிட்டது. அது கிட்டத்தட்ட மூடப்பட்டது என்று சொல்வதா, திறந்து கிடக்கிறது என்று சொல்வதா என்று சொல்ல முடியாமல், இரண்டும் கெட்டான் நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதுபோன்ற நூற்பாலைகளில் இன்னும் அந்தத் தொழிலாளர்கள் பிழைப்பூதியம் பெற முடியாமல் இருப்பதை உணர்ந்து அரசு அவர்களுக்கும் ரூபாய் 250 பிழைப்பூதியம் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு Screening Committee என்று ஒரு கமிட்டி இருக்கிறது. அந்த Screening Committee தான் எந்த ஆலைகளை எடுத்துக்கொள்வது என்று தீர்மானிக்கிறது. அப்படி தமிழகத்தில் 86 ஆலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதிலே 46 ஆலைகள் சிபாரிசு செய்யப்பட்டு, அந்த அடிப்படையிலேதான் நான் ஏற்கெனவே சொன்ன புள்ளிவிவரப்படி 8 ஆயிரத்திற்கும் அதிகமான பேருக்கு இந்த உதவிகளை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அருள்கூர்ந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 28–தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28 – தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.



திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை. திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ85,45,21,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 7. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதால் 4–30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*பிற்பகல் 4–30*

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 8. ஒழுங்குப் பிரச்சினை

### மானியக் கோரிக்கைகளை குறுகிய காலத்திற்குள் விவாதித்தல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திடீரென்று மதியத்திற்கு மேல் Point of Order?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலை 7 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாம் சட்டமுன்வடிவுகளை இந்த அவையிலே நிறைவேற்றுவதைப்போல 7 மானியங்களையும் ஒரு குறுகிய காலத்திற்குள்ளாக இந்த இடத்திலே விவாதித்து முடிப்பது அவ்வளவு நல்லதாக அமையாது என்ற காரணத்தால் கொஞ்சம் அதிகமான நேரத்தை தாங்கள் இதிலே கொடுத்தால்தான் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எல்லாவற்றுக்கும் அமைச்சர் ஒரே அமைச்சர்தான். அவர் பதில் சொல்லுவார். இது அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்கெனவே பேசி முடிவு செய்யப்பட்டது. இனிமேல் மாற்ற முடியாது.

## 9. தகவல் கோரல்

### காவிரி நதி நீர்ப் பங்கீடு கூட்டம்

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. இது குறித்து ஆங்கிலப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. தொலைபேசி மூலமாக பல்வேறு செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இது இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினை. இது சம்பந்தமாக 6 ஆம் தேதி கூட்டம் நடைபெற இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது முடிந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே, நான்தான் முதலில் அறிவிப்புக் கொடுத்து இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுசம்பந்தமாக சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதனிடமும், சட்டமன்ற உறுப்பினர் திரு. மணியிடமும்



தெளிவாகக் கூறியிருக்கிறேன். 6 ஆம் தேதி புது டெல்லியில் இதற்கான கூட்டம் நடைபெற இருக்கிறது. கூட்டம் முடிந்த பிறகு தக்க பதிலை தங்களுக்கு அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**THIRU C. GNANASEKARAN:** Mr. Speaker Sir, Thiru S.M.Krishna is not ready to give water.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடையில் 2, 3 நாட்கள்தான் இருக்கின்றன. (குறுக்கீடு) வேறு ஒன்றும் ஏற்பாடு செய்வதற்கு வழியில்லையே, 6 ஆம் தேதி கூட்டம் முடிந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு ஜீவாதாரப் பிரச்சினை. இந்த அவையில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 6 ஆம் தேதி புது டெல்லியில் கூட்டம் நடைபெறவிருக்கிறது. அந்தக் கூட்டம் முடிந்த பிறகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுவார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? 6 ஆம் தேதி கூட்டம் நடைபெற இருப்பதாகச் சொல்லுகிறீர்கள். மேட்டூர் அணை வற்றிவிட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத்திற்கு தயாரிப்புகளுடன் செல்ல வேண்டும். அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி பிரதமரைச் சந்தித்திருக்கலாம். திரு. எஸ்.எம். கிருஷ்ணாவைச் சந்தித்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா தயாரிப்புகளுடன்தான் செல்வார்கள். (குறுக்கீடு) மணி, நாளைக்கு முதலமைச்சர் அவர்கள் வருகிறபோது பிரச்சினையைக் கேளுங்கள், முதலமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். இதில் இந்த அரசு மிகவும் அக்கறை காட்டிக்கொண்டுதான் இருக்கிறது. நான்கூட ஒன்றாம் தேதி நடைபெற்ற National Development Council Meeting-ல் இந்தப் பிரச்சினை பற்றிப் பேசினேன். திரு. கிருஷ்ணா அவர்களும் இருந்தார்கள். பிரதமரும் இருந்தார். அவர்களிடம் வேண்டுகோள் வைத்திருக்கிறேன். இப்போது காவிரி ஆறு

[டாக்டர் மு. தம்பிதுரை] [2001 செப்டம்பர் 3

பாய்கின்ற பகுதிகளிலே, தஞ்சை போன்ற பகுதிகளில் குறுவை சாகுபடி மிகவும் அல்லலுக்குள்ளாகி இருக்கிறது. ஆகவே பிரதமர் அவர்கள் தலையிட்டு திரு. கிருஷ்ணா அவர்களை வற்புறுத்தி எப்படியும் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். பிரதமரும் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் கேட்டதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலும் தெரிவிக்க அரசிடம் பதில் இல்லையே. 6 ஆம் தேதி கூட்டத்திற்காக காத்திருக்கிறார்கள். கூட்டம் முடியட்டும், எடுத்துக்கொள்ளச் சொல்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு கூட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் போகவில்லை. போவதாக இருந்தால் வாழ்த்தி அனுப்புவோம். தமிழ்நாடு சட்டமன்றத்தின் சார்பாக வாழ்த்தி அனுப்புவோம். இது முக்கியமான பிரச்சினை. ஆங்கிலப் பத்திரிகையில் என்ன செய்தி வந்திருக்கிறது என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினைக்குள்ளே போக வேண்டாம். 6 ஆம் தேதி கூட்டம் நடைபெற இருக்கிறது. (குறுக்கீடு) யார் கலந்துகொள்ள இருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் பிறகு சொல்லுவார்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆம் தேதிக்கு முன்னால், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி பிரதமரைப் பார்த்துவிட்டு, திரு. எஸ்.எம். கிருஷ்ணாவைப் பார்த்துவிட்டு ஆவன செய்யக் கோரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து கல்வி அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார். திரு. கிருஷ்ணா இருக்கும்போதே அங்கே சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) இதிலே அதற்கு மேல் போக முடியாது. அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக ஏற்கெனவே இரு மாநிலங்களில் இருந்தும் பொறியாளர்கள் ஒருவருக்கொருவர் மேட்டூர் அணையில் சந்தித்து அதற்கான அறிக்கையைத் தயாரித்து இப்போது அறிக்கை நிலுவையில் இருக்கிறது. 6 ஆம் தேதி இங்கே இருந்து தலைமைச் செயலாளரும், கர்நாடக தலைமைச் செயலாளரும், இருவரும் ஒன்றாகச் சந்தித்து 6 ஆம் தேதி ஒரு நல்ல முடிவு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே மணி அவர்கள், இரண்டு நாட்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



2001 செப்டம்பர் 3]

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் சரியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் நாளை வரும்போது கேளுங்கள். ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுவார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினையில் வாய்ப்பு அளிக்காததால் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*பிற்பகல் 4—35*

## 6. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

| | | |
|---|---|---|
| (ஆ) | கோரிக்கை எண் 1 | – நில வருவாய்த் துறை |
| (இ) | கோரிக்கை எண் 2 | – மாநில ஆயத் தீர்வைத் துறை |
| (ஈ) | கோரிக்கை எண் 5 | – முத்திரைத்தாள்கள் நிருவாகம் |
| (உ) | கோரிக்கை எண் 6 | – ஆவணப் பதிவு |
| (ஊ) | கோரிக்கை எண் 40 | – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு |
| (எ) | கோரிக்கை எண் 43 | – எழுதுபொருள் அச்சுத் துறை |
| (ஏ) | கோரிக்கை எண் 45 | – இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் |

---

### (ஆ) கோரிக்கை எண் 1 – நில வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1 – நில வருவாய்த் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.15,07,71,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1396, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 166, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் புறம்போக்கில் வீடு கட்டி பல ஆண்டுகளாக வசிக்கும் மக்களுக்கு இலவசமாக பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,07,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2313, திரு. ஜிகே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1450, திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3049, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,07,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1239, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நகர மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் நீண்ட காலமாக குடியிருந்து வருபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன்



அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,07,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1713, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 649, செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1744, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 336, திரு. சு. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2837, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3165, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2636, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 859, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3078, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,07,71,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 773, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 3

வெட்டுத் தீர்மானம் எண் 1985, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2991, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2949, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,07,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3063, திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகை மாவட்டம், திருமருகல் நகரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டத்தை (Taluk) ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,07,71,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 509, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2 – மாநில ஆயத் தீர்வைத் துறை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.23,69,57,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2001 செப்டம்பர் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 164, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பூரண மதுவிலக்கை தமிழகத்தில் அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.23,69,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2383, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 604, திரு. கா. சுந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3080, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.23,69,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3048, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.23,69,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3265, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1812, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3015, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2847, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3172, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2635, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 860, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 772, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1995, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

## (ஈ) கோரிக்கை எண் 5 - முத்திரைத் தாள்கள்-நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5 – முத்திரைத் தாள்கள்–நிருவாகம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முத்திரைத் தாள்கள்–நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11,15,50,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 185, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'போதிய முத்திரைத் தாள்கள் உரிய விலைக்கே எல்லா இடங்களிலும் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்–நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11,15,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2223, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3043, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்–நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,15,50,000/–ல் ரூ.100/–குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3264, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1623, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3323, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1814, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1917, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2757, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3180, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2631, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 863, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3072, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2006, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2951, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,15,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6- ஆவணப் பதிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 61,20,17,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1394, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவிலில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 61,20,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 122, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூரில் மாவட்ட ஆவணப் பதிவு அலுவலகம், டி.ஐ.ஜி. அலுவலகம் ஆகியவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 61,20,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2074, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 601, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1710, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1622, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3326, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1816, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3035, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2767, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3181, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 864, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3071, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 61,20,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 774, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2003, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2952, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 61,20,17,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 517, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.



*பிற்பகல் 4-40*

**(ஊ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,92,28,81,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 745, திரு. மீ.அ. வைத்தியலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 678, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தீ மற்றும் மழையினால் வீடு இழந்தவர்களுக்கு வீட்டிற்கு ரூ.5000/- நிதி உதவி என்று வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,92,28,81,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2857, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2527, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் இயற்கையின் சீற்றத்தால் அதிகம் பாதிப்பு ஏற்படுவதால் அம்மாவட்டத்திற்குப் போதிய நிவாரணம்

வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,92,28,81,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3275, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1833, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3030, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3240, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2603, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 888, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2989, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2965, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,92,28,81,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2010, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.



## (ஏ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள்-அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43, எழுதுபொருள் – அச்சுத் துறை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எழுதுபொருள்–அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.60,97,55,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 671, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழக அரசு அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்–அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,97,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2363, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2537, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்–அச்சுத் துறை பற்றிய 43ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 60,97,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3278, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1836, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3026, திரு. க. முருகவேல் ராஜன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3517, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3245, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2600, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 891, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2999, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள்–அச்சுத் துறை பற்றிய 43ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,97,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஏ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45 – இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.78,78,78,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 667, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நிலத்தைக் கையகப்படுத்தும்போது மார்க்கெட் மதிப்பிற்கு இணையான தொகையினை நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து, விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,78,78,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3251, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2542, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 78,78,78,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1838, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3023, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2817, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3247, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2598, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 893, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2947, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இழப்பீடுகளும் ஓதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.78,78,78,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில வருவாய்த் துறை, மாநில ஆயத் தீர்வைத் துறை, முத்திரைத்தாள்கள்–நிருவாகம், ஆவணப் பதிவு, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எழுதுபொருள்–அச்சுத் துறை மற்றும் இழப்பீடுகளும் ஓதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

*பிற்பகல் 4—45*

***டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

@ 667 முதல் 790 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் III, IV, V மற்றும் VI—ஆக அச்சிடப்பட்டுள்ளன.





அதேபோல, இந்த மாமன்றத்தின் மூலமாக மக்களுக்குப் பணி செய்வதற்காக வாக்களித்த என்னுடைய காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பொது மக்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு வாய்ப்பு அளித்த தமிழ் மாநில காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையின் தலைவர், எங்கள் பாசமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி, இந்த வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலே பல்வேறு விஷயங்கள் இருந்தாலும், முதற்கட்டமாக நிலச் சீர்திருத்தத் துறை சம்பந்தமாக சில கருத்துகளை இங்கே நான் எடுத்து வைக்கலாம் என்று இருக்கின்றேன்.

ஒரு காலத்தில் விவசாய நிலங்கள் சிலரது வசம் நூற்றுக்கணக்கான ஏக்கர் குவிந்து இருந்த காரணத்தினால், வேளாண்மை நில உடைமைகளில் ஏற்றத்தாழ்வு இருந்தது. அந்த ஏற்றத்தாழ்வுகளைப் போக்குகின்ற வகையிலே, இல்லாதவர்களுக்கும் இருக்கின்றவர்களுக்கும் இடையில் இருக்கின்ற இடைவெளியைக் குறைப்பதற்காக, ஏழை–பணக்காரர்கள் என்ற பாகுபாட்டினைக் குறைப்பதற்காக, நில உச்சவரம்பு நிர்ணயித்தல் சட்டம் 1961 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இச்சட்டப்படி, 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 30 ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. பிறகு 1970 ஆம் ஆண்டு 15 ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. உச்சவரம்பிற்கு மேல் உள்ள நிலங்களைக் கையகப்படுத்தி நிலமற்ற விவசாயிகள், விவசாயக் கூலிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக 1965–லே தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகைநில விநியோகம்) விதிகளின் மூலமாக, சமுதாயத்தில் யாரெல்லாம் ஏழையாக இருக்கின்றார்களோ, நிலமற்ற ஏழைகளுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோர்களுக்கு நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டன.

அந்த அடிப்படையிலே, 1961 முதல் 29–2–2000 ஆம் ஆண்டு வரை உபரியாக அறிவிக்கப்பட்ட மொத்த நிலங்கள் 1 இலட்சத்து 99 ஆயிரத்து 617 ஏக்கர் நிலங்கள். அதிலே ஒப்படைக்கப்பட்ட நிலங்கள் 1 இலட்சத்து 88 ஆயிரத்து 228 ஏக்கர் நிலங்கள். இதன்மூலமாக 1 இலட்சத்து 41 ஆயிரத்து 111 நபர்கள் பயனடைந்து இருக்கிறார்கள். இந்த அரிய திட்டத்தின் மூலமாக, குறிப்பாக ஆண்டான் அடிமை, பண்ணையார் ஆதிக்கம், ஏழை–பணக்காரன் என்றிருந்த பல்வேறு பிரச்சினைகள் ஓரளவு குறைக்கப்பட்டு விவசாயக் கூலிகளாக இருந்த ஆதிதிராவிடர்கள், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர்கூட, இன்றைக்கு ஓரளவு நிலம்

வைத்திருக்கின்ற அளவிற்கு தமிழகத்திலே ஒரு மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டிலே, “வேளாண் வணிகத்தையும் ஒப்பந்த அடிப்படையிலான பண்ணைத் தொழில்களையும் மேம்படுத்தும் பொருட்டு, நில உச்சவரம்புச் சட்டங்களைத் தளர்த்துவது பற்றியும் பரிசீலிக்கப்படும்” என்று இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். இந்த நில உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்துவதன் மூலமாக மீண்டும் வர்ணாஸ்ரமத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றார்களோ என்ற ஒரு ஐயப்பாடு மக்கள் மத்தியிலே எழுந்திருக்கின்றது.

அதேபோல, ஆண்டான் அடிமையும், ஆதிக்கச் சக்தியையும் மேம்படுத்துகின்ற வகையிலே இந்தத் திட்டம் வருகின்றதா என்று மக்கள் மத்தியிலே ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் காலத்திலே விவசாயத் தொழிலாளர்கள் நியாயமான கூலிக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே விவசாயக் கூலி பிரச்சினைக்காக ஏற்பட்ட போராட்டங்களிலே உரிய கூலிகளைக் கேட்பவர்களைப் பண்ணையாளர்கள் கட்டிவைத்து அடிப்பார்களாம். சாணிப் பாலைக் கரைத்துக் குடிக்கக் கொடுப்பார்களாம். இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் இருந்த காலத்திலே, நிலச் சீர்திருத்த–நில உச்சவரம்புச் சட்டத்தை – அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்தது. அந்தச் சட்டத்தை இப்போது தளர்த்த வேண்டிய அவசியமென்ன என்பதை நான் தெரிந்துகொள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக இங்கே வைக்கின்றேன். கூலி சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக, ஆதிதிராவிடர்கள் 42 பேருக்கு மேல் உயிரோடு, கீழ்வெண்மணி கிராமத்திலே எரிக்கப்பட்டார்கள். ஜாதிக் கலவரமும் ஏற்பட்டது. ஆக, இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகளை அன்றைக்கு நிலமற்ற விவசாயக் கூலிகள் சந்தித்து இருக்கின்றார்கள். ஆகவே இந்தப் பேரவையின் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மீண்டும் அந்த நில உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்துவோம் என்று கூறியதை தயவுசெய்து தமிழக அரசு வாபஸ் வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். காரணம், குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு எதிராக இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறதோ என்ற அச்சம் இதிலே இருக்கிறது. இந்த அச்சத்தைப் போக்குகிற வகையிலே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இங்கே மானியக் கோரிக்கையின் முடிவிலே பதில் சொல்ல வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 4—50*

அடுத்தபடியாக, பட்டா கொடுப்பது–சமுதாயத்திலே நலிந்த பிரிவினருக்கு அடிப்படை வசதியான வீட்டுமனைப் பட்டாக்கள் அரசு மூலமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதை எந்த அரசாங்கமாக இருந்தாலும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ஜனத்தொகை அதிகமாகப் பெருகியதன் காரணமாக, ஒரு வீட்டிலே, 5 குடும்பங்கள், 4 குடும்பங்கள், 6 குடும்பங்கள் இருக்கிற ஒரு அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வசிக்கிற ஹரிஜனக் காலனிகளிலே பட்டா நிறைய கொடுக்க வேண்டுமென்று எங்கு சென்றாலும் மனுக்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் நிலங்களைக் கையகப்படுத்தும் போது, பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடுகின்றது. குறிப்பாக, நிலத்தின் உரிமையாளர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். அவர்கள் வழக்குமன்றத்திற்குச் செல்லும்போது, பட்டா கொடுப்பது நிறுத்தி வைக்கப்படுகிறது. எனவே ஒவ்வோர் ஆண்டும் target fix (குறியீடு) செய்கிற அளவுக்குப் பட்டா கொடுப்பது கிடையாது. ஆகவே நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஏழை ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டாக்கள் அதிகமாகக் கொடுக்க வேண்டும். இந்த ஆண்டும் பட்டா கொடுப்பதற்கு 20 கோடி ரூபாய்தான் பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த 20 கோடி ரூபாயும் நிச்சயம் அந்தக் கோரிக்கைகளுக்குத் தகுந்தாற்போல் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நில ஆர்ஜிதப்படுத்துவதிலே, நிலச் சொந்தக்காரர்கள் வழக்குமன்றத்திலே stay வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு stay வாங்கிய கேஸ்கள் கிட்டத்தட்ட 600 வழக்குகளுக்கு மேல் பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ளன. 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள், 8 ஆண்டுகளுக்கு மேலாக பட்டா கொடுப்பதிலே இருக்கும் இந்தச் சிக்கல்களைத் தீர்க்கின்ற வகையிலே ஒரு தனி கோர்ட் அமைத்திட வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். காரணம், இன்றைக்கு ஊழல் வழக்குக்காக தனி நீதிமன்றம் வந்துவிட்டது. பொருளாதாரக் குற்றத்திற்காகத் தனி நீதிமன்றம் வந்துவிட்டது. ஆகவே ஆதிதிராவிட மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்ற இந்தப் பட்டா கொடுக்கிற விஷயங்களுக்காகவும், ஒரு தனி நீதிமன்றத்தை ஏற்படுத்தினால், அந்த நீதிமன்றத்தின் மூலமாக வன்கொடுமைகள் சட்டம், தீண்டாமை கொடுமைகள் சட்டம் போன்ற பல்வேறு பிரச்சினைகளை

இதன் மூலமாகத் தீர்த்துக்கொள்ளலாம். ஆகவே தமிழக அரசு இதையும் கருத்தில்கொள்ள வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய் நிலை ஆணை எண் 24–ன்கீழுள்ள நிபந்தனைகளின்பேரில் பல்வேறு காலகட்டங்களிலே, நகர்ப்புறங்களிலே பொதுப் பிரச்சினைக்காக அரசு நிலங்கள் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, அண்ணாமலை நகர் பேரூராட்சி இருக்கிறது. அந்த அண்ணாமலை நகர் பேரூராட்சியில் கிட்டத்தட்ட 700 பேருக்குமேல் பட்டா வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த 700 பேரும் 50 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு குடியிருக்கிறார்கள், அரசு மனைகளிலே. 50 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டு வரி செலுத்திக்கொண்டு, தண்ணீர் வரி செலுத்திக்கொண்டு, மின் இணைப்பு எல்லாம் பெற்றிருக்கிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 50 ஆண்டுகள், 60 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்பவர்களுக்கு அரசு, பட்டா கொடுக்குமென்று ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்திட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அண்ணாமலை நகரிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுக்கு 7 மணித் துளிகள்தான் வருகின்றன. நீங்கள் பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து இருக்கிற காரணத்தால், உங்களுக்கு 10 மணித் துளிகள் தந்திருக்கிறேன். இன்னும் 2 மணித் துளிகள்தான்; முடித்துவிடுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய முதல் பேச்சு என்பதால், சிறிது நேரம் கூடுதலாக ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலை நகரில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒன்று இருக்கிறது. **

*பிற்பகல் 4—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வது முறையற்றது. குற்றச்சாட்டாக இருந்தால், என்னிடத்திலே கொடுத்து அனுமதி வாங்கிக்கொண்டதற்குப் பிறகுதான் சொல்ல வேண்டும். தாங்கள் குறிப்பிட்ட அந்தப் பெயர், அதுசம்பந்தமான விவரம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. **அதனால்தான் குறிப்பிட்டேனேயொழிய, இதை ஒன்றும் குற்றச்சாட்டாக நான் குறிப்பிடவில்லை. காரணம், அந்தப் புறம்போக்கு நிலங்களை, அரசு நிலங்களைப் பொதுமக்கள் எதற்கும் பயன்படுத்த முடியவில்லை. குடிநீர்ப் பிரச்சினை இருந்ததால், நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது என்னுடைய பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலே ஒரு வாட்டர் டேங்க் கட்ட நான் 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தேன். அந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக்கொள்வதற்குக்கூட அங்கே இடமில்லை. அதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த நிலங்களைப் பொதுமக்களுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்று உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் சிதம்பரம் வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சித் தலைவருடைய உத்தரவை நடைமுறைப்படுத்துவதில்லை. அவர்கள், சம்பந்தப்பட்டவர்களிடத்தில் கையூட்டைப் பெற்றுக்கொண்டு மக்களுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் இந்த மாமன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கு சாதாரண வாட்டர் டேங்க்–கூடக் கட்டுவதற்கு உரிமை இல்லையென்றால், இதை எங்கே போய்ச் சொல்வது? அங்கு, இதுபோன்று பல பிரச்சினைகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 700–லிருந்து 800 பேர், 50 ஆண்டுகள், 60 ஆண்டுகளாகக் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா கொடுக்கவில்லை. ஆகவே இந்த மாமன்றத்தின் மூலமாக தமிழக அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அண்ணாமலை நகர பேரூராட்சியில் சொந்த பட்டா இல்லாமல் அரசு நிலங்களில் குடியிருக்கின்ற 700 பேர்களுக்கு கட்டாயம் பட்டா கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடியுங்கள். ஒரு மணித் துளிதான் இருக்கிறது.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** முதல் பேச்சு. ஆயத் தீர்வைபற்றி இங்கே பல்வேறு கருத்துகளைக் கூறலாமென்று இருந்தேன். இங்கு எல்லோருக்கும் தெரிந்த கள்ளச் சாராயம்பற்றி நான் அதிகமாக சொல்லத் தேவையில்லை. என்னுடைய கடலூர் மாவட்டம், அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற திருச்சி மாவட்டங்களில் எல்லாம் அதிகமாக கள்ளச் சாராயம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காய்ச்சப்படுகிறது. கிட்டத்தட்ட 3000–க்கு மேற்பட்ட கிராமங்களிலே கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதாக இங்கு தெரிவித்திருக்கிறார்கள். அதாவது, 3894 கள்ளச் சாராயம் காய்ச்சும் கரும்புள்ளி கிராமங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. இந்தக் கரும்புள்ளி கிராமங்களிலிருந்து கள்ள மது, தீர்வை செலுத்தப்படாத மது ஆகியவற்றை அறவே ஒழிக்க தீவிரமான நடவடிக்கை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் எடுப்பார்கள் என்று இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். கள்ளச் சாராயம் எங்கெல்லாம் காய்ச்சப்படுகிறது, யாரெல்லாம் காய்ச்சுகின்றார்கள் என்று அரசுக்கே தெரிந்திருந்தும், ஏன் சரியான முறையிலே நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கள்ளச் சாராயத்தை அதிகமாகப் பயன்படுத்துகின்றவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் ஏழை விவசாயக் கூலிகள்தான். இதனால் அவர்களுடைய பொருளாதாரமே சீரழிந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே தன்னார்வ தொண்டு நிறுவனங்களை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக, பெண்களின் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வைக்கு வைக்க விரும்புவதெல்லாம், இந்தக் கள்ளச் சாராயம் விற்பதன் மூலமாக, கள்ளச் சாராயம் காய்ச்சுவதன் மூலமாக பெண்கள்தான் அதிகமாக கிராமங்களில் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு திருவள்ளூர் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களை அங்கிருந்த தன்னார்வத் தொண்டு நிறுவனத்திலிருந்து இரண்டு பெண்கள் தட்டிக் கேட்டதன் மூலமாக கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகள் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்களுக்கு ஊக்கம் அளித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த கள்ளச் சாராயம் காய்ச்சுவது நிறுத்தப்பட வேண்டும் என்றால், முதலிலே காவல் துறையைச் சீர்செய்ய வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு, கள்ளச் சாராயம் விற்பதற்கு காவல் துறை அதிகாரிகள் யாரெல்லாம் உடந்தையாக இருக்கிறார்களோ, அவர்கள்மீது முதல்கட்டமாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5—00*

அடுத்ததாக, பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, ஒரு கிராமத்திலே கள்ளச் சாராயம் விற்கிறது என்றால், அங்கே இருக்கின்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த மகளிர்



குழு சென்று கேட்கிறது. உடனே, கள்ளச் சாராயம் விற்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அந்தக் கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்குச் செல்கின்றார்கள். அடுத்த கிராமத்திலே கேட்கும்போது இரண்டு கிராமத்திற்கும் இடைப்பட்ட அந்த எல்லைக் கோட்டிலே விற்கிறார்கள். இந்தக் கிராமத்தையும் சேராமல், அந்தக் கிராமத்தையும் சேராமல், நடுவே விற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இதுபோன்ற பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளைப் போக்கி, அரசு ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, கள்ளச் சாராயத்தின் மூலமாக நடமாடிக்கொண்டிருக்கின்ற அந்த ஊழலை ஒழிக்க வேண்டும். காவல் துறை அதிகாரிகளைச் சீர்செய்து, கள்ளச் சாராயத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் ஆயத் தீர்வையின் மூலமாக, மதுவிலக்கு மூலமாக வருகின்ற வருவாயில், ஒரு கணிசமான தொகையை தன்னார்வ தொண்டு நிறுவன–மகளிர் குழுவிற்கு அளித்திட வேண்டும். மகளிர் குழுவிற்கு, காவல் துறை அதிகாரிகளும் உறுதுணையாக, ஒரு support-ஆக இருந்தால்தான் அந்தந்தக் கிராமத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியுமென்று சொல்லி, இந்த வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைக் கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுதர்சனம்.

**திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தை வணங்கி என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

ஆண்டவனே பொறுக்க முடியாத சோதனைகளைச் சாதனைப் படிகளாக மாற்றி, தாங்கிக்கொள்ள முடியாத அவமானங்களைத் தாங்கி, செய்யாத தவறுக்கு சிறையில் துன்பப்பட்டு, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக்காத்து, ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லாபுரம் ஒன்றிய கழகச் செயலாளரான என்னை நம்பிக்கையுடன் சட்டமன்ற உறுப்பினராக்கிய, எங்கள் கழகத்தினுடைய காவல் தெய்வம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், கும்மிடிப்பூண்டி தொகுதி அனைத்து மக்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அத்துடன் கூட்டணிக் கட்சி நண்பர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி, இந்த மாமன்றத்தில் பேச அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத்

[திரு. கே. சுதர்சனம்] [2001 செப்டம்பர் 3

தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த நலத் திட்டங்களைப்பற்றி, நல்ல உள்ளத்துடன் பாராட்டியதற்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் சுமையுடன் வாழும் விவசாயிகளுக்காக, கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி 310.5 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ததற்காக விவசாயிகளின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயிகளின் நலனில் அக்கறையுள்ள இந்த அரசு, எங்களுடைய பகுதியில் திருக்கண்டலம், கொசஸ்தலம் ஆறுகளில் மழைக் காலங்களில் தண்ணீர் வீணாகச் சென்று கடலில் கலப்பதைத் தவிர்க்க நீர்த் தேக்க அணைக்கட்டுகள் கட்டுவதற்கான திட்டத்தை அறிவித்ததற்கும், விவசாயிகள் உற்பத்தி செய்த மோட்டா ரக நெல்லை விற்பனை செய்ய முடியாமல் அவதிப்படும் விவசாயிகளுக்கு, வெளி மாநிலங்களுக்கு கொண்டுசெல்ல அனுமதியளித்ததற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு விவசாயிகளின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளின் நலனில் கருணையுள்ளம் படைத்த அம்மா அவர்கள், விவசாயிகள், நிலவள வங்கிகளில் பெற்ற கடனுக்கான அபராத வட்டியை மட்டுமாவது கருணை வைத்து, தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள் அம்மா.

மேலும், கடந்த திமுக ஆட்சியில், எங்கள் தொகுதிக்குட்பட்ட அனைத்து நீர்ப்பாசன ஏரிகள், ஏரிகளின் வரவுக் கால்வாய்களைச் சீர் செய்யாமல் விட்டு விட்டார்கள். அம்மா அவர்கள், எங்கள் தொகுதியில் உள்ள ஏரிகள், குளங்களைச் சீர் செய்து அதில் மண்டிக் கிடக்கின்ற கடல்பாலை என்கிற செடிகளை அப்புறப்படுத்த நடவடிக்கைகளை எடுக்கும்படி அம்மா அவர்களிடம் விவசாயிகள் கேட்டுக்கொள்கிறார்கள். இதனால் மழைக் காலங்களில் ஏரிகள், குளங்கள் நிரம்பி இருந்தால், விவசாயிகள் பயன்படுத்தும் நிலத்தடி நீர் மற்றும் சென்னைக்கு வரும் குடிதண்ணீர் ஆழ்குழாய்க் கிணறுகளின் நீர்மட்டம் உயரும் என்று விவசாயிகள் அன்புடன் அம்மாவுக்குத் தெரிவிக்கிறார்கள்.

கடந்த 1993–94ஆம் ஆண்டு அம்மா அவர்கள் விவசாயிகளுக்காக கும்மிடிப்பூண்டியில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்காக சுமார் 85 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்தார்கள். சர்க்கரை ஆலை அமைப்பதற்கான



2001 செப்டம்பர் 3] [திரு. கே. சுதர்சனம்]

அனைத்து அனுமதிகளும் பெற்று, விவசாயிகள் ரூ. 220 லட்சங்களை வைப்புத் தொகையாக டெபாசிட் செய்தார்கள். அதற்காக அம்மா ஆட்சிக் காலத்தில் 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டு தயார் நிலையில் இருந்த இந்தத் திட்டத்தை, கடந்த தி.மு.க. ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டார்கள். விவசாயிகள்மீது கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இத்திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கும்மிடிப்பூண்டி தொகுதியைச் சேர்ந்த விவசாயிகள், பொன்னேரி தொகுதியைச் சேர்ந்த விவசாயிகள் இதை விரும்புகிறார்கள் அம்மா. இந்த கும்மிடிப்பூண்டி சர்க்கரை ஆலையைக் கொண்டுவந்தால், இப்போது அங்கே நிலத்தடி நீர் குறைந்திருப்பதால், விவசாயிகளுக்குத் தங்களுடைய இயல்பான பிழைப்பை நடத்த ஆதரவாக இருக்கும் என்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5—05*

1985–லிருந்து 1989 ஆம் ஆண்டுகள் வரை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் காலத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஆதிதிராவிடர் மற்றும் ஏழையெளிய மக்களுக்காகக் கட்டிய, மங்களூர் ஓடுகள் போட்டு அமைத்த தொகுப்பு வீடுகள், 1991–92–ல் கட்டிய கான்கிரீட் வீடுகள், எங்கள் கும்மிடிப்பூண்டி தொகுதியில் சுமார் 1500 வீடுகள் சீர்கெட்ட நிலையில் பழுதடைந்துள்ளன. இதில் வாழும் மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். இதனைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டுள்ளேன். மேற்படி வீடுகளை, கச்சா வீடுகளைச் சீரமைக்கும் நிதியிலிருந்து எங்கள் தொகுதிக்கு உள்ளாட்சித் துறையிலிருந்து அதிகமாக நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1989–லிருந்து 1990 வரையில் கட்டப்பட்ட கான்கிரீட் வீடுகளை மட்டும்தான் அந்தக் காலத்தில் ரிப்பேர் செய்தார்களேயொழிய, புரட்சித் தலைவர் கட்டிய வீடுகளைத் தத்தளிக்க விட்டுவிட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீனவர்களின் நல்வாழ்க்கையில் அக்கறை கொண்டவர்கள். அவர்கள் 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மீனவர்களுக்காக 4 ஆயிரம் தொகுப்பு வீடுகளைக் கட்டித் தருவதற்கு அனுமதியளித்ததற்காகவும், பழவேற்காடு ஏரியைச் சுற்றுலாத் துறை மூலம் சீரமைக்க 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதற்காகவும், மீனவர்கள் சார்பாகவும், கும்மிடிப்பூண்டி தொகுதி

மக்கள் சார்பாகவும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாயே! கும்மிடிப்பூண்டி தொகுதி மற்றும் பொன்னேரி தொகுதியைச் சேர்ந்த கடலோரப் பகுதியில் 63 மீனவ குப்பங்கள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் பழவேற்காடு ஏரிப் பகுதியில் மீன்பிடி தொழிலைச் செய்து வாழ்கிறார்கள். கடந்த 4 வருடங்களாக மீன்பிடி தொழில் இல்லாமல், அவர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த, பழவேற்காடு ஏரிக்கு வரும் கடல் முகப்பு மணல் மூடிவிட்டதால், கடலிலிருந்து நீரும், மீன் வளமும் பழவேற்காடு ஏரிக்கு வருவதற்கு வழியில்லை. இதனால் மீனவர்களின் வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தாயே! இப்போது நான் சட்டசபைக்கு வருவதற்கு முன்னால்கூட, அந்தத் தாய்மார்கள் வந்து தங்கள் பிரச்சினைபற்றி அம்மா அவர்களிடம் சொல்லுங்கள்: எங்களுக்கு முகப்பைச் சுத்தம் செய்து கொடுத்தால்தான் எங்கள் வீட்டில் இருப்பவர்கள் மீன் பிடிப்பார்கள்: நாங்களும் வயிறார சாப்பிடுவோம் என்று எடுத்துச் சொல்ல வேண்டுமென்று அந்தத் தாய்மார்கள் வந்து சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். இப்போது மீனவர்கள் வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. மீனவர்கள்மீது கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, முகப்பில் இருக்கும் மணலை அப்புறப்படுத்தி மீனவர்கள் வாழ்வு மலர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, மீனவ மக்கள் இந்தத் தகவலை அம்மா அவர்களிடம் நான் தெரிவிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறார்கள் அம்மா. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஏழையெளியவர்களின் பட்டியல்–Below Poverty Line - 1999 ஆம் வருடம் அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கப்பட்டது. அப்பட்டியல் அலங்கோலமாகத் தயாரிக்கப்பட்டது. இதனால் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் வறுமைக் கோட்டுக்கு மேலே வந்துள்ளதாகக் கருதப்பட்டது. இதனால் ஏழையெளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால், கும்மிடிப்பூண்டி தொகுதியில் B.P.L. பட்டியலை மீண்டும் ஆய்வு செய்து, திருத்திய பட்டியலை அவர்கள் அரசுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா, எங்கள் தொகுதியில் அரசாங்கப் பேருந்துகள் பற்றாக் குறையினால் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், அலுவலர்கள், பொது மக்கள், வியாபாரிகள் ஆகியோர் பேருந்துகளின் கூரைகள் மேல் ஏறி



ஆபத்தான நிலையில் பயணம் செய்கிறார்கள். அதேபோன்று, எங்கள் பகுதியில் வேன்களின் கூரைமேலும் பயணம் செய்கிறார்கள். ஏனென்றால் எங்கள் பகுதியில் இரயில் வசதி குறைவாக இருப்பதாலும், ஆண்டுதோறும் எங்கள் பகுதியைச் சேர்ந்த, சக்தி வாய்ந்த பெரியபாளையம் ஸ்ரீ பவானி அம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருவதாலும், அம்மா அவர்கள் இதனைக் கண்காணித்து, தனிக் கவனம் செலுத்தி, எங்கள் பகுதிக்கு அதிகமான பேருந்துகளை அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கிறார்கள். நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் போக்குவரத்துக் கழகம், புதிய பேருந்துகளை அதிகமாக விடுவதற்கு நிதிப் பற்றாக்குறை என்றால், மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, தனியாருக்குப் பேருந்துகளை விட்டு, அந்த மக்களினுடைய துன்பத்தைப் போக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் நான் அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மக்களின் நலன்தான் அம்மா அவர்களின் நலன். மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். மக்களுடைய சௌகரியத்திற்காக வசதிகளைச் செய்துகொடுக்க நம் நிதிநிலை சரியில்லை என்றாலும், முக்கியமாக அவர்களுடைய பிரயாணத்தில் எந்த அசௌகரியமும் ஏற்பட வேண்டிய அவசியமில்லை என்பதை அம்மா அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டத்தில் சரியாக மழை பெய்யாததால், ஏரிகள், குளங்கள் சீர் செய்யப்படாததால் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்டதால், விவசாயம் முழுமையாக செய்யாததால், இதனை நம்பி வாழும் விவசாயக் கூலிகள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்த மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தாயே! இதனை அம்மா அவர்கள் கவனத்தில்கொண்டு அந்தச் சிறிய விவசாயக் கூலிகள் மற்றும் விவசாயிகளுக்கு அந்தந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக சிறு தொகை கடன் அளிக்க வேண்டுமென்று அம்மா அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தாயே!

*பிற்பகல் 5—10*

மேலும், இந்தத் திருவள்ளூர் மாவட்டத்தில் மழை பொழியாததால், அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். 20 விவசாயிகளும் முழுஅளவிற்கு விவசாயம் செய்ய முடியவில்லை. ஏக்கர் வைத்திருக்கிற விவசாயி 3 ஏக்கர், 4 ஏக்கர்தான் விவசாயம் செய்ய முடிகிறது. அதனால் விவசாயிகளும் சுகப்படவில்லை, விவசாயிகளை

நம்பியிருக்கும் கூலிகளும் சுகப்படவில்லை. தாயே, இந்தப் பற்றாக்குறை நிதிநிலைமையில் எப்படி இவர்களைச் சமாளிப்பது? தாய் மட்டும் என்ன செய்வார்கள் என்று நானும் மக்களிடத்திலே ஊர் ஊராகச் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனாலும், நீங்கள் தாயிடத்தில் சொல்லுங்கள்: அம்மா அவர்கள் செய்வார்கள்: நீங்கள் இந்த 20 நாட்களாக என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், சட்டசபையில் பேசவில்லையா, எங்கள் குறைகளைச் சொல்லவில்லையா என்று கேட்கிறார்கள். நானும் பேசுவதற்கு எழுதிக் கொடுத்துவிட்டேன். 20 நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் இந்தச் சந்தர்ப்பம் தருகிறார்கள் என்று கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நீங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. கே. சுதர்சனம்:** இந்த வாய்ப்பு அளித்த அம்மா அவர்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் கும்மிடிப்பூண்டி தொகுதியின் சார்பாகவும், கூட்டணிக் கட்சிகளின் சார்பாகவும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன். (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின்பால் எல்லையற்ற அன்பும், பாசமும் கொண்ட கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றபோது, இந்த மணல் மேடை உடனடியாக அகற்றி மீனவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டபோது, on the spot உடனடியாகவே அந்த மணலை அகற்றுவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இது குறித்து நம்முடைய பழவேற்காடு பகுதியில் இருக்கிற அந்த மணல் மேடை அகற்றி, 63 மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் வாழ வேண்டுமென்றும், மீன் தொழில் அங்கே பாதிக்கப்படாமல், மீன் உற்பத்தி இருக்க வேண்டுமென்பதற்காகவும் ஏறத்தாழ 80 இலட்சம் ரூபாய் செலவில், தோராய மதிப்பீடு ஒன்றை நம்முடைய வட சென்னை அனல் மின் நிலையத்தில் பணியாற்றுகின்ற பொறியாளர்களை அங்கே அனுப்பி, ஆய்வு செய்து, ஒரு மதிப்பீடும் தயார் செய்யப்பட்டது. Dredging Corporation of India-வினுடைய அந்த இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்தி, மீன்வளத் துறை மூலமாக அது விரைவிலே நிறைவேற்றப்பட்டு, பழவேற்காடு



மீனவர்களுக்கு நல்ல வசதியை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அளிக்கவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுதர்சனம், நீங்கள் போய் இதை உங்கள் தொகுதி மக்களிடம் சொல்லுங்கள். திரு. ஞானசேகரன் (குறுக்கீடு)

**திரு. கே. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுக்கு நன்றி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் ஓர் அருமையான point-ஐ இங்கே சொன்னார்கள். இந்த B.P.L. list – வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுடைய பட்டியலை முன்பு தயாரித்தபோது மக்கள் நலப் பணியாளர்களை அதிலே ஈடுபடுத்தியுள்ளார்கள். அதிலே எங்களுடைய மாவட்டத்திலேகூட, வந்தவாசிப் பகுதியில் சில மக்கள் நலப் பணியாளர்கள், முகமதியர்கள் பெயர்களில் 3, 4 பேர்தான் வந்தது. மீதி பல முகமதியர்கள் பெயர் வரவில்லை. பல பேர் அந்தப் பட்டியலில் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். இன்னும் பல இடங்களில் இப்படிக் குளறுபடிகள் நடந்துவிட்ட காரணத்தால் எங்கள் வேலூரைச் சார்ந்த ஜெயகர் ஜோசப் என்பவர் ஒரு ரிட் மனுவை High Court-ல் தாக்கல் செய்திருக்கிறார். இப்படிப்பட்ட B.P.L. list-ஐ மாற்றியமைக்க தயவுசெய்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றுகூட, காலைப் பத்திரிகையில் பல செய்திகள் வந்திருந்தன. மத்திய அரசு, மாநில அரசைப் பணித்து B.P.L. list-ஐச் சரிசெய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு வந்ததாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்த B.P.L. list-ஐ மாற்றி, அதாவது தி.மு.க. அரசிலே அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்து (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சரியாக list தயாரிக்காததால் இந்த அரசு உடனடியாக மாற்றியமைத்து, உண்மையிலேயே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களின் பட்டியலை தயாரிக்குமா? ஏனென்றால் மத்திய அரசினுடைய திட்டத்தை இதில்தான் நாம் கண்டிப்பாக implement செய்தாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அறிய விரும்புவதெல்லாம் இந்த B.P.L. list மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மேல் எனது கருத்துகளை எடுத்துவைக்க வாய்ப்பளித்த உங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருவாய்த் துறை அனைத்துத் துறைகளின் தாய்த் துறை என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட துறையின்கீழ் நான் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் புதிய அரசைப் பொறுத்தவரையிலே, நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே இந்த அரசு தலித் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழனாகவும் விளங்கிச் செயல்பட்டு வருவதை நான் முதலிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1991–லிருந்து 1996 வரை ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலே நாங்கள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் தமிழக முதல்வராக விளங்கிய புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்கு நிறைவேற்றி வைத்ததை இன்றைக்கு நன்றியோடு நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பஞ்சமி நிலங்களைக் கண்டு ஆய்ந்து, மீண்டும் அதை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம். 1996–லே திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலைச் சந்தித்தபோது, தங்களுடைய தேர்தல் அறிக்கையிலே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பஞ்சமி நிலங்களையெல்லாம் ஆய்ந்து உடனடியாக அவற்றை தலித்களுக்கு வழங்குவோம் என்று தேர்தல் அறிக்கையிலே வைத்தார்கள். 1996–லிருந்து 2001 வரை ஐந்தாண்டு காலமாக நாங்கள் எத்தனையோ முறை கேட்டு கேட்டு, வலியுறுத்தி வலியுறுத்தி, சலித்துப்போனோம். அது குறித்து ஒரு சிறிய நடவடிக்கையைக்கூட கடந்த அரசு மேற்கொள்ளவில்லை. எனவே பஞ்சமி நிலங்களைக் கண்டாய்ந்து, தலித் மக்களுக்குரிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சொந்தமான அந்த நிலங்கள், மற்றவர்கள் ஆக்கிரமிப்பில் இருப்பதைத் தடுத்து நிறுத்த பஞ்சமி நில அமைப்பு ஆணையம் என்ற ஒரு ஆணையத்தை, ஒரு உயர் அலுவலரைக்கொண்டு ஏற்படுத்தி, புரட்சித் தலைவி அவர்கள் அவற்றை மீட்டு, தலித் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே முதலிலே நான் முன்வைக்க விரும்புகிறேன்.



பிற்பக 5—15

அதேபோல, இங்கே காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. வள்ளல் பெருமான் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, இன்னொன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தலித் மக்களுக்கு வீட்டுமனை வழங்கப்படுகிற நிலை வருகிறபோது, நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திற்குப் போய் தடுப்பாணை வாங்கிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகள் மட்டும் இன்றைக்கு தமிழகத்திலே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இந்த வழக்குகளை விசாரிக்க ஒரு தனி நீதிமன்றம் ஏற்படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலேயே இந்தச் சட்டப் பேரவையில் வலியுறுத்தி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்கூட மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படாமலேயே விட்டுவிட்டார்கள். நாங்கள் கடந்த ஆட்சியின்போது, இந்தத் தனி நீதிமன்றம் வேண்டும் வேண்டும் என்று வலியுறுத்தி, அதற்காக ஒரு அரசு கோப்புகூட உருவானது. ஆனால் அன்றைக்கு முதல்வராக இருந்தவர், அரசாங்கத்திடம் போதிய நிதி இல்லை என்று அவற்றை மறுத்துவிட்டார். ஆனால் எதிர்க்கட்சியினரைப் பழிவாங்க, குறிப்பாக இன்றைக்கு முதல்வராக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பழிவாங்க, அவர்களை எந்த அளவிற்கு அரசியலிலிருந்து ஒதுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு ஒதுக்குவதற்காக கோடிக்கணக்கிலே செலவு செய்து தனி நீதிமன்றம் வைத்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களிலே தேங்கிக் கிடக்கின்றன. அதனால் பல்லாயிரக்கணக்கான தலித் மக்கள் வீட்டுமனை பெறாமல் அவஸ்தைக்கு உள்ளாகிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு தனி நீதிமன்றம் வேண்டும் என்ற கோரிக்கை வைத்தால் அந்தத் தனி நீதிமன்றத்தை வைப்பதற்கு மறுத்த கடந்த கால அரசு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது, நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் வழக்குமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிற காரணத்தினாலே 600–க்கும் மேற்பட்ட வழக்குகள் இன்றைக்கு நிலுவையில் இருக்கின்றன: அந்த வழக்குகளையெல்லாம் பைசல் செய்வதற்காகத் தனி நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மனைப் பட்டா வழங்குவதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, இன்னும் நிறைய வழக்குகள் எல்லாம் நிலுவையில் இருக்கின்ற காரணத்தினாலே, கூடுதலாக நீதிமன்றங்கள் அமைக்க வேண்டுமென்று சொல்லி, தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கூடுதல் நீதிமன்றம் அமைக்கும் தேவையை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் இந்த முயற்சியை நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் தனி நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் நாங்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்தோம். கடந்த ஐந்தாண்டு காலமாக நாங்கள் இதற்காகப் பல கோரிக்கைகளை, போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். ஆனால் அந்த அரசு இந்தத் தனி நீதிமன்றத்திற்கு நிதி இல்லை, அரசிடம் அப்படிப்பட்ட நிதி இல்லை என்று கோப்பிலேயே மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் எழுதினார். ஆனால் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்காக கோடிக்கணக்கிலே இங்கே இருக்கிற–(மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலே இருக்கிற வழக்குரைஞர்களுக்கு சரியான தகுதியில்லை என்று நினைத்து, வட இந்தியாவிலிருந்தெல்லாம் இலட்சக்கணக்கான செலவிலே வழக்குரைஞர்களைக் கொண்டுவந்து, அதற்குச் செலவு செய்தார்கள். அதைத்தான் இந்த மன்றத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இன்றைக்கு நாங்கள் சொல்வதற்கு முன்பே இந்த அரசு தனி நீதிமன்றம் வைப்பதற்கு முயற்சிக்கிறது என்று சொன்னால், அதனால்தான் நான் சொன்னேன், இந்த அரசைப் பொறுத்தவரையிலே இது ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற தோழனாக விளங்குகிற, புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் இருக்கிற அரசு என்பதனாலே நான் கேட்காமலேயே வழங்குகிற அந்தப் பக்குவம் அவருக்கு இருக்கிறது.

*பிற்பகல் 5—20*

அதேபோல இந்த நிலக் குத்தகைகள் எல்லாம் வழங்குகிறபோது, நம்முடைய இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள், கோயில் நிலங்கள், அரசு நிலங்கள், குத்தகைக்கு விடுகிறபோது, அவையெல்லாம் சில இடைத்தரகர்களுக்கே போய்ச் சேருகிறது. விவசாய நிலங்களைப் பொறுத்தவரையில் விவசாயக் கூலிகளாக இருக்கிறவர்கள் மிகப் பெரும் அளவிலே தலித் மக்கள், ஏழை மக்கள், அடித்தளத்து மக்கள். ஆனால் அவர்களுக்கு கோயில் நிலம் என்றால் குத்தகை ஒருவருக்கு



வழங்கப்படுகிறது. அந்தக் குத்தகைதாரர்களிடமிருந்து 'sub-lease' என்று சொல்லப்படுகிற துணை குத்தகைக்குத்தான் விவசாயக் கூலிகள் பயிர் வைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. மகாத்மா காந்தி அவர்கள் தலித் மக்களைச் சொல்கிறபோது கடவுளின் குழந்தைகள் என்று சொன்னார். ஆனால் இந்தக் கடவுளின் குழந்தைகளுக்கு கோயில் நிலங்கள் துணை குத்தகைக்குப் போகுமே தவிர, அது நேரடி குத்தகைக்கு வருவது இல்லை. எனவே ஆயிரக்கணக்கான எக்டேர் நிலங்கள், கோயில் நிலங்கள் மற்ற நிலங்களை எல்லாம் குத்தகைக்கு விடுகிறபோது, அந்தக் குத்தகையை உண்மையாகவே விவசாயக் கூலிகளாக இருக்கிற, அடிப்படை விவசாயக் கூலிகளாக தொழிலில் ஈடுபட்டிருக்கிற தலித் மக்களுக்கு முன்னுரிமையோடு வழங்க வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, போலிச் சான்றிதழ்கள். இது இன்றைக்கு ஏராளமாகப் பரவியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் பேரிலே பலர் போலிச் சான்றிதழ்களை வாங்கி உயர் பதவிகளுக்கு எல்லாம் வந்திருக்கிறார்கள். பெரிய பொறுப்பிலே எல்லாம் வந்திருக்கிறார்கள். ஒரு முறை இந்தச் சட்டப் பேரவையிலேகூட ஒரு சட்டமன்ற உறுப்பினராக போலிச் சான்றிதழோடு வந்து நுழைந்துவிட்டதை நாம் பார்க்க முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) வழக்குமன்றத்திலே போய் அதை நாம் தீர்த்துவைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த முறைகூட இதுபோல ஒரு சட்டமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்திலே, தாராபுரத்திலேயிருந்து போலிச் சான்றிதழ் வாங்கி இந்தச் சட்டப் பேரவைக்கு வந்தார் என்று நாங்கள் வழக்குமன்றம் வரைக்கும் போனோம். ஆனால் என்ன நடந்தது என்று சொன்னால் இவருடைய அன்னையார் இறந்துபோனார். அந்த அன்னையார் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று காவல் துறையினரால் தவறான அறிக்கை பெறப்பட்டு இந்த மன்றத்திலே 5 ஆண்டுகாலம் தாழ்த்தப்பட்ட மக்களுடைய உரிமையை அவர்கள் பெற்றார்கள். இதைவிட கொடுமையைச் சொல்ல முடியாது. ஆகவே போலிச் சான்றிதழைத் தடுத்து நிறுத்துவதற்காக, முற்றிலும் இவற்றை ஆராய்வதற்காக ஒரு I.A.S. அலுவலரை, தகுதியுள்ள ஒரு I.A..S. அலுவலரை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, கள்ளச் சாராயம். இது ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களிலே இருக்கிறது என்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அயல்நாட்டு மது

வகைகளை, அயல்நாட்டு மது சில்லறைக் கடைகளுக்கான உரிமங்களை அங்கீகரிக்கிறது. ஆனால் நாட்டு சாராயம் என்று சொல்லப்படுகிற நம்முடைய உள்நாட்டு சாராயத்தை கடைகளில் அனுமதிப்பது இல்லை. இந்த இரு கொள்கை நிலைகளால் தாழ்த்தப்பட்ட மக்கள்தான் பெரிதும் அவதிக்கு உள்ளாகிறார்கள். கடந்த ஆட்சியிலே மட்டும் கடந்த 5 ஆண்டு காலத்திலே 120 பேர் கள்ளச் சாராயத்தினால் உயிர் இழந்தார்கள். கடந்த 5 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 120 பேர் கள்ளச் சாராயத்தினால் உயிர் இழந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 120 பேரிலே 100–க்கும் மேற்பட்டவர்கள் தலித்கள். கள்ளச் சாராயம் பெருகுவதற்கு–வழக்குகள், காவல் நிலையப் பிரச்சினைகள், காவல் நிலைய தாக்குதல்கள் இவையெல்லாம் உருவாவதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இந்தக் கள்ளச் சாராயம்தான். ஆகவே நான் புரட்சித் தலைவி அவர்களை இந்த நேரத்திலே பணிவோடு கேட்பேன், நீங்கள் மலிவு விலை சாராயக் கடைகளைத் திறங்கள், தவறு இல்லை. மலிவு விலை சாராயக் கடைகளைத் திறங்கள், அதனால் ஒரு தவறும் இல்லை. ஒரு சாதாரண, அடித்தள, ஏழை தலித் அல்லது விவசாயக் கூலி, ஒரு சாதாரண தச்சுத் தொழிலாளி, வேறு தொழிலாளி–அயல்நாட்டு மது வகைகள் குறித்து, வண்ண வண்ணச் சுவரொட்டிகளிலே, வண்ண வண்ண போர்டுகளிலே ஏதோ குறைந்த விலையில் தருகிறோம் என்று போர்டு வைக்கப்பட்டு, இன்றைக்கு அயல்நாட்டு மது வகைகள் விற்கப்படுகின்றன – அதனால் ஈர்க்கப்படுகிற அவன் பொருளாதார இழப்பிற்கு உள்ளாகிறான். 100 ரூபாய் கூலி வாங்குகிறவன், 50 ரூபாய் குடிப்பதற்குச் செலவு செய்கிறபோது பிரச்சினை வந்துவிடுகிறது. எனவே ஒரு தவறும் இல்லை, அதனால் மலிவு விலை சாராயக் கடைகளைத் திறக்கலாம் என்ற பணிவான கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். அடுத்து, குறைந்தபட்ச விவசாயக் கூலி இருக்கிறதே, தொழிலாளர்களுக்கு என்று தஞ்சை, நாகை போன்ற மாவட்டங்களிலே மட்டும் கொஞ்சம் வேகமாகவும், விழிப்புணர்வுடனும் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. பல்வேறு மாவட்டங்களிலே– வேலூரிலே, தருமபுரியிலே, சேலத்திலே, திருச்சியிலே இப்படிப்பட்ட மாவட்டங்களிலே–அந்த விவசாயக் கூலிகளுக்கு, குறைந்தபட்சக் கூலி



நிர்ணயச் சட்டம் இருக்கிறதே, அது கடுமையாகப் பின்பற்றப்படுவது இல்லை. எனவே எல்லாப் பகுதிகளிலும் இந்தக் குறைந்தபட்ச விவசாயக் கூலி நிர்ணயச் சட்டம் இருக்கிறதே, அதைப் பின்பற்ற வேண்டும். ஓர் ஆண் தொழிலாளியாக இருந்தால், அவன் ஏரோடு உழவு மாடோடு போனால் 100 ரூபாய் தர வேண்டும். பெண்ணாக இருந்தால், 5 மணி நேரத்திற்கு 45 ரூபாய் தர வேண்டும். இது சட்டத்திலே இருக்கிறதே தவிர, பல மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எனவே ஒவ்வொரு வட்ட அலுவலகத்திலும் ஒரு Deputy Tahsildar அளவுக்கு ஒருவரை நியமித்து, இதைக் கட்டாயமாக்கினால் என்றைக்கும் விவசாயக் கூலிகள், அடிமட்டத் தொழிலாளர்கள் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள். இதை எல்லா மாவட்டங்களிலும் கட்டாயமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 5—25*

இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னதுபோல, poverty line–வறுமைக் கோடு என்று சொல்கிறார்களே, இந்த வறுமைக் கோட்டை நிர்ணயிப்பது குறித்து கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் நாங்கள் உண்ணாவிரதம் இருந்தோம். சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வழக்குமன்றத்திற்குப் போனோம். கடந்த ஆட்சியிலே, உண்ணாவிரதம் இருந்தோம். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும்–below poverty line–வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருப்பவர்களை போன முறை யார் தேர்ந்தெடுத்தார்கள் என்றால், அந்தந்த ஆளுங்கட்சியினுடைய ஒன்றியச் செயலாளர்கள்தான் BPL list–ஐத் தயாரித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த BPL list-ல் இருக்கிறவர்களுக்குத்தான் மத்திய, மாநில அரசுகள் எல்லாவிதமான திட்டங்களையும் செயல்படுத்த வேண்டுமென்பது ஒரு மரபு. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அடித்தளத்து மக்களுக்கும் கூட அந்த நியதி மறுக்கப்பட்டு–வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் BPL List-க்கு உள்ளே இருக்கிறவர்களுக்குத்தான் அந்தத் திட்டங்களைத் தர வேண்டும். ஆனால் BPL List-ஐ யார் கடந்த ஆட்சிக் காலத்திலே தீர்மானித்தார்கள் என்றால், ஆளுங்கட்சியினுடைய ஒன்றியச் செயலாளர்களாக இருந்தவர்கள்தான். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள்தான் இந்த BPL List-ஐத் தயாரித்தார்கள். எனவே இதை மறுபரிசீலனை செய்து பழைய மரபிலேயே பொதுவாக, அடித்தளத்து, நலிந்த, இயல்பான வருமான வரம்புக்குட்பட்ட அடித்தளத்து மக்களுக்குத் தரவேண்டும் என்கிற அந்த

மரபை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாகவே, தென்னார்க்காடு மாவட்டமானாலும், திருநெல்வேலி மாவட்டமானாலும், இனக் கலவரங்கள் எல்லாம் எதற்காக வருகின்றன, அதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்று நாம் மிகவும் உற்றுநோக்கினால், அது ஏதாவது கோயில் திருவிழாவாக இருக்கும். இல்லாவிட்டால், அந்த ஊரிலே, கிராமத்திலே இருக்கிற பொதுச் சொத்துகள் இருக்கிறதே, அந்தப் பொதுச் சொத்துக்களை ஏலம் விடுவதிலே, அதைப் பயன்படுத்துவதிலே, மரப் பட்டாக்கள் அல்லது குளங்களிலே இருக்கிற மீன் பிடிக்கின்ற தன்மை அல்லது வேறு பொதுச் சொத்தைப் பயன்படுத்துவதிலே இருக்கிற, அந்தப் பயன்பாட்டை நுகர்கிற பிரச்சினையிலேதான் இனக் கலவரங்கள் பெருமளவுக்கு ஏற்படுகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுதான் பெரிய காரணம். எனவே அப்படிப்பட்ட பொதுச் சொத்துக்களை, மரங்களானாலும், குளங்களானாலும், அங்கேயிருக்கிற பொதுச் சொத்துக்களை ஏலம் விடுகிறபோது அல்லது அனுபவிக்கிறபோது அங்கே இருக்கின்ற சேரியானாலும், வேறு ஊரானாலும், பொதுவாக எல்லோருக்கும் பகிர்ந்து தருகிற அந்தத் தன்மையை ஏற்படுத்தினால் இனக் கலவரங்களை நாம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம். ஆகவே அந்த பொது மரங்களை ஏலம் விடுகிறபோது, எல்லா மக்களுக்கும் பகிர்ந்து அளிக்கின்ற அந்தத் தன்மையை உருவாக்க வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒன்றிரண்டு கோரிக்கைகளைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரையில் இங்கே சட்டப் பேரவையிலேகூட நாங்கள் சொல்லியிருக்கிறோம். கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே 1980–லே இதை உருவாக்கினார்கள். ஒரே நாளிலே ஓர் அவசரச் சட்டத்தின் மூலம் உருவாக்கி, அன்றைக்கு 2000 தலித்துகளுக்கு இட ஒதுக்கீட்டிலே அந்த வாய்ப்பை வழங்கினார்கள். 2000–க்கும் மேற்பட்ட தலித்துகள் அதிலே இருந்தார்கள். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடனே லட்சுமிகாந்தன் பாரதி ஆணையத்தைப் போட்டு, எப்படியாவது V.A.O. முறையை ஒழிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். பிறகு மீண்டும் சபாநாயகம் ஆணையத்தை உருவாக்கி அதை ஒழிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். இப்போது 524 என்கின்ற ஓர் ஆணையைக் கொண்டுவந்து கடந்த ஆட்சிக்காலத்திலே போட்டார்கள். அந்த 524



ஆணை என்னவென்று சொன்னால் உள்ளூரிலே இருக்கிற 10வது வகுப்பு படித்த ஒருவர் பொருத்தமாக இருந்தால் அவரே V.A.O.-வாக வரலாம். அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தின் மூலம் கடந்த 5 ஆண்டு காலத்திலே 2000–க்கும் மேற்பட்ட, காலியாக இருந்த V.A.O. பணியிடங்கள் Service Commission-க்குத் தெரியாமல் ஆங்காங்கே பூர்த்தி செய்யப்பட்டன. இதிலே இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படவில்லை. இதனால் தலித் மக்களுக்கு, 600 பேர்களுக்குப் பதவி கிடைத்திருக்க வேண்டும், ஆனால் கிடைக்கவில்லை. எனவே ஒட்டுமொத்தமாக அந்த 524 G.O.-வை ரத்து செய்ய வேண்டும். இனிமேல் வருகின்ற V.A.O.பணியிடங்களையும் நேரடியாக Public Service Commission இருக்கிறதே, அதுவே தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டுமென்கிற ஒரு மரபைக் கொண்டுவர வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினையை இன்னொரு நாள் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன், நேரமில்லை. இன்னும் 7,8 பேர்கள் பேச வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி, என்னைப் பேசுவதற்கு இந்த மாமன்றத்திற்கு அனுப்பிவைத்த எங்களுடைய சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்களை வணங்கி, என்னுடைய பேச்சைத் தொடங்குகின்றேன்.

வருவாய்த் துறையைச் சீரமைக்க ஏற்கெனவே சபாநாயகம் என்பவர் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, அதனுடைய பரிந்துரைகள் எதுவும் இதுவரையிலே எந்த ஒரு அரசாலும் ஏற்றுக்கொள்ளப்படாமல் நிலுவையில் இருந்து வருகின்றன. இதனால் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், பிறப்பு–இறப்புச் சான்றிதழ் வழங்குவதிலே பொதுவாக தாமதங்கள் ஏற்படுகின்றன. பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள். மண்டல துணை தாசில்தார் அவர்கள் ஏற்கெனவே வட்டாட்சியர் அலுவலகத்திலே பணிபுரிகிறார்கள். அவர்களை மண்டல அளவிலே ஒரு சிறிய அலுவலகத்தை ஏற்படுத்தி, அதிலே ஒரு Clerk-ஐ நியமித்து, அந்த இடத்திலேயே அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் மற்றும்

அனைத்துச் சான்றிதழ்களையும் வழங்க நாம் ஆவன செய்யலாம். அதேபோல இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் ஏறக்குறைய பத்தாயிரம் கிராம உதவியாளர்கள், தலையாரிகள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கிராம உதவியாளர்கள் எனப்படும் தலையாரிகள்தான் அந்தக் கிராமத்தினுடைய ஆணிவேராக இருக்கிறார்கள். அவர்கள் கிராமத்திலே உள்ள மூலைமுடுக்குப் பகுதிகளையெல்லாம் அறிந்தவர்கள். இப்பணியிடங்கள் ஆயிரக்கணக்கில் காலியாக இருப்பதால் கிராமங்களில் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் மற்றும் இடர்பாடுகளின்போது பொதுமக்களுக்குச் செல்லக்கூடிய அரசின் பயன்கள் உரிய நேரத்தில் போய்ச் சேர இயலாத நிலைமை உள்ளது. எனவே இவர்களை நியமிப்பதால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4 கோடி ரூபாய் மட்டுமே செலவாகிறது.

*பிற்பகல் 5—30*

அதேபோல இன்றைக்கு ஜமாபந்தி என்பது ஒரு சடங்கு போல ஆகிவிட்டது. ஜமாபந்தி என்றால் கிராமக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும். பொதுமக்களின் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டும். ஆனால் இன்று ஜமாபந்தி என்பது அலுவலர்களை ஒன்றிணைத்துச் செய்யும் ஒரு சடங்கு நிகழ்ச்சியாக இன்றையதினம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதேபோல வருவாய்த் துறையிலே சென்ற ஆண்டு வீட்டு மனைப் பட்டா வழங்க 60,000 குறியீடாக இருந்தது. ஆனால் சாதனை 1,63,829 ஆகும். ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகமாக இருக்கிறது. இந்த ஆண்டும் குறியீடு 60,000 என்று இருந்ததில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரை, அதாவது நான்கு மாதங்களிலே 24,927 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் குறைந்தது ஒரு இலட்சம் பட்டாக்கள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு 8,375 பேர்களுக்கு 5,643 ஏக்கர் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆணடு கடந்த நான்கு மாதங்களாக 2,399 பேர்களுக்கு 1,424 ஏக்கர் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதியிருக்கும் மாதங்களில் முனைப்பாகப் பணி செய்து மேற்கொண்டு 4,000 பட்டாக்களை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மூன்று மாதங்களிலே சுமார் 14 கோடி ரூபாய் அளவிலே நகர்ப்புறங்களிலே வரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 9 மாதங்களில் விரைவாக வரி வசூல் செய்ய ஏற்பாடு செய்யலாம்.



அதேபோல பாலாற்றிலிருந்து ஏரிகளுக்குச் செல்லும் கால்வாய்கள் முற்றிலுமாகத் தூர்ந்து போயிருக்கின்றன. ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கிறபடியால் ஆற்றிலிருந்து ஏரிக்கு வருகிற நீர்வரத்து தடைபட்டிருக்கிற காரணத்தினாலே அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றி கால்வாய்கள் சீர் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் குடும்பத் தலைவரை இழந்து வாடும் ஏழை மக்களின் குடும்பங்களுக்கு நலிந்தோர் நிவாரணத் தொகை ரூபாய் பத்தாயிரம் வழங்கப்படுகிறது. ஆண்டுக் கணக்கில் வழங்கப்படாமல் இது நிலுவையில் உள்ளது. இதற்கான போதிய நிதி ஒதுக்கீட்டை உடனே அரசு அளித்தால் எத்தனையோ ஏழை மக்கள் பயனடைவார்கள். அதேபோல பல்வேறு தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் இறந்தால் விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் உதவித்தொகைகள் வழங்கப்பட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய காலத்தில் 1977–லே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கென வழங்கப்படும் தொகை மிகவும் குறைவாகவே உள்ளது. அங்கஹீனம் ஆனவர்களுக்குக்கூட அளிக்கப்படும் உதவித்தொகை என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. 1970 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளிலே கள் மற்றும் சாராயக் கடைகள் ஏலம் எடுத்ததில் பெரும் பணக்காரர்கள் மற்றும் நிலச்சுவான்தார்கள் தங்கள் பெயரிலே கடைகளை ஏலம் எடுக்காமல் தங்களிடம் பணிபுரிந்த ஏழை கூலித் தொழிலாளர்கள் மற்றும் பாமர மக்களின் பெயரிலே எடுத்தார்கள். இன்று அதற்கான நிலுவைத் தொகை ஒன்றும் அறியாத லட்சக்கணக்கான ஏழை மக்களின் மேல் ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் நிலுவையில் இருந்து வருகிறது. பல்வேறு குடும்பங்கள் நாசம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த கிஸ்தி தொகையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதிப்பதுபோல, அவர்களுக்குக் குடியிருப்பும் கட்டினால் அவர்கள் வேலை செய்யும் கிராமங்களிலேயே தங்கியிருப்பார்கள். அதனால் அவர்களுக்கு குடியிருப்பு கட்ட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத் தாள்கள் போலியாக அச்சிட்டு விற்பதால் பொதுமக்கள் வாங்கிய சொத்துக்குரிய பத்திரம் செல்லுபடியாகாமல் போகிறது. கடந்த ஆண்டிலேகூட எங்கள் திருப்பத்தூரிலே மூன்று பேர் சேர்ந்து சுமார்

1 கோடி ரூபாய் அளவிற்குப் போலிப் பத்திரங்களை விற்று அங்குள்ள ஏழை விவசாய மக்களை ஏமாற்றினார்கள். அதை வாங்கிய அந்த விவசாய மக்கள் பலனடைகின்ற வகையிலே அதற்கு ஏதாவது இந்த அரசாங்கம் செய்திட வேண்டும். அதேபோல இப்போதும் பத்திர விற்பனையிலே முறைகேடுகள் நடக்கின்றன. பத்திரப் பதிவிற்கு உரிய மதிப்பீடுடன் 5 சதவிகிதம் கூடுதலாகப் பத்திரம் விற்கும் ஏஜெண்டுகள் பெற்றுக்கொள்கிறார்கள். இதை நம்முடைய அரசாங்கம் முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5—3.5*

அதேபோல, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டத்திலுள்ள வாலாஜாபாத், ஆலம்பாக்கம் கிராமத்திலுள்ளவர்கள் தற்போது உத்திரமேரூர் வட்டத்திலுள்ள சாலவாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று பதிவு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இதற்கு 45 கிலோ மீட்டர் தூரம் சென்று பத்திரப் பதிவு செய்ய வேண்டியுள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள ஏனைய கிராமங்களிலுள்ளவர்கள் வாலாஜாபாத் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்கிறார்கள். எனவே ஆலம்பாக்கம் கிராமத்திற்கு அருகிலேயுள்ளவர்களும் வாலாஜாபாத் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய இந்த அரசாங்கம் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல துட்டச்சுத் துறையிலே, அதாவது எழுதுபொருள் அச்சுத் துறையிலே இதுவரை A.D. - Assistant Director Posts - காலியாக உள்ளன. சேலம், விருத்தாசலம், புதுக்கோட்டை, திருச்சி ஆகிய இடங்களில் காலியாக இருக்கின்றன. மதுரையில் மட்டும் அந்தப் பதவி நிரப்பப்பட்டிருக்கிறது. அதேபோல பட்ஜெட், கெசட், காலண்டர், டைரி, அரசுக்குத் தேவையான ஃபாரங்கள், ஸ்டேஷனரி ஆகியவற்றை அச்சடித்து விநியோகம் செய்கின்றனர். பரிசுச் சீட்டு அச்சடித்து விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது ஏஜென்சி முறையிலே அச்சடித்துத் தரப்படுவதால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. முன்பு திரு. மலைச்சாமி, எம்.பி. அவர்கள் இயக்குநராக இருக்கும்போது 1986–லே எழுதுபொருள் துணைக் கிடங்கு-sub-store-அமைக்க கருத்துரு அனுப்பினார். அதனால் அரசுக்குப் போக்குவரத்துச் செலவு மிச்சமாகும். தற்போது இந்த அரசினுடைய சார்பில் எம்.பி.–யாக உள்ள அவருடைய ஆலோசனையை இந்த அரசு ஏற்று அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம் கொடுங்கள்.



அடுத்தபடியாக என்னுடைய தொகுதிபற்றிச் சொல்ல அனுமதிக்க வேண்டுகிறேன். என்னுடைய வேலூர் மாவட்டமானது தமிழ்நாட்டிலேயே இரண்டாவது பெரிய மாவட்டமாக இருக்கிறது. அரக்கோணத்திலே தொடங்கி, நாட்ராம்பள்ளி வரை 12 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய தொகுதி, 6047 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட அந்தப் பெரிய மாவட்டம் 30 இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட மாவட்டம். இதைவிட மிகக் குறைவாக உள்ள மாவட்டங்கள் எல்லாம் பிரிக்கப்பட்டு, இன்றையதினம் தனி மாவட்ட அந்தஸ்து வழங்கியிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் எங்களுடைய பெரிய மாவட்டமான வேலூர் மாவட்டத்தைப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகரமாகக் கொண்டு, புதிய மாவட்டத்தை இந்த நிதியாண்டிலேயே அறிவிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குண்டான அத்தனை தகுதிகளும் திருப்பத்தூருக்கு இருக்கின்றன. திருப்பத்தூர் நகரத்தில் 1400 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட சிவன் கோவில் அங்கே இருக்கிறது. 115 வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட சப்–கலெக்டர் அலுவலகம் முதல் இரயில்வே ஸ்டேஷன் உள்ளிட்டு, அனைத்துத் துறைகளும் 120 வருட பழமை வாய்ந்த, பழமையான நகரமாக இருக்கிறபடியால், அனைத்து மாவட்ட அலுவலகங்களும் திருப்பத்தூரிலே இருக்கிறபடியால் அதை மாவட்டத் தலைநகரமாக ஆக்கிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு மாவட்ட மருத்துவமனை அந்தஸ்து வழங்க வேண்டும். திருப்பத்தூரிலே பல்வேறு சாலைகள் சீர்கெட்டு இருக்கின்றன. குறிப்பாக, மலைவாழ் மக்கள் வசிக்கின்ற புதூர்–சிங்காரப்பேட்டை சாலையானது மிகவும் பழுதடைந்து, அங்கே மலைவாழ் மக்கள் பயனற்று எந்தவித முன்னேற்றமுமில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அங்கே மலைவாழ் மேம்பாட்டுத் திட்டத்திலேயிருந்து நிதியொதுக்கீடு செய்து, அந்த மக்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, முன்பு தமிழக முதல்வராக நம்முடைய முதல்வர் அவர்கள் இருந்தபோது ஜோலார்பேட்டை ஒன்றியத்திலே மண்டலவாடி கிராமத்திலே தொழிற்பேட்டை உருவாக்குவதற்காக நிலம் பார்க்கப்பட்டு, அந்த ஆட்சி விடுபட்ட பிறகு அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் அந்த மண்டலவாடி கிராமத்திலே அந்தத் தொழிற்பேட்டையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடைசியாக இன்றையதினம் கள்ளச் சாராயம் அதிகமாக இங்கே ஓடிக்கொண்டிருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் முன்பு ஆட்சியிலே இருந்தபோது, அவர்கள் கள்ளச் சாராயம் விற்கின்ற பகுதியிலே இருக்கிற Sub-Inspector மற்றும் V.A.O.-க்களின் மூலமாக கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தினார்கள். இப்போது நம்முடைய முதல்வர் ஆட்சி வந்திருக்கிறது. மீண்டும் அந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன்.

*பிற்பகல் 5—10*

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நில உச்சவரம்புச் சட்டம் சுதந்திரம் பெற்று 14 ஆண்டுகளுக்குப் பின்னாலே இந்த நாட்டிலே கொண்டுவரப்பட்டது. அப்படிக் கொண்டுவருகின்றபோது, அன்றைக்கு இருந்த தலைவர்கள் எல்லாம் இந்த நாட்டினுடைய நிலங்கள் சமஸ்தானத்தின் பெயரிலேயும், ஜமீன்தார் பெயரிலேயும், பண்ணையார் பெயரிலேயும், கோவில்களுடைய பெயரிலேயும், நிலங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட சிலருக்குச் சொந்தமாக்கப்பட்டிருக்கின்றன, அது நாட்டில் இருக்கின்ற சாதாரண குடிமக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக 1961–ல் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இடைக் காலத்திலே நல்ல ஒரு சட்டமாக இருக்குமென்று மக்கள் எதிர் பார்த்தார்கள். சட்டத்தை யார் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணினார்களோ, அவர்களே காலப்போக்கிலே அதிலேயிருக்கின்ற ஓட்டைகளைப் பயன்படுத்தி, இன்றைக்கும் அந்த நிலங்கள் அப்படியே இருக்கின்ற நிலையைத்தான் இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆண்டுகள்தோறும் நாம் திட்டங்கள் கொண்டுவருகிறோம், சட்டங்களைக் கொண்டுவருகிறோம். அந்தச் சட்டங்கள் ஏட்டளவிலேதான் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முதலமைச்சர் உத்தரவிடுகிறார், அது அப்படியே கீழே போகும்போது அந்த V.A.O. என்ன பண்ணுகிறார்? எங்கே புறம்போக்கு இருக்கிறதோ அந்த நிலத்தை எப்படி பட்டா, B.M. போட வேண்டும் என்பதற்கு காசு வாங்கிக்கொண்டுதான் அந்த நிலங்கள் இன்றைக்குப் பிரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதற்கு மூலக்



காரணமாக இருந்தவர்கள் யார் என்று சொன்னால், யார் இந்த நாட்டிலே வசனம் அதிகம் பேசினார்களோ, வசனத்தை எழுதினார்களோ அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு வழிகோலினார்கள். தமிழகத்தில் காட்டின வழி இன்றைக்குக் காஷ்மீரில் எதிரொலிக்கிறது. காஷ்மீரில் இருக்கக்கூடிய நிலத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், வசனம் பேசியவர்களா? வசனம் எழுதியவர்களா?

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வசனம் எழுதியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வசனத்தை எழுதி எழுதி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் நம்பி, இன்றைக்குத் தமிழகத்திலே சிலர் என்ன சொல்கிறார்கள் என்றால், இன்னும் மூன்று மாதத்தில் ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்று என்ன இது அப்பன் வீட்டு சொத்தா (மேசையைத் தட்டும் ஒலி) பினாமி பெயரில் வாங்கி வைத்துக்கொள்வதற்கு? ஜனநாயக நாடு. 1991–லிருந்து 1996 வரையிலே புரட்சித் தலைவி முதலமைச்சராக இருந்தபோது, இந்தத் துறையிலே கடுமையான நடவடிக்கை எடுத்தார்கள் என்பது நாடு அறியும். ஆற்று மணல் எடுப்பது, மலையை உடைப்பது போன்ற நிலைகள் வருகிறபோது, கடுமையான சட்டம் இந்த நாட்டிலே இருந்தது என்பதை அன்றைக்கு மக்கள் ஒப்புக்கொண்டார்கள். 1996–க்குப் பின்னாலே என்ன? நம் பாலாற்றில் செங்கல்பட்டுக்குப் பக்கத்திலே மணல் எடுப்பவர்கள் எத்தனை பேர் வெட்டி செத்தார்கள்? எத்தனை மலைகள் உருவம் இல்லாமல் உடைக்கப்பட்டு, அப்பாவித் தொழிலாளர்கள் கொல்லப் பட்டார்கள் என்ற கணக்கைப் பார்த்தால், வசனம் எப்படி எழுதுவது என்பதை நாம்கூட இன்றைக்கு எழுதலாம். இந்தச் சட்டத்தை மீற வேண்டுமென்று மனதிலே வைத்துக்கொண்டு, சட்டம் சட்டம் என்று பேசி மக்களை ஏமாற்றி மீண்டும் வருவோம் வருவோம் என்று சொல்வது, எதைக் காட்டுகிறது என்று எண்ணிப் பாருங்கள். நாட்டிலே lay out போட்டு நிலம் விற்கிறோம், வாங்குகிறோம். 1996 வரையில் இந்தத் துறையிலே பணப் புழக்கம் இருந்தது. Registrar Office போகிறோம் என்றால் மக்கள் நிரம்பி வழிந்தார்கள். பத்திரப் பதிவுகள் நிறைய விற்றன. அரசுக்கு வருமானம் கிடைத்தது. 1996–க்குப் பின்னால் என்ன செய்தார்கள்? Director of Town and Country Planning—ல் ஒரு அதிகாரி—அலுவலகத்தில் போய் நிலம் பிளான் போட்டு விற்க வேண்டுமென்றால் அவருடைய அனுமதி வேண்டுமென்றார்கள். அதாவது, cultivated land-ஐ மாற்றுவதற்கு அவர் அந்த lay out போடுவதற்கு plan approval செய்வதுதான் அவருடைய

வேலை. அந்த பிளானில் என்ன செய்யப்போகிறோம் என்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டியது M.M.D.A., D.T.C.P.-ம். அந்த இரு துறைகளில் இருந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள்? Director of Town and Country Planning-னுடைய அதிகாரி, முதலமைச்சருடைய pocket-ல் இருந்தார்கள். இல்லை, வேறு யாருடைய, வேறுமாதிரியாக இருந்திருக்கலாம். அந்த அதிகாரி முதலமைச்சருக்கு வேண்டியவர் என்ற காரணத்தினால் மற்ற அதிகாரிகள் Plan approval-க்குப் போனால் நீங்கள் என்ன வேண்டுமானாலும் பண்ணுங்கள் ஐயா, நாங்கள் எங்கு வேண்டுமானாலும் கையெழுத்து போடுகிறோம், ஆனால் பார்த்துதான் போடுவோம் என்று சொன்னார்கள். ஒரு முதலமைச்சர் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டியவர். சாதாரணமாக பர்மா பஜாரில் பூக்கடை எதிரில் ரோட்டோரம் பத்து ரூபாய், இருபது ரூபாய்க்கு வாழைப் பழத்தை வாங்கி, வறுமைக்காக, தன்னுடைய அன்றாட ஜீவிதத்திற்காக வாழ்ந்த சாதாரண மக்களை காவல் துறையைக் கொண்டு, அடித்து, உதைத்து, மிதித்து, அனைத்தையும் வாரிப்போட்டார்கள். நாம் பார்த்தோம்.

*பிற்பகல் .5—4.5*

ஸ்ரீபெரும்புதூரில் ஹூண்டாய் கம்பெனி உங்களுக்குத் தெரியும். அதற்குப் பக்கத்திலேயிருக்கிற கண்ணாடித் தொழிற்சாலை உங்களுக்குத் தெரியும். பழைய மகாபலிபுரம் ரோட்டில் சோளிங்கநல்லூர் அருகே ஒரு கம்பெனி, Infosys. இந்த மூன்று கம்பெனிகளும் இன்றைய வரையில் D.T.C.P. அனுமதியோ, M.M.D.A. அனுமதியோ பெறவில்லை. ஒரு முதலமைச்சர் போய் அதைத் திறந்து வைத்திருக்கிறார் என்று சொன்னால், வசனம் எழுதியவர், இதுதான் அவருடைய சட்டமா? இப்படித்தான் அவருடைய ஆட்சி நடந்திருக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம். பணம் படைத்தவர்களுக்கு சட்டம் எப்படியெல்லாம் வளையலாம் என்பதை பழைய முதலமைச்சர் காட்டியிருக்கிறார். ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே எங்கேயாவது அனுமதியில்லாத இடத்திற்கு அந்த முதலமைச்சர் சென்றாரா என்றால் வரலாறு இல்லை. தனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று partiality-யில் இந்தத் துறை வளைக்கப்பட்டு, கூனிக்குறுகி இன்றைக்கு நலிவுற்றிருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நான் மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் இந்தத் துறை எப்படி முடியப்பெற்றிருக்கிறது, எப்படி நசுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிய ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தால் நாட்டுக்கு உண்மை வெளிவரும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் எதிர்பார்க்கிறார்கள். என்ன எதிர்பார்க்கிறார்கள்? விசாரணைக் கமிஷன், விசாரணை கமிஷன் என்று ஐந்து வருடம் அவர்கள் போட்டார்கள். போடும்போது என்ன சொன்னார்கள்? நேற்றையதினம்கூட நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். கமிஷனில் இருக்கின்ற வழக்குகளைப்பற்றிப் பேசக்கூடாது. நீதிமன்றத்திலே இருக்கிற வழக்குகளைப்பற்றிப் பேசக்கூடாது. சட்டம், ரைட். அவையிலே நீங்கள் இரண்டாம்தர அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். Second place. மத்திய அமைச்சர் வந்துபோய் திறந்து வைத்திருக்கிறார். ஒரு முதலமைச்சர், ஒரு மாநிலத்திலே ஒரு நிர்வாகத்தின்கீழ் இருக்கிறபோது, அனுமதி பெறாத பேக்டரிகளை நீங்கள் திறந்து வைக்கிறீர்கள் என்றால் அதன் பின்னணி என்ன? அதற்குப் பின்னாலே பணபலம் இருந்ததா அல்லது பினாமிகள் இருக்கிறார்களா என்பதை இந்த நாடு அறிந்துகொள்ளட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

ஐந்து ஆண்டு காலம் ஆட்சியில் எத்தனையோ கோர்ட்டுகளையும், எத்தனையோ நீதிமன்ற படிக்கட்டுகளையும் பார்த்த இந்த முதலமைச்சர் ஒரு எஃகுக் கோட்டையாக அதி.மு.க.-வையும், கூட்டணிக் கட்சிகளையும் இந்தத் தமிழ் மண்ணிலே உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டு, தங்கள் இஷ்டம்போல் சொல்கிறார்கள். மத்தியிலே எங்கள் ஆட்சி என்கிறார்கள். இருக்கட்டுமே, இராணுவம் வந்தால் எங்கள் கழுத்தை வெட்டி வாங்கிவிடுமா? தமிழகத்தில் தமிழர்களுக்கு உணர்வு இருக்கிறது. தமிழ் மண்ணிலே வாழ்கிற மக்கள் M.G.R.-ன் பின்னாலே இருக்கிறார்கள். M.G.R. இல்லாமல் இருக்கலாம். M.G.R.-ன் வழியில் புரட்சித் தலைவி இந்த மண்ணிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதாரண ஏழையெளிய மக்கள், எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? வீட்டு மனையைப் பற்றிச் சொன்னார்கள். சாதாரணமாக ஒரு மூன்று, நான்கு தலைமுறையாக அந்தக் குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காலம் முழுவதும், அது என்னுடைய வீடு என்கிறார்கள். இன்றைக்கு நான் போய், அந்த வீட்டுக்குப் பட்டா இல்லை, பட்டா கொடுக்கிறேன் என்றால் அவன் சொல்கிறான், இது என்னுடைய வீடு ஆச்சே. இதில் என் அப்பா இருந்தார், என் தாத்தா இருந்தார், என்னுடைய முப்பாட்டன் இருந்தார், இதுதான் என்னுடைய பூர்வீகம், இதுதான் என்னுடைய ஊர். இந்த ஊரிலே எனக்கென்ன பட்டா என்று கேட்கிறான்.

இந்த அளவிற்கு மக்கள் அறியாமையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக்கொண்டு, டெல்லியிலே இருக்கிற இராணுவம் வருகிறது, சிலோனிலிருந்து விடுதலைப்படை வருகிறது, ஈரோட்டிலே இருக்கிற வீரப்பன் படை வருகிறது என்று சொன்னால், இதற்கெல்லாம் பயப்படுகிற அமைப்பு புரட்சித் தலைவியின் பின்னாலே இல்லை. சிறை, சிறை என்று சொல்கிறீர்கள். என்ன அது சிறை? உங்களுக்கு மட்டும் சிறை கிடையாதா? புரட்சித் தலைவியை வாம்மா என்று கூப்பிட்டவுடன், சாமி கும்பிட்டுவிட்டு வந்துவிடுகிறேன் என்று மரியாதையாக வந்தார். நீங்கள் கொடுத்த வண்டியிலே ஏறிப்போனார்கள். 28 நாட்கள் அமைதியாக இந்த மத்தியச் சிறையிலே வாய் திறக்கவில்லை, சட்டம் நடக்கட்டும் என்று சொன்னார்கள். அதற்கு மேலே உங்களாலே சிறை வைக்க முடியவில்லை, ஆட்சியில் இருந்துகொண்டு. இன்றைக்கு சிறை என்று சொன்னவுடனே, நீங்கள் அதையெல்லாம் பார்க்க வேண்டும். சிறை என்று வருகிறபோது, சாதாரண மனிதனும் ஒன்றுதான், இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்தாலும் அவருக்கும் சட்டம் ஒன்றுதானே? ஏன் பயப்படுகிறீர்கள்?

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுதான் மானியக் கோரிக்கையா? (கூச்சல், குழப்பம்)

*பிற்பகல் 5—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், (குறுக்கீடுகள்) எல்லோரும் அமருங்கள். நீங்கள் பேசும்போது பேசினீர்கள் அல்லவா? அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) போளூர் வரதன் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள் என்று அதைத்தான் சொல்கிறாரே தவிர, வேறு யாரையும் (குறுக்கீடுகள்) குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) சிறை என்றால் எல்லோருக்கும் பொது என்று சொல்கிறார். அதிலே என்ன தவறு? (குறுக்கீடுகள்) (கூச்சல்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (கூச்சல்) எல்லோரும் அமைதியாக அமருங்கள் (கூச்சல்) அமருங்கள். திரு. சீனிவேல், அமருங்கள். (கூச்சல்) திரு. சீனிவேல் அமருங்கள். (குறுக்கீடுகள்) அமருங்கள். விளக்கத்தை நான் சொல்கிறேன். போளூர் வரதன் அவர்கள், இப்போதைய முதலமைச்சர், முன்னாள் முதலமைச்சராக இருந்தபோது சிறை பிடிக்கப்பட்டார்கள். அவர் அமைதியாக வந்தார்கள். 28 நாட்கள் சிறையிலே இருந்தார்கள். சட்டம் என்பது எல்லோருக்கும் பொது என்றுதான் சொல்கிறாரே தவிர,



யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே? நீங்களாகவே எதற்குத் துள்ளிக் குதிக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) அவர் யாரையும் இன்னும் குறிப்பிட்டுச் சொல்லவேயில்லை. (குறுக்கீடுகள்) யாரையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) திரு. வரதன், நீங்கள் பேசுங்கள். இரண்டொரு மணித் துளிகளிலே பேசி உரையை முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றமுள்ள மனது குறுகுறுக்கும் என்று சொல்வார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்) குற்றம் இருக்கிறது, அஞ்சுகிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜாங்கம், அமருங்கள். திரு. வரதன், இரண்டு, மூன்று மணித் துளிகளிலே பேசி உரையை முடியுங்கள். (கூச்சல்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே வருவார்கள். ஏதாவது ஒன்றைச் சொல்வார்கள். வெளிநடப்பு என்று சொல்வார்கள். (குறுக்கீடுகள்) மாலையிலே வந்திருப்பார்கள். அவர்கள் வெளியே போவதற்கு வழி தெரியவில்லை. வழி தெரியாமல், என்னிடம் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வழியை நிறைய விடுகிறேன். உங்களுக்கு உண்மையிலேயே திறமை இருக்குமானால், உங்களுக்கு உண்மையிலேயே (குறுக்கீடுகள்) (கூச்சல்) உங்களுக்கு வீரம் இருக்குமானால். (குறுக்கீடுகள்) முதலில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், நீங்கள் உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். திரு. போளூர் வரதன் அவர்கள், நேற்றையதினம் பேசப்பட்ட, பேராசிரியர் அவர்கள் சொன்ன, அந்தக் கருத்தினுடைய தொடர்ச்சியாகச் சொல்லி முடிக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார். அவர் சொல்வது, சட்டம் என்பது எல்லோருக்கும் பொதுதான்; அது முதலமைச்சருக்கும் பொதுதான்; முன்னாள் முதலமைச்சருக்கும் பொதுதான் என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இன்றைக்கு முதலமைச்சராக இருப்பவர்கள் அன்றைக்குக் கைது செய்யப்பட்டபோது, அமைதியாக அதை ஏற்றுக்கொண்டு வந்தார்கள்; 28 நாட்கள் சிறைச்சாலையிலே இருந்தார்கள் என்று சொல்லிவிட்டு, அதேபோல் எல்லோருக்கும் சட்டம் என்பது பொதுதான்; சிறைச்சாலை என்பது பொதுதான் என்று சொல்கிறாரே தவிர யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

நீங்களாகவே எதற்காகத் துள்ளிக் குதிக்கிறீர்கள்? தேவையே இல்லை. (குறுக்கீடுகள்) அவர் பேச்சை முடிக்கப் போகிறார். சிறைத் துறையிலே பேசலாம். (குறுக்கீடுகள்) அதுபற்றி ஒன்றும் இல்லை. அவர் சொல்வது, தொடர்புடைய கருத்திற்காகச் சொல்கிறாரே தவிர, மற்றபடி வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) அவர் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீதுதான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) அவர் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசி, அவர் தனது பேச்சை முடிக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் வரதன் பேசும்போது அவர் அந்தக் கருத்தை எதற்காகச் சொன்னார் என்றால், பொதுவாக வருவாய்த் துறையிலே நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு செய்வதும், பட்டாக்கள் தராத நிலைமை இருக்கிறது. சிலருக்கு, வேண்டியவர்களுக்கு, சலுகை தருகிறார்கள். சட்டம் என்பது சமமாக இருக்க வேண்டும் என்று பொதுப்படையாகத் தான் பேசினாரே தவிர, அவர் வருவாய்த் துறைபற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதைச் சொல்லும்போது, சட்டம் என்பது சமமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், வேறு யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவேயில்லை. இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குக் கைது செய்யப்பட்டார் என்று சொல்கிறாரே தவிர, இன்றைய நிலைமைகள்பற்றி அவர் எதையும் சொல்லவில்லை. இன்றைய நிலைமைகள்பற்றி அவர் எதையும் சொல்லவில்லை. அவருடைய பேச்சு அவைக் குறிப்பிலே இருக்கிறது. நீங்களே வாங்கி படித்துப் பாருங்கள். அதிலே மாறுபட்ட கருத்து ஏதாவது இருப்பதாக உங்களுக்குத் தெரிந்தால், நாளைக்கேகூட சொல்லுங்கள். நான் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அதிலே ஒன்றும் இல்லை. நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அவர் தனது பேச்சின் நிறைவுக் கட்டத்திலே இருக்கிறார். அவர் சட்டம் என்பது எல்லோருக்கும் பொது என்று சொல்கிறார். அதைக்கூட நீங்கள் ஒத்துக் கொள்ளவில்லையா? சட்டம் எல்லோருக்கும் பொதுவானது இல்லையா?

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பொதுவானதுதான். இது மானியக் கோரிக்கைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ...

**திரு. போளூர் வரதன்:** தலைவர் அவர்களே,..



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், இன்னும் இரண்டு மணித் துளிகளிலே பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஆயத் தீர்வை என்று வருகின்றபோது, 1996 வரை (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அமருங்கள். அவர் பேச்சை முடிக்கவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சில மாநிலங்களிலேயிருந்து கள்ளச் சாராயம் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொன்முடி அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. நீங்கள் பேசிய விவரம் வேறு. அவர் பேசிய பிரச்சினை வேறு. அப்போது பேசப்பட்ட முறை வேறு. அதற்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொன்னதற்குக் காரணம் கடந்த கால ஆட்சியிலே புறம்போக்கு நிலங்களுக்கு, பஞ்சாயத்து நிலங்களுக்கு, டவுன் பஞ்சாயத்து நிலங்களுக்கு, ஏரிப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, பாட்டைப் புறம்போக்கு, சுடுகாட்டுப் புறம்போக்கு இத்தனையும் அந்த renewal–விலே இருக்கின்றன. இந்தப் புறம்போக்குகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து எவர் பணம் கொடுத்தாலும், அவர் போய் அங்கே கம்பெனி திறக்கலாம் என்றால் சட்டம் இல்லையா நாட்டிலே? பக்கத்திலேதான் திறந்து வைத்திருக்கிறீர்கள். வாருங்கள் காண்பிக்கிறேன். அந்தப் புறம்போக்குகளை எல்லாம். I.A.S., I.P.S. அலுவலர்கள் இருக்கிறார்கள் இல்லையா, இருப்பதால்தான் நான் சொல்கிறேன். அந்தச் சட்டத்தைப் பார்த்து நாங்கள் பயந்தோமா என்ன!

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வருவாய்த் துறை மானியக் கோரிக்கை இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வருவாய்த் துறை மானியக் கோரிக்கையில்தான் அவர் பேசுகிறார், உட்காருங்கள்.

*பிற்பகல் 5—55*

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து சுடுகாடு. நாட்டிலே மத்திய சர்க்கார் பணம் கொடுக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சுடுகாடு கொடுங்கள், வீடுகட்ட பட்டா கொடுங்கள் என்று சொன்னால், திருவண்ணாமலை மாவட்டத்திலே சென்ற வருடம் 1 1/2 கோடி ரூபாயை எல்லாம் தன்னிறைவு ஆகிவிட்டது என்று சொல்லித் திருப்பி அனுப்பினீர்களே, அது எதற்கு? அந்த இன மக்களை அழிக்க வேண்டும், தாழ்த்தப்பட்டவனுக்குப் பிணத்தைத் தூக்குவதற்குக்கூட வழி கொடுக்கக் கூடாது, அது பெரிய இடமாக இருக்கிறது பாருங்கள், காலேஜ் கட்டிவிடலாமா, இல்லை வெளிநாட்டிலேயிருந்து யாரையாவது கூட்டிக்கொண்டு வந்து கம்பெனி நடத்திக்கொள்ளலாமா? (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை, வேறு பினாமி பெயரிலே நாமே நடத்திக்கொள்ளலாமா என்கிற அரசாட்சிதான் நடந்திருக்கிறதே தவிர மக்களுக்குச் சேவை செய்கின்ற அரசு இந்த மண்ணில் ஐந்தாண்டு காலம் மறைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை மறுப்பதற்கோ, மறைப்பதற்கோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், இன்னும் இரண்டு மணித் துளிகளிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் உரையை முடித்துக்கொள்கிறேன். நான் உண்மையைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நிறைய குறுக்கீடுகள் வந்ததனாலே என்னுடைய நேரத்தைச் சற்றுக் கூட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் எல்லா விஷயத்தையும் சொல்லி முடித்துவிட்டீர்கள்.

**திரு. போளூர் வரதன்:** இந்த உண்மைகள்–அடுத்து, கள்ளச் சாராயம். நான் வேறு subject-க்கே வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வேறு subject–க்கு நேரமில்லை. இன்னும் இரண்டு, மூன்று பேர் பேச வேண்டும்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத் தீர்வைத் துறையிலே எனக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

1996–லே ஆந்திராவிலேயிருந்து பாக்கெட் சாராயம் வந்தது. கர்நாடகத்திலேயிருந்து பாக்கெட் சாராயம் வந்தது. நம்முடைய



முதலமைச்சர் அம்மா அவர்கள் என்ன பண்ணினார்கள்? பிடித்தார்கள். மவுண்ட் ரோட்டிலேயே பஸ்ஸை விட்டு அதன்மேல் ஏற்றினார்கள். மக்கள் நலமாக இருக்க வேண்டும், தீயவர்கள் இந்த மண்ணில் வரக்கூடாது, மக்கள் தெரிந்துகொள்ளட்டும் என்பதற்காக அந்த பாக்கெட் சாராயத்தையெல்லாம்கூட சென்னை நகரிலே மவுண்ட் ரோட்டிலேயே பஸ், லாரியை விட்டு ஏற்றி மிதித்து அழித்தார்கள். அதை எல்லா டி.வி., பத்திரிகைகளில் எல்லாம் எடுத்துப் போட்டார்கள். ஆனால் கடந்த 1996–லேயிருந்து 2001 வரைக்கும் என்ன நடந்தது? சித்தூர் சாராயம் கும்மிடிப்பூண்டி வழியாக வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடக சாராயம் ஓசூர் வழியாக வந்தது. பாண்டிச்சேரி சாராயம் விழுப்புரம் வழியாக வந்தது. ஏன் தடுக்கவில்லை? ஆயத் தீர்வைபற்றிப் பேசுகிறோம். சிண்டிகேட் போட்டுக்கொண்டார்கள். கடந்த கால ஆட்சியிலே எல்லாம் ஏலம் விடுவதுதான். சிண்டிகேட் போட்டுக்கொண்டு குறைந்த விலையிலே அந்த ஏலத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது. வெளியிலே போய் உட்கார்ந்துகொண்டு அதற்கு மொத்தமாக ஒரு ரேட் போட்டு ஆளுக்குப் பங்கிட்டுக்கொண்டு போய்விடுவது. அரசாங்கத்தினுடைய வருவாயைத் தடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் என்ன பண்ணினார்கள்? இதிலே ஊழல் என்று சொல்ல முடியுமா உங்களாலே? யார் வேண்டுமானாலும் கட்டுங்கள். இந்தக் கடையினுடைய ரேட் இவ்வளவு. வேண்டுபவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். பணம் கட்டினார்கள். ஒருவராக வந்தால் கொடுத்தார்கள். 4 பேர்களாக வந்தால் கலெக்டரைக் கூப்பிட்டு ஒரு டப்பாவைக் கொடுத்து எழுதிப்போட்டுக் குலுக்கி எடுத்துக்கொள்ளுங்கள் ஐயா என்று சொன்னார்கள். ஊழல் இருந்ததா? உங்கள் ஆட்சியில் இப்படிச் செய்தீர்கள் என்று சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) பயப்படுகிறார்கள். ஏன்? (குறுக்கீடு) இருக்கட்டும். பணம் அவர்கள் சேர்த்து வைத்திருக்கிறார்கள், எடுத்திருக்கிறார்கள். நம்மிடம் காசு இல்லை, எடுக்க முடியவில்லை, இதுதான் உண்மை. சாராயம், சாராயம் என்று சொல்கிறோம். சாராயம் இன்றைக்கு நாட்டிலே மலிவாக இருக்கிறது, எல்லா போலீஸ் லிமிட்டிலேயும் சாராயம் இருக்கிறது. அதை இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. அதை வளர்த்தவர்கள் யார்? மூன்று மாதத்திலே அம்மா அவர்கள் வளர்த்துவிட்டார்களா? சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாண்டு காலம் இந்த மண்ணிலே புதைந்து,

அமிழ்ந்து நிமிர்ந்தது. உண்மையிலேயே அது ரொம்ப வைரக் கட்டியாக இருக்கிறது, இங்கே இந்த நாட்டிலே. அதை அழிக்க வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு அம்மா அவர்களை நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், போலீஸ் துறையை மட்டும் நம்பி இதைச் செய்ய முடியாது. Revenue துறையையும் இதிலே ஈடுபடுத்த வேண்டும். எந்த இடத்திலே அப்படித் தவறு நடக்கிறதோ, அந்த இடத்திலேயிருக்கின்ற தாசில்தார் முதல் B.D.O., தாசில்தார், R.I., D.R.O., வரை suspend செய்வது மட்டுமல்ல, அவர்களைக் கைது செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படிக் கடுமையான சட்டத்தை (மணியடிக்கப்பெற்றது) நீங்கள் கொண்டுவந்தால்தான் இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு நிறைய சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும் தமிழகம் உங்கள் தலைமையின்கீழ் நிறைய எதிர்பார்க்கிறது. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதன்மூலம் சாதாரண மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், அன்றாட ஜீவிதம் செய்து பிழைக்கக்கூடிய குடும்பங்கள் வாழ்நாள் முழுமைக்கும் உங்களை வாழ்த்திக்கொண்டிருக்கும். அதை ஒழிப்பதற்கு ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்து தமிழகத்து மக்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறி, இந்த வாய்ப்புத் தந்த உங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இன்றைக்குச் சுருக்கமாகப் பேசி ஒரு வரலாற்றைப் படைக்கப் போகிறார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு மானியங்கள் விவாதத்திற்கு வந்திருக்கின்றன. ஏழு மானியங்களுக்கும் ஏழு நிமிடங்கள் அளித்திருக்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும், சுருக்கமாகப் பேச வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே நான் மானியங்களுக்குள் செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதை உணர்கிறேன். அதனால்தான் இந்தக் குறிப்புகளைக்கூட நான் ஆழமாகவும் அழுத்தமாகவும் என்னுடைய கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. காரணம், அதற்குள் சென்றால், நீங்கள் காட்டுகின்ற வழியிலே நான் வர முடியாது என்ற காரணத்தினால் சுருக்கமாக ஒரு சில கோரிக்கைகளை மட்டும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



*பிற்பகல் 6—00*

வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில், இது ஒரு அரசாங்கத்தினுடைய அடிப்படையான துறையாகும். மக்கள் சமுதாயத்தின்மீது ஒரு ஆட்சி, அதனுடைய இறையாண்மை நிலைநாட்டப்படுவதற்கு வருவாய்த் துறை அடிப்படையாக அமைந்து இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. பெயரே வருவாய். எனவே இந்த வருவாய்த் துறை பல வழிகளிலே வருவாயை ஈட்டி அரசுக்குத் தர வேண்டும். அப்படி வருவாயை ஈட்டுவது என்று சொன்னால் அது நிலத்தின் வாயிலாக இருந்தாலும் அல்லது ஏனைய துறைகளின் வாயிலாக வருவாயை ஈட்டுவதாக இருந்தாலும், அரசாங்கத்தினுடைய அதிகாரம் எங்கெங்கு முறையாகச் செலுத்தப்பட வேண்டுமோ அங்கெல்லாம் முறையாகவும், நிறைவாகவும் செலுத்தப்பட வேண்டும். அதற்கு வருவாய்த் துறை முறையான வழிகளை வகுத்துத் தர வேண்டும். அப்படியென்றால், நிலப்பரப்பு சரியாகக் கணிக்கப்பெற்று நிர்வாகம் செம்மையாக நடைபெற, நன்றாக, தேவையான அளவிற்கு நம்முடைய நிலப்பரப்பு பகிர்வு செய்யப்பட வேண்டும். இல்லையென்றால், எவ்வளவுதான் திறமையான அதிகாரிகளாக இருந்தாலும் முழுமையாகத் தங்களுடைய கடமையை நியாயமாகச் செய்ய முடியாது. எனவே முறைப்படுத்தப்பட வேண்டும் என்பது இன்றைய தேவையாக இருக்கிறது.

என்னுடைய கோரிக்கையெல்லாம், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திருப்பத்தூரைத் தலைநகரமாகக் கொண்டு புதியதோர் மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். அதற்கான காரணங்களையும் விளக்கினார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், வாணியம்பாடி ஒரு பெரு நகரம் மட்டுமல்ல, ஒரு தொழில் நகரம். பல கல்விச்சாலைகள் இடம் பெற்ற ஒரு தொன்மையான நகரம். ஆனால் அந்த நகரம் இன்றைக்கு ஒரு வருவாய் வட்டமாக இருந்தாலும் அதனுடைய நிலப்பரப்பு என்பது மிகப் பரவலாக அமைந்திருக்கிறது. உதாரணமாக, வாணியம்பாடியில் வருவாய்த் துறை இருக்கிறது. வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது. ஆனால் இன்றுவரையில் மாதனூர், பள்ளிகொண்டா வரையில் இருக்கின்ற மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக வாணியம்பாடி வந்தாக வேண்டும். இப்படிச் சுற்றளவைப் பார்த்தால் unwieldy என்று சொல்வார்கள். அப்படி ஒரு unwieldy–யாக அந்த வட்டம் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. வட்டாட்சியர்கூட அடிக்கடி எல்லா இடங்களுக்கும் சென்று மக்களுடைய தேவைகளை அறிய முடியாத சூழ்நிலை இன்று நிலவிக்கொண்டிருக்கிறது.

பட்டா கொடுக்க வேண்டும், பல்வேறு பிரச்சினைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று சொன்னால்கூட வட்டாட்சியரும் அவரைச் சார்ந்தவர்களும், அந்த வட்டங்களை முழுமையாகச் சுற்றி, நியாயங்களைச் செயய முடியாத சூழ்நிலை இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. எனவே நாங்கள் நீண்ட காலமாக வேண்டிக் கொண்டிருக்கிறோம். ஆம்பூரைத் தலையிடமாகக் கொண்டு வாணியம்பாடி வட்டத்தை, வாணியம்பாடி நகராட்சி அலுவலகம் வாணியம்பாடியில் இருப்பதை அதனுடைய அதிகார வரம்பிலேயிருந்து விடுவித்து, வட்டாட்சி அலுவலகத்தை ஆம்பூரிலே ஏற்படுத்தினால் எல்லாத் தரப்பு மக்களுக்கும் ஓரளவிற்கு நியாயங்கள் கிடைக்கும். நிருவாகம் செழுமை பெறும், செம்மை பெறும், நிருவாக சௌகரியங்கள் ஏற்படும். அதனால் மக்களுக்குரிய பிரச்சினைகள் ஓரளவிற்கு நிறைவேறும். அதற்குத் தயவுசெய்து ஆம்பூரைத் தனிமைப்படுத்தி, ஆம்பூர் வட்டம் என்று புதியதாக ஒன்று உருவாக்க வேண்டும் என்பது இன்றைய கோரிக்கையல்ல, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. நான்கூட மிகவும் பொறுமையாக இன்றைக்கு இல்லாவிட்டாலும், ஒரு நாளைக்குத் தட்டுகிறோம், கதவு திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் தட்டிக்கொண்டே இருக்கின்றேன். தட்டித்தட்டிப் பார்த்தேன், கதவுகள் திறக்கப்படவில்லை. கடைசியாக, கதவு அங்கேயே சாத்தப்பட்டுவிட்ட நிலையிலே புதிதாகத் திறக்கப்பட்டிருக்கிற கதவு தட்டாமலேயே திறந்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கதவைத் தட்டிப் பார்க்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து தங்களுடைய கனிவுப் பார்வையைச் செலுத்தி அதற்கு வழிவகுத்துத் தர வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அதைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

*பிற்பகல் 6—05*

இன்னொன்று, பதிவுத் துறை. இந்தப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் வாணியம்பாடியில் பதிவுத் துறை அலுவலகம் ஒன்று இருந்தது. இப்போது இல்லை. அது எங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், நகராட்சி மன்றத்தினுடைய மருத்துவமனை, அந்த மருத்துவமனையினுடைய ஒரு பகுதியிலே இன்றைக்கு பதிவுத் துறை, சார்பதிவாளருடைய அலுவலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது. அண்மையிலே அங்கே ஒரு நிகழ்ச்சி நடந்தது. அது மிகவும் பழுதடைந்த, உடைந்துபோன கட்டடம். ஆனால் ஆவணங்களைப் பாதுகாத்து வைக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்த அலுவலகத்தின் பின்னால் இருந்த சுவர் இடிந்துவிட்ட



காரணத்தால் இரவு நேரத்தில் பன்றிகள் நுழைந்து அங்கேயிருந்த ஆவணங்களையெல்லாம் சிதறடித்துச் சென்றுவிட்டன என்று அந்தப் பகுதி முழுவதும் ஒரே கொந்தளிப்பாக இருந்துகொண்டிருக்கிறது. பல ஆவணங்கள் இன்றைக்குக் கிடைக்கவில்லை. எனவே தயவுசெய்து அதற்கு ஒரு கட்டடம் வேண்டும். ஏற்கெனவே அங்கே இருக்கின்ற நீதிமன்றக் கட்டடமும் அப்படித்தான் இருக்கிறது. ஒரு நாள் அங்கே ஒரு Judicial Magistrate உட்கார்ந்துகொண்டு பணியாற்றுகையில் அந்தக் கட்டடமே இடிந்து விழுந்துவிட்டது. நல்ல வேளைக்கு அவர்கள் உணவுக்காக எழுந்துபோனார்கள், அவர்கள் உயிர் பிழைத்தார்கள். இப்போது வராண்டாவிலே உட்கார்ந்து Judicial Magistrate Court நடந்து கொண்டிருக்கிறது. அதை இந்த மானியத்தில் நான் பேச வேண்டிய அவசியமில்லை. அதன் காரணம் என்னவென்றால் பழைய கட்டடம், அதனுடைய வயது முடிந்துவிட்டது. இப்படி நிலைமை. அந்த இடத்திலேதான் இந்த சார்பதிவாளர் அலுவலகமும் இருக்கிறது. எனவே அதற்காக ஒரு கட்டடத்தைக் கட்டித் தர வேண்டும் என்று நான் மிகுந்த அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

அதோடு, ஆலங்காயத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் மிக இன்றியமையாதது. காரணம், அதுதான் ஜவ்வாது மலை முழுவதற்கும் ஒரு நுழைவாயில். ஏற்கெனவே பல வருடங்களாக சார்பதிவாளர் அலுவலகத்திற்காகத் திட்டம் வகுக்கப்பட்டு அதற்கான கருத்துருவும் உருவாக்கப்பட்டு, அரசு ஆய்வில் உள்ளது என்பதும் இதுவரையில் அந்த ஆய்வு செயல்வடிவம் பெறவில்லை என்பதும் எங்களுக்குரிய குறை. தயவுசெய்து ஆலங்காயத்தில் ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டா கொடுப்பதில் மிகப் பெரிய தாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதத்தைத் தவிர்க்க வேண்டும். யார் யாருக்குப் பட்டா, எந்தெந்த இடத்திலே கொடுக்க வேண்டுமோ அந்தந்த இடத்தில் கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டால், துரிதப்படுத்திக் கொடுத்துவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். பரவலாக இந்தக் குறை எல்லாத் தரப்பு மக்களிடமும் இருந்துகொண்டிருக்கிறது. எனவே பட்டா கொடுப்பதை, அது மனைப் பட்டாக்களாக இருந்தாலும் அல்லது விவசாயத் துறையிலே கொடுக்கப்படுகிற பட்டாக்களாக இருந்தாலும், தயவுசெய்து அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்று நான் உங்களிடத்திலே அன்போடு வேண்டுகிறேன்.

*பிற்பகல் 6-10*

பதிவுத் துறையைப் பொறுத்தவரையிலே, எனக்கு இதுவரையிலே
புரியாமல் ஒன்றிருக்கிறது. மாவட்ட ஆட்சியர் என்று சொன்னால் அந்த
மாவட்ட ஆட்சியர் மாவட்டத்தினுடைய பொது நிருவாகத்துக்கெல்லாம்
தலைமையேற்று நடத்துபவர். மாவட்ட ஆட்சியர் ஒன்று முடிவு
செய்கிறார். பதிவுத் துறையிலே இருக்கிற சார்பதிவாளர், அவர் ஒரு
முடிவு செய்கிறார். அதிலே guideline value என்று வைக்கிறார். Market
value என்று ஒன்றிருக்கிறது. Guideline value, market value இவ்வளவு என்று
நிர்ணயங்கள் எல்லாம் செய்த பிறகு, register செய்யப்படுகிறது. Register
செய்த பிறகு the legal presumption is that registration is a public notice.
அதுதான் legal presumption. ஓரிடத்திலே ஒரு document register
செய்யப்படுகிறது என்றால் the legal presumption is that all such registrations
which are duly entered into the Registers of the Registrar Office is a public
notice. நான் கேட்கிறேன். இந்த இடத்திலே சார்பதிவாளர் செய்கிற
பதிவு என்பது எல்லோருக்கும் legal notice. எல்லோருடைய Notice–க்கும்
அது வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வருவதில்லையா,
அவர்களுக்கு மேலே இருக்கிற அதிகாரிகளுக்கு Notice-ஆக
கருதப்படுவதில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆனால்
இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம்
இரண்டு வருடங்களுக்குப் பிறகு–யாராவது அவர்களுக்கு மேலே
இருக்கக்கூடியவர்கள்–இந்த இடத்தினுடைய மதிப்பு என்ன என்ற ஒரு
கேள்வியை வேறு காரணங்களுக்காக–for reasons other than administrative,
particularly political reasons–என்ற நிலையில் இவர்கள் ஒரு கேள்வியைக்
கேட்டால் அவர்கள் சென்று assess செய்கின்றார்களாம். நான்
கேட்கிறேன், சார்பதிவாளர் அலுவலகத்திலே that has got serious
implications. ஏனென்றால் நீங்கள் assess செய்கின்ற அடிப்படையிலேதான்
registration fees கொடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்திற்கு அதிலிருந்துதான்
வருமானம் வர வேண்டும். அப்படி இருக்கும்போது once a document is
registered by the Registrar, the appropriate authority, where is the question of
having a different view by a different authority, even though he is having an
overall general administrative capacity to express his opinion? After some
years or after some months, a Collector is asked to provide necessary information
about the land value or the property value to an authority who is not expected to
get such an information from such an authority என்ற நிலையிலே இன்றைக்கு
நாட்டிலே (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். அதனால்தான்
இதற்கெல்லாம் போகக் கூடாது என்று நினைத்தேன். திரும்பி வருவது



கஷ்டம். But, still it is a matter of public importance, very great public importance.
So far as this question is concerned, it is a matter of very great public importance
and we must ensure proper co-ordination and co-operation, mutual information
to be shared by all the departments which are governed by a single Government.
ஒரு அரசாங்கத்தில் அந்த Department–ல் இருக்கின்ற ஒரு துறைக்கு
information கொடுக்கும்போது this is a public notice என்ற presumption
இருக்கிறபோது after registration, after few months or after few years, if somebody
asks, sitting at the appropriate level, then he can well exercise his undue influence
also upon the authorities concerned. அவர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக
ஒரு information கொடுத்தால் அதனுடைய implication என்ன? This is the
way in which the democracy, the very process of democracy is frustrated, is
jeopardised and the very foundation, the very rock upon which the democratic
Government is established, if that could be shaken by some malicious and malafide
action of some people, is it not that the Sub-Registrar or for that matter the Collector
of the District should be responsible? நான் உங்களைக் கேட்கிறேன், இந்தச்
சபைக்கு எந்த responsibility-யும் இல்லை. Democratic institutions–க்கு எந்த
responsibility–யும் இல்லை. யார் யார் இந்த ஜனநாயக முறையிலே
தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அவர்களுக்கு அந்தப் பொறுப்பு இல்லை.
நான் எங்கேயோ உட்கார்ந்துகொண்டு சைகை காட்டுகிறேன். அந்த
சைகையின் அடிப்படையிலே சில ஆண்டுகளுக்குப் பிறகு சில
மாதங்களுக்குப் பிறகு, கலெக்டர் ஒரு ரிப்போர்ட் கொடுக்கிறார். That
too, not based on facts, just to appease and satisfy the authorities sitting at the top
level. ஒரு information கொடுக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு
என்ன நடக்கிறது? I am not referring to any particular case. But I am just worried
about the general tendency among some people. நான் அதிகாரிகளை ஒன்றும்
சொல்ல விரும்பவில்லை. நீங்கள் என்ன ensure செய்கின்றீர்கள்? எப்படி
market value fix செய்யப் போகிறீர்கள்? How guideline value is fixed? அதற்கு
கலெக்டர் எந்த அளவிற்கு responsible? கலெக்டர் ஒரு அறிக்கை
கொடுக்கும்போது அந்த அறிக்கையை ஒரு பதிவுத் துறை அதிகாரி
தன்னுடைய கணக்குப்படி, தன்னுடைய முடிவுப்படி ஒரு பத்திரத்தைப்
பதிவு செய்த பிறகு, அது சரியில்லை என்று சொன்னால் then, why do you
have all these Registrars? அந்த Registrar-ருடைய தகுதி என்ன, பொறுப்பு
என்ன? அவர்கள் ஒரு view வைத்துக்கொள்வது, இவர்கள் ஒரு view
வைத்துக்கொள்வது. அவர் சொல்வது சரியில்லை என்று இவர் சொல்வது.
இவர் சொல்வது சரியில்லை என்று அவர் சொல்வது என்றால்–Is it a
Government? Why don't you ensure any proper co-ordination among all these
authorities என்பதுதான் என்னுடைய கேள்வி.

பிற்பகல் 6-15

பதிவுத் துறையைப் பொறுத்தவரையிலே எனக்கு ஒரு கவலை, எனக்கு மிகப் பெரிய மனத்தாங்கல் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) எனவே இந்தத் துறையைக் குறித்து பலருக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இவன் ஒரு value சொல்கிறான்; அவன் ஒரு value சொல்கிறான். இங்கே ஒரு value பண்ணுகிறான்; அங்கே ஒரு value பண்ணுகிறான்; And that too அந்த மாதிரி value fix பண்ணுகிறபோது, அவ்வப்போது சௌகரியத்திற்கேற்ப, தன்னுடைய சௌகரியத்திற்கேற்ப அல்லது சிலருடைய சௌகரியத்திற்கேற்ப fix பண்ணுகிறான் என்று சொன்னால், what is happening in this State? இங்கே என்ன நடந்திருக்கிறது? இதற்கு யார் காரணம்? Should they not be held responsible? ஒரு முக்கியமான காலகட்டத்திலே ஒரு அரசு இங்கே பொறுப்பேற்றிருக்கிறது. அந்த அரசை நடத்துகின்றவர்களுக்கு விரோதமாக, சிலருடைய அறிக்கைகள் பயன்படுகின்றன; பயன்படுத்தப்படுகின்றன என்று சொன்னால், அதற்கு உங்கள் Registration Department-தான் கூட்டாளியா? அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் ஒத்துப்போகிறார்களா? Are they abettors; abettors of the criminals? இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். எனவே the Registration Department should be streamlined; should be revamped. It should be ensured that it discharges its duties according to the provisions of the law என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இரண்டே இரண்டு விஷயங்களை நான் சொல்லிவிடுகிறேன் (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

ஆம்பூர் தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டு, வாணியம்பாடிக்குச் செல்லக்கூடிய சூழ்நிலையை அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய, குறிப்பாக, நம்முடைய அமைச்சர் அவர்களெல்லாம்கூட அந்தத் தொகுதியிலிருந்துதான் வருகிறார்கள். அவர்கள் அந்தப் பகுதியிலேயிருந்து எங்கள் ஊருக்குத்தான் வந்தாக வேண்டும். இவர்களெல்லாம் எங்கள் ஊருக்கு வர வேண்டும். இவன் என்ன நினைக்கிறான் என்றால், "வாணியம்பாடிக்காரன்; பிரிப்பதற்கு மனது இல்லை இவனுக்கு; சும்மா பேசுகிறேன், பேசுகிறேன் என்கிறான், பேசுவதே இல்லைப்பா அவன்" என்று சொல்லி என்னைக் குறைபடுகிறார்கள். இந்தக் குறையிலிருந்தும், இந்தக் இக்கட்டிலிருந்தும் பல விஷயங்களிலே என்னைக் காப்பாற்றுகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு வழிவகுத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, கடைசியாக ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். பட்டா கொடுங்கள். ஆனால் ஆற்றுப்படுகையிலே பட்டா எக்காரணத்தைக்கொண்டும் கொடுக்கக்கூடாது. கால்வாய்ப்



பகுதியிலே பட்டா கொடுக்கக்கூடாது. ஏரியிலே பட்டா கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால், நீர்ப் பஞ்சம்; நீங்கள் எங்கேயிருந்து நீர் கொண்டுவந்தாலும், ஆகாச கங்கை வந்தாலும் நீர்ப் பஞ்சம் தீராது. காரணம், நம்முடைய முன்னோர்கள் மிக அற்புதமான முறையில் நீருக்கான வழிவகைகளைக் கண்டிருக்கிறார்கள். அவைதான் நம்முடைய ஏரிகள்; நம்முடைய நதிகள்; நம்முடைய கால்வாய்கள்; நம்முடைய குளங்கள். அவற்றைக் காப்பாற்றினால் போதும். எனவே இந்த இடங்களில் பட்டா கொடுத்திருந்தாலும், cancel செய்யுங்கள். எக்காரணத்திலும் இந்த ஏரிகளிலும், படுகைகளிலும் பட்டா கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவிற்குப் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை மானியத்திலே பல்வேறு கருத்துகளைச் சொல்வதற்குத் தகுதியான நேரம் இல்லை என்றாலும், சிலவற்றை நான் சொல்லியாக வேண்டும். ஏற்கெனவே ஒரு நிலச் சீர்திருத்த மசோதா இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, 15 ஏக்கரா என்று இன்று தீர்மானிக்கப்பட்டு, அந்த அளவிலே விஷயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இதிலே பினாமியாக வைத்திருக்கின்ற நிலங்களை மட்டும் நாம் கண்டறிந்தால், 20 இலட்சம் ஏக்கர் நிலங்களை எடுத்து, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற, கிராமப் பகுதியிலே இருக்கின்ற நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, அது 3 ஏக்கர் என்று வைத்துக் கொடுத்தாலும் சரி, 5 ஏக்கர் என்று வைத்துக் கொடுத்தாலும் சரி, அந்த அளவிற்குப் பிரச்சினைக்கு–அந்த சாமானிய மக்களுடைய பிரச்சினைக்கு–தீர்வை நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியும். அந்தவகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இருக்கின்ற நிலச் சீர்திருத்த மசோதா–அந்தச் சட்டம் இருக்கின்றதே அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் தளர்த்தக் கூடாது என்பதை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இரண்டாவது, பட்டா விஷயமாக வருகின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற சில பிரச்சினைகளைச் சொல்லியாக வேண்டும். பத்தாண்டுகளுக்கு முன்னாலே 3 ஏக்கர், புறம்போக்கு நிலத்திற்குப் பட்டாவைத் தந்தார்கள். பின்பு, 2 ஏக்கர் என்று சொன்னார்கள். பின்னர் 1 ஏக்கர் என்று சொன்னார்கள். அதற்குப் பின் 1/2 ஏக்கர்; அத்தோடு நிற்கின்றது. இதற்குள்ளே வருகின்ற விவசாயிகள் நீண்டகாலமாகக் குடியிருக்கின்ற விவசாயிகள் மத்தியிலே,

ஒரு பகுதியிலே ஒரு அணைக்கட்டு. விவசாயிகள் குடியிருக்கிறார்கள்; அதற்குப் பின்னால் அணைக்கட்டு வருகின்றது. அந்தப் பகுதியை அணை புறம்போக்கு என்று தீர்மானித்துவிட்டார்கள். அவனுக்குப் பட்டா இல்லை. இப்பொழுது revenue துறை அதிகாரிகள் அவன் குத்தகை பாக்கி தரவில்லை என்று சொல்லி அவர்களை மிகப் பெரிய துன்பத்திற்கு ஆளாக்குகின்றார்கள். அவர்களால் கட்டவும் முடியாது. கையிலே இருக்கின்ற நிலம் 10 சென்டாக இருக்கலாம். 20 சென்டாக இருக்கலாம்.

*பிற்பகல் 6—20*

இன்னொன்று, காடு, புறம்போக்கு என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, வலியவில்லா என்ற பகுதி. நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதெல்லாம், ஒரு மரம்கூட வனத் துறைக்குச் சொந்தமான மரம் அந்தக் காடுப் பகுதி என்ற இடத்தில் இல்லை. அதை எப்படி காடு புறம்போக்கு என்று வைத்துக்கொள்ளலாம்? கடிதத்திலே எழுதி வைத்திருக்கின்றார்கள். இது வலியவில்லா என்ற பகுதியிலும், ஆறுகாணி என்ற பகுதியிலே சுமார் 300 ஏக்கர் நிலம். அவன் கையிலே பட்டா கிடைத்து 15 ஆண்டுகள் ஆகின்றது. அதற்குப் பின்னால் அதை இப்போது காடு புறம்போக்கு என்று சொல்கின்றார்களே, என்ன நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு, அந்த மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் என்னவென்று சரியான ஒரு ஆய்வை நடத்த வேண்டும். இதுசம்பந்தமாக நம்முடைய மத்திய வனத் துறை அமைச்சரிடம் நேரடியாக நான் கடிதம் கொடுத்து, இப்படி காடு புறம்போக்கு என்று சொல்கின்றார்களே, நீங்கள் இதில் தலையிட்டு நியாயம் கற்பிக்க வேண்டுமென்று சொல்லி நான் மனுவைக் கொடுத்தேன். ஆனால் இதுவரையிலும் பதில் வரவில்லை. நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்கின்றபோது, நம்முடைய கையிலே பிரச்சினையில்லை, இது மத்திய அரசாங்கம் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை என்று அவரும் சொல்லிவிட்டார்கள். ஆக, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த கட்டம் என்ற முறையிலே இந்தப் புறம்போக்குகளிலே இந்தப் பட்டா கிடைப்பதிலே எனக்குரிய சிக்கல்கள் இவை.

அடுத்தபடியாக, மிகப் பெரிய பிரச்சினை என்பது நம்முடைய பதிவுத் துறை. இந்தப் பதிவுத் துறையைப் பொறுத்தவரையில் அந்த



மாவட்டத்திலே ஒரு புதிய கண்டுபிடிப்பினைச் செய்திருக்கின்றார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் இரப்பருடைய விலை வீழ்ச்சி. 55 ரூபாய் என்று இருந்தது இன்றைக்கு 23 ரூபாய். 6 ரூபாய்க்கு விற்ற ஒரு தேங்காயினுடைய விலை 2 ரூபாய். இப்பொழுது இது யாருக்கும் வேண்டாம். 250 ரூபாய்க்கு விற்ற நல்லமிளகு 100 ரூபாய். அரசாங்கத்தினுடைய ஒரு கிராம்புத் தோட்டம் இருக்கின்றது. அந்தக் கிராம்பினைப் பறிப்பதற்கு இயலாது. ஏனென்றால் அந்தக் கூலியைக் கொடுக்க முடியாது. எனவே அந்த கிராம்பினுடைய விலை வீழ்ச்சி. இப்படி "விவசாயிகள் உற்பத்திச் செய்கின்ற பொருட்கள் எல்லாம் வீழ்ச்சியடைந்ததற்குப் பின்னால், அந்த மாவட்டத்திலே ஒரு பிரத்யேக பதிவுத் துறையிலே, நிலத்தினுடைய, அதாவது 20 செண்ட் நிலத்திற்குக் கீழே இருக்கப்பட்டவன் நிலத்தினை விற்கப்போனாலும் சரி, வாங்கப் போனாலும் சரி, அதற்கு இருக்கின்ற விலையிலேயிருந்து market rate சந்தை விலையிலிருந்து மூன்று மடங்கு அதிகம் stamp paper–ஐ வைக்க வேண்டும். அப்போதுதான் இது நடக்கும். ஏனென்று கேட்டால், அந்த வழிகாட்டு மதிப்பீடு அப்படித் தீர்மானிக்கின்றது. விவசாயிகளுடைய உற்பத்திப் பண்டங்கள் அனைத்தும் விலைவீழ்ச்சி அடைந்திருக்கின்ற நேரத்தில் எப்படி நிலத்தினுடைய விலை உயரும்? இதனாலே பாமர மக்கள், ஏழையெளிய மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள்.

என்னுடைய ஒரு சொந்த அனுபவம். எனக்கு அந்த தேசிய நெடுஞ்சாலையில் ஒரு 5 செண்ட் நிலம் இருக்கிறது. 4 ஆண்டுகளுக்கு முன்னால் விலைக்கு அதை நான் கொடுப்பதற்காகத் தீர்மானிக்கின்ற போது ஒரு செண்ட் நிலத்திற்கு 5 இலட்சம் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது, அதைக் கேட்டால் ஒரு இலட்சம் ரூபாய்கூடத் தருவதற்குத் தயாராக இல்லை. அப்படி நிலத்தினுடைய விலை வீழ்ச்சி அடைந்திருக்கின்ற இந்த நேரத்தில், இந்த மதிப்பீடு என்று இந்தப் பதிவுத் துறை செய்வது எந்த முறையிலேயும் நியாயம் இல்லை. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழித்துறையிலே ஒரு Sub-Registrar Office இருக்கின்றது. அது ஊழலினுடைய ஊற்றுக்கண். எனவேதான் இதுசம்பந்தமாக ஒரு இயக்கம் நடத்திய காரணத்தினால், அங்கேயிருக்கின்ற ஒரு எழுத்தர், இந்த ஆவண எழுத்தருடைய licence–ஐ cancel செய்து விட்டார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னால், நானும் திரு. ஹேமச்சந்திரன், எம்.எல்.ஏ. அவர்களும் சேர்ந்து I.G. Office–ல் போய் ஒரு மனுவைக் கொடுத்தோம். நியாயம் வேண்டுமென்று மனுவைக் கொடுத்தால் எந்தப் பதிலும் இல்லை.



சென்னை-600 008

பதில் இல்லை. இதுபோன்ற நிலை என்பது எதைச் சொல்கின்றார்கள்? அங்கே Sub-Registrar Office-லே இந்த நிலை ஊதாரித்தனம் அல்லது ஊழல் நடைபெறுகிறது என்று சொன்னால், இந்த அரசுக்கு கெட்ட பெயரை உருவாக்குகின்றார்கள். இது கிராம அலுவலகங்களிலே. களியல் கிராம அலுவலகத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அறுமனை கிராம அலுவலகத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, மேல்புரம் கிராம அலுவலகத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, ஏதாவது ஏழையெளியவர்கள் சான்றுகளைப் பெறச் சென்றால், அதிகமாகக் கையூட்டு வேண்டுமென்று கேட்கின்றார்கள். அவன் வெளியே வந்து எதைச் சொல்கின்றான்? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசிலும் இந்த மாற்றம் ஏற்படவில்லை. ஊதாரித்தனத்தினுடைய நிலை நடந்துவருகிறது என்பான். எனவேதான் இந்தப் பிரச்சினைகளிலே இந்தப் பதிவுத் துறைகளிலே ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையிலே அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த ஆவண எழுத்தருக்கு மீண்டும் அந்த licence–ஐக் கொடுக்க வேண்டும். இதேபோன்றுதான் சாராயம்.

*பிற்பகல் 6—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளிக்குள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, சாராயத்தினுடைய நிலைமையையெல்லாம் பேசினோம். ஆனால் எங்கள் ஊரிலே சாராயம் மட்டுமல்ல. முன்னாள் முதலமைச்சர் இங்கே ஒன்றைச் சொன்னார். என்னுடைய துப்பாக்கியினுடைய தோட்டா சாராயப் பானைகளைச் சந்திக்கும் என்றார். எங்கேயும் யாரையும் சந்தித்தது மாதிரி எனக்குத் தெரியவில்லை. தெரிந்தது என்னவென்று கேட்டால், தூசி என்ற இடத்திலே ஒரு காவல் நிலையத்திலே நடந்த நிகழ்ச்சியை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். பிரச்சினைக்கு வரவில்லை. ஆனால் எங்கள் ஊரிலே சாராயம் மட்டுமல்ல; மதுக்கஷாயம் கொல்லங்கோடிலே ஒரு காவல் நிலையத்தினுடைய jurisdiction–னுக்குள் 20 கடைகளை வைத்துப் பகிரங்கமாக மதுக் கஷாயத்தை விற்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவேதான் இந்த அரசாங்கம், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் நல்லவர்கள் என்ற ஒரு பெயரைச் சம்பாதிக்கிற நேரத்தில், ஊழலுக்கு இடம் அளிக்காதவர்கள் என்ற பெயரை சம்பாதிக்கிற நேரத்தில், அந்தக் காவல் நிலையம், பதிவுத் துறை, கிராம அலுவலர்கள் என்ற அந்தப் பழைய நிலையிலிருந்து மாற்றத்திற்கு வரவில்லை. அதற்காக உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்கள் 10 மணித் துளிக்குள் பேசி முடித்து விடவும். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குத் தொடர்புடைய நில வருவாய் மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு அனுமதி தந்த உங்களுக்கு நன்றிகூறி கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைக் கூற நான் விழைகிறேன்.

நேரத்தைக் கருதி, நான் சுருக்கமாகக் கூற விரும்புவது, குறிப்பாக, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் ஒரு சம்பவத்தை, ஒரு 'நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பண்ணை நிலங்களைப் பாதுகாப்பதற்கான நில உச்சரம்புச் சட்டத்தைத் தளர்த்துவது என்று மாண்புமிகு....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டம், தேவைப்பட்டால் தளர்த்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிறகு இங்கே பேசிய பல சட்டமன்ற உறுப்பினர்கள், அதைத் தளர்த்தக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள். இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் என்னைச் சந்தித்து இதே கோரிக்கையை வைத்தார்கள். ஆகவே நில உச்சவரம்புச் சட்டத்தை இந்த அரசு தளர்த்தப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ரொம்ப நன்றி. காரணம் என்னவென்று சொன்னால், இதைச் சொல்ல வேண்டிய அவசியம் இருந்ததால்தான் சொல்கிறேன். 1961 ஆம் ஆண்டு 17000 பேர் சிறை சென்று பல மாதங்கள் சித்திரவதைக்கு ஆட்பட்டு, இந்தச் சட்டம் இந்த மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்; அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** முதலமைச்சருக்கு நன்றி சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுந்து நிற்பதிலிருந்தே தெரிகிறது. சொல்லுங்கள்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தை இந்த அரசு தளர்த்தாது என்று சொல்லி, ஏழையெளிய நிலமற்ற விவசாயிகளின் வயிற்றிலே பால் வார்த்திருப்பதற்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன் தொடர்ந்து இதே உணர்வோடு இருப்பது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டும்கூட, இந்த 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை, 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கொண்டுவந்து, இந்த நிலங்களை ஏழையெளிய மக்களுக்கு, உழைக்கின்ற மக்களுக்கு, நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கி, இந்தச் சட்டம் தமிழ்நாட்டிலே ஒரு பயனுள்ள சட்டமாக இருந்தது. சாதாரண ஏழையெளியவர்களுக்கெல்லாம் நிலம் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருந்து, இப்போது அவர்களுக்கு ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று கிராமப்புறங்களிலே உள்ளவர்களுக்கு நிலம் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், குவியலாக இருந்த அந்தப் பண்ணை நிலத்தை, உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுத்ததன் விளைவாக, அந்தச் சட்டம் இப்போது நன்மையைத் தந்திருக்கிறது. அதுவும் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கடந்த காலத்தில் ஒரு நீண்ட வரலாற்றுச் சிறப்புமிக்கப் போராட்டத்தை நடத்திய அந்தத் தலைவர்கள் எல்லாம் சந்தித்து, முதலமைச்சரிடத்திலே சொல்லி உடனடியாக சட்டமன்றத்திலே அறிவித்தது, உண்மையிலேயே பல இலட்சக்கணக்கான தமிழ்நாட்டினுடைய சிறு விவசாயிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுவார்கள்; வாழ்த்துவார்கள்.

அதேபோன்று, குத்தகைதாரர்களுடைய பாதுகாப்புச் சட்டம். அதேபோன்றுதான் பல்வேறு இயக்கங்களை நடத்தி நிலங்கள் அந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அப்போது, குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் இல்லாத ஒரு நிலைமை இருந்தது. சமீபத்தில் வெள்ளத்தால், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகள் அந்தக் குத்தகை பாக்கிகளைச் செலுத்த முடியாத ஆண்டுகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே revenue court மூலமாக court–கள் அமைத்து விவசாயிகளை வெளியேற்றக்கூடிய ஒரு நிலைமை



ஏற்பட்டது. திரும்ப இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பின்னால் 1989 ஆம் ஆண்டு அது ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் அதை அமல்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆகையால் கூட்டுறவுக் கடன்களைப் பெற்றிருக்கின்ற விவசாயிகளுக்கு வட்டியும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்திருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் அந்த இயற்கைச் சீற்றத்தால், வறட்சி, வெள்ளக் காலங்களில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளை Revenue Court-லிருந்து விடுவிக்க வேண்டும். ஏனென்றால் நூற்றுக்கணக்கான பேர்கள் தாலுகா தலைநகரங்கள், ஆர்.டி.ஓ. அலுவலகங்களுக்குத் தொடர்ந்து அலைந்துகொண்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6—30*

விவசாயத் தொழிலாளர்களுடைய நல வாரியம். விவசாயத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலே 1 கோடி தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூலி நிர்ணயச் சட்டம் தொடர்ந்து வருவாய்த் துறை மூலமாக அறிவிக்கப்படுகிறது. அதுபோன்று சென்ற ஆண்டு 2000 ஆண்டு அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆண் தொழிலாளிக்கு ரூ.55, பெண் தொழிலாளர்கள் 5 மணி நேரம் வேலை செய்தால் அவர்களுக்கு ரூ.45 என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தக் கூலி என்பது அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு கூட குறைப்பதற்கான சட்டம் அல்ல. குறைத்துக் கொடுக்கக்கூடியவர்கள் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக கொண்டுவரப் பட்ட சட்டம் இது. பல மாவட்டங்களிலே இது நிறைவேற்றப்படுவதே இல்லை. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மட்டுமே இது நிறைவேற்றப்படுகிறது. பல மாவட்டங்களில் நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. ஏற்கெனவே கிஸான் தாசில்தார், கிஸான் இன்ஸ்பெக்டர் என்று கூலிச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக இரண்டு பேர்களை நியமித்து இருந்தார்கள். அவர்களை எடுத்துவிட்டார்கள். அதனால் முழுமையாக அந்தச் சட்டத்தை அமல்படுத்த முடியவில்லை. சாதாரண ஏழை எளிய பெண்கள் 8 மணி நேரம் 9 மணி நேரம் உழைத்தால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளம் 20–லிருந்து 25 ரூபாய். அதற்கு மேலே சம்பளம் வழங்கப்படுவதில்லை. அந்த ஊதியத்தை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்றுதான் இன்றைக்கு நிலச் சீர்திருத்தத்தில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய, உச்சவரம்பில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய மிச்ச நிலங்களை விநியோகிக்கின்ற முறையில் பல இடங்களில் நிலமற்றவர்கள் அதற்கு மனுச் செய்து அந்த நிலம் அவர்களுக்கு வழங்கப்படும் என்று ஆர்ஜிதம் செய்யப்பட்டு அரசாங்கம் சொல்லக்கூடிய தேதிகளில் அவர்கள் பல due-க்களை எங்கேயோ வாங்கி கட்டி முடித்துவிடுகிறார்கள். 15 ஆண்டு காலம் 20 ஆண்டு காலம் ஆயிரக்கணக்கான வழக்குகள் தேங்கிப்போய் இருக்கின்றன. அவர்களுக்கு யாரை அணுகுவது என்றே தெரியவில்லை. யாராவது ஒரு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரை அல்லது அரசியல் இயக்கத் தலைவர்களைப் பிடித்துக்கொண்டு அந்தப் பணிகளிலே ஈடுபட வேண்டும். வழக்கறிஞர்களுக்குக்கூட அவர்களால் செலவு செய்ய முடியாது. ஏதோ அரசாங்கத்தால் நிலம் இலவசமாகக் கிடைக்கும் என்ற அந்த ஆர்வத்தில் அவர்கள் அந்த நிலங்களுக்காக மனு போடுகிறார்கள். ஒரு due, இரண்டு due-க்களை கட்டி முடித்துவிடுகிறார்கள். அதற்குப் பின்னால் நிலத்தினுடைய உரிமையாளர் கோர்ட்டுக்குப் போய், பல ஆண்டுகாலமாக, நூற்றுக்கணக்கான வழக்குகள் தஞ்சை மாவட்டத்தில் தேங்கியிருக்கின்றன. ஆக, அந்த நிலத்தினுடைய பிரிவினை மூலமாக பல murder வழக்குகள் இருக்கின்றன. நிலமே கிடைக்கவில்லை. அந்த விவசாயத் தொழிலாளர்கள் இரண்டு பேருமே சேர்ந்து உழுது உழுது நிலத்தை விளைய வைக்க வேண்டுமென்பதற்காக உழைத்தபோது பல கொலை வழக்குகளிலே ஈடுபட்டது போன்ற வழக்குகள் இருக்கின்றன. அவர்கள் 10 ஆண்டுகாலம், 15 ஆண்டுகாலம் சிறையில் இருந்து வந்த பின்னாலும்கூட இன்னும் நிலம் கிடைத்தபாடில்லை. இப்படிப்பட்ட வழக்குகள் தஞ்சை மாவட்டத்தில், திருவாரூர் மாவட்டத்தில் நிரம்ப இருக்கின்றன. இதை ஒரு காலக்கெடுவோடு முடிப்பதற்கான முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்ன கருத்து, குடியிருப்பு மனைப் பட்டா. இந்தக் குடியிருப்பு மனைப் பட்டா, ஒரு நீண்ட போராட்டத்திற்கிடையில்தான் வந்தது. இன்றைக்கு பல தாலுகாக்களிலே, பல வட்டங்களிலே அந்த மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தொகுப்பு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னால்கூட பட்டா இருந்தால்தான் கொடுக்க முடியும். ஒன்று சொந்த பட்டா இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்தால் வழங்கப்படக்கூடிய அந்த 3 சென்ட் பட்டா இருந்தால்தான் அந்தத் தொகுப்பு வீடே கட்ட முடியும். சில இடங்களில் அந்தத் தொகுப்பு





வீடு கட்டுவதற்குக்கூட சில கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஆதிதிராவிட மக்கள், குடியிருக்கக்கூடியவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் குடியிருக்கிறவர்களுக்குப் பட்டா வழங்குவதிலே தேக்க நிலைகள் இன்றைக்கு இருக்கின்றன. அதை விரைந்து வழங்குவதற்கான முயற்சிகளிலே முனைப்புடன் செயல்பட தனி அலுவலகங்கள் ஒவ்வொரு வட்டாட்சியிலும் இருக்க வேண்டும். எல்லாமே தாசில்தார் –சட்டம்– ஒழுங்குப் பிரச்சினைக்கு தாசில்தார், வருவாயிலே V.A.O.-வைச் சந்திக்க வேண்டும் என்றால் தாசில்தார், இன்னும் பல துறைகளிலே சந்திப்பதற்கும் தாசில்தார். அந்த நிலையை மாற்றி பட்டா வழங்குவதற்கு என்று ஒரு துறையையே ஏற்படுத்தி, தனி அதிகாரிகளை நியமித்து, அந்தப் பட்டா வழங்குவதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். அதையும் அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன். அதேபோல, சென்னை மாவட்டத்திலே ஐந்து தாலுகாக்கள் இருக்கின்றன. சென்னை மாவட்டத்திலே இருக்கிற ஒவ்வொரு தாலுகாவையும் இரண்டாகப் பிரித்துத் தரப்பட வேண்டுமென்று சென்னை மக்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அப்போதிருந்த மக்கள்தொகையின் அடிப்படையில் எப்போதோ அமைக்கப்பட்ட அந்தத் தாலுகாக்கள் இன்றைக்கு ஒரு நிர்வாகத்திலிருந்து செயல்பட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதையும் இந்த மாவட்டப் பிரிவினையில் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 6-35*

என்னுடைய தொகுதி திருத்துறைப்பூண்டியில் உள்ள முத்துப்பேட்டை; அதை தனி வட்டமாகப் பிரிப்பதற்கான அனைத்துக் கோப்புகளும் ஏற்கெனவே அரசுக்கு வந்தன. இடைப்பட்ட காலத்திலே அவை தடுத்து நிறுத்தப்பட்டன. வேறு ஊர்கள் அறிவிக்கப்பட்டன.

மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எல்லா தகுதிகளும், மக்கள்தொகையின் அடிப்படையில், அரசாங்கம் ஒரு தாலுகாவாக பிரிக்க வேண்டுமென்று என்னென்ன விதிமுறைகள் இருக்கிறதோ அத்தனையும் அந்த முத்துப்பேட்டைக்கு பொருந்தி இருக்கின்றன. ஆகவே முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தை தாலுகா தலைநகரமாக அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றம் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒருசில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் ஒரு பக்கத்திலே வெள்ளம் வருகிறது. இன்னொரு புறத்திலே வறட்சி இருக்கிறது. வெள்ளம் ஏற்பட்டு பெரும் சேதம் ஏற்பட்டால், மத்திய அரசு அதற்கான நிதி உதவிகளைத் தருகிறார்கள். வறட்சி ஏற்பட்டால் எதுவும் கொடுப்பதில்லை. ஆகவே இந்த வறட்சி ஏற்படுகின்ற காலங்களில், மத்திய அரசிடமிருந்து நிதிகளைப் பெறுவதற்கு நம்முடைய மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற, தீயால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் குடிசைகளுக்கு ரூ.1,000 வழங்கப்படுகிறது. அது போதுமானதல்ல. ரூ.5,000/–ஆவது வழங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் எனக்குப் பேசுவதற்கு அனுமதி தந்திருக்கிற தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1992 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும் வெள்ளச் சீற்றம் ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கான குடிசைகள் நாசமாகிவிட்டன. அன்றையதினம் நாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டுக்கொண்டபோது, 10 ஆயிரம் ரூபாய் கடனாகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கினார்கள். ஆனால் அது இன்றைக்கு வட்டியும் அசலுமாகச் சேர்ந்து, பல லட்ச ரூபாய்களைத் தாண்டுகின்ற நிலைமை. 100 ரூபாய் கட்டினால் அதில் 80 ரூபாய் வட்டியும், 20 ரூபாயை மட்டும் அசலிலே வரவு வைக்கப்படுகின்ற ஒரு கொடுமை இருக்கிறது. எனவே புயல் வெள்ளச் சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு கவனித்து, அந்தக் கடனைப் பெற்று இருப்பவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். எனவே ஒட்டுமொத்தமாக அந்த ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்ட, வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட வீடுகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகையைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, வெள்ளத்தால் சேதம் ஏற்படுகின்றபோது மத்திய அரசு அதற்கு நிதி கொடுக்கிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு கொடுக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் கொடுப்பதில்லை. 1992–ல் நடைபெற்ற வெள்ளச் சேதத்தைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1992–ல் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது, வெள்ள நிவாரணப் பணிகளுக்கும், மராமத்துப் பணிகளுக்கும், புனரமைப்புப் பணிகளுக்கும் இங்கே ஓர் அறிக்கை தயார் செய்து நானே டெல்லிக்குச் சென்று, அன்றைய பிரதமர் அவர்களைச் சந்தித்து 500 கோடி ரூபாய்க்குமேல் உதவி கேட்டோம். ஆனால் மத்திய அரசு கொடுத்ததோ வெறும் 6 கோடி ரூபாய். ஆகவே இன்றைய மாநில அரசு நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதுசம்பந்தமான ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த வட்டித் தொகையைக் கொடுக்க முடியாதவர்களிடம், ஜப்தி நடவடிக்கையை எடுத்ததன் மூலம், என்னுடைய தொகுதியிலே மற்றும் அதேபோன்று, விளவங்கோடு, கிள்ளியூர் தொகுதிகளிலே இருக்கிற மக்கள்தான் அதிகமாக இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான ஏழை மக்களுடைய பொருள்களை இப்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் ஜப்தி மூலம் தொந்தரவு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அரசு இதுகுறித்து பரிசீலித்து ஒரு முடிவு எடுப்பது வரை, இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களைக் கொடுமைப்படுத்தாமல் இருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

*பிற்பகல் 6—40*

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டவுன் பஞ்சாயத்து என்று சொன்னால், அது மிகப் பெரிய வளர்ச்சி அடைந்த பகுதி அல்ல. அந்த டவுன் பஞ்சாயத்தை ஒட்டி இருக்கிற

பகுதிகளுக்கு எல்லாம் பட்டா கொடுப்பது நிறுத்திவைக்கப்பட்டு இருக்கிறது. அதை அரசு கவனிக்குமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, மாவட்டங்களுக்கு உள்ளே அமைச்சர்களும், V.I.P.-க்களும் வருகிறார்கள். அவர்கள் வருகின்றபோது அவர்களை உபசரிக்க வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மிகவும் நேர்மையாக நடந்துகொள்கின்ற காரணத்தால், அவரே செலவு செய்ய முடியாமல் தவிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே பொது நிதியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு குறைந்தபட்சம் ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாயாவது ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்தகைய கோரிக்கை வைத்து, அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை ஏற்கெனவே அறிவித்து இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா கேட்டதற்கு இரட்டிப்பு மடங்காக பலன் கிடைத்து இருக்கிறது. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் கடன் பெற்றவர்களுக்கு அவர்களுடைய கடனுக்குண்டான வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்யக் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். இதுசம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் துறை அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசி, அந்தத் துறைகளை ஆய்வு செய்தபோது, இதற்குத் தள்ளுபடி கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகையினாலே நம்முடைய வீட்டுவசதித் துறையின் மானியக் கோரிக்கையில் இதுசம்பந்தமான அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அனுமதியோடு அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தென்கோடியில் சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை இருமுறை நகரச் செயலாளராகவும், 1996 ஆம் ஆண்டு பெரியகுளம் நகராட்சியில் நகர மன்றத் தலைவராகவும், அதற்குப் பின்னர் மாவட்ட M.G.R. இளைஞர் அணிச் செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் பெரியகுளம் சட்டமன்ற வேட்பாளராகவும், என்னை நிறுத்தி மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்று பெய்த கடும் மழையினைக்கூட பொருட்படுத்தாமல் தொகுதியில் பல பகுதிகளுக்கு வருகை புரிந்து வாக்குகளைச் சேகரித்து வெற்றி பெறச் செய்து என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கியதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய வருவாய்த் துறை அமைச்சராகவும் என்னை நியமனம் செய்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தூய தொண்டனாக என் உயிர் உள்ளவரைக்கும் நன்றியுடன் இருப்பேன் என்றும், தொகுதி மக்கள் சார்பாகவும், கழகச் செயல் வீரர்கள் சார்பாகவும், மாவட்ட கழகங்களின் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 6-45*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அரசில் வருவாய்த் துறை அமைச்சர் பொறுப்பேற்று, இத்துறையின் மானியக் கோரிக்கைகளை இப்பேரவைமுன் ஒப்புதலுக்காகச் சமர்ப்பித்துள்ளேன். இதுவரை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இத்துறை தொடர்பாக பல நல்ல கருத்துகளையும் அறிவுரைகளையும் வழங்கி உள்ளார்கள். நான் தொடர்ந்து ஆற்ற இருக்கும் பணிக்கு இக்கருத்துகள் புத்துணர்வு கொடுப்பதாக அமையும் என்பதனை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் அழைத்து, நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நம் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து மகத்தான ஆதரவுடன் நம்மை அரசமைக்க அங்கீகாரம் அளித்துள்ளார்கள் என்றும், நம்முடைய பணி நம் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களின் அடிப்படைக் குறைகளைப் போக்குவதிலும், தொகுதிகளிலுள்ள பிரச்சினைகளைக் களைவதிலும், அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் மக்களுக்குச் செல்லும்படியும், பணிகள்

அமைய வேண்டுமென அறிவுரை கூறியுள்ளார்கள். அதனை மனதில் தேக்கி வைத்துக்கொண்டு என் பணிகளை மக்களுக்குச் செவ்வனே ஆற்றக் கடமைப்பட்டுள்ளேன் என்பதனை இம்மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசில் நிலம் தொடர்புடைய அனைத்துச் செயல்களுக்கும் வருவாய்த் துறை தன் பணியினை விரிவுபடுத்திக்கொண்டு செயலாற்றுகிறது. நலிந்த மக்களின் நலனுக்காகவும், இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் இன்னல்களைத் துடைப்பதிலும், இயற்கைச் சீற்றம் குறித்து முன்னதாக மக்களுக்குத் தெரியப்படுத்துவதும் வருவாய்த் துறையே ஆகும். மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பும்வரை இத்துறை இயன்ற உதவிகளைத் தொடர்ந்து வழங்குகிறது. மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வருவாய்த் துறை பெரும் பங்கு வகிக்கிறது. சமுதாய மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், சமூக நீதி அமைப்பதற்காகவும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலமும், குடிவாரச் சட்டம் மூலமும் கிராமப்புற ஏழைகளின் நிலை உயரவும், ஏற்றத்தாழ்வுகள் குறையவும் வருவாய்த் துறை சமூக நீதிகளை பாதுகாத்துக்கொண்டு வருகிறது.

சமுதாயத்தில், பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களை முன்னேற்றுவதற்காக அடிப்படைத் தேவையான, மக்கள் வசிப்பதற்கு இடம் வழங்குவதே அரசின் தலையாய நோக்கமாகும்.

விவசாயம் நமது நாட்டில் முக்கிய பங்கு வகிப்பதைக் கருத்தில் கொண்டு, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்வதற்கு இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த வருடம் 1-4-2001 முதல் 31-7-2001 வரை 1264.18 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இதனால் 2391 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

குத்தகை மற்றும் நில உரிமை மாற்றம் ஆகிய பணிகளை இத்துறை சமச்சீரோடு மேற்கொண்டு வருகிறது. அரசு நிலங்களை குத்தகைக்கு அளிக்கும்பொழுது வணிக நோக்கத்திற்கான ஆண்டு குத்தகை 14 சதவிகிதமும், வணிக நோக்கமற்ற பிற இனங்களுக்கு 7 சதவிகிதமும் நிர்ணயிக்கப்படுகிறது.

நில மாற்றங்களைப் பொறுத்தவரை ஆட்சேபணையற்ற தடையாணைக்கு உட்படாத புறம்போக்கு நிலங்களாக இருப்பின், குறைந்தபட்ச நிலங்களை நில மதிப்பு வரம்பின்றி, பொதுப் பணி மற்றும்



தொடர்புடைய துறைகளைக் கலந்த பின்னர் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுக்கு நில மாற்றம் செய்ய தக்க அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட நிலம், அத்துறைகளால் முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலையில் அந்நிலங்கள் மீளப் பெறப்பட்டு தேவையுள்ள பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

முன்னதாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் இவ்வரசு நில உரிமை மாற்றத்தைப் பொறுத்தவரை நலிந்த பிரிவினர்களுக்கு லாப நோக்கமின்றியும், நில கிரயம் இன்றியும் செயல்படுத்துகிறது. வணிக நோக்கத்திற்காகத் தேவைப்படின், நிலத்தின் சந்தை மதிப்பினை கிரயமாக வசூலித்துக்கொண்டு அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் வேளாண்மை வருமானத்திற்கு வரி விதிக்கப்பட்டு வருகிறது. பின்னர் 1958-59 ஆம் ஆண்டு முதல் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கும் வேளாண்மை வருமான வரி விரிவாக்கம் செய்யப்பட்டது. மலைத் தோட்டம் மற்றும் மலைத் தோட்டம் அல்லாத பயிர்கள் அனைத்திற்கும் வரி விதிக்கப்பட்டிருந்த நிலை 1991 வரை நடைமுறையில் இருந்து வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் 1-4-1992 முதல் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கு விதிக்கப்பட்ட வரி ரத்து செய்யப்பட்டு சுமார் 26,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் உள்ள மக்களை முன்னேற்றுவதற்காக அவர்களுக்கு இருப்பிட வசதியைத் தர வேண்டுமென்ற நல்ல நோக்கம் இல்லாமல் அரசு கொடுக்கின்ற இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற கொள்கையில்கூட பின்தங்கியிருந்தார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுதான் 1991-1996 காலகட்டத்தில் ஏழை எளிய வறுமைக் கோட்டிற்குக்குக் கீழே உள்ள மக்களுக்குத் தரப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 13,38,928 ஆக உயர்த்தித் தரப்பட்டது. ஆனால் முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 9,50,449 மட்டுமே ஆகும். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் காட்டிலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் 3,88,479 வீட்டுமனைப் பட்டாக்கள் கூடுதலாகத் தந்திருக்கிறார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) மேலும் மே 2001 முதல், நாளது தேதி வரை வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 33,096 ஆகும். இதிலிருந்து ஏழை எளிய மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுதான் ஏழை எளிய மக்களுக்கு உதவுவதில் முதன்மையாக இருந்தது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

*பிற்பகல் 6—50*

ஏழை எளிய குடிசைவாழ் மக்களுக்கென குடியிருப்புகள் கட்டுவதற்கு நிலக் கிரயமின்றியும் இதர நோக்கங்களுக்காக மனை ஒன்றிற்கு பெயரளவில் நிலக் கிரயமாக ரூ.5,000/– மட்டும் வசூலித்துக்கொண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. நில உரிமை மாற்றம் நிபந்தனைகள் மீறப்பட்டால். அந்நிலங்களை மீளப் பெறுவதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

பொதுவாக நீர்வழி புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோவில் நிலங்கள், களம் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை எனக் கருதப்படுகின்றன. வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் இத்தகைய முறையற்ற ஆக்கிரமிப்புகளை அகற்றத் தேவையான அதிகாரம் பெற்றுள்ளனர்.

மரப் பட்டா வழங்குவதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் அனைத்துப் பயன்களும் அருகிலிருக்கும் நில உடைமைதாரர்கள் அல்லது அம்மரங்களைப பாதுகாத்து வருபவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

நில எடுப்புச் சட்டத்தின்படி நிலங்களை கையகப்படுத்தாமல் தனியார் பேச்சுவார்த்தை மூலம் 20 இலட்சம் ரூபாய்க்கு மேற்படும் நிலங்களை வாங்குவதற்கு மாநிலக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாக கையகப்படுத்த தொழில் துறை நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் சட்டம் உள்ளது. அச்சட்டத்திற்கான வரைவு விதிகள் வரையறுக்கப் பட்டுள்ளன. அச்சட்டத்தையும், அதன் விதிகளையும் ஒரே சமயத்தில் நடைமுறைக்குக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.



மக்களின் உடைமைகளுக்கு உத்தரவாதம் அளித்து, அவர்களது உரிமைகளைக் காக்கின்ற துறை வருவாய்த் துறையாகும். விவசாய நில உடைமைதாரர்களுக்கு நில உரிமைப் பதிவேடு கணினி மூலம் தயாரித்து, மக்களுக்கு வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தி, வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் நில அளவைப் பணியாளர்கள் நில உரிமையாளர்களிடம் மனுக்களைப் பெற்று அதற்குண்டான உரிமைப் பதிவேடு வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

10–வது நிதிக் குழு வழங்கிய மானியத்தைக் கொண்டு நில அளவை மற்றும் நிலப் பதிவேடுகள் துறை, நிலப் பதிவுருக்களைப் பாதுகாப்பதற்கென மாவட்டங்களில் ரூ.330 இலட்சம் செலவில் 32 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

புரட்சித் தலைவர் டாக்டர் M.G.R. அறிவு நகர் கண்ட டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தீர்க்கதரிசனமான இம்மாநிலத்தை கணினி மாநிலமாக உருவாக்க உறுதிபூண்டுள்ளார்கள். வளர்ந்துவரும் விஞ்ஞானத் தேவைகளைக் கருத்தில்கொண்டு வருவாய்த் துறையில் கணினி மயமாக்கும் பணி மிக விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நடப்பு நிதியாண்டில் இப்பணிக்கென 29 வட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய வெளிப்புறக் கணினி மாடங்களில் உள்ள தொடுதிரை வசதி Touch screen computer மூலம் பொது மக்கள் தங்களது தேவைக்கான நிலப் புள்ளிவிவரங்களைத் தாங்களாகவே தெரிந்துகொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். வருவாய்த் துறையின் அனைத்துப் பணிகளும் கணினி மூலமாகப் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எல்லா நேரங்களிலும் கிடைக்க வழிவகை செய்யப்படும். வருவாய் மற்றும் நில அளவைத் துறைகளில் உதவியாளர் முதல் துணை ஆட்சியாளர் வரையிலான அனைத்து அலுவலர்களின் உதவியுடன் . கணினி இயக்கப்படும். இதற்காக வருவாய் மற்றும் நில அளவைத் துறைகளில் சுமார் 8,500 பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான ஒரு திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6—55*

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏர்வாடியில் ஏற்பட்ட தீ விபத்து நம் நெஞ்சில் வேதனையை உருவாக்கிவிட்டது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், சம்பவ இடத்திற்குச் சென்று தீ விபத்தில் இறந்த நபர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறியதுடன், மருத்துவமனைக்குச் சென்று தீக்காயமுற்றவர்களைப் பார்வையிட்டு மருத்துவர்களிடம் தீவிர சிகிச்சை அளிக்குமாறு கூறினார்கள். இறந்த 28 நபர்களுக்கும் அவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூபாய் 15,000 மற்றும் கூடுதலாக மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.35,000/– சேர்த்து ரூபாய் 50,000 நிவாரணமாக வழங்கவும், பலத்த தீக்காயங்கள் அடைந்த ஒவ்வொருவருக்கும் தலா ரூ.15,000/– வீதமும், சாதாரண தீக்காயம் அடைந்த ஒவ்வொருவருக்கும் தலா ரூ.6,000/ – வீதமும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்கள். தீக்காயமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு இயந்திரம் முனைப்புடன் செயல்பட்டது.

தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனத்தில் 16–8–2001 அன்று வெடி விபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் 24 பணியாளர்கள் இறந்துவிட்டனர் என்ற செய்தி கேட்டவுடன் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும் சம்பவ இடத்திற்கு உடனடியாக அனுப்பி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு பணித்தார்கள். மேலும், இறந்த பணியாளர்களின் ஈமச் சடங்குச் செலவுக்காக ரூ.5,000/– வீதம் வழங்கப்பட்டது. மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு ரூ.2,000/– வீதம் அளிக்கப்பட்டது. இறந்த ஒவ்வொரு ஊழியரின் குடும்பத்திற்கும் ரூ.50,000/– வீதமும் காயமுற்றோர்களுக்கு ரூ.15,000/– வீதமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க 29–8–2001 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு இந்த நிதியாண்டில் சுமார் 115 குடும்பங்களுக்கு ரூபாய் 1,33,000 நிதி உதவி வழங்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதுபோன்ற விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் தீ விபத்துகள் இனத்தின்கீழ் நிதி உதவிகள், நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



வருவாய்த் துறையில் வெட்டுத் தீர்மானங்கள். வருவாய்த் துறை மானியக் கோரிக்கைமீது மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். நேரமின்மை காரணமாக இவற்றில் சிலவற்றை மட்டும் குறிப்பிட்டு பதில் அளிக்க விரும்புகிறேன். வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண் 1–ன்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் ரூபாய் 100/– குறைக்க வேண்டி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. சிவராஜ், திரு. ரா. ஈஸ்வரன், திரு. மே.ப. காமராஜ், திரு. ஜி.கே. மணி, திரு. ஜி. பழனிசாமி, திரு. கி. பாரிமோகன், திரு. க. முருகவேல் ராஜன், திரு. கே.சி. கருணாகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஐ. கணேசன், திரு. மு. கார்த்தி ஆகியோர் வேண்டியுள்ளனர். இதுகுறித்து ஒரு விரிவான விளக்கக் குறிப்பு ஏற்கெனவே சட்டப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அரசு நிலங்களை தனியாரிடமிருந்து கையகப்படுத்தும்போது மார்க்கெட் மதிப்பைவிட நஷ்ட ஈடாக வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க வேண்டுமென வேண்டியுள்ளார். நிலம் கையகப்படுத்தும் சட்டப் பிரிவு 23–ன்படி கையகப்படுத்தும் நிலங்களுக்கான ஈட்டுத் தொகை பிரிவு 4, உட்பிரிவு 1–ன்படி அறிவிக்கை வெளியிடப்படும் நாளில் நிலவும் சந்தை மதிப்பீட்டின்படி வழங்கப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களில் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி பல ஆண்டுகளாக வசிக்கும் மக்களுக்கு இலவசமாக நிலப் பட்டா கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, திரு. சி. ஞானசேகரன் அவர்களும், அரசு நிலங்களில் பல வருடங்களாகக் குடியிருப்பவர்களுக்கு தற்கால நில மதிப்பின் அடிப்படையில் பணம் பெற்றுக்கொண்டு உடனடியாக அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, முறையே, திரு. சி. ஞானசேகரன், திரு. டி. சுதர்சனம் ஆகியோர் வேண்டியுள்ளார்கள். இலவச வீட்டுமனைப் பட்டா, கிராமங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.16,000/–க்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.24,000/–க்குக் குறைவாக உள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு மேல் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு நில மதிப்பைப் பெற்றுக்கொண்டு வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன் அவர்கள் வாசுதேவநல்லூர் பகுதியில் பட்டா வழங்கப்படாமல் உள்ள நில உரிமையாளர்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டியுள்ளார். நில உரிமையாளர்களுக்கு நில உரிமைப் பதிவேடு வழங்கும் பணி

திருநெல்வேலி மாவட்டத்தில் துரிதமாக நடந்து வருகிறது. வாசுதேவநல்லூர் சட்டமன்றப் பேரவை தொகுதிக்கு உட்பட்ட சிவகிரி வட்டத்தில் நில உரிமையாளர்களிடமிருந்து இதுவரை 3,699 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 880 மனுக்கள்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு நில உரிமைப் பதிவேடுகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவர்களுக்கு உரிய காலக்கெடுவிற்குள் உரிய பதிவேடுகள் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 7-00

திரு. டி. சுதர்சனம் அவர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள், அவர்கள் பணிபுரியும் கிராமங்களிலேயே கண்டிப்பாகக் குடியிருக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டியுள்ளார். கிராம நிர்வாக அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் கிராமங்களிலேயே கண்டிப்பாகக் குடியிருந்து பணிபுரிய வேண்டுமென தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகளில் முன்னரே உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம், திரு. மே.ப. காமராஜ், திரு. ஐ. கணேசன் ஆகியோர் கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டியுள்ளனர்.

மாநிலத்தில் மொத்தம் உள்ள 12,506 கிராம நிர்வாக அலுவலர்களில், முதற்கட்டமாக மலைப் பகுதிகளில் உள்ள கிராமங்கள், கடலோரப் பகுதியில் உள்ள கிராமங்கள் மற்றும் பிரச்சினை உருவாக வாய்ப்புள்ள கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டித்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 55 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கிராம நிர்வாக அலுவலர்களுக்காக ஒவ்வோர் ஊராட்சி அலுவலகத்தையொட்டி தலா ரூ.60,000/– செலவில் 4,000 அலுவலகக் கட்டடங்கள் இந்த நிதியாண்டில் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியினைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இயற்கைச் சீற்றங்கள் குறித்த மானியக் கோரிக்கை எண் 40–ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மீ.அ. வைதியலிங்கம், திரு. சி. ஞானசேகரன், திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி ஆகியோர் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் துயர் துடைப்புச் சலுகையை உயர்த்த வேண்டி, தீயில் வீடு எரிந்தால், மழையில் வீடு



விழுந்தால், ஒரு வீட்டுக்கு ரூபாய் ஐந்தாயிரம் நிதி உதவி வழங்க வேண்டியும், வேலூர் நகரில் தீயில் எரிந்துபோன 500 வீடுகள் கட்ட அரசு ஒரு வீட்டுக்கு ரூ.5,000/– நிதி உதவி வழங்க வேண்டியும், இயற்கைச் சீற்றங்களினால், குறிப்பாக, தீ விபத்து ஏற்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு நிவாரணத் தொகையினை அதிகப்படுத்த வேண்டியும் விவாதிக்கக் கோரியுள்ளனர். இதற்கு என்னுடைய பதிலை அறிவிப்பில் கூறுகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த வகையில் வருவாய்த் துறை, மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய clarification. அமைச்சர் வருவாய்த் துறைக்கான பதிலை முடித்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும் முடித்து விடட்டும். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அடுத்தபடியாக, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறைக்கான என்னுடைய பதிலைக் கூறுகின்றேன். மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் இங்கு கடந்த ஆட்சிக் காலத்தில் கள்ளச் சாராயம் எந்த அளவுக்கு கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுப் பேசிய கருத்துகள் அவ்வளவும் உண்மை என்ற நிலையில், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதனால் அரசுக்கு வர வேண்டிய மிகப் பெரிய வருவாய் எவ்வாறெல்லாம், எங்கு போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதனை, என்னுடைய பதிலில் தெளிவாகக் கூற இருக்கிறேன்.

மக்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆயத் தீர்வைத் துறையின் மூலம் வரும் வருவாயினை மேம்படுத்துவதற்குரிய திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதேநேரத்தில் ஏழை எளிய மக்களுக்கு எந்த வகையான பாதிப்பும் நேரா வண்ணம் ஒரு கொள்கையை உருவாக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகவும் கவனமாக உள்ளார்கள். அதன் அடிப்படையில் உருவானதுதான் இந்தச் சீரமைக்கப்பட்ட புதிய கொள்கை.

*பிற்பகல் 7-05*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் இந்தத் துறையின் ஆய்வினை நடத்தினார்கள். கடந்த ஆட்சியாளர்களின் காலத்தில் அவர்கள் இத்துறையை எப்படி விட்டுச் சென்றுள்ளார்கள் என்பதனை ஆய்வுசெய்தபோது TASMAC –லிருந்து மது பானங்கள் சில்லறை விற்பனைக்கு எடுக்கப்பட்டதில் மிகப் பெரிய சரிவு கடந்த 5 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது என்பது கண்கூடாகத் தெரிந்தது. இதன் காரணமாக அரசுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிந்தது. சென்ற ஆண்டில் சராசரியாக மாதத்திற்கு 12.41 இலட்சம் மது பாட்டில்கள்தான் விற்பனையாகி இருந்தன. இதற்குக் காரணம் என்னவென்று பார்த்தபோது, கடந்த தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டினாலும், தவறான அணுகுமுறைகளாலும், தீர்வை செலுத்தப்படாத போலி மது பானங்கள் வெளி மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்குள் குவிக்கப்பட்டிருந்ததைத் தெளிவாக அறிய முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சீர்கேட்டினையெல்லாம் நீக்கி சிறப்பானதொரு முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இன்று செயல்படும் புதுக் கொள்கை உருவானது. இந்தப் புதுக் கொள்கையின் மூலம் சிண்டிகேட் அமைப்பு பல்வேறு தவறுகளுக்கு வழிவகுத்த, முன்பிருந்த ஏல முறை மாற்றியமைக்கப்பட்டது. புதிய முறையின் மூலம் போட்டியில்லாத இடங்களில் கடைகளை நேரடியாக வழங்கவும், போட்டியிருந்த இடங்களில் குலுக்கல் முறையில் கடைகளை வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. இந்த முறை எந்த அளவிற்கு எவ்வகையான குறைபாடும் இன்றி சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டது என்பதனை இந்த அவையும் அறியும், மக்களும் அறிவர்; கடைகளுக்கு உரிமக் கட்டணம் சீராக அமைக்கப்பட்டது. முன்பு கடுமையான போட்டியினால் அபரிமிதமான விலைக்கு கடைகள் எடுக்கப்பட்டன. பின்பு அவ்வாறு செய்துவிட்ட முதலீட்டை திரும்ப எடுத்து ஈடுகட்டுவதற்காக வியாபாரிகள் தவறான வழிவகைகளைப் பின்பற்றி வியாபாரம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு உள்ளானார்கள். ஆனால் புதிய கொள்கையினால் மிகவும் சீரான விலைக்கே கடைகளை எடுப்பதன் மூலம் எந்த ஒரு வியாபாரியும் தவறான வழியில் வியாபாரம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுவதில்லை. நியாயமான விற்பனை மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்தே வியாபாரிகள் லாபம் ஈட்ட வழிவகை



உள்ளது. இப்புதுக் கொள்கையின் நல்விளைவுகளெல்லாம் சென்ற ஒரு மாதத்தில் விற்பனை மூலம் தெளிவாக நிரூபணம் ஆகியுள்ளன. புதிய கொள்கையின்படி உரிமம் வழங்கப்பட்ட கடைகளின் எண்ணிக்கை 5,338. இந்த விற்பனையின் மூலம் கிடைத்த உரிமத் தொகை ரூபாய் 538.58 கோடியாகும். இதுவும் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமான தொகை ஆகும். நடப்பு ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் TASMAC-லிருந்து எடுக்கப்பட்ட மதுபானப் பெட்டிகளின் எண்ணிக்கை 17.27 லட்சம் ஆகும். TASMAC தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை நடைபெற்ற விற்பனையில் இதுவே அதிகபட்சமானதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற ஆண்டு மாத சராசரியை ஒப்பிட்டு நோக்குகையில் இது 4.86 லட்சம் பெட்டிகள் அதிகம் ஆகும்.

அதேபோல சென்ற மாதத்தில் பீர் விற்பனை 13.65 லட்சம் பெட்டிகள் ஆகும். இது சென்ற ஆண்டு மாத சராசரியைக் காட்டிலும் 4.34 லட்சம் பெட்டிகள் அதிகம் ஆகும். இதுவும் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமான விற்பனையாகும். ஆகஸ்டு மாதத்தில் மட்டும் மதுபானப் பெட்டிகள் விற்பனையின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூபாய் 327 கோடி ஆகும். இது சென்ற ஆண்டு மாத சராசரியைக் காட்டிலும் ரூபாய் 93 கோடி அதிகமாகும். இதுவும் என்றுமே இல்லாத அளவிற்கு மிக அதிகமான தொகை ஆகும். இது சென்ற ஆண்டு மாத சராசரியைக் காட்டிலும் கிட்டத்தட்ட 40 விழுக்காடு அதிகம் ஆகும். மேலே கூறியவண்ணம் புதிய கொள்கையின்கீழ் ஆகஸ்டு மாதத்தில் மது விற்பனை மற்றும் பீர் விற்பனை ஆகியவற்றின் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் என்றுமே இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. இது புதிய திட்டத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. தொடர்ந்து இந்தப் புதிய கொள்கையின்படி இந்தத் துறை இயங்குவதற்கு மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் ஆஸ்டின் அவர்கள் பின்வரும் அறிக்கையினைக் கவனமாகக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத போலி மது அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தப்படுவதை அடியோடு ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனைக் கண்காணிக்க அரசின் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. அரசு கடை உரிமையாளர்களுக்குக் குறைந்தபட்சக் குறியீடாக ஒரு குறிப்பிட்ட அளவு பெட்டிகளை எடுத்து விற்பனை செய்ய வேண்டுமென்று நிர்ணயித்துள்ளது. இரண்டு மாதங்கள் தொடர்ந்து

அவர்கள் குறியீட்டை எய்தவில்லை என்றால் அவர்கள்மீது தக்க அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும், மேலும் இரண்டு மாதங்கள் தொடர்ந்து அவர்கள் குறியீட்டை எய்தவில்லை என்றால் அவர்களுடைய உரிமத்தை ரத்து செய்வதற்கும் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு செயல்பாடுகளின் மூலம் இந்தப் புதிய கொள்கை வெற்றி அடையும் என்பது திண்ணம். மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை மொத்த வருவாயில் – நான் இதற்குப் பின்னால் அளிக்கப்படுகிற விளக்கங்களைக் கவனமாக மாமன்ற உறுப்பினர்கள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் மொத்த வருவாயில் சில்லறை மதுபானக் கடைகளின் மூலம் உரிமம் வழங்குதல் மூலமாகக் கிடைக்கின்ற வருவாய் 15 சதவிகிதமாகும். ஏறத்தாழ 80 சதவிகிதம் TASMAC-ல் இருந்து சில்லறை விற்பனைக் கடைகளால் எடுக்கப்படுகின்ற மதுபானங்களிலிருந்து பெறப்படுகின்ற விற்பனை வரி மற்றும் ஆயத் தீர்வை மூலமாகக் கிடைக்கின்றது. மீதமுள்ள 5 சதவிகிதம் இதர இனங்களின் மூலம் கிடைக்கின்றது.

*பிற்பகல் 7—10*

இம்மாநிலத்தின் ஆயத் தீர்வைத் துறையின் வருமானப் போக்கினை ஆய்வு செய்தபோது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 1991–96 வரையிலான 5 ஆண்டு காலத்தில் ஆயத் தீர்வைத் துறையின் வருமான உயர்வு 115 விழுக்காடாக இருந்துள்ளது. ஆனால் முந்தைய ஆட்சிக் காலத்தில் வருமான உயர்வு 100 விழுக்காடாக மட்டுமே இருந்தது. இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஓர் உண்மை என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மதுவின் மீதான ஆயத் தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் உயர்த்தப்படாத நிலையிலும்கூட 115 விழுக்காடாக இருந்துள்ளது. ஆனால் முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆயத் தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் இருமுறை உயர்த்தப் பட்டிருந்தபோதிலும் 100 சதவிகித வருவாய் உயர்வு என்பது தீர்வை மற்றும் விற்பனைக் கட்டண விகிதத்தைக் கூட்டியதனால் பெறப்பட்டதே தவிர, விற்பனை உயர்வு அதிகரிப்பதன் மூலம் பெறப்படவில்லை.

கடந்த ஆட்சியில் கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத போலி மது பானங்களின் விற்பனை அதிக அளவில் நடைபெற்றதால் தமிழ்நாட்டிற்கு கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சியில் மொத்த இழப்பீடு ரூ.1,827.57 கோடி ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்



தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத போலி மதுபானங்கள் வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வருவதைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக TASMAC-லிருந்து எடுக்கப்பட்ட மதுபானங்களின் வளர்ச்சி 210 விழுக்காடாக உயர்ந்திருந்தது. ஆனால் முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தத் தவறியதாலும், தீர்வை செலுத்தப்படாத போலி மதுபானங்களைப் பெருமளவில் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, ஆட்சியாளர்களின் உதவியோடு பெருமளவில் குவித்து, அதனை சில்லறை மதுபானக் கடைகளில் விற்றதன் காரணமாகவும், TASMAC-லிருந்து விற்பனைக்காக எடுக்கப்பட்ட மதுபானங்களின் விற்பனை வளர்ச்சி 1995–96 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 29 விழுக்காடாக மட்டுமே இருந்தது. சரியான புள்ளிவிவரத்தின்படி சொல்ல வேண்டுமானால், 1990–91–ல் TASMAC-ன் மூலமாக விற்கப்பட்ட மதுவகைகள் 37.25 லட்சம் மதுபானப் பெட்டிகளாக இருந்தது. 1995–96–ல் மது வகைகளின் விற்பனை 115.34 லட்சம் பெட்டிகளாக உயர்ந்தது. 1996–97–ல் 139.59 லட்சம் பெட்டிகளாக இருந்த அதனுடைய வளர்ச்சி விகிதம் 2000–2001–ல் 14,8.99 லட்சம் பெட்டிகளாக மட்டுமே இருந்தது. தி.மு.க.–வின் கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் வளர்ச்சி விகிதம் பெரும் பாதிப்புக்கு உள்ளானது.

1991–96 ஆண்டுகளிலிருந்த ஆண்டு சராசரி விற்பனை அதிகரிப்பு 27.39 விழுக்காடாகும். ஆனால் 1996–2001 ஆண்டுகளிலிருந்த ஆண்டு சராசரி விற்பனை அதிகரிப்பு 5.64 விழுக்காடு மட்டுமேயாகும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், அதாவது 1991–96–ல் இந்த சராசரி விற்பனை அதிகரிப்பு 21.75 விழுக்காடு கூடுதலாக இருந்துள்ளது. ஆக முந்தைய ஆட்சியாளர்களின் நிர்வாகச் சீர்கேட்டினால் கள்ளச் சாராயம் அதிக அளவில் இருந்ததாலும், தீர்வை கட்டப்படாத போலி மதுபானங்கள் வெளி மாநிலங்களிலிருந்து இங்கு குவித்ததன் காரணமாகவும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசுக்கு வரவேண்டிய வருவாய் இழப்பு ஆண்டொன்றுக்கு ரூ.352.16 கோடி ஆகும்.

கடந்த ஐந்து ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் அரசுக்கு ஏற்பட்ட மொத்த வருவாய் இழப்பீடு ரூ.1,827.57 கோடி ஆகும் என்னும் அவல நிலையை அவைக்குத் தெரிவிப்பது என் கடமையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 7-15*

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்தபோது தெரிவித்ததுபோல எவ்வாறு

செயற்கையாக சிமெண்ட் ஆலை உரிமையாளர்களின் கூட்டு நடவடிக்கையால் சிமெண்ட் விலை அபரிமிதமாக உயர்த்தப்பட்டு, ஆயிரக்கணக்கான கோடி மக்கள் பணம் கொள்ளையடிக்கப்பட்டதோ, அதுபோல, போலி மதுபானங்களைக் கடத்தி வந்து விற்று, கொள்ளை அடிப்பதில், கடந்த ஐந்து ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் விஞ்ஞான ரீதியான ஊழல் நடந்ததால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் 1,827.57 கோடி ரூபாய் அரசின் கஜானாவிற்கு வராமல் இங்கே இருக்கின்ற சிலரது கைக்கு ஊட்டுப் பணமாகப் போய்ச் சேர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்தபடியாக....

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். சொல்லி முடிக்கட்டும். நான் கூப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** புள்ளிவிவரம்தான் படிக்கிறேன். அடுத்தபடியாக, கடந்த 1998–2001 தொகுதி ஆண்டில், முதல் ஆண்டான 1998–99 ஆண்டுக்கான உரிமம் வழங்கப்பட்ட கடைகள் 4,675. பெறப்பட்ட மொத்த உரிமம் தொகை ரூ.515.82 கோடி ஆகும். இரண்டாம் ஆண்டிலும், மூன்றாம் ஆண்டிலும் 4,675 கடைகள் உரிமம் புதுப்பிக்கப்படாததால் ஏற்பட்ட மொத்த வருவாய் இழப்பீடு ரூ.293 கோடி ஆகும். இதற்கு முக்கியமான காரணம், சென்ற தி.மு.க.–வின் ஐந்தாண்டு கால ஆட்சியில் கடை உரிமைதாரர்கள் தங்களுக்குள் Syndicate அமைத்துக்கொண்டு முதல் ஆண்டில் கடைகளுக்கு உரிமம் பெற்றுக்கொண்டு, இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் கணிசமான கடைகளுக்கு உரிமம் புதுப்பிக்காததனால் அரசுக்கு மிகப் பெரிய வருவாய் இழப்பினை ஏற்படுத்தினார்கள். மதுக்கடை உரிமைதாரர்கள் Syndicate அமைத்து தீர்வை செலுத்தப்படாத போலி மதுபானங்களை மொத்தமாகக் கொண்டுவந்து மதுக் கடைகளில் விற்பனை செய்து பெரும் பொருள் ஈட்டினர். இவர்களுடைய செயல்பாட்டினைக் கூர்மையாக ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசுக்கு வரவேண்டிய வருவாயைப் பெருக்குகின்ற நல்ல நோக்கத்தோடு, கொள்கையளவில் செயல்முறைகளில் உள்ள குறைகள் மற்றும் சீர்கேடுகளை எல்லாம் அடையாளம் கண்டு, தீவிர பரிசீலனை செய்த பின்னர் புதிய உரிமம் வழங்கும் முறையில் மதுக் கடைகளை ஒதுக்கீடு செய்ய முடிவு செய்ததன்படி மதுக் கடைகளுக்கான உரிமத் தொகையைச் சீராக மாற்றி அரசு நிர்ணயம் செய்தது. இதன்படி ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைக்கப்படுகின்ற அனைத்து மதுக் கடைகளுக்கும் ஒரே



சீரான உரிமத் தொகையை நிர்ணயம் செய்ததோடு மட்டுமல்லாமல், அந்தக் குறிப்பிட்ட பகுதியில் விதிகளுக்குட்பட்டு, மதுக் கடையை எங்கு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இந்த முறையில் இந்த ஆண்டு மாநிலம் முழுவதும் 6,000 கடைகள் என உரிமங்களை... இதனுடைய ஒரு பகுதி விவரத்தைப் பின்னர் தெரிவிக்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுதல், அதனை விற்றல் ஆகியவற்றினை முற்றிலுமாக அழிப்பதற்காகவும், மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் போலி மதுபானங்களை அடியோடு தடுத்து நிறுத்துவதற்காகவும், காவல் துறையின் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளைப் பலப்படுத்தி தீவிர நடவடிக்கை மேற்கொள்ள கண்டிப்பான ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்துள்ளார்கள். கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத போலி மதுபான விற்பனையை அடியோடு தடுத்து நிறுத்துவதன் மூலம் TASMAC–ன் விற்பனையை அதிகரித்து, அரசுக்குக் கூடுதல் வருவாயினை ஈட்டித் தர வேண்டுமென்ற குறிக்கோளுடன் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

தமிழ்நாட்டிற்குள் கர்நாடகா, ஆந்திரா மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து தீர்வை செலுத்தப்படாத போலி மதுபான வகைகள் வருவதைத் தடுக்க இந்த மாநிலங்களின் எல்லையிலுள்ள மாவட்டங்களான தருமபுரி, வேலூர், விழுப்புரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அதிகமான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, வாகன தணிக்கைகள் 24 மணிநேரமும் தொடர்ந்து நடத்தப்படுவதால், கடத்தப்பட்டுவரும் வெளி மாநில போலி மதுபான வகைகள் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மூன்று மாதங்களில் கடத்திவரப்பட்ட வெளி மாநில 50,000 போலி மதுபானப் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள்மீது 2,278 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 15.278 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயம் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று மாதங்களில் சட்ட விரோதமாகக் கடத்தப்பட்ட 99,241 லிட்டர் எரிசாராயம் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று மாதங்களில் கள்ளச் சாராயம் கடத்திச் சென்ற லாரிகள், வேன்கள், கார்கள் உள்ளிட்ட 1,020 வாகனங்கள் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் கடுமையான நடவடிக்கையின் காரணமாக தீர்வை செலுத்தப்படாத

வெளி மாநில போலி மதுபானங்கள் தமிழ்நாட்டிற்கு வருவது பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு, TASMAC மதுபான வகைகளின் விற்பனை அதிகரித்து, அதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்துக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 7-20*

இந்த மானியக் கோரிக்கையின்மீது நிறைய உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். நேரமின்மை காரணமாக சிலவற்றிற்கு மட்டும் பதிலளிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. சிவராஜ், திரு. ரா. ஈஸ்வரன், திரு. மு. அப்பாவு, திரு. ஜி.கே. மணி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஐ. கணேசன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. க. முருகவேல் ராஜன், திரு. மே.ப. காமராஜ் மற்றும் திரு. மு. கார்த்தி ஆகியோர் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமலாக்கம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டியுள்ளனர்.

இந்தியாவிலேயே மதுவிலக்கை அமல்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடாகும். இம்மாநிலத்தின் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைக் கொள்கை, மாநில வருவாய்த் தேவையையும், இம்மாநில மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைக் கருத்தில்கொண்டும் உருவாக்கப்பட்டது. குடும்பத்தின் வருவாய் பாதிப்பு மற்றும் அதனால் ஏழை, எளிய மக்களுக்கு ஏற்படும் சொல்லொணாத் துயரங்களைத் தவிர்க்கும்பொருட்டு ஏழை, எளிய மக்களைக் குடிப்பழக்கத்திலிருந்து தடுப்பதே மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசின் கொள்கையாகும். அதேவேளையில் மக்கள்தொகையில் இயலும் நிலையில் இருக்கும் பிரிவினர்களிடமிருந்து அதிக அளவில் ஆயத் தீர்வை வருவாயைப் பெறுவதும் அரசின் கொள்கையாகும். இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீரின் விற்பனைக்கு சில்லறை விற்பனைக் கடைகளின் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், ஏழை மக்கள் மற்றும் சமுதாயத்தின் அடித்தள மக்களைப் பாதிக்கும் சாராயம் மற்றும் கள் விற்பனை அனுமதிக்கப்பட மாட்டாது. காவல் துறையினர் அமலாக்கப் பிரிவினைச் சீர்செய்து மற்றும் பலப்படுத்தி கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளைத் தடுக்க இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும். ஏழை மக்களின் குடும்பங்கள், குறிப்பாக பெண்களைப் பாதிக்கும் கள்ளச் சாராயம் மற்றும் கள்ளச் சாராயக்காரர்கள்மீது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான இவ்வரசு கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கும். மேற்கூறிய குறிக்கோள்களை அடைய பொதுமக்களின் தீவிர பங்கேற்பு, குறிப்பாக மகளிர் குழுவின் பங்கேற்பினை அரசு ஊக்குவிக்கும். அவர்கள் பொதுமக்களுக்கு, குறிப்பாக, ஏழை மக்களுக்கு குடியின் தீமைபற்றி எடுத்துரைக்க அரசு ஊக்குவிக்கும். கள்ளச் சாராயத் தொழிலுக்கு மாறாக பிற தொழில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதைக் கருத்திற்கொண்டு அரசு சாரா அமைப்புகள் பங்கு பெறுவதன் வாயிலாக கள்ளச் சாராயக்காரர்களுக்கு மறுவாழ்வு தருவதற்கு ஊக்கம் அளிக்கப்படும்.



ஆயத் தீர்வை மூலம் நம்முடைய வருமானத்தைப் பெருக்குவதுடன், அது சமுதாயத்திற்கு தீங்கிழைக்கா வண்ணம் கொள்கை வரையறுக்கப்பட்டு, நடந்துகொண்டிருப்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பதிவுத் துறை சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பெரியவர், அப்துல் லத்தீப் அவர்கள் தங்களுடைய தொகுதியில் வாணியம்பாடி என்ற ஊரில் சார்—பதிவாளர் அலுவலகம் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையினை தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தவுடனேயே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்று, வாணியம்பாடி என்ற ஊரில் சார்–பதிவாளர் அலுவலகம் கட்டித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உத்தரவினை இட்டிருக்கிறார்கள் என்ற செய்தியினை, மகிழ்ச்சியான செய்தியினை மாண்புமிகு பெரியவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7—25*

பதிவுத் துறை என்பது அரசின் துறைகளில் பழமையான ஒன்றாகும். மக்கள் சேவை என்ற தலையாய பணியுடன் அரசுக்கு வருவாயை ஈட்டித் தரும் பணியையும் இத்துறை செய்து வருகின்றது. பொதுமக்களின் வாழ்க்கையில், பிறப்பு முதல் இறப்பு வரையில் இத்துறை பங்கெடுத்து, தனது சேவையைச் செய்து வருகிறது. இத்துறை பதிவுச் சட்டம், முத்திரைச் சட்டம் ஆகிய முக்கியச் சட்டங்களுடன் ஏனைய சட்டங்களை நிர்வகிக்கும் தலையாய பொறுப்பில் உள்ளது.

குடிமக்களுக்குள்ள சொத்துரிமை பெறும் செயல்பாட்டிற்கு உதவி செய்யும் வகையில் பதிவுச் சட்டத்தின்கீழ் சொத்துரிமையை நிலைநாட்டும் ஆவணச் சாட்சியங்களுக்குச் சட்டபூர்வ அந்தஸ்து அளித்து, ஆவணப் பதிவு நடவடிக்கைகளைச் செய்துவருகிறது. பதிவுறும் எந்த ஒரு ஆவணமும் அல்லது சான்றிட்ட நகலும் சாட்சியங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, சொத்துரிமை நிலைநாட்டப்படலாம். இதனால் சொத்துரிமை குறித்த வழக்குகள் அதிகமாக எழாது தவிர்க்கப்பட்டிருக்கிறது.

அரசின் நலத் திட்டங்களுக்குத் தேவையான நிதியில் ஒரு பெரும் பகுதியை இத்துறை அளிக்கிறது. சொத்தின் சரியான சந்தை மதிப்பினைப் பிரதிபலிக்க வழிகாட்டி மதிப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டு, காலவரைப்படி திருத்தி அமைக்கப்படுகின்றன. இந்த மதிப்புகளில் முரண்பாடுகள் உணரப்படின் மாநில அளவிலான வழிகாட்டிக் குழு இடத்தினைப் பார்வையிட்டு, முரண்பாட்டினைக் களைய நடவடிக்கை எடுக்கிறது. இந்த வழிகாட்டி மதிப்பினைப் பதிவு செய்வோர் ஏற்காத வகையில், வருவாய்த் துறைக்கு மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக முத்திரைச் சட்டம் பிரிவு 47–7 உட்பிரிவு 1–ன்கீழ் அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட தனி துணை ஆட்சியர் சந்தை மதிப்பினை நிர்ணயம் செய்கிறார். அந்த நிர்ணயத்தின்மீது அதிருப்தி இருப்பின், பதிவுத் துறைத் தலைவரிடம் மேல்முறையீடு செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. தனித் துணை ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் சந்தை மதிப்பு அரசின் வருவாயைப் பாதிக்கும் என்று முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரியான பதிவுத் துறைத் தலைவர் உணர்கிற நிலையில் அவர் தன்னிச்சையாக சீராய்வு செய்து அரசுக்கு வரவேண்டிய வருவாயில் எவ்விதக் குறைபாடும் இல்லாத நிலையை உறுதி செய்கின்றார்.

முத்திரைத் தீர்வையுடன் வசூலிக்கப்படும் மிகுவரி, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு இத்துறையால் வழங்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகள் செய்யும் நலப் பணித் திட்டங்களுக்குத் தேவையான நிதியை அளிக்கும் துறையாக இத்துறை செயல்படுகின்றது. இத்துறையில் தணிக்கை அலகுகள் கட்டடப் புலனாய்வுக் குழு மற்றும் சிறப்பு விழிப்புக் குழு ஆகியவை அரசுக்குச் சேரவேண்டிய, வரவேண்டிய முழு வருவாயை எவ்விதக் குறையும் இன்றி கிடைக்க செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சிறப்பு விழிப்புக் குழு முறைகேடுகள் குறித்து ஆய்வுசெய்து, குறைகள் களையப்பட நடவடிக்கை எடுக்கின்றது. வீட்டு மனைகளாக மாறும் நிலங்களுக்கு உரிய உள்ளாட்சி அமைப்புகளின் தடையின்மைச் சான்று இல்லாத நிலையில், கிரய ஆவணங்களைப் பதிவு செய்ய மறுத்திடும், பதிவு செய்ய மறுத்திட வழிவகுத்திடும் ஆணை கடந்த தி.மு.க. ஆட்சியில்





பிறப்பிக்கப்பட்டது. இதனால் சொத்து வாங்குபவர்களுக்கு இடையூறும், அதன்வழி ஆவணப் பதிவில் சரிவும், அரசிற்கு வரவேண்டிய வருவாயில் குறைவும் ஏற்பட்டுள்ளது. இந்த அரசாணை தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் சில மாற்றங்களுடன் அரசாணையை உறுதி செய்தது. இதனை எதிர்த்து தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் பரிசீலனையில் உள்ளன. உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்குப்பின், தேவைப்படின் பொதுமக்களின் கோரிக்கைகளைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரிய தொடர் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒன்பது வருவாய் மாவட்டங்களில் விவசாய நிலங்களைப் பொறுத்து, ஆவணப் பதிவு சம்பந்தப்பட்ட பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்தால் மட்டுமே பதிவு செய்ய இயலும். பட்டா பாஸ் புத்தகம் அனைத்து நில உரிமையாளர்களுக்கும் முழுமையாக வழங்கப்படாத நிலைமையில், பொதுமக்களுக்குச் சிரமமும், ஆவணப் பதிவில் சரிவும், அதனைத் தொடர்ந்து வருவாய்க் குறைவும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையினைப் போக்க வருவாய்த் துறையினரால் இந்த ஒன்பது வருவாய் மாவட்டங்களில் வழங்கப்பட வேண்டிய பட்டா பாஸ் புத்தகங்களை ஜனவரி 2002–க்குள் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

*பிற்பகல் 7—30*

சொத்து விற்பனை தொடர்பான ஆவணங்கள் எதிலும் அச்சொத்தினை விற்பனை செய்பவர் கையெழுத்திடுவதுடன், வாங்குவோரும் கையெழுத்திடச் செய்யும் வகையில் தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில் பதிவுச் சட்டம் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 600 சார் பதிவகங்கள், 500 மாவட்டப் பதிவகங்கள் மற்றும் 9 மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவை 608 கட்டடங்களில் இயங்குகின்றன. இவற்றில் அரசுக் கட்டடங்கள் 302. தனியார் கட்டடங்கள் 306. தனியார் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் வாடகையாகச் செலவழிக்கப்படுகின்றது. பதிவேடுகளின் பாதுகாப்பு கருதி தனியார் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது. நடப்பாண்டில் மார்த்தாண்டம் பதிவு மாவட்டத்தில்

அருமனை சார் பதிவகத்திற்கு ரூபாய் 20.1 இலட்சம் செலவில் அரசுக் கட்டடம் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்று கும்பகோணம் மாவட்டப் பதிவகத்தில் பதிவேடுகள் வைக்கப் போதிய இடமின்மையால் கூடுதல் பதிவறை ரூபாய் 1.65 இலட்சம் செலவில் கட்டவும் அனுமதிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்று படிப்படியாக அனைத்து தனியார் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களுக்கும் அரசுக் கட்டடம் கட்ட அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாட்டில் 28 கருவூலங்களிலும் நீதிசாரா முத்திரைத் தாள்கள் ரூபாய் 2,107.96 கோடி ரூபாய்க்கு இருப்பிலுள்ளது. இதுபோக, 744.97 கோடி ரூபாய்க்கு சிறப்பு ஒட்டுவில்லைகளும் இருப்பில் உள்ளன.

தமிழகத்திலுள்ள 15 சார் பதிவகங்களில் Franking கருவிகள் முத்திரைத் தீர்வையைச் செலுத்த நிறுவப்பட்டுள்ளன. இக்கருவிகளின் மூலம் முத்திரைத் தீர்வையைச் செலுத்தி, அதற்கான முத்திரையை ஆவணத்தில் பெறலாம். சார் பதிவாளர்களிடம் பணமாகவும், Demand Draft மூலமாகவும் முத்திரைத் தீர்வையைச் செலுத்தலாம். இவ்வாறு பொதுமக்களுக்குத் தடங்கலின்றி முத்திரைத் தாள்கள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. போலி முத்திரைத் தாள்கள் பயன்பாட்டைத் தடுக்க இத்துறையின் சிறப்பு விழிப்புக் குழுவினர் திடீர் சோதனைகள் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள், துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் ஆகியோரும் திடீர் ஆய்வுகளின் வழி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 4,996 முத்திரைத் தாள்கள் விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் தேவைக்கேற்ப முத்திரைத் தாள்கள் விற்பனையாளர் உரிமம் தேவையான இடத்தில் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாட்டில் 600 சார் பதிவகங்கள் செயல்படுகின்றன. பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க புதிய இடங்களில் சார் பதிவகம் திறப்பது குறித்து, போக்குவரத்து வசதி, ஆவணப் பதிப்பு எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அரசு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடக அரசு செய்திருப்பதுபோல முத்திரைச் சட்டத்தினைத் திருத்தியமைக்க வெட்டுப் பிரேரணைகளில் கோரப்பட்டுள்ளது. குடும்பத்திற்குள் செய்துகொள்ளப்படும் பாகம், ஏற்பாடு மற்றும் விடுதலை ஆவணங்கள் ஆகியவற்றுக்கு கர்நாடக அரசு குறைந்த அளவு முத்திரைத் தீர்வையை விதித்துள்ளது. நாடு முழுவதும் ஒரே சீரான முத்திரைத் தீர்வையை விதிப்பது குறித்து மத்திய அரசின் தேசிய பொது நிதி மற்றும் கொள்கை அமைப்பு பரிசீலித்து வருகின்றது. இதற்கொப்ப இக்கருத்து பரிசீலிக்கப்படும்.



ஆவணங்களை வழக்கறிஞர்கள் மட்டுமே எழுத வெட்டுப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது. உரிமம் ஏதும் பெறாமலேயே வழக்கறிஞர்கள் ஆவணங்கள் எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே வழக்கறிஞர்களை மட்டுமே அனுமதித்திடும் நிலையில் ஏராளமான ஆவண எழுத்தர்கள் பாதிக்கப்படுவார்கள்.

வழிகாட்டு மதிப்புகள் நிர்ணயம் செய்யப்படும்போது சம்பந்தப்பட்ட நிலங்கள் விவசாய நிலங்களா என்பதை உறுதி செய்திட நில வரைபடம் சிட்டா, அடங்கல் தேவைப்படுகிறது. இவை அல்லாத நிலையிலேயும் பொதுமக்களுக்கு எவ்வித சிரமும் இன்றி இட ஆய்வு விசாரணைகள் ஆகியவற்றின் அடிப்படையில் முடிவெடுத்திட கள அலுவலர்கள் அறிவுரைக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்களுக்குச் சான்றிட்ட ஆவண நகல்கள் வழங்க தமிழகத்தில் 40 அலுவலகங்களுக்கு xerox கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் தேவையைக் கருதி அரசின் நிதிநிலைக்கேற்ப மேலும் இதர அலுவலகங்களுக்கும் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

புற்றீசல்போலக் கிளம்பி மோசடி செய்துவரும் சீட்டு நிறுவனங்களைக் கண்காணித்து, அவை மக்களை ஏமாற்றாமல் இருக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு தரும் வகையில் இவ்வரசு செயல்பட்டு வருகின்றது. இதற்காக சீட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் அனைத்துச் சீட்டுகளையும் அதன் நடப்புக் காலத்திற்குள் குறைந்தபட்சம் ஒரு முறையும், 6 திங்களுக்கொருமுறையும் ஆய்வு செய்திட ஏதுவாக இத்துறையிலிருக்கும் சீட்டாய்வு முடுக்கிவிடப்பட்டுள்ளது. சீட்டு நிறுவனங்கள் தங்கள் நிதியைச் சீட்டு நிதிச் சட்டத்தில் சொல்லப்பட்ட சீட்டு சம்பந்தப்பட்ட காரியங்கள் தவிர, நிதி முதலீடு செய்தல், கடன் அளித்தல் போன்ற வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவது தெரிந்தால், கடும் நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 7-35*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அனைத்துத் துறைகளிலும் கணினிமயமாக்கப்படுவதை

நினைவுகூர்ந்து இத்துறையிலும் கணினிமயமாக்குதலைத் தீவிரப்படுத்தியதன் காரணமாக 'Star' திட்டத்தின்கீழ் செயல் படுத்தப்படுகின்றன. ஆவணப் பதிவு, ஆவண நகல் பாதுகாப்பு, சான்றிட்ட நகல் மற்றும் வில்லங்கச் சான்று வழங்குதல், திருமணப் பதிவுச் சான்று வழங்கல், சீட்டு மற்றும் சங்கப் பதிவு முதலான பணிகள் அனைத்தும் கணினிவழி செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 325 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட உள்ளன. இவற்றில் 100 அலுவலகங்களில் கணினி குறித்த பணிகள் நிறைவேறும் நிலையில் உள்ளன. வழிகாட்டு மதிப்பீடுகள் படிப்படியாக இணையதளத்தில் 'web-site'-ல் வெளியிடப்பட உள்ளன. தற்போது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் 5 மாநகராட்சிகள் எல்லைகளுக்குட்பட்டு வழிகாட்டு மதிப்பீடுகள் இணையதளத்தில் – 'web-site'–ல் – உள்ளன. பொதுமக்களுக்கு உதவியாக வெளிப்படையான தகவல் அளித்திட பதிவுத் துறை இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது.

பதிவுத் துறையை வருவாய்த் துறையுடன் கணினிவழி இணைத்து அதன்படி ஆவணப் பதிவு முடித்தவுடன் பட்டா மாறுதல் படிவங்களை வருவாய்த் துறைக்கு கணினிவழி அனுப்பி சொத்துரிமை மாற்றங்களை உடனுக்குடன் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

வருவாய்த் துறையில் சிட்டா, அடங்கல் போன்ற தகவல்களுடன் தொடர்புகொண்டு நிலத்தின் தன்மை, உடைமையாளர் விவரங்களைப் பதிவுத் துறை சரிபார்த்துக்கொள்ள இது வழிவகுக்கும். இதனால் பதிவு நடைமுறை எளிதாக்கப்படுவதுடன் இடைத்தரகர்கள் நீக்கம் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விரைவாகப் பணி செய்திட வழிவகுக்கும். இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 60 இலட்சம் ஒதுக்கீடு செய்திட நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பஞ்சாயத்து கிராமங்களைப் பொறுத்து பிறப்பு, இறப்புப் பதிவுகள் இத்துறையால் பாதுகாக்கப்பட்டு பொதுமக்களுக்குத் தேவைப்படும்போது பிறப்பு, இறப்புப் பதிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலாப நோக்கு இல்லாமல் செயல்படும் அமைப்புகளை சங்கப் பதிவுச் சட்டத்தில் பதிவு செய்திட தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. சங்கப் பதிவுச் சட்டத்திற்கு முரண்பாடாக அல்லது சங்கத் துணை விதிகளுக்கு முரணாகச் செயல்படும் சங்கங்களை முறைப்படுத்த சங்க நிர்வாகக் குழுவினைக் கலைத்து, தனி அலுவலர்



ஒருவரை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது. முறைகேடாக நடத்தப்படும் சங்கங்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். வழிகாட்டு மதிப்புப் பதிவேடுகள் பொதுமக்கள் பார்வைக்கு விவசாய சங்கங்கள், வணிகச் சங்கங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் வைத்திட கள அலவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி 1991–96–ல் இருந்தபோது பதிவுத் துறையின் வருவாய் ஆண்டு ஒன்றுக்கு 18.54 சதவிகிதமாக உயர்ந்திருந்தது. இதற்குக் காரணம், நிலப் பரிமாற்றம், கட்டடப் பணி ஆகிய நடவடிக்கைகள் மேலோங்கி, தொழில்கள் பெருகி, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கி, பொருளாதாரம் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்திருந்த நிலையாகும். ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் இவ்வருவாய் ஆண்டு ஒன்றுக்கு 8.6 சதவிகிதமாக வீழ்ச்சி அடைந்து பொருளாதாரம் பின்நோக்கிச் சென்றது. கடந்த ஆண்டு ஜூலை 2000 முடிய உள்ள வருவாயை ஒப்பிடும்போது மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபின் வருவாய் 39 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மேலும், இத்துறை கணிசமான அளவில் கூடுதல் வருவாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஈட்டித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கையின்போது என் பதில் வந்தபோது ஒருபக்கம் விடுபட்டு இருந்தது. அதனைச் சரிசெய்து மீண்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

இந்த முறையில் 6,000 கடைகள் என அறிவிப்பு செய்யப்பட்டு, அதில் இதுவரை 5,338 கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது. இதன்மூலம் 538.58 கோடி ரூபாய் உரிமத் தொகையாகவும், 53.38 கோடி ரூபாய் காப்புத் தொகையாகவும், 2.66 கோடி ரூபாய் கட்டணத் தொகையாகவும், 2.2 கோடி ரூபாய் விண்ணப்பக் கட்டணமாகவும், ஆக மொத்தம் 596.82 கோடி ரூபாய் பெறப்பட்டுள்ளது. மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்குதல் மூலமாக இதற்கு முன்பு வேறு எந்த ஆண்டுகளிலும் பெறப்பட்ட உரிமத் தொகையைக்காட்டிலும் இந்த ஆண்டு பெறப்பட்டது உயர்ந்தபட்சத் தொகையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 7-40*

அடுத்தபடியாக, மானியக் கோரிக்கை எண் 43–ன்கீழ் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2001 செப்டம்பர் 3

கோரிக்கைகளுக்கு என்னுடைய பதிலுரை. .1831 ஆம் ஆண்டு 10 தொழிலாளர்களைக் கொண்டு அரசிதழ்களை வெளியிடுவதற்காக ஆங்கிலேய அரசாங்கத்தால் இத்துறை தொடங்கப்பட்டது. இது நாளடைவில் 7 அச்சகங்களாக விரிவடைந்து தமிழகத்தில் சென்னை வள்ளலார் நகர் உள்ளிட்ட 7 இடங்களில் செயல்பட்டுவருகிறது. இதுதவிர சென்னை அண்ணா சாலையிலும் உயர் நீதிமன்ற வளாகத்திலும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள் இரண்டும், சென்னை இராஜாஜி சாலையில் எழுதுபொருள் கிடங்கு மற்றும் அலுவலகம் ஒன்றும் இத்துறையின்கீழ் இயங்கி வருகிறது.

துறையில் பணியாற்றும் தொழிலாளர் நலன். இத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 300 குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. சென்னையில் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும், அனைத்து அச்சகத் தொழிலாளர்களுக்கும் பன் மற்றும் தேநீர் படி வழங்கப்படுகிறது. அனைத்து அச்சகங்களிலும் குளிர்ந்த குடிநீர் வழங்க வசதி செய்து தரப்பட்டுள்ளது. அச்சகத் தொழிலாளர்களுக்கு 2 ஆண்டுகளுக்கொரு முறை 3 செட் சீருடைகளும் மற்றும் அதற்கான தையல் கூலியும் வழங்கப்படுகின்றது. அரசு மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகம் இயங்கிவருகிறது. சென்னை மைய அச்சகம், எழுதுபொருள் அலுவலகம் மற்றும் மதுரை கிளை அச்சகம் ஆகிய இடங்களில் சிற்றுண்டிச்சாலைகள் இயங்கி வருகின்றன.

தாயினும் சாலப் பரிந்து, அச்சகத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1992–ல் அச்சகத் தொழிலாளர்களின் ஈட்டிய விடுப்பினை பணமாக்கித் தரும் சலுகையை 180 நாட்களிலிருந்து 240 நாட்களாக உயர்த்தியும், அச்சகப் பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால விடுப்பு வழங்கியும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. உலக அளவில் அச்சுத் துறையில் ஏற்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கருத்தில்கொண்டு letter press முறையில் அச்சடிப்பதற்குப் பதிலாக off-set முறையில் அச்சடிப்பதற்கு அரசு அச்சகங்களை நவீனப்படுத்தும் திட்டம் முதன்முதலாகத் தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1992–ல் தொடங்கப் பட்டது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் முக்கியமான அறிவிப்புகளை மட்டும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2001 செப்டம்பர் 3] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அரசு அச்சகங்களில் letter press இயந்திரங்களுக்குப் பதிலாக நவீன off-set இயந்திரங்களை நிறுவியதும், அவ்வியந்திரங்களை இயக்குவதற்கு அரசு அச்சகத் தொழிலாளர்கள் குறுகிய காலப் பயிற்சிக்கு In-service training-க்குப் பிறகு, பயிற்சிக்குப் பிறகு, மீளப் பணியில் அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தங்களுக்குப் புதிய சம்பள விகிதத்தில் ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக வலியுறுத்தி வரும் அவர்களுடைய கோரிக்கையினைப் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நவீன இயந்திரங்களை இயக்குவதற்கு 19 வகையான பதவிகளில் 333 புதிய பணியிடங்களை உருவாக்கவும், அவற்றை தற்போது அச்சகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களைக்கொண்டே, இயற்றப்போகும் தற்காலிக விதிகளின்படி பணிமூப்பின் அடிப்படையில் மீளப் பணியில் அமர்த்தவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தேநீர் மற்றும் ரொட்டிப் படியை ரூ.50–லிருந்து ரூ.100–ஆக உயர்த்துமாறு தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்த வண்ணம் இருந்தனர். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தொழிலாளர்களுடைய கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து, மிகுந்த நிதி நெருக்கடியிலும், மாதம் ஒன்றுக்கு ரூ.50–லிருந்து ரூ.100–ஆக உயர்த்த ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.17,15,400 கூடுதலாகச் செலவாகும். சுமார் 2,859 தொழிலாளர்கள் பயனடைவார்கள். பல ஆண்டுகளாக அரசு அச்சகத் தொழிலாளர்கள் பிற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவந்த சொந்த அலுவலுக்கான 6 மாதம் ஈட்டா விடுப்பை தங்களுக்கும் வழங்க கோரிக்கை மூலம் வலியுறுத்தி வந்தார்கள். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிவுடன் அதை ஏற்றுக்கொண்டு அச்சகத் தொழிலாளர்களுக்கு இச்சலுகையை வழங்கக் கட்டளையிட்டார்கள். அக்கட்டளையின்படி அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குச் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு வழங்கப்படும் என மகிழ்ச்சியோடு அறிவிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சுமார் 2,859 தொழிலாளர்கள் பயனடைவார்கள். ஓய்வுபெறும் தொழிலாளர்கள் சுமார் 100 பேர் பயனடைவார்கள் என்பதை உவகையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7—45*

வருவாய்த் துறை அறிவிப்புகள். மாநிலத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மற்றும் பணி நிலை உயர அமைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடு கடந்த தி.மு.க. ஆட்சியில் சரிவர இல்லை என்பது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதன் பேரில் மேற்படி வாரியத்தை சீராகவும், செம்மையாகவும் புத்துயிர் ஊட்டும் வகையில் மாற்றி அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தீ, வெள்ளம் மற்றும் புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக, முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைக்கு 1,000 ரூபாயும், பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைக்கு 500 ரூபாயும் வழங்கப்பட்டு வரும் தொகை போதுமானதாக இல்லை என்ற குறைபாட்டினை இந்த மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து, இத்தொகையை உயர்த்திட வேண்டுமென்ற கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூபாய் 2,000/–ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூபாய் 1,000 ஆகவும் உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தியினை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகாறும் பல்வேறு மானியக் கோரிக்கைகளின்கீழ் நான் அளித்த பதிலுரையை பொறுமையாக இருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் களைத்துப் போகாமல் இவ்வளவு நேரம் பதில் சொன்னதுதான் பெரிய மகிழ்ச்சி.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கேட்டுக்கொண்டு இருந்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துகளைத் தெரிவித்துள்ளார்கள். பலவித நியாயமான கோரிக்கைகளைத் தந்துள்ளார்கள். வெட்டுத் தீர்மானங்கள் மூலம் அரசின் கவனத்திற்கும் பரிசீலனைக்கும்



பல முக்கிய பிரச்சினைகளைப் பற்றிக் கூறியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த சமுதாய பொருளாதார வளர்ச்சிக்கு மிகுந்த அக்கறையோடு செயல்திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில் உங்களது சீரிய கருத்துகள் எல்லாம் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற உறுதியை பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கிறேன். ஆகவே வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7—50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இவ்வளவுக்குப் பிறகும் இன்னுமா சந்தேகம்? சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் மாண்புமிகு அமைச்சர் சொல்லிவிட்டார். கொள்கை விளக்கக் குறிப்பை மறுபடியும் படித்துப் பார்த்தாலே உங்களுடைய சந்தேகம் தெளியும். (குறுக்கீடு) திரு. இ. புகழேந்தி, சொல்லுங்கள், கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை குறித்த மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்கு பதிலைச் சொன்னார்கள். எனக்குத் தெரிய வேண்டியது என்னவென்றால், ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம், பாட்டை போன்ற வகை செய்யப்பட்ட அந்தப் புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக, சில இடங்களில் 60, 70 வருடங்கள் எல்லாம் குடிசை போட்டுக்கொண்டு வாழ்பவர்கள் எல்லா இடங்களிலும் இருப்பார்கள். அப்படி இருக்கக்கூடிய மக்கள் வேறு இடத்திற்கும் போக முடியாது. அவர்கள் அங்கேயே இருக்கிறார்கள். அந்த இடங்களை, அந்த ஏழை மக்களுக்குப் பட்டா போட்டுத் தருவதற்காக 27–3–2000 அன்று ஒரு ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி, மாவட்டத்திலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய தலைமையில், மற்ற துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள் இணைந்து, அந்த இடங்களை நேரடியாகப் பார்வையிட்டு எந்தவிதமான பாதிப்பும் இயற்கைச் சீரழிவுகளால் அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்று உறுதி செய்யப்பட்டதற்குப் பிறகு, அந்த மக்களுக்குப் பட்டா கொடுக்கலாம்

என்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அப்படி வகுக்கப்பட்டதன் மூலமாக, கிட்டத்தட்ட 1,63,348 வீட்டுமனைப் பட்டாக்கள் 30–11–2000 வரை வழங்கப்பட்டன. இப்போது இந்த அரசில் – மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தந்த விளக்கத்தில், இதுகுறித்து எதுவும் இல்லை – இது இருக்கிறதா என்பது குறித்தும், இது தொடர்ந்து இருக்குமா, செயல்படுத்தப்படுமா என்பது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லவேண்டும். அடுத்ததாக, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆயத்தீர்வையிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. புகழேந்தி நீண்ட விளக்கத்திற்கு வழியில்லை. ஒன்று கேட்டீர்கள், அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார், கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய தி.மு.க. ஆட்சிக்காலத்திலேயே தேர்தலுக்குச் சற்று முன்பு, இந்த ஆணை உங்கள் ஆட்சியிலேயே நிறுத்தி வைக்கப் பட்டுவிட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், (குறுக்கீடு) திரு. புகழேந்தி, நீங்கள் கேட்டதற்கு விளக்கம் கொடுத்துவிட்டார்கள், அவ்வளவுதான். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2000–ல் இவ்வளவு பேருக்குப் பட்டா கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். என்னுடைய வேலூர் நகராட்சிப் பகுதியிலும், பேரூராட்சிப் பகுதியிலும், ஏன் நம்முடைய முன்னாள் வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் இருக்கக்கூடிய திருவண்ணாமலை நகரப் பகுதியிலும்கூட, ஒரு பட்டாகூட வழங்காததை நான் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, (குறுக்கீடு) காரணம் என்னவென்றால், நிலத்தினுடைய மதிப்பு அதிகமாகிப்போய்விட்டது என்றார்கள். (குறுக்கீடு) நான் கேட்க விரும்பிய கேள்வியைக் கேட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது, பணப்புழக்கம் வரக்கூடிய வகையிலே Registration Department–ல் சில மாறுதல்களைச்



செய்வதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே G.O.150 என்று Commercial Taxes Department மூலமாக, அதாவது unapproved layout பகுதியைப் பதிவு செய்யக்கூடாது என்று அவர்கள் ஓர் ஆணையைக் கொண்டுவந்த பிறகு, அதை உயர் நீதிமன்றமும் அப்படியே confirm செய்து judgement கொடுத்துவிட்ட பின்னால், நாங்கள் எல்லாம் இந்த மாமன்றத்திலே சொன்னபிறகு, கிராமப் பகுதிகளிலே, Development Charge–ஐக் கட்டிவிட்டு, அவர்கள் அந்த unapproved layout-ஐப் பதிவு செய்துகொள்ளலாம் என்று கொண்டு வந்தார்கள். ஆனால், C.M.D.A. பகுதிகளிலே அதை register செய்ய முடியாது என்ற ஒரு நிலையையும் கொண்டுவந்தார்கள். ஏற்கெனவே, registration செய்யப்பட்ட பத்திரங்கள் release ஆகாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இனி, C.M.D.A. ஏரியாக்களிலும் இந்தப் பணப் புழக்கம் வரக்கூடிய வகையிலும், அதேபோல Real Estate மீண்டும் pick-up ஆகின்ற வகையில் Commercial Taxes Department மூலமாக issue செய்யப்பட்ட அந்த G.O. 150-ஐ அரசு வாபஸ் பெறுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் பரிசீலனையில் அது உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. புகழேந்தி, அத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு வருவாய்க் கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்குப் பயன்படவும், சென்ற 17 ஆண்டுகாலமாக அந்தப் பகுதி மக்கள் நிலம் பெற்றுக்கொடுத்ததற்குப் பிறகும், கட்டப்படாமல் இருந்த, சார்–பதிவாளர் அலுவலகத்தை, அருமனைப் பகுதியிலே கட்டித்தருவதாக ஓர் உத்தரவைப் போட்டிருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்களுக்கும் என் சார்பிலும், என்னுடைய தொகுதியைச் சார்ந்த அருமனைப் பகுதி மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 1 - நில வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1 – நில வருவாய்த் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

*பிற்பகல் 7—55*

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. (குறுக்கீடு) முடிந்தது. நில வருவாய்த் துறை பற்றிய...

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத் தீர்வைத் துறை குறித்து நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் சொன்னார்கள். இந்த ஆண்டு, ஏற்கெனவே இருந்த கடைகளின் எண்ணிக்கை எத்தனை? இப்போது புதிதாக இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகு அதிகரிக்கப்பட்ட கடைகள் எத்தனை? அதிலே எத்தனை கடைகள் ஏலம் விடப்பட்டிருக்கின்றன? அதுமட்டுமல்ல, 100 மீட்டர்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, இதுபற்றி நீண்ட விளக்கத்தை அமைச்சர் தந்துவிட்டார். அதை மறுபடியும் படித்தாலே தெரியும். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்.

"நில வருவாய்த் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.15,07,71,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 2 – மாநில ஆயத் தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2 – மாநில ஆயத் தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.23,69,57,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஈ) கோரிக்கை எண் 5- முத்திரைத் தாள்கள்-நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை 5 – முத்திரைத் தாள்கள்–நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.



**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"முத்திரைத் தாள்கள் – நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11,15,50,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்'என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை'என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (உ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6 – ஆவணப் பதிவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.61,20,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஊ) கோரிக்கை எண் 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,92,28,81,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (எ) கோரிக்கை எண் 43 - எழுதுபொருள்-அச்சுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43 – எழுதுபொருள்–அச்சுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"எழுதுபொருள்–அச்சுத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.60,97,55,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஏ) கோரிக்கை எண் 45 - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45 – இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.78,78,78,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4–9–2001) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8–00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

56. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

57. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு விவர கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

50. மானியக் கோரிக்கை எண் 28 – தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

51. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு–செலவுத் திட்டச் செயலாக்கம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

52. மானியக் கோரிக்கை எண் 1 – நிலவரி, மானியக் கோரிக்கை எண் 40 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் மானியக் கோரிக்கை எண் 45 – இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

53. வருவாய்த் துறையின் சாதனை அறிக்கை, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

54. மானியக் கோரிக்கை எண் 2 – மாநில ஆயத் தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

55. மானியக் கோரிக்கை எண் 5 – முத்திரைத்தாள் – நிருவாகம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 6 – பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

56. மானியக் கோரிக்கை எண் 43 – எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

57. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 25 வரை)



## இணைப்பு I

(330 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1996–2001 வரையில் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட லாபம்(+)/நட்டம் (–) பின்வருமாறு

| | 1996-97 | | 1997-98 | | 1998-99 | | 1999-2000 | | 2000-2001 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு |
| 1. மாநகரப் போக்குவரத்துக் கழகம் கோட்டம்1 | -22.56 | -13.87 | -15.05 | -1.53 | -42.64 | -25.42 | -33.20 | -18.37 | -27.72 | -14.67 |
| 2. மாநகரப் போக்குவரத்துக் கழகம் கோட்டம்2 | -25.47 | -17.18 | -19.25 | -7.34 | -34.88 | -20.60 | -28.40 | -16.72 | -22.31 | -11.37 |
| 3. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், கோட்டம்1 | -38.30 | -27.55 | -32.95 | -19.66 | -45.35 | -31.83 | -36.01 | -24.60 | -33.33 | -22.26 |
| 4. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், கோட்டம்2 | -9.62 | -3.45 | -11.64 | -5.73 | -10.66 | -4.86 | -8.33 | -4.34 | -8.60 | -5.28 |
| 5. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் | -9.61 | -1.37 | -0.65 | -9.26 | -6.58 | 5.80 | 0.45 | 9.92 | 9.20 | 19.73 |
| 6. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், வேலூர் | -9.00 | -0.90 | -5.57 | -4.05 | -14.53 | -3.62 | -10.46 | -2.41 | -8.03 | -0.68 |
| 7. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் | -17.50 | -11.62 | -14.37 | -6.58 | -17.33 | -9.35 | -14.50 | -8.42 | -11.72 | -6.48 |
| 8. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் | -18.78 | -12.86 | -5.24 | 2.77 | -15.10 | -3.28 | -9.86 | 0.78 | -5.30 | 4.25 |
| 9. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், தருமபுரி | -11.31 | -4.62 | -3.62 | +4.37 | -8.28 | -0.06 | -4.32 | +2.23 | +1.50 | +8.96 |
| 10. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை | -11.05 | -4.09 | +0.61 | +12.28 | -17.92 | -3.11 | -14.73 | 2.79 | -10.02 | -0.64 |
| 11. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு | -7.59 | -0.42 | +0.77 | +9.27 | -10.87 | 0.10 | -5.41 | +3.00 | +0.22 | +9.32 |
| 12. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், ஊட்டி | -10.59 | -8.21 | -11.75 | -7.01 | -17.04 | -12.50 | -17.56 | -13.34 | -19.69 | -16.10 |

| | 1996-97 | | 1997-98 | | 1998-99 | | 1999-2000 | | 2000-2001 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு | புத்தக ஆதாயம் இழப்பு | நிதி ஆதாரம் இழப்பு |
| 13. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் | -16.83 | 9.93 | -8.70 | -1.45 | -15.51 | -7.10 | -10.28 | -2.85 | -3.25 | -3.76 |
| 14. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி | -9.54 | 2.46 | -4.84 | -2.45 | -14.82 | -2.54 | -10.38 | -0.03 | -0.03 | +10.24 |
| 15. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி | -15.39 | 11.62 | -15.93 | -8.96 | -18.71 | -11.18 | -11.40 | -5.00 | -5.14 | +0.02 |
| 16. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டை | -6.24 | -4.02 | -5.60 | -1.63 | -6.53 | -1.53 | -6.24 | -2.33 | -3.38 | +0.29 |
| 17. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை | -21.34 | -11.25 | -17.64 | -10.39 | -30.56 | -22.70 | -20.93 | -12.74 | -14.38 | -7.60 |
| 18. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி | -25.05 | -20.29 | -28.22 | -20.38 | -34.61 | -25.98 | -37.17 | -29.44 | -39.16 | -33.03 |
| 19. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில் | -16.51 | -12.48 | -14.34 | -8.52 | -21.84 | -16.13 | -19.17 | -13.19 | -17.14 | -12.33 |
| 20. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் | -8.37 | -1.97 | -8.10 | -0.04 | -16.48 | -7.36 | -12.25 | -5.16 | -13.43 | -8.04 |
| 21. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விருதுநகர் | -0.02 | -0.02 | -7.28 | -4.53 | -11.16 | -7.79 | -7.52 | -3.39 | -1.18 | -2.47 |
| மொத்தம் | -310.67 | -180.18 | -229.37 | -59.30 | -411.30 | -211.05 | -317.77 | -149.03 | -232.84 | -79.64 |



# இணைப்பு II

(347 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 28 – தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

### முன்னுரை

1. அரசின் தொழிலாளர் கொள்கை தொழில் வளர்ச்சியையும், தொழிலின் வெற்றிக்கு உறுதுணையாக உள்ள தொழிலாளியின் வளர்ச்சியினையும் உறுதி செய்கின்றது. தொழிலாளர் கொள்கை, தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தல், மனித வள மேம்பாட்டினையும் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் பணி நிலைகளை அபிவிருத்தி செய்தல், நல்ல தொழில் உறவு வளர தகுந்த சூழ்நிலைகளை உருவாக்குதல், மாநிலத்தில் தொழில் அமைதியை நிலைநாட்டல், தொழிலாளர் நலச் சட்டங்களை சீரிய முறையில் அமல்படுத்தல் மற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு அளித்தல், ஆகியவைகளை உள்ளடக்கியது ஆகும். தொழிலாளர்கள், மாநிலத்தின் முக்கியமான மற்றும் வலிமையான சக்தி என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளதால், தொழிலாளர்களது திறமையை இந்த அரசு வீணாக்காது; வீணாக்கவும் அனுமதிக்காது. தொழிலாளர் வர்க்கத்தில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் அமைப்பு சாரா தொழிலாளர்கள் என்பதையும், இவ்வமைப்பு சாரா தொழிலாளர்கள் இந்திய நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் பெரும் பங்காற்றி வருகின்றனர் என்பதையும் அரசு அறிந்துள்ளது. அவ்வமைப்பு சாரா தொழிலாளர்கள் தனித்தன்மை வாய்ந்த சிக்கலான பல பிரச்சினைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர். அமைப்பு சாரா தொழிலாளர்களின் இத்தகைய பிரச்சினைகளைக் களைந்திட, அவர்களது நலனைப் பேணி காக்கும் வகையில் நிர்வாக அமைப்பு செம்மையாக்கப்பட்டு, இத்தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புச் சலுகைகள் கிடைத்திட பரிசீலிக்கப்படும்.

[2001 செப்டம்பர் 3

## அத்தியாயம்-1

### தொழில் உறவுகள்

1.1. ஆரோக்கியமான கட்டுப்பாடும், மேம்படுத்தப்பட்ட உழைப்பும் உடைய தொழிலாளர்களும், தொலைநோக்கும், முற்போக்குச் சிந்தனையுடைய நிர்வாகங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுவதே சிறந்த தொழில் உறவிற்கு அடையாளமாகவும், மூலதனமாகவும் அமையும். தொழிலாளர் மற்றும் நிர்வாகத்திற்கிடையேயான நல்லுறவைப் பலப்படுத்துவதன் மூலம் தொழில் வளம் பெருகவும், தொழிலாளர் நலன் வளரவும, இத்துறை செயல்பட்டு வருகிறது. இந்த சமன்பாட்டு நிலை நிலவுவதைச்ள சீர்குலைக்கும் தொழில் தகராறுகளைத் தீர்வு செய்வதில், தொழில்நுட்ப அறிவுடைய திறமையான பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அடிப்படை யுக்திகளைக் கையாண்டு, உரிய தருணத்தில் தலையிடுவதன் மூலமாகவும், தொழிலாளர் துறை அலுவலர்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றனர். தொழிலாளர் துறை அலுவலர்களின் திறமையான செயல்பாடுகளின் விளைவாக, வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளால் 1999 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 26.54 இலட்சம் மனித நாட்கள் இழப்பானது, 2000 ஆம் ஆண்டில் 20.01 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளின் மூலம் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு விவரம்:-

| வருடம் | வேலை நிறுத்தம் | கதவடைப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| 1999 | 1626966 | 1027175 | 2654141 |
| 2000 | 1059791 | 941238 | 2001029 |

1.2. இத்துறையின் சமரச அலுவலர்கள், வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பு தொடர்பான தொழில் தகராறுகள் மட்டுமின்றி, வேலை நேரங்களை மீறுதல், ஒழுங்கீனம் போன்ற இதர தொழில் தகராறுகளையும், திறம்பட கையாண்டு தீர்வுகள் கண்டுள்ளனர். 2000 ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட 13,319 தொழில் தகராறுகளில் (முந்தைய ஆண்டு நிலுவை உட்பட), 10,013 தொழில் தகராறுகள் சமரச அலுவலர்களால் தீர்வு காணப்பட்டன.



2001 செப்டம்பர் 3]

1.3. ஒவ்வோர் ஆண்டும், தீபாவளிப் பண்டிகை காலங்களில் போனஸ் பட்டுவாடா செய்வது குறித்து, எழுப்பப்படும் தொழில் தகராறுகள் மாநிலம் தழுவிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இத்தொழில் தகராறுகள்மீது, உரிய காலத்தில் தீர்வுகள் காணப்படவில்லையெனில், மாநில அளவில் அதிக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடிய ஒரு பிரச்சினையாக மாறக்கூடும். உரிய காலத்தில் தொழிற்தாவா தீர்க்கப்படாவிட்டால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. எனவே, 2000 ஆம் ஆண்டில் தொழிலாளர் துறையைச் சேர்ந்த சமரச அலுவலர்கள் மிகுந்த கவனத்துடனும், திறமையுடனும், தொழில்நுட்ப அறிவுடனும், உரிய நேரத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதில் தொழில் அமைதி பாதுகாக்கப்பட்டது.

1.4. முக்கியப் பிரச்சினைகளின் காரணமாக ஏற்பட்ட கீழ்க்கண்ட வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளில் இத்துறை சமரச அலுவலர்கள் தலையிட்டதன் அடிப்படையில் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்வு செய்யப்பட்டன:

தீர்வு செய்யப்பட்ட முக்கிய வேலை நிறுத்தங்கள்

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திருப்பூர் வட்டார பாத்திர வியாபாரிகள் மற்றும் முழுக் கூலி பட்டறைதாரர் சங்கம் | 4000 |
| 2 | வேலூர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 4610 |
| 3 | பாம்டெக்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட், மெப்ஸ், சென்னை | 892 |
| 4 | விம்கோ மேட்ச் பாக்டரி, திருவொற்றியூர் | 605 |
| 5 | சப்தகிரி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், பழையனூர், காஞ்சிபுரம் | 240 |
| 6 | இந்திரா காட்டன் மில்ஸ், குரோம்பேட்டை, சென்னை | 360 |
| 7 | சிஎஸ் டபிள்யூ மில்ஸ், கோவை | 543 |
| 8 | தம்பி மாடர்ன் ஸ்பின்னிங் மில்ஸ், சேலம் | 520 |
| 9 | வானகரம் ரிப்ராக்டரி ஒர்க்ஸ், வானகரம், சென்னை | 197 |
| 10 | பிள்ளையார்பட்டி டெக்ஸ்டைல்ஸ், பிள்ளையார்பட்டி | 320 |
| 11 | திருப்பதி ஸ்பின்னிங் மில்ஸ், கோவை | 125 |
| 12 | ஸ்ரீ இராஜேந்திரா மில்ஸ், சேலம் | 300 |

[2001 செப்டம்பர் 3

தீர்வு செய்யப்பட்ட முக்கிய கதவடைப்புகள்

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யூகால் பியுயல் சிஸ்டம்ஸ் லிமிடெட், மறைமலை நகர் | 185 |
| 2 | வெல்நிட் அப்பேரல்ஸ் லிமிடெட், சென்னை | 1000 |
| 3 | கோயம்புத்தூர் பாப்புலர் ஸ்பின்னிங் மில்ஸ் யூனிட்—2, பல்லடம் | 160 |
| 4 | கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட், கோவை | 360 |
| 5 | மேகலா கொரோனா டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட், கோபி | 215 |
| 6 | பெலிகான் லெதர் ப்ராடக்ட்ஸ் (பி) லிமிடெட், சென்னை | 88 |
| 7 | பாரத் டெக்ஸ்டைல்ஸ் ப்ரூஸிங் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், சென்னை | 108 |
| 8 | கோத்தாரி பைட்டோ கெமிக்கல்ஸ், நாகை | 110 |

மூடிய ஆலைகளைத் திறத்தல்

1.5. பெரும்பாலான ஆலைகள் நிதி நெருக்கடி, தொழிலில் ஏற்பட்டுள்ள மந்தநிலை, போட்டி, பங்குதாரர்களிடையே ஏற்பட்ட உட்பூசல் காரணமாக இயங்காமல் உள்ளதால், இவற்றைத் திறப்பது குறித்த நடவடிக்கை இத்துறையில் இல்லை. அதிகப்படியாக, தொழில் தகராறு சட்டப் பிரிவு 12(4)—ன்கீழ் சமரச முறிவறிக்கை மட்டுமே அனுப்ப இயலும். இருப்பினும், மூடப்பட்ட/இயங்காமல் உள்ள ஆலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொழிற் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்ததால், அவற்றைத் திறந்து இயக்க வாய்ப்புகள் உள்ளதா என்பதை ஆராயும் பொருட்டு, அரசால் 6–6–2001 அன்று முத்தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 16–7–2001 அன்று துறையின் ஆய்வுக் கூட்டத்திலும் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டு, திறந்து இயக்கக்கூடிய ஆலைகளைக் கண்டறிந்து அவற்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2001 செப்டம்பர் 3]

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை | மூடிய தேதி | திறக்கப்பட்ட தேதி |
|---|---|---|---|---|
| 1 | அண்ணாமலையார் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட், திண்டுக்கல் | 244 | 4-11-1997 | 1-4-2000 |
| 2 | குவாலிட்டி ஸ்பின்னிங் மில்ஸ், உடுமலைப் பேட்டை | 254 | 30-12-1998 | 20-4-2000 |
| 3 | தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ், தஞ்சாவூர் | 708 | 25-4-1998 | 1-9-2000 |
| 4 | பி.எல்.ஆர். டெக்ஸ்டைல்ஸ், கோவை | 838 | 20-10-1998 | 25-4-2001 |

தமிழ்நாட்டில் தொழில் தகராறு காரணமாக மட்டுமே மூடப்பட்டோ/நீண்ட காலமாக இயங்காமலோ உள்ள நிறுவனங்கள் ஏதும் இல்லை.

நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கான நிவாரணம்

1.6. 1999 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ரூ.250/– மாதாந்திர உதவித் தொகை தருவது குறித்தான திட்டத்தின்கீழ் இதுவரை, 86 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பயன் பெற உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 8,396 தொழிலாளர்களுக்கு இந்த நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. ரூ.2,09,85,000/– இதுவரை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்ட கருணைத் தொகை

1.7. 2000 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகை சமயத்தில் நீண்ட காலமாக மூடிக்கிடக்கும் 35 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த 14051

தொழிலாளிகளுக்கு தலா ரூ.500/– வீதம் மொத்தம் ரூ.70,25,500/–ம் அளிக்கப்பட்டது. இத்தொகை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டது.

## தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்

1.8. நலமார்ந்த தொழில் உறவை மேம்படுத்தும் முகத்தான், தொழில் நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் பணியில் சிறந்து விளங்கும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கும் வகையில், தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு உருவாக்கி செயலாற்றி வருகிறது. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் முறையே நான்கு பேர் கொண்ட ஒரு முத்தரப்பு உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இத்திட்டம், 1978 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற பரிசளிப்பு விழா சென்னையில் 16–12–2000–ல் நடைபெற்றது. ஒவ்வொரு வருடமும் நிர்வாகத்திற்கு 8 பரிசுகளும், தொழிற் சங்கங்களுக்கு 8 பரிசுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

## அறிவிப்புகள் மீதான அமலாக்கம்

1.9. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் மற்றும் தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டங்களின்கீழ் காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்கக் கட்டண முறை 22–01–2001 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

## ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டுவது தொடர்பாக நிலம் கையகப்படுத்துதல்

1.10. நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கங்களின் நீண்ட நாள் கோரிக்கையின்படி, மதுரையில் அனைத்துத் தொழிலாளர் துறையின் அலுவலகங்களுக்கும், ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டுவதற்குத் தேவையான இடம் மதுரை நகரில் தேர்வு செய்யப்பட்டு முன் நுழைவு செய்ய மதுரை மாவட்ட ஆட்சியரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நீதிமன்றம்

1.11. இம்மாநிலத்தில், 10 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழில் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றன. தொழில் தீர்ப்பாயத்தின் தலைமையிடம்



சென்னை ஆகும். தொழிலாளர்கள் சட்டபூர்வமான பலன்களை விரைவில் அடைய இவைகள் உதவுகின்றன. இவற்றின் ஆட்சி எல்லை கீழ்க்கண்டவாறு உள்ளது:

| வரிசை எண் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் |
| 2 | முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | |
| 3 | இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | |
| 4 | தொழிலாளர் நீதிமன்றம், வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 5 | தொழிலாளர் நீதிமன்றம், சேலம் | சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் நாமக்கல் |
| 6 | தொழிலாளர் நீதிமன்றம், கோவை | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 7 | தொழிலாளர் நீதிமன்றம், கடலூர் | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் |
| 8 | தொழிலாளர் நீதிமன்றம், திருச்சி | திருச்சி, அரியலூர், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை |
| 9 | தொழிலாளர் நீதிமன்றம், மதுரை | மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தேனி |
| 10 | தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |

[2001 செப்டம்பர் 3

## அத்தியாயம்-2

### அமலாக்கம்

2.1. திறம்பட்ட சட்ட அமலாக்கம் மூலம் வேலையளிப்போர் தாங்களாகவே முன் வந்து பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் மற்றும் விதிகளைப் பின்பற்றுவார்கள் என்று இவ்வரசு நம்புகிறது. தொழிற்சாலை நிர்வாகங்களில் சுய ஒழுங்கு இருக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும். ஆயினும், தொழிலாளர் சட்ட மீறல்கள் குறித்து வரும் புகார்கள்மீது உடனடி நடவடிக்கையினை இத்துறை எடுக்கின்றது. அமலாக்கம் திறம்பட இருக்க வேண்டும் என்பதே அரசின் குறிக்கோளாகும்.

2.2 கீழ்க்காணும் முக்கியத் தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர் துறையினால் அமலாக்கம் செய்யப்படுகின்றன:

**தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947**

2.3. இச்சட்டம் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை தொடங்கும் நேரம் மற்றும் முடியும் நேரங்களைக் கண்காணிக்க வழிவகை செய்கின்றது. இச்சட்டத்தின் மூலம், அனைத்து கடைகள் மற்றும் நிறுவனங்கள் வாரத்தில் ஒரு நாள் மூடப்பட வேண்டும். அதாவது, பணியாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க வகை செய்கிறது. இச்சட்டத்தின்கீழ் காணப்படும் முரண்பாடுகளுக்கு இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக நியமிக்கப்பட்ட இத்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வேலை அளிப்பவர்மீது வழக்குத் தொடர உரிய அதிகாரிகளாவர்.

2.4. மேலும், இச்சட்டத்தின்கீழ் விரைவில் நிவாரணம் கிடைக்கவும், வேலையளிப்போர் இச்சட்டச் செயலாக்கம் குறித்து அவர்தம் கடமைகளை உணரவும் அரசு இச்சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஆய்வாளர்களுக்கு, அவர்களது ஆய்வின்போது, காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்க முறையில் தீர்வு காண உரிய அதிகாரங்கள் வழங்கியுள்ளது.

2.5. கடைகள் மற்றும் நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் வைப்பதை வலியுறுத்துவதன் மூலம், இச்சட்டம் தமிழின்



2001 செப்டம்பர் 3]

முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. பெயர்ப் பலகைகள் தமிழில் பெரிய அளவில் எழுதப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம், தமிழிற்குப் பெருமை சேர்க்கின்றது. மேலும், இச்சட்ட அமலாக்கத்திற்காக இத்துறையில் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்களும், அதனை மேலாய்வு செய்திட 68 தொழிலாளர் துணை ஆய்வர்களும் மற்றும் 28 தொழிலாளர் ஆய்வர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

2.6. இச்சட்டம் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பினை முறைப்படுத்த ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் மூலம் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் விடுமுறை தினங்கள், பணி நேரங்கள், விடுப்பு மற்றும் சம்பளம், மிகை நேர ஊதியம் போன்ற பயன்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்த தொழிலாளர் உதவி ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் தொழிலாளர் ஆய்வர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.7. இச்சட்டத்தின்கீழ் விரைவில் நிவாரணம் கிடைக்கவும், வேலையளிப்போர் இச்சட்டச் செயலாக்கம் குறித்து அவர்தம் கடமைகளை உணரவும் அரசு இச்சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஆய்வாளர்களுக்கு, அவர்களது ஆய்வின்போது காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்க முறையில் தீர்வு காணவும் உரிய அதிகாரங்கள் வழங்கியுள்ளது.

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961**

2.8. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் அனைத்தும், இச்சட்டத்தின்கீழ் பதிவுச் சான்று பெற வேண்டும். இப்பதிவு ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். இச்சட்டம் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைத் தன்மையை முறைப்படுத்துகிறது. 5 தொழிலாளர்களுக்குக்கீழ் பணிபுரியும் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும் வகையிலும், ஆய்வின்போது காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்க முறையில் தீர்வு காணவும் மைய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் தொழிலாளர்

துணை ஆணையர் (குறைந்தபட்ச ஊதியம்) அவர்கள், இச்சட்டத்தின்கீழ், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ளார். இச்சட்டம், தொழிலாளர் ஆய்வர் மற்றும் தொழிலாளர் துணை ஆய்வர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

**உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனை மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், *1955***

*2.9.* இச்சட்டம் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பை முறைப்படுத்த ஏற்பட்டதாகும். இச்சட்டப் பிரிவை தொழிலாளர் ஆயவர்களும், சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலரும் அமலாக்கம் செய்கின்றனர்.

**தோட்டத் தொழிலாளர் சட்டம், *1951***

*2.10.* தோட்டத் தொழில் பழமையான தொழில்களில் ஒன்று. நீலகிரி மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறை, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி மலைப்பகுதி, திருநெல்வேலி மாவட்டத்தில் மாஞ்சோலை, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் தேனி மாவட்டத்திலும் தேயிலை, காப்பி, இரப்பர் மற்றும் ஏலக்காய் ஆகிய மலைத் தோட்டப் பயிர்கள் பயிரிடும் தோட்ட நிறுவனங்கள் உள்ளன.

*2.11.* தமிழ்நாட்டில் தோட்ட நிறுவனம் உள்ள மொத்த பரப்பளவு *53820* ஹெக்டேர் ஆகும். இதில் நேரிடையாகப் பணிபுரியும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை *107986* ஆகும். (*45164* ஆண்கள் மற்றும் *62822* பெண்கள்) மலைத் தோட்டப் பயிர்களில் தேயிலை முதலிடத்தையும், காப்பி அடுத்த இடத்தையும் வகிக்கிறது.

**சட்டம் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்துதல்**

*2.12.* தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகள் தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், வேலையின் தரத்தை முறைப்படுத்துவதிலும் அங்கம் வகிக்கிறது. *5* ஹெக்டேர் மற்றும் அதற்கு மேலும், காப்பி, இரப்பர், தேயிலை மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்கள் அதில் *15* தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிந்தால், அவைகளுக்கு இச்சட்டம் பொருந்தும்.





*2.13.* ஐந்து ஹெக்டேர் மற்றும் *15* தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் உள்ள தோட்ட நிறுவனங்களில் தொழிலாளர் நலனைப் பாதுகாக்க வேண்டி, அரசாணை மூலம் மேற்படி சட்டத்தை அதுபோன்ற தோட்ட நிறுவனத்திற்குப் பொருந்தும் வகையில் அறிவிக்கை செய்ய அரசிற்கு அதிகாரம் உள்ளது.

**தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்தல்**

*2.14.* இச்சட்டம் தமிழ்நாட்டில் *7* மாவட்டங்களில் *10* தோட்ட நிறுவன ஆய்வர்களாலும், *2* உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அலுவலர்களாலும் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்கள், குன்னூர், உதகை, கூடலூர், கோத்தகிரி, பந்தலூர், வால்பாறை, ஏற்காடு, வத்தலகுண்டு, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்டும், உதகை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களைத் தலைமை இடமாகக் கொண்டு உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

*2.15.* தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள மருத்துவ வசதி தொடர்பான பிரிவுகள் மற்றும் விதிகளை உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அமலாக்கம் செய்கின்றனர். சென்னை, தலைமை தோட்ட நிறுவன ஆய்வரின்கீழ் இந்த அமலாக்க அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள். தோட்ட நிறுவனங்களில் தோட்டத் தொழிலாளர் சட்ட விதி அமலாக்கத்தைத் தலைமைத் தோட்ட ஆய்வர் மேற்பார்வை செய்வதுடன், அவர் அடிக்கடி திடீர் தணிக்கைகள் மேற்கொண்டு இச்சட்ட விதிகள் சரிவர அமல் செய்யப்படுவதை உறுதி செய்து வருகிறார்.

*2.16.* பதிவு செய்யப்பட்ட தோட்ட நிறுவனங்களில் தோட்ட நிறுவன ஆய்வர்களால், கீழ்க்காணும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் அமல்படுத்தப்படுகின்றன:

1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், *1948*

2. சம்பளப் பட்டுவாடாச் சட்டம், *1936*

3. மகப்பேறு நலச் சட்டம், *1961* .

4. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், *1958*

[2001 செப்டம்பர் 3

5. தமிழ்நாடு பிழைப்பூதியப் பட்டுவாடாச் சட்டம், 1981

6. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்கள் நிரந்தர அந்தஸ்து வழங்கல்), சட்டம், 1981

7. சம ஊதியச் சட்டம், 1976

8. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972

9. போனஸ் பட்டுவாடாச் சட்டம், 1965

10. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972

2.17. பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட இரு சட்டங்கள் பொருந்தும்:

1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948

2. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், 1958

**தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் நல வசதிகள் வழங்குதல்**

2.18. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி, தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக இலவச மருத்துவ வசதி, கம்பளி வசதி, குடிநீர் வசதி ஆகியவைற்றுக்கு இச்சட்டத்தில் வழிவகை உள்ளது.

**வீட்டு வசதி**

2.19. இச்சட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தினர் வீடு கட்டித்தர வழிவகை உள்ளது. இத்தொழிலாளர்களுக்கு வாடகையின்றி, வாழ்க்கை நடத்த ஏதுவாக நல்ல நிலையில் வீடுகள் நிர்வாகத்தினரால் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் நிர்வாகத்தினரால், சிறந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும். இத்தகைய வீடுகளின் தரம் குறித்து, அரசு விரிவான ஆணை வெளியிட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர் களுக்குக் கட்டப்படும் வீட்டின் அளவு 26.7 சதுர மீட்டராக (287 சதுர அடி) இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் மொத்தம் 43,548 வீடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்குதலில் மொத்தமுள்ள



2001 செப்டம்பர் 3]

தோட்டத் தொழிலாளர்களில் 98 சதவீதம் தொழிலாளர்கள் வீட்டு வசதி பெற்று தமிழ்நாடு மாநிலம் இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழ்கிறது.

**தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம்**

2.20. வீட்டு வசதி தொடர்பாகப் பேசி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, அரசு செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. இக்குழு நிர்வாகப் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவாகும்.

**மருத்துவ வசதி**

2.21.தோட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினர் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு, தோட்டத் தொழிலாளர் சட்ட விதிகளின்படி, இலவச மருத்துவ வசதிகள் செய்து தர வேண்டும். மருத்துவ வசதிகள் செய்து தராத நிர்வாகத்திடமிருந்து அதற்கான செலவை திரும்பப் பெறவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் தற்போது 136 மருந்தகங்களும், 29 தோட்ட மருத்துவமனைகளும் மற்றும் 4 தொகுப்பு மருத்துவமனைகளும் உள்ளன. மருத்துவமனை வசதிகள் இல்லாத தோட்ட நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அருகிலுள்ள அரசால் நடத்தப்படும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ளும்பொழுது, அதற்கான செலவுத் தொகையினை நிர்வாகத்திடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்கின்றனர். தோட்ட நிறுவனங்களில் உள்ள மருத்துவமனைகளில் வைத்துக்கொள்ளப்பட வேண்டிய மருந்துகள் விவரம் குறித்து அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அவர்களுக்கு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் உள்ளது.

**மருத்துவப் படி**

2.22. உடல்நிலை சரியில்லாத தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகத்தினரிடமிருந்து உடல்நிலை சரியில்லா நாட்களுக்கு சான்றிதழ் பெற்று, மருத்துவப் படி பெறத் தகுதியுடையவராகின்றனர்.

[2001 செப்டம்பர் 3

இம்மருத்துவப் படி, அவர்களது தினக்கூலியில் 2/3 பகுதி பெறக்கூடியதாகும். இது ஆண்டிற்கு 14 தினங்களுக்கு மட்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு வசதி

2.23. தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் மகப்பேறு சலுகைகள் பெறத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். பெண் தொழிலாளர்கள் பிரசவிக்கும் தேதியின் முன்பிருந்து 80 நாட்கள் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால், 84 நாட்கள் சம்பளத்துடன் பேறுகால விடுப்பிற்கு (12 வாரம்) தகுதியுடையவராகிறார்கள்.

குழந்தைகள் காப்பகம்

2.24. தோட்ட நிறுவனங்களில் 50 பெண் தொழிலாளர்களுக்குமேல் பணி புரிந்தாலும், அல்லது அப்பெண் தொழிலாளர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை 20–ம் அதற்கு மேலும் இருந்தாலும் குழந்தைகளின் பராமரிப்பு குறித்து குழந்தைகள் நலம் பேணுவதில் பயிற்சி பெற்ற பெண் ஒருவருடன் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். குழந்தைகள் காப்பகம் சுத்தமாக வைத்திருப்பதோடு, குழந்தைகள் விளையாட மைதானமும், விளையாடும் பொருட்களும் குழந்தைகள் உபயோகத்திற்காக வைத்திருக்க வேண்டும். குழந்தைகளுக்கு சுத்தமான பால் வழங்க வேண்டும். மற்றும் முறையான இடைவெளியில் குழந்தைகளுக்குப் பால் புகட்ட தாய்மார்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் 312 குழந்தைகள் காப்பகங்கள் பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன.

மின்சார வசதி

2.25. தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் மின்வசதி செய்து கொடுக்க வேண்டியது நிர்வாகத்தினரின் பொறுப்பாகும். தற்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கான 43,548 வீடுகளில் 41,118 வீடுகளுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின் வசதி அளிப்பதில் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க மாவட்ட ஆட்சியரின்கீழ் நிர்வாகத் தரப்பினர், தொழிலாளர் தரப்பினர் மற்றும் அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.



2001 செப்டம்பர் 3]

தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்கான கல்வி வசதி

2.26. ஒவ்வொரு தோட்ட நிறுவனத்திலும் 6 வயதிற்கும், 12 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகள் 25–ம் அதற்கு மேலும் இருந்தால், அவர்களுக்கு நிர்வாகம் கல்வி வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். ஆயினும், தோட்ட நிறுவனங்களிலிருந்து 1.6 கிலோ மீட்டர் தொலைவு சுற்று வட்டாரத்திற்குள் அரசு கல்வி நிறுவனம் இருந்தால், நிர்வாகம் தனியாகக் கல்வி வசதி செய்ய வேண்டிய அவசியமில்லை. தோட்ட நிறுவனங்கள் மொத்தம் 123 பள்ளிக்கூடங்களைப் பராமரித்து வருகின்றன.

குளிர்காலப் பாதுகாப்பு

2.27. தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒரு காட்டுக் கம்பளியும், இரண்டு வருடங்களுக்கு ஒரு போர்வைக் கம்பளியும், குளிரிலிருந்து தோட்டத் தொழிலாளர் களைப் பாதுகாக்க தோட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றது. இக்கம்பளிகளின் தரத்தினை நிர்ணயிக்க சம்பந்தப்பட்ட மண்டல தொழிலாளர் துணை ஆணையர்களுக்கு அதிகாரம் உள்ளது.

உணவகம்

2.28. தோட்ட நிறுவனங்களில் 150 தோட்டத் தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிந்தால், உணவகம் ஒன்று (கேண்டீன்) அமைக்கப்பட வேண்டும். அவ்வுணவகத்தில், காபி, டீ மற்றும் தின்பண்டங்கள் ஆகியவை இலாப நஷ்டம் இல்லாமல் வழங்க வேண்டும். மொத்தம் 85 உணவகங்கள் தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் உள்ளன.

குடிநீர் வழங்கல்

2.29. தோட்டத் தொழிலாளிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தோட்ட நிர்வாகத்தினரின் தலையாய கடமையாகும். இக்குடிநீர் சுகாதாரத் துறையின் சுகாதார அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு

2.30. தொழிலாளர் ஆணையர் தலைமையில் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு ஒன்று செயல்பட்டு வருகின்றது.

[2001 செப்டம்பர் 3

இம்முத்தரப்புக் குழு தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின் அமலாக்கத்தில் உள்ள இதர பிரச்சினைகளைப் பரிசீலிக்கும்.

**சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936**

2.31. பணியாளர்களுக்கு ஊதியத்தை உரிய காலத்தில் வழங்கவும், பணியாளர்களின் சம்பளத்தில் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்வதைத் தடுத்திடவும், இச்சட்டம் தொடர்பான கேட்பு மனுக்களை விரைவில் தீர்த்திடவும் சம்பளப் பட்டுவாடாச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

2.32. இச்சட்டப் பிரிவுகள் மூலம், வேலையளிப்போர் 1000 தொழிலாளர்களுக்குக்கீழ் பணிபுரியும் நிறுவனங்களில், பிரதி மாதம் 7 ஆம் தேதியோ அதற்கு முன்போ 1000 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நிறுவனங்களில் பிரதிமாதம் 10 ஆம் தேதியன்றோ/அதற்கு முன்போ சம்பளம் பட்டுவாடாச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆய்வர், தோட்ட நிறுவன ஆய்வர், உதவி ஆய்வர்கள் மற்றும் துணை ஆய்வர்கள், இச்சட்டத்தின்கீழ் ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின்கீழ் கேட்பு மனுக்களை விசாரித்து முடிவெடுக்க, இத்துறையில் 9 வட்டாரத் துணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958**

2.33. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள் அளிக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத் தொழிலாளர்களுக்கு, சம்பளத்துடன் குறைந்தபட்சம் 5 பண்டிகைகள் மற்றும் 4 தேசிய விடுமுறைகள் (குடியரசு தினம், மே தினம், சுதந்திர தினம், காந்தியடிகள் பிறந்த நாள்) அளிக்கவும், இச்சட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது.

2.34.மேலும், மே தினத்தை சம்பளத்துடன் கூடிய தேசிய பண்டிகை தினமாக அறிவித்த முதல் மாநில அரசு தமிழ்நாடு அரசாகும். தொழிலாளர் உதவி ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் மலைத் தோட்ட ஆய்வர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2.35. இச்சட்டத்தின்கீழ் விரைவில் நிவாரணம் கிடைக்கவும், வேலையளிப்போர் இச்சட்டச் செயலாக்கம் குறித்து அவர்தம் கடமைகளை



2001 செப்டம்பர் 3]

உணரவும், அரசு இச்சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஆய்வாளர்களுக்கு அவர்களது ஆய்வின்போது காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்க முறையில் தீர்வு காணவும் உரிய அதிகாரங்கள் வழங்கியுள்ளது.

**ஒப்பந்தத் தொழிலாளர் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970**

2.36. சில தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை வரைமுறைப்படுத்தவும், சில தொழில்களில் அவற்றின் தன்மையைப் பொறுத்து நீக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கு மேல் அதிகமான தொழிலாளர்கள் பணியிலமர்த்தப்பட்டிருந்தால், அந்த நிறுவனத்திற்கு இச்சட்டம் பொருந்தும். இதேபோல், கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 (அல்லது) அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியிலமர்த்தியிருந்த ஒப்பந்தக்காரர்களுக்கு இச்சட்டம் பொருந்தும். ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் இச்சட்டத்தின்கீழ் உரிமம் பெற வேண்டியவர்கள் ஆகிறார்கள். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் இச்சட்டத்தில் எழும் பிரச்சினைகளில் அரசுக்கு அறிவுரை கூறும் தனது கடமையை ஆற்றி வருகிறது. வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் முதன்மை வேலை அளிப்போருக்கு பதிவுச் சான்று வழங்கும் அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

2.37. தொழிலாளர் ஆய்வர்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்கும் அலுவலர்களாகப் பணிபுரிகின்றனர். இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணிக்கு வைத்துக்கொள்வதால், ஒப்பந்தக் காரர்களும் அவர்களாகவே முன்வந்து, உரிமம் பெற்றுக் கொள்கின்றனர். இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் சட்டப்படி பதிவு செய்துகொள்வதால், ஒப்பந்தக்காரர்கள் அவர்களின்கீழ் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்குதல் மற்றும் சட்ட ரீதியான சலுகைகளை வழங்குதல் முதலியவற்றை வழங்கத் தவறினால், இவற்றிற்கு சட்டப்படியான தார்மீகப் பொறுப்பாளிகளாகிறார்கள். சிற்றுண்டிச் சாலை, ஓய்வு அறை, குடிநீர் வசதி, போதுமான கழிவறை வசதிகள், சலவை வசதிகள் மற்றும் முதலுதவி வசதிகள் ஆகிய நலன்கள் பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது.

[2001 செப்டம்பர் 3

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981**

2.38. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 20 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும். இச்சட்டத்தின்கீழ், 24 தொடர் காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வகை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தோட்ட நிறுவன ஆய்வர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946**

2.39. இச்சட்டம், தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித் தன்மைகளைக் குறித்து வேலையளிப்போர் அவர்கள்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டத்தின்கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக இத்துறையின் மூன்று மண்டல இணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.40. இச்சட்டம், 20 மற்றும் அதற்கு மேற்பட்டத் தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக அமைந்துள்ளது. இச்சட்டத்தின்கீழ் வேலையளிப்போர் அவர்களது நிறுவனத்தின் நிலையாணைகளைக் குறித்து சான்று பெற வேண்டும். நிலையாணைகள் சான்றிதழ் பெறப்படாத தொழில் நிறுவனங்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்தில் உள்ள மாதிரி நிலையாணைகள் அத்தொழில் நிறுவனங்கள் சான்றிதழ் வழங்கும் அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பெறு வரை பொருந்தும்.

**தொழிற்சங்கங்கள் சட்டம், 1926**

2.41. தொழிற்சங்கங்கள் பதிவு செய்தல் குறித்தும், தொழிற்சங்கம் பதிவு செய்வது குறித்தான சட்டத்தை விளக்கவும், தொழிற்சங்கங்கள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சங்கப் பதிவாளர்களாக 9 வட்டாரத் துணை ஆணையர்கள் செயல்படுகின்றனர். இச்சட்டத்தில், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் பொது நிதி மற்றும் அரசியல் நிதிகளை உருவாக்கவும் அதனைப் பயன்படுத்துவதற்கும் வழிவகை உள்ளது.



2001 செப்டம்பர் 3]

**பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966 மற்றும் அதன் விதிகள் 1968**

2.42. பீடித் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு சட்டப்படியான சலுகைகள் அவர்களைச் சென்றடைய வேண்டுமென்ற சீரிய நோக்குடன் இந்தச் சட்டம் மற்றும் அதன் விதிகள் ஆகியவற்றையும் மற்றும் தொடர்புடைய ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும் தீவிரமாக அமல்படுத்தும்படி இத்துறை அமலாக்க ஆய்வர்களுக்கு அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி வருகிறது.

2.43 பீடித் தொழிலாளர்களுக்கு மத்திய அரசால் அமல்படுத்தப்படும் 1978 ஆம் வருடத்திய பீடித் தொழிலாளர் நல விதிகளின்படி, குடும்பத்தினரின் விவரங்களுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். இந்த அடையாள அட்டை பீடித் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருந்தகங்களில் மருத்துவ வசதி பெற்றுக்கொள்ள பெரிதும் உதவியாக இருக்கிறது. பீடித் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது மத்திய அரசின் பணியென்றாலும், பீடித் தொழிலாளர்களின் நலனில் இந்த அரசு அக்கறை கொண்டு, அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதில் தீவிர கவனம் செலுத்தி, தேவையான பிரதிகளை மத்திய அரசின் நல அமைப்பு அலுவலகங்களிடமிருந்து பெற்று, அனைவருக்கும் வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.

**பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்**

2.44. பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து மத்திய அரசிடமிருந்து மானியத் தொகை பெற்று தமிழ்நாட்டில் முதன்முதலில் திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் முறையே 439 மற்றும் 535 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு, இவ்வீடுகளின் கட்டுமானப் பணிகள் திருநெல்வேலி மாவட்ட கட்டட மையத்திடம் ஒப்படைக்கப் பட்டது. மாவட்ட கட்டட மையம் மூலம் மேலப்பாளையத்தில் 148 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனீட்டாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. இதர வீடுகள் கீழ்க்கண்ட புதிய திட்டப்படி கட்டப்பட உள்ளது:

2.45. அரசாணை எண் 384, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (கூட.1) துறை, நாள் 23–9–1999–ல் அரசின் தொழிலாளர் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் "தமிழ்நாடு ஊரக வீட்டு வசதிக் கழகம், சென்னை"–இடம் ஒப்படைத்து ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதன்படி வீடு ஒன்றின் கட்டுமானச் செலவினம் ரூ.34,000/– ஆகும். இதில்,

[2001 செப்டம்பர் 3

மத்திய அரசின் மானியத் தொகை போக மீதித் தொகையை ஹட்கோ நிறுவனத்திடம் பீடித் தொழிலாளர்கள் நீண்ட காலக் கடனாகப் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்தப் புதிய திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட இடங்களில் முதல் கட்டமாக பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏதுவாக திட்டத்தை விஸ்தரித்து அரசின் ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர்/இடம் | கட்டப்படும் வீடுகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாவட்டம் | |
| | (அ) மேலப்பாளையம் | 291 |
| | (ஆ) முக்கூடல் | 535 |
| 2 | வேலூர் மாவட்டம் | |
| | (அ) காசிக்குட்டை, சேனூர், வாஞ்சூர், ஏரிக்குத்தி, தண்டலம், பத்தளப்பள்ளி, கொத்தளப்பள்ளி, ஜாப்ராபேட் மற்றும் மசிகம் | 521 |
| | (ஆ) திருப்பத்தூர் மற்றும் ஜோலார் பேட்டையைச் சுற்றியுள்ள கிராமங்கள் | 64 |
| 3 | ஈரோடு மாவட்டம் | |
| | பவானி வட்டம், அந்தியூர், கரட்டுப்பாளையம் | 89 |
| 4 | திருச்சி மாவட்டம் | |
| | (அ) 305 பி.எஸ். ஜாடி பீடி கம்பெனி தொழிலாளர்கள், அரியமங்கலம், கணபதி நகர் | 56 |
| | (ஆ) திருச்சி, சிப்பி பீடி கம்பெனி தொழிலாளர்கள், சமயபுரம், புரந்தாங்குடி மற்றும் மகிழம்பாடி | 58 |
| 5 | கோவை மாவட்டம் | 48 |
| | பல்லடம் வட்டம், நாரணாபுரம், கல்லாங்குத்து | |
| | மொத்தம் | 1662 |

2.46. மேலும், இரண்டாவது கட்டமாக கீழ்க்கண்ட இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| திருவள்ளூர் மாவட்டம் | 128 |
| வேலூர் மாவட்டம் | 140 |
| திருச்சி மாவட்டம் | 19 |
| நாமக்கல் மாவட்டம் | 55 |
| மொத்தம் | 513 |



2001 செப்டம்பர் 3]

2.47. மேலும், மத்திய அரசு தற்போது பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்திற்கு வழங்கும் மானியத் தொகையை அதிகபட்சமாக ரூ.20,000/– அல்லது வீடு ஒன்றின் கட்டுமானச் செலவில் 50% தொகை, இதில் எது குறைவோ அதனை வழங்குவதாக உத்தரவிட்டுள்ளது.

2.48. இதனடிப்படையில், மத்திய அரசு முதற்கட்டமாக 790 வீடுகளுக்கு தலா ரூ.17,000/– வீதம் மொத்தம் ரூ.1,34,30,000/– அனுமதித்து 25–10–2000–ல் அனுமதி ஆணை வழங்கியுள்ளது. கட்டுமானப் பணிகள் தொடங்கி, கட்டடம் கூரையளவு வந்தவுடன் மானியத் தொகை கிடைக்கும்.

**எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985**

2.49. சென்னையில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) மாநிலம் முழுமைக்கும் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர், நிர்வாக அலுவலர் (எடைகள் மற்றும் அளவைகள்) மற்றும் உதவி எடையளவு கட்டுப்பாடு அலுவலர், தொழிலாளர் துணை ஆய்வர் (தலைமையிடம்) ஆகியோர் உள்ளனர். இவர் தொழிலாளர் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிந்து வருகிறார். ஒன்பது வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள், கூடுதல் எடையளவு சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். அதேபோல் மாவட்ட அளவில் 28 தொழிலாளர் ஆய்வர்கள் துணை எடையளவு சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்களாகவும், கோட்ட அளவில் பணிபுரியும் 67 தொழிலாளர் துணை ஆய்வர்கள் உதவி எடையளவு சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர்களாகவும், வட்ட அளவில் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் எடையளவு சட்டமுறை ஆய்வர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2.50. எடையளவு சட்டமுறைக் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் அவரது களப் பணியாளர்களுக்கு 1985 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம் மற்றும் 1977 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் ஆகியவற்றை அமல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும் முத்திரையிடப்படாத எடைகள் மற்றும்

[2001 செப்டம்பர் 3

அளவைகளையும் வியாபாரம் மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பிரிவில் பயன்படுத்துதல் தடைபடுத்தப்பட்டுள்ளது.

2.51. வியாபாரிகள் பயன்படுத்தும் எடைகள் மற்றும் அளவைகளைப் பரிசீலனை செய்து முத்திரையிட மாநிலம் முழுமையிலும் 101 முத்திரை ஆய்வாளர்கள் உள்ளனர். நுகர்வோர் நலனைக் காப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சட்டம் திடீராய்வுகள் மற்றும் காலமுறைப்படி மேற்கொள்ளப்படும் கூட்டாய்வுகள் மூலம் அமல்படுத்தப்படுகிறது. இச்சட்டப் பிரிவுகளுக்கு முரணாகச் செயல்படும் வியாபாரிகள்மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1985 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டத்துடன் சேர்த்து 1977 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளும் அமலாக்கப்பட்டு வருகின்றன. பொட்டலப் பொருட்களில் நிகர எடையைப் பொட்டலம் செய்யப்படும் உற்பத்தியாளர்களின் இடங்களில் சோதனை செய்யும்பொருட்டு துறையில் உள்ள மின்னணு எடைக் கருவிகள் போன்றவற்றை ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படும் இன்றைய வியாபாரச் சந்தையில், பல்வேறு வணிகச் சின்னங்களைக் கொண்ட பொருட்கள் விற்பனைக்கு வரும் நிலையில் நுகர்வோர் நலன் காக்க இந்த எடை மற்றும் அளவைகள் சட்டம் பெரிதும் உதவுகிறது.

## குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

2.52. அபாயகரமான தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலையை 1931 ஆம் வருட இராயல் கமிஷன் அறிக்கை மூலம் வெளிக் கொணர்ந்து காட்டியது. 1933 ஆம் வருடம் குழந்தைத் தொழிலாளர் சட்டம் (குழந்தைத் தொழிலாளர்களை அடகு வைத்தல்) முதன் முதலில் இயற்றப்பட்டது. அதன் பிறகு குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டம், 1951 ஆம் வருட தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1952 ஆம் வருட சுரங்கச் சட்டம், 1961 ஆம் வருட தொழில் பழகுவோர் சட்டம், 1966 ஆம் வருட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிபந்தனைகள்) சட்டம், 1947 ஆம் வருட கடைகள் நிறுவனங்கள் சட்டம், 1958 ஆம் வருட உணவு நிறுவனங்கள் சட்டம் மற்றும் இறுதியாக 1986 ஆம்



2001 செப்டம்பர் 3]

வருட குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டன. குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் பிரிவு 3–ன்படி அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டத்தில் பகுதி 3–ல் அபாயகரமற்ற தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் வேலை முறை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டங்கள் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைத் துறையின் ஆய்வர்களால் அமல்படுத்தப்படுகின்றன.

2.53. கீழ்க்காணும் காரணங்களினால் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு நன்றாக அறியும்:

1. வறுமை
2. வேலையின்மை
3. தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி வழங்குதல்
4. நகரங்களுக்கு குடியேறுதல்
5. கட்டாயக் கல்வி இல்லாமை
6. பெற்றோர்களின் அறியாமை மற்றும் கல்வி இல்லாத தன்மை
7. குழந்தைத் தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கங்கள் ஈடுபடாமை
8. மரபு பழக்க வழக்கங்களைப் பின்பற்றுதல்
9. மக்கள்தொகைப் பெருக்கம்

2.54. உச்ச நீதிமன்றம் 10–12–1996 அன்று ரிட் மனு எண் 465/86–ல் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளது. 1997 ஆம் வருடம் ஏப்ரல் மாதம், இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்தும் முக்கிய நடவடிக்கையாக குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றி அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு செய்யப்பட்டது. அபாயகரமான தொழிலில் 10,118 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழிலில் 9052 குழந்தைகளும் கண்டறியப்பட்டனர். குழந்தைத் தொழிலாளர்களை அபாயகரமான வேலையில் ஈடுபடுத்தும் உரிமையாளர்களிடமிருந்து ரூ.20,000/–வீதம் இழப்பீட்டுத் தொகை வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 8 குழந்தைத் தொழிலாளர்களுக்கு ரூ.1,60,000/– வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதர உரிமையாளர்கள் குற்றத்தினை மறுத்து அபராதத் தொகையைக் கட்ட

மறுத்துள்ளனர். மைய அரசின் அறிவுரையின்படி அவர்களது பட்டியல் உச்ச நீதிமன்றத்தில் அவர்களிடமிருந்து அபராதத்தை வசூலிக்கும் முறை குறித்து ஆணை வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 8799 குற்ற வழக்குகள் குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் 1986–ன்கீழ் பல்வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2.55. அவ்வாறு குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள உரிமையாளர்கள்மீது வழக்கு தொடரப்படவுள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு வேலையளிக்க வேண்டும். இல்லையென்றால் அரசு தன் பங்காக ரூ.5000/– அளிக்க வேண்டும். இதுவரை, ரூ.4 கோடியே 75 இலட்சம் தொகை இதற்கான நிதி ஏற்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து மாநில அரசு அபாயகரமான தொழில்களிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் தலா ரூ.5000/– வீதம் கணக்கிட்டு சென்னை, புதுக்கோட்டை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டாட்சியர்களுக்கு இதுவரை ரூ.7.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அபாயகரமற்ற தொழிலில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தியுள்ள நிறுவன உரிமையாளர்களுக்கு சட்டபூர்வ அறிவிப்புகள் வழங்கப்பட்டவுடன், குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

2.56. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், வேலூர், தருமபுரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 394 சிறப்புப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, அவற்றில் 18,382 குழந்தைகள் படிக்கின்றனர். குழந்தைத் தொழிலாளர் குடும்பத்திற்கு உதவித் தொகையாக மாதம் ரூ.100/–வீதம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் குழந்தைகளுக்கு இலவச உணவு, நோட்டுப் புத்தகம் மற்றும் கல்விக்குரிய அனைத்து சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

2.57. யூனிசெப் நிறுவன உதவியுடன் தொழிலாளர் துறையால் அகில இந்திய வானொலியில் குழந்தைத் தொழிலாளர் விழிப்புணர்வு விளம்பரங்கள் 60 நாட்களுக்கு ஒலிபரப்பப்பட்டன. மேலும், 20 இலட்சம் தபால் அட்டைகளில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் குழந்தைத்





தொழிலாளர் முறைக்கு எதிரான வாசகம் தபால் துறையின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்காக விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு ரூ.6,50,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.58. மேலும், 2000 ஆம் வருடத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்பட்டு வரும் 9 மாவட்டங்களில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் குழந்தைத் தொழிலாளர் கருத்தரங்கு நடத்துவதற்கு ரூ.2,20,000/– நிதி உதவி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை கோயம்புத்தூர், சேலம், வேலூர், தருமபுரி, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பிற்கான திட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டும் என முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும், யூனிசெப் நிதி உதவியுடன் மாநில அளவில் கருத்தரங்கு நடத்தி, குழந்தைத் தொழிலாளர் முறையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒழிக்க திட்டம் வகுக்கப்படும்.

2.59. குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986, கடைகள் நிறுவனங்கள் சட்டம், 1947, உணவு நிறுவனங்கள் சட்டம், 1958, மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், 1961, பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966, இவற்றில் உள்ள குழந்தைத் தொழிலாளர் பிரிவுகளின் அமலாக்கமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர் ஆய்வாளர்கள் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். 2000 ஆம் வருடத்தில் 591 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிக்கப்பட்டு, ரூ.2,62,155/– அபராதத் தொகை நிறுவன உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

## அகில உலக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டம் (ஐபெக்)

2.60. குழந்தைத் தொழிலாளர்களை ஆபத்தான மற்றும் சுரண்டப்படும் நிலைகளிலிருந்து மீட்டெடுக்கும் ஒருங்கிணைந்த அணுகுமுறைத் திட்டம், திருப்பூர் மற்றும் சிவகாசி குழந்தைத் தொழிலாளர்களுக்கு செயல்படுத்துவதற்கான இரண்டு ஒப்பந்தங்கள் அகில உலக தொழிலாளர் அமைப்பு, ஜெனீவா மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டச் சங்கங்கள் கோவை மற்றும் விருதுநகர்

ஆகியவற்றினிடையே கையெழுத்தாயின. மேற்படி ஒப்பந்தங்கள் குறிப்பாக சிவகாசி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டப் பகுதிகளிலுள்ள திருப்பூர், பல்லடம் மற்றும் அவினாசியில் உள்ள 15000 குழந்தைகளை அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுக்கவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் போடப்பட்டது. மேலும், மீட்டெடுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்குக் கூடுதல் வருமானம் அளிக்க சிறப்பு வருவாய் பேணும் திட்டங்கள் மூலம் வழி காணப்பட்டுள்ளது. சிறப்பு சேமிப்பு மற்றும் கடன் வசதி அளிக்கும் திட்டங்களின் மூலம் அவர்கள் பயன் அடைய சுழற்சி முறை நிதி உருவாக்கப்படும். அகில உலக தொழிலாளர் அமைப்பு இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சுமார் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இரண்டு வருடங்களில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். மேற்கண்ட திட்டத்தின்கீழ் 8 முதல் 12 வயதுள்ள 4000 குழந்தைகள் அபாயகரமான தொழில்களிலிருந்து மீட்டெடுக்கப்படுவர். பள்ளிகளில் சேர்க்கப்படாத 5 முதல் 7 வயதுள்ள 10000 குழந்தைகள் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, பள்ளிகளில் சேர்க்கபபடுவர். மேலும், திருப்பூர் பகுதியிலுள்ள 400 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கபபடும் என்று கூறப்பட்டுள்ளது. நிவாரணம் பெற்ற குழந்தைத் தொழிலாளர்களின் 2400 தாய்மார்களுக்கு சேமிப்புக் கடன் வசதி மற்றும் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். பணியிலிருந்து அப்புறப்படுத்திய குழந்தைத் தொழிலாளர்களின் 2200 தாய்மார்களுக்கு வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிக்க தொழிலாளர்கள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவை ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதேயாகும். வட்டார அளவிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதற்கான சிறப்பான செயல் திட்டம் உருவாக்கப்படுவதுடன், தொடர்ச்சியான மதிப்பீடும் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் தேசிய அளவில் நான்காவதாகவும், தமிழகத்தில் முதன்முறையாகவும் மேற்கொள்ளப்படுகிறது.

2.61. 2000 ஆம் வருடத்தில் இந்தியப் பிரதமர் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டபோது இரண்டு நாடுகளுக்கிடையே ஓர் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி, அமெரிக்க ஐக்கிய நாடு 10 மில்லியன் டாலர் நிதி உதவி செய்ய முன் வந்துள்ளது.





2.62. இந்தத் திட்டம் U.S.-DOL, GOI, ILO, IPEC.-ன்கீழ் செயல்படுத்தும் நோக்குடன் அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் உலகத் தொழிலாளர் அமைப்புப் பிரதிநிதிகள் இந்திய அரசு உயர் அதிகாரிகள் அடங்கிய குழு 18–11–2000 மற்றும் 19–11–2000 ஆகிய தேதிகளில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டு அங்குள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றனர். மேற்படித் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழக அரசு திட்ட வழிப்படுத்தும் குழு (Project Steering Committee) அமைத்துள்ளது.

### மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்

2.63. மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், வேலையளிப்போர் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு தரப்புப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு முதல்நிலை வாரியம் ஆகும். இவ்வாரியத்தின் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சராவார். இவ்வாரியம் அடிக்கடி கூடி தொழிலாளர்களின் பொதுப் பிரச்சினைகள் மற்றும் சட்ட/விதித் திருத்தம் போன்ற முக்கியப் பிரச்சினைகளை விவாதித்து அரசுக்குப் பயனுள்ள ஆலோசனைகளை வழங்குகிறது. இதுவரை 63 மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

## அத்தியாயம்-3

### குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்ற பாதுகாப்பு வளையம்

3.1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்பது ஒரு திருப்பு முனைச் சட்டமாகும். குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க உறுதி செய்வது என்பது நற்பாங்கான மனித வாழ்வை உறுதி செய்வது என்பதாகும். குறைந்தபட்ச ஊதியம் என்பது, பொதுவாக பிழைப்பூதியம் போன்றதேயாகும். அதை வழங்க மறுக்கும்பட்சத்தில் வாழ்க்கையில் மனிதத் தன்மை என்ற மூலப்பொருளை எடுப்பதற்கு ஒப்பாகும். குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் அமைப்பு ரீதியற்ற 87 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், குழு முறை அல்லது அறிவிக்கை முறையைப் பின்பற்றி அரசானது குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்கிறது. முதன்முதலாக அட்டவணைப்படுத்தப்பட்ட தொழில்

[2001 செப்டம்பர் 3

இனத்திற்கு குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் குழு முறையில் நிர்ணயம் செய்வது என்பது உள்ளது. ஏனெனில், அந்த நடைமுறையில், தொழிலின் தன்மை குறித்தும், தொழிலகங்களின் தாங்கும் சக்தி குறித்தும் ஆழமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியுள்ளது. இதற்குப் பிறகு குறைந்தபட்ச ஊதியங்கள் மறுநிர்ணயம் குறைந்தது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படுகிறது. இவ்வாறு மறுநிர்ணயம் செய்யும் தருணங்களில் அறிவிக்கை முறை பின்பற்றப்படுகிறது. விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்டும் பொருட்டு, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம், மறுநிர்ணயம் செய்யும்பொழுது அடிப்படை ஊதியத்துடன், விலைவாசிக் குறியீட்டுடன் இணைக்கப்பட்ட மாறுகின்ற அகவிலைப்படி என்கிற அகவிலைப்படியையும் அரசு நிர்ணயம் செய்கிறது.

3.2. குறைந்தபட்ச ஊதியம் மாற்றம் செய்யப்பட்டு, அறிவிக்கை செய்யும் சமயங்களில் இந்த அறிவிக்கைகளுக்கு எதிராக வேலையளிப்பவர்கள் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்து தடை உத்தரவு பெறுகின்றனர். இதன் விளைவாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் தொழிலாளர்களுக்குக் கிடைப்பது தடுக்கப்படுகிறது. இந்தத் தடையிலிருந்து விடுபட தமிழ்நாடு அரசு, இந்தியத் தொழிலாளர்கள் மாநாடு, தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற அமைப்புகளின் மூலம் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்க பரிந்துரை செய்துள்ளது. இதனால், நீதிமன்றத்தின் முன்பு தடையுத்தரவு பெற இயலாது. மேலும், உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் எந்த ஒரு நிறுவனம் குறைந்தபட்ச ஊதியம் வழங்க இயலாத நிலையில் உள்ளதோ அந்நிறுவனம் இயங்குவதற்கு உரிமையுடையதல்ல என்று கூறியதை இங்கு சுட்டிக்காட்டலாம். குறைந்தபட்ச தினக்கூலி ரூ.45/-க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் தற்போதைய கொள்கையாகும்.

3.3. 2000 ஆம் ஆண்டில் அரசு 4 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் முதன்முறையாக குழு முறையில் நிர்ணயம் செய்துள்ளது

1. செக்யூரிட்டி கார்டு தொழில்
2. இரசாயன உரத் தொழில்
3. மருந்து மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் தொழில்
4. அகர்பத்தி தயாரிக்கும் தொழில்



2001 செப்டம்பர் 3]

3.4. 28 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியங்களை மறுநிர்ணயம் செய்துள்ளது. 3 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியங்களை மறுநிர்ணயம் செய்வதற்கான முதனிலை அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது.

1. தீப்பெட்டி தயாரிக்கும் தொழில்
2. காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த தொழில் (இயந்திரத்தால் தயாரிக்கப்படும் காகிதத் தொழில் சம்பந்தப்பட்டது)
3. பாலிதீன் பிராஸஸிங்ஃபோம் அயிட்டம்ஸ் மற்றும் பிளாஸ்டிக் தயாரிக்கும் தொழில்

3.5. மேலும், சுற்சிற்பம் செய்யும் தொழிலை அரசு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்ப்பதற்கான முதனிலை அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

3.6. கிரானைட் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யும்பொருட்டு அரசு ஆலோசனைக் குழு அமைத்துள்ளது.

3.7. 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டப் பிரிவு 20(1)-ன்படி கேட்பு மனுக்களை விசாரணை செய்ய 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரம் பெற்றவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## அத்தியாயம்-4

### சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள்

**வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923**

4.1 தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டால், தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தன்மையைப் பொறுத்து இழப்பீடு வழங்கவும் இறக்க நேரிட்டால், அவர்தம் சார்ந்தோருக்கு இழப்பீடு அளிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. மேலும், சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட இச்சட்டத் திருத்தத்தின் பயனாக தற்காலிக (Casual) தொழிலாளர்களும் இச்சட்ட சலுகையை பெறத் தகுதியுடையவர் களாகின்றனர். 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் வேலையாள் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

4.2. ஆணையர்களால் வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு அளிக்கப்படுகிறது. தீர்ப்பளிக்கப்பட்ட தொகை வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், துணை ஆணையர்கள்/மாவட்டாட்சியர்கள் மூலம் வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972

4.3. தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கான திட்டம் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 5 வருடம் தொடர்ச்சியாகப் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியில் இருந்து விடுவிக்கும் சமயம் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும்.

1. வயது முதிர்வு காரணமாக
2. பணிமுடிவு அல்லது இராஜினாமா
3. இறப்பு (அல்லது) விபத்து (அல்லது) நோய் காரணமாக இயலாமை

பொதுவாக, இறுதியாக பெற்ற அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் பணிக்கொடை வழங்கப்படுகிறது. அது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

$$\frac{\text{மாத வருமானம்}}{26} \times 15 \times \text{பணி செய்த வருடங்கள்}$$

இச்சட்டப்படி, அதிகபட்சம் வழங்கப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகை ரூபாய் 3.5 இலட்சம்.

4.4. இச்சட்டத்தின்கீழ் வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களிலுள்ள 8 தொழிலாளர் உதவி ஆணையர்கள் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். தொழிலாளர் இணை ஆணையர்கள், சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகியோர்கள் முறையே சென்னை, கோவை மற்றும் மதுரை மண்டலங்களுக்கு இச்சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.





தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

4.5. தொழிலாளர்கள் பணியிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் இருக்கும் காலத்தில், வேலையளிப்பவர் இச்சட்டப்படி பிழைப்பூதியம் வழங்க வேண்டி இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர், முதல் 90 நாட்களுக்கு இறுதியில் பெறப்பட்ட ஊதியத்தில் 50 சதவிகிதமும், வேலை நீக்கக் காலம் நீட்டிக்கப்பட்டிருந்தால், 90 நாட்களுக்கு மேல் 180 நாட்கள் வரை 75 சதவிகிதமும், 180 நாட்களுக்கு மேல் முழு ஊதியமும் பெறத் தகுதியுடையவராகிறார்.

4.6. இச்சட்டத்தின்கீழ் 8 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்திலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் அதிகாரமுடையவர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

போனஸ் வழங்குதல் சட்டம், 1965

4.7. இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்குப் பொருந்தும். தொழிலாளர்கள் எண்ணிக்கை 10-க்குக் குறையும் நேர்வுகளிலும், இந்நிறுவனங்கள் போனஸ் வழங்க வேண்டும். நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச போனஸ் (8.33%) வழங்க வேண்டும்.

4.8. பணியாளர் என்பவர் எந்தவொரு நபரோ பயிற்சியாளராக இல்லாமலும் (அல்லது) பணி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேற்பார்வையாளர்கள் மேலாண்மை மற்றும் நிர்வாகப் பிரிவு பணியாளர்கள் மற்றும் அவர்களது சம்பளம் மாதம் ரூ.3500/–க்கு மிகைப்படாமலும் இருக்க வேண்டும். எந்தவொரு பணியாளரும் மாதம் ரூ.3500/–க்கு மிகைப்படாமல் சம்பளம் பெற்றுக்கொண்டு, குறிப்பிட்ட கணக்காண்டில் 30 தினங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்திருப்பின், போனஸ் பெறத் தகுதியுடையவராகிறார். இருப்பினும், ரூ.2,501/– முதல் ரூ.3,500/– வரை மாதச் சம்பளம் பெறும் பணியாளர்களின் சம்பளம் போனஸ் வழங்கலுக்காக, ரூ.2500/– எனக் கணக்கிடப்பட வேண்டும். மேலும், அதிகபட்சமாக சம்பளத்தில் 20% போனஸாகப் பெற இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 3

4.9. தமிழ்நாட்டில் இச்சட்டத்தை அமல்படுத்த தொழிலாளர் இணை ஆணையர்கள், தொழிலாளர் துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், தொழிலாளர் அலுவலர்கள் அவரவர் ஆட்சி எல்லைக்கேற்ப ஆய்வராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

*மகப்பேறு நலச் சட்டம், 1961*

4.10. மகப்பேறு காலங்களில் பெண் தொழிலாளர் பணிகளை முறைப்படுத்துதலுக்கும், மகப்பேறு கால சலுகைகள் வழங்குவதற்கும் ஏதுவாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, குழந்தைப்பேற்றிற்காக 12 வாரங்கள் விடுப்பு, மருத்துவச் சான்றிதழின் பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, கருச்சிதைவிற்காக 6 வார விடுப்பு வழங்குதல் முதலிய சலுகைகள் உள்ளன. மேலும் பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய கவனிப்பை நிர்வாகம் இலவசமாக அளிக்கவில்லை எனில், ரூ.250/– மருத்துவ போனஸாக வழங்க சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின்கீழ், மகளிர் தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் ஆய்வர்கள், தோட்ட நிறுவன ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள் ஆகியோர் ஆய்வர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

**சம ஊதியச் சட்டம், 1976**

4.11. சம ஊதியச் சட்டம், 1976, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்குச் சம ஊதியம் வழங்கவும் மற்றும் வேலைவாய்ப்புத் தொடர்புடைய இனங்களில் பாலியலின் அடிப்படையிலான வேற்றுமையைத் தடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. பெண் தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வகையில் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு, அரசால் இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வேலை இனங்கள் மற்றும் நிறுவனங்களில் பெண்களின் பணி தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகள் வழங்க தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளரைத் தலைவராகவும், தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்களைச் செயலாளராகவும் கொண்டு மாநில அளவில் இச்சட்டத்தின்கீழ் ஆலோசனைக் குழு இயங்கி வருகிறது.

4.12. இச்சட்டத்தின் அமலாக்கம் தொடர்பாக அரசு இத்துறையில் கீழ்க்கண்ட அலுவலர்களை இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக நியமித்துள்ளது:–



2001 செப்டம்பர் 3]

1. தொழிலாளர் ஆணையர்
2. தொழிலாளர் இணை ஆணையர்கள்
3. மண்டல தொழிலாளர் துணை ஆணையர்கள்
4. தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்)
5. தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் உதவிஆணையர்
6. தொழிலாளர் ஆய்வர்கள்
7. தோட்ட நிறுவன ஆய்வர்கள்
8. தொழிலாளர் துணை ஆய்வர்கள்
9. தொழிலாளர் உதவி ஆய்வர்கள்
10. தொழிலாளர் ஆய்வர்கள் (மகளிர்) சென்னை. மதுரை மற்றும் கோவை

4.13. சம வேலைக்கு சம ஊதியம் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களைத் தீர்வு செய்யும் அதிகார முடையவர்களாக தொழிலாளர் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர்களை அரசு அறிவிக்கை செய்துள்ளது. இவ்வாறு தீர்வு செய்யப்படும் தொகைகள் வசூல் செய்யப்படாமலிருக்கும்பட்சத்தில் தொழில் தகராறு சட்டப் பிரிவு 33 (சி)(1)ன்கீழ் நில வருவாய் வசூல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.14. மேலும், இச்சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய முரண்பாடுகளை உரிய அரசு மற்றும் அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட அதிகாரி மட்டுமல்லாமல் இம்முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர் அல்லது அங்கீகாரம் பெற்ற நல நிறுவனம் அல்லது அமைப்பு மூலம் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யலாம் என்பதே இச்சட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

[2001 செப்டம்பர் 3

## அத்தியாயம்–5

### சட்ட ரீதியான வாரியங்களின் செயல்பாடுகள்

### தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், 1994

5.1. கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை அரசு உருவாக்கியுள்ளது, கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அரசு அமைத்துள்ளது. 1–11–1994 முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு, முதற்கட்டமாக சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, அதன் பிறகு இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் 15–6–1997 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

5.2. இத்திட்டத்தின்படி, கட்டுமானத் தொழிலாளர்களின் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக "உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி சீரமைப்பு மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 8 ஏ–ன்படி, தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவிகிதத்தினை இந்நிதிக்குச் செலுத்த வேண்டும். அரசுத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் நீங்கலாக இதர தனி நபர்கள் கட்டடம் கட்டும்போது, அவர்களிடமிருந்து கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவிகிதத்தினை உள்ளாட்சி அமைப்புகள் வசூலித்து அத்தொகையினை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்குச் செலுத்தி வருகின்றன. அரசுத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து அவை மேற்கொள்ளும் கட்டுமானப் பணிக்கான பங்களிப்புத் தொகை வாரியத்திற்கு நேரடியாகப் பெறப்பட்டு வருகின்றன. இந்த வாரியத்திற்கு 31–5–2001 வரை ரூ.32,73,12,507/– பங்களிப்புத் தொகை பெறப்பட்டுள்ளது. இதில் ரூ.7,37,90,360/– தொகையானது தனியார் கட்டடங்களைத் தவிர ஏனைய கட்டுமானப் பணி மேற்கொள்ளும் அரசுத் துறைகளிடமிருந்தும், அரசுத் துறை நிறுவனங்களிடமிருந்தும் தன்னாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்டதாகும்.



2001 செப்டம்பர் 3]

#### வாரியத்தின் நோக்கம்

5.3 இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இயற்கை மரணம் உதவித் தொகைத் திட்டம், ஈமச் சடங்கு உதவித் தொகைத் திட்டம், கல்வி உதவித் தொகைத் திட்டம், திருமண உதவித் தொகைத் திட்டம், மகப்பேறு/கருச்சிதைவு உதவித் தொகைத் திட்டம் ஆகிய நலத் திட்டங்கள் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

5.4. இவ்வாரியத்தில் 31–05–2001 வரை பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

| வ. எ ண். | மாவட்டம் | 01.11.94 முதல் 31.3.97 வரை | 01.4.97 முதல் 31.3.98 வரை | 01.4.98 முதல் 31.3.99 வரை | 01.4.99 முதல் 31.3.00 வரை | 01.4.00 முதல் 31.3.01 வரை | 01.4.01 முதல் 31.5.01 வரை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 10915 | 13450 | 21860 | 19977 | 19450 | 2533 | 88185 |
| 2 | கோவை | 8391 | 2025 | 3500 | 6079 | 8668 | 1539 | 30202 |
| 3 | மதுரை | 6297 | 3272 | 13995 | 12700 | 11283 | 2779 | 50326 |
| 4 | திருச்சி | -- | 4362 | 9551 | 8235 | 9504 | 2513 | 34165 |
| 5 | சேலம் | -- | 8734 | 10707 | 13630 | 16257 | 2243 | 51571 |
| 6 | திருநெல் வேலி | -- | 10025 | 4387 | 15386 | 14917 | 865 | 45580 |
| 7 | கடலூர் | -- | -- | -- | -- | 5998 | 906 | 6904 |
| 8 | வேலூர் | -- | -- | -- | -- | 4686 | 2753 | 7439 |
| 9 | திண்டுக்கல் | -- | -- | -- | -- | 9344 | 1885 | 11229 |
| 10 | காஞ்சிபுரம் | -- | -- | -- | -- | 3962 | 824 | 4786 |
| 11 | திருவாரூர் | -- | -- | -- | -- | 674 | 1245 | 1919 |
| 12 | கும்ப கோணம் | -- | -- | -- | -- | 1019 | 823 | 1842 |
| 13 | விழுப்புரம் | -- | -- | -- | -- | -- | 1140 | 1140 |
| 14 | நாகர் கோவில் | -- | -- | -- | -- | -- | 614 | 614 |
| | மொத்தம் | 25603 | 41868 | 64000 | 76007 | 105762 | 22662 | 335902 |

5.5. இவர்களிடமிருந்து தலா ரூ.25/– வீதம் மொத்தம் ரூ.83,97,550/– பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது. பதிவினை இரண்டாண்டுக்கு ஒருமுறை ரூ.10/– புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். வாரியத்தில் பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் இலவசமாக வழங்கப் படுகின்றன.

[2001 செப்டம்பர் 3

வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

பதிவு செய்து கொண்டுள்ள அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் குழு விபத்துத் திட்டத்தின்கீழ் காப்பீடு செயயப்பட்டுள்ளனர். காப்பீடு செய்வதற்கான ப்ரிமியத் தொகையை வாரியச் செலவில் வாரியமே செலுத்தி வருகிறது.

1. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் இறந்தால் ரூ.1 இலட்சம் காப்பீட்டு தொகையாகவும், விபத்தில் ஊனமுற்றால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.1 இலட்சம் வரை காப்பீட்டு தொகையாகவும் வழங்கப்படுகிறது.

2. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.750/–ம் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.1000/–மும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ரூ.750/– ரூ.1000/–ஆகவும் ரூ.1000/– ரூ.1500/–ஆகவும் உயர்த்த அரசு திருத்த அறிவிக்கை வெளியிட்டது. தகுதியுடைய பயனாளிகளுக்கு உயர்த்தப்பட்ட தொகை வழங்கப்படும்.

3. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் திருமணத்திற்கு ரூ.1000/– திருமண உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையை ரூ.2000/– ஆக உயர்த்தவும், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் திருமணத்திற்கும் இத்தொகை வழங்கவும் அரசு வரைவு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அரசிடமிருந்து உறுதி அறிக்கை வெளியிடப்பட்டதும் தகுதியுடைய பயனாளிகளுக்கு உயர்த்தப்பட்ட தொகை வழங்கப்படும்.

4. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி மகப்பேறு/ கருச்சிதைவுக்கு ரூ.2000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது,

5. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கு ரூ.2000/–ம் இயற்கை மரணத்திற்கு ரூ.5000/–ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. தற்போது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகையை ரூ.10,000/– ஆக உயர்த்த வாரியக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் விவாதப் பொருளாக வைக்கப்பட்டு நலத் திட்டத்தில் உரிய திருத்தம் மேற்கொள்ள அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

5.6. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் மகன்/மகள் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழில்நுட்பக் கல்வி, தொழில்நுட்ப



2001 செப்டம்பர் 3]

பட்ட மேற்படிப்பு ஆகியவற்றிற்கும் கீழ்க்காணுமாறு உதவித் தொகைகள் வழங்க அரசு உறுதி அறிவிக்கை வெளியிட்டுள்ளது. தகுதியுடைய பயனாளிகளுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும்.

| வ. எண் | படிப்பு பற்றிய விவரம் | கல்வி உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | வெளியிலிருந்து படிப்பவர்கள் | விடுதியில் தங்கிப் படிப்பவர்கள் |
| 1 | இளங்கலை (கலை விஞ்ஞானம் மற்றும் சட்டம்) | 1500 | 1750 |
| 2 | பொறியியல், மருத்துவம், சட்டம், கால்நடை பராமரிப்பு, விஞ்ஞானம் மற்றும் அவை தொடர்புடைய படிப்புகள் | 2000 | 4000 |
| 3 | தொழில் மற்றும் தொழில்நுட்ப படிப்புகள் | 1000 | 1200 |
| 4 | பட்ட மேற்படிப்புகள் | 2000 | 3000 |
| 5 | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | 4000 | 6000 |

5.7. *01–01–2000* முதல் *31–5–2001* முடிய கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வாரியத்தால் அளிக்கப்பட்ட நலத் திட்டங்கள்

| வ எ.ண் | நலத்திட்டம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மரண விபத்து | 111 பேர்கள் | 1,01,50,000 |
| 2 | காய விபத்து | 59 பேர்கள் | 11,54,250 |
| 3 | ஈமச்சடங்கு உதவித் தொகை | 903 பேர்கள் | 15,87,000 |
| 4 | கல்வி உதவித் தொகை<br>10—ம் வகுப்பு<br>12—ம் வகுப்பு | <br>1316 பேர்கள்<br>722 பேர்கள் | <br>9,94,500<br>7,38,000 |
| 5 | திருமண உதவித் தொகை | 1493 பேர்கள் | 15,89,000 |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | 27 பேர்கள் | 51,000 |
| 7 | இயற்கை மரணம் | 696 பேர்கள் | 34,80,000 |

[2001 செப்டம்பர் 3

## தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம், 1999

5.8. 5–3–1997 அன்று அரசு அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நிலைமைகளை ஆராய்ந்து, பரிந்துரை அளிக்கக் குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தது. இதன்படி, 27–8–1997 அன்று மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டன. விவசாயத் தொழிலாளர்களின் நிலைமைகளை ஆராய ஒரு குழுவும், மற்ற இரண்டு குழுக்களில் ஒன்று தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் வரும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் நிலைமைகளை ஆராயவும், மற்றொன்று தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழே வராத அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நிலைமைகளை ஆராயவும் அமைக்கப்பட்டன.

5.9. மேற்படி கடைசி இரண்டு குழுக்களின் அறிக்கையின் அடிப்படையில் அரசு 21–8–1998 அன்று 1982 ஆம் ஆண்டின் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பட்டியலில் ஏற்கெனவே உள்ள 12 தொழில்களுடன் மேலும் 43 தொழில்களைச் சேர்த்தது. அதன் பின்னர் மிதிவண்டி பழுதுபார்த்தல் மற்றும் வீட்டு வேலைகள் ஆகிய தொழில்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

5.10. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பட்டியலில் இடம்பெற்றுள்ள தொழில்கள் வரிசை எண் 6, 10 மற்றும் 11 தவிர்த்து மற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் நலனுக்காக ஆகும் செலவை ஈடுகட்டவும், நிதிநிலைமையை மேம்படுத்தவும் மற்றும் சுய தொழிலில் ஈடுபட்டுள்ள அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு பயன்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு, 1982 ஆம் வருடத்திய தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் "உடலுழைப்புத் தொழிலாளர்" சொற்பொருள் விளக்கத்தினை விரிவாக்கியும் மற்றும் வேலை அளிப்பவரிடமிருந்து பங்குத் தொகை பெறவும் புதிதாக பிரிவு 8பி சேர்த்தது.

5.11. 25–3–1998 அன்று அரசானது அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு ஒரு முதன்மைத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படும் என அறிவித்தது.



2001 செப்டம்பர் 3]

அதன்படி, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் 17–3–1999 தேதியன்று அமைத்து ஆணையிடப்பட்டது. அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 28–04–1999 அன்று அரசால் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியை உருவாக்கவும், இந்நிதிக்கு நிதி ஆதாரம் சேர்க்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

5.12. இத்திட்டத்தின் நோக்கம், (1) பணியாளர் தொகுதி விபத்து நிவாரணம், (2) மகப்பேறு நலத் திட்டம், (3) ஓய்வுக் காலப் பயன்கள் போன்றவை அளிப்பதாகும்.

5.13. இந்த நலத் திட்டங்களை, தொழிலாளர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்த பன்னிரெண்டு மாதங்களுக்குப் பின்னர் பலனைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். இவ்வாரியம், 5–11–1999 முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவ்வாரியத்தால் அமைப்பு ரீதியற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களைப் பதிவு செய்யும்பொருட்டு. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மண்டல அளவிலான வாரியப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பதிவு செய்யும் தொழிலாளர்களுக்கு வாரியத்தின் சார்பாக வழங்கும் பொருட்டு, அடையாள அட்டைகள், பாஸ் புத்தகங்கள், இரசீது புத்தகங்கள் போன்றவைகள் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளன.

5.14. இத்திட்டத்தின்படி, தொழிலாளர்கள் மாதா மாதம் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய ரு.20/– (ரூபாய் இருபது மட்டும்) பங்களிப்புத் தொகையைப் பெறும்பொருட்டு மாநில அளவிலான வங்கிகளின் குழுமத்துடன் (எஸ்.எல்.பி.சி) பேசி அமலாக்கப்படும் வங்கிகளுடன் இணக்கக் குறிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, 15 வங்கிகள் அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

5.15. இவ்வாரியத்தில் பதிவுப் பணி 26–1–2000 முதல் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. பதிவு செய்த தொழிலாளர்களுக்கு இவ்வாரியத்தின் சார்பாக அடையாள அட்டை, பாஸ் புத்தகம் போன்றவைகள் வழங்கப்பட்டுள்ளன. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய இத்திட்டம் விரைந்து பெரும் அளவிலான தொழிலாளர்களுக்குச் சென்றடைய

வேண்டும் என்ற நோக்குடன் பதிவுப்பணி ஒவ்வொரு மாவட்ட அளவிற்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இப்பணியைச் சிறப்புப் பணியாக மேற்கொள்ள தொழிலாளர் துறைப் பணியாளர்கள் உத்தரவிடப்பட்டுள்ளார்கள். இவ்வாரியத்திற்கு அரசு அளித்த நாற்பது இலட்ச ரூபாய் மானியத் தொகைக்கு மேலாக, பதிவுக் கட்டணம் மற்றும் ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையளிப்போர்களிடமிருந்து பங்களிப்புத் தொகை மூலம் 31–5–2001 வரையில் ரூ.7,89,34,377/- இவ்வாரியத்தால் வசூல் செய்யப்பட்டுள்ளது. 31–5–2001 வரையில் இவ்வாரியத்தில் 5,77,676 அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் இதுவரை பதிவு செய்துகொண்டுள்ளனர்.

5.16. தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய மாதச் சந்தா தொகை அதிகம் என்றும், அதைக் கட்டுவதற்கு தொழிலாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள் என்றும் உடலுழைப்புத் தொழிலாளர்களிடமிருந்தும், தொழிற்சங்கங்களிடமிருந்தும் முறையீடுகள் வந்தன. அவ்வாறே தொழிலாளர்கள் சந்தா தொகையை வங்கிகளில் செலுத்துவதில் சிரமங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், கட்டுமானத் தொழிலாளர்கள் தற்போது பெற்று வரும் பயன்களை உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கும் வழங்கக் கோரி அரசுக்கு முறையீடுகள் செய்யப்பட்டன.

5.17. அரசு எதிர்பார்க்கும் வகையில், அடிமட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு நலத் திட்ட விவரங்கள் சென்றடையாத நிலையிலும், திட்டத்திற்கு ஆக்கமும், விரிவான விளம்பரமும் செய்ய ஒரு கூட்டம் 16–12–2000 அன்று நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் தற்போது கட்டுமானத் தொழிலாளர்கள் பெற்று வரும் அனைத்து பயன்கள் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி கீழே குறிப்பிட்டுள்ள பயன்கள் உடலுழைப்புத் தொழிலாளர்களும் பெறத் தகுதியுடையவராகிறார்கள்.

1. குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம்
2. ஈமச் சடங்கு உதவித் தொகைத் திட்டம்
3. இயற்கை மரணம் உதவித் தொகை
4. மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை
5. தொழிலாளி அல்லது மகன் அல்லது மகள் திருமண உதவித் தொகை
6. பதிவு பெற்ற பெண் தொழிலாளிக்கு மகப்பேறு/கருக்கலைப்பு உதவித் திட்டம்



5.18. பழைய திட்டத்தின்படி பயன்கள் அடைய 12 மாதங்கள் காத்திருக்க வேண்டும் என்ற நிலையை நீக்கி பதிவு பெற்றது முதல் திட்டத்தின்கீழ் உள்ள பயன்களைப் பெறலாம் என உருவாக்கப்பட்டது. அதேபோல் உடலுழைப்புத் தொழிலாளர்கள் கண்டிப்பாக மாதச் சந்தா தொகை ரூ. 20/– செலுத்த வேண்டும் என்ற முறை மாற்றப்பட்டது. தற்போதைய திட்டத்தின்படி தொழிலாளர், ஒரு முறை ரூ. 100/– செலுத்தினால் போதுமானது. இதில் பதிவுக் கட்டணமும் அடங்கும். அரசின் நிர்வாகச் செயல்பாடுகளை மேம்படுத்த கணினி மயமாக்குவதால் முதற்கட்டமாக 8 மண்டலங்களில் கணினிகள் நிறுவப்பட்டு கணினிமயமாக்கும் பணி சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள்/தையல் தொழிலாளர்கள்/ முடி திருத்துவோர்/சலவைத் தொழிலாளர்கள்/பனை மரத் தொழிலாளர்கள்/கை வினைஞர்கள்/காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்போர் மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள்/ஓவியர்கள் நல வாரியம்**

5.19. 25–3–1998 அன்று அரசு அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலன் காக்கும்பொருட்டு ஒரு முதன்மை வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தது. அதன்படி, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் 17–3–1999 தேதியன்று அமைத்து ஆணையிடப்பட்டது. அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 28–4–1999 அன்று அரசால் வகுக்கப்பட்டது. இத்திட்டம் உடலுழைப்புத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

5.20. 20–7–2000 அன்று கீழ்க்கண்ட நான்கு நல வாரியங்களை அமைத்து அரசு உத்தரவு பிறப்பித்தது.

1. தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்
2. தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்
3. தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்
4. தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்

5.21. மேலும், 18–10–2000 அன்று கீழ்க்கண்ட இரு நல வாரியங்களை அமைத்து அரசு உத்தரவிட்டது.

1. தமிழ்நாடு பனை மரத் தொழிலாளர்கள் நல வாரியம்

2. தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்

மேற்குறிப்பிட்ட இந்த ஆறு வாரியங்கள் 16-12-2000 அன்று முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டன.

5.22. புதியதாகத் தொடங்கப்பட்ட மேற்படி வாரியங்கள் தொடர்பாக, அரசு அறிவித்த நலன்களை உள்ளடக்கிய நலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்கு 3-1-2001 அன்று அனுப்பப்பட்டது. ஆலோசனைக் குழுவின் முடிவுகளுடன் வரைவு நலத் திட்டங்கள் தமிழ்நாடு பதிவு இதழில் அறிவிக்கை செய்யும்பொருட்டு அரசுக்கு 3-1-2001 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டங்கள் தமிழ்நாடு அரசின் 28-2-2001 தேசிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டன.

5.23. 14-3-2001 அன்று அரசு மேலும் கீழ்க்கண்ட மூன்று நல வாரியங்களை அமைத்து உத்தரவிட்டது.

1. தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்

2. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம்

3. தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்

5.24. இந்நல வாரியங்களில் தொழிலாளர்களைப் பதிவு செய்யும் பணி தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

5.25. நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு குழு விபத்து காப்பீட்டுத் திட்டம், ஈமச் சடங்கு உதவித் தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை, பிள்ளைகளின் கல்வி உதவித் தொகை, பதிவு பெற்ற தொழிலாளர் மற்றும் அவர்களது பிள்ளைகள் திருமண உதவித் தொகை மற்றும் பதிவு பெற்ற பெண் தொழிலாளியின் மகப்பேறு அல்லது கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவுக்கான உதவித் தொகை ஆகிய சலுகைகள் நல வாரியத் திட்டத்தில் உள்ளன. மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்கான உதவித் தொகை கோரி பதிவு பெற்ற தொழிலாளர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.



இம்மனுக்கள் இவ்வலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு, பின்னர் விசாரணைக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர் ஆய்வர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

5.26. தொழிலாளர் ஆய்வர்களின் பரிந்துரையின் அடிப்படையில் தகுதியுள்ள தொழிலாளர்களுக்கும் மற்றும் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கும் நிதி உதவித் தொகை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள்

5.27. தொழிலாளர் நலம் என்றாலே அதனை நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களும் அவர்தம் குடும்பங்களும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

5.28. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்படி, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மாண்புமிகு மாநில தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டும் இயங்கி வருகிறது.

5.29. இவ்வாரியம் தமிழகம் முழுவதிலும் 68 இடங்களில் தொழிலாளர் நல மையங்கள் அமைத்துள்ளது. இதில் 45 இடங்களில் குழந்தைகள் காப்பகம் மற்றும் தையல் பயிற்சி நிலையம் இரண்டும் இணைந்து செயல்படுகின்றன. 23 இடங்களில் தையல் பயிற்சி நிலையங்கள் மட்டும் செயல்படுகின்றன. தையல் பயிற்சி பிரிவுகளில் தொழிலாளர்களின் மனைவி மற்றும் அவர்களைச் சார்ந்த திருமணமாகாத மகள் மற்றும் சகோதரிகளுக்கு தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலங்களில் உதவித் தொகையாக மாதம் ₹ 80/- வழங்கப்படுகிறது. இப்பயிற்சி காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் கல்வித் தகுதியுள்ள பயிற்சியாளர்கள் அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்விற்கான தேர்வுக் கட்டணம் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் கீழ்நிலை/மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு

[2001 செப்டம்பர் 3

தலா ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் 82 மாணவிகளுக்கு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஆன செலவு ரூ.2,04,918/-. தையல் பயிற்சிப் பிரிவில் பயனடைந்த மாணவிகள் 4,864. செலவிடப்பட்ட தொகை ரூ.17,93,152/-. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. இவை தவிர, அனைத்து குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதம் இருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடைகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் பயனடைந்த குழந்தைகள் 3122. செலவிடப்பட்ட தொகை ரூ.15,48,018/- மேலும், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10-வது, 12-வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையே ரூ.1000/- மற்றும் ரூ.500/- பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

5.30. தொழிலாளர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும்பொருட்டு, தமிழகத்தில் 7 இடங்களில் இலவசப் படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

5.31. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது. மேற்கண்ட இடங்களில் தங்கிப் பயன்பெற்றவர்கள் 9994.

5.32. சென்னையில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தொழிலாளர் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை ஆகியவற்றிற்காக வருபவர்கள் தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வு இல்லம், டி.எம்.எஸ். வளாகம், சென்னையில் கட்டப்பட்டுள்ளது. மேலும், அதிக அளவில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தங்க வசதியாக ஜீவா இல்லத்திற்கு அருகில் இணைப்புக் கட்டடமும் தற்போது கட்டப்பட்டுள்ளது. ஓய்வு இல்லத்தில் தங்கி, பயன்பெற்றோர் 12,242 பேர்கள் ஆகும்.

5.33. காசநோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி, சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம் (26 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிப்பள்ளம் (30 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (26 படுக்கைகள்) மற்றும் கீழ்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப் பிரிவைக் கட்டியுள்ளது.



2001 செப்டம்பர் 3]

534. இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றவர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

*01—01—2000 முதல் 31—5—2001 முடிய*

| | |
|---|---|
| 1. மொத்தத் தொழிலாளர் நல மையங்கள் | 68 |
| (அ) அவைகளில் குழந்தைகள் காப்பகம் மற்றும் தையல் பயிற்சி இணைந்தவை | 45 |
| (ஆ) தையல் பயிற்சி வகுப்பு உள்ளவை மட்டும் | 23 |
| (இ) தையல் பயிற்சி பெறும் மொத்தப் பயிற்சியாளர்கள் | 4864 |
| (ஈ) பயன் பெற்ற மொத்தக் குழந்தைகள் | 3122 |
| 2. மொத்த படிப்பகங்களின் எண்ணிக்கை | 7 |

3. தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பிற்காக உதவித் தொகை வழங்கிய விவரம் (01—1—2000 முதல் 31—5—2001 முடிய)

| | பயன் பெற்றவர்கள் | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1. பொறியியல் பட்டப் படிப்பு | 116 | 1,39,200 |
| 2. பொறியியல் பட்டயப் படிப்பு | 149 | 1,07,280 |
| 3. மருத்துவப் படிப்பு | 18 | 21,000 |
| 4. மருத்துவப் பட்டயப் படிப்பு | 8 | 5,760 |
| 5. சட்டப் படிப்பு | 7 | 8,400 |
| 6. வேளாண்மைப் பட்டப்படிப்பு | 2 | 2,400 |
| 7. தொழிற் பயிற்சிக் கல்வி | 58 | 29,000 |
| 8. மேல்நிலைக் கல்வி | 120 | 72,000 |
| 9. கல்வி ஊக்கத் தொகை | 102 | 85,000 |

4. ஏனைய நலத் திட்டங்கள் மூலம் பயன் பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையைத் திரும்ப அளித்தல் | 394 | 65,885 |

[2001 செப்டம்பர் 3

| | | |
|---|---|---|
| (ஆ) தொழிலாளர் பிள்ளைகளுக்கு தட்டச்சு/ சுருக்கெழுத்துப் படிக்கக்கட்டணங்கள் ஈடுசெய்தல் | 63 | 9,205 |
| (இ) பாட நூல் உதவித் தொகை | 1232 | 61,795 |
| (ஈ) ஈமச் சடங்கு உதவித் தொகை | 254 | 1,27,000 |
| (உ) உடல் ஊனமுற்றவர்களுக்கு செயற்கை உறுப்புகள் வழங்குதல் | 1 | 1,240 |
| (ஊ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல் | 6 | 6,788 |
| (எ) ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல் | 3 | 9,150 |
| (ஏ) குழந்தைகள் காப்பகம் | 3122 | 15,48,018 |
| (ஐ) தையல் பயிற்சி வகுப்பு | 4864 | 17,93,152 |
| (ஒ) தையல் இயந்திரம் பரிசு | 82 | 2,04,918 |
| மொத்தம் | 10601 | 42,97,191 |

5.35. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் "உழைப்பவர் உலகம்"என்ற மாதாந்திர இதழை வெளியிட்டு வருகிறது. இதனை தற்போது 4,483 சந்தாதாரர்கள் வாங்கிப் பயன் பெற்று வருகின்றனர்.

## அத்தியாயம் - 6

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பின்னர் 1978 ஆம் ஆண்டில் இந்த நிலையம் முதன்மை நிலையில் உயர்த்தப்பட்டது. அரசுத் துறையாக செயல்பட்டு வந்த இந்நிறுவனம் பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, 8.10.1987 முதல் தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆட்சி மன்றக் குழு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தினை மேற்பார்வையிட்டும், வழிகாட்டியும் வருகிறது. தொழிலாளர் இணை ஆணையர் தரத்தில் நியமிக்கப்பட்டவர் இக்கல்வி



2001 செப்டம்பர் 3]

நிலையத்தின் இயக்குநர்/ஆட்சிக் குழு உறுப்பினர்-செயலர். இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள்:-

1. தொழிற்சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல்
2. நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தைத் தோற்றுவித்தல்
3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்
4. தொழிலாளர் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்
5. தொழிலாளர் மேலாண்மையில் பட்டயப் படிப்புகள் நடத்துவதன் வாயிலாக எதிர்கால தொழில் நிர்வாகத்திற்குத் தகுதியானவர்களை உருவாக்குதல்- முதலியன ஆகும்.

6.2. இக்கல்வி நிலையம், தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சிகள், கருத்தரங்குகளை தொழிலாளர் துறை அலுவலர்களுக்கும், பொதுத் துறை மற்றும் தனியார் துறை தொழிலகங்களில் பணியாற்றுபவர்களுக்கும் தொடர்ந்து நடத்தி வருகிறது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதி நேர தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ.) ஒன்றினையும், தொழிலாளர் மேலாண்மை இளங்கலைப் பட்டப் படிப்பு (டி.எல்.எம்.), தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு (எம்.எல்.எம்.) ஆகியவற்றை நடத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகம், இக்கல்வி நிலையம் நடத்தும் தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு, தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு ஆகிய இரண்டிற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

6.3. இக்கல்வி நிலையம் 2000 ஆம் ஆண்டில் இதுவரை 30 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் நடத்தியுள்ளது. இதன் மூலம் மொத்தம் 1516 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்று பயனடைந்துள்ளனர். இக்கல்வி நிலையத்தால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் நுழைவுத் தேர்வின் வாயிலாக தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பில் 50 மாணவர்களும், தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பில் 30 மாணவர்களும், தொழிலாளர் நிர்வாக முதுகலை பட்டயப் படிப்பில் 50 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

[2001 செப்டம்பர் 3

6.4. கடந்த 2000 ஆம் ஆண்டில் இக்கல்வி நிலையத்திலிருந்து பட்ட/ பட்டயப் படிப்பு முடித்து வெளி வந்துள்ளவர்களின் விவரம் பின்வருமாறு—

| பயிற்சி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு | 107 |
| 2. தொழிலாளர் மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு | 55 |
| 3. தொழிலாளர் நிர்வாகம் முதுகலை பட்டயப் படிப்பு | 21 |
| மொத்தம் | 183 |

## அத்தியாயம் - 7

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிர்வாகம்

7.1. தமிழக அரசின் தலையாய கோட்பாடு, தொழிலகங்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாத்தல், தொழிலாளர்களுக்கு முறையான நல வசதிகளை செய்து கொடுத்தல் போன்றவை ஆகும். இந்தக் கொள்கையினை தொழிற்சாலைகளில் செயல்படுத்துவதில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்துறை தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துகிறது.

7.2. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தி, நிர்வகிக்கும் இத்துறைக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைவர் ஆவார். அவருக்கு உதவியாக ஒரு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், 29 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், 51 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 45 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள், ஒரு தலைமை மருத்துவ அலுவலர், 8 உதவி மருத்துவ அலுவலர்கள், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் ஒரு நிர்வாக அலுவலர் ஆகியோர் உள்ளனர்.



2001 செப்டம்பர் 3]

7.3. இத்துறை தமிழக அரசின் கோட்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கீழ்க்கண்ட இரு பிரிவுகளாக செயல்படுகிறது.

1. முறைப்படுத்தும் செயல்பாடுகள்
2. உடல் நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்

### முறைப்படுத்தும் செயல்பாடுகள்

#### ஆய்வுகள்

7.4. தொழில்நுட்பம் நிறைந்தத் தொழிற்சாலைகள் சட்டம், தொழிலகங்களில் தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகாப்பு, நல வசதிகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் முழுமையாகச் சென்றடையும்வண்ணம், தற்போதுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையைக் கொண்டு, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. பொதுவாக தொழிற்சாலைகள் சட்டப் பிரிவிற்கு உட்பட்ட அனைத்துத் தொழிற்சாலைகளும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், அபாய செயல்முறைகள் இல்லாத சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்த புகார்கள் ஏதும் இல்லாத நிலையில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. எனினும் உடல் நலம் மற்றும் பாதுகாப்பு இரண்டையும் உறுதி செய்ய வேண்டி அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவன சான்று பெற்றிருந்தாலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டும் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைக் கண்டறியவும், இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகள் குறித்து, சீரான கண்காணிப்பு மேற்கொள்ள சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன.

7.5 சிறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்து கண்காணிப்பு மேற்கொள்ள மாநில அளவில் ஒரு

[2001 செப்டம்பர் 3

குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் தலைவராகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலராகவும், தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். சிறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்து இக்குழு மன நிறைவினைத் தெரிவித்துள்ளது.

சிறப்புக் குழு ஆய்வுகள்

7.6. பட்டாசுத் தொழிற்சாலைகளில் தீபாவளிப் பண்டிகையை ஒட்டிய காலகட்டத்தில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக வெடி விபத்துகள் நிகழ்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, இதுபோன்ற காலங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளின் பாதுகாப்பான பணி நிலையையும், வேலை முறையையும் கண்காணித்து சீர்படுத்துவதற்காக சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டில் 104 சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி சிறப்பு ஆய்வுகளால் சிவகாசியில் நடப்பு ஆண்டு, தீபாவளிப் பண்டிகை காலத்தில் பெரும் தீ மற்றும் வெடி விபத்துக்கள் ஏற்படவில்லை.

7.7. மேலும், குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் "சிறப்புக் குழுக்கள்" அமைக்கப்பட்டு, ஊறு விளைவிக்கும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுவதை முழுமையாக தடுக்கும்பொருட்டு, சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கோவில்பட்டியில், குழந்தைத் தொழிலாளர் பணி முறை ஒழிப்பு தொடர்பாக, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 85(1)ன்கீழ் 'D' பிரிவு தொழிற்சாலைகளைப் பதிவு செய்ய 3.10.2000 முதல் 15.11.2000 முடிய இரு சிறப்புக் குழுக்கள் செயல்பட்டன. இந்தச் சிறப்புக் குழுக்கள் 997 தொழிற்சாலைகளை, தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 85(1)ன்கீழ் பதிவு செய்து, அத்தொழிற்சாலைகளில் பணிபுரிந்த 10 குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டனர். இதேபோல சிவகாசியிலும் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 225 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டன.



2001 செப்டம்பர் 3]

புகார் விசாரணை

7.8. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்கு தீர்வு காண உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 644 புகார்களும் விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் வைக்கப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்கள்

7.9. 1988 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் "பெரும் விபத்து மற்றும் பேரபாய தடுப்புக் குழு" ஒன்று கூடுதல் தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளரின் தலைமையில் உருவாக்கப்பட்டது.

7.10. அபாயம் விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பேரபாயத்தை தடுக்கக்கூடிய செயல்முறைகளை உருவாக்குவதற்கு இந்தக் குழு வழிகாட்டுவதுடன் அவைகள் நிறைவேற்றப்படுவதற்கான தொடர் நடவடிக்கைகளும் இக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

7.11. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தில் ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்களாக 29 தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்களில் பயன் படுத்தப்படும் மூலப்பொருட்கள், உற்பத்திப் பொருட்கள், துணை உற்பத்திப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கழிவுப் பொருட்கள் மற்றும் நீர் வெளியேற்றங்கள் ஆகியவைகளால் தொழிலாளர் மற்றும் பொது மக்களின் உடல் நலத்திற்கும் சுற்றுச்சூழல் தூய்மைக்கும் பெரும் அளவில் பாதிப்பு ஏற்படுத்தும் அபாய நிலை உள்ளது. இத்தகைய தொழிற்சாலைகள் 'பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்' என பகுக்கப்பட்டு, இவற்றில் செயல்முறைப் பாதுகாப்பு குறித்து ஆய்வகத் துறை தனிக் கவனம் செலுத்துகிறது. நமது மாநிலத்தில் இதுபோன்ற 100 தொழிற்சாலைகள் இனம் காணப்பட்டுள்ளன.

7.12. தமிழகத்தில் "பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்" நிறைந்துள்ள பகுதிகளாக 1) மணலி, 2) நெய்வேலி, 3)

[2001 செப்டம்பர் 3

கடலூர், 4) ராணிப்பேட்டை, 5) மேட்டூர், 6) தூத்துக்குடி போன்ற 6 மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பெரும் விபத்துக்களினால் ஏற்படக்கூடிய அழிவுகளைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் பேரபாயத் தடுப்பு மற்றும் நிர்வாகத் திட்டங்கள் தயாரிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டு வரை, பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து 99 உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலை திட்டங்கள் பெறப்பட்டு, அவைகளில் 80 திட்டங்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான அவசர கால ஆயத்த நிலைக் குழுவிற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசர கால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 23–4–1998 தேதியிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசாணை எண் எம்.எஸ்.109–ல் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் இரசாயன தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய பெரும் விபத்துக்கள் மற்றும் அபாய நிலை அழிவுகளைத் தடுத்து, கட்டுப்படுத்துவதற்கான வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள் மாவட்ட அளவிலான நெருக்கடி நிலைக் குழுக்களில் உறுப்பினர் செயலாளர்களாகவும், மாநில அளவிலான நெருக்கடி நிலைக் குழுவிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலாளராகவும் செயல்படுகின்றனர்.

7.13. அபாய நிலை அவசரக் காலகட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் குறித்து ஆவன செய்வதற்கு, அவ்வப்போது தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டு, ஆயத்த நிலைத் திட்டங்கள் சீர்படுத்தப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டில், இதுபோன்ற 104 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த, மேம்பட்ட கண்காணிப்பு கருதி ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளில் இருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

7.14. தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41–அ–வில் குறிப்பிட்டுள்ள மனை மதிப்பீட்டுக் குழு "பெரும் விபத்து மற்றும் பேரபாயம்"



2001 செப்டம்பர் 3]

விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. மனை மதிப்பீட்டுக் குழுவில் பல்வேறு அரசுத் துறை அலுவலர்களும், வல்லுனர்களும், சுற்றுச்சூழல், வானிலை மற்றும் தொழிலியல் உடல்நிலைப் பிரிவுகளின் விஞ்ஞானிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த ஒப்புதல்களில் அரசு விதிக்கும் நிபந்தனைகளைக் கடைபிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு தொடக்க நிலையிலிருந்து ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது. 2000 ஆம் ஆண்டில் பேரபாயம் விளைவிக்கக்கூடிய செயலில் ஈடுபடும் 6 தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் மனை மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டன.

## குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கம்

7.15. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் 73 தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் 50 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பது இத்துறையின் மூலம்தான் செயலாக்கப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தைத் தீவிரமாக் செயல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. ஆய்வின்போது காணப்படும் சட்ட முரண்பாடுகளுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரப் படுகின்றன.

7.16. 2000 ஆம் ஆண்டில் 69 நீதிமன்ற வ்ழக்குகளும், 56 கோரிக்கை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இவைகளில் 21 கோரிக்கை மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, 232 தொழிலாளர்களுக்கு ரூ.87,039/– பெற்று வழங்கப்பட்டது.

## குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்

7.17. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பல்வேறு சட்ட விதிமுறைகளுள் ஒன்றான பிரிவு 67–ன்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணி முறையை நீக்குதல் தொடர்பாக இத்துறை மிகவும் சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி சட்ட விதிகளை கடைப்பிடிக்கத் தவறிய தொழிற்சாலை நிர்வாகங்கள்மீது

தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளுக்கு
குழந்தைத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம்
பொருந்தாது என்பதாலும் தொழிற்சாலை சட்டப் பிரிவு 92ல்
விதிக்கப்பட்ட தண்டனையைவிட கடுமையானதாகக் கருதப்படும்
குழந்தைத் தொழிலாளர் சட்டம் பிரிவு 14–ன்கீழ் தண்டனை விதிக்கும்
வகையில் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இவ்வாறாக, 2000 ஆம் ஆண்டு 101 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
ரூ.50,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக சட்ட விதிகளை
சீரிய முறையில் செயல்படுத்துவதால் பதிவு பெற்ற பட்டாசுத்
தொழிற்சாலைகளிலும் மற்றும் 'சி' வகுப்பு எனப்படும் தீப்பெட்டித்
தொழிற்சாலைகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கு
அமர்த்தப்படுவதில்லை.

7.18. குழந்தைத் தொழிலாளர் பணி முறை நீக்குதல் மற்றும் மறுவாழ்வு
குறித்து இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த சிறப்பு மிகுந்த தீர்வாணையில்
சில கட்டளைகளை வழங்கியுள்ளது. இந்தக் கட்டளைகளின்
அடிப்படையில் ஊறுவிளைவிக்கும் செயல்முறைகள் உள்ள தொழில்களில்
குழந்தைத் தொழிலாளர்கள் பணி முறையை நீக்க, கூர்ந்த
நடவடிக்கைகளை தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை எடுத்து வருகிறது.
இதன்படி. இதுவரை குழந்தைத் தொழிலாளர்களை
பணிக்கமர்த்தியதற்காக 6430 சட்ட அறிவிப்புகள் வழங்கப்பட்டு அந்த
நிர்வாகங்கள் பணிக்கமர்த்திய ஒவ்வொரு குழந்தைத் தொழிலாளிக்கும்
ரூ.20,000/– இழப்பீட்டுத் தொகையாக வழங்கக் கோரப்பட்டது. மேலும்,
குழந்தைத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்ட
விதிகளை மீறியதற்காக 6430 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல்
செய்யப்பட்டுள்ளன. இழப்பீட்டுத் தொகையாக இதுவரை ரூ.1,65,000
குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கமர்த்திய நிர்வாகங்களிடமிருந்து
வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், இன்னும் இந்த இழப்பீட்டுத் தொகை
செலுத்தாதவர்களிடமிருந்து அத்தொகையை வசூலிக்க
சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன.

7.19. இந்திய உச்ச நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி
தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களில் தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு
செய்யப்பட்ட பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளின்
தொழிலாளர்களுக்கு பிரத்தியேகமாக ஒரு நல நிதிக் குழு
அமைக்கப்பட்டுள்ளது. அதில் 6 மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட
ஆட்சியாளர் தலைவராகவும், விருதுநகர் மாவட்டத்திற்கு அந்த மாவட்ட





நீதிபதி தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அக்குழுவின்
உறுப்பினர் செயலர்களாக சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் துணைத்
தலைமை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நல நிதிக்
குழுவின் முக்கிய செயல்திட்டம், பட்டாசு மற்றும் தீப்பெட்டி
தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பொழுதுபோக்கு,
மருத்துவ மற்றும் நல வசதிகள் அமைத்துத் தருவதே ஆகும். இத்திட்டம்
அந்தத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் குடும்பத்தினருக்கும்
பயன்படும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. விருதுநகரில் உள்ள இந்த
நல நிதிக் குழு குழந்தைகளுக்கு போதிய கல்வி அளிப்பதே எல்லா
வகையிலும் சிறந்த நிவாரணம் எனத் தீர்மானித்து விருதுநகரில் ரூ.28,40,600/
– செலவில் இலவச உறையுள் பள்ளி அமைப்பதென முடிவெடுத்தது.
இந்த நல நிதிக் குழு எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த
நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா, அதன்படி அந்தப் பயன்கள் பதிவு
பெற்ற பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும்
தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு சென்றடைகிறதா
என்பனவற்றைக் கவனத்துடன் இத்துறை கண்காணித்து வருகிறது.

7.20. மேலும், பொது மக்கள், தொழில் முனைவோர் மற்றும்
பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், குழந்தைத்
தொழிலாளர்கள் அதிகமாக காணப்படும் சிவகாசி, திருப்பூர் மற்றும்
தூத்துக்குடி போன்ற இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
நடத்தப்பட்டுள்ளன.

***ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970***

7.21. தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஒப்பந்தத்
தொழிலாளர்களின் பணி நிலையை ஒழுங்குபடுத்தி, நேரடித்
தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளையும், சலுகைகளையும்
ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் பெற்றுத் தருவதே இந்த அரசின்
கொள்கையாகும். ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை பணிக்கமர்த்தும்
பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை முதன்மை
வேலையளிப்பவராக பதிவு செய்தும், ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம்
வழங்கியும் இச்சட்டம் செயல்படுத்தப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியம்.
வேலை நேரம், சம்பளத்துடன்கூடிய விடுப்பு, விடுமுறை நாள் சம்பளம்
போன்ற நேரடித் தொழிலாளர்கள் பெறுகின்ற அனைத்து சலுகைகளும்,
ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க உறுதி செய்யப்படுகிறது. 2000

ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் முரண்பாடுகள் காணப்பட்ட நிர்வாகத்தினர்மீது 47 நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குதல்) சட்டம், 1981**

7.22. 24 தொடர் மாதங்களில் 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குவதை இச்சட்டம் உறுதி செய்கிறது. இத்துறையின் சீரிய நடவடிக்கையால் 2000 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 15,321 தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

**இதரச் சட்டங்கள்**

7.23. மேற்குறிப்பிட்ட சட்டங்களைத் தவிர சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

## அத்தியாயம்-8

### உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாடு

**உடல்நல மேம்பாடு**

8.1. தமிழகத்தில் இரசாயனத் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. இத்தகைய தொழிற்சாலைகளில் ஒவ்வாமை, நச்சுத் தன்மை, புற்றுநோய்க் காரணிகள் போன்ற பல்வேறு கேடு விளைவிக்கும் தன்மையுள்ள இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் கையாளப்படுகின்றன. இதன் காரணமாக, தொழிலாளர்களின் உடல்நலத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய அபாய சூழ்நிலைகள் அதிகரித்துள்ளன. எனவே, தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் 8 உதவி மருத்துவ அலுவலர்கள் அடங்கிய மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள் தொழிற்சாலைகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு





அதன்வழி தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளையும் மற்றும் அவர்தம் நல மேம்பாடு வழிவகைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

8.2. மேலும், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள அமோனியா, குளோரின், சல்பர்–டை–ஆக்ஸைட், ஹைட்ரஜன் சல்பைடு போன்ற இரசாயனப் பொருட்களால் தொழிலாளர்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. இத்துறையில் இயங்கி வரும் "தொழில் நலவியல் ஆய்வகம்" இப்பாதிப்பினைத் தடுக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. சிவில் சர்ஜன் தகுதியில் உள்ள மருத்துவ அலுவலரின் தலைமையில் இந்த ஆய்வகம் இயங்குகிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல்நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளைக் காற்றுச் சோதனை மற்றும் அளவீட்டின் வழி கண்டறிந்து தேவையான தீர்வு ஆலோசனைகள் இந்த ஆய்வகத்தால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி மற்றும் காற்றோட்டம் போன்ற பௌதீகக் காரணிகளால் உண்டாகக்கூடிய விளைவுகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொள்கிறது.

8.3. மாநில தொழிலாளர் காப்பீட்டுக் கழகம் தற்போது அளித்து வரும் மருத்துவ வசதிகளுடன், தென்னிந்திய வேலையளிப்போர் இணையத்துடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 62–ஒ–வில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட வேண்டிய "தொழிலியல் மருத்துவ மையம்" அமைப்பது குறித்து இத்துறை ஆலோசித்து வருகிறது.

8.4. தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன் அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள இத்துறை சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொழிற்சாலைகளின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் சப்தத்தினை அளவீடு செய்ய, தொழிற்சாலைகள் ஆய்வாளர்களுக்கு ஒலி அளப்பான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில் எங்கெல்லாம் அதிக அளவு இரைச்சலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் இத்துறை ஆய்வாளர்கள் அந்த சப்தத்தினை இந்த அளவீட்டுக் கருவி மூலம் கண்காணித்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க வழிமுறைகள் தெரிவித்து வருகின்றனர்.

[2001 செப்டம்பர் 3

சோதனை மற்றும் பாதுகாப்புப் பணிகள்

8.5. துரித தொழில் வளர்ச்சியின் காரணமாக இரசாயனத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் தொடங்கப்படுகின்றன. இதன் காரணமாக தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, தொழிற்சாலைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதுடன் தொழிலாளர் பாதுகாப்பு, தொழிலாளர் உடல்நலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளிலும் தனது பணிகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

8.6. இதன் அடிப்படையில், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் 1988 ஆம் ஆண்டு முதல், 10 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும், அதிக அழுத்தத்தில் இயங்கும் அழுத்தக் கலன்களின் இயக்கப் பாதுகாப்பை உறுதி செய்வதே சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களின் முதன்நிலை பணியாக வகுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் தொழிலாளர் மற்றும் நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு, பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தும் பொறுப்பும் இக்கோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. விபத்துக்கள் அதிகம் ஏற்படும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் செயல் நிறைவேற்றங்கள் குறித்த பாதுகாப்பு அளவீடுகள் இக்கோட்டங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கோட்டங்களின் 8 உதவி மருத்துவ அலுவலர்கள் அபாய செயல்முறை உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உடல்நலப் பாதுகாப்பு குறித்து கண்காணிப்பு மேற்கொள்கின்றனர்.

8.7. நச்சுத் தன்மை வாய்ந்த பொருட்களைக் கையாளும் தொழிற்சாலைகளில், முறையான காற்றுச் சோதனை மேற்கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பினையும், தொழிலாளர் உடல்நலத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தொழில் நலவியல் ஆய்வகம் வழங்குகிறது.

மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்குதல்

8.8. தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும்பொருட்டு, தமிழக அரசு ஆண்டுதோறும், பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனித நேரங்கள் அடிப்படையில், அவை 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில்



2001 செப்டம்பர் 3]

விருது வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட, பணி புரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதம் குறைத்தல், நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ் எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும், ரூ.2,500/– மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள், 90 நிறுவனங்களுக்கு முதல் பரிசாகவும், ரூ.1,500/– மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கு இரண்டாம் பரிசாகவும் வழங்கப்படுகின்றன.

8.9. இதேபோன்று, விபத்துத் தடுப்பு நடவடிக்கையில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும்வண்ணம், ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை உயர்த்துதல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துக்கள் தரும் தொழிலாளர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

8.10. 16–12–2000 அன்று சென்னையில் நடந்த மாநில பாதுகாப்பு விருது வழங்கும் விழாவில் 1997 ஆம் ஆண்டிற்கான 139 பாதுகாப்பு விருதுகளும், 32 தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகளும் வழங்கப்பட்டன.

தொகுதி தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

8.11. தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

8.12. இத்திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டுமின்றி, 24 மணி நேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். 2000 ஆம் ஆண்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 83,059 தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் இறப்பு ஏற்பட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/– வழங்கப்படும். 2000

ஆம் ஆண்டில் 15 கோரிக்கைகள் பெறப்பட்டு ரூ.7,00,000/– ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

## மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு

8.13. போபாலில் 1984 இல் ஓர் இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட நச்சு வாயுக் கசிவினால் நேரிட்ட பேரழிவிற்குப் பிறகு, தமிழ்நாட்டில் உள்ள அபாயகரமான இரசாயனத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் ஊறு நேரிடாவண்ணம அத்தொழிற்சாலைகளில் போதுமான பாதுகாப்பு வழிமுறைகள் அமைக்கப்பட்டு வருகின்றனவா என்பதனை ஆய்ந்தறிந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்பொருட்டு 1985 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்களைத் தலைவராகக் கொண்டு வல்லுநர் குழு ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டது. இக்குழு பயனுள்ள பல பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவித்தது.

8.14. இக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் மிகவும் ஊறு விளைவிக்கும் இரசாயனம் மற்றும் உயர்ந்த நச்சுத் தன்மை உள்ள கலவைகள் அடங்கிய பொருட்களை உபயோகிக்கும் இரசாயனம் மற்றும் இதர தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்பான உற்பத்தி முறைகளை நடைமுறைப்படுத்தவும், தொழில் வழி நோய்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி, தொழிலாளர்களின் உடல் நலனைப் பாதுகாத்திடவும், தமிழக அரசு கீழ்க்கண்ட இரு குழுக்களை ஏற்படுத்தியது:

1. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு (அரசு ஆணை எண் 153, தொழிலாளர் துறை, நாள் 26–2–88)
2. மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழு (அரசு ஆணை எண் 154, தொழிலாளர் துறை, நாள் 26–2–88)

## மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு

8.15. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் பல்வேறு அரசுத் துறைகளின் பிரதிநிதிகள், அபாயகரமான தொழிற்சாலை நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புக்கான பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இரசாயனத் தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுநர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.





மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இக்குழுவின் தலைவராவார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்/உறுப்பினர் செயலர் இக்குழுவின் உறுப்பினர் செயலராகச் செயல்படுகிறார்.

8.16. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் கொள்கைகளும் குறிக்கோள்களும் கீழ்க்கண்டவாறு உள்ளன:–

அ) மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல் நலன் குறித்த நிலைகளின்மீது கொள்கை அளவிலான முடிவுகளை வகுத்திடல்.

ஆ) உழைப்புப் படை/வல்லுநர் குழுவினரால் திரட்டப்படும் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தி இரசாயனம் மற்றும் அபாயகரமான தொழிற்சாலைகளின் முழுமையான பாதுகாப்பு நிலையை அடைதல்.

இ) இரசாயனம் மற்றும் அபாயகரமான தொழிற்சாலைகளில் பேரழிவுக் கட்டுப்பாடு அமைப்பினை (Disaster Control System) அறிமுகப்படுத்துதல்.

ஈ) அபாயகரமான தொழிற்சாலைகளின் அமைவிடம்/மனைப் பகுதியில் உற்பத்தி முறையால் ஏற்படும் அபாயங்கள் குறித்து ஆராய்ந்து, அது தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகள் அமைத்திடல்.

8.17. அரசு ஆணை எண் 105, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 30–6–2000–ன்படி இக்குழுவானது 1–7–2000 முதல் 30–6–2001 வரை ஓராண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டுள்ளது.

## மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழு:

8.18. மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுவில் அரசின் பல்வேறு துறையைச் சார்ந்த பிரதிநிதிகளும், தொழில் நிறுவனங்களது கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளும், தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுநர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர், இக்குழுவின் தலைவராவார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்/உறுப்பினர் செயலாளர் இக்குழுவின் உறுப்பினர் செயலராகச் செயல்படுகிறார்.

8.19. இக்குழுவானது அரசாணை எண் 104, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 30–6–2000–ன்படி 1–7–2000 முதல

30–6–2001 வரை ஓர் ஆண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டுள்ளது.

8.20. மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுவின் முக்கியமான பணிகள் கீழ்க்காண்பவைகளாகும்:

அ) ஆபத்து விளைவிக்கக்கூடியதும், நச்சுத் தன்மை கொண்டுள்ளதுமான இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய மற்றும் கையாளக்கூடிய தொழிற்சாலைகளில் துரித அளவீடு மேற்கொண்டு நடைமுறையில் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விவரங்கள் சேகரித்தல்.

ஆ) அபாயகரமான தொழிற்சாலைகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அவசியத்தினை ஆராய்ந்து அவற்றின் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

இ) தொழிற்சாலைகள் சட்டம் 1948–ன் பிரிவு 40–பி (2)–ன்கீழ் பாதுகாப்பு அலுவலர்கள் (Safety Officers) நியமனம் செய்யப்பட வேண்டிய தொழிற்சாலைகளைக் கண்டறிதல்.

ஈ) தொழில் வழி நோய்கள் மற்றும் உடல்நல அபாயங்கள் குறித்தத் தகவல்களை நாளது தேதிவரையில் சேகரித்து, பாதுகாப்பு மேம்பாட்டினை நிறைவேற்றிட உதவுதல்.

உ) நச்சுத் தன்மை வாயுக்கள், கசிவு, தீப்பிடித்தல், வெடி விபத்து போன்ற தொழிற்சாலை அபாயங்களை எதிர்நோக்கி, அவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர நிலை ஆயத்தங்களின் மேம்பாடு குறித்து ஆலோசனை வழங்குதல்.

ஊ) தொழிற்சாலைகள் சட்டம், இந்திய நீராவிக் கலன் (கொதிகலன்கள்) சட்டம், மாசுக் கட்டுப்பாடு சட்டம், இந்திய மின்சாரச் சட்டம் மற்றும் வெடிமருந்து சட்டம் போன்ற சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவருதல் தொடர்பான ஆலோசனை வழங்குதல்.

8.21. உழைப்புப் படை/வல்லுநர் குழுவின் அறிக்கைகள் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்பு முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

8.22. 21–6–1990 அன்று நடைபெற்ற மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின்போது காகிதத்



தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சர்க்கரை, சிமெண்ட், பஞ்சாலைகள், அனல் மின் நிலையம், எரிசாராயம் மற்றும் மதுபானத் தொழிற்சாலைகள், பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறம் மாசுபடுதல் போன்ற அம்சங்களை ஆய்ந்து அறிந்து உரிய பரிந்துரைகள் செய்யும்பொருட்டு உப குழுக்கள் அமைப்பது என முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்/ உறுப்பினர் செயலாளர், சென்னை–6 அவர்களைத் தலைவராகவும், தொழிற்சாலைகள் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகிய துறைகளிலுள்ள மூன்று நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டும், உப குழுக்கள் முறையே தோல் பதனிடும் தொழிற்சாலைகள், காகிதத் தொழிற்சாலைகள், சர்க்கரை, எரிசாராயம் மற்றும் மதுபானத் தொழிற்சாலைகள், பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகிய அம்சங்கள் போதுமானவையாக உள்ளனவா, கூடுதல் பாதுகாப்பு அம்சங்கள் வழங்கப்பட வேண்டுமா என்பவை பற்றி ஆய்ந்தறிந்து உரிய பரிந்துரைகளுடன் அரசுக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கும்பொருட்டு அமைக்கப்பட்டன. இந்த உப குழுக்களும் இத்தொழிற்சாலைகளில் ஆய்வுகள் நடத்தி அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்து, அதன்பின் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.23. 25–1–2000 அன்று மாநில அளவிலான உழைப்புப் படை/ வல்லுநர் குழுக் கூட்டம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் 3–வது கூட்டம், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களது தலைமையில் 6–6–2000 அன்று நடைபெற்றது. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதியினை உருவாக்குவதற்கு கருத்துருவினை அரசுக்கு அனுப்புவதற்கும், மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு (State Level Safety Audit Cell) ஒன்று அமைப்பதற்கு மற்றொரு கருத்துருவினை அரசுக்கு அனுப்புவதற்கும், மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசு ஆணை எம்.எஸ். எண் 9, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12–1–2001–ல் மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு

அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு இது தொடர்பான கூட்டங்களும் நடத்தப்பட்டன.

*8.24. எதிர்காலத் திட்டங்கள், 2001–2002*

அ) தொழிற்சாலைகள் சட்டம் 1948–ன்கீழ் பிரிவு 40பி(i)(ii)-ன்படி அபாயகரமான மற்றும் பெரும் விபத்து ஏற்படக்கூடும் உற்பத்தி முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளில் இந்த அபாயங்களைக் களைந்தெடுக்கும்பொருட்டு, பாதுகாப்பு அலுவலர்களை (Safety Officers) நியமித்தல் தொடர்பான நடவடிக்கை.

ஆ) கட்டடத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) தொடர்பான, 1966 ஆம் வருடத்திய மத்திய அரசுச் சட்டத்தின்கீழ் மாநில விதிகள் உருவாக்கி, கட்டடத் தொழிலாளர்களின் பாதுகாபபு மற்றும் பணிச் சூழலை மேம்படுத்திட உரிய நடவடிக்கை எடுத்தல்.

இ) அனல் மின் நிலையங்கள் மற்றும் நூற்பாலைகள் ஆகிய தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்து ஆய்வுகள் நடத்தி அதன் பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்கும்பொருட்டு இரு துணைக் குழுக்கள் அமைத்தல்.

8.25. மேற்கூறிய திட்டங்களுக்கு உரிய வடிவம் பெறும் வகையில் விரைவில் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மற்றும் மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

**பயிற்சி மற்றும் கருத்தரங்கு**

**(அ) பாதுகாப்புப் பயிற்சிப் பணிகள்:**

8.26. தொழிலகங்களில் விபத்துக்களின் நிகழ்வுகளைத் தடுத்திட சட்டச் செயலாக்கப் பணிகளுடன் பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும் இன்றியமையாததாகிறது. விபத்துக்களைத் தடுத்திட, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பாதுகாப்புப் பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகளை இத்துறையின் சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் ஏற்று செயல்பட்டு வருகின்றது.



8.27. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தொழிற்சாலை வளாகத்திற்கே சென்று, கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களாலும், நிர்வாகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரிடையே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்தி அதன்மூலம் விபத்துக்களைக் குறைப்பதற்கு துணை புரிந்துள்ளன. 2000 ஆம் ஆண்டில் 256 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 7,060 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**ஆ) சிவகாசி பயிற்சி மையம்:**

8.28. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான வேதிப் பொருட்களை கையாளுகின்றனர். இவற்றைப் பாதுகாப்பாகக் கையாளும் வழிமுறைகள் இவர்களுக்குத் தெரிவதில்லை. இதன் காரணமாக தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் தவிர்த்திருக்கக்கூடிய பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேதியல் பொருட்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுவதற்கும், செயல்படுத்துவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் மற்றும் இருப்பு வைத்துக்கொள்வதற்கும் பல்வேறு வகையான பாதுகாப்பு வழிமுறைகளைத் தொழிலாளர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கென்று, சிவகாசியில் அரசால் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் தலைமையில் ஒரு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டது. இப்பயிற்சி மையத்தின் சீரிய பணியினைத் தொடர்ந்து தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தினால் நடத்தப்பட்ட 118 பயிற்சி வகுப்புகளில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையைச் சார்ந்த 5099 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**(இ) கருத்தரங்குகள்:**

8.29. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளன்றி, தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற தொழிலகப் பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசு சாராத் தன்னார்வு நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினரும்,

தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும்வண்ணம் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் தேசிய பாதுகாப்புக் குழுமம், இந்திய இழப்புத் தடுப்பு நிறுவனம் போன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்துறை கருத்துரு கொண்டுள்ளது.

8.30. தொழிலகப் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் சீரிய பணிகளின் விளைவாக தமிழ்நாட்டில் விபத்துக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. புள்ளிவிவரங்கள் அடிப்படையில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற தொழிலகங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 1999 ஆம் ஆண்டில் முறையே 27,991 தொழிலகங்கள் மற்றும் 11,62,411 தொழிலாளர்கள் என்ற அளவிலிருந்து 2000 ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை முறையே 29,080 தொழிலகங்கள் மற்றும் 11,86,448 தொழிலாளர்கள் என்று உயர்ந்தாலும் விபத்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 1999 ஆம் ஆண்டில் 2,688 விபத்து நிகழ்வுகளாக இருந்து 2000 ஆம் ஆண்டில் 2,077 விபத்து நிகழ்வுகளாகக் குறைந்துள்ளது.

### ஈ) மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு:

8.31. மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழுவின் மூன்று முக்கிய செயல்பாடுகளாவன:

1. வேலை அளிப்பவர்கள் மற்றும் வேலை செய்பவர்களுக்குத் தக்க பயிற்சியும். ஆலோசனையும் தந்து இவர்களுக்கிடையே சுமுகமான, இயல்பான சூழ்நிலையை உருவாக்கி அதன் அடிப்படையில் உற்பத்தித்திறன் பற்றிய இவர்களுடைய மாறுபட்ட சிந்தனைகளுக்கு இடையே ஏற்படும் பெரிய இடைவெளியைக் குறைத்தல்.

2. வேறுபட்ட சிந்தனைத் தாக்கங்களைக் கொண்ட உற்பத்தியின் இரண்டு முக்கிய கோட்பாடுகளான பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்பதையும் மாறாக அவை ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவை என்பதையும் வலியுறுத்தி ஒருங்கிணைப்பது.

3. அரசு, நிர்வாகங்கள், தொழிலாளர்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து இயங்கும் இயக்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கையை ஒவ்வொரு வருடமும் விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.



8.32. மேற்கண்ட இயக்கங்களில் குறிப்பிட்டுள்ள பணிகளை சிறப்பான முறையில் செய்வதற்கு தமிழக அரசால், மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு அரசாணை எண் 30, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 7-2-1992-ல் உருவாக்கப்பட்டுள்ளது.

8.33. இக்குழு தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தித் திறன் குறித்த பயிற்சி வகுப்பு நடத்த போதுமான வசதிகள் இல்லாதிருந்தபோதிலும், வருடத்திற்கு வருடம் சிறப்பாகக் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகிறது:

| வருடம் | நடத்திய பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை | பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1998 | 31 | 683 |
| 1999 | 35 | 877 |
| 2000 | 24 | 767 |

8.34. தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர், தங்கள் தொழிற்சாலையில், உற்பத்தித் திறனை அதிகரிக்க அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் உற்பத்தித் திறன் விருது வழங்கி வருகிறது. அதன்படி, 1995-96 ஆம் ஆண்டிற்கான 8 உற்பத்தித் திறன் விருதுகள் வழங்கப்பட்டன. 1996-97 ஆம் ஆண்டிற்குரிய விருதுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

8.35. 1999 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் (உற்பத்தித் திறன் குழு) அவர்களைத் தலைவராகக் கொண்டு இரண்டு துணைக் குழுக்கள் பதிவு செய்யப்பட்ட காகிதத் தொழிற்சாலைகளில் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றி ஆராய அமைக்கப்பட்டுள்ளது. அதில் சிற்றுண்டிச் சாலையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. காகித ஆலைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர் பணி முறையை நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய குழுவின் அறிக்கையும் தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

[2001 செப்டம்பர் 3

**மேம்பாட்டுப் பணிகள்:**

நவீனமயமாக்குதல்:

8.36. அந்நிய முதலீடு மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் பல்வேறு தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் தொடங்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில் ஆலைப் பாதுகாப்பும், தொழிலாளர் பாதுகாப்பும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இத்துறையில் பணியாற்றும் பொறியியல் கல்வித் தகுதி பெற்றுள்ள அலுவலர்கள் தற்கால தொழில்நுட்ப மேம்பாட்டிக்கேற்ப தங்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் இத்துறையின் செயல்பாடுகள் கணினி, நவீன தகவல் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி முறைகள் மூலம் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பின்வரும் முன்னுரிமைப் பகுதிகளில் தொலைநோக்குப் பார்வையுடன் நவீன செயல்பாடுகள் குறித்த எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

அ) நிர்வாகத்தை நவீனப்படுத்துதல்

ஆ) தொழில்நுட்பத் திறமையை நவீனமாக்குதல்

இ) பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை நவீனமாக்குதல்

அ) நிர்வாகத்தை நவீனப்படுத்துதல்:

8.37. தற்போதுள்ள மனித வளத்தைக்கொண்டு, துறையின் செயல்பாடுகளை செம்மைப்படுத்த தேவையான வழிமுறைகளையும், நடைமுறைகளையும் வகுக்க வேண்டியுள்ளது. பயனற்றப் பணிகள் குறைக்கப்பட வேண்டும். முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய இனங்கள அடையாளம் காணப்பட்டு, அனைத்துப் பணிகளும் பலன் தரத்தக்க வகையில் முடுக்கிவிடப்பட வேண்டும். இவற்றை மனதில் கொண்டு கீழ்க்கண்ட முன்னுரிமைப் பணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன:

1. குழந்தைத் தொழிலாளர், பணிக்கு அமர்த்துவதை ஒழித்தல்
2. இரசாயனத் தொழிற்சாலைகளில் தொழில் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்
3. தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறைந்தபட்சக் கூலி போன்ற நல வசதிகளை உறுதி செய்திடல்

8.38. இம்முன்னுரிமைப் பணிகளைத் திறம்பட செயல்படுத்தும் நோக்குடன், குறைந்தபட்ச ஊதியச் சட்ட செயலாக்கப் பணிகள்,



2001 செப்டம்பர் 3]

தீப்பெட்டி, பட்டாசு மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகளில் மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. மேலும், நிர்வாகச் செயல்முறைகளை எளிதாக்கும் வகையில் ஆய்வுகள், வரைபட ஒப்புதல், உரிமம் வழங்குதல் மற்றும் நிதிநிலை அதிகாரங்கள் ஆகியவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. சீரான தகவல் பரிமாற்றத்திற்கு உகந்ததாகக் கணினி மற்றும் தொலை அச்சுக் கருவி போன்ற வசதிகள் இத்துறையில் அமைக்கப்பட்டுள்ளன. அபாய செயல்முறையுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளைக் கையாளுவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பத் தகவல்களைப் பெறும் நோக்குடன் இத்துறையில் கணினி இணையம் ஏற்படுத்தவும் கருத்துரு கொண்டுள்ளது.

ஆ) தொழில்நுட்பத் திறமையை நவீனமாக்குதல்:

இரசாயனத் தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில்

8.39. சிக்கல் மிகுந்த இரசாயனத் தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் வளர்ந்து வருவதன் காரணமாக ஆய்வகத் துறை அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்தி நவீனப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக பொதுமக்களின் பாதுகாப்பினையும், குறிப்பாக தொழிலாளர்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இத்துறைக்கு உள்ளது. இதற்கான இரசாயனப் பொருட்கள் குறித்த விவரக் கூறுகள் சேகரித்து, தகவல் பரிமாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, காலதாமதமின்றி செவ்வனே செயல்பட வேண்டிய நோக்குடன் இதன் அடிப்படையில் பெரும்பாலான அலுவலகங்களில் கணினிகள் நிறுவப்பட்டு, தகவல் விவரக் கூறுகள் மற்றும் தொழில்நுட்பத் தகவல்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

8.40. மேலும் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப ஆய்வகத் துறை அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையையும் காலத்திற்கேற்ப மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு இத்துறை அலுவலர்களுக்கு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்ள பெயர் பெற்ற அமைப்புகளில் தீவிர பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, இப்பயிற்சி குறித்து முறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் வகுக்கப்பட உள்ளன.

இ) பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை நவீனமாக்குதல்:

தொழிலாளர்கள்.

8.41. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்வாகத்தினர் ஆகிய அனைவருக்கும் பாதுகாப்பு

[2001 செப்டம்பர் 3

தொடர்பான தரமான, பயனுள்ள பயிற்சியினை வழங்க துணைக் கருவிகள் தேவைப்படுகின்றன. நிழற்படக் கருவிகள், பாதுகாப்புத் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய ஒலி மற்றும் ஒளி நாடாக்கள், தொலைக்காட்சிக் கருவிகள் ஆகியவை பெரிதும் அவசியமாகின்றன. பயிற்சிக் கருவிகள் கூடுதலாகப் பெற்று பயிற்சிப் பிரிவினை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையில் உள்ள நூலகத்தில் புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை அதிகப்படுத்தி மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க சாதனைகள்:

8.12. ஆய்வகத் துறையின் அனைத்துப் பணிகளிலும் பாராட்டத்தக்க வகையில் முன்னேற்றமான வளர்ச்சியை இத்துறையின் செயல் நிறைவேற்ற அறிக்கையில் காண முடிகிறது. 2000 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 27,991–லிருந்து 29,080 ஆக அதிகரித்து 11,86,148 தொழிலாளர்கள் பயன்பெறுகின்றனர். அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 25,159 முறையான ஆய்வுகளும், 764 சோதனை ஆய்வுகளும், 163 திடீர் ஆய்வுகளும், 6,819 தனி மற்றும் சிறப்பு விடுமுறை மற்றும் இரவு வேலை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் கட்டளையின்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களின் பணி முறையினை நீக்குவதற்கு சிறப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுபோன்ற முறைப்படுத்தும் பணிகளுடன், 256 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளும், கருத்தரங்குகளும் தொழிலாளர் களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பான பணி முறைகளை செம்மைப்படுத்த நடத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் ஏற்கெனவே குறைந்த அளவில் இருந்த விபத்துக்களின் நிகழ்வுகள் மேலும் குறைக்கப் பட்டுள்ளன. விபத்துக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 2,688–லிருந்து இந்த ஆண்டு 2,077 ஆக குறைக்கப்பட்டுள்ளது. விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதமும் ஒரு மில்லியன் மனித நேர அடிப்படையில் 0.73 ஆக மட்டுமே உள்ளது. மேலும் இனி வருங்காலங்களில் தொழிற் சாலைகளில் விபத்துக்களே இல்லை என்னும் சாதனை படைத்திடவும், சிறந்த உற்பத்தித் திறனுடன் தொழிலாளர் நல் உறவு பராமரிக்கப்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் இத்துறை செயல்படும்.



2001 செப்டம்பர் 3]

## அத்தியாயம்–9

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

9.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1948 ஆம் ஆண்டு தொழிலுாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் (தொழிலாளர்களும், வேலையளிப்போரும்) தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தில் 1.75 சதவீதம் மற்றும் வேலையளிப்போர் 4.75 சதவீதத்துக்கு ஈடான ஒரு தொகையை அவர்தம் பங்காக அளிக்க வேண்டும். 1–1–1997 முதல் மாத வருமானம் ரூ.6,500/–க்கும் குறைவாகப் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

9.2. இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| 1 | மருத்துவ உதவி | மருத்துவப் பொருட்களும் சிகிச்சையுமாக அளித்தல் |
| 2 | உடல் நலமின்மைக்கான உதவி | பணமாக அளித்தல் |
| 3 | நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி | |
| 4 | பேறுகால உதவி | |
| 5 | தற்காலிக இயலாமையுற்றோருக்கான உதவி | |
| 6 | நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கான உதவி | |
| 7 | சார்ந்துள்ளோர்கள் நல உதவி | |
| 8 | உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி | |
| 9 | இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை | |

9.3. இத்திட்டத்தின்கீழ் மருத்துவ உதவி அளிக்கும் பொறுப்பு மாநில அரசின் கடமையாகும். இதன்பொருட்டு ஏற்படக்கூடிய செலவினம் மாநில அரசும் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் 1:7 என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. 1-3-2001 முடிய இத்திட்டத்தின்கீழ் நன்மை அடைந்துவரும் நபர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

1. ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை : 15,23,838
2. பயனடைவோரின் எண்ணிக்கை : 59,12,484

9.4. தமிழ்நாட்டில் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற அனைத்துப் பகுதிகளிலுள்ள தொழிலாளர்களின் குடும்பத்தினரும் முழு மருத்துவ சிகிச்சை பெற தகுதியுடையவர்கள் ஆவார். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மருத்துவ உதவிக்கான தொகைக்கு உச்ச வரம்பு நிர்ணயித்துள்ளது. அதன்படி, 1-4-1999 முதல் ஈட்டுறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஓர் ஆண்டிற்கு உச்சவரம்பு ரூ.600/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஓர் ஆண்டிற்கு ஒரு காப்பீட்டு நபருக்கு நிர்வாகச் செலவின் பொருட்டு ரூ.360/–ம், அம்மாதிரியே மருந்துச் செலவிற்கு ரூ.170/–ம் மீளப்பெறும் மருத்துவச் செலவிற்கு ரூ.50/–ம் மற்றும் கருவிகள் பராமரிப்பிற்கென ரூ.20/–ம் வழங்கப்படுகிறது.

9.5. இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேலும் அதிகமான தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் தேவையான இடங்கள் கண்டறியப்பட்டு இவ்விடங்களில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மேலும் மருந்தகங்களும் மருத்துவமனைகளும் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2001-2002 - 20
2002-2003 - 10

**தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் சித்த வைத்திய சிகிச்சை முறை:**

9.6. தற்போதுள்ள சென்னை மற்றும் கோயம்புத்தூர் தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் சித்த வைத்திய பிரிவு இயங்கி வருகின்றது. இப்பிரிவினை மாநிலத்திலுள்ள சேலம், மதுரை, சிவகாசி, வேலூர், ஓசூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் அமைந்துள்ள தொ.அ.ஈ. மருத்துவமனைகளிலும் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.





**மேம்படுத்தப்பட்ட சிறப்பு சிகிச்சை வசதிகள்:**

9.7. சென்னை மற்றும் கோவை தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் இதய நோய், நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் துறைகள் ஏற்படுத்தும் திட்டம் ஆய்வில் உள்ளது.

**மாதிரி மருத்துவமனை:**

9.8. சென்னை, அயனாவரம் தொ.அ.ஈ. மருத்துவமனையை மாதிரி மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கு புதுதில்லி, தொ.அ.ஈ. கழகத்திற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

**தாம்பரம் மெப்ஸ் வளாகத்தில் புதிய மருந்தகம்:**

9.9. தாம்பரம் மெப்ஸ் வளாகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் கோரிக்கையின்படி மெப்ஸ் வளாகத்தினுள்ளேயே புதிதாக தொ.அ.ஈ. மருந்தகம் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. (தற்காலிகமான முறைப்பணி அடிப்படையில் இங்கு ஒரு மருந்தகம் அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது)

**தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் 'யோகா' முறை அறிமுகப்படுத்துதல்:**

9.10. முறையான யோகா பயிற்சியின் மூலம் குறிப்பிட்ட சில நோய்கள் குணமடைகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு தமிழகத்தில் உள்ள தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் வழக்கமான சிகிச்சையுடன் 'யோகா' பயிற்சியையும் நோயாளிகளுக்கு அளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**விரைவில் தொடங்கப்படவுள்ள தொ.அ.ஈ. மருந்தகங்கள்:**

9.11. கீழ்க்காணும் பகுதிகளில் புதிதாக தொ.அ.ஈ. மருந்தகங்கள் தொடங்குவதற்கு அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன:

1. அருப்புக்கோட்டை
2. ஆலங்குளம் (மற்றும்)
3. ஆமத்தூர் (விருதுநகர் மாவட்டம்),
4. வடமதுரை (திண்டுக்கல் மாவட்டம்).
5. தாடிக்கொம்பு (திண்டுக்கல் மாவட்டம்),
6. பேர்நாயக்கன்பட்டி (சிவகாசி)
7. தென்காசி (நெல்லை மாவட்டம்),

8. சென்னிமலை (ஈரோடு மாவட்டம்),
9. நாங்குநேரி (நெல்லை மாவட்டம்),
10. வானூர் (விழுப்புரம் மாவட்டம்),
11. சோளிங்கர் (வேலூர் மாவட்டம்),
12. காரைக்குடி (சிவகங்கை மாவட்டம்),
13. கழுகுமலை (தூத்துக்குடி மாவட்டம்),
14. சங்கரலிங்கபுரம் (விருதுநகர் மாவட்டம்),
15. இராசிபுரம் (நாமக்கல் மாவட்டம்),
16. வக்கணன்குண்டு (விருதுநகர் மாவட்டம்),
17. ஈஞ்சார் (விருதுநகர் மாவட்டம்),
18. நல்லட்டிபாளையம் (கோவை மாவட்டம்) மற்றும்
19. சிங்கம்புணரி (சிவகங்கை மாவட்டம்)

இதன்மூலம் சுமார் 33,337 தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறுவர்.

9.12. இவற்றில் முதல் ஏழு இடங்களில் மருத்துவ ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டன. மைய அரசிதழில் அறிவிக்கை வெளியானதும் இவ்விடங்களில் மருந்தகங்கள் விரைவில் செயல்படத் தொடங்கும்.

9.13. மீதமுள்ள 12 இடங்களில் மருந்தகம் தொடங்கத் தேவையான மருத்துவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் இப்பகுதிகளிலும் மருந்தகங்கள் தொடங்கப்படும்.

**நோய் அறியும் மையங்கள் அமைத்தல்:**

9.14. அம்பத்தூர், பல்லாவரம், இராஜபாளையம், துடியலூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் நோய் அறியும் மையங்கள் அமைத்திட புதுதில்லி தொ.அ.ஈ. கழகத்திற்கு கருத்துரு அனுப்பப் பட்டுள்ளது.

**மருத்துவச் செலவு திரும்ப அளித்தல்:**

9.15. நடப்பு ஆண்டில் 2000–2001 இருதய அறுவை சிகிச்சைகள், சிறுநீரக அறுவை சிகிச்சைகள், இரத்த சுத்திகரிப்பு, சிடி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் இதர சிகிச்சைகளுக்காக மொத்தம் 406 காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்ப அங்கத்தினர்களுக்காக செலவழித்தத் தொகையாக ரூ.16,66,812/– திரும்ப வழங்க செயல்முறை ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.



**சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டு செயலாக்கப்பட்ட திட்டங்கள்:**

9.16. 2000–2001 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் செயலாக்கப்பட்டுள்ளன.

1) சிவகாசி தொ.அ.ஈ. மருத்துவமனை 100 படுக்கை வசதிகள் கொண்டதாகத் தரம் உயர்த்தப்பட்டது.

2) மாத்தூர் (1–11–2000), பாகலூர் (1–12–2000), பெருந்துறை (1–12–2000), காவேரி நகர் (1–1–2001) மற்றும் கடலூர் (1–2–2001) ஆகிய ஊர்களில் புதிய தொ.அ.ஈ. மருந்தகங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

3) தொ.அ.ஈ. மருத்துவமனைகளுக்கு அல்ட்ரா சோனாகிராபி, பல்ஸ் ஆக்சிமீட்டர், ஆட்டோ அனலைசர், செமி ஆட்டோ அனலைசர் மற்றும் கார்டியாக் மானிடர் வித் டிபிப்ரிலேட்டர் ஆகிய நவீன மருத்துவக் கருவிகள் (ரூ.60.40 இலட்சம்) கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்–10

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

**முன்னுரை**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திடம் மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவையாவன: 1) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 2) தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதி 3) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை நிதி ஒதுக்கத் திட்டத்தின்கீழ் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம். சமூகப் பாதுகாப்பு அளிப்பதும், தொழிலாளர்கள் பணியாற்றும் காலத்திலேயே அவர்களிடம் சேமிப்பு உணர்வினைத் தூண்டுவதும், அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர்கள் பயன் பெறவும், அவர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் அவர்களுடைய குடும்பத்தினர் பயன் பெறும் வகையில் நிதி ஒதுக்கம் செய்வதும் இம்மூன்று திட்டங்களின் முதன்மையான நோக்கங்களாகும். கடந்த 48 ஆண்டுகளில் இத்திட்டம் செயல்பட்டு வந்த வரலாற்றினை உற்று நோக்கினால் அது

[2001 செப்டம்பர் 3

படிப்படியாக முன்னேற்றம் கண்டு அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் மென்மேலும் அதிகத் தொழிலாளர்களை அதன் பிடிக்குள் கொண்டு வந்துள்ளது. இம்மூன்று திட்டங்களும் வெவ்வேறு சமூகப் பாதுகாப்பினை அளிக்கின்றன. இதில் அரசு, தொழிலாளர், பணியமர்த்துவோர் ஒன்றிணைந்து செயல்படுகின்றனர். கடந்த ஆண்டுகளில் இம்மூன்று திட்டங்களின்கீழ் கிடைத்த பயன்கள் கணிசமாக அதிகரிக்கப்பட்டு தொழிலாளர்களுக்குக் கூடுதல் பலன்களை அளித்துள்ளன.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களின் தேவைகளை தமிழ்நாட்டிலுள்ள மண்டல வைப்பு நிதி நிறுவனம் கவனித்து வருகிறது.

**தமிழ்நாடு மண்டல தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் மண்டல அலுவலக, துணை மண்டல அலுவலக, துணைக் கணக்கு அலுவலகங்களின் அமைப்பு**

10.1. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கான வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் மண்டல அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இதற்கு மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர், நிலை–1 தலைவராவார். அவருக்கு உதவியாக 4 மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள், நிலை–2, 10 உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள் மற்றும் செயலாக்க அலுவலர்கள், உதவிக் கணக்கு அலுவலர்கள், பிரிவு கண்காணிப்பாளர்கள், மேல்நிலை எழுத்தர், கீழ்நிலை எழுத்தர் மற்றும் 'டி' பிரிவு ஊழியர்கள் ஆக மொத்தம் 690 பணியாளர்கள் இவ்வலுவலகத்தில் பணிபுரிகின்றனர்.

10.2. வருங்கால வைப்பு நிதி ஆணையர் நிலை–1–ன் கட்டுப்பாட்டின்கீழ் நிலை–2 மண்டல தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர்களைத் தலைவராகக் கொண்டு 6 துணை மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையின் புறநகர்களான அம்பத்தூர் மற்றும் தாம்பரத்தில் அமைந்துள்ள துணைக் கணக்கு அலுவலகங்கள் நிலை–2 மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர் ஒருவரின் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

10.3. மண்டல அலுவலகம், துணை மண்டல அலுவலகங்கள் மற்றும் துணைக் கணக்கு அலுவலகங்கள் ஆகியவை அவற்றின் அதிகார வரம்பு எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள உறுப்பினர்களின் தேவைகளைக் கவனித்து வருகின்றன. விவரம் பின்வருமாறு:



2001 செப்டம்பர் 3]

| அலுவலகம் | நிறுவப்பட்ட நாள் | கவனிக்கப்படும் மாவட்டங்கள் | ஆய்வாளர் அலுவலகங்கள் |
|---|---|---|---|
| சென்னை மண்டல அலுவலகம் | 1.11.1952 | சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட புதுவை மாநிலம் | சென்னை, செங்கற்பட்டு, பாண்டிச்சேரி |
| கோயபுத்தூர் (துணை மண்டல அலுவலகம்) | 5.11.1978 | கோவை, நீலகிரி | கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, குன்னூர், ஊட்டி |
| மதுரை (துணை மண்டல அலுவலகம்) | 1.4.1980 | மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தேனி | மதுரை, திண்டுக்கல், சிவகாசி |
| திருச்சி (துணை மண்டல அலுவலகம்) | 1.10.1980 | கடலூர், விழுப்புரம், கரூர், திருச்சி, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை | திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கடலூர் மற்றும் கரூர் |
| திருநெல்வேலி (துணை மண்டல அலுவலகம்) | 3.4.1993 | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி | திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோயில் |
| சேலம் (துணை மண்டல அலுவலகம்) | 6.3.1995 | சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு | சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு |
| வேலூர் (துணை மண்டல அலுவலகம்) | 5.12.1996 | வேலூர், திருவண்ணாமலை | வேலூர் |

[2001 செப்டம்பர் 3

| | | | |
|---|---|---|---|
| அம்பத்தூர் (துணைக் கணக்கு அலுவலகம்) | 1.12.1997 | அண்ணாநகர் முதல் செங்குன்றம் வரை, பேசின்பாலம் சாலை முதல் கொளத்தூர் வரை/ஸ்ரீபெரும்புதூர் முதல் ஆவடி வரை/சென்னை— திருவள்ளூர் மாவட்டப் பகுதிகள் | அம்பத்தூர் |
| தாம்பரம் (துணைக் கணக்கு அலுவலகம்) | 6.11.1998 | கிண்டி தொழிற்பேட்டை முதல் மதுராந்தகம் வரை/ஈக்காடுதாங்கல் முதல் மாங்காடு வரை/ வேளச்சேரி முதல் சேலையூர் வரை/பம்மல் முதல் குன்றத்தூர் வரை/சென்னை —காஞ்சிபுரம் மாவட்டங்களில் அமைந்துள்ள பகுதிகள் | தாம்பரம் |

10.5. மேற்குறிப்பிட்டவை தவிர பாண்டிச்சேரி, ரங்காப்பிள்ளைத் தெரு அமலாக்க அதிகாரி அலுவலகத்தில் 31–8–1998 ஆம் நாள் முதல் பணி மையம் ஒன்று மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட புதுவை மாநிலத்தில் இயங்கி வருகிறது. பாண்டிச்சேரியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள பணியாளர்களின் தேவையினை இது நிறைவு செய்கிறது.

10.6. பணியாளர் நிலவரம்

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளதைத் தொடர்ந்து பணியாளர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து உள்ளது.



2001 செப்டம்பர் 3]

சென்னை மண்டல அலுவலகம், துணை மண்டல அலுவலகங்கள் மற்றும் துணைக் கணக்கு அலுவலகங்களில் 31–3–2001 ஆம் நாள் அன்று உள்ளவாறு பணியாளர்கள் எண்ணிக்கை நிலவரம் வருமாறு:

| தொடர் எண் | அலுவலகம் | பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்டல அலுவலகம், சென்னை | 705 |
| 2 | துணை மண்டல அலுவலகம், கோவை | 359 |
| 3 | துணை மண்டல அலுவலகம், மதுரை | 338 |
| 4 | துணை மண்டல அலுவலகம், திருச்சி | 200 |
| 5 | துணை மண்டல அலுவலகம், திருநெல்வேலி | 371 |
| 6 | துணை மண்டல அலுவலகம், சேலம் | 164 |
| 7 | துணை மண்டல அலுவலகம்,வேலூர் | 135 |
| 8 | துணை கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 156 |
| 9 | துணை கணக்கு அலுவலகம், தாம்பரம் | 155 |
| | மொத்தம் | 2583 |

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம், 1952

10.7. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டமானது, 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டு செயல்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள் அல்லது நிறுவனங்களுக்கு அவை 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தியிருந்தால் பொருந்தும். இந்தத் திட்டத்திற்கு 22–9–1997 முதல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி அறிவிக்கை வெளியிடப்பட்ட தொழிற்சாலைகள் பட்டியலின் கீழுள்ள 20அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்கள் அவை அமைக்கப்பட்ட நாள் முதல் இச்சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். எனினும், 50 தொழிலாளர்களுக்குக் குறைவாக பணிபுரியும் மின் சக்தி உதவியற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

[2001 செப்டம்பர் 3

செயல்வரம்பு:

10.8. இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள இம்மண்டலத்திலுள்ள தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 31.3.2001 நிலவரப்படி கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மண்டல அலுவலகம், சென்னை | 10807 |
| 2. | துணை மண்டல அலுவலகம், கோயம்புத்தூர் | 6303 |
| 3. | துணை மண்டல அலுவலகம், மதுரை | 6001 |
| 4. | துணை மண்டல அலுவலகம், திருச்சி | 5645 |
| 5. | துணை மண்டல அலுவலகம், திருநெல்வேலி | 4015 |
| 6. | துணை மண்டல அலுவலகம், சேலம் | 4192 |
| 7. | துணை மண்டல அலுவலகம், வேலூர் | 3630 |
| 8. | துணை கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 2783 |
| 9. | துணை கணக்கு அலுவலகம், தாம்பரம் | 2056 |
| | மொத்தம் | 45432 |

10.9. **செயல்வரம்பின் வளர்ச்சி:**

இந்த மண்டலத்தில், இதன் செயல் வரம்பிற்குள் வரும் பணி நிறுவனங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. அதனை கீழே உள்ள அட்டவணையிலிருந்து அறியலாம்:

| ஆண்டு | செயல்வரம்பிற்குட்பட்ட மொத்த நிறுவனங்கள் | வளர்ச்சி |
|---|---|---|
| 1998-1999 | 41331 | 3462 |
| 1999-2000 | 44308 | 2977 |
| 2000-2001 | 45432 | 1127 |

10.10. **சந்தாதாரர்கள் பற்றிய விவரம்:**

கடந்த ஆண்டுகளில், பதிவு செய்துகொள்ளும் உறுப்பினர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. 31–3–2001 ஆம் நாள் நிலவரப்படி இந்த மண்டலத்தில், வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக 41.89 இலட்சம் பேர் உள்ளனர். மண்டல/துணை மண்டல, துணைக் கணக்கு அலுவலகங்களுக்கிடையே பரவியிருக்கும் உறுப்பினர்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:



2001 செப்டம்பர் 3]

| தொடர் எண் | அலுவலகம் | உறுப்பினர் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மண்டல அலுவலகம், சென்னை | 12.47 |
| 2 | துணை மண்டல அலுவலகம், கோயம்புத்தூர் | 4.67 |
| 3 | துணை மண்டல அலுவலகம், மதுரை | 5.01 |
| 4 | துணை மண்டல அலுவலகம், திருச்சி | 2.63 |
| 5 | துணை மண்டல அலுவலகம், திருநெல்வேலி | 5.63 |
| 6 | துணை மண்டல அலுவலகம், சேலம் | 2.74 |
| 7 | துணை மண்டல அலுவலகம், வேலூர் | 2.06 |
| 8 | துணை கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 3.31 |
| 9 | துணை கணக்கு அலுவலகம், தாம்பரம் | 3.37 |
| | மொத்தம் | 41.89 |

10.11. **சந்தாதாரர்களுக்குப் பணி:**

அ. ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவரது கணக்கில் நிலுவையிலுள்ள அவரது சந்தாத் தொகைக்கு (வேலையளிப்போரின் பங்கு உட்பட) ஆண்டு வருமான பங்கீட்டுப் பங்கு வட்டியாக வழங்கப்படுகிறது. 1952–53–ல் 3% ஆக இருந்த வட்டி வீதம் தற்போது 12% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆ. வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராவதற்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர், அவர்களுக்குக் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் வழங்கப்படுகிறது:

1. உறுப்பினர் எடுக்கும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு சந்தா செலுத்துவதற்காக
2. உறுப்பினர் மற்றும் அவருடைய குழந்தைகள், சகோதரர்/ சகோதரி ஆகியோரின் திருமணச் செலவுக்காக

[2001 செப்டம்பர் 3

3. குழந்தைகளின் உயர் கல்வி
4. வீடு அல்லது வீட்டு மனை வாங்க
5. வீடு கட்டுவதற்காக பெற்ற வீட்டுக் கடன்களைத் திரும்பச் செலுத்த
6. உடல் நலமின்மைச் செலவுக்காக
7. தற்காலிகமாக வேலையில்லாதபோது ஏற்படும் செலவை ஈடுகட்ட
8. உடல் ஊனமுற்ற உறுப்பினர், அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக
9. இயற்கைக் காரணங்களினால் ஏற்படும் சேதத்திற்கு ஈடுகட்ட ஆகும் எதிர்பாராத செலவு

இ. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் கீழ்க்காணும் நேர்வுகளில் அவருடைய பங்குத் தொகையை இறுதியாக முழுவதுமாக திரும்பப் பெற உரிமையுடையவராகிறார்.

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது நிரந்தரமாக மற்றும் முழுவதும்மாக பணி செய்ய இயலாதபோது

2. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணி முடிவு செய்யப்படும் போது அல்லது ஆட்குறைப்பு செய்யப்படும்போது

3. சில சூழ்நிலைகள் காரணமாக உறுப்பினர் தகுதியை விலக்கிக்கொள்ளும்போது

10.12. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் உறுப்பினர்களுக்கு பல்வேறு இனங்களின்கீழ் பின்வரும் தொகைகள் வழங்கப்பட்டன:

| | 1998-1999 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவைகள் இறுதியாகத் தீர்க்கப்பட்டவை | 2,22,667 | 2,54,570 | 2,69,218 |
| ஒரு பகுதி பெறுதல்/முன் பணங்கள் | 75,063 | 60,766 | 77,919 |
| மாற்றங்கள் | 24,434 | 35,784 | 38,891 |



2001 செப்டம்பர் 3]

10.13. கடந்த மூன்று ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு பின்வரும் எண்ணிக்கையில் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கைகள் வழங்கப்பட்டன:

| 1998-1999 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|
| 42,35,174 | 39,63,615 | 45,34,377 |

தொழிலாளர் நல வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், 1976

10.14. செயல்வரம்பு:

இத்திட்டம் 1–8–1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. இது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்தக்கூடிய அனைத்துத் தொழிற்சாலைகள், ஏனைய வர்த்தக நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும் பொருந்துகிறது. காப்புறுதி நிதிக்கு தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லையென்று தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லையென்று வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக இருக்கும்போது, வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக இருக்கக்கூடிய தொழிலாளர்களின் சம்பளத்தில் 0.5 சதவீதம் என்ற வீதத்தில் தொழிலதிபர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியுள்ளது. இது மத்திய அரசும் இந்தக் காப்புறுதி நிதிக்கு சந்தா செலுத்துகிறது. இது தொழிலதிபர்களின் சந்தாத் தொகையில் பாதிக்கு சமமான தொகையாக இருக்கும்.

10.15. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் இறந்துவிடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு, இறந்துவிட்டவரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் கடந்த 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரி தொகைக்குச் சமமாக கூடுதல் தொகை வழங்கப்படும். இது அதிகபட்சத் தொகை அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

10.16. கடந்த மூன்று ஆண்டுகளில், இறந்துவிட்ட உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு, தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்ட பயன் வகையில் பின்வரும் அளவிற்கு தொகைகள் வழங்கி தீர்க்கப்பட்டுள்ளன:

[2001 செப்டம்பர் 3

| | 1998-1999 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|
| தொகை வழங்கி தீர்க்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 3222 | 3519 | 3258 |

தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், *1995:*

*10.17. 1971* ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை மாற்றிவிட்டு உருவாக்கப்பட்ட *1995* ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டத்தின்கீழ் *16–11–1995* அன்று வகுக்கப்பட்டது. *1995* ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் பின்வரும் பயன்களுக்கு வகை செய்கிறது.

*10.18.* ஓய்வூதிய வகைகள்:

| | |
|---|---|
| அ. பணியில் இருந்தாலும் அல்லது இல்லாவிடிலும் 58 வயது நிரம்பியதன்பேரில் | வயது முதிர்வு ஓய்வூதியம் |
| ஆ. முழுமையாக மற்றும் நிரந்தரமாக இயலாமை அடைந்ததன்பேரில் பணியை விட்டுச் சென்றுவிட்டிருந்தால் | இயலாமை ஓய்வூதியம் |
| இ. முழுமையாக மற்றும் நிரந்தரமாக இயலாமை அடைந்ததன்பேரில் பணியை விட்டுச் சென்று விட்டிருந்தால் | இயலாமை ஓய்வூதியம் |
| ஈ. உறுப்பினர் இறந்துவிடுவதன்பேரில் | விதவை—சிறார் ஓய்வூதியம் |
| உ பெற்றோர் இறந்துவிடுவதன் பேரில்/அல்லது உறுப்பினர் இறந்த பிறகு தம்பதியர்களில் ஒருவர் மறு திருமணம் செய்துகொள்வதன்பேரில் | அனாதை ஓய்வூதியம் |
| ஊ. உறுப்பினர் இறந்துவிடுவதன் பேரில் தம்பதியர் இல்லாத போது, உறுப்பினர் இறந்துவிடும் நாளன்று 25 வயதுக்குக் குறைவாக உள்ள தகுதி வாய்ந்தசிறார். | நியமனதாரர் ஓய்வூதியம் |



2001 செப்டம்பர் 3]

*10.19. 1995* ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மண்டலங்களில் மண்டல அலுவலகங்கள், துணை மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. *1995* ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியங்களின் எண்ணிக்கை:

*10.20. 31–3–2001* ஆம் நாளன்று நிலவரப்படி ஓய்வூதியம் பெறுபவர்கள்

| உறுப்பினர் ஓய்வூதியம் | கணவர்/ மனைவி (விதவை/ மனைவியை இழந்தவர்) ஓய்வூதியம் | குழந்தை ஓய்வூதியம் | ஆதரவற்றோர் ஓய்வூதியம் | நியமன தாரர் ஓய்வூதியம் | ஊனமுற்றோர் ஓய்வூதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 64180 | 43404 | 30115 | 432 | 856 | 98 | 139085 |

*10.21. 1995* ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் ஆண்டுதோறும் ஓய்வூதிய நிதியை மதிப்பிட வகை செய்கிறது. முதலாமாண்டு மதிப்பீடு செய்வதன் விளைவாக; ஓய்வூதியம் பெறுபவர்கள், அவர்களுடைய ஓய்வூதியத்தில் 4 சதவீதத்தை இடைக்கால நிவாரணத் தொகையாகப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

*10.22.* நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய இடங்களிலுள்ள இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

*10.23.* சில பெரிய நிறுவனங்களில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாளன்றே, ஓய்வூதியம் வழங்கல் ஆணை வழங்கப்படுகிறது. *1995* ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், நிறுவனம் ஒன்றை விட்டுச் செல்லும் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியப் பயன்களுடன் திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தில் பணியில் சேரும்போது அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும். 10 ஆண்டுகளுக்குக் குறைவாக பணிபுரிந்த உறுப்பினர்கள், அவர்கள் பெற்ற சம்பளம், அவர்கள் பணியிலிருந்து வெளியேறிய நாளில் அவர்களுடைய பணிக்கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஓய்வூதியப் பயனை திரும்பப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

10.24. கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்காணும் எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் ஓய்வூதியப் பயனை திரும்பப் பெற்றுள்ளனர்.

| | 1998-1999 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 1,55,246 | 2,07,787 | 2,36,697 |

## நிலுவை வசூல் நிர்வாகம்

10.25. வேலையளிப்பவர், ஒவ்வொரு மாதமும் பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்து சீட்டு ஒன்றின் மூலம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் ஓய்வூதிய நிதி மற்றும் தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த ஈட்டுறுதி நிதி ஆகியவற்றுக்கான பங்குத் தொகைகளை அந்தந்தக் கணக்குகளில் செலுத்துகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்யத் தவறுகிறபோதெல்லாம் தொகை செலுத்தத் தவறியவர் கண்டறியப்பட்டு, நிலுவைத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு, நிலுவைத் தொகையை வசூலிக்க, சட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ள கட்டாய மற்றும் தண்டனை விதித் துறைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு நிதியாண்டின்போது இவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்ற கேட்புத் தொகை வழக்கமாக அந்த நிதியாண்டிலேயே வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்க சாத்தியமில்லாத சில நேர்வுகளில் அது கேட்புத் தொகை நிலுவையாகக் கருதப்பட்டு வசூல் பணியாளரமைப்பினால் வசூலிக்கப்படுகிறது.

10.26. வசூல் பணியாளரமைப்பு 1991 ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. கேட்புத் தொகை நிலுவையை வசூலிக்க மண்டலம் முழுவதற்கும் முதலில் ஒரு வசூல் அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர், பகுதி செயலாக்க அதிகாரிகளின் உதவியுடன் செயல்பட்டு வந்தார். பின்னர் சட்டத்தின்கீழ் உதவி ஆணையர்கள் (செயலாக்கம்) அனைவரும் வசூல் அதிகாரிகளாக அறிவிக்கையிடப்பட்டுள்ளனர். மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கையின் விளைவாக கீழ்க்காணும் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நிலுவை வசூலில் படிப்படியான முன்னேற்றம் காணப்பட்டது:



| ஆண்டு (மார்ச் 31 முடிய) | நிலுவைத் தொகை (ரூபாய் இலட்சத்தில் | வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1998-1999 | 3782.38 | 1416.02 |
| 1999-2000 | 4850.34 | 1561.37 |
| 2000-2001 | 5773.02 | 1906.78 |

### 10.27.1. நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்

(அ) நிலுவைத் தொகையைக் குறைக்க தனி ஊக்கம் அளிக்கும் வகையில், வசூல் செய்யும் அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளது. தற்போது மண்டல/துணை மண்டல அலுவலகங்களில் இருக்கும் அனைத்து உதவி ஆணையாளர்களும் வசூல் செய்யும் அலுவலர்களாகச் செயல்படுகின்றனர். தற்போது அனைத்து துணை மண்டல அலுவலகங்களும், சம்பந்தப்பட்ட வசூல் அலுவலர்கள் மூலம் அவர்களுடைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசூல் செய்யும் பணியைத் தொடங்கியுள்ளன.

(ஆ) 2000–2001 ஆம் ஆண்டுக்கான வசூலிக்கத்தக்க/வசூலிக்க இயலாத 3608 நிலுவைச் சான்றிதழ்களில், நிலுவையாக உள்ள கேட்புத் தொகை ரூ.5773.02 இலட்சங்கள் ஆகும். அவற்றுள் 2103 நிலுவை சான்றிதழ்களுக்கான ரூ.1906.78 இலட்சங்கள் நடப்பு ஆண்டில் வசூலிக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள நிலுவைத் தொகை ரூ.3866.24 இலட்சங்கள். இந்த நிலுவைத் தொகையில் ரூ.857.95 இலட்சங்கள் வசூலிக்கப்பட இயலாத இனத்தையும், ரூ.3008.29 இலட்சங்கள் வசூலிக்கத் தக்க இனத்தையும் சார்ந்தவையாகும்.

10.28. நிலுவைத் தொகைகளில் பெரும்பான்மையான பகுதி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால் வசூலிக்க இயலாதவை ஆகின்றன:

1. கலைக்கப்பட்ட நிறுவனங்கள்
2. உயர்நீதிமன்ற இடைக்காலத் தடை பெற்றது
3. தேசிய துணித் தொழில் கழகத்தால் (NTC) முன்னரே எடுத்துக்கொள்ளப்பட்டவை
4. பி.ஐ.எப்.ஆர்/ஏ.ஏ.ஐ.எப்.ஆர். நேர்வுகள்
5. உடைமைக் காப்பாளர்/பாதுகாவலர்

[2001 செப்டம்பர் 3

## பொதுமக்கள் குறைகளைப் பற்றிக் கேட்டறியும் வழிமுறைகள்

10.29. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை பொதுமக்கள் குறைகளைக் கேட்டறியும் நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் குறைகளைக் கேட்டறியும் திட்டத்திற்குரிய ஒருங்கிணைப்பு அலுவலராக உதவி ஆணையாளர்/மண்டல ஆணையாளர் பதவித் தரத்தில் ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், அவர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் மண்டல அலுவலகத்தில் மட்டுமல்லாது துணை மண்டல அலுவலகத்திலும் பொதுமக்கள் குறைகளை உரியவாறு தீர்த்து வைப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன:

(1) பொதுமக்கள் குறைகளைப் பதிவு செய்வதற்கு நிரந்தரப் பதிவேடு ஒன்று பராமரிக்கப்படுகிறது.

(2) மண்டல ஆணையாளர் / உதவி ஆணையாளர் / பொதுமக்கள் தொடர்பு அதிகாரியை சந்திப்பதற்கு மனுதாரர்களுக்கு/ புகார்தாரர்களுக்கு இருக்கை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(3) சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு / பிரிவுக்கு பொறுப்பு வகிப்பவருக்கு குறைகள் சம்பந்தப்பட்ட படிவத்தை உரியவாறு கொண்டு செல்லப்படுவதை உறுதி செய்யத் தேவையான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(4) வருபவரின் குறை பற்றிய நிலவரம் உரியவாறு சம்பந்தப்பட்டவருக்குத் தெரிவிப்பதை உறுதிப்படுத்த கணினி முனையம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(5) புகார் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதோடு புகார்தாரருக்கு / மனுதாரருக்கு அம்முன்னேற்றம் குறித்து தெரிவிக்கப்படுகிறது.

(6) புகார்கள் / மனுக்கள் குறித்து திட்டவட்டமாகவும், உரியவாறும் தெரிவிப்பதற்காக புகார்கள் / மனுக்கள் உரியவாறு வகை செய்யப்படுகின்றன.

10.30. மண்டல அலுவலகத்திலுள்ள பொதுமக்களின் குறைகள் பற்றிய தகவல் மையம் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை செய்து கொடுப்பதற்காக



2001 செப்டம்பர் 3]

தற்போது குறைதீர்க்கும் பிரிவில் கணினி முனையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் குறைகள் விரைவாகவும் தக்கவாறும் தீர்த்து வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்வது பொதுமக்கள் மிகுந்த மனநிறைவு அடைய வழிகோலுகிறது.

10.31. உள்ளூர் மண்டல அலுவலகத்திலிருந்தும், துணை மண்டல அலுவலகத்திலிருந்தும் வரப்பெறும் தகவல், குறை தீர்க்கும் அமைப்பு செயல்படுகிறது என்பதையும், இப்பணி நடைபெறும் பகுதியில் உரிய கவனம் செலுத்தப்படுகிறது என்பதையும் காட்டுகிறது. இது தொடர்பாக மைய அலுவலகம் பிறப்பிக்கும் உத்தரவுகள் செயலாக்கப்படுகின்றன.

10.32. நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் தெரிவிக்கப்படும் குறைகள், குறை தீர்ப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு ஒப்புகை அளிக்கப்படுகின்றன.

10.33. குறை தீர்ப்பதற்கான படிவமொன்று வடிவமைக்கப்பட்டு குறைகள் இந்தப் படிவத்தில் பதிவு செய்யப்படுகின்றன. நேர்வு பற்றிய விவரங்கள் சம்பந்தப்பட்ட கணக்குப் பிரிவிடமிருந்து அண்மை நிலவரத்துடன் பெறப்பட்டு படிவத்தில் பதிவு செய்யப்படுகிறது. இந்த நிலவரம் குறித்து மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட நபருக்குத் தெரிவிக்கப்படுகிறது. மக்கள் தொடர்பு அதிகாரியின் பதிலில் சம்பந்தப்பட்ட உறுப்பினர் / பார்வையாளர் மன நிறைவு அடையவில்லையெனில் அதிகாரிகளைப் பார்ப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட நேர்வுகளை அவர் கவனித்து கொடுக்கப்பட்ட கால அளவிற்குள் அதற்குத் தீர்வு காண்கிறார்.

10.34. ஒட்டு மொத்த மண்டலங்களிலும் கடந்த மூன்றாண்டுகளில் குறை நீக்கப்பட்ட புகார்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| ஆண்டு (1) | குறை தீர்க்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை (2) |
|---|---|
| 1998-1999 | 27741 |
| 1999-2000 | 37194 |
| 2000-2001 | 38173 |

[2001 செப்டம்பர் 3

10.35. லோக் அதாலத் கூட்டம் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் நாளில் மண்டல அலுவலகத்தில் மண்டல ஆணையாளர்–I மூலமாகவும், துணை மண்டல அலுவலகங்களில் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளாலும் நடத்தப்பட்டு, தமிழ்நாடு, பாண்டிச்சேரி மண்டலம் குறித்த விவரங்கள் அடங்கிய தொகுப்பு அறிக்கை ஒன்று ஒவ்வொரு மாதமும் 20 ஆம் நாளில் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது.

10.36. நிறுவன அளவிலான விரிவான தகவல் தொழில் நுட்பவியலை ஏற்படுத்துவதற்கான வருங்கால திட்டம் குறித்த குறிப்பு.

பின்வரும் ஆய்வு வரம்புகளுடன் நிறுவன அளவிலான விரிவான தகவல் தொழில் நுட்பவியல் திருத்தத்திற்கான வரைபடம் ஒன்றைத் தயாரிப்பதற்கான பல்நோக்கு பணிக்குழு ஒன்றை பணியாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் ஏற்படுத்தியுள்ளது.

1. செயல்படாத நிறுவனங்கள் பற்றிய விவரங்களைத் தொகுத்து அடிப்படை விவரக் குறிப்புகளை நடப்பு காலத்திற்குச் சரிசெய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப முறையில் உள்ளடங்காத நிறுவனங்களை, அந்நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களுக்கு வருடாந்திர கணக்கு பட்டியல்களை வழங்குவதன் மூலமாக இணைத்து 2000–2001 வருடத்தில் புதிய முயற்சியாக இணக்கம் (Compliance) 2001 என்ற செய்முறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு பலமுறைகள் மேற்கொண்டதன் பயனாக இத்திட்டத்தின்கீழ் அடங்காத 5970 நிறுவனங்கள் அதன் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன. மேலும் தமிழ்நாடு மண்டலத்தில் 5,38,235 உறுப்பினர்களுக்கு வருடாந்திர கணக்கு பட்டியல்கள் வழங்கப்பட்டன.

2. தற்போதுள்ள பணிமுறைகள், நடைமுறைகள், தேவைகள் முதலியவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்துப் பரிசீலித்தல்.

3. முக்கியத்துவம் வாய்ந்த ஊக்கமளிக்கும் கொள்கையின் சூழ்நிலையில் நிறுவனம் தற்போது எந்நிலையில் உள்ளது என்பது பற்றியும் அடுத்துவரும் 2–5 ஆண்டுகளில் அது எந்நிலையில் இருக்க வேண்டும் என்பது பற்றியும் மதிப்பீடு செய்தல்.

4. பயன்படுத்துவோரின் தேவைகளைத் தொகுத்தல்.



2001 செப்டம்பர் 3]

5. நிறுவனத்துடன் கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் குறித்த தகவல் தொழில்நுட்பவியல் முறைகளின் மரபுரிமைப் பயன் குறித்து மதிப்பீடு செய்தல்.

6. பொருத்தமானதொரு கணினி வன்பொருள் படிவமைப்பை உருவாக்குதல்.

7. பிரன்ட் என்ட் (Front end) மற்றும் பேக் என்ட் (Back end) பயன்பாடுகள் குறித்து பொருத்தமான இயக்க முறைகளை இனங்கண்டறிதல்.

8. பொருத்தமான பயன்பாட்டு கணினி மென்பொருள் மற்றும் அமைப்பு முறையை இனங்கண்டறிதல்.

9. திட்டங்களை நிறுவனம் அளித்து வரும் சூழ்நிலையில் ஒவ்வொரு செய்முறைகள் குறித்து இனங்கண்டறிதலும், தேவைக்கும் அதிகமானவற்றை நீக்கி திறனை மேம்படுத்தும் வகையில் அலுவல் செய்முறையை மீண்டும் வகுத்தமைப்பதற்கான விருப்புரிமைகள் குறித்து பரிசீலித்தல்.

10. சாதகமான தொழில்நுட்பமுறை இருக்கின்ற சூழ்நிலையில் தற்போதுள்ள மனித ஆற்றல் திறன்கள் பற்றி மதிப்பீடு செய்தலும் மனித ஆற்றல் தேவைகள் மற்றும் மேம்பாட்டிற்கான பரிந்துரைகள் செய்தல்.

11. தகவல் தொழில்நுட்பவியல் சீர்திருத்தங்களுக்கு துணைபுரிவதற்காக பொருத்தமான தொழில்நுட்ப மனித ஆற்றல் அமைப்பு குறித்து பரிந்துரை செய்தல்.

12. நன்கு தெளிவாக இனங்கண்டறியப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களுடன் நிலை வாரியாகச் செயல்படுத்தும் திட்டத்தை ஏற்படுத்துதல்.

13. கொள்முதல் செயல்முறைகளை வெளிப்படையாகவும், சிக்கனமானதாகவும், நேர்மையானதாகவும் ஆக்கவியலும் வகையில் கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் பணியமைப்பு முறை முதலியவற்றில் தொழில்நுட்ப சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கான நடைமுறைகளை ஏற்படுத்துதல்.

14. ஒன்றோடொன்று செயல் விளைவுகளை ஏற்படுத்துகின்ற மற்றும் செயல் விளைவுகளை ஏற்படுத்தாத பணிகளுக்காகப் பொருத்தமான ஏற்பாட்டு முறையை தெரிவு செய்வதற்கான எல்லைக் குறியீட்டை வகுத்தல், வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

15. பல்நோக்கு பணிக்குழு தேவையெனக் கருதுகிற வேறு ஏதேனும் தொடர்புடைய பிரச்சினைகள்.

16. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செயல்பாட்டிற்காக மென்பொருள் எம்எஸ் ஆபீஸ், எம்.எஸ்.வின்டோஸ் மற்றும் எம்.எஸ்.எக்சல் ஆகிய முறைகளில் கணினியை இயக்க ஒரு பயிற்சித் திட்டத்தினை ஏற்படுத்தி அப்பயிற்சிக்கு நிறுவனத்தின் தமிழ்நாடு மண்டலத்தைச் சேர்ந்த விருப்பமுள்ள தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

## அத்தியாயம் - 11

## வேலைவாய்ப்புப் பணிகள்

### வேலைவாய்ப்புப் பணிகளின் தோற்றமும், மூலமும்

11.1. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட படைவீரர்களின் மறுவாழ்வு குறித்த தொண்டாற்றிடும் நோக்கத்திற்காகவே பாரதத்தில் வேலைவாய்ப்புப் பணி தொடங்கப்பட்டது. இவ்வாறு தொடங்கப்பட்ட பணி 1946 ஆம் ஆண்டு வரை போர்ப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் போர் வீரர்கள் நலம் மற்றும் மறுவாழ்விற்காக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1946 க்குப் பிறகு இப்பணி சிறிது சிறிதாக விரிவுபடுத்தப்பட்டு 1948 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்படும் வகையில் விரிவாக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இந்திய அரசின் நிர்வாக அமைப்பின்கீழ் செயல்பட்டு வந்த இப்பணி 01-11-1956 முதல் "சிவராவ் கமிட்டி"யின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு மாநில அரசின் முக்கிய துறைகளில் ஒன்றாக இயங்கி வருகிறது.

11.2. 01-11-1956 இல் மாநில அரசின்கீழ் கொண்டு வரப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1963 வரை தொழிலாளர் துறை ஆணையரின் கண்காணிப்பில் செயல்பட்டு வந்தன. வேலைச் சந்தையில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வகித்து வரும் மகத்தான பணியினை கருத்திற்கொண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களை சீரான முறையில் இயக்கிட புதிய துறை ஒன்று முழு நேர இயக்குநரைத் துறைத் தலைவராகக் கொண்டு 1963 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு





புதிதாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கொண்டு வரப்பட்டன. 1963 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

### வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு

11.3. வேலைவாய்ப்புப் பிரிவின் இயக்குநர் அவர்களது பணியில் உதவிட இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) மற்றும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்) என மூன்று இணை இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாவட்ட அளவில் ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் என்ற வீதத்தில் 29 முழு அளவிலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தமிழ்நாட்டில் தற்போது இயங்கி வருகின்றன. இந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முதன்மைப் பணியானது வேலை தேடுவோரைப் பதிவு செய்து அவர்களை வேலையளிப்பவரால் அறிவிக்கப்படும் பணிக் காலியிடங்களுக்கு பரிந்துரை செய்வதாகும். இந்த பணியமர்த்தல் வேலையைத் தவிர வேலைவாய்ப்பு அலுவலகங்கள், வேலை தேடும் இளைஞர்களுக்கு வேலைச் சந்தையில் உள்ள நிலவரத்திற்குத் தகுந்தாற்போல் தங்கள் வாழ்க்கை நெறியை வகுத்துக்கொள்ள உதவிடும் நோக்கத்துடன், தொழில்நெறி வழிக்காட்டிப் பணிகளையும் செயல்படுத்துன்றன. வேலை நிலவரத் தகவல் திட்டத்தைச் செயல்படுத்துவதும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கியமான ஒரு பணியாக அமைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் அனைத்து வேலைவாய்ப்பு நிலவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் காலாண்டு இடைவெளிகளில் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, அவை வேலைச் சந்தைகளில் குறுகிய கால இடைவெளியில் நேரிடும் வேலை நிலவர ஏற்றத் தாழ்வுகளைக் கண்டறிய ஆராயப்படுகின்றன.

11.4. மேலே குறிப்பிடப்பட்ட 29 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தவிர கீழ்க்காணும் சிறப்பு அலுவலகங்களும் வேலைவாய்ப்புத் துறையின் ஒரு முக்கிய பகுதியாக தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வருகின்றன."

[2001 செப்டம்பர் 3

| | |
|---|---|
| 1. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை–4 | – 1 |
| 2. தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை–20 | – 1 |
| 3. தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், (சென்னை மற்றும் கோயம்புத்தூர்) | – 2 |
| 4. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை–40 | – 1 |
| 5. துணை வேலைவாய்ப்பு அலுவலகம், ஓசூர் (தர்மபுரி மாவட்டம்) | – 1 |
| 6. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (கடலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், திருநெல்வேலி) | – 5 |
| 7. பழங்குடியினருக்கான தொழில் நெறி வழிகாட்டும் சிறப்பு நிலையங்கள் (சேலம், சங்கராபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, மற்றும் உதகமண்டலம்) | – 4 |
| மொத்தம் | 15 |

11.5. மேலே கூறப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணியினை மேற்பார்வையிட சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மண்டலங்களில் 4 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் வருவாய் மாவட்டங்களின் அடிப்படையில் மாவட்டங்களை தமது நிர்வாக எல்லைகளாகக் கொண்டு செயல்படுகின்றன.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள்**

11.6. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் உயிர்ப்பதிவேட்டில் வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் அனைத்து வகை மனுதாரர்களுக்கும் பாரபட்சமற்ற இலவசமாக பணியமர்த்தல் தொண்டினை அளித்து வருகின்றன. 2000 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் ஆற்றப்பட்ட முக்கிய பணிகளின் விவரம்:–



2001 செப்டம்பர் 3]

**பதிவு செய்தல்**

11.7. 2000 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உதவி கோரி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 6,29,701 ஆகும். இந்த ஆண்டில் வேலைவாய்ப்பகங்கள் மூலமாக 15,751 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு இறுதியில் (அதாவது 31–12–2000 அன்று) வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப்பதிவேட்டில் வேலைவாய்ப்பு தேடிப் பதிவு செய்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 46.7 இலட்சமாகும். இவர்களில் 16.4 இலட்சம் பெண்கள்: 10.4 இலட்சம் ஆதிதிராவிடர், 11,012 பேர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

**வேலை நிலவரத் தகவல் திட்டம்**

11.8. தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பொதுத் துறையில் உள்ள அனைத்து நிறுவனங்களிலிருந்தும் தனியார் துறையில் வேளாண்மை, வீட்டுப் பணியாளர்கள், சுயவேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் பகுதி நேரப் பணிபுரிவோரைத் தவிர 25 பணியாளர்களுக்கு மேல் பணிபுரியும் நிறுவனங்களிலிருந்தும் காலாண்டு இடைவெளிகளில் வேலைவாய்ப்புப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து அப்புள்ளிவிவரங்களை ஆய்வு செய்து வேலைவாய்ப்பு நிலவரத்தினை எடுத்துரைப்பதே "வேலை நிலவரத் தகவல் திட்டத்தின்" நோக்கமாகும். தனியார் துறையில் 10 நபர்களுக்குக் கீழ் பணிபுரியும் நிறுவனங்கள் இத்திட்டத்தின் வரம்பிற்குள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

"வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவிப்புச்) சட்டம் 1959"–ன்படி பொதுத் துறையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் தனியார் துறையில் 25 பணியாளர்களுக்கு மேல் பணியளிக்கும் நிறுவனங்களும் வேலை நிலவரத் தகவல்களை அளிக்க வேண்டும். இத்திட்டத்தில் தனியார் துறையில் 10 முதல் 24 பணியாளர்கள் வைத்துள்ள நிறுவனங்களிலிருந்து இத்தகவல்கள் விருப்ப அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன.

31–3–2000 மற்றும் 30–6–2000 உடன் முடிவுறும் காலாண்டுகளுக்கு இத்தகவல்களைப் பெற தொடர்பு கொள்ளப்பட்ட பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை, புள்ளி விவரங்கள் பெறப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அந்நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளரின் மொத்த எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன.

[2001 செப்டம்பர் 3

| வரிசை எண | இனம் | 31—3—2000 உடன் முடிவுறும் காலாண்டு | | 30—6—2000 உடன் முடிவுறும் காலாண்டு | |
|---|---|---|---|---|---|
| | | பொதுத் துறை | தனியார் துறை | பொதுத் துறை | தனியார் துறை |
| 1 | புள்ளிவிவரங்கள் பெற தொடர்பு கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,344 | 12,943 | 12,365 | 12,523 |
| 2 | புள்ளிவிவரங்கள் பெறப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,295 | 12,093 | 12,337 | 11,712 |
| 3 | மொத்த வேலை வாய்ப்பு | 15,97,240 | 9,27,233 | 16,03,522 | 9,04,074 |

தொழில் நெறி வழிகாட்டும் பணி

11.9. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலை நிலவரத் தகவல்களைக் கோரும் வேலை நாடுநர்களுக்கு தொழில் தகவல்கள் அளித்து தொழில்நெறி வழிகாட்டும் பணியினைத் தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள 18 தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகள் செய்து வருகின்றன. இத்தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகள் கீழ்க்காணும் வழிகாட்டும் பணிகளை ஆற்றி வருகின்றன:

1. வேலை நாடுநர்கள் தகுந்த தொழிலைத் தேர்ந்தெடுக்க உதவிடும் வகையில் அவர்கள் கோரும் தகவல்களை அளித்தல்.

2. பல்வேறு கல்வி நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இதர அரசுத் துறைகள் ஆகியவை நடத்தும் கருத்தரங்கம், தொழில் நெறி கண்காட்சி ஆகிய வழிகாட்டும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுதல்

3. தொழில் தகவல்களைச் சேகரித்து, தொகுத்து, தேவைப்படும் வேலை நாடுநர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும், பெற்றோர் ஆசிரியர்க்கும் அளித்தல்



2001 செப்டம்பர் 3]

4. கல்வி, பயிற்சி, வேலைவாய்ப்புத் தகவல் அடங்கிய சிற்றேடுகளையும், சுவரொட்டிகளையும் தயாரித்து வேலை நாடுநர்கள் பயனடையச் செய்தல்.

5. வருங்கால வேலைவாய்ப்புகள், புதிதாகத் தோன்றும் தொழில்கள், பயிற்சிகள், ஆள் பற்றாக்குறைத் தொழில்கள் ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கைகள் வெளியிடுதல்.

6. தாழ்த்தப்பட்ட/பழங்குடியின மனுதாரர்கள் பயன்பெற சிறப்புத் தொழில் நெறி வழிகாட்டும் பணிகளைச் செய்தல், அதாவது போட்டித் தேர்வுகள் எழுதுவோருக்கு முன் பயிற்சி வகுப்பு நடத்துதல், தன்னம்பிக்கை ஊட்டும் நிகழ்ச்சிகளை நடத்துதல், சுயவேலைவாய்ப்புக்கான ஆதாரங்கள், வசதிகள், வாய்ப்புகள், திட்டங்கள் பற்றி தெரிவித்து சுயவேலைவாய்ப்பில் ஈடுபட ஊக்குவித்தல்.

7. தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வினை எழுதும் ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி வகுப்புகளை நடத்துதல்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகள் அலுவலகத்திற்குள்ளும் வெளியேயும் ஆற்றி வரும் பணிகளின் விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | பொருள் | 2000 ஆண்டில் | 2001—ல் (31—3—2001 வரை) |
|---|---|---|---|
| 1 | தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகளால் பயன்பெற்ற மனுதாரர்களின் எண்ணிக்கை | 25,591 | 5,743 |
| 2 | தனிப்பட்ட முறையில் தொழில் தகவல் வழங்கப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை | | |
| | 1) நேரில் | 55,350 | 9,067 |
| | 2) அஞ்சல் மூலமாக | 14,727 | 3,157 |

| | | | |
|---|---|---|---|
| 3 | நீண்ட காலமாக உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்பவர்களுக்காக அளிக்கப்பட்ட தொழில் நெறி வழிகாட்டும் அறிவுரைகள் | 14,867 | 4,019 |
| 4 | வாழ்க்கைத் தொழில் நெறி ஆலோசனை களுக்காக நடத்தப்பட்ட குழுக் கூட்டங்கள் | 5,373 | 1,263 |
| 5 | அக்கூட்டங்களில் கலந்து கொண்டு பயன்பெற்ற மனுதாரர்கள் | 65,178 | 16,301 |
| 6 | வாழ்க்கைத் தொழில் நெறி வழிகாட்டும் அறைக்கு வருகை புரிந்த மனுதாரர்களின் எண்ணிக்கை | 71,349 | 22,739 |
| 7 | பழகுநர் பயிற்சிக்காக பரிந்துரைக்கப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை | 7,578 | 968 |
| 8 | பயிற்சியில் அமர்த்தப் பட்டோர் | 965 | 18 |
| 9 | பழகுநர் பயிற்சியில் அமர்த்தப்பட்டோர் | 725 | 906 |
| 10 | பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவர்களுக்கு நிகழ்த்தப்பட்ட வாழ்க்கைத் தொழில் நெறி உரைகள் | 1,294 | 373 |
| 11 | தொடர்பு கொள்ளப்பட்ட வேலையளிப்போரின் எண்ணிக்கை | 856 | 613 |



| | | | |
|---|---|---|---|
| 12 | நடத்தப்பட்ட தொழில் நெறி வழி காட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு களின் எண்ணிக்கை | 48 | 23 |
| 13 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக நடத்தப்பட்ட இலவச முன் பயிற்சி வகுப்பு கள் மூலம் தேர்ச்சி பெற்ற மனுதாரர் களின் எண்ணிக்கை<br>1. மருத்துவம்<br>2. பொறியியல் | <br>41<br>169 | முடிவுகள் அறிவிக் கப்பட வில்லை |

**கிராமப்புற பள்ளிகளைத் தத்து எடுத்து தொழில் நெறி வழிகாட்டிப் பணியினை அப்பள்ளிகளில் தீவிரமாக செயல்படுத்தும் முன்னோடித் திட்டம்**

*11.10.* இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமப்புற மேல்நிலைப்பள்ளி, கல்வித் துறையின் ஆலோசனைப்படி தேர்வு செய்யப்பட்டு, தத்தெடுக்கப்பட்டு அப்பள்ளியில் மேல்நிலைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு தீவிரமாகத் தொழில் நெறி வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. *1999–2000* ஆம் ஆண்டிற்கான கல்வியாண்டில் இத்திட்டத்தின்கீழ் *21* பள்ளிகள் தத்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது.

**சுய வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் முயற்சிகள்**

*11.11.* மாதச் சம்பள வேலைவாய்ப்புகள் அரிதாகிக் கொண்டே வரும் இன்றைய சூழலில் சுய வேலை முறையில் வாழ்க்கை நெறியினை உருவாக்கிக் கொள்வது வேலைவாய்ப்பின்மையைப் போக்க உதவும் முக்கிய நெறிமுறையாக வளர்ந்து வருகிறது. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலை தேடுவோரின் மாபெரும் பட்டியலைக் கொண்ட உயிர்ப்பதிவேடுகளைப் பராமரிக்கும் நிறுவனங்களாதலால் வேலை தேடும் இளைஞர்களில் சுய வேலைவாய்ப்பில் நாட்டம் கொண்ட நபர்களைக் கண்டறிந்து அவர்களை சுய தொழில் முறையில் வாழ்க்கை நெறியை அமைத்துக் கொள்ள உதவுவது வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கியமான ஒரு பணியாகக் கருதப்படுகிறது. *2000* ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் த்தம்

அளவிலேயே கூட்டுக் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்து சுய வேலை வாழ்க்கை நெறி பற்றி இளைஞர்களிடையே ஒரு விழிப்புணர்வை உருவாக்கவும், சுய வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க மைய மாநில அரசுகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் அளித்து வரும் உதவிகள் மற்றும் சலுகைகள் பற்றிய தகவல் வழங்கவும் நடவடிக்கை எடுத்தன. இத்தகைய சிறப்பு முயற்சியினால் 2000 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட 515 இளைஞர்களுக்கு பல்வேறுபட்ட வகையில் உற்பத்தி மற்றும் வாணிப நிறுவனங்களைத் தொடங்குவதற்கு ரூ.290 இலட்சம் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

போட்டித் தேர்வுகளில் கலந்துகொள்ளும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மனுதாரர்களுக்கான இலவச பயிற்சி மற்றும் முன்னோடித் தேர்வு பயிற்சி வகுப்புகளை நடத்துதல்.

11.12. தற்போது தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து நகரங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிட இளைஞர்களிடையே சுய வேலைவாய்ப்பு நெறி பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் சுய தொழில் தொடங்க அனைத்து வகையான உதவிகளையும் இந்த மையங்கள் நல்கி வருகின்றன.

இத்தகைய வழிகாட்டல் பணிகள் மட்டுமின்றி மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற பல்வேறு தேர்வு நிறுவனங்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ள ஆதிதிராவிட இளைஞர்களுக்கு முன்னோடிப் பயிற்சி அளிப்பதற்கு வகுப்புக்களையும் மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற தொழில் படிப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கைக்கு நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளை எழுதும் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புக்களையும் இந்த மையங்கள் நடத்துகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் மூலமாக நடத்தப்பட்ட இத்தகைய இலவச பயிற்சி வகுப்புகள் வாயிலாக 2000 ஆம் ஆண்டில் 4,564 இந்து ஆதிதிராவிடர்/பழங்குடியின பதிவுதாரர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.



**வேலைக்காகக் காத்திருக்கும் உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள்**

11.13. விழிப்புலன் இழந்தவர், செவிப்புலன் இழந்தவர் மற்றும் உறுப்பு நலன் குறைந்தோர், தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்கள் ஆகிய ஐந்து வகையான உடல் ஊனமுற்ற மனுதாரர்களைத் தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் பதிவு செய்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு உதவி அளித்து வருகின்றன. சென்னை–40 இல் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும் மற்றும் காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர், நாகர்கோயில், கோயம்புத்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஈரோடு, உதகமண்டலம் மற்றும் கடலூர் ஆகிய 13 மாவட்டங்களில் இயங்கி வரும் சிறப்பு உடல் ஊனமுற்றோர் பிரிவுகளும் சிறப்பு பணியமர்த்தல் உத்தியினைக் கையாண்டு உடல் ஊனமுற்ற பதிவாளர்கள் பணியில் அமர்த்தப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொண்:டு வருகின்றன. இந்த முறையில் 2000 ஆம் ஆண்டு மொத்தம் பதிவு செய்யப்பட்ட 6,242 ஊனமுற்ற நபர்களில் (498 பார்வையற்றோர், 339 செவிப்புலன் இழந்தோர், மற்றும் 5,405 உறுப்பு நலம் குன்றியோர்) 1,018 உடல் ஊனமுற்ற பதிவுதாரர்கள் சம்பளம் பெறும் வேலையில் பணியமர்த்தப்பட்டனர். (37 விழிப்புலன் இழந்தோர், 22 செவிப்புலன் இழந்தோர், 959 உடல் உறுப்பு நலன் குன்றியோர்). 31–12–2000 நிலவரப்படி மொத்தம் 65,799 உடல் ஊனமுற்ற நபர்கள் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள உயிர்ப்பதிவேடுகளில் வேலைவாய்ப்பு உதவி கோரி காத்திருக்கின்றனர். இவர்களில் 6,753 பார்வையற்றோரும், 5,289 செவிப்புலன் இழந்தோரும், 53,757 இதர உறுப்பு நலன் குன்றியோரும் அடங்குவர்.

**(ஆ) பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம்**

11.14. பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம் சமூக நலத் துறை மூலம் இத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் உயிர் பதிவேட்டிலுள்ள பார்வையற்ற மனுதாரர்களுக்கு கீழ்க்கண்டவாறு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

[2001 செப்டம்பர் 3

| | |
|---|---|
| 1.பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு கீழான தகுதி | மாதம் ரூ.200/– |
| 2.புகுமுக வகுப்பு/மேல்நிலைப் பள்ளி படித்தவர் | மாதம் ரூ.250/– |
| 3. பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | மாதம் ரூ.300/– |

இத்திட்டம் ஆரம்பித்த 01–10–1981 முதல் 31–03–2000 வரை 6,821 பார்வையற்ற மனுதாரர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு இதுவரை நிவாரணத் தொகையாக ரூ.219.42 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 31–03–2000 தேதியில் 1238 பயன்தாரர்கள் நிவாரணத் தொகை பெற்று வந்தனர். 1999–2000 ஆண்டுக்கு ரூ.25.10 இலட்சம் இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2000–2001 நிதி ஆண்டிற்கு ரூ.29.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.26.77 இலட்சம் செலவிடப்பட்டது. 1051 மனுதாரர்கள் பயன் அடைந்தனர்.

### வேலைவாய்ப்பு அலுவலகங்களை கணினிமயமாக்குதல்

11.15. திறமையான, குறைபாடற்ற நிறைவான பணிச் சேவையை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்துள்ள மனுதாரர்களுக்கும் மற்றும் வேலையளிப்போருக்கும் அளிப்பதற்கு ஏதுவாகவும், மனுதாரர்களைத் தேர்வு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினைக் குறைப்பதற்கு ஏதுவாகவும், 986–87 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கணினி மயமாக்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதுவரை 28 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

### வேலை நாடுநர்களின் தன்னார்வ பயிலும் வட்டங்கள்

11.16. அரசாணை நிலை எண் 106, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 20–7–1999–ல் வேலைநாடுநர்களின் தன்னார்வ பயிலும் வட்டங்கள் 24 ஏற்படுத்துவது தொடர்பான ஆணைகள் வெளியிடப்பட்டன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்கள், வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெறும் வகையில் அவர்களது தேர்வு எழுதும் திறமையை உயர்த்தும் நோக்குடன் தொடங்கப்பட்டுள்ளன.

ஐந்து மாநகராட்சிகள் நீங்கலாக இதர 24 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஒரு நிதியாண்டிற்கு ரூ.14.40 இலட்சம் செலவில் 24 தன்னார்வ பயிலும் வட்டங்கள் ஏற்படுத்த மேற்குறிப்பிட்ட அரசு



2001 செப்டம்பர் 3]

ஆணையில் அரசு அனுமதி அளித்துள்ளது. இம்மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இவ்வட்டங்கள் சிறப்பாக செயல்படுகின்றன.

தன்னார்வ பயிலும் வட்டத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள இயக்கக் குழு மூலமாக இத்தொகைக்கு நூல்கள் மற்றும் வார, மாத, பருவ இதழ்கள் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்க அனைத்து மையங்களுக்கும் வாங்கி அளிக்கப்பட்டுள்ளன. எல்லா மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலுமாக இதுவரை சுமார் 7200 மனுதாரர்கள் தங்களது பெயர்களைத் தன்னார்வ பயிலும் வட்டங்களில் பதிவு செய்து பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்காக 31–03–2001 வரை ரூ.22.80 இலட்சமும் செலவிடப்பட்டது. இதுவரை இப்படிப்பு மையங்களில் பயின்ற 176 பேர் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று பணி நியமனம் பெற்றுள்ளனர்.

### தனியார் துறையில் வேலைவாய்ப்பு

11.17. தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தற்போது பதிவு செய்துள்ள வேலையில்லாத இளைஞர்களுக்குத் தனியார் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதை ஒரு முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றன. சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் தனியார் துறையில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தரும் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக அம்மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் நடத்தியுள்ளன. சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது வெள்ளிக்கிழமையும் தனியார் துறை நிறுவனங்கள் வந்து பதிவுதாரர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வேலையில் அமர்த்தும் நாளாகச் செயல்படுத்தப்படுகிறது. இம்முயற்சிகளை தமிழ்நாட்டிலுள்ள இதர மாவட்டங்களிலும் அடுத்து வரும் ஆண்டுகளில் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 12

## கைவினைஞர் பயிற்சித் திட்டம்

12.1. 1963 ஆம் ஆண்டு முதல் வேலைவாய்ப்பு பிரிவு மற்றும் பயிற்சிப் பிரிவு ஆகியவை ஒன்றாக்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டது.

12.2. கைவினைஞர் பயிற்சித் திட்டமானது திறமை வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கித் தருவதில் முக்கிய பங்காற்றுகிறது.

**கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் ஆரம்ப மற்றும் நீண்டகாலக் குறிக்கோள்கள்**

1. பள்ளிக் கல்வி கற்ற ஏழை, எளிய இளைஞர்கள் பயனடைய வேலைவாய்ப்புகள் பெறும் வகையில் தொழிற்பயிற்சி அளித்தல்.

2. செயல்திறன் முன்னேற்றப் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்தத் தேவையான உள்ளமைப்புகளை உருவாக்குதல்.

3. தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப பல்வேறு தொழிற்பிரிவுகளில் சிறந்த பணியாளர்களை உருவாக்குதல்

4. ஊரக இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறவும், சுயவேலைவாய்ப்புப் பெறவும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தோற்றுவிப்பதை ஊக்குவித்தல்.

5. தொழிற்சாலைகள் மற்றும் பயிற்சியாளர்கள் இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் பயன்கருதி, பணிமனைகளில் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவம் இவற்றை பரிமாற்றம் செய்ய தொழிற்சாலைகளுக்கிடையே நெருங்கிய தொடர்பினை தோற்றுவித்தல்.

6. பணிபுரியும் தொழிலாளர்களின் கருத்தியல் பாடம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்த பயிற்சி அளித்தல்.

7. தொழிற்பயிற்சி இல்லாத நபர்களின் திறமையினை ஊக்குவிக்க கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படாத தொழிற்பிரிவுகளில் அடிப்படைப் பயிற்சி அளித்தல்.

8. தொழிற் துறையின் முன்னேற்றத்தில் அதிக அளவு மகளிர் பங்கேற்கச் செய்தல்.

**அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்:**

12.3. கைவினைஞர் பயிற்சித் திட்டம் தமிழ்நாடெங்கும் அமைந்துள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் கைவினைஞர்களை உருவாக்குகிறது. தமிழ்நாடெங்கும் 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 35 பொறியியல் மற்றும் 16 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கும் வகையில் மொத்தம்





17,200 பயிற்சியாளர் இருக்கைகளைக் கொண்டதாக அமைக்கப் பெற்றுள்ளது (மாணவர் மற்றும் மாணவியர் இருவரும் சேர்த்து). தொழிற்பிரிவின் இயல்புக்கேற்றவாறு பயிற்சியின் கால அளவு ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள மொத்தம் 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மகளிருக்கென 10 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் ஆதிதிராவிடருக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மலைவாழ் மக்களுக்கென ஓர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் சங்கராபுரத்திலும் இயங்குகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| பொது போட்டியாளர் | 31% | 1) ஊரக இளைஞர்களுக்கான இட ஒதுக்கீடு | 15% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 30% | | |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 20% | 2) உடல் ஊனமுற்றவர்களுக்கான இட ஒதுக்கீடு | 3% |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 18% | 3) தாய்,தந்தையரை இழந்தவருக்கான இட ஒதுக்கீடு | 2% |
| பழங்குடியினர் | 1% | 4) மாநில அளவில் விளையாட்டில் முதன்மையானவர்க்கான இட ஒதுக்கீடு | 1% |
| மொத்தம் | 100% | | |

12.4. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இன, இட ஒதுக்கீட்டிற்கு உட்பட்டு முழுமையாக மதிப்பெண் அடிப்படையில் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்படுகிறார்கள். தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற குறைந்தபட்ச கல்வித் தகுதி பள்ளியிறுதி வகுப்பு வரை கற்றிருக்க வேண்டும். சில தொழிற் பிரிவுகளுக்கு பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கிராமப்புற மக்களின், குறிப்பாக கிராமப்புற இளைஞர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையினை உயர்த்திட அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் சேர்க்கையின்போது கிராமப்புற இளைஞர்களுக்கு 15% இட ஒதுக்கீடு ஏற்கெனவே செயல்படுத்தி வரும் இட ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு அளிக்க அரசு ஆணையிட்டது. அவ்வாணை 1999 சேர்க்கையிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

[2001 செப்டம்பர் 3

12.5. தொழிற்பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் ஆகியவை தேசிய வாழ்வியல் கல்வி பயிற்சித் திட்டக் குழுவால் அகில இந்திய ரீதியில் ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பாட நூல்கள் ஆங்கிலத்திலேயே பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் குறைவான ஆங்கில அறிவு உள்ள பள்ளி மாணவர்கள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கருத்தியல் பாடங்களைப் பயிலுவதில் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு பள்ளிக் கல்வியில் செய்தது போன்று, தொழிற்பயிற்சி நிலையங்களிலும் தமிழை பயிற்று மொழியாக்கி முதற்கட்டமாக 7 பொறியியல் தொழிற்பிரிவுகளின் கருத்தியல் மற்றும் செய்முறை குறித்த பாடப் புத்தகங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு தற்போது தமிழில் வகுப்புகள் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயிற்சியின் முடிவில் தொழிற்தேர்வுகள் வருடத்திற்கு ஒருமுறை அகில இந்திய அளவில் ஜூலை மாதம் நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழிற்சான்றுகள் வழங்கப்படுகின்றன. துணை தொழிற்தேர்வுகள் ஒவ்வோர் ஆண்டும் தேர்ச்சி பெறாத பயிற்சியாளர்களுக்கு ஜனவரி மாதத்தில் நடத்தப்படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்:

12.6. தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கிடும் சீரிய முயற்சியை நிறைவு செய்திடும் வகையில் தொழிற்பயிற்சி அளிக்க தனியார் துறையினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கிட ஊக்குவிக்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 603 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 59,200 பயிற்சியாளர் இருக்கைகளைக் கொண்டு தேசிய வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த 603 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 165 புதிய தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 116 ஊராட்சி ஒன்றியங்களிலும் தொடங்கப்பெற்றுள்ளது. இதுவரையிலும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படாத 79 ஊராட்சி ஒன்றியங்களிலும் மேலும் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தொழிற்பள்ளிகள்:

12.7. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தவிர இம்மாநிலத்தில் 12,768 இருக்கைகள் கொண்ட 281 தொழிற்பள்ளிகள் இயங்குகின்றன.



2001 செப்டம்பர் 3]

இத்தொழிற்பள்ளிகள் பெரும்பாலும் அறக்கட்டளையினால் நடத்தப்பட்டு வருகின்றன. 8 ஆம் வகுப்பு முதல் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் கல்வி பயின்றவர்கள் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு மாநில அரசின் தொழிற்பள்ளிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 281 தொழிற்பள்ளிகளில் 49 பள்ளிகள் பணியாளர் ஊதியம் அல்லது பயிற்சி செலவினம், இதில் எது குறைவோ அதில் 75 விழுக்காட்டினை அரசின் பராமரிப்பு மானியமாகப் பெறுகின்றன.

தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்:

12.8. தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்குத் தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன்கீழ் தொழில் நிறுவனங்களில் ஆறு மாதம் முதல் நான்கு ஆண்டுகள் வரை தொழிற்பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டு தொழில் நிறுவனத்தில் தமது செயல்திறத்தை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்களினால் உருவாக்கப்படும் அனுபவம் குறைவான தொழிலாளர்களை, தொழிற்பழகுநர் பயிற்சி நிலையங்கள் அனுபவம் மிகுந்த திறமையான தொழிலாளர்களாக மாற்றி அமைக்கிறது. தொழிற்பழகுநர்கள் தொழிற்பழகுநர் பயிற்சிக் காலத்தில் பணிமனை செய்முறை திறனை தொழில் நிறுவனங்களிலும், கருத்தியல் பாடத் திறனை தொடர் அறிவுரை மையங்களிலும் பெறுகின்றனர். தொழிற்பழகுநர் பயிற்சிக் காலத்தில், தொழிற்பழகுநர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.820/– முதல் ரூ.1230/– வரை உதவித் தொகையாக சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் வழங்குகின்றன.

12.9. இத்தொழிற்பழகுநர் பயிற்சி 138 தொழிற்பிரிவுகளில் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 13,612 தொழிற்பழகுநர்கள் 2082 தொழில் நிறுவனங்களில் தொழிற்பழகுநர் பயிற்சி பெற்று வருகின்றனர். அகில இந்திய தொழிற்தேர்வு ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறுகிறது. தேர்ச்சி பெற்ற தொழில் பழகுநர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. சுமார் 14,000 தொழிற்பழகுநர்கள் ஒவ்வோர் ஆண்டும் தொழிற்தேர்வில் கலந்துகொள்கின்றனர்.

[2001 செப்டம்பர் 3

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்:

12.10. மாலை நேர வகுப்புகள் திட்டம் 11 தொழிற் பிரிவுகளில், தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள அம்பத்தூர், கிண்டி, வடசென்னை, மதுரை, கோவை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 1085 தொழிலாளர்கள் பயிற்சி பெறும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. தாம் பணிபுரியும் தொழிற்சாலைகளில் போதிய அளவு பணிமனை செயல் திறனை அடையும் தொழிலாளர்களுக்கு தொழிற்பிரிவுகளில் கருத்தியல் பாடங்கள இந்த அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாலை நேர வகுப்புகளில் கற்பிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் தேர்வு நடத்தப்பெற்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

பயிற்றுநர்களுக்குப் பயிற்சி:

12.11. மிக விரைவாக முன்னேறி வரும் தொழில்நுட்ப வளர்ச்சியினை அறிந்துகொள்ள பயிற்றுநர்கள் மத்திய அரசினால் நடத்தப்படும் மத்திய பயிற்சி நிலையங்கள்/முன்னோடி பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சியாளர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டு வருகின்றனர். இப்பயிற்சிக் காலம் ஓர் ஆண்டு ஆகும். இப்பயிற்சியினால் பயிற்றுநர்கள் தங்களது செயல்திறன் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைத் தெரிந்துகொண்டு, அவற்றை பயிற்சியாளர்களுக்கு போதிப்பதற்கு ஏதுவாகின்றது.

12.12. இளநிலை பயிற்சி அலுவலர், உதவிப் பயிற்சி அலுவலர்களுக்கு ஒலி ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, கல்வி கற்பிக்கும் நுணுக்கம் போன்றவற்றில் இரு வார கால பயிற்சி அம்பத்தூர் அரசினர் தொழிற்பியிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றது. இந்த மறு பயிற்சி அவர்களின் கல்வி கற்பிக்கும் திறனை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்டம்:

12.13. வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்டம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், அம்பத்தூர் மற்றும் கோவையில் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் பயிற்சிக்காக நடைபெற்று வருகிறது. நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாட்டினை தொழிற்சாலை பணியாளர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் இரண்டு



2001 செப்டம்பர் 3]

அல்லது மூன்று வாரங்கள் வரை இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இதனால் தற்பொழுதுள்ள தொழில்நுட்பத்துடன் தொழிலாளர்கள் பணிபுரிய ஏதுவாகின்றது.

மகளிர் நலன்:

12.14. தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள 53 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கிண்டி, அம்பத்தூர், சேலம், கடலூர், கோவை, திண்டுக்கல், புள்ளம்பாடி, திருப்பூர், மதுரை மற்றும் நாகர்கோயில் ஆகிய பத்து இடங்களில் மகளிருக்காகவே அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவை தவிர ஏனைய 43 தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 30 விழுக்காடு இருக்கைகள் மகளிருக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன.

12.15. தற்போதுள்ள 10 மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 7 சொந்த கட்டடங்களில் இயங்குகின்றன. மீதமுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படல் வேண்டும். அனைத்து மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்த கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

12.16. மகளிருக்கு வாழ்வியல் தொழிற்கல்வி அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தொழிற்சாலைகள், சேவை நிறுவனங்கள் ஆகியவற்றில் திறமை மிக்க மகளிர் தொழிலாளர்கள் தேவையை இத்திட்டம் பூர்த்தி செய்கிறது. இத்திட்டம் மகளிருக்கு சுய வேலைவாய்ப்பு நம்பிக்கையை வளர்ப்பதுடன் அவர்கள் வருமானத்தை மேம்படுத்திக்கொள்ளவும் உதவுகிறது.

ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நலன்:

12.17. சிதம்பரத்தில் இயங்கும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஆதிதிராவிட வகுப்பினருக்கென்றே உள்ளது. அதேபோல் சங்கராபுரத்திலும் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் பழங்குடியினர் நலனுக்காக இயங்குகின்றது. இதைத் தவிர அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 18 விழுக்காடு இருக்கைகள் ஆதிதிராவிட வகுப்பினருக்காகவும், ஒரு விழுக்காடு இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

12.18. ஆதிதிராவிட பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூ.55/– லிருந்து ரூ.150/– ஆகவும், பழங்குடியினருக்கு ரூ.82–50 லிருந்து ரூ.175 ஆகவும் ஆகஸ்ட் 1999 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

[2001 செப்டம்பர் 3

**மின்கம்பி உதவியாளர் தகுதிகாண் தேர்வு:**

12.19. 21 வயதை எட்டியவர்கள், மின்சார ஒப்பந்ததாரர்களிடம் பணிபுரிந்து குறைந்தது 5 வருட முன் அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றி 5 வருட முன் அனுபவம் உடையவர்களாயின், அவர்கள் இத்தேர்வுக்கு தகுதியுடையவர்கள் ஆவர். இத்தேர்வு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இத்தேர்வு கடைசியாக செப்டம்பர் 2000–இல் நடைபெற்றது. அதில் சுமார் 10,224 நபர்கள் தேர்வில் கலந்து கொண்டனர். தேர்ச்சி பெற்றவர்களுக்கு மின்கம்பி உதவியாளர் தகுதிகாண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**இயந்திர பராமரிப்பு மையங்கள் மற்றும் பணிமனை:**

12.20. இத்திட்டம் உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டது. இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு மிகவும் அவசியமானதொன்றாகும். எனவே, அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சீராக பராமரிப்பதற்கு வடசென்னை, சேலம், கோவை, மதுரை, திருச்சி மற்றும் பேட்டையில் உள்ள ஆறு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இயந்திர பராமரிப்பு மையங்களும், அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாநில அளவில் இயந்திர பராமரிப்பு பணிமனை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவித் திட்டம் முடிவடைந்தவுடன் இத்திட்டமானது மாநில திட்டம் சாரா திட்டத்துடன் 1–1–1998 முதல் இணைக்கப்பட்டது.

**அடிப்படை பயிற்சி மையங்கள்:**

12.21. தொழிற் நிறுவனங்களால் அமர்த்தப்படும் புதிய தொழிற் பயிற்சியில்லா தொழில் பழகுநர்களுக்கு அடிப்படை பயிற்சி தேவைப்படுகிறது. மேலும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் இல்லாத தொழிற்பிரிவுகளுக்கு அடிப்படை பயிற்சி, தொழிற்பழகுநர் திட்டத்தின்கீழ் உள்ள அடிப்படை பயிற்சி மையத்தில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவி முதல் நிலை திட்டத்தில் இரு அடிப்படை பயிற்சி மையங்கள் ஒன்று அம்பத்தூரில் உணவகம், உணவாக்கம் மற்றும் பரிமாறுதல் தொழிற்பிரிவுக்கும் மற்றொன்று இராணிப்பேட்டையில் இரசாயன தொழிற்பிரிவிற்கும் ஆக இரு அடிப்படை பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால் தொழிற்பழகுநர்கள் உணவாக்கம் மற்றும் இரசாயன தொழிற்பிரிவுகளில் அடிப்படை பயிற்சி பெற்று பயன் அடைகின்றனர்.



2001 செப்டம்பர் 3]

**உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்:**

12.22. உயர் தொழில்நுட்பத் திறத்தின் முன்னேற்றம் தொழில் வளர்ச்சியிலும் தானியங்கி கருவிகளிலும் பெருகி வருகிறது. இதனால் திறமையான தொழிலாளர் தலைமுறைக்கு இயந்திரங்கள் இயக்குவதிலும், பராமரிப்பதிலும் மற்றும் புதிய செயல்திறன் கொண்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகளில் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயிற்சி பெறும்பொருட்டு கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகளில் உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டம் அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

1. தானியங்கி இயந்திரத் தொழில்
2. கணினி சார் வரைவு
3. எழுத்து மற்றும் எண் மின்னணுவியல்
4. தனி கணினி பராமரிப்பு

**மேலாண்மை நிர்வாக தகவல் முறை அறிமுகப்படுத்துதல்:**

12.23. உலக வங்கியின் பரிந்துரையின்படி இயக்ககத்திற்கு மேலாண்மை நிர்வாக தகவல் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மேலாண்மை நிர்வாக தகவல் முறை இம்மாநிலத்தில் உள்ள அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் செயலாக்கம், தொழிற்பிரிவுகள். தொழிற்பயிற்சி நிலையங்களுக்குத் தேவையான மூலதனம், தொழிற்சாலைகளில் பணிக்குத் தேவையான தொழிற்பிரிவுகளை அறிமுகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கை, பயிற்சியினை மேம்படுத்துவதற்கான திட்டம், தொழிற்தேர்வு மற்றும் சான்றிதழ் வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் மூலம் செயலாக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் பயிற்சித் திட்டம்:**

12.24. உலக வங்கி நிதியுதவித் திட்டத்தில் பதினொரு திட்டங்கள் 1989–90 முதல் 1998–99 வரை (31–12–1998 முடிய) ரூ.33.22 கோடி செலவில் செயலாக்கப்பட்டன. இத்திட்டங்களின் செலவினம் மாநில மற்றும் மைய அரசால் சமமாக செலவிடப்பட்டது. உலக வங்கித் திட்டம் முடிவுற்றதும், அத்திட்டங்கள் மாநில திட்டம் சாரா திட்டத்தில் 100 விழுக்காடு மாநில அரசின் நிதிச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட பதினொரு திட்டங்கள் கீழ்வருமாறு:–

1. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இயந்திரங்களை நவீனப்படுத்துதல்.

2. இயந்திரங்கள் பராமரிப்பு மையங்கள் மற்றும் பணிமனை அமைத்தல்

3. ஒலி ஒளி சாதன வசதிகள் அமைத்தல்

4. புதிய தொழிற்பிரிவுகளை ஏற்கெனவே உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் விரிவுபடுத்துதல்.

5. அடிப்படை பயிற்சி மையங்களை அமைத்தல்

6. தொடர் அறிவுரை மையங்கள் அமைத்தல்

7. வாழ்வியல் முன்னேற்ற பயிற்சி விரிவாக்கம்

8. மகளிருக்கென புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துதல்

9. மாநில திட்ட செயலாக்கப் பிரிவு அமைத்தல்

10. உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் (100% பங்குத் தொகை மத்திய அரசு அளித்த திட்டம்)

11. மேலாண்மை நிர்வாக தகவல் முறை அறிமுகப்படுத்துதல் (100% பங்குத் தொகை மத்திய அரசு அளித்த திட்டம்)

## அத்தியாயம் - 13

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

13.1. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 30–11–1978 அன்று பதிவு செய்யப்பட்டது. இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும்.



13.2. இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம் வேலைநாடும் இந்திய தொழிலாளர்கள் அயல்நாடுகளில் தகுந்த பணியமர்த்தங்களைப் பெற உதவி புரிவதாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும்: வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும்.

13.3. இலாபம் ஈட்டும் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். 31–3–2000–இல் அமைந்தவாறு இதன் மொத்த இலாபம் ரூ.13.90 இலட்சமாகும். இது 1995–96 ஆம் ஆண்டிலிருந்து 2 விழுக்காடு இலாபப் பங்கீடு அளித்து வருகிறது.

13.4. அதன் துவக்கம் தொடங்கி 31–5–2001 வரை, இந்நிறுவனம் மொத்தம் 5,564 பேர்களை வேலைவாய்ப்புகளின் பேரில் அயல்நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது. பயனாளிகளில் பெரும்பாலோர் முழுத் திறன் படைத்த அல்லது ஓரளவு திறன் படைத்த வேலையாட்களும், மருத்துவத் துறையைச் சார்ந்தோர்களுமே ஆவர். சவூதி அரேபியாவின் சுகாதார அமைச்சகம் மருத்துவர்களையும் மருத்துவ தொழில்நுட்பாளர்களையும் தேர்வு செய்வதற்கு இந்தியாவில் சார்ந்திருக்கும் பெரும்படியான முகமை நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும்.

13.5. தன் செயல்பாடுகளைப் பலமுனைப்படுத்தும் நோக்கில், இந்நிறுவனம் பின்வருவனவற்றையும் செய்து வருகிறது.

1. சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் மனுதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பாஸ்போர்ட் தொடர்பான பணிகளை அளிப்பது

2. வெளிநாடுகளில் உள்ள வேலையளிப்போரால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கும் தம் சொந்த முயற்சியால் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெறும் மனுதாரர்களுக்கும் விசா முத்திரையிட்டுப் பெறும் பணியைச் செய்து தருவது

3. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச்சீட்டுகளை விற்பனை செய்வது

13.6. இந்நிறுவனம் முழுமை பெற்ற ஒரு பயணப் பிரிவைக் கொண்டுள்ளது. அது IATA (பன்னாட்டு விமானப் போக்குவரத்துக் கழகம்) அமைப்பின் அங்கீகாரம் பெற்றது. அது உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணச் சீட்டுகளையும் கையிருப்பு வைத்துள்ளது.

[2001 செப்டம்பர் 3

13.7. இந்நிறுவனம் தன் பணியமர்த்த செயல்பாட்டையும் விமானப் பயணச் சீட்டுகளின் விற்பனையையும் பெருக்குவதற்குத் தகுந்த திட்டங்களைத் தீட்டி வருகிறது.

## அத்தியாயம் - 14

### புதிய திட்டங்கள்

நடப்பு நிதியாண்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் அரசால் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:–

(1) தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 5 ஆண்டுகளுக்குக் குறைவில்லாமல் பதிவு பெற்றுள்ள 60 வயதினை பூர்த்தி செய்த உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரிய நிதியிலிருந்து ஒரு தொழிலாளிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/– ஓய்வூதியமாக அளித்தல்:

(2) தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளவர்களில் 1000 நபர்களுக்கு கண் கண்ணாடி வாங்கிக்கொள்ளும்பொருட்டு நபர் ஒருவருக்கு ரூ.250/– நிதியுதவி அளித்தல்:

(3) அனைத்து 71 தொழிலாளர் நல மையங்களிலும் குழந்தைகள் காப்பகம் அமைக்கும் இலக்கினை அடையும்பொருட்டு, இதுவரை குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படாத 19 தொழிலாளர் நல மையங்களில் குழந்தைகள் காப்பகம் தொடங்குவது:

(4) இதுவரையில் தொழிலாளர்கள் நல மையங்களில் படிப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள 5 மாவட்டங்கள் நீங்கலாக, 25 மாவட்டங்களிலுள்ள தொழிலாளர் நல மையங்களில் படிப்பகங்கள் ஏற்படுத்துதல்:

(5) வேலைவாய்ப்பகங்களில் தற்போது நடைமுறையிலுள்ள 1:5 போன்ற வேலை நியமன விகிதாச்சாரத்தை 1:20 ஆக உயர்த்துதல்:

(6) தமிழகத்தை வம்சாவளியாகக் கொண்டு, ஆனால் தமிழகத்தில் வசிக்காத தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்குப் பாதுகாப்பு மற்றும் உடல்நலப் பாதுகாப்பு அளிப்பதற்கு ஏதுவாக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும் நியூ இந்தியா காப்புறுதி



2001 செப்டம்பர் 3]

நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

## அத்தியாயம் - 15

*2001–2002 ஆம் ஆண்டிற்கான அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பகுதி–2 திட்டங்கள்*

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளின்கீழ் தொழிலாளர்கள், தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைகளுக்கென்று 2001–2002 ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் பகுதி–2 திட்டப் பணிகளை நிறைவேற்ற அரசு ரூ.74.85 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

| வரிசை எண் | விவரங்கள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | <u>தொழிலாளர் துறை</u><br>துறையின் வட்டார, மாவட்ட அலுவலகங்களிலும் கணினி (கம்ப்யூட்டர்) அமைப்பை நிறுவுதல் | 9.90 |
| 2 | சென்னையிலுள்ள தொழிலாளர் துறையின் மையக் கட்டடத்தில் ஒரு தானியங்கி மின்னணு தொலைபேசி இணைப்பகம் நிறுவுதல் | 0.50 |
| 3 | **தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை**<br>தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வர் (உற்பத்தித் திறன் குழு) அவர்களுக்கு இல்லத் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்துதல் | 0.05 |

[2001 செப்டம்பர் 3

| | | |
|---|---|---|
| 4 | பத்து (சோதனை மற்றும் பாதுகாப்பு) தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர் அலுவலகங்களை கணினிமயமாக்குதல் | 9.00 |
| | <u>வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை</u> | |
| 5 | 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்களுக்குப் புதிய மின் இணைப்பு அளித்தல் | 20.00 |
| 6 | நாகப்பட்டினம், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஹைறட்ராலிக் றாய்ஸ்ட் நிறுவக் கட்டடம் மற்றும் ராம்ப் கட்டுதல் | 19.40 |
| 7 | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கும், சென்னை மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டுதல் | 7.85 |
| 8 | திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை கணினிமயமாக்குதல் | 4.60 |
| 9 | சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய 5 மாநகராட்சிகளில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் தொடங்குவது சம்பந்தமாக. | 2.75 |
| | மொத்தம் | 74.85 |

மேலும், 2001—2002 ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட கீழ்க்காணும் புதிய திட்டத்திற்கும் ஏற்பளிக்கப்பட்டது.

பணி இழந்த தொழிலாளர்களுக்கு விரைவில் மறுவாழ்வு அளிப்பதற்காக பல தொழில்களில் பயிற்சி அளித்தல். 6.00



2001 செப்டம்பர் 3]

## இணைப்பு III

(456 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 1 – நில வருவாய்த் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

## அத்தியாயம்-1

### முன்னுரை

வருவாய்த்துறை அனைத்து நிருவாகத் துறைகளுக்கும் மூத்த துறையாகும். மேலும் பல புதிய துறைகள் இத்துறையிலிருந்து பிரிந்து சென்றவையே. நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கி கட்டுக் கோப்பான சமுதாய முன்னேற்றத்திற்குப் பெருந்துணையாக இருப்பது வருவாய்த்துறையே ஆகும்.

2. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வருவாய் வாரியம் என்ற அமைப்பு கலைக்கப்பட்டு வருவாய் மற்றும் நில நிர்வாகம் மாநில அளவில் அதிகார வரம்பு கொண்ட மூன்று ஆணையர்களிடம், அதாவது வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று ஆணையர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

3. நிலம் தொடர்புடைய அனைத்து செயல்களுக்கும் வருவாய்த் துறை பொறுப்பாகும். நில எடுப்பு, நில ஒப்படை, நில குத்தகை, நில உரிமை மாற்றம், நில வருவாய் ஆவணங்கள் பராமரித்தல், மேம்படுத்துதல், நிலப்பட்டாக்கள் வழங்குதல், நிலச் சீர்திருத்தம் , நகர்ப்புற நில உச்சவரம்பு, நில வருவாய், நகர்ப்புற நிலவரி, வேளாண்மை வருமான வரி வசூல் ஆகிய பணிகள் அனைத்தும் வருவாய்த்துறையின் மூலம் செயல்படுகின்றன.

4. இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இன்னல்களை துடைப்பதில் முன்னின்று செயல்படுவதும், இயற்கைச் சீற்றங்கள் குறித்து முன்னதாக அறிவிப்பதும் வருவாய்த்துறையேயாகும். இயல்பு வாழ்க்கை திரும்புவது வரை இவ்வுதவிகளை இத்துறை வழங்கி வருகிறது.

5. மேலே கூறப்பட்ட பணிகள் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ், பல்வேறு நிலைகளில், மாவட்ட

வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் அமைச்சுப்பணி அலுவலர்களின் துணையுடன் நிறைவேற்றப்படுகின்றன.

## அத்தியாயம் - 2

### நிலவரி

ஒரு நிலத்தின் இனம், வளம், தரம் ஆகியவைகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். இதனை ஆதாரமாகக் கொண்டு விதிக்கப்படும் நிலவரி, தலமேல்வரி, கூடுதல்வரி, கூடுதல் தண்ணீர்வரி என்பது இதனுடைய பிற அம்சங்களாகும். 1-7-1967 முதல் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 1-7-1971 முதல் 5 ஏக்கர் மற்றும் அதற்கு குறைவாக நஞ்சை நிலங்கள் உள்ள தனி நபருக்கு மொத்த நஞ்சை தீர்வையில் புஞ்சை நிலத்தீர்வை அளவுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

2. நிலவரி வசூல் சுமூகமான முறையில் செய்யப் படுகிறது. 1989 முதல், நிலவரி வசூல் செய்யும்பொழுது ஜப்தி போன்ற கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. வெள்ளம் மற்றும் புயல் பாதிப்பினால் பயிர்களுக்கு சேதம் விளைந்த காரணத்தால் 1403-ம் (1993) பசலி ஆண்டுவரை இதே நிலை தொடரப்பட்டது. 1994-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்த செயல்முறை கவனமாக ஆய்வு செய்யப்பட்டபொழுது, ரூ.10,000/- மற்றும் அதற்கும் மேற்பட்ட நிலவரி பாக்கியை வைத்துள்ள பெரிய பட்டாதாரர்களிடமிருந்தும் இயற்கை இன்னல்களால் பாதிக்கப்படாமலிருந்தால், அவர்களிடமிருந்தும் கண்டிப்பான முறையில் நிலவரி வசூல் செய்வதில் எவ்வித தயக்கமும் காட்ட வேண்டியதில்லை என்று ஆணை பிறப்பிக்கப்பட்டன. இருப்பினும் கடித (நிலை) எண்.375, வருவாய்த்துறை, நாள் 10.7.2000-ல் நிலவரி பாக்கியினை வசூல் செய்வது தொடர்பாக அரசின் அனுமதியின்றி ஜப்தி நடவடிக்கையில் யாரும் ஈடுபடக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. அரசு கடந்த நிதி ஆண்டில் புறம்போக்கு நிலங்களில் விவசாயத்திற்காக, குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லும் பகுதிக்கு விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணத்தை ரத்து செய்துள்ளது.



**தள்ளுபடி**

**(1) பருவகால நிலவரி தள்ளுபடி**

ஒரு விவசாயி தனக்கு நிலவரி தள்ளுபடி பெற விரும்பினால் எந்த நிலத்திற்கு தள்ளுபடி வழங்கப்பட வேண்டும் என்பதை குறிப்பாக எழுத்து மூலம் உரிய காலத்தில், சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும். பின்னர், பயிராய்வு அலுவலரின் ஆய்வுக் குறிப்பின் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட வருவாய் அலுவலரால் நிலவரி தள்ளுபடி அனுமதிக்கப்படும். பருவநிலை தள்ளுபடியை பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி தள்ளுபடி வழங்கப்படுவதில்லை.

**(2) சில தவிர்க்கவியலாத சூழ்நிலைகளில் நிலவரி வசூலை நிறுத்தி வைத்தல் / தள்ளுபடி செய்தல்**

சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில், அதாவது பரவலாக நிலவிவரும் வறட்சி, பெருவாரியான நிலங்களில் பயிர் பாதிப்பு ஏற்பட்டால், நிலவரி வசூல் மற்றும் நிலவரி தீர்வை விதித்தல் ஆகியவற்றுக்கு நிறுத்திவைப்பு அல்லது தள்ளுபடி அரசால் அனுமதிக்கப் படுகிறது. இந்நேர்வுகளில், நிலவரி பாக்கித் தொகை மற்றும் அரசுக் கடன்கள் ஆகியவை அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. பயிர்உற்பத்தி 50 சதவீதத்திற்கு குறைவாக இருந்தால் நிலவரி பாக்கித்தொகை, உள்ளூர் மேல்வரி, உள்ளூர் கூடுதல் மேல்வரி மற்றும் அரசுக் கடன்கள் ஆகியவற்றை வசூலிப்பது ஆகியவை அடுத்து வரும் பசலி ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

## அத்தியாயம் -3

### வேளாண்மை வருமானவரி

தமிழ் நாட்டில் 1955-ஆம் ஆண்டில் வேளாண்மை வருமானவரி விதிப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, மலைத் தோட்டப் பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டுமே வரிவிதிப்பு செயல்படுத்தப்பட்டது. பின்னர் 1958-ஆம் ஆண்டில், சட்டம் திருத்தம் செய்யப்பட்டு மலைத்தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

[2001 செப்டம்பர் 3

2. சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான், மலைத் தோட்டமல்லாத பயிர்களின் மீது வேளாண்மை வருமானவரி விதிப்பு 1-4-1992 முதல் திருத்திய சட்டம் 40/91-இன்படி முழுமையாக அகற்றப்பட்டது. இரப்பர், காபி, தேயிலை, ஏலக்காய், பாக்கு, கிராம்பு மற்றும் மிளகு ஆகிய ஏழு மலைத்தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே தற்போது வேளாண்மை வருமானவரி விதிப்பு செய்யப்படுகிறது. 8 சாதாரண ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை உடைய வரிதாரர்கள் மட்டுமே 1-4-1992 முதல் தமிழ்நாடு வேளாண்மை வரிவிதிப்புச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்புக் குட்படுத்தப்படுகிறார்கள். 8 சாதாரண ஏக்கர் முதல் 50 சாதாரண ஏக்கர் வரை இணக்கமுறை வரிவிதிப்பு அனுமதிக்கப்படுகிறது.

3. சுயவரிவிதிப்பு மற்றும் முன்னதாக வரி செலுத்தும் முறைக்கும் 1992-93ஆம் வரிவிதிப்பு ஆண்டு முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வரி நீக்க வருமான உச்சவரம்பு தற்பொழுது ரூ. 28,000/–ஆகும். மலைத் தோட்டப் பயிரல்லாத இனங்களின் வருமானவரி நிலுவையினை 1-6-1992 முதல் வட்டாட்சியர் மூலமாக வசூலிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 4

### நகர்ப்புற நிலவரி

அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்கள் அதிக பரப்பளவுள்ள நிலங்கள் வைத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன்முதலில் 1-7-1963-ல் அறிமுகம் செய்யப்பட்டது. இது சென்னை நகருக்கு மட்டும் பொருந்தும், பின்னர் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதலும், சென்னை புறநகர் பகுதிகளுக்கு 1-7-1975 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது. இப்பகுதிகள் அனைத்திற்கும் 1-7-1971 ஆம் தேதி சந்தை மதிப்பு அடிப்படையில் நகர்ப்புற நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

2. பின்னர், இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 1-7-1981 முதல் விரிவுபடுத்தப்பட்டது. கீழ்க்கண்ட நகராட்சிகளும்



2001 செப்டம்பர் 3]

நகரியங்களும் 1-7-1991 முதல் இச்சட்ட வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன.

**நகராட்சிகள்**

| | |
|---|---|
| மயிலாடுதுறை | வேலூார் |
| காஞ்சிபுரம் | கும்பகோணம் |
| கடலூர் | உடுமலைப்பேட்டை |
| விழுப்புரம் | பழனி |
| புதுக்கோட்டை | காரைக்குடி |
| ஈரோடு | இராஜபாளையம் |
| பொள்ளாச்சி | நாமக்கல் |
| தஞ்சாவூர் | உதகமண்டலம் |
| திருப்பூர் | திண்டுக்கல் |
| தூத்துக்குடி | கரூர் |
| | நாகர்கோவில் |

**நகரியங்கள் (தற்போது நகராட்சிகள்)**

| | |
|---|---|
| கொடைக்கானல் | மேட்டூர் |

3. இந்த எல்லா பகுதிகளுக்கும் 1-7-1981-ம் நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்பட்டது.

[2001 செப்டம்பர் 3

வரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு:

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் அனைத்திற்கும் | | | சென்னை புற நகர்ப் பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1. | முதல் இரண்டு மனைகள் | வரியில்லை | 1. | முதல் மூன்று மனைகள் | வரியில்லை |
| 2. | இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2. | மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3. | ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3. | ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |
| 4. | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4. | பத்துமனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5. | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5. | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

4. நகர்ப்புற நில வரி செலுத்துபவர்களின் பெயர்கள், நிலுவையாக உள்ள தொகை மற்றும் செலுத்தப்பட்ட தொகை முதலிய விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

5. இந்தச் சட்டத்தின் பிரிவு 29–ன்கீழ் வரி விதிப்பினின்றும் கீழ்க்கண்ட வகையான நிலங்கள் விலக்கு பெறுகின்றன:

(1) மத்திய மாநில அரசு நிலங்கள்

(2) பொது வழிபாட்டுக்கான நிலங்கள்

(3) மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள்



2001 செப்டம்பர் 3]

(4) மயான பூமி நிலங்கள்

(5) சாலைகளாக பயன்படும் நிலங்கள்

(6) தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிலங்கள்

(7) பொது பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் உள்ள நிலங்கள்

(8) ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் உள்ள நிலங்கள்

6. விவசாயத்திற்குப் பயன்படும் நிலங்கள், நகர்ப்புற நிலவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்படுகின்றன. தர்ம மற்றும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் அந்நிறுவனங்களுக்கு அதிகமாக சிரமம் இருப்பின், பிரிவு 27(1)–ன்கீழ் அரசு வரி விலக்கு அளிக்கிறது.

7. கீழ்க்கண்ட அமைப்புகளுக்கும் அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது.:

(அ) சிறு தொழில் சான்று பெற்ற தொழிற்சாலைகளுக்கு வரியில் 25 சதவீதம் சலுகை. மற்ற தொழிற்சாலைகளுக்கு 10 சதவீதம் சலுகை

(ஆ) சங்கீத நாடக சபைகளுக்கு 50 சதவீதம் சலுகை

(இ) திரையரங்குகளுக்கு 10 சதவீதம் சலுகை

(ஈ) குடிசைப்பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு முழுச் சலுகை

(உ) நகர்ப்புற நிலத்தில் கட்டடம் இருந்து அது நிலத்தின் சொந்தக்காரரால் குடியிருப்புக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால், நகர்ப்புற நிலவரியில் 50 சதவீதம் தள்ளுபடி தரப்படுகிறது.

8. நகர்ப்புற நில வரி மதிப்பீடு மற்றும் வரி விதிப்பை எதிர்த்து தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவும் அந்தந்த மாவட்ட வருவாய் அதிகாரிகளையே தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் சென்னை–5 சேப்பாக்கத்தில்

[2001 செப்டம்பர் 3

உள்ள நிலச் சீர்திருத்தத் துறையில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (நில தீர்ப்பாயம்) தீர்ப்பாயமாக செயல்படுகிறார்

## அத்தியாயம் – 5

## நில நிர்வாகம்

அரசின் வெவ்வேறு துறைகள் வசம் உள்ள நிலங்கள் உட்பட அனைத்து வகையான அரசு நிலங்களும், வருவாய்த் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அரசு நிலங்கள் – ஒப்படை, நில மாற்றம் நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை மூலம் தனியாருக்கும், அரசின் பல்வேறு துறைகள், அரசு சார்ந்த துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. தற்போது அரசு வசம் உள்ள நிலங்கள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதால், அவைகளை வழங்குவது குறித்த ஒவ்வொரு செயற்குறிப்பையும் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

(அ) ஒப்படை

அரசு நிலங்கள் வீட்டுமனைகளாகவும், சாகுபடி செய்வதற்காகவும் என்று இரு வகைகளில் ஒப்படை செய்யப்படுகின்றன.

**(i) வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் உள்ள மக்களை முன்னேற்றுவதற்காக அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே அரசின் கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது.

2. வருவாய் நிலை ஆணை 21–ன்கீழ் வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. இலவச வீட்டுமனைப் பட்டா கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.16,000/–க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ.24,000/–க்கும் குறைவாக உள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. வீட்டுமனைகள் பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு குடும்பத் தலைவி அதாவது மனைவி அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்களின் பெயரில் மட்டுமே வழங்கப்படுகின்றன.



2001 செப்டம்பர் 3]

தற்போது வீட்டுமனைக்காக கிராமங்களில் மூன்று சென்ட், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவு நிலம் ஒப்படை செய்யப்படுகின்றன.வீட்டு மனை ஒப்படை செய்வதில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை பின்பற்றப்படுகிறது:–

(அ) எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும் பிரதேச இராணுவப் படை உட்பட முப்படையில் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் மற்றும் செயலிழந்தவர்களின் குடும்பங்கள்.

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

(இ) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்

(ஈ) முன்னாள் இராணுவத்தினர்

(உ) இராணுவத்தில் பணிபுரிவோர்

(ஊ) ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம்பெண்கள்

3. பெரும்பாலும் ஏழை மக்களால் ஆக்கிரமணம் செய்யப்பட்ட அரசு நிலங்களை (அரசுக்குத் தேவைப்படாதவை) வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கும் ஓர் 'ஒரு முறைத் திட்டம்' மார்ச் 2000 முதல் மார்ச் 2001 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1,95,957 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

4. ஒப்படையை விரைந்து செயல்படுத்தப்படுவதற்கு வீட்டுமனை ஒப்படை வழங்க வருவாய்த் துறை அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிதி அதிகார வரம்பு அளிக்கப்பட்டுள்ளது:

| அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|
| 1. வட்டாட்சியர் | ரூ. 10,000 |
| 2. கோட்டாட்சியர் | ரூ. 20,000 |
| 3. மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ. 50,000 |
| 4. மாவட்ட ஆட்சியர் | ரூ. 2,00,000 |
| 5. நில நிர்வாக ஆணையர் | ரூ. 2,50,000 |
| 6. அரசு | ரூ. 2,50,000–க்கு மேல் |

[2001 செப்டம்பர் 3

**(ii) விவசாய நிலம் ஒப்படை செய்தல்**

நமது பொருளாதாரத்தில் விவசாயம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. கிராமங்களிலுள்ள மக்கள், பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு விவசாயத்தையும் அதைச் சார்ந்த தொழில்களையுமே நம்பி இருக்கிறார்கள். ஆனால், அனைவரும் சொந்தமாக நிலம் வைத்திருக்க வாய்ப்பில்லை. வேளாண்மை சீர்திருத்தத் திட்டங்களை அறிமுகப் படுத்துவதற்கு முன்பிருந்தே ஏழை மற்றும் நலிந்த பிரிவு மக்களுக்கு நிலங்களை அரசு வழங்கி வருகிறது. இதனால் ஏழை மக்கள் விவசாயத்தையும் அதனைச் சார்ந்த வேலைகளையும் தொழிலாக மேற்கொள்வது மற்றும் நிலத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்வது ஆகிய இரு குறிக்கோள்களை அடைவது சாத்தியமாகிறது. விவசாய நில ஒப்படை வருவாய் நிலை ஆணை 15-ன்கீழ் செய்யப்படுகிறது.

2. ஏழைகளுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. ஒருவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/-மும் அதற்கு குறைவாகவும் இருப்பின், அவர் ஏழை எனக் கருதப்படுகிறார். வீட்டுமனை ஒப்படையில் பின்பற்றப்படும் முன்னுரிமை வரிசைப்படியே விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு, அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும், ஒப்படை பரப்பும் சேர்த்து 3 ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஒப்படை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் பரப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதாலும் அம்மாவட்டத்தில் இந்த பரப்பளவு, ஒரு ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒப்படை நிபந்தனைகளின்படி ஒப்படை பெற்ற நிலத்தை மூன்று ஆண்டுகளுக்குள் விவசாயம் செய்ய வேண்டும். ஒப்படை நிலத்தை பிறருக்கு விற்பனை செய்யக்கூடாது. குறைந்தது 10 மரங்களை நட வேண்டும். மேற்சொன்ன நிபந்தனைகள் மீறப்படுமானால் இழப்பீடு எதுவும் வழங்கப்படாமல் நிலம் மீளப் பெறப்படும்.

4. பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சமுதாய நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, ஏரி குளங்கள், கால்வாய், ஓடை



2001 செப்டம்பர் 3]

போன்ற அனைத்து நீர்வழிப் புறம்போக்குகளையும் மந்தைவெளி, மேய்க்கால் மற்றும் மயானம் புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது.

5. இயற்கைச் சூழல் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும் நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் வேளாண்மைக்கென நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. பெரிய நகரங்களைச் சுற்றிலும் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காக நிலங்கள் தேவைப்படுவதால் சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் மற்றும் பிற மாநகராட்சி எல்லைக்குள்ளும் ஒப்படை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

6. வீட்டுமனை ஒப்படையில் உள்ளது போலவே நில ஒப்படை செய்வதிலும் வருவாய்த் துறை அலுவலர்களுக்கு நிதி அதிகார வரம்பு வழங்கப்பட்டுள்ளன.

**(ஆ) குத்தகை**

பொதுவாக அரசு நிலங்கள் குறிப்பிட்ட கால வரையறைக்கு தனியார்களுக்கும், தனியார் அமைப்புகளுக்கும், நிறுவனங்களுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விவசாயமில்லாத இதர நோக்கங்களுக்காக வருவாய் நிலையாணை எண்.24-ஏ-யின்கீழ் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

2. அரசு நிலங்களை குத்தகைக்கு அளிக்கும் போது நில மதிப்பின் மீது ஆண்டுக் குத்தகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது:-

| பயன்பாடு | குத்தகைக் கட்டணம் | தலவரி | தலமேல் வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிக நோக்கம் | 2% | 2% | 10% | 14% |
| வணிகமற்ற நோக்கம் | 1% | 1% | 5% | 7% |

குத்தகைக் காலம் பொதுவாக ஒரு தடவையில் 3 ஆண்டுகளாகும். எனினும், எந்த ஒரு அரசு நிலத்தையும், அதிகபட்சமாக 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கலாம். குத்தகைத் தொகை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுவதாகும்.

3. வருவாய் நிலையாணை எண்.24-ஏ-யின்படி அரசு நிலங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு வருவாய்த் துறை அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிதி அதிகார வரம்பு வழங்கப்பட்டுள்ளது:

| அலுவலர்கள் | | நிதிவரம்பு |
|---|---|---|
| வட்டாட்சியர் | .. | இல்லை |
| கோட்டாட்சியர் | .. | ரூ.20,000 வரை |
| மாவட்டாட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர் | .. | ரூ.50,000 வரை |
| நில நிர்வாக ஆணையர் | .. | ரூ.2,00,000 வரை |
| அரசு | .. | ரூ.2,00,000–க்கு மேல் |

(இ) நிலமாற்றம்

மைய அரசுத் துறைகளுக்கு நிலங்களும், கட்டடங்களும், வருவாய் நிலையாணை எண்.23–ன்கீழ் உள்ள விதிகளின்படி சந்தை மதிப்பீடு வசூலித்துக் கொண்டு நிலமாற்றம் செய்யப்படுகின்றன. இருப்பினும், சென்னையில் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்திற்கென நிலங்கள் இரயில்வேத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யப் படுகின்றன.

2. பொதுவாக நிலங்கள் மாநில அரசுத் துறைகளுக்கு, பள்ளிகள், கட்டடங்கள் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற வணிக நோக்கமற்ற பயன்பாட்டிற்கென கேட்கப்படும் பொழுது, வருவாய் நிலை ஆணை எண்.23 ஏ–ன்கீழ் உள்ள விதிகளின்படி நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்படுகின்றன. ஆனால், வணிக நோக்கத்திற்கென நிலங்கள் கேட்கப்படும்பொழுது நிலக்கிரயத்தை வசூலித்துக்கொண்டு நில மாற்றம் செய்யப்படுகிறது.

3. ஆட்சேபணையற்ற, தடையாணைக்கு உட்படாத புறம்போக்கு நிலங்களாக இருப்பின், குறைந்தபட்ச நிலங்களை நிலமதிப்பு வரம்பின்றி பொதுப் பணித் துறை மற்றும் தொடர்புடைய துறைகளைக்





கலந்தாலோசித்த பின், சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுக்கு நில மாற்றம் செய்ய மாவட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. துறைகளின் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் நிலம், அத்துறைகளால் முழுமையாகப் பயன்படுத்தப்படாத பட்சத்தில், அத்தகைய நிலங்கள் வருவாய்த் துறையால் திரும்பப் பெறப்பட்டு, தேவையுள்ள பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(ஈ) நில உரிமை மாற்றம்

துணை மின் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், குடிசைவாழ் மக்களுக்கென குடியிருப்புகள், அங்காடிகள், சாலைகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் போன்ற பொது நோக்கங்களுக்காகவும், சமுதாய நலனை மேம்படுத்துவதற்காகவும், நிலம் தேவைப்படும்பொழுது, வருவாய் நிலை ஆணை எண் 24–ன்கீழ் உள்ள நிபந்தனைகளுடன், அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் அல்லது தனியார் நிறுவனங்களுக்கு அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப் படுகின்றன. பொதுவாக, இலாப நோக்கமின்றி, நிலக்கிரய மின்றியும், வணிக நோக்கத்திற்காகத் தேவைப்படின், நிலத்தின் சந்தை மதிப்பினைக் கிரயமாக வசூலித்துக் கொண்டும், அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. ஏழை எளிய குடிசைவாழ் மக்களுக்கென குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக்கிரயமின்றியும், இதர நோக்கங்களுக்காக மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக்கிரயமாக ரூ.5,000/ மட்டும் வசூலித்துக்கொண்டும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு அரசு நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. நில உரிமை மாற்ற நிபந்தனைகள் மீறப்படின், எந்தவிதமான நஷ்ட ஈடும் வழங்காமல் அந்நிலங்களை அரசுக்கு மீளப்பெறுவதற்கான விதிமுறைகள் வருவாய் நிலையாணையில் வகுக்கப்பட்டுள்ளன.

## ஆத்தியாயம் – 6

### ஆக்கிரமணங்களை அகற்றுதல்

நிலங்களை தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு ஒப்படை செய்தல், வளர்ச்சி மற்றும் பொது நன்மைக்கு அளிப்பதன் மூலம் நன்கு பயன்படுத்த வேண்டும். இந்தக் கொள்கை அடிப்படையில் அரசு நிலங்களின் மீது ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும். இருப்பினும் பொது நன்மைக்கு என ஒதுக்கி வைக்கப்படாத மற்றும் தரிசாக உள்ள

[2001 செப்டம்பர் 3

நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள், ஆட்சேபகரமற்றவை எனக் கருதப்படுகின்றன. அத்தகைய ஆக்கிரமிப்பு களின் தன்மை, அவைகளின் அமைவு ஆகியவற்றைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் ஆக்கிரமிப்புகள் வரன்முறைப்படுத்த தகுதியுடையவை ஆகின்றன.

2. நீர்வழிப் புறம்போக்குகள், மேய்க்கால் நிலங்கள், கோயில் நிலங்கள், களம் போன்ற வற்றில் உள்ள ஆக்கிரமிப்புகள் மிகவும் ஆட்சேபகரமானவை எனக் கருதப்படுகின்றன. அவை அகற்றப்பட வேண்டும். வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், முறையற்ற ஆக்கிரமிப்புகளை ஆக்கிர மணச் சட்டம் 1905-ன்படி முன் அறிவிப்பு அளித்த பின், அகற்ற அதிகாரம் பெற்றுள்ளனர்.

3. குறிப்பிட்ட காலவரம்புக்குள் மாவட்ட அளவில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கும்பொருட்டு மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. மாவட்ட ஆட்சித் தலைவர் | ... | தலைவர் |
| 2. காவல் துறை—மாவட்ட அளவிலான அலுவலர் | ... | உறுப்பினர் |
| 3. பொதுப் பணித் துறை —மாவட்ட அளவிலான சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) | ... | உறுப்பினர் |
| 4. நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் | ... | உறுப்பினர் |
| 5. வனத் துறை—மாவட்ட வன அலுவலர் | ... | உறுப்பினர் |

ஆக்கிரமணங்களை அகற்றுவதற்கு திட்டங்களை வகுக்க மேற்படி குழு மாதம் ஒரு முறை கூடும். மேற்படி குழுவின் செயல்பாடுகள் குறித்து மாநில அளவில் நில நிர்வாக ஆணையரால் ஆய்வு செய்யப்படும்.



2001 செப்டம்பர் 3]

## அத்தியாயம் - 7

### மரப் பட்டா திட்டம்

இம்மாநிலத்தில் மரத்திற்கான பட்டா (2c பட்டா ) வழங்கும் திட்டம் பல்லாண்டுகளாக செயலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் அதன் அனைத்துப் பயன்களையும் பெறும் உரிமை அருகில் இருக்கும் நில உடைமைதாரர் அல்லது யாரால் அம்மரங்களைப் பாதுகாக்க முடியுமோ அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால், மரம் மற்றும் நிலத்தின் மீதுள்ள உரிமை அரசிடமே தொடர்ந்து இருக்கும். மரப் பட்டா வழங்குவதில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. 2-சி மரப் பட்டா வழங்குவதற்குப் பயனாளிகளின் தகுதி மற்றும் தேர்வுக்குரிய நிபந்தனைகள் பின்வருமாறு:—

அ) கிராமம்/ குடியிருப்பில் குடியிருப்போர்;

ஆ) குடியிருப்பில்லாத கிராமமாக இருப்பின், அண்மையில் உள்ள கிராமத்தில் குடியிருப்போர்;

இ) 2-சி மரப் பட்டாதாரர், மரங்களை பராமரிக்க வேண்டும் என்பதால், மரங்கள் உள்ள இடத்தில் இருந்து 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள் வசிப்போர்;

ஈ) மரங்கள் தனித்தனி நிலங்களில் இருக்குமானால் மரங்களுக்கு அண்மையில் இருப்போருக்கு முன்னுரிமை.

## அத்தியாயம் - 8

### நில எடுப்பு

மைய மற்றும் மாநில அரசுகளுக்குத் தேவைப்படும் நிலங்கள் 1894ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டம் (மையச் சட்டம் 1/1894)—ன்கீழ் கையகப்படுத்தப்படுகிறது.

2. பொதுவாக நில எடுப்புச் சட்டத்தின்படி நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு மூன்று ஆண்டுகள் ஆகும். ஆனால் பிரிவு 17(1)—ன்கீழ் 15 நாட்களிலும், பிரிவு 17(2)—ன்கீழ் உடனடியாகவும் நிலத்தைக் கையகப்படுத்தலாம்.

[2001 செப்டம்பர் 3

3. நில எடுப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்க கால வரம்பைக் குறிப்பிடும் திட்டமதிப்பீடு மற்றும் மறு ஆய்வு உத்திமுறைப் படிவம் (PERT-Chart) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4. நில எடுப்புச் சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்தாமல் தனியார் பேச்சு வார்த்தை மூலம் இருபது இலட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள நிலங்களை நில உடமைதாரர்களிடமிருந்து வாங்குவதற்கு மாவட்ட அளவிலான குழுவிற்கும், இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படும் நிலங்களை வாங்குவதற்கு மாநிலக் குழுவிற்கும் அதிகாரம் உண்டு. தனியார் பேச்சுவார்த்தையின் மூலம் நிலங்கள் வாங்குவதில் நிலம் கையகப்படுத்தும் திட்டம் விரைந்து செயல்பட கீழ்க்காணுமாறு உதவுகிறது:–

(i) திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு நிலம் உடனடியாகப் பெறப்படும்.

(ii) நிலம் கையகப்படுத்துவதில் உள்ள இயல்பான கால தாமதமும் தவிர்க்கப் படுகிறது.

(iii) நிலமெடுப்புச் சட்டத்தின் பிரிவு 4(1)–ன்கீழான அறிவிக்கை மற்றும் பிரிவு 6– இன் கீழான விளம்புகை அறிவிப்புகள் நாளிதழ்களில் வெளியிடுவதற்கான செலவு தவிர்க்கப் படுகிறது.

(iv) நீதிமன்றங்களுக்குச் சென்று, நிலம் கையகப்படுத்தும் திட்டத்தினைத் தவிர்க்கவோ, அல்லது காலதாமதப் படுத்தவோ அல்லது அதிகப்படியான இழப்பீட்டுத் தொகை கோரவோ வழியில்லை.

(v) நிலத்திற்கான தொகை நேரிடையாகவும், ஒட்டுமொத்தமாகவும் கொடுக்கப்படுகிறது.

5. ஒப்புக் கொள்ளப்பட்ட விலை, நிலத்தின் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு இவற்றுள் எது குறைவோ, அதில் 150% விலையை ஏற்பதற்கு மாவட்ட மற்றும் மாநிலக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

6. தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை விரைவாகக் கையகப்படுத்த, தொழில் துறை நோக்கங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டம் 1997 என்று தனியாக சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. அச்சட்டத்திற்கான வரைவு விதிகள் வரையப்



2001 செப்டம்பர் 3]

பட்டுள்ளன. அச்சட்டத்தையும் மற்றும் அதன் விதிகளையும் ஒரே சமயத்தில் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் – 9

## நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நிலங்கள் சிலரது வசம் குவிந்து அதன் மூலம் வேளாண்மை நில உடமைகளில் ஏற்பட்ட ஏற்றதாழ்வுகளைப் போக்க உபரியாக உள்ள அந்நிலங்களை, நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் ( தமிழ்நாடு சட்டம் 58/61 ) இயற்றப்பட்டது.

2. இந்தச் சட்டம், 6–4–1960 முதல் அமலுக்கு கொண்டு வரப் பட்டது. இச்சட்டப்படி 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருந்தால், 30 தர ஏக்கர் உச்சவரம்பு தவிர ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 தர ஏக்கர் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் ஒட்டுமொத்த உச்சவரம்பு 60 தர எக்கர் என நிர்ணயிக்கப் பட்டது. சட்டம் அமலுக்கு வந்த நாளான 6–4–1960 அன்று குடும்பத்தின் பெண் உறுப்பினருக்கென்று சொந்த நிலம் இருந்திருந்தால் சீதன சொத்தாக 10 தர ஏக்கர் வரை வைத்திருக்க அவருக்கு உரிமை உண்டு.

3. பயனடைவோர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் உச்சவரம்பின் அளவு அரசால் 1970 ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது. முதன்மைச் சட்டம் 58/61–க்கு திருத்தச் சட்டம் 17/70 மூலமாக சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம், நில உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராகக் குறைக்கப்பட்டது.

4. மேலும் முதன்மைச் சட்டத்தில் (58/61) ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டு மொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவை, 40 தர ஏக்கராகக் குறைத்து நிர்ணயிக்கப்பட்டது. இதற்காக தமிழ்நாடு சட்டம் 20/72 என்ற இரண்டாவது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1–3–1972 முதல் நடைமுறைக்கு வந்தது.

5. பின்பு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) நான்காவது திருத்தச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 39/1972) குடும்பத்தின் ஒட்டு மொத்த உச்சவரம்பு 40 தர ஏக்கரிலிருந்து 30 தர

ஏக்கராக மேலும் குறைக்கப்பட்டது. 1-3-1972 முதல் இச்சட்டம் அமலுக்கு வந்தது. முதன்மைச் சட்டத்தில், அறக் கட்டளைகள் கவரப்படவில்லை. தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 37/1972) அறக்கட்டளைகளின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு அறக்கட்டளைகளின் தன்மை பொறுத்து உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. சுருங்கக்கூறின், இன்றைய நிலையில் நமது மாநிலத்தில் எந்தவொரு குடும்பமும் அதிகபட்சமாக 30 தர ஏக்கர் விவசாய நிலம் வைத்துக் கொள்ளலாம். உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள், கையகப்படுத்தப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு உயரளவாக 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் என்ற அளவில், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் தகுதியுடையோருக்கு ஒப்படை செய்யப்படுகின்றது.

## குடிவாரச் சட்டங்கள்

### அ) வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு

1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1955)-ன்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தைச் சரிவர செலுத்தாத நிலையிலோ, நிலத்திற்கோ அல்லது அதிலுள்ள பயிர்களுக்கோ சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலோ, நிலத்தைச் சாகுபடி செய்யாமல் இருந்தாலோ, விவசாயத்தை தவிர்த்து மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலோ நில உரிமையாளருக்கு நிலத்தின் உரிமையை மறுக்கும் வகையில் செயல்புரிந்தாலோ தவிர, பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட இயலாது. ஆயுதப் படையினரைத் தவிர, வேறு எந்த நில உடமையாளரும், மேலே குறிப்பிட்ட காரணங்களின்றி மற்ற காரணங்களுக்காக குத்தகைதாரரிடமிருந்து தங்களுடைய நிலத்தைப் மீளப் பெற முடியாது.

2. இம் மாநிலத்தில் உள்ள குறிப்பிட்ட சில பகுதிகள், அண்மையில் சில ஆண்டுகளாகவே வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரும்பாலும் தங்கள் மகசூல் இழக்க நேரிட்டு, குத்தகைத் தொகையினைச் செலுத்துவதற்கு இயலாமல் உள்ளனர். எனவே குத்தகைத் தொகை செலுத்துவதற்கு தவறிய காரணத்திற்காக நிலத்திலிருந்து வெளியேற்றப்படும் துயர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நிலக்கிழார்களுக்குச் செலுத்தத் தக்கதாகவுள்ள குத்தகைத் தொகையினைப் பொறுத்தமட்டில் அதனைச் செலுத்தாமல்



நிலுவையில் வைத்திருக்கின்ற பயிரிடு குத்தகைதாரர்களை பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்க 1997 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1997) என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் 1996 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்கு முன்னர் நிலக்கிழாருக்கு கொடுக்கப்பட வேண்டியிருந்து, இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளான, அதாவது 25-4-1997 அன்று செலுத்தப்படாமல் சேர்ந்துள்ள குத்தகைத் தொகை நிலுவை முழுவதையும் அல்லது 1997 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளில் முடிவடைகின்ற பசலி ஆண்டிற்கு செலுத்தத்தக்க தொகை என்றோ அல்லது அவை இரண்டும் என்றோ 30-6-1999 வரையிலான கால அளவிற்கு தள்ளிவைத்ததன் மூலம் ஓரளவிற்கு நிவாரணம் வழங்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தள்ளிவைக்கப்பட்ட கால அளவின்போது மேற்சொன்ன குத்தகைத் தொகையினைச் செலுத்தாததற்காக அந்த குத்தகையாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்றாமல் இருக்கவும், இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம், வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்படாத வேலூர், தேனி, நீலகிரி , ஈரோடு, நாமக்கல் மற்றும் தர்மபுரி மாவட்டங்களைத் தவிர்த்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பொருந்தும். இருப்பினும் இச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிவாரணம் 30-6-1999-க்குப் பிறகு நீட்டிக்கப்படவில்லை.

### ஆ) நியாய குத்தகை நிர்ணயித்தல்

1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56) குத்தகைதாரர்களால் மொத்த விளைச்சலில் 25 விழுக்காட்டினை தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு அல்லது பொது பொறுப்புக் கழகங்களுக்கு குத்தகைத் தொகையாக அளிக்க வழிவகை செய்கின்றது. அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர்கள் செலுத்துவர். ஆனால் விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

[2001 செப்டம்பர் 3

(இ) பொறுப்புக் கழகங்களின் நிலங்களை முறைப்படுத்துதல்

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் ( தமிழ்நாடு சட்டம் 57/61) பொது பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்து வதற்காக இயற்றப்பட்டுள்ளது. எந்த ஒரு பொது பொறுப்புக் கழகமும், தன்னுடைய பண்ணைச் சொந்தச் சாகுபடிக்கு 20 தர ஏக்கருக்கு மேல் நிலத்தினை வைத்துக்கொள்ளக் கூடாது. இதற்கு மேலுள்ள நிலத்தினை உண்மையான பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விட வேண்டும்.

(ஈ) நியாய ஊதியம் வழங்குதல்

1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969) மூலம் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறுபட்ட விவசாயப் பணிகளுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டுள்ளது. அரசு ஆணை (நிலை) எண்.42, வருவாய்த் துறை, நாள் 27–1–2000–ல் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் பின்வருமாறு உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது:–

| விவசாயத் தொழிலாளர் வகை | குறைந்தபட்ச ஊதியம் |
|---|---|
| 1. தங்கள் சொந்த ஏர் மாட்டோடு உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.100/— |
| 2. தங்கள் சொந்த ஏர் மாடு இல்லாமல் உழுவோர் | நாள் ஒன்றிற்கு ரூ.54/— |
| 3. நெல் அறுவடை, கதிர் அறுப்பு, களத்திற்கு எடுத்துச் சென்று கதிர் அடித்தல், அவைகளை அளந்து மற்றும் மூட்டைகளில் அடைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் தொழிலாளர். | நாள் ஒன்றிற்கு ஆறு மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ.54/— நாள் ஒன்றிற்கு ஐந்து மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45/ அல்லது மொத்த விளைச்சலில் எட்டில் ஒரு பகுதி அவற்றில் எது அதிகமோ அது. |



2001 செப்டம்பர் 3]

| | |
|---|---|
| 4. நெல்லைத் தவிர மற்ற தானியங்களை அறுவடை செய்யும் தொழிலாளர்/ இதர விவசாயப் பணிகளில் ஈடுபடுவோர். | நாள் ஒன்றிற்கு 6 மணி நேரம் வேலை செய்யும் ஆண் தொழிலாளிக்கு ரூ.54/— 5 மணி நேரம் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு ரூ.45/— |

(உ) குத்தகை உரிமைகள் பதிவு

1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவுச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969) தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்கள் அல்லது பொது பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகை தாரர்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்ய வகை செய்கிறது. இச்சட்டத்தின்படி வட்டாட்சியர் பதிவு அலுவலராவார். அவர் பயிரிடும் குத்தகைதாரர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக குத்தகை உரிமைப் பதிவேட்டினைப் பராமரிக்க வேண்டும். பதிவு அலுவலர் தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்து குத்தகைதாரர்களைப் பதிவு செய்ய இச்சட்டப்பிரிவு 4–ன்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 5(எ)–ன்படி வட்டார அளவில் அமைக்கப்படும் அலுவல் சார்பற்ற ஆலோசனைக் குழுவில் நிலமற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர் ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும் சமூக நல ஊழியர்கள் மூவரும் உறுப்பினர்களாக இருப்பர். பதிவு அலுவலர் குத்தகை உரிமை ஆவணம் தயாரிப்பதில் இக்குழு உதவி புரியும்.

(ஊ) குடியிருப்பு உரிமை வழங்குதல்

1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/1971) குடியிருப்புகளில் சொந்த வீட்டு மனை இல்லாத அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கின்றது. அதன்படி 19–6–1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்தவர், உரிமையாளராக இருப்பர். இக்குடியிருப்பு வில்லங்கம் ஏதுமின்றி அவரிடமே நிலை பெற்று இருக்கும். இக்காலக்கெடு தமிழ்நாடு சட்டம் 39/1990 மூலம் 1–4–1990 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 3

2. தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம் 1976 (சட்டம் 38/1976) குத்தகைதாரர் அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் 1–7–1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராம கைவினைஞர்களுக்கு 'உடைமை உரிமை வழங்க வகை செய்கின்றது. இக்காலக் கெடு 1–4–1990 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. (சட்டம் 39/1990)

### நிலத் தீர்ப்பாயம் அமைத்தல்

நிலச் சீர்திருத்த வழக்குகளைத் துரிதமாக முடிவு காண்பதற்காக மாவட்ட வருவாய் அலுவலர் அந்தஸ்தில் உள்ள அலுவலர் தலைமையில் நிலத் தீர்ப்பாயங்கள் 1979 ஆம் ஆண்டு முதல் மதுரை மற்றும் தஞ்சாவூரில் அமைக்கப்பெற்றன. 1989 ஆம் ஆண்டு முதல் மதுரை நிலத் தீர்ப்பாயம் கலைக்கப்பட்டு தஞ்சை தீர்ப்பாயத்துடன் இணைக்கப்பட்டு விட்டது. தற்போது மாநிலம் முழுவதற்குமாக ஒரு நிலத் தீர்ப்பாயம் மட்டும் சென்னையில் இயங்கி வருகின்றது.

2. 1–11–1990 முதல் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் ஏற்படுத்தப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்திற்கு இருந்த நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான நீதிப்பேராணை மற்றும் உரிமையியல் சீராய்வு மனுக்கள் அதிகார வரம்பு நீக்கப்பட்டு அவ்வழக்குகள் இத்தனி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டன.

3. இருப்பினும் சமீபத்தில் மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முடிவுகள் உயர் நீதிமன்ற டிவிசன் பெஞ்சின் நீதிப்பேராணை வரம்புக்குட்பட்டவை என உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

### வருவாய் நீதிமன்றங்கள்

தற்போது மாநிலம் முழுவதும் 6 வருவாய் நீதிமன்றங்கள், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித்துணை ஆட்சியர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள், 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் பதிவுச்) சட்டத்தின்கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராக தொடரப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பளிப்பார்கள். அவர்கள் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள்



2001 செப்டம்பர் 3]

பாதுகாப்புச் சட்டம் 1955, தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் வழங்குதல்) சட்டம் 1956, தமிழ்நாடு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961, தமிழ்நாடு விவசாய நிலங்கள் (குத்தகை உரிமைப் பதிவுச் சட்டம்) 1969, தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாத்தல்) சட்டம், 1961 தமிழ்நாடு குடியிருப்புதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் தமிழ்நாடு கைவினைஞர்கள் (குடியிருப்பு உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1976 ஆகிய சட்டங்களின்கீழ் கொடுக்கப்படும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்து வருகின்றனர்.

## அத்தியாயம் – 10

## நகர்ப்புற நில உச்சவரம்பு

ஒரு சில நில உடைமையாளர் வசம் குவிந்துள்ள விவசாய நிலங்களைக் கையகப் படுத்தி கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பது அவசியமாக இருப்பதுபோலவே, நகர்ப்புற நிலங்களையும் சமமாகப் பகிர்ந்தளிப்பதும் அவசியமாக இருந்தது. இந்த நோக்கில்தான் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) இயற்றப்பட்டது. அதன் மூலம் சென்னை, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளில் நகர்ப்புற நிலம் ஒரு சிலரிடம் குவிந்து கிடந்து அவர்கள் லாபநோக்கத்துடன் வாங்குவது மற்றும் விற்பதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும் இச்சட்டம் விரும்பிய பலனை அளிக்கவில்லை. அதற்கு மாறாக, நகர்ப்புற நிலங்களின் விலை அதிகரித்ததோடு, தொழில் அபிவிருத்தி மற்றும் வீடு கட்டும் தொழில் நலிவுற்று தடையுற்றது. இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில், வெற்று உபரி நிலங்களை அரசு கையகப்படுத்துவதற்கு இடையூறாக வழக்குகள் பெருகின. எதிர்பார்த்த அளவிற்கு இச்சட்டம் அதன் நோக்கங்களை அடைவதில் தவறிவிட்டது என்று பொது மக்களிடையே ஒருமித்த கருத்து நிலவியதால், ஒட்டுமொத்த நன்மைக்காகவும், மாநில வளர்ச்சிக்காகவும் இச்சட்டத்தை நீக்கறவு செய்ய வேண்டியதாயிற்று.

2. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப் படுத்துதல்) சட்டம், 1978, தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும்

(முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999 (தமிழ்நாடு சட்டம் 20/1999)-ன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மைச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் வைத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் மற்றும் முதன்மைச் சட்டப்பிரிவு 21(1)-ன்கீழ் விலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீக்கறவுச் சட்டம் பொருந்தாது. விலக்களிப்பில் உள்ள நிபந்தனைகள் எப்பொழுது மீறப்படுகிறது என்று தெரிய வருகிறதோ அப்போது அந்நிலங்களை மீளப் பெறுவதற்கு, விலக்களிப்பு பெற்றவர்களுக்கு அறிவிக்கைகள் அனுப்பப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. முதன்மைச் சட்டத்தின்கீழ் இதுவரை 2469 ஹெக்டேர் மிகை வெற்று நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 109 ஹெக்டேர் நிலம் நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளது. 339 ஹெக்டேர் நிலத்தினை அரசுத் துறை, அரசு கழகங்கள், பொதுத் துறை நிறுவனம், வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மற்றும் இதர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 538 ஹெக்டேர் நிலப்பரப்பு ஆக்கிரமிப்பிலும், 55 ஹெக்டேர் நிலப்பரப்பு மேல்முறையீட்டிலும் உள்ளன. 1428 ஹெக்டேர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்வதற்கு உள்ளது.

4. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் நீக்கறவு செய்யப்பட்ட நிலையில் அச்சட்டத்தின் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை ஒதுக்கீடு செய்வது மற்றும் அந்நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவது குறித்து அரசு விரிவாக ஆய்வு செய்து, அரசு ஆணை (நிலை) எண்.353, வருவாய் நாள், 30-6-2000-ல் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது:-

I) நகர்ப்புறங்களில் கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லாத நிலங்களை, கீழ்க்கண்டபடி முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்:

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக சமுதாய நலன் கருதி துவக்கப்படும் திட்டங்கள்.

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்கள், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம்.

(இ) மின்சார வாரியம், போக்குவரத்து போன்ற மாநில அரசு நிறுவனங்கள் பயன்பாட்டிற்கும் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் போன்ற அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகள்.



II) ஒதுக்கீடு செய்யப்படாத மீதமுள்ள நகர்ப்புற உபரி நிலங்களை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் மூலமாக விற்பனைக்குக் கொண்டு வருதல்.

III) கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் எடுத்துக்கொள்ளப்பட்ட மிகை வெற்று நிலங்களில் ஆக்கிரமிப்புகள் இருப்பின், அவைகளை வரன்முறைப்படுத்தும்போது அரசு ஆணை (நிலை) எண்.168, வருவாய், நாள் 27-3-2000-ல் எடுக்கப்பட்ட முடிவினை பின்பற்றப்பட வேண்டும்.

IV) ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்கள் வியாபார நோக்கில் பயன்பட்டு வருமாயின் அந்நிலங்களை முறைப்படுத்துவதற்கு முன் அந்த ஆக்கிரமிப்பாளர்களிடம் வழிகாட்டிப் பதிவேட்டு மதிப்பில் இரண்டு மடங்கு விலை வசூலிக்கப்படவேண்டும்.

5. இது தவிர, இது போன்ற நகர்ப்புற மிகை வெற்று நிலங்களை நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தைப் பற்றிய விவரம் அறியாது 1½ கிரவுண்ட் வரை குடியிருப்புக்காக வாங்கியிருப்பின், அதனை அரசு நிர்ணயித்துள்ள குறிப்பிட்ட மதிப்பினைச் செலுத்தி வரன்முறைப்படுத்த அரசு ஆணை எண்.649, வருவாய், நாள் 29-7-1998-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 11

## இடைத்தரகர்களை ஒழித்தலும், ரயத்துவாரியாக மாற்றலும்

சுதந்திரத்திற்கு முன்பு, ஜமீன் கிராமங்களில் விவசாயி களிடமிருந்து ஜமீன்தாரர்கள் வரி வசூல் செய்து கணிசமான தொகையை நிர்வாகம் மற்றும் பராமரிப்புச் செலவுக்கு என்று தாங்களே வைத்துக்கொண்டு, ஒரு பகுதித் தொகையை அரசுக்கு செலுத்திவந்தனர்.

2. சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவில் வேளாண்மைச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் அரசுக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை ஒழித்து பல சட்டங்கள் கீழ்க்கண்டவாறு இயற்றப்பட்டன:-

(அ) தமிழ்நாடு உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் 26/1948)

(ஆ) தமிழ்நாடு இனாம் உடைமைகள் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

*(இ) தமிழ்நாடு குத்தகை நிலங்கள் (ஒழிப்பும் ரயத்துவாரியா மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 27/1963)*

*(ஈ) தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)*

*(உ) தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)*

*(ஊ) தமிழ்நாடு வரியற்ற நிலங்களின் மீது ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்டம், 1973 ( தமிழ்நாடு சட்டம் 31/1973)*

தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் சட்டம் நீங்கலாக ஏனைய சட்டங்களைப் பொறுத்தவரை அனேகமாக அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

3. ஜென்மம் நில உடைமைதாரர்கள் சிலர் அவர்களின் கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் பொருந்தாது என சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த நீதிப் பேராணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அவர்களில் சிலர் மேற்படி தள்ளுபடி ஆணையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் அளித்துள்ளனர். மனுதாரர்கள் தங்களது சிவில் மற்றும் ரிட் மேல்முறையீடுகளைத் திரும்ப பெறுவதற்கு உச்ச நீதிமன்றத்திடம் அனுமதி கோரினர். சட்டப் பிரிவு 9-ன்கீழ் ரயத்துவாரி பட்டா கோரி, ஏற்கெனவே அரசுக்கு அளித்துள்ள மனுக்கள் மீது நடவடிக்கை தொடருவதாகவும் தெரிவித்தனர். இதனை உச்ச நீதிமன்றம் ஏற்று, எல்லா மேல்முறையீடுகளையும் திரும்பப் பெற்றதாகக் கருதி தள்ளுபடி செய்தது. சட்டப் பிரிவு 9 அல்லது 17-ன்கீழ் அவர்களது விண்ணப்பங்கள் மீது முடிவு எடுக்குமாறு மாநில அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டது. இந்த மனுக்களை முடிவு செய்வதற்காக மாவட்ட வருவாய் அலுவலர், உதகமண்டலம் நிலவரித்திட்ட அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். 24/1969 சட்டத்தினை அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்த்தது அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதா என்பது குறித்த சில மேல்முறையீடுகளையும், நீதிப்பேராணைகள் மனுவையும் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய விசாரணை மன்றத்திற்கு (Larger-Bench) உச்ச நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளது.



4. நில உடைமைதாரர்களுக்கு இழப்பீடு தொகையும், தர்ம சத்திரங்கள், கல்வி மற்றும் ஆலய நிறுவனங்களுக்கு தஸ்திக் கொடையும் வழங்க பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளன. இழப்பீடு தொகையை நடுவர் நீதி மன்றத்தில் வைப்பு செய்து, ஒரே தவணையில் நில உடைமைதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. சமய சார்புடைய நிறுவனங்களுக்கு அவை செயல்படும் காலம் வரை, ஒவ்வோர் ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட தஸ்திக் கொடை, மாவட்ட வருவாய் அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தஸ்திக் கொடை ஒவ்வோர் ஆண்டும் தொடரும் செலவினமாகும். சமய சார்புள்ள நிறுவனங்கள் இருக்கும் வரை ஆண்டுக்கொரு முறை இது வழங்கப்படுகிறது.

## அத்தியாயம் - 12

## நில அளவை, நிலப்பதிவுருக்கள் மற்றும் பராமரிப்பு

நில அளவை பதிவுருக்கள் துறை இம்மாநில நிர்வாகத்தில் ஒரு தொன்மை வாய்ந்த மற்றும் நில அளவைப் பணி மற்றும் புலப்படங்கள் தயாரித்தல் ஆகியவற்றை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள துறையாகும். கிராமம் மற்றும் நகர நிலங்களில் அளவை மேற்கொள்ளுதல் இத்துறையின் தலையாய கடமையாகும். கிராம எல்லைகள் மற்றும் நில உடைமை எல்லைகள் வரையறுத்தல், கிராம வரைபடம், புலப்பட சுவடிகள், நகரத்தில் வார்டு மற்றும் பிளாக் வரைபடங்கள், நகர அளவைப் பதிவேடு மற்றும் நிலப்பதிவேடு தயாரித்தல் போன்ற பணிகள் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலப்பதிவுருக்களை சரிவர பராமரித்து நில அளவை எல்லைகளை சரிவர பேணிக்காத்தல் இத்துறையின் பொறுப்பாகும்.

### 1. நத்தம் நில அளவைப் பணி

தமிழ்நாட்டில் உள்ள 206 வட்டங்களில்,199 வட்டங்கள் நத்தம் நில அளவைப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதில் 193 வட்டங்களில் நில அளவைப் பணி முடிவுற்றுள்ளது.

31-7-2001 முடிய 4467 ச.கி.மீ. பரப்பு அளவை செய்யப்பட்டுள்ளது. 74,14,654 பட்டாக்கள் வழங்கப்பட்டு அதன் மூலம் 86,98,118 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

[2001 செப்டம்பர் 3

2. நகர அளவை

தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகள் மற்றும் 108 நகரங்கள் (நகரியங்கள் உட்பட) உள்ளன.

30 மாவட்டங்களை உள்ளடக்கி, 82 நகரங்கள் மற்றும் 6 மாநகராட்சிகள் ஆகியவற்றில் நகர நில அளவைப் பணி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 77 நகரங்கள் 3 மாநகராட்சிகள் மற்றும் ஒரு மாநகராட்சியின் ஒரு பகுதியிலும் அளவைப் பணி முடிவுற்றுள்ளது. 5 நகரங்கள் மற்றும் 2 மாநகராட்சிகளில் அளவைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. 31.7.2001 முடிய, 1,639 ச.கி.மீ.பரப்பில் அளவைப்பணி முடிக்கப்பட்டு, 1,525 ச.கி.மீ. பரப்புளவுக்கு பிரிவு வரைபடங்கள், வட்டார வரைபடங்கள், நகர நில அளவைப் பதிவேடுகள் ஆகிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவை நில வரித் திட்ட தனி அலுவலர்களால் இறுதித் தணிக்கைப் பணி மற்றும் வருவாய் பின்தொடர்பணி மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3. மலைக் கிராம அளவைப் பணி

கீழ்க்கண்ட 6 மலைகளில் உள்ள 66 கிராமங்களில் மலை அளவை எடுத்துக் கொள்ளப்பட்டு அளவைப் பணி முழுமையாக முடிக்கப் பட்டுவிட்டது.

1) ஏலகிரி மலை – வேலூர் மாவட்டம்

2) ஜவ்வாது மலை – வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்

3) பச்சைமலை – திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டம்

4) கொல்லிமலை – சேலம் மாவட்டம்

5) அருநூத்துமலை – சேலம் மாவட்டம்

6) ஆனைமலை – கோயம்புத்தூர் மாவட்டம்

31.7.2001 முடிய 858 ச.கி.மீ. பரப்பளவு அளவை செய்யப்பட்டு, அதற்குரிய ஆவணங்கள் நில வரித் திட்ட தொடர் பணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.



2001 செப்டம்பர் 3]

4. மாநிலப் பொது எல்லை

1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் புனரமைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கும் இடையே புதிதாக எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டதைக் கூராய்வு செய்ய ஒரு கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எப்போதெல்லாம் கூட்டாய்வு மேற்கொள்ளப்படுகின்றதோ, அப்போதெல்லாம் அது அண்டை மாநிலங்களால் அங்கீகாரம் செய்யப்பட வேண்டும். மாநில பொது எல்லையை பராமரிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் இக்கூட்டுத் தணிக்கை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணி அளவும் இதுவரை முடிக்கப்பட்ட விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கேரள எல்லை 830.1 கி.மீ. தொலைவில் 24 பகுதிகளாக அமைந்துள்ளது. 217.4 ச.கி.மீ. தொலைவிற்கு எல்லை அளவைப் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்ட தூய ஆவணங்கள் இரு அரசாலும் பின்னேற்கப்பட்டுள்ளன. 12.0 கி.மீ. தொலைவுள்ள எல்லைப் பகுதிக்கான தூய ஆவணங்கள் கேரள அரசுக்கு அனுப்பப்பட்டு அவ்வரசின் பின்னேற்பு எதிர்பார்க்கப்படுகிறது. 294.7 கி.மீ. நீளமுள்ள எல்லைப் பகுதிக்கான ஆவணங்கள் கூராய்வு செய்யப்பட்டுள்ளன. 56.4 கி.மீ தொலைவுள்ள எல்லைக்கான கூட்டாய்வுப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. 249.6 கி.மீ. தொலைவுள்ள எல்லைப் பகுதி கூட்டாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது..

தமிழ்நாடு–ஆந்திரா மாநிலங்களிடையே (578.8 கி.மீ.) தமிழ்நாடு–கர்நாடகா மாநிலங்களிடையே (481.0.கி.மீ.) கூட்டாய்வுப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

தமிழ்நாடு–பாண்டிச்சேரி மாநிலங்களிடையேயான எல்லை 353.8 கி.மீ. நீளமுள்ளது. 279.2 கி.மீ. தொலைவிற்கானக் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டுவிட்டது. 84.6.கி.மீ. தொலைவிற்குக் கூட்டாய்வுப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்களில் சம்பந்தப்பட்ட மாநில துறை ஆணையர்கள் கூட்டமும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை மாநில இயக்குநர்கள் கூட்டமும் நடைபெறுகின்றன.

*5. வருவாய் பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் பதிவுகள் செய்தல்*

பொது மக்கள் தங்கள் நில உடைமை குறித்த புல எல்லைகளைத் தெரிந்துகொள்ளச் செய்வது. அவர்களது நில உடைமைகளை வருவாய்க் கணக்குகளில் பதிவுகள் செய்து கொடுப்பது, பிரிவினைகள் ஏற்படும்போது அதற்கேற்ப பதிவேடுகளில் மாறுதல்களை பதிந்துகொள்வது மற்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத் தொகையைப் பெற்றுக் கொண்டு புலப்பட நகல்கள் வழங்குவது ஆகிய பணிகளை வட்ட அலுவலகங்களில் உள்ள நில அளவைப் பணியாளர்கள் மூலமாக இத்துறை செய்து வருகிறது.

மாநில அளவில் இத்துறையின் கீழ் 30 மாவட்ட நில அளவை அலுவலகங்களும் மற்றும் சென்னையில் ஒரு மத்திய நில அளவை அலுவலகமும் இயங்கி வருகின்றன. பொதுமக்களுக்குத் தேவையான தகவல்கள் மாவட்ட நில அளவை அலுவலகத்தின் மூலம் தேவைப்படும்போது வழங்கப்படுகின்றன. இவை தவிர, மாவட்டங்களிலுள்ள நில அளவை விற்பனை மையங்கள் மற்றும் சென்னையிலுள்ள மத்திய நில அளவை அலுவலக விற்பனை மையம் மூலமாக, கிராம வரைபடங்கள், வட்ட வரைபடங்கள், மாவட்ட வரைபடங்கள், சுற்றுலா வரைபடங்கள் மற்றும் பெருவழிப்பாதை காட்டும் வரைபடங்கள் ஆகியன குறைந்த கட்டணத்தில் பொது மக்களுக்கு கிடைக்கும் வண்ணம் விற்பனை செய்யப்படுகிறது.

*6.அச்சக வசதிகள்*

சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் உள்ள அச்சகத்தில் கருப்பு, வெள்ளை மற்றும் ஆறு வண்ணங்களில் வரைபடங்கள் அச்சடிக்கப்படுகின்றன.

நிழற்பட அச்சு மூலமோ அல்லது ஆப்செட் மூலமோ நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி வரைபடங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. வரைபட நகல்கள் எடுப்பதற்கு நிழற்பட நகலெடுக்கும் கருவி, ப்ளான் பிரிண்டர், என்.சி.ஸ்கிரைபர், லேமினேடிங் கருவி, மற்றும் கணினி போன்ற நவீன கருவிகள் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சமீபத்திய அச்சுத் தொழில்நுட்பத்தைக் கொண்டு அச்சகப் பிரிவினை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இத்துறையை நவீனமயமாக்குவது குறித்து பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. மின் அணு தொலை அளவைக் கருவி, மைக்ரோ





ஆப்டிக் தியோடலைட், எல்க்ட்ரானிக் ஸ்கிரைபர் போன்ற நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அன்றாட பராமரிப்புப் பணி நீங்கலாக தற்சமயம் கீழ்க்கண்ட திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

*7. வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல்*

மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டத்தின்கீழ் வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நிலப்பதிவுருக்களை மேம்படுத்துதல் திட்டத்திற்காக, 1989 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு முடிய மத்திய அரசிடமிருந்து ரூ.722.06 இலட்சம் நிதி உதவியாக மாநில அரசு பெற்றுள்ளது.

இத்தொகையில், 50 விழுக்காடு திட்டச் செலவை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இத்தொகை நவீன உபகரணங்கள் வாங்கவும், பயிற்சி உள் அமைப்புகளை வலுப்படுத்தவும், கட்டடங்கள் கட்டுவதற்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இது வரை இத்திட்டத்தின் கீழ் ரூ.646.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

*8. பத்தாவது நிதிக் குழு மான்யம்*

பத்தாவது நிதிக் குழு கூடுதல் பதிவறைகள் கட்டுவதற்கும், அவற்றை நவீனப் படுத்துவதற்கான துணை உபகரணங்கள் வாங்குவதற்கும் நிலை உயர்த்தும் மான்யமாக ரூ.630.52 இலட்சம் வழங்கியுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி நில அளவை மற்றும் நிலப் பதிவேடுகள் துறை நிலப் பதிவுருக்களை பாதுகாப்பதற்கென மாவட்டங்களில் ரூ.330.00 இலட்சம் செலவில் 32 கட்டங்கள் கட்டியுள்ளது. பெரும்பாலான பதிவுருக்கள் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதால், சென்னை சேப்பாக்கத்தில் ரூ.300.52 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் அமைந்த மத்திய ஆவணக் காப்பக அலுவலகம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.7.2001 அன்று திறந்து வைக்கப்பட்டது.

*9. நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டம்*

நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் செயல்முறைத் திட்டம் மத்திய அரசு நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்குவதற்காக செயல்படுத்துகின்ற 100 விழுக்காடு நிதி உதவித் திட்டத்தின்கீழ் 1991 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

[2001 செப்டம்பர் 3

இந்தத் திட்டத்தின்கீழ் 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டா பதிவுகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. முதன் முதலில் இத்திட்டம் சேலம் மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக 1991–92 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1994–95 ஆம் ஆண்டுகளில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலும், 1995–97 ஆம் ஆண்டுகளில் கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திண்டுக்கல், தர்மபுரி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1997–98 ஆம் ஆண்டில் இத்திட்டம் ஏனைய பிற மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள மாவட்ட தேசிய தகவலியல் மையங்களில், புள்ளிவிவரங்கள் கணினி மூலம் பதிவுகள் செய்வதற்கு ஏதுவாக உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட தேசிய தகவலியல் மையத்திற்கும் 10 முதல் 16 முடிய இணைப்புகள் (TERMINALS) உடைய பெண்டியம் பேஸ்டு யுனிக்ஸ் சர்வர் (Pentium based unix server) வழங்கப்பட்டுள்ளது.

வட்ட அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் நிலப் புள்ளி விவரங்கள், பதிவுகள் கணினியில் மேற்கொள்வதற்கு மத்திய அரசு இதுவரை ரூ.513.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் இதுவரை ரூ.464.44 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை விரைவில் இதற்காகச் செலவிடப்பட உள்ளது. இதே போன்று 206 வட்டங்களுக்கும் கணினி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக மத்திய அரசிடமிருந்து ரூ.714.00 இலட்சம் தொகை பெறப்பட்டு இதுவரை ரூ.549.52 இலட்சத்திற்கு கணினி கொள்முதல் செய்வதில் செலவிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதுமுள்ள 206 வட்டங்களில் கணினி மற்றும் அதன் உபகரணங்கள் வாங்கி, வழங்கப்பட்டு, கணினிகள் இயக்குவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்ற பணியாளர்களின் உதவியுடன் 31.3.2001 முதல் கணினிகள் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டத்திற்கு அதிமுக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவ்வகையில் மாவட்டங்களில் மின்னணு ஆட்சியியலை (e-Governance) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தாமாகவே முன் நின்று செயல்படுத்த இயலும்.



2001 செப்டம்பர் 3]

*10. வெளிப்புற கணினி மாடம்*

மைய அரசின் நிலப் பதிவுருக்களை கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசு கூடுதல் தொகையாக ரூ.164.48 இலட்சம் வழங்கியுள்ளது. இந்தக் கூடுதல் தொகையைக் கொண்டு குறிப்பிட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் தொடுதிரை வசதி கொண்ட வெளிப்புற கணினி மாடம் அமைப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் தொடங்கும் முகத்தான், நடப்பு நிதியாண்டில், இத்திட்டப் பணிக்கென 29 வட்டங்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு வட்டம் என) தேர்வு செய்யப்பட்டுள்ளன, இத்தகைய வெளிப்புற கணினி மாடங்களில் உள்ள தொடுதிரை வசதி மூலம் பொதுமக்கள் தங்களது தேவைக்கான நிலப்புள்ளி விவரங்களை தாங்களாகவே மிகவும் எளிதில் தெரிந்து கொள்வதற்கான வசதிகள் ஏற்படும்.

*11. நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டத்தில் வருவாய்/நில அளவைத் துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்*

நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் மத்திய அரசின் திட்டம் மாநிலம் முழுவதுமாக செயல்படுத்தப்பட்டு வருவதால் கீழ்க்கண்ட பணிகள் கணினிமயமாக்கப்பட்டு வட்ட அளவில் கிடைக்கப் பெறுகின்றன:—

1) நில ஆவணங்கள் குறித்த திட்டம்

2) வட்ட கணினிமயமாக்கும் செயல்முறைத் திட்டம்

3) மக்கள் குறை தீர்க்கும் பணியினைக் கண்காணிக்கும் திட்டம்

4) மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனிப் பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்களை கண்காணிக்கும் திட்டம்

5) முதியோர் ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

6) வட்ட அலுவலர்கள் மறு ஆய்வு அறிக்கைகள்

7) துப்பாக்கி, திரைப்பட அரங்கு போன்றவற்றிற்கு உரிமம் வழங்குதல் சம்பந்தமான தகவல்

8) சம்பளப்பட்டுவாடா

9) வெள்ளப்பெருக்கு நிலை குறித்த பருவ கால அறிக்கைகள்

10) மாவட்ட தேசிய தகவலியல் மையத்தின் வருவாய் கிராமங்களுக்கான திட்ட வரைபடம் சம்பந்தமான அடிப்படை புள்ளி விவரம்

11) குக்கிராமம் பற்றிய தகவல் திட்டம்

12) தேர்தல் காலப் பணிகள்

13) மின்னணு செய்தி இணைப்புச் சேவை ( 'இ'மெயில்)

மேற்குறிப்பிட்ட அனைத்து கணினிப் பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் எல்லா நேரங்களிலும் கிடைக்கச் செய்வதுடன், வருவாய் மற்றும் நில அளவைத் துறைகளில் துணை ஆட்சியர் முதல் உதவியாளர் வரையிலான அனைத்து அலுவலர்களின் உதவியுடன் கணினியை இயக்கச் செய்வதும், நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டத்தின் ஒரு இன்றியமையாத பணியாகவும் இருக்க வேண்டும். வட்டம் முதல் மாவட்டம் வரையிலான வருவாய்/நில அளவைத் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் நிலப் பதிவேடுகளை கணினிமயமாக்கும் திட்டத்தை மேலும் வலுவாக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. இதற்காக வருவாய்/நில அளவைத் துறைகளில் துணை ஆட்சியர் முதல் உதவியாளர் வரையில் மதிப்பீடு செய்யப்பட்ட 8,500 பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிலப் பதிவுருக்களை சீரிய முறையில் செயல்படுத்துவதற்காக மாற்றியமைக்கப்பட்ட வழிகாட்டும் நெறி முறைகளை வகுத்துள்ளதற்கேற்ப நிலப் பதிவுருக்களை கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் நில உடமையாளர்கள் தாங்கள் உரிமையாகக் கோரும் நில பதிவுருக்களின் நகலை துல்லியமாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் பெறுவதற்கு ஏதுவாக நில உரிமம் மற்றும் புலங்கள் வாரியான விவரங்களை கணினிமயமாக்குதல், நிலத் தகவல் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் நிலச் சீர்திருத்தங்கள் செய்தல், வருவாய் நிர்வாகத்தை சீரிய முறையில் செயல்படுத்துதல், அடிமட்டத்தில் உழலுகின்ற மக்களுக்கான திட்டம் வகுத்தல் ஆகியவற்றிற்குத் தேவையான புள்ளிவிவரங்களை உருவாக்குதல் போன்றவற்றைச் செயல்படுத்துவதற்கு இப்பயிற்சித் திட்டம் நீண்ட காலம் பயன்தரும்.





*12. நில அளவைப் புலப்படங்களை கணினிமயமாக்குதல்*

நில ஆவணங்களில் புலச்சுவடி புத்தகம் முக்கிய பங்கு வகிக்கிறது. தற்சமயம் புலச்சுவடிகள் கையால் வரையப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. புலச்சுவடிகளை கணினி மயமாக்குவதில் கீழ்க்கண்ட பயன்கள் உள்ளன:–

(1) நில அளவைப் புலப்படங்களுக்கான வரைபடங்களை மிகவும் துரிதமாக தயாரித்தல், புதிய உட்பிரிவுகளை உருவாக்குதல், தற்போதுள்ள வரைபடங்களில் மாறுதல்கள் செய்தல் போன்றவற்றைத் துரிதமாக செய்ய ஏதுவாகிறது.

(2) புள்ளிவிவரங்களை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாகிறது.

(3) நில அளவைப் புலப்படங்களை வெவ்வேறு கோணங்களில் வரைந்து அதிக தெளிவினை அளிப்பதற்குரிய வசதியை ஏற்படுத்துகிறது.

(4) நில உடைமைதாரர்களுக்கு புலப்படங்களின் நகல்கள் விரைவாக வழங்க முடிகிறது.

(5) கடாஸ்டரல் நில அளவையை அடிப்படையாகக் கொண்ட தகவலை மேம்பாடு செய்வதற்கு ஏதுவாகிறது.

(6) வரைபடங்களைத் திருத்த முடியாமல் பாதுகாக்கவும், புள்ளிவிவரங்களைப் பாதுகாப்புடன் வைத்துக்கொள்ளவும் முடிகிறது.

செங்கல்பட்டு, குடவாசல், ஈரோடு மற்றும் கோபிச்செட்டிபாளையம் ஆகிய நான்கு வட்டங்களில் மைய அரசின் நிதி உதவியுடன் ரூ.124.36 இலட்சம் செலவில் இரண்டு முன்னோடித் திட்டங்களின்கீழ், நில அளவைப் புலப்படங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளன. கணினி மயமாக்கப்பட்ட அனைத்து 1.22 இலட்சம் நில அளவைப் புலப்படங்களையும் வட்ட கணினி மையங்களில் ஏற்றும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கணினி மயமாக்கப்பட்ட நில அளவைப் புலப்படங்களை தினந்தோறும் கையாளும் வகையில், வட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தினை மாநிலத்தின் இதர வட்டங்களில் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இரு முன்னோடித் திட்டங்களின் அடிப்படையில் மென்பொருளுக்கான பொதுவான விவர குறியீட்டைப் பரிந்துரை

[2001 செப்டம்பர் 3

செய்வதற்கு வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு தமது பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இதற்கான நிதி உதவியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*13. பெரம்பலூர் முன்னோடித் திட்டம்*

கணினிமயமாக்குதலின் பயன்கள் இயன்ற வரை தகுதியானவர்கள் அனைவரையும் சென்று அடையும்வண்ணம் நில நிர்வாகம் சம்மந்தமான முழு விவரங்களையும் கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை கணினிமயமாக்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டம் பெரம்பலூர் மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மத்திய அரசு இத்திட்டத்திற்கு கொள்கையளவில் ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளதுடன், இத்திட்டத் துவக்கத்திற்காக ரூ.42.11 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:–

1) கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை நில நிர்வாகத்தின் அனைத்து அமைப்புகளின் பணி வெளிப்பாடு மற்றும் அதன் செயல்திறன் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்.

2) கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை நில நிர்வாக விவரங்களை கணினிமயமாக்க மென்பொருள் தயாரித்தல்.

3) கிராம அலுவலர்களுக்கும் வட்ட, கோட்ட, மாவட்ட அலுவலர்களுக்கும் நிலச் சம்பந்தப்பட்ட கோப்புகளை கையாளும் அலுவலர்களுக்கும் கணினி வழங்குதல்.

4) சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் , வட்ட அலுவலகத்திற்கும் கணினி இணைப்பு ஏற்படுத்துதல்.

5) மாநில மற்றும் மாவட்ட அளவில் முடிவு மேற்கொள்பவர்களின் உபயோகத்திற்காக கணினி இணைப்பு தகவல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டுக் கருவிகளை மேம்படுத்துதல்.

6) கணினி இணைப்புத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட புள்ளிவிவரங்களை பொதுமக்கள் புரிந்து கொள்கின்ற வகையில் மேம்படுத்துதல்.

பெரம்பலூர் மாவட்டத்தில், இத்திட்டத்தினை தொடங்குவதற்கான பணி வெளிப்பாடு செயல்முறை ஆய்வுகளை



2001 செப்டம்பர் 3]

(Work flow study) மேற்கொள்ளும்படி தேசிய தகவலியல் மைய அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தேசிய தகவலியல் மைய அதிகாரிகள், ஆய்வினை மேற்கொண்டு அப்பணியினை முடித்துள்ளனர். அவர்களது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

*14. விண்கோள் நில அளவை முறை*

சுடாஸ்ட்ரல் நில அளவையில் தற்போது வடிவமைக்கப்பட்டு புழக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ள விண்கோள் நில அளவை தொழில்நுட்பத்தை நாற்புறமும் சுழன்று அளவெடுக்க பயன்படுத்தப்படும் இருமுனை இணைப்புகளுடன் இணைத்து பயன்படுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.120.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கான 50 விழுக்காடு நிதியுதவியை மத்திய அரசு வழங்கியதுடன் தமது பங்காக ரூ.60.00 லட்சத்தையும் விடுவித்துள்ளது. மாநில அரசும் தமது பங்கான 50 விழுக்காடு தொகையை வழங்கியுள்ளது. இத்திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்தில் முதன்முதலில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான செயல்முறைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் விளைவாக நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் மற்றும் இயக்குநர் அலுவலகத்தால் நடத்தப்படுகின்ற நில அளவையில், விண்கோள் நில அளவை முறையை புகுத்துவதற்கான வழிவகை ஏற்படும். இத்தொழில் நுட்பத்தை இயக்குவதற்கு தேவைப்படுகின்ற திறமையும், அறிவும் பெறுவதற்கு அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு மையம் மற்றும் இவ்வளவை முறையில் திறமை பெற்றுள்ள வெளிநாட்டு நிறுவனங்களின் தேவை ஏற்படின் விரைவில் தெரிவு செய்யப்படும்.

*15. பயிற்சி வசதிகள்*

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாட்டில் ஒரு நில அளவைப் பயிற்சி நிலையம் வருவாய்த் துறையின் சார்பு அலுவலர்கள், தகுதிகாண் பயிற்சி பெறுகின்ற உதவி ஆட்சியர்கள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், பிற துறைகள் மற்றும் மாநகராட்சிகளை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர்களுக்கு நில அளவைப் பயிற்சி அளிப்பதற்கு இயங்கி வருகிறது. வான்வெளியிலிருந்து நிழற்படம் எடுத்தல் மற்றும் வரைபடம் தயாரித்தல் ஆகிய துறைகளில் குறிப்பிட்ட நபர்களுக்கு சிறப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன. நில அளவைப்

[2001 செப்டம்பர் 3

பணியாளர்களுக்கு நவீன நில அளவை தொழில்நுட்பம் மற்றும் அது சம்பந்தமான கருவிகளை இயக்குவதற்கு பயிற்சி அளிப்பதற்காகவும், நவீன நில அளவை தொழில் நுட்பம் சம்பந்தமான படிப்பு பிரிவு துவங்குவதற்காகவும், ஒரு நவீன உயர் தொழில்நுட்ப பயிற்சி மையம் (C-STAR) சென்னையில் அமைப்பதற்காக அரசு ரூ.127.03 லட்சம் வழங்கியுள்ளது. ஆரம்பத்தில் இந்தப் பயிற்சி நிலையம் சென்னையில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கும். இந்த உயர் தொழில்நுட்ப நிலையம், நில அளவைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் (C-STAR) என்று பெயரிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 13

### நில உரிமைப் பதிவேடு திட்டம்

நில உரிமைப் பதிவேடுச் சட்டம், 1983 (சட்டம்4/1986) தமிழகம் முழுவதும் உள்ள எல்லா விவசாய நிலங்களுக்கும் சட்ட ரீதியான "நில உரிமைப் பதிவேடு" வழங்க வகை செய்கிறது. இதன் வாயிலாக வில்லங்க சான்று ஏதுமின்றி நிதி நிறுவனம், கூட்டுறவு வங்கி, இதர வங்கிகள் ஆகியவை விவசாயிகளுக்கு கடன் வழங்க ஏதுவாகிறது.

2. ஒரு வட்டத்தில் ஒரு நில உடைமைதாரருக்குச் சொந்தமான அனைத்து நிலங்களுக்கும் உள்ள விவரங்கள் அடங்கிய ஆவணமாக நில உரிமைப் பதிவேடு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வட்டமும், ஒரு அலகாக கொள்ளப்படுகிறது. ஒரு நில உடைமைதாரருக்கு குறிப்பிட்ட வட்டத்தில், வெவ்வேறு கிராமங்களில் நிலங்கள் இருந்தாலும், அவருடைய அனைத்து நில உடைமைகளும், இந்த நில உரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. நில உடைமைகளின் மேல் நிதி நிறுவனங்கள் மற்றும் கடன் வழங்கும் அமைப்புகள் நிலத்தின் மீது காப்புறுதியுடனோ அல்லது காப்புறுதி அல்லாமலோ கடன் தொகை வழங்கும் சமயத்தில், அவ்வாறு வழங்கப்பட்ட கடன் தொகை விவரம் மற்றும் அவற்றை திருப்பிச் செலுத்திய விவரங்கள் குறித்து நில உரிமைப் பதிவேட்டில் குறிக்கப்படுகிறது. சார் பதிவாளர் அலுவலகங்களில் பத்திரங்கள் பதிவு செய்யும்போது, வட்டாட்சியரின் பரிந்துரையுடன் நில உரிமைப் பதிவேட்டினையும் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. நீதிமன்ற வழக்குகளில் தாக்கல் செய்யப்படும் வழக்குரைகளுடன் / விண்ணப்பங்களுடன், சம்பந்தப்பட்ட நில உரிமைப் பதிவேட்டின்



2001 செப்டம்பர் 3]

சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்படுவது கட்டாயமாகும். இத்திட்டம் முதற்கட்டமாக பத்து மாவட்டங்களில் 1-4-1993 முதல் செயல்படுத்தப்பட்டது. (வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், அரியலூர், கோயம்புத்தூர், தேனி, மதுரை மற்றும் தூத்துக்குடி) 21,64,469 நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. 1-3-1996-ல் இருந்து வேலூர் மாவட்டத்தில் நில உரிமைப் பதிவேடுச் சட்டத்தின் பிரிவுகள் 5,9 மற்றும் 15 நடைமுறைப்படுத்தப்பட்டன. இச்சட்டத்தின் இப்பிரிவுகள் வேலூர் தவிர்த்த இதர ஒன்பது (9) மாவட்டங்களில் 15-6-2000 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் இன்னும் வழங்கப்படவேண்டிய நில உரிமைப் பதிவேடுகள் ஆறு மாத காலத்திற்குள் வழங்கப்பட்டுவிடும்.

அதன் தொடர்ச்சியாக, இரண்டு மற்றும் மூன்றாம் கட்டத்தில் விவசாய நிலங்கள் இல்லாமையினால் சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து ஏனைய அனைத்து மாவட்டங்களில், இத்திட்டம் முறையே 1-9-1999 மற்றும் 1-7-2000 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகளின் கீழ் கூறப்பட்டுள்ள படிவங்கள் அரசு மைய அச்சகத்திலிருந்து அச்சிட்டு பெறப்பட்டு, திட்ட அலகுகள் உள்ள மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. இதுவரை 47,92,631 விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு, 17,11,824 விண்ணப்பப்படிவங்கள் நில உடைமைதாரர்களால் பூர்த்தி செய்து தரப்பட்டு பெறப்பட்டுள்ளன. நில உரிமைப் பதிவேட்டை விரைந்து வழங்கும் பொருட்டு, வருவாய் நில அளவை அலுவலர்கள் கிராமங்களில் மக்களை நேரடியாக தொடர்புகொள்ளும் வகையில் சிறப்பு முகாம்கள் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. நில உரிமைப் பதிவேடு கணினி மூலம் தயாரித்து மக்களுக்கு வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதற்காக ரூ.18.93 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. நில உரிமைப் பதிவேட்டினை கணினியில் தயாரித்து வழங்கும் பணி 'எல்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களில் சுமார் 9.5 இலட்சம் நில உரிமைப் பதிவேடுகள் வழங்கப்பட இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2001 செப்டம்பர் 3

## அத்தியாயம் - 14

### மழை/வெள்ளம் - 2000

தமிழ்நாட்டில் 2000 ஆம் ஆண்டில், ஆண்டு இயல்பான சராசரி மழையளவான 925 மி.மீ.க்குப் பதிலாக, 840 மி.மீ. அளவிற்கு மழை பெய்துள்ளது. இதில் வடகிழக்குப் பருவ மழை காலமான அக்டோபர் முதல் டிசம்பர் வரை இயல்பான சராசரி மழை அளவான 470.31 மி.மீக்குப் பதிலாக 338.62 மி.மீ. மழை பெய்துள்ளது. இது இயல்பான மழையளவைவிட 28 சதவீதம் குறைவாகும். ஆயினும் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்/புயல் போன்றவற்றால் ஏற்படும் மழை/வெள்ளத்தால் கடலோர மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

2. ஒவ்வொரு ஆண்டும் இம்மாநிலத்தில், வடகிழக்குப் பருவ மழைக் காலத்திலும் புயல் உருவாகும்போதும் ஏற்படும் சவால்களை நன்கு அமையப் பெற்ற பேரழிவு தடுப்புத் திட்டத்தின் மூலம் சமாளிக்க மாநிலம் தயார் நிலையில் இருந்து வருகின்றது. இம் மாநிலத்தில் 53 புயல் எச்சரிக்கை மையங்களும், 123 புயல் பாதுகாப்பு இல்லங்களும் உள்ளன. பேரழிவு தடுப்புத் திட்டம், மாநில நிவாரண ஆணையரான முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரால் கண்காணிக்கப்படுகிறது. மாவட்ட அளவில், புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும் போது, மாவட்ட அவசர கால திட்டத்தை செயல்படுத்தும் அதிகாரிகளான மாவட்ட ஆட்சியர்களால் பேரழிவு தடுப்புத் திட்டம் கண்காணிக்கப் படுகிறது. இத்திட்டங்கள் அண்மையில் ஏற்பட்ட கடும் புயல்களைச் சமாளிக்க பயன்படுத்தப்பட்டது.

3. வெள்ளம்/ புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:-

(அ) உயிரிழந்த நபர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் நிவாரணமாக ரூ.15,000/- மாவட்ட ஆட்சியர்களால் உடனடியாக வழங்கப்படுகிறது.

(ஆ) முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.1,000/- வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ.500/- வீதமும் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி மற்றும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் இலவசமாக வழங்கப்படுகிறது.



2001 செப்டம்பர் 3]

(இ) இறந்த கால்நடைகளுக்கு முதிர்ந்த பசு, காளை மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ5,000/- வீதமும், பசு மற்றும் எருமை கன்று ஒன்றுக்கு ரூ.3,000/- வீதமும், செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1,000/ - வீதமும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு கால் நடைகளுக்கு மிகாமல் நிவாரணம் வழங்கப்படுகிறது.

(ஈ) வெள்ளம்/புயலால் பாதிக்கப்பட்ட பல்வகை பயிர்களுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்கப்படுகின்றன:-

| வ. எண் | முழுவதுமாக பாதிக்கப்பட்ட பயிர்வகை | ஒரு ஹெக் டேருக்கு நிவாரணத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| | வேளாண் பயிர்கள் | |
| 1 | நெல் | 1000 |
| 2 | நிலக்கடலை | 2500 |
| 3 | கரும்பு | 4000 |
| 4 | பயறு வகைகள் | 600 |
| 5 | பருத்தி | 1500 |
| 6 | சிறு தானியங்கள் (சோளம், கம்பு, கேழ்வரகு) | 400 |
| | தோட்டக்கலை பயிர்கள் | |
| 1 | உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், கேரட், மிளகாய், வெங்காயம், காலிபிளவர், பூண்டு, மஞ்சள், வெற்றிலைக் கொடி, வாழை, திராட்சை, கொய்யா, சப்போட்டா, இலவங்கம், இலவம் பஞ்சு, முந்திரி, காபி, ஏலக்காய், சாமந்தி, கனகாம்பரம், மல்லிகை, அரளி, அர நெல்லிக்காய் | 4000 |
| 2 | தக்காளி, சவ்—சவ், பட்டாணி, பாகற்காய், அவரை, முள்ளங்கி, பீட்ருட், பீன்ஸ் | 2000 |
| 3 | சுத்தரி, வெண்டை, கொத்துமல்லி, மரவள்ளி | 1000 |

(உ) பூச்சித் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடையும் பயிர்களுக்கும், இயற்கை இடர்பாடுகள் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க வழிவகை உள்ளது.

(ஊ) பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நிவாரணத் தொகையினை உடனடியாக வழங்கும் பொருட்டு கருவூல விதி 27–ன்கீழ் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

4. மழைக்கு முன்னர், மாநில அளவில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளினாலும், மாவட்ட அளவில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை களாலும், உயிரிழப்பு மற்றும் சொத்துக்கள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படவிருந்த சேதங்கள் குறைக்கப்பட்டன.

5. தமிழ்நாட்டைத் தாக்கிய இரண்டு புயல்களில் ஒன்று கடலூருக்கு அருகில் 29.11.2000 அன்றும் மற்றொன்று 28.12.2000 அன்று தூத்துக்குடிக்கு அருகிலும், தமிழ்நாட்டின் கடற்கரையை கடந்தன. இதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, நாமக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை பெய்தது. 2000 ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் ஏற்பட்ட மழை/வெள்ளம் உயிருக்கும் உடமைக்கும் சேதங்களை ஏற்படுத்தியது. மாநிலத்தில், 53 நபர்கள் உயிரிழந்தனர். 178 கால்நடைகள் இறந்தன. 796 குடிசைகள் முழுமையாகவும், 2,038 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தன. மாவட்ட ஆட்சியர்களின் அறிக்கைகளின்படி, 5227.20.0 ஹெக்டேர் நிலப்பரப்பில் இருந்த நெற்பயிர்களும் மூழ்கின மற்றும் 4100 ஹெக்டேர் நிலப்பரப்பில் இருந்த கரும்பு மற்றும் வாழை மரங்களும் சேதமடைந்தன. இவ்விரு புயல்களும் பல அரசு கட்டடங்களையும், நீர்ப்பாசன ஆதாரங்களையும், மின் கம்பிகளையும் சேதப்படுத்தின.

6. கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் வெள்ளம்/ புயல் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள, அரசு இயற்கை இடர்பாடுகளுக்கான நிவாரண நிதியில் இருந்து ரூ.8.00 கோடிக்கு அரசாணை நிலை எண் 621, வருவாய்த் துறை, நாள் 14–12–2000–ல் நிதி ஒப்பளிப்பு வழங்கியது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்த





விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.9,50,100/–க்கு அரசாணை (நிலை) எண் 22 வருவாய்த் துறை, நாள் 12–1–2001–ல் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

7. இயற்கை இடர்பாடுகள் மற்றும் சட்டம் – ஒழுங்கு பிரச்சனைகளால் ஏற்படும் நெருக்கடிகளின் போது உடனுக்குடனும் எளிதிலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக வருவாய்த் துறை அலுவலகங்களில் இருவழித் தகவல் தொடர்பு சாதனத்தை அமைக்க அரசு கருதியுள்ளது. முதற்கட்டமாக இந்த இருவழி தகவல் தொடர்பு சாதனத்தை 12 கடலோர மாவட்டங்களில் உள்ள சில முக்கிய வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலும் அமைக்க தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கென தொடராச் செலவினமாக ரூ.99.25 இலட்சமும், தொடர் செலவினமாக ரூ.11.50 இலட்சமும் அரசாணை (நிலை) எண் 200 வருவாய்த் துறை நாள் 6–6–2001–ல் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

8. மனிதர்களால் ஏற்படுத்தப்படக்கூடிய பேரழிவுகள் உள்ளிட்ட அனைத்து பேரழிவுகளையும் எதிர்கொள்ள தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் "பேரழிவு மேலாண்மைத் திட்டம்" என்றதொரு திட்டத்தை தயாரிப்பதற்காக மத்திய அரசு, உயர் அதிகாரம் கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளது. மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளவாறு மாநில மற்றும் மாவட்ட அளவில் அனைத்து வகையான பேரழிவுகளையும் கையாள "பேரழிவு மேலாண்மைத் திட்டத்தை" தயாரிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான ஒரு குழுவும், ஐந்து துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. துணைக் குழுக்களின் விவரம் பின்வருமாறு:–

[2001 செப்டம்பர் 3

| வ. எண் (1) | குழு எண் (2) | பொருள் (3) | அமைப்பாளர் (4) |
|---|---|---|---|
| 1 | துணைக் குழு — I | நீர் மற்றும் தட்பவெப்பம் தொடர்பான பேரழிவுகள் | செயலர், வருவாய்த் துறை |
| 2 | துணைக் குழு—II | புவியியல் தொடர்பான பேரழிவுகள் | செயலர், பொதுப் பணித் துறை |
| 3 | துணைக் குழு—III | இரசாயனம்/ தொழிற் சாலை/ அணுக்கதிர் தொடர்பான பேரழிவுகள் | செயலர், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை |
| 4 | துணைக் குழு—IV | விபத்துக்கள் தொடர்பான பேரழிவுகள் | செயலர், உள் துறை |
| 5 | துணைக் குழு—V | உயிரியல் தொடர்பான பேரழிவுகள் | செயலர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை |

அனைத்து துணைக் குழுக்களும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தத்தம் சம்பந்தப்பட்ட பேரழிவு மேலாண்மைத் திட்டங்களை தயார் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

## அத்தியாயம் -15

## நலத் திட்டங்கள்

### (1) தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத்திட்டம்

பொருளீட்டிக் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய குடும்பத் தலைவர் மரண மடைந்தால், அவரை இழந்து நலிவுற்று வாடும் குடும்பத்தின் துயரினைத் துடைக்கும் பொருட்டு தமிழ்நாடு நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அக்குடும்பத்திற்கு ரூ.10,000/– நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் முழுத் தொகையையும் மத்திய அரசே தனது தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் ஏற்றுக் கொள்கிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவதற்குக் குடும்ப ஆண்டு வருமானம், அனைத்து வகையிலும் ரூ.7,200/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. இத்திட்டத்தின்கீழ் 1990–91 முதல் 2001–2002 வரை கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:–



2001 செப்டம்பர் 3]

| வ. எண் | ஆண்டு | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 1990-91 | 22,154 | 6,36,65,000 |
| 2 | 1991-92 | 22,161 | 6,69,56,000 |
| 3 | 1992-93 | 39,087 | 12,66,39,335 |
| 4 | 1993-94 | 36,835 | 15,62,00,000 |
| 5 | 1994-95 | 19,296 | 11,48,90,295 |
| 6 | 1995-96 | 54,762 | 24,56,39,000 |
| 7 | 1996-97 | 61,755 | 30,88,62,970 |
| 8 | 1997-98 | 40,034 | 26,18,70,000 |
| 9 | 1998-99 | 37,214 | 35,91,91,000 |
| 10 | 1999-2000 | 22,574 | 18,84,46,000 |
| 11 | 2000-2001 | 18,632 | 17,91,38,000 |
| 12 | 2001-2002 (7/2001 வரை) | 115 | 1,33,000 |

### (2) விபத்து நிவாரணத் திட்டம்

ஏழைத் தொழிலாளர்கள் தாம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது விபத்தினால் இறக்க நேரிட்டால் அல்லது காயங்களினால் அங்கங்களை இழக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி விண்ணப்பம் செய்வதற்கு ஆண்டு வருமானம் ஏதும் நிர்ணயிக்கப் படவில்லை. இத்திட்டத்தின்கீழ் 44 வகை ஏழைத் தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.

2. விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழக்கும் நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.15,000/– நிவாரணமாக வழங்கப்படுகிறது. இதில் ரூ.10,000/– தொகையை மைய அரசு அதன் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் வழங்குகிறது. எஞ்சிய ரூ.5,000/– தொகையை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

3. இத்திட்டத்தின்கீழ் விபத்தில் உடல் ஊனமுற்றோருக்கு அவர்களின் ஊனத்தின் அளவிற்கேற்றவாறு நிவாரணமாக ரூ.7,500/– முதல் ரூ.15,000/– வரை வழங்கப்படுகிறது.

4. இத்திட்டத்தின்கீழ் 1990–91 முதல் 2001–2002 வரை கீழ்க்கண்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது:–

| வ. எண் | ஆண்டு | பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 1990-91 | 998 | 88,65,000 |
| 2 | 1991-92 | 1081 | 91,36,000 |
| 3 | 1992-93 | 961 | 70,00,000 |
| 4 | 1993-94 | 991 | 66,06,000 |
| 5 | 1994-95 | 1024 | 89,74,000 |
| 6 | 1995-96 | 1836 | 2,00,89,000 |
| 7 | 1996-97 | 1548 | 1,33,41,000 |
| 8 | 1997-98 | 992 | 1,20,29,000 |
| 9 | 1998-99 | 1578 | 2,36,73,000 |
| 10 | 1999-2000 | 1166 | 95,05,000 |
| 11 | 2000-2001 | 684 | 61,52,000 |
| 12 | 2001-2002 (7/2001 வரை) | 2 | 30,000 |

**(3) தீ விபத்துக்கள்**

தீ விபத்து ஏற்படும் போது தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப்படுகிறது. முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.1,000/–மும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.500/–ம் வழங்கப்படுகிறது. அத்துடன் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணை, 1 வேட்டி அல்லது லுங்கி மற்றும் 1 சேலை முதலியன தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகின்றன.

2. தீ விபத்தில் மனித உயிரிழப்பு ஏற்படும் போது பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.15,000/– கருணைக் கொடையாக வழங்கப்படுகிறது.



இக்கருணைக் கொடை இறந்தவர் பொருளீட்டும் நபராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் எந்தவிதப் பாகுபாடுமின்றி இறந்தவர் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. தீ விபத்தில் இறக்கும் குழந்தைகளுக்கும் இது பொருந்தும்.

3. தீ விபத்தில் இறக்கும் கால்நடைகளைப் பொறுத்தவரை கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்படுகிறது:–

1. பசு, எருது மற்றும் எருமை ஒன்றுக்கு ரூ.5,000/
2. பசு மற்றும் எருமை ஆகியவற்றின் கன்று ஒன்றுக்கு ரூ.3,000/
3. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஒன்றுக்கு ரூ.1,000/–

ஒரு குடும்பத்திற்கு அதிகபட்சமாக இரண்டு கால்நடைகள் இழப்பிற்கு நிவாரணம் வழங்கப்படுகிறது.

4. தீ விபத்தின் போது உடனடி நிவாரணம் வழங்க வேண்டியுள்ளதால், தீ விபத்தினால் மனித உயிரிழப்பு ஏற்பட்டாலும், கால்நடை இழப்பு ஏற்பட்டாலும் குடிசை களுக்கு சேதம் ஏற்பட்டாலும் கருவூல விதி 27–ன்படி தேவையான பணத்தை உடனடியாகப் பெற்று நிவாரணத் தொகை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 3

**அத்தியாயம் - 16**

*2001-2002* ஆம் ஆண்டிற்கான புதிய திட்டப் பணிகளின் விவரப் பட்டியல் (பகுதி II திட்டங்கள்)

| வ. எண். | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு (ரூ. இலட்சத்தில்) | 2001—2002—ல் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நில நிர்வாக ஆணையர் கூடுதல் ஆணையருக்கு திரைப்படம் மற்றும் பாசனம் (ஜெராக்ஸ் இயந்திரம் வழங்குதல்) | 1.00 | 1.00 |
| 2. | பதிவறைக்கு இரும்பு அடுக்குகள் வழங்குதல் | 1.00 | 1.00 |
| 3. | இரண்டு நேரடி தொலைபேசி தொடர்புகள் ஏற்படுத்துதல் | 0.06 | 0.06 |
| 4. | நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் மின்தூக்கி ஒன்று அமைத்தல் | 11.50 | 11.50 |
| 5. | சுற்றுச்சுவர், கார் நிறுத்துமிடம், சைக்கிள்/இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்கள், காத்திருக்கும் கூடம் ஆகியன அமைத்தல் மற்றும் தற்போதுள்ள கார் நிறுத்து மிடத்திற்குப் பக்கச் சுவர்கள் கட்டுதல் | 5.00 | 5.00 |
| 6. | போட்டோ ஜின்கோ அச்சகப் பிரிவில் இயங்கும் புகைப்படங்கள் தயார் செய்யும் இயந்திரங்களில் மின்சீராக்கி இயக்கிப் பொறுத்துதல் | 3.00 | 3.00 |



2001 செப்டம்பர் 3]

| | | | |
|---|---|---|---|
| 7. | கூடுதலாக ஒரு பொறியியல் தளவாட பிரிண்டர் வாங்குதல் | 4.30 | 4.30 |
| 8. | வேளாண்மை வருமான வரி ஆணையர் கோயம்புத்தூர் மற்றும் நாகர்கோவிலில் உள்ள வேளாண்மை வருமான வரி அலுவலகங்களுக்கு கணினி ஒன்று வாங்குதல் | 2.00 | 2.00 |
| | மொத்தம் | 27.86 | 27.86 |

## இணைப்பு IV

(456 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 2 – மாநில ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு , 2001–2002

### 1. முன்னுரை

1.1 இம்மாநிலத்தின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை கொள்கை, மாநில வருவாய்த் தேவையையும் இம்மாநில மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைக் கருத்திற்கொண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. குடும்பத்தின் வருவாய் பாதிப்பு மற்றும் அதனால் ஏழை எளிய பெண்களுக்கு ஏற்படும் சொல்லொணாத் துயரங்களைத் தவிர்க்கும் பொருட்டு, ஏழை எளிய மக்களைக் குடிப்பழக்கத்திலிருந்து தடுப்பதே இவ்வரசின் முக்கியக் கொள்கையாகும். அதே வேளையில் மக்கள் தொகையில் இயலும் நிலையில் இருக்கும் பிரிவினரிடமிருந்து உயர்பட்ச அளவில் ஆயத்தீர்வை வருவாயைப் பெறுவதும் அரசின் கொள்கையாகும். இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் பீரின் விற்பனை, சில்லறை விற்பனைக் கடைகளின் வாயிலாக அனுமதியளிக்கப் பட்டுள்ளது. எனினும், ஏழை மக்கள் மற்றும் சமுதாயத்தின் அடித்தள மக்களைப் பாதிக்கும் சாராயம் மற்றும் கள் விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

1.2 காவல் துறையின் அமலாக்கப் பிரிவினை சீர் செய்து மற்றும் பலப்படுத்தி கள்ளச்சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளை தடுக்க, இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும். ஏழை மக்களின் குடும்பங்கள் குறிப்பாக, பெண்களை பாதிக்கும் கள்ளச்சாராயம் மற்றும் கள்ளச்சாராயக்காரர்கள் மீது இவ்வரசு கண்டிப்புமிக்க நடவடிக்கை எடுக்கும். மேற்கூறிய குறிக்கோள்களை அடைய பொதுமக்களின் தீவிரப் பங்கேற்பு குறிப்பாக, மகளிர் குழுவின் பங்கேற்பினை அரசு ஊக்குவிக்கும்; அவர்கள் பொதுமக்களுக்கு குறிப்பாக, ஏழை மக்களுக்கு குடியின் தீமை பற்றி எடுத்துரைக்க அரசு ஊக்குவிக்கும்.

1.3 கள்ளச்சாராயத் தொழிலுக்கு மாற்றாக பிற தொழில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதைக் கருத்திற்கொண்டு அரசு சாரா அமைப்புகள் பங்கு பெறுவதன் வாயிலாக கள்ளச் சாராயக்காரர்களுக்கு மறுவாழ்வு தருவதற்கு ஊக்கம் அளிக்கப்படும்.

[2001 செப்டம்பர் 3

## 2. ஆயத்தீர்வை வருவாய்

21. ஆயத்தீர்வை மற்றும் மதுபானங்களின் மீதான விற்பனை வரி வாயிலாக அரசுக் கருவூலத்திற்கு இத்துறை பெருமளவு வருவாய் அளிக்கிறது. எப்பொழுதெல்லாம் ஆயத்தீர்வை வருமானத்தில் அதிகரிப்பு ஏற்படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் அதற்கேற்ப மதுவிலிருந்து கிடைக்கும் விற்பனை வரி அதிகரிப்பு இருக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை மூலமாகக் கிடைத்த மொத்த வருவாய் ரூபாய் 186868 கோடி ஆகும். இதே காலத்தில், மது மீதான விற்பனை வரி மூலம் கிடைத்த மொத்த வருவாய் ரூபாய் 150488 கோடி ஆகும். ஆகவே, கடந்த ஆண்டு மது விற்பனையில் அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய் ரூபாய் 337356 கோடி ஆகும்.


22. மாநில ஆயத்தீர்வை வருமானத்தின் போக்கினை ஆய்வு செய்தபோது, 1991-92 முதல் 1995-96 வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் உயரளவாக 115 விழுக்காடாக இருந்தது. ஆனால், 1996-2001 ஆண்டுகளில் அதிகரிப்பு 100 விழுக்காடாக மட்டுமே இருந்தது. இக்காலகட்டத்தில் மதுவின் பேரிலான ஆயத்தீர்வை மற்றும் விற்பனைக் கட்டணம் இரு முறை உயர்த்தப்பட்ட பின்னரும் இந்த அதிகரிப்புதான் ஏற்பட்டது. 1997 ஆம் ஆண்டு மார்ச் திங்களில், சாதாரண மதுவகைகளின் பேரிலான ஆயத்தீர்வை ஒரு புரூப் லிட்டருக்கு ரூபாய் 40/-இல் இருந்து ரூபாய் 55/- ஆகவும்; நடுத்தர மதுவகைகள் மற்றும் பிரிமியம் மதுவகைகள் பேரிலான ஆயத்தீர்வை ரூபாய் 60/-இல் இருந்து ரூபாய் 75/-ஆகவும் உயர்த்தப்பட்டது. மீண்டும் 1999 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் சாதாரண மதுவகைகள் பேரிலான ஆயத்தீர்வை ஒரு புரூப் லிட்டருக்கு ரூபாய் 55/- என்ற வீதத்திலிருந்து ரூபாய் 65/-ஆகவும், நடுத்தர மதுவகைகள் மற்றும் பிரிமியம் மதுவகைகள் பேரிலான ஆயத்தீர்வை ரூபாய் 75/- இல் இருந்து ரூபாய் 85/- ஆகவும் உயர்த்தப்பட்டது. அதேபோன்று 1996 ஆம் ஆண்டு சூன் திங்களில் மதுபான உற்பத்தியாளர்களால் செலுத்தப்படும் விற்பனைக் கட்டணம் (vend fee) பெட்டி ஒன்றுக்கு ரூபாய் 45/- என்ற வீதத்தில் இருந்து பெட்டி ஒன்றுக்கு ரூபாய் 95/- என உயர்த்தப்பட்டது. மீண்டும், 1997 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் விற்பனைக் கட்டணம் பெட்டி ஒன்றுக்கு ரூபாய் 95/- என்ற வீதத்தில் இருந்து ரூபாய் 165/- என உயர்த்தப்பட்டது. மேலே கூறப்பட்டுள்ள வருவாய் அதிகரிப்பு, தீர்வை மற்றும் கட்டண வீதத்தைக் கூட்டியதனால் மட்டுமே பெறப்பட்டதே தவிர, விற்பனை அதிகரிப்பின் மூலம் பெறப்படவில்லை. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை விற்பனை செய்ததினால் 1996-97 முதல் 2000-2001 முடிவடைந்த ஐந்தாண்டுகளில் 29 விழுக்காடு மட்டுமே விற்பனை அளவில் அதிகரிப்பு இருந்தது. ஆனால், இதனோடு ஒப்பிடுகையில் 1991-92 முதல் 1995-96 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் இந்த அதிகரிப்பு 210 விழுக்காடாக இருந்தது. 1990-91-ல் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை 37.22 இலட்சம் பெட்டிகளாக இருந்தது.



2001 செப்டம்பர் 3]


1991-92 முதல் 1995-96 வரையிலான ஆயத்தீர்வை வருவாய்

| ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் (ரூபாய் கோடிகளில்) | வளர்ச்சி விகிதம் | 1990-91 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்ட வளர்ச்சி விகிதம் 5 ஆண்டுகளில் |
|---|---|---|---|
| 1991-92 | 483.12 | 11.09 | |
| 1992-93 | 564.86 | 16.92 | |
| 1993-94 | 568.82 | 0.70 | 115 |
| 1994-95 | 614.74 | 8.07 | |
| 1995-96 | 934.66 | 52.04 | |



[2001 செப்டம்பர் 3


| 1996-97 முதல் 2000-2001 வரையிலான ஆயத்தீர்வை வருவாய் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் (ரூபாய் கோடிகளில்) | வளர்ச்சி விகிதம் | 1995-96 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்ட வளர்ச்சி விகிதம் 5 ஆண்டுகளில் |
| 1996-97 | 1063.07 | 13.74 | 100 |
| 1997-98 | 1299.85 | 22.27 | |
| 1998-99 | 1709.82 | 31.54 | |
| 1999-2000 | 1833.74 | 7.25 | |
| 2000-2001 | 1868.68 | 1.91 | |






2001 செப்டம்பர் 3]


| 1991-92 முதல் 1995-96 வரையிலான இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் எடுப்பு விவரம் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் எடுப்பு விவரம் (பெட்டிகள் இலட்சங்களில்) | ஆண்டு வளர்ச்சி விகிதம் | 1990-91 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்ட வளர்ச்சி விகிதம் 5 ஆண்டுகளில் |
| 1991-92 | 61.88 | 65.73 | 209.87 |
| 1992-93 | 85.82 | 39.13 | |
| 1993-94 | 90.41 | 5.34 | |
| 1994-95 | 93.61 | 3.54 | |
| 1995-96 | 115.34 | 23.22 | |



[2001 செப்டம்பர் 3

**1996-97 முதல் 2000-2001 வரையிலான இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் எடுப்பு விவரம்**

| ஆண்டு | இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் எடுப்பு விவரம் (பெட்டிகள் இலட்சங்களில்) | ஆண்டு வளர்ச்சி விகிதம் | 1995-96 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்ட வளர்ச்சி விகிதம் 5 ஆண்டுகளில் |
|---|---|---|---|
| 1996-97 | 139.57 | 21 | 29.17 |
| 1997-98 | 130.42 | -6.57 | |
| 1998-99 | 140.48 | 7.73 | |
| 1999-2000 | 141.56 | 0.77 | |
| 2000-2001 | 148.99 | 5.25 | |






2001 செப்டம்பர் 3]

1995-96-ல் விற்பனை 115.34 இலட்சம் பெட்டிகளாக உயர்ந்தது. ஆனால் 2000-2001-ல் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை 148.99 இலட்சம் பெட்டிகள் மட்டுமே. 1991-96-ல் இருந்த இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை அதிகரிப்பு 1996-2001-ல் இருந்த விற்பனை அதிகரிப்பை விட மிக அதிகம். தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திலிருந்து விற்பனைக்காக எடுக்கப்பட்ட மதுவகைகளின் அளவு குறைவானதற்கு மற்ற காரணங்களோடு, கள்ளச்சாராய நடமாட்டம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளும் முக்கியக் காரணங்களாகும். இவ்வாறாக கள்ளச்சாராயத்தையும், தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளின் விற்பனையையும் தடுப்பதன் மூலம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை உயரளவில் அதிகரிக்கும். ஆகவே, கள்ளச் சாராயத்தையும், தீர்வை செலுத்தப்படாத மது வகைகளையும் அறவே ஒழித்துக்கட்டி, மாநிலக் கருவூலத்திற்கு அதிக ஆயத்தீர்வை வருவாயைப் பெறும் வகையில் இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுக்கும்.

## 3. அரசு எடுத்த கொள்கை நடவடிக்கைகள்

3.1 இந்த அரசு ஆயத்தீர்வை வருமானத்தை அதிகரிக்கும் வகையிலும், கள்ள மது மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளை ஒழிக்கும் வகையிலும் மாநில மதுவிலக்குச் சட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தவும் பல கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அவை சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

### 3.2 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனைக் கடைகளுக்கான உரிமம் வழங்கும் முறையைச் சீரமைத்தல்

3.2.1 இதுவரையில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனைக்கான உரிமை, ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் மூலம் வழங்கப்பட்டது. இந்த முறையில் யார் அதிகத் தொகைக்குக் கேட்டார்களோ அவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை நடத்த உரிமங்கள் அளிக்கப்பட்டு வந்தன. இந்த முறையில் பல இடங்களில் ஏலதாரர்கள் தங்களுக்குள் ஒரு குழுவை அமைத்துக் கொண்டு, அதிகத் தொகைக்கு ஏலம் போகவிடாமல் கட்டுப்படுத்தி வந்தார்கள். இதனால் அரசுக்கு வரவேண்டிய முழு வருமானம் வரவிடாமல் தடுக்கப்பட்டது. இன்னொரு பக்கத்தில் அளவுக்கதிகமான ஒருவரையொருவர் வீழ்த்தும் போட்டிகள் (cut throat competition) நிலவிய காரணத்தால் பல நேர்வுகளில் பெறப்பட்ட உரிமைக் கட்டணம் மிக அதிகமாக இருந்தது. உரிமதாரர்கள் தாங்கள் செலுத்திய அதிகக் கட்டணத்தைச் சரிக்கட்டும் நோக்கத்தில் நேர்மையற்ற முறையில்

[2001 செப்டம்பர் 3

செயல்பட்டனர். எடுத்துக்காட்டாக, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மது வகைகளை விற்றும் உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலைக்கு (Maximum Retail Price) அதிகமாகவும் மதுபானங்களை விற்றனர். இதன்மூலம் அரசுக்கு வரவேண்டிய முறையான வருமானத்தில் இழப்பு ஏற்பட்டது. மேலும், இரண்டாவது ஆண்டு மற்றும் மூன்றாவது ஆண்டில் உரிமதாரர்கள் தங்களுக்குள் கூட்டுக்குழு அமைத்துக்கொண்டு, தங்கள் கடைகளின் உரிமத்தைப் பெருமளவில் புதுப்பிக்காமல் விட்டுவிட்டனர். இதனாலும் அரசுக்குப் பெருமளவு வருமான இழப்பு ஏற்பட்டது. போலி மது மற்றும் தீர்வை செலுத்தப்படாத மது விற்பனை காரணமாக வரவேண்டிய சட்டபூர்வமான வருவாயை அரசு இழந்ததோடு, அம்மாதிரியான மதுவிற்பனை, அருந்துவோரின் உயிருக்கு அபாயம் விளைவிப்பதாகவும் இருந்தது.

3.2.2. இந்த அரசு பதவியேற்ற உடனே இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைச் சில்லறையில் விற்பனை செய்வதற் உரிமம் வழங்குவதற்காகப் பின்பற்றப்பட்டு வந்த ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முறையை மறு ஆய்வு செய்து, அதற்கு மாற்றாக புதிய, உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்த முடிவெடுத்தது. இந்த புதிய உரிமம் வழங்கும் முறையில் ஒரு குறிப்பிட்ட அறிவிக்கை செய்யப்பட்ட இடத்திலுள்ள அனைத்து மதுபானக் கடைகளுக்கும் ஒரே சீரான அளவு உரிமைக் கட்டணம் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டது:-

| வரிசை எண் | பகுதி | உரிமைக் கட்டணம் (ரூபாய் இலட்சத்தில்/ கடை ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 14.00 |
| 2. | தேர்வுநிலை/சிறப்பு நிலை நகராட்சிகள் | 12.00 |
| 3. | பிறநிலை நகராட்சிகள் | 11.00 |
| 4. | தேர்வு நிலை/சிறப்பு நிலை பேரூராட்சிகள் | 9.00 |
| 5. | பிறநிலை பேரூராட்சிகள் | 8.00 |
| 6. | கிராம ஊராட்சிகள் | 5.00 |



2001 செப்டம்பர் 3]

3.2.3. விண்ணப்பத்தின் மூலம் உரிமங்கள் வழங்கப்பட்டன. அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியில் உள்ள ஒரு கடைக்கு ஒரு விண்ணப்பம் மட்டும் வரப்பெற்ற நேர்வுகளில் உரிமை நேரடியாக வழங்கப்பட்டது. அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியில் உள்ள ஒரு கடைக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வரப்பெற்ற நேர்வுகளில், மாவட்ட ஆட்சியர் மற்றும் விண்ணப்பதாரர்கள் (applicants) முன்னிலையில் வெளிப்படையான, நேர்மையான மற்றும் ஒளிவு மறைவற்ற குலுக்கலின் மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

3.2.4. நடப்பு ஆண்டில், இதுவரை 5335 கடைகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. உரிமைக் கட்டணமாக ரூபாய் 538.28 கோடி கிடைக்கப் பெற்றுள்ளது. மாநிலத்தின் வரலாற்றில் இதுவரை கிடைக்கப்பெற்ற உரிமைக் கட்டணத்தில் இதுதான் அதிகபட்சமானதாகும்.

3.2.5. மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமை வழங்குவதற்கு அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய உரிம முறை பொதுமக்களிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது; எல்லாத் தரப்பினராலும் இது பாராட்டப்பட்டுள்ளது. இம்மாநிலத்திற்கு நியாயமான முறையில் வரவேண்டிய ஆய வருவாயை இழப்பதற்குக் காரணமாக இருந்த மதுபான வியாபாரத்தில் பாரம்பரியக் கூட்டு சேர்தலை (traditional syndicate) உடைத்தது இந்த முறையில் அமைந்த முக்கிய சாதனையாகும்.

3.2.6. அரசு வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன் நடப்பு ஆண்டில், மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கான உரிமக் கட்டணம் கடை ஒன்றுக்கு ரூபாய் 2500/- லிருந்து ரூ5000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் உரிமதாரர்கள் செலுத்தவேண்டிய காப்புத் தொகை(security deposit) கடை ஒன்றுக்கு ரூபாய் 25,000/-லிருந்து ரூபாய் 1,00,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

3.2.7. விண்ணப்பக் கட்டணம் கடை ஒன்றுக்கு ரூபாய் 100/-லிருந்து ரூபாய் 500/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 5335 கடைகளுக்கு 44,071 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இதன்மூலம் ரூபாய் 2.20 கோடி வருவாய் கிடைத்தது.

3.2.8. இதுவரை, மதுபானங்களை சில்லறையில் விற்பனை செய்வதற்காக 5335 கடைகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அக்கடைகளில் இருந்து உரிமக் கட்டணமாக ரூபாய் 2.66 கோடி கிடைத்துள்ளது.

[2001 செப்டம்பர் 3

3.2.9 இதுவரை ரூபாய் 53.35 கோடி காப்புத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

3.2.10 கள்ளத்தனமான/தீர்வை செலுத்தப்படாத மதுபானங்களை ஒழிப்பதற்காக, உரிமம் வழங்கும் அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்ட அளவு குறைந்தபட்சக் கொள்முதல் அளவினை ஒவ்வொரு உரிமதாரரும் எடுக்க வேண்டும் என விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. உரிமதாரர் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு இந்த குறைந்தபட்ச அளவுக்கு மதுபானம் எடுக்கத் தவறினால், இதனால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்புக்கு ஏற்றவாறு தண்டத்தொகையை அவர் செலுத்த வேண்டும். மேற்கொண்டும் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு இவ்வாறான தவறு ஏற்படும் பட்சத்தில் உரிமம் ரத்து செய்யத் தக்கதாகும். அதிக அளவு உரிமக் கட்டணம் செலுத்திய உரிமதாரர்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட மதுபானங்களை நேர்மையாக விற்பனை செய்ததன் வாயிலாகக் கிடைத்த ஆதாயமானது, தாங்கள் முதலீடு செய்த பணத்திற்கு ஈடாக இல்லை என்ற மனக்குறை அவர்களிடையே முன்னர் இருந்தது. இந்த ஆண்டு உரிமைக் கட்டணத்தின் வீதம் சீரமைக்கப்பட்டுள்ளது. இதனால் நியாயமான உரிமைக் கட்டண வீதத்தில் கடைகளை விண்ணப்பதாரர்கள் பெற முடிந்தது. இதன்மூலம் தீர்வை செலுத்தப்படாத மதுபான விற்பனையில் உரிமதாரர்கள் ஈடுபடும் போக்கு அரிதாகும்.

3.2.11 சில்லறை விற்பனைக் கடைகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளதாலும் மற்றும் மாநிலத்தின் மதுவிலக்குச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளைக் கண்டிப்பாக அமல்படுத்துவதன் மூலமும், கடந்த மூன்று/ நான்காண்டுகளில் அநேகமாக தேக்க நிலையிலிருந்த மதுபான எடுப்பு, தற்பொழுது கணிசமான அளவு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எண்பது விழுக்காட்டிற்கு மேற்பட்ட வருவாய், மதுபான எடுப்பு (off-take) வாயிலாகக் கிடைப்பதால், மதுபான எடுப்பு (off-take) அளவு உயர்வினால் கூடுதல் வருவாயைத்திரட்ட ஏதுவாகும். பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்த இந்தக் கூடுதல் வருவாயைப் பயன்படுத்த இயலும். இவ்வாறான நேரடியான பலன் கிட்டுவது மட்டுமல்லாமல், கள்ள மதுபான விற்பனையைத் தடை செய்வதன் வாயிலாக, அறியாமையிலுள்ள பொதுமக்களுடைய உடல்நலத்திற்குக் கடுமையான கேடு விளைவிக்கக் கூடியதும், சில சமயங்களில் விஷச் சாராயச் சாவுகள் ஏற்படவும் காரணமான கள்ளச்சாராயத்தை அவர்கள் அருந்துவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர்.

### 3.3 கள்ள மதுபானங்களை ஒழித்தல்

3.3.1 இம்மாநிலத்தை கள்ள மதுபான விற்பனையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். கள்ள மதுபானக் கடத்தல்



2001 செப்டம்பர் 3]

மற்றும் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் ஆகிய குற்றங்கள் நடைபெறுதல், பெண்களுக்குப் பாதுகாப்பின்மை, ஏழ்மையான குடும்பங்களில் பொருளாதாரச் சீர்கேடு மற்றும் உடல்நலக்கேடு ஆகியவற்றை ஏற்படுத்துவதன் மூலம் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அரசு அறியும். எனவே, ஏழ்மை நிலையிலுள்ளவர்களின் குறிப்பாக, பெண்களின் துயருக்கும் காரணமாக உள்ள கள்ள மதுபான நடமாட்டத்தைத் தடை செய்வதற்காக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், கள்ளச்சாராயத்திற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் ஆயத் துறை அலுவலர்களுக்குத் தொடர்ச்சியான அறிவுரைகளை வழங்கியுள்ளது.

3.3.2 2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள், தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் கள்ள மது மற்றும் தீர்வை செலுத்தப்படாத மது விற்பனையை முற்றிலும் களைவதற்கு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும், கள்ள மதுவை ஒழிப்பதற்காக, மதுவிலக்குச் சட்டத்தைத் திறம்பட செயற்படுத்துவதற்காக வாரந்தோறும் ஆய அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களுடன் கூட்டுக் கூட்டம் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

3.3.3 கள்ளச் சாராயக் குற்றங்களில் ஈடுபடுவோரைத் தடுப்புக்காவலில் வைத்து, அவர்கள் மீது மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள். மாநிலம் முழுவதும் இதுவரை 3894 கள்ளச்சாராயம் காய்ச்சும் கரும்புள்ளி கிராமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கரும்புள்ளி கிராமங்களில் இருந்து கள்ளமது /தீர்வை செலுத்தப்படாத மது ஆகியவற்றை அறவே ஒழிக்க தீவிரமான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் எடுப்பார்கள். ஒவ்வொரு கரும்புள்ளி கிராமத்தையும் மாவட்ட காவல் துறை/ மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆகிய இரண்டிலும் உள்ள ஒவ்வொரு காவலருக்கு இத்தகைய கிராமத்தைத் தீவிரமாகக் கண்காணிக்கும் பொறுப்பானது ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3.3.4 கள்ளத்தனமாக மதுவகைகள் மற்றும் சாராவிகள் கடத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக எல்லையோர மாநிலங்களான

[2001 செப்டம்பர் 3

கேரளா, கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரியின் எல்லைப் பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் வாகனங்களைத் தீவிரமாகக் கண்காணித்தலை உறுதி செய்வதற்கென எல்லையோர மாவட்ட ஆட்சியர்கள் சிறப்பு நடவடிக்கைகளை எடுப்பார்கள். கடத்தல்காரர்கள் பாதையை மாற்றிச் செல்வதைத் தீவிரமாகக் கண்காணிக்க வழிவகை செய்யும்பொருட்டு மாவட்ட எல்லைப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடிகள் நடமாடும் கண்காணிப்பு குழுக்களாக மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றது.

3.3.5 பொதுவாக, கள்ளச் சாராயச் சாவுகள், கிராமங்களில் சமுதாய மற்றும் கிராமப்புற விழாக்களின் நிமித்தம் மக்கள் கூடும் போது நிகழ்கின்றன. இத்தகைய விழாக்கள் குறித்து தகவல்களை முன்னரே திரட்டி வைக்கும்படி கிராமப்புற அளவிலான வருவாய் நிர்வாகத்தினர் முடுக்கி விடப்பட்டுள்ளனர். இத்தகைய சாராயச் சாவுகள் நிகழாவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கென காவல் துறை தகுந்தவாறு விழிப்புடன் இருக்கச் செய்யப்பட்டுள்ளது.

### 3.4 மதுவிலக்கு அமலாக்கப்பிரிவை வலுப்படுத்துதல்

3.4.1 தற்சமயம், மாநிலத்தின் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தலைவராக காவல் துறை கூடுதல் இயக்குநர் உள்ளார். இவருக்கு உதவியாக தலைமையகத்தில் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் இருவரும், மாவட்டங்களில் 37 காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்களும் உள்ளனர். மாநிலம் முழுவதிலும் மொத்தம் 86 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் (units) உள்ளன.

3.4.2 மதுவிலக்கு அமலாக்கப்பிரிவின் செயல்பாடு விரிவாக ஆய்வு செய்யப்பட்ட பின்னர், பிற மாநிலங்களில் இருந்து கள்ளமது/தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் இம்மாநிலத்திற்குள் கடத்தப்படுதலைத் தடுக்கும் நோக்கத்துடன், இம்மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களிலுள்ள மதுவிலக்கு அமலாக்கப்பிரிவை வலுப்படுத்த வேண்டும் என அரசு முடிவெடுத்துள்ளது. மேலும் இரண்டு காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் பதவிகளை உருவாக்கி, சென்னை, மதுரை மற்றும் சேலம் ஆகியவற்றைத் தலைமையிடங்களாகக் கொண்டு மாநிலத்தை மூன்று மண்டலங்களாகப் பிரிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது. மேலும், வயப்பட்ட, கள்ளமது அதிகமுள்ள மாவட்டங்களில் எட்டு கூடுதல் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் உருவாக்கப்படும்.



2001 செப்டம்பர் 3]

3.4.3 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 23-8-1991 ஆம் நாளிட்ட அரசு ஆணை (பத்தாண்டு) எண் 444-ல், கள்ளத்தனமான மதுவை திறம்பட தடை செய்து அதனை ஒழிப்பதற்குரிய முழுப் பொறுப்புடையவர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் காவல் நிலையங்களிலுள்ள அலுவலர்கள் (Station House Officers) என முன்னர் வெளியிடப்பட்ட ஆணையை அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து அரசின் அனைத்து அறிவுரைகளும் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரால் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 3.5 கள்ள மதுவைக் கட்டுப்படுத்துவதில் மக்கள் பங்குபெறுதல்

3.5.1 இந்த மாநிலத்தைக் கள்ளச்சாராயமில்லா மாநிலமாக உருவாக்குவதற்கு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தீவிரமான அமலாக்க நடவடிக்கைகள் மட்டுமல்லாது, மக்களின் முழு ஒத்துழைப்பும் இன்றியமையாதது. மக்களின் ஒத்துழைப்பையும் பெறுவதற்குப் பொருத்தமான வழிமுறைகளை அரசு வகுக்கும். எனவே, கள்ளச்சாராயம் அதிகமாக உள்ள கிராமங்களில் தீவிரமாக கண்காணிப்பு மேற்கொள்ளப்படவும், அங்கு மதுவிலக்குக் குற்றங்கள் நடைபெறாது தடுக்கப்படவும், கிராம விழிப்புணர்வுக் குழுக்கள் (Village Vigilance Committees) அமைக்கப்படுவது ஊக்குவிக்கப்படும்.

3.5.2 குடிப்பழக்கத்தின் தீமைகள் குறித்து மக்களுக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு எடுத்துரைப்பதற்காக, பொதுமக்களின் குறிப்பாக, மகளிர் குழுக்களின் பங்களிப்பானது ஊக்குவிக்கப்படும். கள்ளச்சாராய விற்பனை மற்றும் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலில் இருந்து விடுபட்டவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுவதற்காக அரசு சாரா அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் போன்ற அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கப்படும்.

## 4. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள்

4.1 கொள்கை வகுத்தல் மற்றும் கொள்கைகளை நிறைவேற்றுதலை ஆய்வு செய்தல் ஆகியவை தலைமைச் செயலகத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் முக்கிய பணிகளாகும். இதுவரை உள்துறை செயலர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் செயலராகப் பணிபுரிந்து வந்தார். இத்துறையின் முக்கியத்துவத்தையும் வருவாய்

உள் ஆற்றலையும் (potential) அறிந்து, இத்துறைக்கென தனிச் செயலரை அரசு நியமித்துள்ளது. செயலருக்கு உதவியாக ஏனைய அலுவலர்களைத் தவிர ஒரு துணைச் செயலர் உள்ளார்.

### மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர்

4.2 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், துறைத் தலைவர் ஆவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவியாக இணை ஆணையர்கள் இருவர் (இந்திய ஆட்சிப் பணியாளர் பதவித் தரத்தில் ஒருவர், மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் ஒருவர்), நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவர் (நிதித் துறையின் அரசு இணைச் செயலாளர் பதவித் தரத்தில்), உதவி ஆணையர்கள் நால்வர் ஆகியோர் உள்ளனர்.

4.3 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர், மதுவிலக்கு குறித்த கொள்கைகளை உருவாக்குவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் அரசுக்கு உதவுகிறார். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 10/1937) மேற்படி சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளையும் செயல்படுத்தும் பொறுப்பு அவரிடம் உள்ளது.

4.4 அரசின் முன்அனுமதியுடன், வடிசாலை அமைக்கவும் மற்றும் ஆல்கஹால் உற்பத்தி செய்யவும், உரிமை மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரம் ஆணையருக்குத் தரப்பட்டுள்ளது. இவ்வாறே, அரசின் முன்அனுமதியுடன், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள்/பீர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறுவ உரிமை மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரமும் ஆணையருக்குத் தரப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் அவ்வாறு நிறுவப்பட்ட தொழிற்சாலைகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் அதிகாரமும் விதிகளின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### மாவட்ட அளவில் ஆயத்தீர்வை நிர்வாகம்

4.5 மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள் ஆயத்தீர்வை நிருவாகத்தை மேற்பார்வை- யிடுகின்றனர். சட்டம் மற்றும் விதிகளின்கீழ் அவருக்குச் சட்டரீதியான பொறுப்புகளும் அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களைத் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் ஓர் உதவி ஆணையர் (ஆயம்) மாவட்ட ஆட்சியருக்கு உதவுகிறார். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் தரத்தில் உள்ள துணை ஆணையர் (ஆயம்) மாவட்ட ஆட்சியருக்கு உதவுகிறார்.





4.6 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் , வடிசாலைகள், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள், வேதியியல் பிரிவுகள் மற்றும் பிணைமுறி கிடங்குகளில் சாராவி தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாட்டினை மேற்பார்வையிடவும், ஆயத்தீர்வை விதிக்கத்தக்க பொருட்களின்மீது ஆயத்தீர்வை விதிக்கவும், வடிசாலை அலுவலர்கள், ஆய மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் பிணைமுறி அலுவலர்களாக வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

47 வடிசாலைகளில் துணை ஆட்சியர்கள் பதவித் தரத்தில் 14 வடிசாலை அலுவலர்களும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் தயாரிப்புப் பிரிவுகளில் ஏழு ஆய மேற்பார்வை அலுவலர்களும் உள்ளனர். இத்துடன் (இயல்பு மாற்றப்பட்ட சாராவி பயன்படுத்தும் வேதியியல் அலகுகள்) டி.எல். உரிம அலகுகளில் துணை வட்டாட்சியர் பதவித் தரத்தில் பன்னிரண்டு ஆய மேற்பார்வை அலுவலர்களும், தெளிந்த சாராவி பயன்படுத்தும் வேதியியல் தொழிற்சாலையில் (ஆர்.எல். உரிம தொழிற்சாலையில்) ஓர் ஆய மேற்பார்வை அலுவலரும், பிணை முறி கிடங்குகளில் நான்கு பிணைமுறி அலுவலர்களும் உள்ளனர்.

### சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

4.8 இம்மாநிலத்தில் 37 சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகள் உள்ளன. (18 தனியாருக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகள், 16 கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகள், 3 பொதுத் துறைக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைகள்) சர்க்கரை தயாரிப்பில் கிடைக்கும் உபப்பொருளான கருப்பஞ்சாற்றுக் கசண்டினை இவ்வாலைகள் உற்பத்தி செய்கின்றன. (சர்க்கரை ஆலைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு-5-இல் தரப்பட்டுள்ளன)

49 சாராவியை வடித்தெடுப்பதில் மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். சிறிதளவில் கால்நடைத் தீவனங்கள் தயாரிப்பில் சேர்க்கும் பொருளாகவும், வார்ப்படச் சாலையில் பிணைக்கும் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு எண்ணெய் தயாரிப்பிலும் குறிப்பாக எள்ளிலிருந்து நல்லெண்ணெய் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது.

410 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி, கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை மற்றும் உபயோகப்படுத்துதல் குறித்த உரிமங்களை வழங்க மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் முன்இசைவோடு

மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்/கூடுதல் ஆட்சித் தலைவர்/ மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ஆவார்.

4.11 கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் காரணமாக சர்க்கரை ஆலைகள், உரிமத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படி கருப்பஞ்சாற்றுக் கசண்டினைப் பயன்படுத்த உரிமம் பெற்றவருக்கு விற்கலாம். கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீது விலைக்கட்டுப்பாடு இல்லாதிருப்பினும், அது வேறு காரியங்களுக்குத் திருப்பி விடுதல் அல்லது எந்தவொரு தவறான பயன்பாட்டைத் தடுப்பதற்காகவும் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை, உபயோகப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி போன்றவை, 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின் கீழ் எம்.எல்.2, எம்.எல்.4, எம்.எல்.5 மற்றும் எம்.எல்.6 உரிமங்கள் வழங்கப்பட்டு முறைப்படுத்தப்படுகின்றன.

### வடிசாலைகள் மற்றும் சாராவி

4.12 இம்மாநிலத்தில், கருப்பஞ்சாற்றுக் கசண்டினை மூலப் பொருளாகக் கொண்டு சாராவி தயாரிக்கும் வடிசாலைகள் 14 உள்ளன. (விவரங்கள் இணைப்பு- 6-ல் தரப்பட்டுள்ளன) 14 வடிசாலைகளில் 12 வடிசாலைகள் தனியார் துறையிலும், இரண்டு வடிசாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

4.13 சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பதற்கும், மற்றைய வேதியியல் மற்றும் வார்னிஷ் பொருட்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றது. அதுபோல் கல்விக் கூடங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் அது சிறிய அளவில் பயன்படுத்தப்படுகின்றது.

4.14 இந்திய அரசு 10-6-1993 அன்று வெளியிட்ட ஆணைகள் மூலம் 1971 ஆம் ஆண்டின் எத்தில் ஆல்கஹால் (விலைக்கட்டுப்பாடு) ஆணைகளை இரத்து செய்தது. இதன் விளைவாக, தற்போது எத்தில் ஆல்கஹாலுக்கு விலைக்கட்டுப்பாடுகள் கிடையாது. அதைத் தொடர்ந்து இம்மாநில அரசு, சாராவியை உரிமதாரர்கள் விற்பதற்கும், எடுத்துச் செல்வதற்கும், வைத்திருப்பதற்கும், உபயோகப்படுத்துவதற்கும் வழிமுறைகளை வெளியிட்டது. அதுபோல், சாராவியை ஒழுங்குபடுத்தும் வகையில், அதனை விற்பதற்கும், வைத்திருப்பதற்கும், உபயோகப்படுத்துவதற்கும், இறக்குமதி





செய்யவும், ஏற்றுமதி செய்யவும், எடுத்துச் செல்லவும், சம்பந்தப்பட்ட மாநில விதிகளின்கீழ் கட்டுப்படுத்தப்படும் என்ற விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது. நமது மாநிலம் சாராவி உற்பத்தியில் ஒரு உபரி மாநிலமாகும். எனவே, இங்குள்ள வடிசாலைகள் சாராவியை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அருந்தும் பயன்பாடுகளுக்காக ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு பல்க் லிட்டர் சாராவிக்கும் ரூபாய் 6/- ஏற்றுமதிக் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. இந்த அரசு, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் ஏற்றுமதிக் கட்டணத்தைக் குறைப்பது குறித்து பரிசீலனை செய்து வருகிறது.

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் முக்கியமான பகுதிகளை கணினிமயமாக்குதல்

4.15 மாநில அளவிலான் சாராவியின் பங்கீடு, எடுத்துச் செல்லுதல் மற்றும் நுகர்தல் ஆகிய அனைத்து விவரங்களையும் சரியாகக் கணிக்கும் வகையிலும், அறிந்து கொள்ளும் வகையிலும், ஒரு கணினி அறிக்கை படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது. எல்லா வடிசாலைகளும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு சாராவி தயாரிப்பு தொழிற்சாலைகளும், பெரிய வேதியியல் தொழிற்சாலைகளும் மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினியுடன் இணைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வடிசாலைகளில் தயாரிக்கப்படும் சாராவியின் அளவையும், வடிசாலைகளில் இருந்து வெளியிடப்படும் சாராவியின் அளவையும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்தப்படும் சாராவியின் அளவையும், வேதியியல் தொழிற்சாலைகளில் உபயோகப்படுத்தப்படும் சாராவியின் அளவையும் கணினியின் மூலம் அறிந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறு செய்வதன் மூலம் சாராவியின் நடமாட்டத்தைத் திறமையாகக் கண்காணிக்க முடியும். இவ்வாறு கணினிமயமாக்குதல் ஆயத்தீர்வைத் துறையின் மற்ற நிர்வாகப் பகுதிகளுக்கு படிப்படியாக (phased manner) விரிவுபடுத்தப்பட இருக்கின்றது.

### ஆயத்தீர்வை வில்லைகள் - சமீபகால முன்னேற்றங்கள்

4.16 ஆயத்தீர்வை கட்டாமல் ஏமாற்றுவதைத் தடுக்கவும், இம்மாநிலத்தில் உள்ள உரிமம் வழங்கப்பட்ட கடைகளில் போலி மதுபானம் மற்றும் கள்ள மதுபானம் விற்பனை செய்வதைத் தடுக்கவும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்கள் மற்றும் பீர் பாட்டில்கள்மீது ஒட்டப்படும் ஆயத்தீர்வை வில்லைகளை அச்சடிப்பதற்கும் அவற்றை விநியோகிப்பதற்கும் மதுவிலக்கு மற்றும்

ஆயத்தீர்வை ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலகத்தில் மூன்று ஆயத்தீர்வை வில்லைகள் அச்சடிக்கும் இயந்திரங்கள் இயங்குகின்றன. ஒரு வில்லையின் விலை 15 காசு என்ற வீதத்தில் இம்மாநிலத்திலுள்ள இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பகங்களிடமிருந்தும் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மதுவகைகளுக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடமிருந்தும் வசூலிக்கப்படுகின்றது. ஆயத்தீர்வை வில்லைகள், இரகசிய குறியீடுகள் மற்றும் வடிவமைப்புகளைப் பாதுகாப்பாக தன்னகத்தே கொண்டதாக உள்ளன. தாமாகவே பாட்டில்களில் ஒட்டிக்கொள்ளும் விதத்தில் மேம்பட்ட தரத்தினைக் கொண்ட ஆயத்தீர்வை வில்லைகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வில்லைகளைத் திரும்பவும் உபயோகிப்பதைத் தடுத்து பாட்டில்கள் மீது வில்லைகள் உறுதியாகவும் மற்றும் முழுமையாகவும் ஒட்டப்படுதலுக்கு இது உத்தரவாதம் தரும்.

### ஹோலோகிராம் - ஒரு பாதுகாப்பு அம்சம்

4.17 ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுகளின் மீது பாதுகாப்பு ஹோலோகிராம் ஒட்டப்படுவதால் ஆயத்தீர்வை முகப்புச்சீட்டின் பாதுகாப்பு அம்சங்கள் அதிகரிக்கப்படுவதுடன், போலியான ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுகளை தடுக்கவும் மற்றும் இரண்டாம்தர ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுகளை தடுக்கவும் பயன்படுகிறது. இப்பாதுகாப்பு ஹோலோகிராம்கள் கைனடிக், அனிமேஷன் மற்றும் மைக்ரோ எழுத்துக்களை கொண்ட மூன்று விதமான உருவ அமைப்புகளைக் கொண்டுள்ளது. போலி ஹோலோகிராமை எளிதில் தயாரிக்க முடியாது என்பதால் ஆயத்தீர்வை முகப்புச் சீட்டுக்கள் மீது ஹோலோகிராம் பதிக்கப்பட்டிருப்பதால் அசல் மதுவிற்கு உத்தரவாதம் தந்து, வருமானம் இழப்பு ஏற்படுவதும் தடுக்கப்படுகிறது.

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

4.18 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, காவல் துறை தலைவர் (மதுவிலக்கு) கீழ் முன்பு செயல்பட்டு வந்தது, 13.6.2001 முதல் கூடுதல் காவல் துறை இயக்குநர் (அமலாக்கம்) தலைமையில் செயல்பட்டு வருகிறது. காவல் துறை ஆய்வாளரைத் தலைவராகக் கொண்டு 86 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் இம்மாநிலத்தில் உள்ளன. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை ஆணையரின் (மாநகரங்களில்) நேரடி கட்டுப்பாட்டின்கீழ் ஒரு கூடுதல்





காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் துணை காவல்துறை கண்காணிப்பாளரும் உள்ளனர். மதுவிலக்கு அமலாக்கத்தின் முதல்நிலை பொறுப்பு, காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை ஆணையருக்கு(மாநகரங்களில்) வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கள்ளச் சாராயத்தைத் தடுக்க உள்ளூர் காவல்துறையை ஈடுபடுத்த இயலுகிறது.

4.19 கூடுதல் காவல் துறை இயக்குநருக்கு (அமலாக்கம்) உதவி புரிய தலைமையிடத்தில் இரண்டு காவல் துறை கண்காணிப்பாளர்கள் முறையே காவல் துறை கண்காணிப்பாளர் (சி.ஐ.யு.) மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்(அமலாக்கம்) ஆகியோர் உள்ளனர். காவல் துறை கண்காணிப்பாளர் (சி.ஐயு) மத்திய புலனாய்வு பிரிவிற்கு தலைமையேற்கிறார். மத்திய புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.யு.) அடிப்படையில் ஒரு புலனாய்வு பிரிவாகும். இப்பிரிவு, கள்ளச்சாராயக்காரர்களுக்கு காவல் துறை/ மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் உடந்தையாக இருப்பதாக பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல், மாநிலம் முழுமைக்குமான அமலாக்கச் செயல்பாடுகளைப் பெருக்கவும் மற்றும் கண்காணிக்கவும் உதவி புரிகின்றது. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, மதுவிலக்குக் குற்றங்கள் குறித்த வழக்குகளைக் கவனித்து வருகின்றன. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினை வலுப்படுத்தக்கருதி, சேலம் மற்றும் மதுரை மண்டலங்களுக்கு மேலும் இரண்டு காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் (அமலாக்கம்) பதவிகளுக்கு ஒப்பளிக்கலாம் எனவும் எல்லைப் பகுதிகளில் உள்ள மாவட்டங்களில் அமலாக்கத்தைத் திறம்படச் செய்ய எட்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகளுக்கு ஒப்புதல் வழங்கலாம் எனவும் அரசு கருதியுள்ளது.

4.20 கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்தப்படும் தெளிந்த சாராவி மற்றும் கள்ள/ தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் நடமாட்டத்தை ஒழிக்க காவல்துறை அலுவலர்களின் கட்டுப்பாட்டில் எட்டு மாவட்டங்களில் 21 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன. கடலூர் மாவட்டத்தில் மூன்று சோதனைச் சாவடிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் எட்டும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நான்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டும், திருவாரூர், தருமபுரி, சேலம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தலா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. கள்ள மது நடமாட்டத்தை ஒடுக்க அனைத்து நுழைவு வழிகளையும் அடைக்கும்வகையில் எல்லைப்புற மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் அடிக்கடி எதிர்பாராமல் மாற்றம் செய்யப்படவேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது.

### மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துதல்

4.21 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது மற்றும் பீர் கொள்முதல், மதுவிலக்குச் சட்டங்களைத் திறம்பட அமலாக்கம் செய்வதைச் சார்ந்திருப்பதால், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தினசரி மற்றும் மாதாந்திர அடிப்படையில் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது எடுப்பு அளவை (off-take) ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றது. ஒரு குறிப்பிட்ட நாளுக்கான மது எடுப்பு அதற்கு முந்தைய நாளின் மது எடுப்பு அதற்கு முந்தைய மாதம் மற்றும் ஆண்டின் இணையான நாட்களுடன் ஒப்பிடப்படுகின்றது. நடப்பு மாதம்/நடப்பு ஆண்டில் செய்யப்பட்டுள்ள மதுபான மொத்த எடுப்பு கணக்கிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் கடந்த மாதத்திய / கடந்த ஆண்டு செயல்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. மதுபான எடுப்பு குறைவாக உள்ள பகுதிகள் கண்டறியப்பட்டு, அதற்கான காரணங்களை ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு மற்றும் மாவட்ட காவல் துறை அலுவலர்கள் அதற்கான சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)

4.22 தமிழ்நாடு மாநிலம் முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை தனியார் துறையிடமிருந்து எடுத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக 1956 ஆம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 23-5-1983 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகும். 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 17-C (1-A)(a) பிரிவின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை மொத்த விற்பனை மூலம் வழங்கும் தனியுரிமை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் செயலர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் தலைவர் ஆவார். இளநிலை நிர்வாகப் பணித்தரத்திலுள்ள இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் மேலாண்மை இயக்குநர் ஆவார். இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் ஒரு பொது மேலாளர், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், இரண்டு மேலாளர்கள் மற்றும் ஏனைய சார் நிலை அலுவலர்களும் உள்ளனர்.





4.23 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், ரூ.15/- கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனமாகக் கொண்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு ரூ.5/- கோடியும், 1998 ஆம் ஆண்டு ரூ.2/- கோடியும், ஆக மொத்தத்தில் ரூபாய் 7/- கோடியை அரசு இக்கழகத்தில், பங்கு மூலதனமாக முதலீடு செய்துள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சாராவிக் கழகத்தில் (டாஸ்கோ) ரூபாய் 2.40 கோடியை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பங்கு முதலீடு செய்துள்ளது. இவையல்லாது, அவ்வப்போது தேவைப்படும் போது வழிவகை முன்பணத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் பாரத ஸ்டேட் வங்கியின் வணிகப் பிரிவு மற்றும் ஆந்திரா வங்கியின் அண்ணா நகர் கிளை முறையே ரூ.50/- கோடி மற்றும் ரூ.15/- கோடி இக்கழகத்திற்கு ரொக்க கடன் வசதி அளித்துள்ளன.

4.24 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இம்மாநிலத்திலுள்ள ஐந்து இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானத் தயாரிப்பாளர்களிடமிருந்து இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளையும் மற்றும் இரண்டு பீர் தயாரிப்பாளர்களிடமிருந்து பீரையும் கொள்முதல் செய்கிறது. சில இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள், ஸ்காட்ச் மற்றும் பீர் வகைகள் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

4.25 ஐந்து மண்டல அலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ளன. அவை ஒவ்வொன்றும் மாவட்ட வருவாய் அலுவலர் தரத்திலுள்ள மூத்த மண்டல மேலாளர் தலைமையில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலமெங்கிலுமுள்ள 40 கிடங்குகளின் மூலம் தனது இருப்பை வினியோகம் செய்து வருகின்றது. இந்தக் கிடங்குகள் வட்டாட்சியர் பதவித் தரத்திலுள்ள மேலாளர்கள் தலைமையில் இயங்குகின்றன.

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தை கணினி மயமாக்குதல்

4.26 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் வணிக நடவடிக்கைகள் காலப்போக்கில் பல மடங்குகள் அதிகரித்துள்ளன. நிறுவனத்தின் செயல்பாடுகளைத் திறம்பட நிருவகிக்க கணினிமயமாக்கப்பட்ட நிருவாக தகவல் ஏற்பாடு (MIS) இன்றியமையாதது என உணரப்பட்டது. தலைமையகம் மற்றும் 40 கிடங்குகளின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நிருவாக தகவல் ஏற்பாடு கணினி மயமாக்கப்பட்டதையடுத்து, கொள்முதல், விற்பனை மற்றும் இருப்பு நிலை தொடர்பான நாளது வரையிலான தகவல்களைப் பெறுவதன்மூலம் இந்நிறுவனத்தின் பொருள் இருப்பு நிர்வாகம் செம்மையாக உள்ளது. விரைவாக விற்பனையாகும் இனங்கள் இருப்பில் இல்லாமல் போகும்

நிகழ்வுகளைக் குறைக்கவும் மாவட்ட வாரியாகவும், சில்லறை விற்பனையாளர் வாரியாகவும் எடுக்கப்பட்ட மதுபான அளவை முறையாகக் கண்காணிக்கவும் இந்நிறுவனத்தால் தற்போது முடிகிறது. நிறுவனத் தலைமை அலுவலகத்திற்கு/அரசுக்கு அனுப்பப்படும் பல்வேறு விவர அறிக்கைகள்/கணக்கு விவரங்கள்/கோரிக்கைகள் சரியாகவும் துல்லியமாகவும் இருப்பது இந்த நிருவாகத் தகவல் ஏற்பாட்டால் உறுதிப்படுத்தப்படுகிறது. கிடங்கு நிலையில் பணி எளிமைப்படுத்தப்படுவதுடன் மனித ஆற்றலைச் சார்ந்திருப்பதும் குறைகிறது. கணினி மயமாக்கப்பட்டதன் மூலம் வாரந்தோறும் மதுபான எடுப்பளவை முறையாகக் கண்காணிக்க முடிகிறது.

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கான கணினி இணைய தளம் (வெப் சைட்)

4.27 கிடங்குகளில் கிடைக்கக்கூடிய பல்வேறு ரக மதுவகைகளின் இருப்பு நிலை, மதுவகைகளின் உயர்ந்தபட்ச சில்லறை விற்பனை விலை மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் பற்றிய புள்ளியியல் விவரங்கள் ஆகியவற்றை அறிய இணைய தளம் (வெப் சைட்) ஒன்று தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்களுக்கு சரியான மற்றும் தற்போதைய விவரங்கள் வழங்கும் பொருட்டு இருப்பு நிலை மற்றும் பிற தேவையான தகவல்கள் இன்றைய நிலைக்கேற்ப நாள்தோறும் மாற்றப்படுகிறது.

### தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ)

4.28 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) துணை நிறுவனமாக, தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர், நாட்டு மது ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக 1989 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம் 31.12.1989-லிருந்து பீர் உற்பத்தியையும், 21-7-1990 ஆம் நாளிலிருந்து நாட்டு மது உற்பத்தியையும் தொடங்கியது. எனினும், 16-7-1991 முதல், நாட்டு மது உற்பத்தியை இக்கழகம் நிறுத்திவிட்டது. நாட்டு மது அடைக்கும் பிரிவுகளின் சொத்துக்களை தீர்வு செய்யும்பொருட்டு அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைப்படி நாட்டு மது அடைக்கும் (Blending) 12 பிரிவுகளில் உள்ள சொத்துக்களின் உடைமைகள் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பால் ஒன்றியங்களிடம் (ஆவின்) ஒப்படைக்கப்பட்டன. பின்னர் 1997-98, 1998-99, 1999-2000 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் பன்னிரண்டு பாட்டில்கள் அடைக்கும் பிரிவுகளில் பதினொரு பிரிவுகளை கிடங்குகளாகப் பயன்படுத்த ஆவினிடமிருந்து 'டாஸ்மாக்' எடுத்துக் கொண்டது.



### போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு

4.29 தற்பொழுது மாநில அளவில் போதை பொருள் புலனாய்வுப் பிரிவிற்கு காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைவராகவும், அவருக்கு உதவியாக காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், 13 காவல் ஆய்வாளர்கள், 14 உதவி ஆய்வாளர்கள், ஏனைய பதவித்தரங்களில் 91 பேர் ஆகியோர் உள்ளனர். இம்மாநிலத்தில், 12 போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவுகள் உள்ளன. அவை காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவை சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், சேலம், தேனி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் ஆகிய 12 இடங்களில் உள்ளன. ஒவ்வொரு போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவின் அதிகார எல்லைக்குள் இரண்டு முதல் நான்கு மாவட்டங்கள் வருகின்றன.

4.30 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ள வியாபாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறப்பாக அதிகாரம் பெற்றுள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் செயலரால் வழங்கப்படும் தடுப்புக்காவல் ஆணையை ஆய்வு செய்ய ஒரு அறிவுரைக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது.

4.31 போதைப்பொருள் புலனாய்வுப் பிரிவு தவிர, மாவட்ட காவல்துறை, மாநில அரசின் இருப்புப் பாதை பாதுகாப்புக் காவல் துறை மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுங்கவரி கலெக்டர்கள் மற்றும் வருவாய் புலனாய்வுத் துறை இயக்குநரகமும் போதைப் பொருள் சட்டங்களை செயல்படுத்துகின்றன/செயல்படுத்துகின்றனர்.

[2001 செப்டம்பர் 3

## 5. புதிய திட்டங்கள்

5.1 2001-2002 ஆம் ஆண்டில் பின்வரும் நான்கு புதிய திட்டங்கள் ரூபாய் 215.16 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படவுள்ளன:

| தொடர் எண் | திட்டப்பணிகளின் விவரம் | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை இணைய சாதனங்களைக் கொண்டு கணினிமயமாக்குதல் | - | 4.75 | 4.75 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் உபயோகத்திற்கென நிகரி இயந்திரம் வாங்குதல் | - | 0.25 | 0.25 |
| 3. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்திற்கு கணினி மற்றும் துணைச் சாதனங்கள் வழங்குதல் | - | 5.00 | 5.00 |
| 4. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் இரு காவல் துறை கண்காணிப்பாளர் பதவி களையும் 8 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகளையும் ஏற்படுத்துதல். | 144.86 | 60.30 | 205.16 |
| | **மொத்தம்** | **144.86** | **70.30** | **215.16** |

5.2 மாநில கருவூலத்திற்கு கிடைக்கும் ஆய வருவாயை அதிகப்படுத்த அன்றாட நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஏதுவாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆகியவற்றை தலைமைச் செயலக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையுடன் இணைக்கத் தேவையான கணினி மற்றும் இணைய சாதனங்களை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 3]

5.3 எளிதாகவும், விரைவாகவும் தொடர்பு கொள்வதற்கு உதவி செய்யும் நிகரி இயந்திரம் வாங்குவதன் மூலம், தடுப்புக் காவல் சட்டத்தை (குண்டர்கள் சட்டம்) திறம்பட செயல்படுத்தலாம்.

5.4 ஆயத்தீர்வைத் துறையின் மற்ற நிர்வாகப் பகுதிகளுக்கு கணினி முறையை படிப்படியாக (phased manner) விரிவுபடுத்தும் நோக்கில், கணினி மற்றும் இதர சாதனங்களை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்திற்கு வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.5 மாநிலத்தை கள்ள/போலி/தீர்வை செலுத்தப்படாத மதுவகைகள் இல்லாத மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற அரசின் நோக்கத்தினை அடைய மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை வலுப்படுத்த, சென்னை, மதுரை மற்றும் சேலம் ஆகியவற்றைத் தலைமை இடங்களாகக் கொண்டு மாநிலத்தை மூன்று மண்டலங்களாகப் பிரித்து, இரண்டு காவல் துறைக் கண்காணிப்பாளர் பதவிகளை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது. மேலும், மதுவிலக்கு அமலாக்க நிர்வாகத்தினை வலுப்படுத்த, பதட்டவயப்பட்ட, கள்ள மது அதிகமுள்ள மாவட்டங்களில், எட்டு கூடுதல் மதுவிலக்கு அமலாக்க அலகுகள் உருவா.க்கப்படும்.

## 6. முடிவுரை


6.1 மாநில ஆயத்தீர்வை வருவாயை பெருமளவில் பாதிப்பது மட்டுமல்லாமல் ஏழைக் குடும்பங்களுக்கு குறிப்பாக, பொருளாதார ரீதியில் நலிந்த வர்க்கங்களைச் சேர்ந்த பெண்களுக்கு துயரத்தை ஏற்படுத்தக்கூடிய கள்ளச்சாராயத்தை ஒழிப்பதை இவ்வரசு மிகவும் வலியுறுத்துகிறது. மேலும், கள்ளச்சாராயம் சமுதாயத்தின் வேறு பல பிரச்சனைகளுக்கு முதல் காரணமாக உள்ளது. எனவே, இவ்வரசு கள்ளச்சாராயத் தொல்லையை இரும்புக் கரம் கொண்டு நசுக்கவும், அதனை முழுமையாக ஒழிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேற்கூறிய குறிக்கோளை அடைய அமலாக்கப் பிரிவு முழுமையாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. குடியின் தீமையைப் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்வது மற்றும் குறிப்பாக கள்ளச்சாராயத் தயாரிப்பில் முன்னர் ஈடுபட்டிருந்து அதிலிருந்து விடுவிக்கப்பட்டு திருந்தி வாழும் நபர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது போன்ற பணிகளில் பொதுமக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றின் பங்கேற்பு கோரப்படுகிறது. அதே நேரத்தில், கள்ளத்தனமான மற்றும் போலியான மதுபானங்களை ஒழித்து, ஆயத்தீர்வை வருவாயை அதிகப்படுத்த வேண்டும் என்பதிலும் இவ்வரசு கவனமாக உள்ளது. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களின் சில்லறை விற்பனை

[2001 செப்டம்பர் 3

உரிமம் வழங்கும் முறை முறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் உரிமைத் தொகை மற்றும் உரிமக் கட்டணம் ஆகியவை மிக அதிக அளவில் பெறப்பட்டுள்ளன. அதைப் போன்று, தீர்வை செலுத்தப்படாத / போலியான மதுவகைகள் ஊடுருவக்கூடிய வாய்ப்பை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் மதுபானச் சில்லறை விற்பனைக் கடைகளில் மதுபானங்களின் எடுப்பு அளவு (off-take) உன்னிப்பாகவும் தொடர்ந்தும் கண்காணிக்கப்படும். இம்மாநிலத்தை கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற வாக்குறுதியை வலியுறுத்திக் கூறும் அதே வேளையில் ஆயவருவாயைப் பெருக்க வேண்டுமென்ற இத்துறையின் குறிக்கோளை எய்துவதற்கு அனைத்து இயலும் நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொள்ளும்.

## இணைப்பு-1

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு வரைபடம்





③ ஆ.ம.ஆ ஆணையர், மதுவிலக்கு– ஆயத்தீர்வை
③ த.மா.வா.க தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
③ ம.அ.பி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு



2001 செப்டம்பர் 3]

## இணைப்பு-2

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலக அமைப்பு வரைபடம்





③ இ.ஆ இணை ஆணையர்
③ நிகஅ நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்
③ து.ஆ துணை ஆணையர்
③ உ.ஆ. உதவி ஆணையர்
③ இ.த.அ.ம இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்
③ ப.ப. பறக்கும் படை
③ உ.க.அ. உதவி கணக்கு அலுவலர்
③ ஆ.மே. ஆயமேற்பார்வையாளர்

[2001 செப்டம்பர் 3

## இணைப்பு–3

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் வரைபடம்





- கா.க. — காவல் கண்காணிப்பாளர்
- ம.பு.பி — மத்திய புலனாய்வுப் பிரிவு
- மா.கா.க. — மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
- கூ.கா.க. — கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
- து.கா.க — துணை காவல் கண்காணிப்பாளர்
- ம.அ.பி. — மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு
- கூ.ஆ — கூடுதல் ஆணையர்
- உ.ஆ. — உதவி ஆணையர்



2001 செப்டம்பர் 3]

## இணைப்பு -4

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்




- பொ.மே. — பொது மேலாளர்
- நி.ஆ.மற்றும் மு.க.அ. — நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்
- நி.செ.மற்றும் நி.அ. — நிறுவன செயலர் மற்றும் நிருவாக அலுவலர்

## இணைப்பு–5

### இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்

| தொடர் எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெ.டன்) |
|---|---|---|
| | கூட்டுறவுத் துறை | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு–1 | 15,000 |
| 12 | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு–2 | 12,000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 15 | என்.பி.கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் | **2,26,000** |
| | பொதுத்துறை | |
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் | **32,000** |
| | | |
| | தனியார் துறை | |
| 20 | எஸ்.வி.சுகர் மில்ஸ் நிறுவனம் | 9,200 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 12,000 |
| 22 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் அலகு–1 | 12,600 |
| 23 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் அலகு–1 | 18,000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 25 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் அலகு–2 | 12,000 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், துகிலி | 22,500 |
| 27 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், நெல்லிக்குப்பம் | 18,600 |
| 28 | சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 30 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு–1 | 14,500 |
| 31 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு–2 | 12,000 |
| 32 | காவேரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 33 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், புகலூர் (டெக்கான் சுகர்ஸ்) | 14,700 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 35 | தரணி சுகர்ஸ் அலகு–2 | 10,000 |
| 36 | அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், பெண்ணாடம் | 25,000 |
| 37 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், குரும்பூர் | 5,000 |
| | மொத்தம் | **2,43,300** |
| | ஒட்டு மொத்தம் | **5,01,300** |

[2001 செப்டம்பர் 3

## இணைப்பு–6

**வடிசாலை – சாராவி உற்பத்தி**
**(சாராவி ஆண்டு: டிசம்பர்–நவம்பர்)**

| தொடர் எண். | வடிசாலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) | 2000–2001 ஆம் சாராவி ஆண்டில் (ஜூலை 2001 முடிய) சாராவி உற்பத்தி அளவு (கோடி லிட்டர்களில்) |
|---|---|---|---|---|
| | <u>தனியார் துறையிலுள்ள வடிசாலைகள்</u><br>திருவாளர்கள் | | | |
| 1. | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 82,500 | 24,722 | 1.04 |
| 2. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 0.85 |
| 3. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு–1 | 60,000 | 15,046 | -- |
| 4. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், காடம்புலியூர், அலகு–2 | 1,10,000 | 26,800 | 1.10 |
| 5. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,600 | 0.44 |
| 6. | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம் | 60,000 | 14,077 | 0.70 |



2001 செப்டம்பர் 3]

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 6,000 | 0.69 |
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,480 | 0.42 |
| 9. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 25,000 | 4,758 | 0.19 |
| 10 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 78,260 | 18,600 | 1.49 |
| 11 | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 33,300 | 0.83 |
| 12 | மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,646 | 0.55 |
| | கூட்டுறவுத் துறையிலுள்ள வடிசாலைகள் | | | |
| 13 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.47 |
| 14 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.52 |
| | மொத்தம் | 8,68,110 | 2,26,829 | 9.29 |

[2001 செப்டம்பர் 3

## இணைப்பு—7

### இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரம்

| ஆண்டு | இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி அளவு | பீர் உற்பத்தி |
|---|---|---|
| | (கோடி பல்க் லிட்டர்களில்) | |
| 1991-92 | 4.42 | 3.36 |
| 1992-93 | 6.40 | 4.64 |
| 1993-94 | 7.03 | 3.86 |
| 1994-95 | 8.10 | 4.18 |
| 1995-96 | 8.13 | 5.79 |
| 1996-97 | 12.78 | 5.33 |
| 1997-98 | 10.90 | 5.25 |
| 1998-99 | 9.81 | 5.29 |
| 1999-2000 | 11.74 | 4.23 |
| 2000-2001 | 12.43 | 5.76 |



2001 செப்டம்பர் 3]

## இணைப்பு—8

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) பல்வேறு தலைப்புகளின் கீழ் செய்த விற்பனை அளவு,விற்று முதல் மற்றும் அரசுக்குச் செலுத்திய வருவாய் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை

| ஆண்டு | விற்பனை — இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை | விற்பனை — பீர் | இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை மற்றும் பீர் ஆகியவற்றின் விற்றுமுதல் | ஆயத்தீர்வை | விற்பனைக் கட்டணம் | கூடுதல் விற்பனைக் கட்டணம் | விற்பனை வரி | இறக்குமதி உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (பெட்டிகளின் எண்ணிக்கை கோடிகளில்) | | (ரூபாய் கோடிகளில்) | | | | | |
| 1991-92 | 0.62 | 0.51 | 659.20 | 55.94 | 13.57 | 69.26 | 81.10 | 5.23 |
| 1992-93 | 0.86 | 0.65 | 905.23 | 55.10 | 18.44 | 92.73 | 129.38 | 5.00 |
| 1993-94 | 0.90 | 0.60 | 995.66 | 38.94 | 18.87 | 91.90 | 128.18 | 4.64 |
| 1994-95 | 0.93 | 0.68 | 1173.74 | 35.83 | 20.53 | 109.14 | 148.33 | 5.36 |
| 1995-96 | 1.15 | 0.95 | 1518.71 | 42.76 | 25.34 | 144.97 | 193.13 | 6.79 |
| 1996-97 | 1.39 | 1.00 | 1825.39 | 60.42 | 28.10 | 181.74 | 245.83 | 10.33 |
| 1997-98 | 1.30 | 1.02 | 1999.53 | 69.22 | 49.15 | 198.25 | 277.48 | 23.05 |
| 1998-99 | 1.40 | 1.09 | 2352.81 | 51.41 | 43.31 | 239.58 | 442.28 | 32.49 |
| 1999-2000 | 1.41 | 1.05 | 2520.02 | 62.83 | 43.79 | 240.87 | 531.54 | 35.77 |
| 2000-2001 | 1.49 | 1.12 | 2840.65 | 53.01 | 44.61 | 269.54 | 698.66 | 43.22 |

## இணைப்பு– 9
## ஆயத்தீர்வை வருவாய்

| தொடர் எண் | வருவாய்த் தலைப்பு | 1991-92 | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடிகளில்) | | | | | | | | | | |
| 1 | நாட்டு சாராவி (சாராயம்) | 49.16 | 0.42 | 0.54 | 0.88 | 1.01 | 4.02 | 4.81 | 19.61 | 10.71 | 11.12 |
| 2 | புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) | 0.17 | 0.15 | 0.17 | 0.20 | 0.14 | 0.39 | 4.04 | 15.48 | 9.19 | 11.12 |
| 3 | மால்ட் வகை (பீர்) | 30.42 | 26.98 | 27.03 | 40.09 | 70.88 | 72.59 | 74.43 | 92.12 | 105.82 | 100.81 |
| 4 | அயல்நாட்டு மது மற்றும் சாராவி | 392.47 | 520.44 | 510.8 | 490.06 | 807.51 | 940.31 | 1171.03 | 1509.70 | 1632.59 | 1675.75 |
| 5 | வணிகரீதியான மற்றும் இயல்பு மாற்றப்பட்ட சாராவி | 0.17 | -1.00 | 0.07 | 0.11 | 2.36 | 0.26 | 2.01 | 4.69 | 4.61 | 3.73 |
| 6 | மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு | 2.98 | 3.21 | 3.99 | 4.60 | 5.81 | 5.32 | 6.03 | 6.91 | 5.95 | 3.72 |
| 7 | அபின், ஹெம்ப் ஏனைய மருந்துப் பொருட்கள் | 0.04 | 0.1 | 0.01 | 0.01 | 0.01 | 0.02 | 0.35 | (-)0.66 | 0.41 | 0.18 |
| 8 | அபராதங்களும் பறிமுதல்களும் | 0.19 | 3.58 | 15.22 | 13.57 | 13.27 | 8.76 | 8.77 | 10.52 | 14.34 | 10.10 |
| 9 | பணியும்,பணிக் கட்டணங்களும் | 5.04 | 5.25 | 4.07 | 3.85 | 5. 86 | 8.70 | 6.03 | 14.73 | 18.16 | 23.04 |
| 10 | ஏனைய வரவினங்கள் | 2.48 | 5.73 | 6.92 | 61.37 | 27.81 | 22.70 | 22.35 | 36.72 | 29.92 | 29.11 |
| | மொத்தம் | 483.12 | 564.86 | 568.82 | 614.74 | 934.66 | 1063.07 | 1299.85 | 1709.82 | 1833.70 | 1868.68 |



## இணைப்பு –10

### ஆயத்தீர்வை வருவாய் மற்றும் விற்பனை வருவாய் பற்றிய விவரங்கள்

| தொடர் எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | விற்பனை வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிகளில்) | | |
| 1 | 1991-92 | 483.12 | 188.23 | 671.35 |
| 2 | 1992-93 | 564.86 | 297.83 | 862.69 |
| 3 | 1993-94 | 568.82 | 318.33 | 887.15 |
| 4 | 1994-95 | 614.74 | 380.95 | 995.69 |
| 5 | 1995-96 | 934.66 | 491.27 | 1425.93 |
| 6 | 1996-97 | 1063.07 | 583.89 | 1646.96 |
| 7 | 1997-98 | 1299.85 | 669.81 | 1969.66 |
| 8 | 1998-99 | 1709.82 | 1009.49 | 1719.31 |
| 9 | 1999-2000 | 1833.70 | 1172.79 | 3006.49 |
| 10 | 2000-2001 | 1868.68 | 1504.88 | 3373.56 |

2001 செப்டம்பர் 3]

# இணைப்பு V

(456 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## வணிகவரித் துறை

## கோரிக்கை எண் 5– முத்திரைத்தாள் நிர்வாகம் மற்றும் கோரிக்கை எண் 6 – பத்திரப் பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

தொன்மையான துறைகளுள் ஒன்றாக விளங்கும் பதிவுத் துறை, பதிவுக்கு வரும் பொது மக்களுக்கு, விரைவாகவும், பயன் அளிக்கக் கூடியதுமான சேவையை வழங்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. இத்துறை, அரசுக்குக் கணிசமான வருவாய் ஈட்டித் தரும் துறைகளுள், வணிக வரித் துறை மற்றும் ஆயத் தீர்வைத் துறைக்கு அடுத்து அதிக வருவாயை ஈட்டும் துறையாக உள்ளது. தமது செயல்பாடுகள் ஒளிவுமறைவற்று இருக்கவும், துரிதமான மற்றும் தொல்லைகளற்ற சேவையைப் பொது மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டும், தனது நடவடிக்கைகள் அனைத்தையும் கணினிமயமாக்குவதற்கான பெரும் இயக்க நடவடிக்கையில் இத்துறை இறங்கியுள்ளது.

### 1. பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

*1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)*

*2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)*

*3. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/ 1982)*

*4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)*

[2001 செப்டம்பர் 3

5. 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)

இத்துறை கீழ்க்காணும் சட்டங்களின் கீழும் சில பணிகளையும் செய்து முடிக்கிறது:—

1. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் (மத்தியச் சட்டம் 9/1932)

2. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)

3. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம்

4. 1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

5. 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)

6. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)

7. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)

8. 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

**2. நிர்வாக அமைப்பு**

**அ. தலைமையிடம்**

பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராக உள்ளார். அவர் கீழ்க்கண்ட வகைகளிலும் பணியாற்றுகின்றார்:

அ. சீட்டு நிதிகள் சட்டம் 1982ன்கீழ் சீட்டுப் பதிவாளர்

ஆ. தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975—ன்கீழ் சங்கப் பதிவாளர்.

இ. வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் 1972—ன்கீழ் பதிவாளர்.



2001 செப்டம்பர் 3]

இவருக்கு உதவியாக தலைமையகத்தில் பின்வரும் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரைத் தாள் மற்றும் பதிவு)

2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)

3. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)

4. கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர் (கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) (துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

6. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு) (மாவட்டப் பதிவாளர் நிலை)

7. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)

8. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)

9. கணக்கு அலுவலர்

10. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் (விழிப்புக் குழு)

**ஆ. கள அலுவலகங்கள்**

***(1) மண்டல அலுவலகங்கள்***

சென்னை, வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் தஞ்சாவூரைத் தலைமையிடங்களாகக் கொண்டு இம்மாநிலம் 9 பதிவு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் உள்ள அலுவலர் ஒருவரின் தலைமையில் செயல்படுகிறது. அவர் மண்டலத்தின் தலைமை அலுவலர் என்ற முறையில், தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் சார் பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுகிறார். இவர் வருவாய் வசூல், ஆய்வு விசாரணைகளை நடத்துதல் மற்றும் பதிவு

அலுவலகங்களில் திடீராய்வுகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளைச் செய்கிறார். துணை பதிவுத் துறை தலைவர், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராகவும் உள்ளார்.

இவர் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் உதவி பதிவுத் துறை தலைவர் பிறப்பிக்கும் ஆணையின் மீது மேல்முறையீட்டு அதிகாரியாகவும் உள்ளார்.

*(2) வட்டார அலுவலகங்கள்*

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 5 உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர். இவ்வட்டார உதவிப் பதிவுத் துறைத் தலைவர்களின் தலையாயப் பணிகளுள், சார் பதிவகங்களை ஆய்வு செய்தல், புகார் மனுக்களின் மீது விசாரணைகள் செய்தல், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களால் செய்யப்படும் தணிக்கைப் பணியின் மீது சோதனை ஆய்வு செய்வது போன்ற பணிகளும் அடங்கும். இவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிதி நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர்.

*(3) மாவட்ட அலுவலகங்கள்*

மாநிலம் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பதிவு மாவட்டங்களில் 38 பதிவு மாவட்டங்கள் நிர்வாக மாவட்டப் பதிவாளர்களின் தலைமையின்கீழ் உள்ளன. ஏனைய 12 மாவட்டங்களில் உள்ள பணிப் பளு மற்றும் சிக்கலான தன்மை கொண்ட பணிகளைக் கருத்திற்கொண்டு, அம்மாவட்டங்கள் உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலான நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் தலைமையின்கீழ் செயல்படுகின்றன. நிர்வாக மாவட்டப் பதிவாளர், சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் துணைப் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்களின் பதிவாளராகவும் செயல்பட்டு வருகிறார். முத்திரைத் தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கும் அதிகாரமும் மாவட்டப் பதிவாளர்களிடம் உள்ளது.

*(4) தணிக்கை அலகுகள்*

இத்துறையில் அனைத்து பதிவு அலுவலகங்களின் நூறு சதவிகித தணிக்கையை உறுதி செய்யும் வகையில். கட்டுக்கோப்பான ஒரு உள்



தணிக்கை அமைப்பு உள்ளது. 45 தணிக்கை அலகுகள் உள்ளன. ஆவணங்களில் குறிப்பிடப்படும் கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துக்கள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளனவா எனக் கள ஆய்வு செய்யும் பணியும் இத்தணிக்கை அலகிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

*(5) சார் பதிவகங்கள்*

இம்மாநிலத்தில் 600 சார் பதிவகங்கள் உள்ளன. ஆவணங்கள் பதிவு தவிர, 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம், 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் திருமணப் பதிவாளராகவும் சார் பதிவாளர் செயல்படுகிறார். 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளர்களாகவும் அவர்கள் செயல்படுகின்றனர்.

*(6) பதிவுத் துறை பயிற்சி நிலையம்*

பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்களின் பல்வேறு அம்சங்களையும் குறித்துத் தீர்க்கமான அறிவைப் புகட்டுவதன் மூலம் பதிவுத் துறையில் மனித வளத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1996 ஆம் ஆண்டிலிருந்து பதிவுத் துறை பயிற்சி மையம் இயங்கி வருகின்றது. இம்மையம் சென்னையில் உள்ளது. துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் உள்ள ஒரு இயக்குனர் தலைமையில் இம்மையம் செயல்படுகிறது. உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலும் மற்றும் மாவட்டப் பதிவாளர் நிலையிலும் இரண்டு விரிவுரையாளர்கள் இவருக்கு உதவி வருகின்றனர். பயிற்சித் திட்ட அட்டவணை இரண்டு பிரிவுகளைக் கொண்டது:

அ) சார் பதிவாளர்களுக்கும் உதவியாளர்களுக்கும் 14 நாட்கள் அடிப்படைப் பயிற்சி.

ஆ) மாவட்டப் பதிவாளர்களுக்கு 10 நாள் மேம்பட்ட பயிற்சி இத்துறை பல்வேறு சட்டங்களை நிர்வகிப்பதன் மூலம் வருவாய் ஈட்டும் நோக்குடைய துறையாக இருப்பதால், அச்சட்டங்களைப் பற்றி நடப்புவரை அறிந்திருப்பது மிக முக்கியமானதாகும். இதற்காக துறையின் அனைத்துப் பணியாளர்களும் சூழற்சி முறையில் பங்கேற்கும் வகையில் பயிற்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**3. துறையின் சிறப்புப் பணிகள்**

*(1) முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி*

பதிவுத் துறைத் தலைவர், இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ், வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரியாகவும் (Chief Controlling Revenue Authority) உள்ளார். இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி என்ற முறையில், அவர் வருவாய் வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்து வருகிறார். மேற்கூறிய சட்டத்தின்கீழ், ஆட்சியரின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் மற்றும் அவர்களின் ஆணைகளைச் சீராய்வு செய்யவும் அதிகாரங்களைப் பெற்றுள்ளார். திருத்தச் சட்டத்தின் மூலம் (சட்டம் 1/2000), 9–3–2000–லிருந்து, தனி துணை ஆட்சியரின் (முத்திரை) ஆணைகளை எதிர்த்து, வருவாய் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரிக்கு மேல்முறையீடு செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. வருவாய் கட்டுப்பாட்டு தலைமை அதிகாரி என்ற முறையில், சுயவிருப்பின் அடிப்படையில், (Suo-motu) சீராய்வு செய்யும் அதிகாரமும் பதிவுத் துறைத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட முத்திரைத் தீர்வை சீர்திருத்தக் குழு அளித்திருந்த கருத்துக்களின் அடிப்படையில், திருத்தச் சட்டம் 9/2000–ன் மூலம் 11–7–2000–லிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்திய முத்திரைச் சட்டத்தின் அட்டவணை–1–ல் உள்ள, சம்பந்தப்பட்ட பிரிவுக் கூறுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. அதன்மூலம், தத்து ஆவணம், உடன்படிக்கை ஆவணம் போன்ற சிலவகை ஆவணங்களைப் பொறுத்து, அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வழிகோலப்பட்டுள்ளது.

*(2) வழிகாட்டிக் குழு*

ஆவணங்களில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ள வசதியாக பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு அவர்களது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கிராம புல எண்கள் மற்றும் நகர எல்லையில் இருக்கும் தெருக்களில் உள்ள சொத்துக்களின் மதிப்புகள் அடங்கிய வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் தயாரித்தல், மதிப்புகள் திருத்தியமைத்தல் மற்றும் வழிகாட்டி மதிப்பில் உள்ள



முரண்பாடுகளைக் களைவதற்கும் கூடுதல் பதிவுத் துறை தலைவர் ஒருவரின்கீழ் வழிகாட்டி மதிப்புக் குழு இயங்கி வருகிறது. இக்குழுவில் தலைமையிட மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி) செயலாளராகவும், அந்தந்த மண்டல துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் உண்மைத் தன்மையுடனும், நன்நோக்குடனும் அமைவதற்காக, சென்னை, நில நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் இணை ஆணையர் (நில எடுப்பு) இவ்வழிகாட்டிக் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ஆளுமைக்குட்பட்ட பகுதிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் 1971 ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்ட சட்டத்தின் பிரிவு 10(1)ன் கீழ் உள்ளாட்சி திட்டப் பகுதிகள் என அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளுள் அடங்கும் கிராமங்கள் ஆகிய பகுதிகளினுள் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படுகிறது. கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள சொத்துக்களின் மதிப்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. நகர்ப்புற சொத்துக்களுக்கான வழிகாட்டி மதிப்பு கடைசியாக 1–4–2001–ல் திருத்தியமைக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்பு 1–4–2000 அன்று திருத்தியமைக்கப்பட்டது.

ஒளிவுமறைவற்ற மற்றும் வெளிப்படையான தன்மையை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு, சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டின் நகல்கள், வர்த்தகக் கழகங்கள், விவசாய மற்றும் வணிகர் சங்கங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ஆளுமைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் ஐந்து மாநகராட்சிப் பகுதிகளைப் பொறுத்தமட்டில், 2001–2002 ஆம் ஆண்டுக்கான வழிகாட்டி மதிப்பு, http://igregn.tn.nic:in. என்னும் முகவரியில் உள்ள இணைய தளத்தில் கிடைக்கும். அனைத்துப் பகுதிகளின் வழிகாட்டி மதிப்பையும், படிப்படியாக அரசு இணைய தளத்தில் வெளியிட உத்தேசித்துள்ளது.

*(3) புலனாய்வுக் குழு*

உண்மையான அளவீடுகளைக் காட்டாமல் அதற்கும் குறைவான அளவீடுகளைக் கொண்ட கட்டடங்கள் சம்பந்தமான பத்திரங்களைப் பதிவு செய்வது குறித்த முறைகேடுகளைத் தடுப்பதற்காக புலனாய்வுக்

குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சொத்துக்களை ஆய்வு செய்து, குறைவு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்களை வசூலிக்கும் அதிகாரம் இக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது.

## 4. இந்திய முத்திரைச் சட்டம்

சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடமானம், நன்கொடை, ஏற்பாடு போன்ற பத்திரங்கள் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) வகைமுறைகளைக் கொண்டுள்ளது. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதின் மூலம் அரசு ஒரு நல்ல வருவாயைப் பெறுகிறது.

*(1) வருவாய் ஈட்டல்*

முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் போன்றவை மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் கடந்த ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தே வந்துள்ளது. 1968–69 ஆம் ஆண்டில் ரூபாய் 40 கோடி என்ற ஒரு எண்ணிக்கையிலிருந்து, 2000–2001 ஆம் ஆண்டில் ரூபாய் 1094.14 கோடி என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

**கடந்த 10 ஆண்டுகளில் வருவாய் வசூலிப்பு விவரம்**

| ஆண்டு | பதிவு ஆவணங்களின் எண்ணிக்கை | தொகை ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1991-92 | 11,38,541 | 400.45 |
| 1992-93 | 10,98,115 | 440.85 |
| 1993-94 | 11,51,150 | 460.62 |
| 1994-95 | 12,65,287 | 586.34 |
| 1995-96 | 13,61,036 | 748.50 |
| 1996-97 | 12,89,947 | 748.58 |
| 1997-98 | 13,32,377 | 806.26 |
| 1998-99 | 13,69,688 | 854.30 |
| 1999-2000 | 15,03,181 | 1019.71 |
| 2000-01 | 13,83,593 | 1094.14 |
| 2001-02 (சூலை, 2001 முடிய) | 4,70,373 | 382.81 |



### *(2) இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47–ஏ(1)–ன்கீழ் தனித் துணை ஆட்சியர் (முத்திரை)–யின் நடவடிக்கைக்கு அனுப்பப்படும் ஆவணங்கள்*

ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின் சரியான சந்தை மதிப்பைக் குறிப்பிட வேண்டியது அவ்வாவணத்தை எழுதிக் கொடுப்பவர்களின் பொறுப்பாகும். இருப்பினும் சொத்தின் சரியான மதிப்பு அவணத்தில் உண்மையிலேயே காட்டப்பட்டுள்ளதா என்பதைத் துறை கண்டறிந்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே, ஆவணங்களைப் பதிவு செய்யும்போது, பதிவு செய்யும் அதிகாரிகள் வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகளைக் கொண்டு, பதிவு செய்யும் சொத்துக்களின் மதிப்புகளைச் சரிபார்த்துக் கொள்கின்றனர். ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து, ஆவணம் பதியவருபவர் கூடுதல் முத்திரைத் தீர்வையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47–ஏ(1)–ன்கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பினை நிர்ணயிப்பதற்காக ஆவணப்பதிவு அதிகாரி அந்த ஆவணத்தை தனித் துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பி வைப்பார். இவ்வாறாக செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையின் அளவு குறித்து முடிவு செய்யப் படுகிறது.

### *(3) முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி* (**Surcharge**)

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை, உரிமையுடன் கூடிய அடமானம், அதன் மாற்றம், நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத் தீர்வையுடன் கூடுதலாக 5 சதவிகித மிகுவரியும் வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை மிகுவரியாக வசூலிக்கப்படும் தொகையில் 10 சதவீத தொகையை வசூல் கட்டணமாக பதிவுத் துறை எடுத்துக் கொண்டு எஞ்சியுள்ள 90 சதவிகித தொகை சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில், மிகுவரி வசூலில் 3 சதவிகிதத்தை இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 97 சதவிகித மிகுவரி சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கும், உள்ளாட்சிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

[2001 செப்டம்பர் 3

## 5. நிர்வாகச் சீர்திருத்தங்கள்–சட்டத் திருத்தங்கள்

*அ) பதிவுச் சட்டம்*

செய்யப்பட்ட திருத்தங்கள்

*1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம், பிரிவு 22 ஏ–ஐத் திருத்தியதின் மூலம் எந்த ஒரு ஆவணத்தை அல்லது ஆவணங்களின் வகைப்பாட்டை பதிவு செய்வதை பொதுக் கொள்கைக்கு எதிரானது என அறிவிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி, 22–9–2000 ஆம் நாளிட்ட வணிக வரித் துறை அரசாணை (நிலை) எண் 150ல் சில வகை ஆவணங்களும், அவற்றைப் பதிவு செய்தலும், 'பொதுக் கொள்கைக்கு எதிரானது' என்று அரசு அறிவிக்கை செய்துள்ளது. அவ்வறிவிக்கையில், ஏனையவற்றுள், மனைத்திட்ட ஒப்புதலின்றி, வீட்டுமனைகளாக மாற்றப்பட்ட நிலங்களைப் பதிவு செய்வதற்கு பத்திரம் பதிவு செய்ய வருபவர்கள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம் தடையின்மைச் சான்று ஒன்றைப்பெற்று அதை பதிவு அதிகாரியிடம் அளிக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றம், 17203, 17833/2000 போன்ற ரிட் மனுக்களின் வழக்கில், ஏனையவற்றுள் 22–9–2000–க்குப் பிறகு மனைத் திட்ட ஒப்புதல் இல்லாத வீட்டுமனைகள் விற்பனையை, முதன் முதலாகப் பதிவு செய்வதற்கு மட்டும் மேற்கூறிய வகைமுறை பொருந்தும் என ஆணையிட்டுள்ளது. உயர்நீதி மன்றத்தின் ஆணையை எதிர்த்து அந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மேல் முறையீடு மனுக்கள் நிலுவையில் உள்ளன.*

*2. பதிவு அலுவலகங்கள் கணினி மயமாக்கலைச் செயல்படுத்தும் வகையில், மின்னணு வழியில் ஆவண நகல்களைச் சேகரித்து வைப்பது (CD-ROMS) மற்றும் அதினின்று மீள் செய்து சான்றிட்ட நகல்கள் வழங்குவது தொடர்பான பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு சட்டம் 50/2000 நாள் 14–4–2001–ன்படி பதிவுச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

## 6. முத்திரைத்தாள்கள்

தமிழ்நாடு முழுவதற்குமான தேவையான அஞ்சல் முத்திரைவில்லைகள் அல்லாமல் நீதிமன்றம் சார்ந்த மற்றும் நீதிமன்றம் சாராத முத்திரைவில்லைகளை சென்னையில் உள்ள



2001 செப்டம்பர் 3]

முத்திரைவில்லைகள் கண்காணிப்பாளரால் கண்டறியப்படுகிறது. இவ்வாறு தேவை கணக்கிட்ட பிறகு, நாசிக்கில் உள்ள இந்திய செக்யூரிட்டி அச்சகத்தின் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (Controller, India Security Press) தேவைப்பட்டியல் அனுப்பப்படுகிறது. சென்னையில் உள் மண்டல துணைக் கருவூலக் கணக்கு இயக்குனர், பதவி வழி முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக உள்ளார். அவருக்கு உதவியாக உதவி முத்திரைத்தாள்கள் கண்காணிப்பாளர் உள்ளார். அவ்விருவரும் சேர்ந்து முத்திரைத்தாள்களின் தேவை மற்றும் வழங்கல் நிலையை முறைப்படுத்துகின்றனர்.

### *(1) முத்திரைத்தாள் விற்பனை*

பொதுமக்களுக்கு முத்திரைத்தாள்கள் விற்பதற்காக முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத் துறை உயர் அதிகாரிகளும் இத்துறையில் உள்ள சிறப்பு விழிப்புக் குழுவும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர்.

மாநிலத்தில் 31–5–2001 அன்றைய தேதியில் 4996 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

### *(2) பிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் ஆவணங்களை முத்திரையிடுதல்*

முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக, பிராங்கிங் கருவி மூலம் முத்திரைத்தாள் மதிப்பை, பத்திரங்களின் மீது முத்திரையிட, சார் பதிவகங்களில் 15 பிராங்கிங் கருவிகள் உபயோகத்தில் உள்ளன. முத்திரைத்தாளின் அதிகரித்துவரும் தேவையைச் சரிக்கட்டவும், முத்திரைத்தாள் பற்றாக்குறையின்மையை உறுதி செய்யும் பொருட்டும் இவ்வழிமுறை பின்பற்றப்படுகிறது. தவிரவும், இவ்வழிமுறை இதனைப் பயன்படுத்துவோருக்கு, வசதியை உறுதி செய்கிறது.

### *(3) முத்திரைத்தாள் விற்பனையாளர்களாக சார்பதிவாளர்கள்*

சார்பதிவாளர்கள் அலுவல் முறையில் முத்திரைத்தாள்கள் விற்கும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு முத்திரைவில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், முத்திரைத்தாள்களுக்கு பதிலாக முத்திரைத் தீர்வையினை ரூ.10,000/– வரை ரொக்கமாகப் பெற்றிடவும், சார்பதிவாளர்க்ள் அதிகாரம்

பெற்றுள்ளனர். மேலும் மாவட்டப் பதிவாளர் நிலையில் செயல்படும் சார்பதிவாளர்கள் இந்திய முத்திரைச் சட்டம், பிரிவு 41ன்கீழ் உச்சவரம்பு இன்றி முத்திரைத்தாள்களுக்கு பதிலாக ரொக்கம் பெற்று ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் பெற்றுள்ளனர்.

### (4) மைய முத்திரைத்தாள் விற்பனை நிலையம் (Centralised Stamp Vending Unit)

அனைத்து மதிப்புகளிலும் உள்ள நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள்கள், பத்திரப்பதிவிற்கான நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள்கள் மற்றும் முத்திரை வில்லைகள் ஆகியவை எளிதாகவும், தேவையான அளவு இடர்பாடின்றி பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் நோக்குடன் சென்னை துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் முத்திரைத்தாள் விற்பனை மையம் ஒன்றைத் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக 6–1–1998 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, அரசாணை (நிலை) எண் 6–ல் ரூபாய் 2.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதன் தேவையை உறுதி செய்வதைக் கவனத்தில் கொண்டு, முத்திரைத்தாள் மையத்தை இயக்குவதற்கான பணியிடங்களை வேறு பணியிடத்திலுள்ளவர்களை மாற்றி நிரப்பிக் கொள்ளுமாறு பதிவுத் துறைத் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முத்திரைத்தாள் மையம் எப்பொழுது அமைக்கப்படுகிறதோ அப்பொழுது பதிவுப் படிவங்களும் (Forms) அங்கு விற்பனை செய்யப்படும்.

## 7. ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்களுக்கான உரிமங்கள்

### (அ) ஆவண எழுத்தர் உரிமம்

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிமம் விதிகளின் கீழ், பதிவுச் சட்டம் மற்றும் முத்திரைச் சட்டம் பற்றிய அறிவைச் சோதித்தறிவதற்காகத் தேர்வு நடத்தப்படுகிறது. அத்தேர்வில் தேர்ச்சி பெற்ற நபர்களுக்கு விருப்புறுதி ஆவணம் அல்லாத பிற ஆவணங்களை எழுதுவதற்கு உரிமம் வழங்கப்படுகிறது. மாநில அளவிலான உரிமம், மாவட்ட அளவிலான உரிமம், உப மாவட்ட அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.





### (ஆ) நகல் எழுத்தர் உரிமம்

1967 ஆம் ஆண்டு இந்திய பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகளின்படி பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அந்த ஆவணத்தின் நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நகல் தெளிவான கையெழுத்துடனோ, தட்டச்சு செய்தோ, சரியாகத் îò£K, èŠðì «õ‡´ <.2–4–1971 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகல் எழுத்தர் உரிமம் விதிகள், ஆவணங்களின் நகல்கள் தயாரிப்பதற்காக, நகல் எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு உரிமங்கள் வழங்க வகை செய்கிறது.

31–5–2001 அன்று ஆவண நகல் எழுத்தர் மற்றும் ஆவண எழுத்தர் உரிமம் பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:–

| உரிம வகை | ஆவண எழுத்தர் | நகல் எழுத்தர் | தட்டச்சு நகல் எழுத்தர் |
|---|---|---|---|
| 1. மாநில உரிமம் (ஏ) | 13,050 | 10,828 | 3,419 |
| 2. மாவட்ட உரிமம் (பி) | 12,770 | 7,523 | 1,348 |
| 3. உபமாவட்ட உரிமம் (சி) | 8,995 | 7,444 | 1,061 |
| மொத்தம் | 34,815 | 25,795 | 5,828 |

## 8. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்

1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்ட பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து மாவட்டப் பதிவாளர்களும், 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் அவரவர் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியின் பதிவாளர்களாக உள்ளனர். பதிவுத் துறைத் தலைவருக்கு இச்சட்டத்தின் கீழான பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரமும் மேல்முறையீடுகளைக் கேட்டு இறுதி ஆணை பிறப்பிக்கும் அதிகாரமும் உள்ளது. காலதாமதமாக சங்கத்தின் ஆவணங்களைத் தாக்கல் செய்வதை சட்டத்தின் நிபந்தனைக்கேற்ப விலக்களிக்கும் அதிகாரத்தை அரசிடமிருந்து மாவட்டப் பதிவாளர்களே ஏற்று ஆணையிட 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்

சட்டப் பிரிவு 49–க்குத் திருத்தம் செய்வதற்கான கருத்துரு ஒன்றை அரசு பரிசீலித்து வருகிறது.

சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 31–5–2001 ஆம் தேதியில் 98,748 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**9. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)**

**நிர்வாகம்**

*அ) சீட்டுகளை முறைப்படுத்துதல்*

தமிழ்நாட்டில் உள்ள சீட்டு நிதிச் செயல்பாடுகள் 1982 ஆம் ஆண்டு மைய சீட்டு நிதிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளின்படி கட்டுப்படுத்தப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுகளின் பதிவாளராகச் செயல்படுகிறார். தலைமையிடத்தில், கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டு) சீட்டு நிதிப் பணிகளில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர். 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் துணைப் பதிவுத் துறை தலைவர் மற்றும் மாவட்ட பதிவாளர்கள் முறையே அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதியின் இணை சீட்டுப் பதிவாளர் மற்றும் துணை சீட்டுப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் சீட்டுப் பணியைக் கவனிக்க 47 சார்பதிவாளர்கள் சீட்டு ஆய்வாளர்களாகச் செயல்படுகின்றனர். சீட்டு வழக்குகளைத் தீர்வு செய்வதற்காக, சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சிறப்பு சீட்டு நடுவர்கள் உள்ளனர்.

31–3–2001 ஆம் தேதியில் 3815 சீட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் சீட்டு தொழில் செய்கின்றன. இவைகள் 31450 சீட்டுகளை நடத்துகின்றன. இந்த சீட்டுகளில் 31–3–2001 அன்று உள்ளபடி ரூபாய் 358 கோடி காப்பீடாகப் பெறப்பட்டுள்ளது.

2000–2001 ஆம் ஆண்டில் 5308 வழக்குகள் சீட்டு நடுவர்களிடம் தொடுக்கப்பட்டுள்ளன. 2000–2001 ஆம் ஆண்டில் சீட்டு நடுவர்களால் முடிவாக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 6880 ஆகும். 31–3–2001 அன்று சீட்டு நடுவர்களின் முன்பாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 3760 ஆகும்.



**ஆ) சீட்டு விழிப்புக் குழு**

அங்கீகாரமற்ற சீட்டுகள் மற்றும் இதர ஒழுங்கீனங்களைக் கண்டறிவதற்காக, சீட்டுகளின் கூடுதல் பதிவாளர் தலைமையில், சீட்டு விழிப்புக் குழு ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பதிவுத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (சீட்டு) வடசென்னை, தென்சென்னை மற்றும் மத்திய சென்னை மாவட்ட சீட்டு ஆய்வாளர்கள் ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். இம்மாநிலத்தில் சீட்டு நிதிகள் சட்டத்தினை நன்கு நிர்வகிப்பதற்காகவும், போலி நிறுவனங்கள் சீட்டுகள் நடத்துவதைத் தடுப்பதற்கும் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான அங்கீகாரமற்ற சீட்டுகள் சம்பந்தப்பட்ட புகார்களின்மீது தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கும், பயனளிக்கும் நடவடிக்கைகள் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளன. எல்லா நடப்பு சீட்டுகளும் 100 சதவீதம் சரிபார்க்கப்பட்டுக்கொண்டு வருகிறது. பொதுமக்களை எச்சரிக்கை செய்வதற்காக, எந்தெந்த நிறுவனங்களின் சீட்டு நடத்துபவர்கள் குற்றங்கள் இழைத்து அதற்காக குற்ற நிரூபணம் பெற்றவர்களாக உள்ளார்களோ அப்படிப்பட்ட நிறுவனங்களின் பட்டியலை பதவுத் துறையின் அனைத்து அலுவலகங்களின் அறிவிப்புப் பலகைகளில் மட்டுமின்றி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், கோட்டாட்சி மற்றும் வட்டாட்சி அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அறிவிப்புப் பலகைகளிலும் ஒட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இ) தமிழ்நாடு சீட்டுக் கழகம் லிமிடெட்**

தமிழ்நாடு சீட்டுக் கழகம் லிமிடெட் கலைக்கப்பட்டு, நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கும், நிலுவையாக உள்ள இதர வேலைகளைச் செய்வதற்கும் குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 31–5–2001 அன்றுள்ளபடி, வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 19.34 இலட்சம். நகர உரிமையியல் நீதிமன்றத்தில், நிறைவேற்றிக் கொடுப்பதற்காக, 131 வழக்குகள் நிலுவையாக உள்ளன. 206 வழக்குகள், நிறைவேற்றுவதற்காகத் தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளன.

[2001 செப்டம்பர் 3

**10. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (Indian Partnership Act, 1932)**

இந்திய கூட்டு வணிகச் சட்டத்தில், மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்களாகச் செயல்படுகின்றனர். இச்சட்டத்தின்கீழ் படிவம் I-ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள் நிறுவனப் பதிவேட்டில் தேவையான குறிப்புகள் செய்தபின் பதிவாளர் கோர்வை செய்வார். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து எவ்வித விவரங்களையும் அரசுக்கு தெரிவிப்பது இல்லை. இந்நிலையினைத் தவிர்க்கும்பொருட்டும் எத்தனை கூட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என அறியவும், அவைகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் சரிதானா என்பதை கண்காணிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் நிறுவனம் செயல்பட்ட விவரம் குறித்து உறுதிமொழியைக் கட்டாயம் கோர்வை செய்திட 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்பத்தில், 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மை சட்டத்தின்கீழ், சென்னை மாநிலம் முழுமைக்கும் நிறுவனங்கள் பதிவாளர் ஒருவர் மட்டுமே இருந்தார். சென்னையில் உள்ள பதிவாளரே நிறுவனங்களைப் பதிவு செய்து வந்தார். எனவே, இச்சட்டத்தின் கீழான அறிக்கைகள் அனைத்தும் சென்னை பதிவாளரிடத்தில் கோர்வை செய்யப்பட்டன. அதன்பிறகு இச்சட்டத்தின்கீழ் 1-1-1966 முதல் அனைத்து மாவட்டப் பதிவாளர்களும் நிறுவனப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டனர். சென்னை கூட்டு வணிக நிறுவனப் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்ட நிறுவனங்களைப் பொறுத்து சென்னையைத் தவிர வேறு இடங்களில் வியாபார இடத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களின் அறிக்கைகள், சென்னையில் உள்ள பதிவாளரிடத்திலேயே கோர்வை செய்ய வேண்டியுள்ளது. இதனால், சென்னை பதிவாளரிடம் அறிக்கைகள் கோர்வை செய்வதில் நிறுவனங்கள் சிரமப்படுகின்றன. எனவே, நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்களிடமே அறிக்கைகளைக் கோர்வை செய்வதற்கு ஏதுவாக, சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அது ஆய்வில் இருந்து வருகிறது.

இச்சட்டத்தின்கீழ் 31-3-2001 நிலவரப்படி 3,84,239 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



2001 செப்டம்பர் 3]

**11. கணினிமயமாக்கல்**

ஒளிவுமறைவற்ற தன்மை மற்றும் பொதுமக்களுக்கு சிறந்த தரமான சேவை ஆகியவற்றை உறுதி செய்துகொள்வதற்காக பதிவுத் துறையில் 'ஸ்டார்' (STAR Project) என்னும் திட்டத்தின்கீழ் கணினிமயமாக்கல் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

எளிய ஒளிவுமறைவற்ற பதிவு நிர்வாகம் (Simplified and Transperant Administration of Registration) என்பதன் சுருக்கமே 'STAR' என்பதாகும்.

'ஸ்டார்' என்பது பொது மக்களின் அனைத்துத் தேவைகளையும் உள்ளடக்கி நிறைவு செய்யும் முழுமையான மின்னணு தகவல் தொழில்நுட்பத் தொகுப்பாகும்.

பதிவுத் துறையை கணினிமயமாக்கும் பணி, மூன்று நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலை I-ன்கீழ் 16 சார்பதிவகங்கள் மற்றும் 9 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு 6-2-2000-த்திலிருந்து செயல்முறையில் உள்ளது.

நிலை II-ன்கீழ் 284 சார்பதிவகங்கள் மற்றும் 41 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளிட்ட 325 அலுவலகங்களைக் கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை திருவாளர்கள் எல்காட் (M/s. ELCOT) நிறுவனம், செயல்முறை குத்தகை ஆதார அடிப்படையில் (Operating Lease Basis) நடைமுறைப்படுத்தி வருகிறது. மேற்கூறிய 325 அலுவலகங்களில், 100 அலுவலங்களில் கணினிமயமாக்கல் குறித்த பணி மிக முன்னேறிய நிலையில் உள்ளது.

**அ) அளிக்கப்படும் சேவைகள்**

- ஆவணங்கள் பாதுகாப்பு
- சான்றிட்ட நகல் வழங்கல்
- வில்லங்கச் சான்று வழங்கல்
- சொத்துமதிப்பு தகவல் அளித்தல்
- வழிகாட்டி மதிப்பு வடிப்பு வழங்கல்
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவு வடிப்பு வழங்கல்

- திருமணப் பதிவு வடிப்பு வழங்கல்
- சங்கப் பதிவு/கண்காணிப்பு
- சீட்டுப் பதிவு/கண்காணிப்பு
- கூட்டு நிறுவனப் பதிவு/கண்காணிப்பு

ஆ) நன்மைகள்

1. துரித மற்றும் வெளிப்படையான சேவை
2. எளிதான, தெளிவான நடைமுறை
3. இடைத்தரகர் நிலை நீக்கம்
4. இனிய சேவை அளித்தல்

இ) இணைய தளம்:**http://igregn.tn.nic.in.**

'எப்படி என்று எனக்குச் சொல்லுங்கள்' மற்றும் 'உங்களுக்குத் தெரியுமா' போன்ற உபயோகிப்பதற்கு எளிமையான முறையில் உருவாக்கப்பட்ட இணைய தளத்தை சென்னை தேசிய தகவல் மையம் வெளியிட்டுள்ளது. பதிவுத் துறை குறித்து ஏற்படும் சந்தேகங்களுக்கு உடனடியாக இத்துறையின் முதன்மை அலுவலர்களை மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு பதில் பெற ஏதுவாக 'அஞ்சல் பெட்டி முறை' இத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து வழிகாட்டி மதிப்புகளையும் படிப்படியாக இணைய தளத்தில் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதி மற்றும் 5 மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவாரி வழிகாட்டி மதிப்புகள் இத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மற்ற பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்புகள் படிப்படியாக இத்தளத்தில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருவாய் அலுவலகங்களின் நில பதிவு தகவல் தொகுப்புகளுடன் இணைப்பு ஏற்படுத்தவும், அதன்வழி ஆவணப் பதிவு முடிவுற்றபின் நில உடைமைப் பதிவேடுகளில் பெயர் மாற்றம் உடனடியாக செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.



**12. புதிய திட்டங்கள்**

2001–2002 வரவு–செலவுத் திட்டத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளது:

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலை செலவு | 2001—2002 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) ரூபாய் இலட்சத்தில் | (4) ரூபாய் இலட்சத்தில் |
| 1. | மார்த்தாண்டம் பத்திரப் பதிவு மாவட்டத்தில் உள்ள அருமனை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டுதலும், கும்பகோணம் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவுரு அறையை விரிவுபடுத்துதலும் | 21.75 | 7.00 |
| 2. | சென்னை—28, பத்திரப் பதிவுத் துறை அலுவலகத்தில் நவீன தொலைபேசி இணைப்பகம் ஏற்படுத்துதல் | 1.45 | 1.45 |
| 3. | 8 பத்திரப் பதிவு துணைத் தலைவர் அலுவலகங்களுக்கு நிகரி இயந்திரம் (Fax machine) வழங்குதல் | 4.50 | 4.50 |

2001 செப்டம்பர் 3]

# இணைப்பு VI

(456 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 43

## எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

தமிழக அரசின் ஒரு அங்கமாக அரசே ஏற்று நடத்துகின்ற எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மிகப் பழமை வாய்ந்தது. ஏனைய துறைகளைப் போலல்லாமல், அரசின் கொள்கைகள், திட்டங்களை ஆணைகளை உடனுக்குடன் வெளியிடும் சிறப்புமிக்க அரசின் குரலாக ஒலித்து வருகிறது. மாநிலம் முழுவதும் அமைந்துள்ள அனைத்து அரசுத் துறைகளுக்கும் அன்றாடம் தேவைப்படும் எழுதுபொருட்கள் முதல் நவீன படிப்பெருக்கிகள் உள்ளிட்ட அனைத்து அலுவல் சார்ந்த எழுதுபொருட்களை, இலவசமாக விநியோகித்து அரசின் நடவடிக்கைக்கு உயிர் நாடியாக விளங்குகிறது.

### எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், சென்னை

இத்துறைக்கான இயக்ககம் சென்னையில் அமைந்துள்ளது. தலைமை நிலையிலுள்ள இவ்வியக்ககத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் அரசு அச்சகங்களும், கிடங்குகளும், விற்பனை நிலையங்களும் இயங்குகின்றன. இந்திய அரசுப் பணியாளர் நிலையில் இயக்குநர் நியமிக்கப்பட்டு அவரின்கீழ் இணை இயக்குநர், பொது மேலாளர், பணிமேலாளர்கள், துணைப் பணிமேலாளர்கள், கிளை மேலாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர், துணை இயக்குநர் (எழுதுபொருள்) மற்றும் கணக்கு அலுவலர் பணியாற்றும் இந்தத் துறை தனது செயல்பாட்டினை சிறப்பாகச் செய்து வருகிறது.

அச்சுத் துறைப் பணியாளர்களின் அனைத்து நிலையிலும் அவர்களது நிர்வாகம், மாத ஊதியம், விடுப்பு, பணிமாற்றம், பதவி உயர்வு, சலுகைகள் போன்ற பணியாளர் நலன்கள் இயக்ககத்தில் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அச்சகத் தொழிலாளர்களின் நலன் கருதி பதிவாக்கப்படும் தொழிற்சாலைகள் தகராறு சட்ட வழக்குகளை எதிர்கொள்ளும் பணிகளையும் இயக்ககம்

[2001 செப்டம்பர் 3

செய்ய வேண்டியுள்ளது. பிற துறைகளிலிருந்து இயக்ககத்திற்கு மாற்றப்படும் அயற்பணியாளர்களை நியமித்தல், பணி வரன்முறைப்படுத்துதல் இயக்கக அளவில் நடைபெறுகின்றன. அச்சகத்திற்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களை கொள்முதல் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இயக்குநரின் நிர்வாக அமைப்பு கீழ்க்குறித்தவாறு பிரிக்கப்பட்டுள்ளது:-

1. தொழிற்நுட்பப் பிரிவு
2. நிர்வாகப் பிரிவு
3. எழுதுபொருள் அலுவலகப் பிரிவு
4. கணக்குப் பிரிவு

ஒவ்வொரு பிரிவிற்கும் இணை/துணை இயக்குநர்கள் அளவில் நியமனம் செய்த அலுவலர் அவரது பிரிவின்கீழ் இயங்கும் அலுவலகங்களின் பணிகளைக் கண்காணித்து ஒழுங்குபடுத்தி வருகிறார். இவர்கள் நேரிடையாக துறைத் தலைவரான இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்குகிறார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் இணை இயக்குநர் நியமிக்கப்பட்டு பணியாளரமைப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிக்கிறார்.

தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள் அலுவலகம் அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப்பணிகள், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ், மந்தண சிறப்பு அறிக்கைகள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், வாக்குச்சீட்டுகள், வினாத்தாட்கள், பரிசுச் சீட்டுகள் போன்ற மறைபொருள் தன்மை வாய்ந்த இனங்கள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடுதல் ஆகிய பணிகளை ஆண்டு முழுமைக்கும் தொடர்ந்து செய்து தருவது இந்த அச்சுத் துறையின் பணிகளாகும்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் கட்டுப்பாட்டில் கீழ்க்குறித்த அச்சகங்கள்/அலுவலகங்கள் இயங்குகின்றன:-

1. அரசு மைய அச்சகம், சென்னை
2. அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை



3. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை
4. அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி
5. அரசு கிளை அச்சகம், சேலம்
6. அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்
7. அரசு கிளை அச்சகம், மதுரை
8. எழுதுபொருள் பிரிவு
9. அரசு வெளியீடுகள் பிரிவு

**அரசு மைய அச்சகம், சென்னை**

சென்னை மாநகரில் நவீன வசதிகளுடன்கூடிய அரசு மைய அச்சகம், 4173 பணியாளர்களைக் கொண்டு தொடங்கப்பெற்றது.

இதில் அச்சிடும் இயந்திரங்கள், புத்தகம் கட்டும் இயந்திரங்கள் நிழற்படக் கோப்பு இயந்திரம், பிளாக் தயாரிக்கும் பிரிவு, டெஸ்க் டாப் பப்ளிஷர் முதலான இயந்திரங்கள் இங்கே நிறுவப்பட்டுள்ளன. 1994 ஆம் ஆண்டிலிருந்து பரிசுச்சீட்டுகளை அச்சடிக்கும் பணி இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப் பரிசுச்சீட்டுகளை அச்சிடத்தேவையான சிறப்பு அச்சு இயந்திரங்கள் ரூ.91.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் 2 கோடி பரிசுச் சீட்டுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

சட்டப்பேரவையின் அவசரப் பணிகள், அதி ரகசியப்பணிகள், தேர்வாணைய வெளியீடுகள், பரிசுச்சீட்டுகள், மாநில வரவு-செலவுத் திட்டப் பணிகள் முதலிய முக்கிய பணிகள் இங்குதான் நிறைவேற்றப்படுகின்றன.

இவை தவிர அரசு நாட்காட்டிகளும், நாட்குறிப்பேடுகளும் இங்குதான் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டு அரசு மைய அச்சகத்திற்கு புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்துகொள்ள ரூ.8.75 இலட்சம் வழங்கப்பட்டது. அதிலிருந்து லாமினேட்டிங் பொறி, கணினி அச்சு முனையம், லேசர் அச்சுப்பொறி, தடங்கலில்லா மின் வழங்கு கலம் முதலியன கொள்முதல் செய்து பொருத்தப்பட்டுள்ளன.

[2001 செப்டம்பர் 3

இந்த அரசு மைய அச்சகம் இரு பணிமேலாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இங்குள்ள பணியாளர்களுக்கு மும்முறை பணி மாற்று முறையில் பணி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மைய அச்சகம் நவீனமயமாக்குதலின்கீழ் பணியாளர் குறைப்பினால் தற்போது 2000 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்றம், சென்னை

உயர் நீதிமன்ற வழக்குகள் பட்டியல் தயாரிப்பு குறித்த முக்கிய பணியினைக் கருத்திற்கொண்டு 1923 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் ஒரு கிளை அச்சகம் தோற்றுவிக்கப்பட்டது. இதில் ஒரு துணைப் பணிமேலாளரும் 194 பணியாளர்களும் பணிபுரிகின்றனர். இவ்வச்சகத்தில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தினசரி வழக்குகள் குறித்த பட்டியல்கள் உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்டு அன்றைய இரவே அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இப்பணிகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் அச்சடிக்கப்பட்டு அனைத்து தரப்பினருக்கும் விநியோகிக்கப்படுகின்றன. வழக்குரைஞர்கள் பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்கட்குத் தேவையான அளவில் அனைவருக்கும் பயன்படும் வகையில் அரசு வெளியீடுகளின் கிளை விற்பனை நிலையமும் இவ்வச்சகத்தில் இயங்கி வருகிறது.

மாதமிருமுறை வெளியிடப்படும் இந்திய சட்ட அறிக்கைகள் மற்றும் அரசுத் துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன.

### அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை

புதுக்கோட்டை அரசு கிளை அச்சகம் அரசுத் துறைகளான ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, காவல் துறை, மருத்துவத் துறை, ஓய்வூதியம், வனத் துறை ஆகியவற்றிற்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள் முதலியவற்றை அச்சிட்டு வழங்குகின்றன. ஒரு கிளை மேலாளர் இவ்வச்சகத்தின் பொறுப்பாளராக ஏனைய பணியாளர்களுடன் பணிபுரிந்து வருகிறார்.

கீழ்க்குறித்த மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்கள், முக்கிய சிறப்புச் செய்தி அறிவிப்பு வெளியீடுகள் இந்த அச்சகத்திலிருந்து [illegible]



2001 செப்டம்பர் 3]

1. இராமநாதபுரம்
2. கன்னியாகுமரி
3. சென்னை
4. விருதுநகர்
5. காஞ்சிபுரம்
6. திருவள்ளூர்
7. நீலகிரி
8. திருவண்ணாமலை
9. தருமபுரி
10. தஞ்சாவூர்
11. புதுக்கோட்டை
12. தூத்துக்குடி
13. திருவாரூர்
14. நாகப்பட்டினம்
15. திருநெல்வேலி
16. சிவகங்கை

2001–2002 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் இந்தக் கிளை அச்சகத்தினை ரூ.51.25 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் முதல் மண்டல அச்சகமாக 1965 ஆம் ஆண்டில் அரியமங்கலத்தில் நிறுவப்பட்டது. தற்போது துவாக்குடியில் சொந்தக் கட்டடத்தில் இயங்குகிறது. அனைத்துத் துறைகளுக்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட பொதுப் படிவங்கள், பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. இதில் தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள், அளவைப் பதிவேடுகள்

அரசு துறைகளுக்கு மிக நன்முறையில் பயன்படுகின்றன. வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான படிவங்களை அச்சிட்டு அதற்கான கட்டணத்தை அந்நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கின்றன.

1. திருச்சிராப்பள்ளி
2. மதுரை
3. திண்டுக்கல்
4. பெரம்பலூர்
5. அரியலூர்
6. தேனி
7. கரூர்

ஆகிய மாவட்ட அரசிதழ்களை அச்சிட்டு வழங்குகின்றன.

**அரசு கிளை அச்சகம், சேலம்**

இக்கிளை அச்சகம் 136 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. பின்வரும் பதிவேடுகளும், படிவங்களும் அச்சிடப்படுகின்றன:—

தமிழ்நாடு கருவூல விதித் தொகுப்பு படிவங்கள், மருத்துவத் துறைப் படிவங்கள்

அரசு தேர்வுப் பணிகளுக்கான படிவங்கள்

நிலைப்படுத்தப்படாத 'ஏ' பதிவேடுகளும் மற்றும் கீழ்க்குறித்த மாவட்ட அரசிதழ்கள்:—

1. சேலம்
2. கோயம்புத்தூர்
3. ஈரோடு
4. நாமக்கல்

**அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்**

அடிப்படையில் லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரங்களைக் கொண்டு கிளை அச்சகமாக இருந்த விருத்தாசலம் அச்சகம் 1981 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்குகிறது. பின்வரும் துறைகளுக்கான படிவங்களும் பதிவேடுகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன:—

1. வேளாண்மை
2. பொதுப் பணி
3. காவல்
4. தீயணைப்பு
5. தேசிய மாணவர்படை
6. வனம்
7. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு
8. கால்நடை பராமரிப்பு
9. மருத்துவம்
10. தொழில் மற்றும் வணிகம்
11. கூட்டுறவு
12. புள்ளியியல்





**அரசு கிளை அச்சகம், மதுரை**

இக்கிளை அச்சகத்தில் 207 பணியாளர்கள், உதவிப் பணிமேலாளர், உதவிப் பொறியாளர் மற்றும் உதவி இயக்குநர், துணைப் பணிமேலாளரின்கீழ் பணிபுரிந்து வருகின்றனர்.

கீழ்க்குறித்த துறைகளுக்கான நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள் அச்சிட்டு வழங்கப்படுகின்றன:—

1. வருவாய்த் துறை
2. கருவூலம் மற்றும் கணக்குத் துறை
3. காவல் துறை
4. பதிவுத் துறை
5. மருத்துவத் துறை
6. வணிக வரித் துறை
7. வேளாண்மைத் துறையின் விதைச்சான்று அட்டைகள்
8. அரசுத் துறை அட்டவணைகள்
9. பொதுப் பணித் துறை விலைப்பட்டியல்

சென்ற நிதியாண்டில் இக்கிளை அச்சக மேம்பாட்டிற்காக ரூ.42.09 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு அச்சகத்தின் பணித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**அச்சுப்பணிகள்**

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் இயங்கும் அரசு அச்சகங்களில் தலைமைச் செயலகம், துறைத் தலைமையகங்கள்,

தமிழ்நாடு மாநில கணக்காய்வுத் தலைவர் அலுவலகம் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களுக்கான அச்சுப்பணி தலையாய மறைபொருள் பணிகளும் வரவு–செலவுத் திட்ட ஆவணங்கள், சிறப்பு மறைபொருள் அறிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், வாக்குச் சீட்டுகள், பரிசுச் சீட்டுகள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் அச்சிடுதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2000–2001 ஆம் ஆண்டிற்கு அரசு அச்சகங்களுக்கு 52.2 கோடி அச்சு அழுத்தங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு 53.6 கோடி அச்சு அழுத்தங்கள் அச்சிடப்பட்டுள்ளது.

## எழுதுபொருள் கிடங்கு மற்றும் அலுவலகம்

எழுதுபொருள் கிடங்கு மற்றும் அலுவலகம் ஒரு துணை இயக்குநரின்கீழ் 193 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் அச்சகப் பொருட்கள் கொள்முதல் செய்து வழங்கும் மைய முகவர் அமைப்பாக இந்த அலுவலகம் இயங்கி வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் எழுதுபொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஆனால், மத்திய அரசு நிதி உதவி பெற்று அவை தொடர்பான திட்டங்களை அமுலாக்கம் செய்யும் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே உரிய தொகை பெற்று எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. திறந்த ஒப்பந்தப் புள்ளிகள் மூலமும் வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மூலமும் காகிதம் மற்றும் அட்டைகள் போன்ற எழுதுபொருட்கள் ஆண்டுதோறும் கொள்முதல் செய்யப்படுகின்றன. தட்டச்சுப்பொறிகள், படிபெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் ஆகியவைகள் தலைமை இயக்குநர் விநியோகம் மற்றும் ஒதுக்கீடு அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் கொள்முதல் செய்யப்படுகின்றன. 2000–2001 ஆம் ஆண்டு கொள்முதல் செய்து விநியோகிக்கப்பட்ட எழுதுபொருட்களின் மதிப்பு ரூ.927 இலட்சம் ஆகும். மேலும், ரூ.2465 இலட்சத்துக்கான எழுதுபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகத்திற்கு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. . 2001–2002 ஆம் ஆண்டிற்குத் தேவையான எழுதுபொருட்களின் மதிப்பு ரூ.2891 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.





## அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம்

அரசு வெளியீடுகளான சட்டம் மற்றும் விதி நூல்கள், விதிக் கோவைகள் நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக சென்னை, அண்ணா சாலையில் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை, உயர் நீதிமன்ற கிளை அச்சகத்தில் ஒரு கிளை விற்பனை நிலையமும் எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின்கீழ் இயங்கி வருகின்றன. மேலும் இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவர் அமைப்பாகவும் இது இயங்குகிறது. அனுமதி பெற்ற முகவர்கள் மூலமாகவும் அரசு வெளியீடுகள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. அரசு வெளியீடுகள் விற்பனை மூலம் ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 வரையில் ரூ.15.50 இலட்சமும், அரசிதழில் பெயர் மாற்றம் வெளியீட்டிற்காக ரூ.27.00 இலட்சமும் அரசிற்கு வருவாய் கிடைத்துள்ளது..

## தொழிலாளர் நலன்

சென்னை, தண்டையார்பேட்டையில் அச்சகப் பணியாளர்களுக்காக 300 குடியிருப்புகள் உள்ளன. தொழிலாளர் நல அலுவலர், உதவித் தொழிலாளர் நல அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் குடியிருப்பவர்களின் நலனைக் கண்காணித்து வருகின்றனர். சுகாதார மேற்பார்வையாளர் அரசு மைய அச்சகம், உயர் நீதிமன்ற கிளை அச்சகம், இயக்ககம் ஆகிய இடங்களில் உள்ள தங்கும் அறை, உணவறை மற்றும் சைக்கிள் நிறுத்தும் இடம் ஆகியவைகளின் தூய்மைப் பணிகளைக் கவனித்து வருகிறார். அரசு மைய அச்சகத்தில் உள்ள மருத்துவ அலுவலர் வாரந்தோறும் சென்னை மாநகரிலுள்ள இயக்ககம் உள்ளிட்ட அனைத்து அலகுகளுக்கும் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து மருத்துவ உதவி அளித்து வருகிறார். அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேநீர் மற்றும் ரொட்டிப்படி பிரதி மாதம் ரூ. 50/– வழங்கப்படுகிறது. இது தவிர ஈயப்புகை வெளியேறும் பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் பால்படியாக நாளொன்றுக்கு ரூ. 2/– வழங்கப்படுகின்றன. இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் குளிர்

குடிநீர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மகளிர் தொழிலாளர்களின் வசதியைக் கருதி, மைய அச்சகத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென நியமிக்கப்பட்ட குழந்தை காப்பகப் பணியாளர் குழந்தைகளைக் கவனித்து வருகிறார். இக்குழந்தைகளுக்கு அரசுச் செலவில் பால், பிஸ்கட் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரண்டாண்டிற்கு ஒருமுறை மூன்று ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டு அதற்காக தையற்கூலி ஆண் தொழிலாளர்களுக்கு ஒரு ஜோடிக்கு ரூ.100/– வீதம் ரூ.300/– வழங்கப்படுகிறது. பெண் தொழிலாளர்களுக்கு மூன்று பாலியஸ்டர் புடவைகளும் ரவிக்கைத் துணியும் ரவிக்கை தைப்பதற்கான தையற்கூலியாக ஒரு ரவிக்கைக்கு ரூ.20/– வீதம் ரூ.60/– வழங்கப்படுகிறது. சென்னை, அரசு மைய அச்சகம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகத்திலும் தொழிலாளர்களுக்கென சிற்றுண்டிச் சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம் அரசு மைய அச்சகத்தில் இயங்கி வருகிறது. இக்கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களுக்கு ரூ. 1,00,000/– வரையில் கடன் தொகை வழங்குகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் ஒரு நாட்காட்டி மற்றும் ஒரு நாட்குறிப்பேடு இலவசமாக வழங்கப்படுகின்றன.


எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தின் நிருவாக அமைப்பு, பணியாளர்கள் விவரம், 2000–2001 ஆம் ஆண்டின் அரசு அச்சகங்களின் செயலாக்க விவரம், அரசு அச்சகங்களின் அச்சு இயந்திரங்களின் விவரம், அரசு அச்சகங்களின் புத்தகக் கட்டுமான இயந்திரங்களின் விவரம் மற்றும் கடந்த பத்தாண்டுகளில் அரசு அச்சகங்களில் பெறப்பட்ட அச்சழுத்தங்களின் விவரங்கள் ஆகியவை அட்டவணைப்படுத்தப்பட்டு பிற்சேர்க்கைகளில் தரப்பட்டுள்ளன.

## அச்சக மேம்பாட்டுத் திட்டம்

அச்சுத் துறையில் ஏற்பட்டு வரும் நவீன தொழிற்நுட்ப வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு புதிய தொழிற்நுட்பத்துடன்கூடிய அச்சு இயந்திரங்களை அரசு அச்சகங்களில் அமைத்து அதனால் அச்சின் தரம் மற்றும் திறனையும் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.







## அட்டவணை—ஆ

31-03-2001 முடிய பணியாளர்களின் எண்ணிக்கை

| வரிசை எண் (1) | அலகு (2) | அதிகாரிகள் ஏ பிரிவு (3) | அதிகாரிகள் பி பிரிவு (4) | அலுவலக பிரிவு (5) | மேற்பார்வை யாளர் (6) | தொழில் நுட்ப பணியாளர் (7) | மொத்த பணியாளர் (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இயக்ககம் | 5 | 6 | 148 | 6 | 37 | 202 |
| 2. | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-1 | 1 | 1 | 57 | .. | 134 | 193 |
| 3. | அரசு மைய அச்சகம், சென்னை-79 | 6 | 20 | 162 | 100 | 1,707 | 1,995 |
| 4. | அரசு கிளை அச்சகம், சென்னை-104 (உயர்நீதி மன்ற வளாகம்) | 1 | 2 | 13 | 10 | 168 | 194 |
| 5. | அரசு கிளை அச்சகம், மதுரை | 1 | .. | 18 | 8 | 180 | 207 |
| 6. | அரசு கிளை அச்சகம், சேலம் | .. | 1 | 14 | 8 | 91 | 114 |
| 7. | அரசு கிளை அச்சகம், திருச்சி | .. | 1 | 11 | 8 | 116 | 136 |
| 8. | அரசு கிளை அச்சகம். புதுக்கோட்டை | .. | 1 | 13 | 5 | 131 | 150 |
| 9. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 1 | .. | 7 | 7 | 91 | 106 |
| | மொத்தம் | 15 | 32 | 443 | 152 | 2,655 | 3,297 |



## அட்டவணை—இ

2000–2001 ஆம் ஆண்டில் அரசு அச்சகங்களின் செயலாக்க விவரம்

(ஏப்ரல் 2000 முதல் மார்ச் 2001 வரை)

| வரிசை எண் (1) | அச்சகத்தின் பெயர் (2) | அச்சு அழுத்தங்கள் ஆர் ஏ2 (கோடி கணக்கில்) (3) | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை—79 | 27.6 | 26.6 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை—104 | 6.9 | 7.9 |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை | 4.9 | 5.4 |
| 4. | அரசு கிளை அச்சகம் சேலம் | 5.7 | 6.9 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி | 2.5 | 2.4 |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 2.6 | 2.5 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 2.0 | 1.9 |
| | மொத்தம் | 52.2 | 53.6 |

சாதனை விழுக்காடு — 102.6

## அட்டவணை—ஈ

அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களின் விவரம்
அச்சுப் பிரிவு

| வரிசை எண் | அச்சகத்தின் பெயர் | வெப் ஆப்செட் இயந்திரம் ஐந்து யூனிட் | வெப் ஆப்செட் இயந்திரம் நான்கு யூனிட் | வெப் ஆப்செட் இயந்திரம் இரண்டு யூனிட் | ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் (ஆர். ஏ1 அளவில்) | ஷீட்பெட் ஆப்செட் அச்சு இயந்திரம் (ஆர் ஏ2 அளவில்) | சிறிய ஆப்செட் அச்சு இயந்திரம் | லெட்டர்பிரஸ் அச்சு இயந்திரம் (ஆர். ஏ1 அளவில்) | லெட்டர் பிரஸ் அச்சு இயந்திரம் ஆர். ஏ2 அளவில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை—79. | 2 | .. | 2 | 4 | 7 | 1 | 5 | 10 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை—79. | .. | 1 | .. | .. | .. | 5 | .. | .. |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை. | .. | .. | 1 | 5 | .. | .. | .. | 1 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம். | .. | .. | 1 | .. | .. | 1 | .. | 7 |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 4 |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 5 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | .. | .. | .. | .. | .. | 1 | .. | 5 |




## அட்டவணை-உ

புத்தகம் கட்டுமானப் பிரிவு

| வரிசை எண். | அச்சகத்தின் பெயர். | வெட்டு இயந்திரம். | புத்தகம் தைக்கும் இயந்திரம். | கம்பி அடிக்கும் இயந்திரம். | கோடிடும் இயந்திரம். | சுழல் எண்ணிடும் இயந்திரம். | தாள் மடிக்கும் இயந்திரம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | அரசு மைய அச்சகம், சென்னை—79. | 21 | 3 | 35 | 4 | 6 | 5 |
| 2. | அரசு கிளை அச்சகம், உயர்நீதி மன்ற வளாகம், சென்னை—104. | 1 | .. | 1 | .. | .. | .. |
| 3. | அரசு கிளை அச்சகம், மதுரை. | 4 | .. | 3 | .. | 3 | 1 |
| 4. | அரசு கிளை அச்சகம், சேலம். | 3 | .. | 2 | 1 | 1 | .. |
| 5. | அரசு கிளை அச்சகம், திருச்சி. | 3 | .. | .. | 1 | 1 | .. |
| 6. | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை. | 3 | .. | 2 | 1 | 1 | 1 |
| 7. | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம். | 2 | .. | 4 | 1 | 1 | .. |

அட்டவணை – ஊ
கடந்த பத்தாண்டுகளில் அச்சகங்களின் உற்பத்தி விவரம்




தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224476.
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002

227